கலைஞரின்
கடிதங்கள்



42

31.01.2009 - முதல்
30.10.2009 - வரை

சிறகு பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 42

31.01.2009 - 30.10.2009

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL


விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2249
தி 894.8116
கலை.ர.A2

கி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18

மு.க.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3364. உழைத்திடும் பிறவியும், ஓய்வெடுக்கும் உல்லாசியும்!	31-1-2009	23
3365. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே!	7-2-2009	27
3366. உள்ளமும் - பள்ளமும்!	9-2-2009	31
3367. திருமணத்திற்காக எடுத்த பட்டுப் புடவைதான்!	19-2-2009	32
3368. கையை நீட்டுகிறார்; காங்கிரசாரே எச்சரிக்கை!	21-2-2009	40
3369. புதியதோர் விதி செய்வோம்!	22-2-2009	49
3370. இங்கும் அங்குமுள்ள தமிழர்களைக் காத்திட!	24-2-2009	55
3371. இன்று என் வாழ்விலோர் திருநாள்!	27-2-2009	61
3372. இது எப்போதும் உங்கள் உயிர்!	1-3-2009	65
3373. அனைவர் அகமும் அன்பகம் ஆகிட...!	2-3-2009	69
3374. பட்டியல் தரவா; பாடம் பெறவே!	3-3-2009	73

3375. அமைகிறது மீண்டும் வெற்றிக் கூட்டணி!	4-3-2009	78
3376. கேள்வி கேட்கக் கூடாதாம்!	5-3-2009	84
3154. தயக்கமின்றி வரவேற்கிறோம்!	7-3-2009	91
3378. அந்தக் குறளை மறக்க முடியுமா?	8-3-2009	98
3379. நலிவும் நானும் - நாட்குறிப்பு	10-3-2009	105
3380. நலிவும் நானும் - நாட்குறிப்பு (2)	11-3-2009	112
3381. நலிவும் நானும் - நாட்குறிப்பு (3)	12-3-2009	120
3382. நலிவும் நானும் - நாட்குறிப்பு (4)	13-3-2009	130
3383. நலிவும் நானும் - நாட்குறிப்பு (5)	14-3-2009	140
3384. நலிவும் நானும் - நாட்குறிப்பு (6)	15-3-2009	149
3385. ஆயத்தமாகுக; அறப்போர் முனைக்கு!	18-3-2009	160
3386. மடல் அல்ல; மானசீக அறிவுரை!	21-3-2009	168
3387. அடடா, அவர்தானா இவர்?	24-3-2009	178
3388. அந்த நினைவுக்கு ஒரு நன்றி!! (கலைஞர் கவிதைக் கடிதம்)	29-03-2009	186
3389. இலங்கைத் தமிழரின் இணையற்ற செல்வம் ஈழத்தந்தை செல்வாவின் 112-வது பிறந்தநாள்!	01-04-2009	190
3390. கிளம்பட்டும்; தமிழச் சிங்கக் கூட்டம்!	4-4-2009	193

3391. தேர்தல் களம் அழைக்கிறது; கண்மணியே; புறப்படு!	7-4-2009	202
3392. பூச்சாண்டிப் பொம்மை?	8-4-2009	208
3393. தமிழ் இன மீட்புக்காகக் குரல் கொடுத்திட வாரீர்!	9-4-2009	212
3394. சுட்டெரிக்கும் நெருப்பில் சுடர் விடும் தங்கம்!	10-4-2009	218
3395. மூப்பனார் வழங்கிய புத்தகம்!	14-4-2009	221
3396. இவர்களும் அவர் பக்கமா?	19-4-2009	226
3397. நாதியற்ற ஈழத் தமிழரைக் காத்திட நடுவணரசுக்கு வேண்டுகோள்!	22-04-2009	231
3398. இதற்குமா எதிர்ப்பு! அந்தோ - தமிழகமே!	23-4-2009	237
3399. "சேது" திட்டம் எதிர்ப்போரை அடையாளம் காண்க!	25-4-2009	241
3400. இரு முனை பாதுகாப்புக்காக; இன்றே எழுக!	26-4-2009	251
3401. வருக நீ - வெற்றி பெற்றுத் தருக நீ	1-5-2009	257
3402. கண்ணல்ல, மணியல்ல; களம் இறங்கிடு! காரியம் ஆற்றிடு!	3-5-2009	259
3403. பாதம் பணிகிறேன்; பணியாற்றப் புறப்படு!	12-5-2009	264

3404. இந்தப் பேனா வேண்டுகிறது!	13-5-2009	267
3405. குழந்தையின் உயிரைக் குடித்து தாயின் குடலுக்குள் சென்ற குண்டு!	15-5-2009	271
3406. தூங்கற்க தூங்காது செய்யும் வினை!	2-6-2009	277
3407. உலக அதிசயம் மட்டுமல்ல; உலக மகா அதிசயம்!	11-6-2009	283
3408. அதைப் படித்து ஆறுதல் கொள்க!	22-6-2009	288
3409. பட்டினத்தார் அப்பொழுதே பாடியிருக்கிறாரே!	27-7-2009	294
3410. ஆனந்த விகடன் அன்றும் இன்றும்!	29-7-2009	299
3411. இடைத் தேர்தலில் இணையற்ற வெற்றியினை வழங்கிடுக!	7-8-2009	303
3412. வாழ்விலோர் திருநாள்; வாழ்க வள்ளுவம்!	9-8-2009	310
3413. காப்பீட்டுத் திட்டத்தினால் யாருக்கு ஆதாயம்?	22-8-2009	317
3414. “தடுக்கும் சொல் பாராய் தம்பீ!”	25-8-2009	324
3415. இரு நாள் நமக்குத் திருநாள்!	13-9-2009	329
3416. அருந்தவத்தில் ஆழ்கின்றேன்!	3-10-2009	334
3417. சொன்னது; யாராம்? என்ன பேராம்?	12-10-2009	337

3418. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!	13-10-2009	343
3419. பேரறிஞர் புகழ்ந்த என்னைப் பெற்ற தாய்!	14-10-2009	351
3420. வளைந்த வாலை; நிமிர்த்திடவே முடியாது!	16-10-2009	359
3421. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு; செம்மொழி எனும் சிறப்பும் சேர்ந்தது!	20-10-2009	364
3422. சுழன்று சுடர்விடும் எண்ண அலைகள்!	22-10-2009	373
3423. இன்ப நாளிதே எனப்பாடுவோம்!	25-10-2009	377
3424. அடித்தட்டல்ல; அடித்தளமானவர்கள்!	26-10-2009	379
3425. வருந்தப் போகிறார்களா - இனியேனும் திருந்தப் போகிறார்களா?	27-10-2009	385
3426. “நீதிக்கட்சி” தொடங்கிய நெடிய பயணம்!	28-10-2009	388
3427. மேலும் பயன்படுகின்ற சந்திப்பு!	30-10-2009	395

3364. உழைத்திடும் பிறவியும், ஓய்வெடுக்கும் உல்லாசியும்!

உடன்பிறப்பே,

கடுமையான முதுகுவலி, விலாப்புற வலிகளால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் இருக்கும் என்னிடம் முன்னாள் முதல்வரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான அம்மையார் ஜெயலலிதா சில கேள்விகளைக் கேட்டு, அதனை அறிக்கை யாக வெளியிட்டிருக்கிறார். அவர் கேட்டுள்ள கேள்விகளும், அவற்றுக்கு என் பதில்களும், விளக்கங்களும் வருமாறு :-

கேள்வி:- தமிழ் மண்ணில் ராஜீவ் காந்தி அவர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதை கருணாநிதி ஆதரிக்கிறாரா? அப்படியானால் ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, மைனாரிட்டி அரசின் முதலமைச்சராக பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது கருணாநிதிக்கு வெட்கமாக இல்லையா? மனவுறுத்தலாக இல்லையா?

கலைஞர்:- 1991 பொதுத் தேர்தல் நேரத்தில் - மே 21ஆம் தேதி ராஜீவ் காந்தி கொலை நடந்தபோது அமைக்கப்பட்டிருந்த தேர்தல் கூட்டணியின் தலைவராக ராஜீவ் காந்தி இருந்தார். காங்கிரஸ், அ.தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காகத்தான் சென்னைக்கு விமானம் மூலம் அவர் வந்தார். அப்போது அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவரும் - இந்தியப் பிரதமருமான ராஜீவ் காந்தியை வரவேற்க அந்தக் கூட்டணியிலே உள்ள கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.க. சார்பில் யாருமே சென்னை விமான நிலையத்துக்குப் போகவில்லை என்பது உண்மையா? பொய்யா? உண்மை என்றால் "ராஜீவின் படுகொலை'' முன்கூட்டியே அ.தி.மு.க. வினருக்கு தெரிந்திருக்கிறது என்று தானே நினைக்க வேண்டியுள்ளது? இது பற்றிய சந்தேகத்தை சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் அப்போதே எழுப்பியது உண்டா இல்லையா?

மைனாரிட்டி அரசின் முதலமைச்சராக பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது எனக்கு வெட்கமாக இல்லையா என்று ஜெயலலிதா கேட்டுள்ளார். "மைனாரிட்டி'' சமூக மக்களின் முன்னேற்றத்தையும் கருத்திலே கொண்டு ஓர் அரசு நடத்துவதில் வெட்கம் என்ன வந்து கிடக்கிறது? மாறாக "மைனாரிட்டி'' மக்களுக்குத் தொண்டாற்றுவதைப் பெருமையாகக் கருதுபவன் நான். தேர்தல் ஆணையத்தாலேயே பொதுத் தேர்தலில் போட்டியிட தகுதியற்று, பின்னர் ஆளுநரின் ஒத்துழைப்போடு முதலமைச்சராக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாகப் பதவியேற்று, பிறகு நீதி மன்றம்; "இவர் பதவியேற்றது செல்லாது" என்று தீர்ப்பு கொடுத்தபோது இவருக்கு வெட்கம் வரவில்லையா? மனவுறுத்தல் ஏற்பட வில்லையா? இளந் தலைவர் ராஜீவ் காந்தியின் துணைவியார் அன்னை சோனியா காந்தி அவர்களை "வெளிநாட்டுக்காரி'' என்று விமர்சனம் செய்துவிட்டு, பிறகு அவருடன் தோழமை கொள்வதற்காக டெல்லியில் தேநீர் விருந்து வைத்தபோது இவரது வெட்கம் எங்கே போயிற்று? என்ன இருந்தாலும் வெட்கம், மானம் பற்றி அவர் பேசக் கூடாது; அது ஏன் என்பது நாட்டுக்கே நன்றாகத் தெரியுமே!

கேள்வி:- இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இன்றளவும் இலங்கை ராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டுக் கொண் டிருக்கும் ஆயுதங்களையும், நவீன சாதனங்களையும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு கொடுத்த போது கருணாநிதி என்ன செய்து கொண்டிருந்தார்? தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மத்திய அமைச்சரவையில் பங்கு வகிக்கின்றன. தி.மு.க. கூட்டணியில் உள்ள எந்த மத்திய அமைச்சருக்கும் அங்கு என்ன நடக்கிறது என்பது தெரியாதா? ஏன் அவர்கள் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை? தங்களுடைய எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் தங்களுடைய பதவியை ஏன் அவர்கள் ராஜினாமா செய்யவில்லை?

கலைஞர்:- மத்திய அரசின் சார்பில் வெளி நாடுகளுக்கு ராணுவ உதவிகள் அனுப்புவதைப் பற்றி மாநில அரசுகளைக் கலந்து கொண்டோ, அல்லது மத்திய அமைச்சர்கள் அனைவரையும் கலந்து கொண்டோ செய்யப்படுவதில்லை என்ற சிறு விஷயம் கூட பத்தாண்டு காலம் முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு தெரியாமல் இருப்பது வேதனைதான். பாதுகாப்பு போன்ற

துறைகளின் நடவடிக்கைகள் வெளிப்படையாக அனைவருக்கும் தெரிய நியாயமில்லை. இன்னும் சொல்லப்போனால், மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆனாலும், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி அவர்கள் ஆனாலும் இலங்கைக்கு இந்திய அரசு ஆயுதங்களை அனுப்பியதாகத் தெரிவிக்க வில்லை; மாறாக அதை மறுத்தும் இருக்கிறார்கள். ஆனால் ஜெயலலிதா என்னைப் பார்த்து என்ன செய்து கொண்டிருந்தேன் என்கிறார். ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோதுதான் இலங்கைக்கு மத்திய அரசு மூலம் ராணுவ உதவிகள் செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. அப்போது இவர் முதலமைச்சராக இருந்து கொண்டு என்ன செய்து கொண்டிருந்தார் என்று நான் திருப்பிக் கேட்கமாட்டேன். காரணம் ராணுவ உதவி யெல்லாம் மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டு செய்யப்படுவதில்லை என்பதை நான் அறிவேன்.

கேள்வி:- இலங்கை ராணுவ வீரர்களுக்கு இந்திய அரசு சிறப்புப் பயிற்சி அளித்தபோது கருணாநிதி என்ன செய்து கொண்டிருந்தார் என்ற "ஜெ" கேள்விக்கு என்ன பதில்?

கலைஞர் :- இரண்டாவது கேள்விக்கு அளித்துள்ள பதில்தான் இந்தக் கேள்விக்கும்! நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று திரும்பத் திரும்ப ஜெயலலிதா கேட்கிறார். கொட நாடு எஸ்டேட்டில் மாதக்கணக்கில் ஓய்வு, சிறுதாவூர் பங்களாவிலே வாரக்கணக்கில் ஓய்வு, பையனூர் மாளிகையிலே நாட்கணக்கிலே ஓய்வு, இதற்கிடையே ஐதராபாத் திராட்சை தோட்டத்திலே ஓய்வு என்று நான் எப்போதும் ஓய்வு எடுத்துக் கொண்டதில்லை. நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று கேட்பதற்கு அவருக்கு எவ்வித அருகதையும் எப்போதும் கிடையாது. ஏனென்றால் நான் உழைக்கப் பிறந்த பிறவி. அவர் ஓய்வெடுக்கப் பிறந்த உல்லாசி!

கேள்வி:- காஷ்மீர் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் நிலவும் பிரிவினை கோரிக்கை குறித்து, அதாவது தனி நாடு கோரிக்கை குறித்து, கருணாநிதி மற்றும் தி.மு.க. வின் நிலைப்பாடு என்ன?

கலைஞர்:- தி.மு.கழகத்தின் பிரிவினைக் கொள்கை குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் கைப்படவே "எண்ணித் துணிக கருமம்" என்ற தலைப்பில் நூலாகவே

எழுதி வைத்துள்ளார். ஜெயலலிதாவிற்கு அதை யெல்லாம் படித்திட நேரம் இருந்திருக்காது. மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை ஜெயலலிதா தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், கழக சட்ட திட்டப் புத்தகத்தில் விதி 2 மற்றும் விதி 3 ஆகியவற்றைப் படித்துப் பார்க்கட்டும்.

விதி 2 : "குறிக்கோள்" என்ற தலைப்பில் "இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது என்பது தி.மு. கழகத்தின் குறிக்கோள் ஆகும்."

விதி 3 : "கோட்பாடு'' என்ற தலைப்பில் "அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு" அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும்; பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும்; பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும்; பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும் அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும்; மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும் - மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States and Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது.

அன்புள்ள,

மு.க.

31-1-2009

3365. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே!

உடன்பிறப்பே,

“உடன்பிறப்பே’’ என்று அழைத்து இந்த வேண்டுகோள் கடிதம் - நான் எழுதும்போது, தி.மு. கழக உடன்பிறப்புகளை மட்டும்தான் குறிப்பிடுகிறேன் என்று கருதாமல், தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளின் செயல்வீரர்களையும், தூய தொண்டர்களையும் விளித்து எழுதுவதாகவே கருதி, நான் உறவு கொண்டாடி உரைக்கின்ற விளக்கங்களையும், விடுக்கும் வேண்டு கோளையும் சிந்தித்து ஏற்பீர் என்ற நம்பிக்கையில் எனக்காக - உனக்காக என்றில்லாமல் தமிழ் இனத்துக்காகக் கடமையாற்றிடக் கனிவுடன் அழைக்கிறேன்.

தமிழ் இனம்; தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒன்றுபட வேண்டுமென்று கூறுவது; வெறும் உபதேசமல்ல! “ஊருக்கல்லவா சொன்னேன்; உனக்கும் எனக்குமல்லவே’’ என்று நினைத்திடும் - அல்லது அவ்வாறு நடந்திடும் உபதேசிகளையும் கொண்ட உலகம்தான் இது! அத்தகைய ஒவ்வா நிலையிலிருந்து ஒதுங்கி வந்து; என் உயிரினு மேலான உடன்பிறப்பே; உனக்கு இதை உரைக்கின்றேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக - அறநெறியில் நடத்தப்பட்ட போராட்டங்களிலும், ஆயுதம் தாங்கி அடலேறுகள் நடத்திய போராட்டங்களிலும் - இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு காணாமல் நீடிப்பதற்கு மிக முக்கியமான காரணம்; இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கிடையே நடைபெற்ற சகோதரப் போராட்டங்களும் - இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தர இங்கே தமிழகத்தில் இயங்கிடும், அரசியல் இயக்கங்களுக்கிடையே தொடரும் சகோதர யுத்தங்களும்தான் என்பதை மறக்கவும்கூடாது, மறைப்பதும் நாம் எதிர்பார்க்கும் நல்ல முடிவுக்கு வழி வகுக்காது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில்; அங்குள்ள தமிழர்களின் உரிமைகளுக்காகவும் - அவர்களைப் போரின் விளைவுகளில்

இருந்து பாதுகாப்பதற்காகவும் - ஒரே விதமான உணர்வும் கொள்கையும் கொண்டவர்கள் இங்கே; தமிழ்நாட்டில் ஒற்றுமையாகச் செயல்பட முடிந்திருக்கிறதா என்பதை கடந்த காலத்தை நினைத்துப் பார்த்து - இனியாவது நல்ல முடிவு எடுத்து ஒற்றுமைச் சூழ்நிலையை உருவாக்கிட உதவிட வேண்டு மென்று - எல்லா இயக்கங்களையும் சேர்ந்த உடன்பிறப்புக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சி என்ற முறையில் தி.மு.க. தமிழகத்தில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கூட்டி அந்தக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி; நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளைத் துறந்திட தி.மு.க. தவிர வேறு கட்சிகள் முன்வராத நிலையில் அந்தத் தீர்மானம் கிடப்பிலே போடப்பட்டது.

அடுத்து அனைத்துக் கட்சிகளுக்கு அழைப்பு விடப்பட்டு நடைபெற்ற "மனிதச் சங்கிலி'' நிகழ்ச்சியை பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க.வும், அதன் தோழமைக் கட்சியான ம.தி.மு.க.வும் வேறு சில கட்சிகளும் புறக்கணித்தே விட்டன.

டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து முறையிட என் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் சென்றபோது - பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க., மற்றும் ம.தி.மு.க. ஆகியவை அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஆளுங்கட்சி சார்பில் நானே முன்மொழிந்து இலங்கையில் போர் நிறுத்தம் செய்திட சட்டமன்றத்தில் மூன்று முறை விடுத்திட்ட வேண்டுகோள் தீர்மானம் கூட பிரதான எதிர்க் கட்சியின் வெளிநடப்பு என்ற செய்தியோடுதான் முடிவுற்றது.

பிரதான எதிர்க்கட்சியின் தோழமைக் கட்சிகள்; இலங்கைப் பிரச்சினைக்காக தனித் தனியே நடத்திய அறப்போர்களிலும்; பிரதான எதிர்க்கட்சி கலந்து கொள்ளவில்லை. அதே சமயம் ஆளுங் கட்சியான தி.மு.க.வும் அந்தக் கட்சிகளால் முறையாக அழைக்கப்படவே இல்லை.

எனினும்; ஆளுங்கட்சியென்ற பொறுப்பும் கடமையும் இருப்பதை எண்ணி, எதிர்க்கட்சி முதற்கொண்டு எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் திரட்ட முயற்சி மேற்கொண்டு அதிலும் வெற்றிபெற முடியாத நிலைமையே ஏற்பட்டது.

சில கட்சிகளின் தலைவர்கள்; இந்தப் பிரச்சினையில் தி.மு.க.தான் முன்நிற்க வேண்டுமென்று முழங்கினார்களே தவிர; நாம் என்னவோ; "போர் நிறுத்தம்" என்பதற்கு எதிரிகள் போலவும் - இலங்கைத் தமிழர் பற்றி அக்கறையற்றவர்கள் போலவும் - அறிக்கைகள் - பேட்டிகள் அளிக்க முற்பட்டு; ஒற்றுமை முகிழ்ப்பதைக் குலைத்திடக் காரணமானார்கள். குறிப்பிட்டு அவர்கள் யார் என்று சுட்டிக் காட்ட நான் விரும்பவில்லை. இனியும்; "பிளவு மனப்பான்மை" அதிகமாகிவிடக் கூடாதே என்பதற்காக!

இதோ; அயல்நாடுகள் பலவும் அக்கறையுடன் இலங்கையில் அப்பாவித் தமிழர்களின் அழிவைத் தடுத்து நிறுத்திட அறிவிப்புகள் செய்துள்ளன.

நமது வேண்டுகோளின்படி இந்திய மத்திய அரசு; எடுத்த முயற்சிகளால் ஐ.நா. மன்றம் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன், டோக்கியோ கூட்டமைப்பு நாடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் என அந்த அறிவிப்புகளை வரவேற்கிற அதே நேரத்தில் - போற்றத்தக்க அளவில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோரின் அறிவிப்புகளும் வெளிவந்துள்ளன.

"இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை"யின் சார்பில் இம்மாதம் தொடர்ந்து நாம் நடத்த இருக்கிற பேரணிகள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் - இவற்றில்;

தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கிடையே ஆம்; நமக்குள்ளே போராட்டம் நடத்திக் கொண்டிராமல் - இந்திய மத்திய அரசும் வேடிக்கை பார்க்கவில்லை என்ற நிலை உணர்ந்து -

விரைவில் வர இருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும், இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை - இது, பாசம் - உறவு - உணர்வு - இவற்றோடு ஒன்றிக் கலந்தது எனும் உண்மை உணர்ந்து; கட்சி வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலித்து; இரண்டு பிரிவுகளாய் இருப்பினும் "கத்தரிக்கோல்" போல இருந்து காரியமாற்றிடக் கடமைப்பட்டவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

இன்றைய பிரதான எதிர்க்கட்சி, அ.தி.மு.க.வின் சார்பில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது

- கொண்டிருந்த இலங்கைத் தமிழர் பற்றிய கொள்கையை - அவர் ஏற்ற நடைமுறையை - இன்றைக்கும் அக்கட்சியின் உடன்பிறப்புகள், அம்மையார் ஜெயலலிதா தலைமையில் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டு; அவ்வாறே எதிர்பார்த்து -

இரு பிரிவாக நமது ஆதரவு அணிகள் இயங்குவது தவிர்க்க முடியாதது என்றாலும்; இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும் உயிர்களையும் பாதுகாப்பதில், ஒன்றாக இருப்போம் வாரீர் என்று அழைக்கிறேன்.

எல்லோரும் ஒன்றுபட்டால் இலங்கைத் தமிழினம் காக்கப்படும் என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

அந்த நிலையை நோக்கி நாம் நடக்கிறோம் என்பதற்கு அடையாளமாக -

"இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை''யின் சார்பில் நடைபெறும் - பேரணி, பொதுக் கூட்டம் அறப்போர் ஆர்ப்பாட்டம் அனைத்திலும் யாரையும் புண்படுத்தாத முழக்கங்கள்

"இலங்கையில் போர் நிறுத்தம் செய்க!"

"நிலையான அமைதிக்கு வழி காண்போம்; வாரீர்!"

"தமிழினம்; தாழாது, தாழாது! யாரையும் தாழ்த்தாது!"

"தடுப்போம் - தடுப்போம்;

இனப் படுகொலையை தடுப்போம்!"

உடன்பிறப்பே, இந்த முழக்கங்களை மட்டும் - இதனையொட்டிய முழக்கங்களை மட்டும் - பேரணிகளில், கூட்டங்களில் ஒலித்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-2-2009

3366. உள்ளமும் - பள்ளமும்!

உடன்பிறப்பே,

பத்துக்கு மேற்பட்ட டாக்டர்களின் மேற்பார்வையுடன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு, தாங்கொணா வலியுடன் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் நான்; தொலைக்காட்சிச் செய்திகளில் இலங்கைத் தமிழர் உரிமைப் போர் குறித்து; நமது தமிழகத்தில் கட்சிகள் இரு பிரிவாக நின்று குரல் கொடுப்பதைக் கேட்டுக் கொண்டு தானிருக்கிறேன்.

அந்தப் பேரணிகளிலும், கூட்டங்களிலும் நானும் கலந்து கொள்ள முடியாமல் உடல் நலிவுக்கு ஆளாகி யிருக்கிறேனே என்ற கவலை என்னை வாட்டுவதை விட; நான் இரண்டு நாளைக்கு முன்பு; "ஒன்று பட்டால் உண்டு வாழ்வே!" என்ற தலைப்பில் எல்லாக் கட்சிகளிலுமுள்ள உடன்பிறப்புக்களுக்கும் விடுத்த வேண்டுகோளை அலட்சியப்படுத்தியது மட்டுமல்ல; பிறிதோர் அணியின் கூட்டங்களில் பேசியோரும் - பேட்டி கொடுத்தோரும் என்னை மிக இழிவுபடுத்தித் தூற்றியிருக்கிறார்கள். அதனால் எனக்கு அணுவளவு வருத்தமும் இல்லை. அவர்கள் பேசுவது அவர்கள் மனச்சாட்சிக்கே சரியென்று பட்டால் அதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

என்னையும் - இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையில் உள்ள பல்வேறு கட்சிகளின் முன்னணியினரையும்; இப்படி ஒரு சிலர் தூற்றுகிறார்கள் - மேடையில் நின்று நமது அணுகுமுறையை அசிங்கப்படுத்துகிறார்கள் என்பதற்காக - இந்தப் பேரவையில் உள்ள யாரும் அவர்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லை; பதில் சொல்ல வேண்டாமென்றும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" - அண்ணாவின் அறிவுரை இது! இன்றைய நிலையில் "என் உடல் தாங்குகிறதோ - இல்லையோ; உள்ளம் தாங்கித்தானே ஆக வேண்டும் - இலங்கைத் தமிழர் வாழ்வில் பள்ளம் ஏற்படாமலிருக்க!"

அன்புள்ள,

மு.க.

9-2-2009

3367. திருமணத்திற்காக எடுத்த பட்டுப் புடவைதான்!

உடன்பிறப்பே,

2009-2010ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை நேற்றையதினம் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களால் தமிழகச் சட்டப் பேரவையிலே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் வணிகர்களும் பொது மக்கள் பிரதிநிதிகளும் தங்களுடைய கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வினர் நிதி நிலை அறிக்கை படிக்கப்பட்டபோது அவையையே புறக்கணித்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் அதற்கான காரணத்தை விளக்கி ஒரு அறிக்கையும் கொடுத் துள்ளார்கள். அந்த அறிக்கையிலே "மைனாரிட்டி தி.மு.க. அரசால்'' என்று மூன்றாண்டு காலமாக தொடர்ந்து பாடி வரும் பல்லவியையே இதிலும் பாடியிருக்கிறார்கள். மூன்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு அரசை, அ.தி.மு.க. இவ்வாறு மைனாரிட்டி தி.மு.க. அரசு என்று சொல்லுகின்ற வரையில் கழகத்தின் சார்பில் அ.தி.மு.க. வைப் பற்றி குறிப்பிடும்போது ஊழல் சாம்ராஜ்யம் நடத்திய அ.தி.மு.க. என்றே சொல்லலாம்.

ஊழல் சாம்ராஜ்யம் நடத்திய அ.தி.மு.க. சார்பில் தரப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பாக இலங்கை ராணுவத்தால் இலங்கைத் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதை கழக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும், போர் நிறுத்தம் ஏற்பட எந்தவிதமான உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்காமல் கண் துடைப்பு நாடகம் நடத்தி வருகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் ஊழல் சாம்ராஜ்யம் நடத்திய அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா 17.1.2009 அன்று சென்னையில்

செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம், போர் நடைபெறும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதி விலக்கல்ல. எங்கே போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள்" என்று இலங்கை ராணுவத்திற்கு ஆதரவாகக் கூறி, அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. ஜெயலலிதாவின் இந்தக் குற்றச்சாட்டு சரியல்ல என்று அவர்கள் அணியிலே உள்ள தோழர் தா. பாண்டியனே மறுநாள் அறிக்கைவிடுத்தார்.

இப்படியெல்லாம் இலங்கை ராணுவத்திற்கு ஆதரவாகப் பேசிய ஜெயலலிதாவின் கட்சியினர் தான்-இலங்கைத் தமிழர்களுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பிரமாண்டமான மனிதச் சங்கிலியை நடத்தி, சட்டமன்றத்திலே மூன்று முறை தீர்மானம் தீட்டி, டெல்லி சென்று அனைத்துக் கட்சியினரும் பிரதமரைச் சந்தித்து போரை நிறுத்த கோரிக்கை வைத்து, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்பச் செய்து, இலங்கை அரசையே 48 மணி நேரத்திற்கு போர் நிறுத்தம் செய்யச் செய்து, இலங்கைத் தமிழர்களுக்காக நிவாரண நிதி திரட்டி, அந்த நிதியிலிருந்து உணவுப் பண்டங்களையும், உடைகளையும், மருந்துகளையும் வாங்கி செஞ்சிலுவை சங்கம் மூலமாக இலங்கைக்கு அனுப்பி அவை அங்கே முறையாக அவர்களுக்குக் கிடைக்கச் செய்து, இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை என்றதொரு அமைப்பையும், நீதியரசர்களைக் கொண்ட அதன் துணை அமைப்பையும் ஏற்படுத்தி இன்றளவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நாம் நாடகம் நடத்துகிறோமாம்.

அம்மையார் மூன்று மாத காலமாக ஓய்வெடுத்து விட்டு-அரசு சார்பிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே மட்டுமல்லாமல், அவர்களுடைய அணியிலே இருக்கின்ற கட்சியினர் நடத்திய உண்ணா விரதம் போன்ற நிகழ்ச்சிகளிலேகூட அவர் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துவிட்டு, இன்று தமிழர்கள் ஒட்டுமொத்தமாக தன்னை கை விட்டு விடுவார்களோ என்பதற்காக திடீரென்று போர் நிறுத்தம் செய்வதற்காக மத்திய மாநில அரசுகள் குரல் கொடுக்காமல் நாடகமாடுவதாக அறிக்கை விடுத்துவிட்டு நிதிநிலை அறிக்கையை புறக்கணிக்கச்

செய்துள்ளார். அ.தி.மு.க. ஆட்சியிலே ஒவ்வொரு திட்டத்திலும் ஊழல் என்று சிரிப்பாய் சிரித்த நிலை மறந்து போய், தற்போது எதையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொத்தாம் பொதுவாக ஊழல் தலை விரித்து ஆடுகிறது என்று அறிக்கையிலே கூறியிருக் கிறார்கள். ஒருவேளை அந்த அறிக்கையைத் தயாரித்தவர் கிண்டலாக "ஊழல் சாம்ராஜ்யம் நடத்திய அ.தி.மு.க. இப்போது அறிக்கை என்ற பெயரால் தலை விரித்து ஆடுகிறது" என்று எழுதி யிருக்கிறாரோ என்னவோ? மக்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. கழக அரசின் சாதனைகளை அன்றாடம் அனுபவித்து வரும் தமிழ்நாட்டு மக்கள்; வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப் பட்டு விட்டனவா என்பதை தெளிவாக அறிவார்கள். ஒரேயொரு உதாரணம் மட்டும் கூற வேண்டுமேயானால் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று வாக்குறுதி அளித்தோம். ஆனால் தற்போது ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று வழங்கி வருகிறோம். நாட்டு மக்களுக்கு இது தெரியாதா?

பிரதான எதிர்க்கட்சிதான் நிதி நிலை அறிக்கை பற்றி இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறதென்றால், அவர்களுடன் தோழமை பூண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளும், ம.தி.மு.க.வும் பேரவை நடவடிக்கைகளிலே கலந்து கொண்டு ஜனநாயக முறையிலே நிதி நிலை அறிக்கை பற்றி தங்கள் கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்காக நன்றி செலுத்துகின்ற அதே நேரத்தில் நிதி நிலை அறிக்கை குறித்து அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு முறையான பதிலளிக்க வேண்டிய கடமை உணர்வோடு பதிலளிக்க விரும்புகிறேன்.

விவசாயிகள் வாங்கும் கூட்டுறவுக் கடன்களுக்கு இனி வட்டி கிடையாது என்றும், அந்த வட்டித் தொகையை அரசாங்கமே விவசாயிகளுக்காகச் செலுத்தும் என்றும் நிதி நிலை அறிக்கையிலே அறிவித்திருப்பதை ஜெயலலிதா வழக்கம் போல் மிகப் பெரிய ஏமாற்று வேலை என்று சொல்லியிருக்கிறார். கழக அரசு தீட்டியுள்ள ஒவ்வொரு திட்டத்தையும் அறிவிக்கப்பட்ட நிலையில் ஜெயலலிதா ஏமாற்று வேலை என்று கூறுவதும், பிறகு அது மிகப் பெரும் வெற்றியாக அமைவதும் தமிழகத்திலே நாம் கண்டு வருகின்ற ஒன்று தான். புதிய பயிர்க் கடன்கள்

இந்த ஆண்டு வழங்க 2000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது பற்றி ஜெயலலிதா, விவசாயிகளுக்கு கடந்த ஆண்டுகளில் பயிர்க் கடன்கள் கிடைக்க வில்லை என்று நிதி நிலை அறிக்கையை ஒழுங்காகப் படிக்காமலே சொல்லியிருக்கிறார். 2006-2007 ஆம் ஆண்டு 1,250 கோடி ரூபாயும், 2007-2008இல் 1,360 கோடி ரூபாயும், நடப்பு நிதியாண்டில் இதுவரை 1,325 கோடி ரூபாயும் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்று எழுதப் பட்டிருப்பதை அவர் கவனிக்கவில்லை போலும்!

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், புதிய சட்டமன்ற வளாகம், நவீன மாநில நூலகம் போன்ற திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மட்டும் இடம் பெறுவதாக ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். ஜெயலலிதா ஒரு நாள் தனது காரை எடுத்துக் கொண்டு இந்தப் பணிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று பார்த்தால் நேரிலேயே அந்தப் பணிகள் நடைபெறும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக கம்யூனிஸ்ட் கட்சிகளும், ம.தி.மு.க.வும் இந்த நிதி நிலை அறிக்கையை பாராளுமன்றத் தேர்தலை மனதிலே கொண்டு தீட்டப்பட்ட நிதி நிலை அறிக்கை என்று சொல்லியிருப்பதிலிருந்தே, அவர்கள் எல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்கக் கூடிய நிதி நிலை அறிக்கை என்றும் மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய நிதி நிலை அறிக்கை என்றும் கருதுகிறார்கள் என்பது திட்டவட்டமாக தெளிவாக்கிவிட்டது. ஆனால் இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கை வெளிவரக் காரணம் பாராளுமன்றத் தேர்தல்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். திருமணத்திற்கென்று எடுத்த பட்டுப் புடவையை, திருவிழாவிலே கட்டிக் கொள்வதில் தவறில்லையே! குடும்பப் பெண்கள் அப்படிச் செய்வது வழக்கம்தானே? பாராளுமன்றத் தேர்தலுக்காகவோ என்னவோ, நிதி நிலை அறிக்கை நல்லதொரு அறிக்கை என்று அவர்கள் ஒப்புக் கொண்டமைக்காக நன்றி.

விவசாய வளர்ச்சிக்கு - வேளாண்மைக்கு- நிதி நிலை அறிக்கையிலே எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் திரு நாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு

விவசாயிகள் பெறும் கூட்டுறவு கடன்களுக்கு இனி வட்டியே கட்ட வேண்டியதில்லை என்றும், விவசாயிகளுக்குப் பதிலாக அந்த வட்டித் தொகையை அரசாங்கமே செலுத்தும் என்றும் அறிவித் திருப்பது விவசாயிகளுக்காகச் செய்யப்பட்ட சாதனை இல்லையா?

எத்தனையோ ஆண்டுகளாக - நம் நினைவு தெரிந்த நாள் முதல் இருந்த வரி "நில வரி." அந்த நில வரி இனிமேல் பெயர் அளவில்- அந்த நிலத்திலே உரிமை கோருவதற்காக மட்டும் இருந்தால் போதும் என்று கூறி இது வரை புஞ்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15 ரூபாய் என்பதிலிருந்து இரண்டு ரூபாயாகவும், நஞ்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் என்பதிலிருந்து 5 ரூபாயாகவும் குறைக்கப்பட்டிருக்கிறதே, அது விவசாயிகளுக்காக செய்யப்பட்ட நன்மை இல்லையா?

இந்த அளவிற்கு குறைக்கப்பட்ட நில வரியைக் கூட, இந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களுக்கு அறவே கிடையாது என்று நிதி நிலை அறிக்கை கூறுகிறதே, அது நன்மை இல்லையா?

விவசாயிகளுக்கு தல வரி, தல மேல் வரி என்பது இனிமேல் அறவே கிடையாது என்று அறிவித்திருக்கிறோமே, அது நன்மை இல்லையா? கம்யூனிஸ்ட் கட்சிகளின் பழைய நண்பர்களே, விவசாயிகளுக்கு இவைகள் எல்லாம் சாதனை இல்லை என்றால் வேறு எதைத்தான் சாதனை என்று கூறுவீர்கள்? விவசாயிகளுக்கு இந்த ஆண்டு புதிதாக கடன் கொடுப்பதற்காக மட்டும் 2000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோமே, அது சாதனை இல்லையா?

விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ள காப்பீட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தை அரசாங்கமே செலுத்துகிறதே, வேறு எந்த மாநிலத்திலே இந்தத் திட்டம் இருக்கிறது? வரும் ஆண்டிலே 25 லட்சம் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்து கொள்ள அரசு மானியம் அளிக்கப்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே பத்தி 13 கூறுகிறதே, அது சாதனை இல்லையா? விவசாயிகளுக்காக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கையை 20 ஆயிரமாக உயர்த்துவதோடு புதிய குழுக்களுக்கு சுழல் நிதியும்

வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே அது சாதனை இல்லையா?

ம.தி.மு.க. சார்பில் நிதி நிலை அறிக்கை மீது கருத்துக் கூறியுள்ள தம்பி மு. கண்ணப்பன், இலங்கையில் போரை நிறுத்த மைய அரசை அழுத்தம் கொடுக்கவில்லை என்று சொல்லியிருப்பது கட்சிக் கட்டுப்பாட்டின்படி என்று கருதுகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நிதி நிலை அறிக்கையில் பத்தி 5இல் கூறப்பட்டுள்ளது. அதில் "இரு சாராரும் போரை நிறுத்தி நியாயமான உடன்பாட்டிற்கு வந்திடத் தேவையான தீவிர முயற்சிகளை இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக தமிழக அரசின் சக்திக்கு உட்பட்ட வரை, ஒரு மாநில அரசு எந்த அளவிற்கு வலியுறுத்த முடியுமோ அந்த அளவிற்கு இலங்கையிலே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நாம் குரல் கொடுத்துள்ளோம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றத் தலைவர், விலைவாசியைக் குறைக்க எந்தவிதமான திட்டமும் நிதி நிலை அறிக்கையிலே கூறவில்லையே என்று சொல்லியிருக்கிறார். ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாய உணவுப் பொருள்களை வழங்கும் திட்டம், மலிவு விலையில் மளிகைப் பொருள்களை 50 ரூபாய்க்கு வழங்கும் திட்டம், ஒரு கோடியே 84 லட்சம் குடும்பங்களுக்கு ஒரு சகோதரன் என்ற நிலையிலே இருந்து பொங்கலுக்கு அரிசி, பருப்பு, வெல்லம் வழங்கியது, 100 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்தது, உழவர் சந்தைகளை பொலிவுடன் நடத்துவது போன்ற திட்டங்கள் எல்லாமே விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டங்கள்தான்.

மூன்றாண்டு காலமாக அரசுக்கு நிதி நிலையில் எவ்வளவோ சிரமங்கள் இருந்தபோதிலும், பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பது, மின் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பது, புதிதாக வரிகளைப் போடாமல் இருப்பது, வரிச் சலுகை அளிப்பது எல்லாமே விலைவாசி மேலும் மேலும் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள்தான். தமிழகத்திலே வேறு

ஒரு ஆட்சி அமைந்திருந்தால் இந்த மூன்றாண்டு காலத்தில் பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் இருந்திருப்பார்களா? மின் கட்டணத்தை உயர்த்தாமல் இருந்திருப்பார்களா? என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசு அதிகாரிகள் எல்லாம் திரும்பத் திரும்ப இவைகளை உயர்த்த வேண்டுமென்று வலியுறுத்திய நேரத்தில் எல்லாம் வெவ்வேறு வழிகளைக் கண்டு பிடித்து பாமர மக்களுக்கு பளுவினைத் தந்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறோம்.

பா.ம.க. சட்டமன்றத் தலைவர், நண்பர் கோ.க. மணி அவர்கள் கூட இந்த நிதி நிலை அறிக்கை பா.ம.க. வெளியிட்ட "மாதிரி நிதி நிலை'' அறிக்கையைப் போல உள்ளது என்று கூறிவிட்டு, முடிக்கும்போது பாராளுமன்றத் தேர்தலுக்கான நிதி நிலை அறிக்கை போல் இருந்தாலும், அற்புதமாக பாராட்டும் வகையில் இல்லை என்று முடித்திருக்கிறார். அந்த வார்த்தைகள், சொல்ல வேண்டுமே என்பதற்காக சொல்லப்பட்ட வார்த்தைகளாகத்தான் தெரிகின்றன.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர், நண்பர் திரு. கே.வி. தங்கபாலு, எம்.பி., சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பெரியவர் திரு. சுதர்சனம், தாய்க் கழகத்தின் தலைவர், தமிழர் தலைவர் கி. வீரமணி, எம்.ஜி.ஆர். கழகச் சார்பில் அருமை நண்பர் ஆர். எம். வீரப்பன், விடுதலை சிறுத்தைகள் சார்பில் அறிக்கை விட்டுள்ள தம்பி ரவிக்குமார், ஹைதர் அலி, ஜெகத்ரட்சகன், திருப்பூர் அல்தாப், செல்லமுத்து, ஏ.சி. சண்முகம் மற்றும் அரசு அலுவலர் உட்பட பல்வேறு சங்கங்கள், அமைப்புகளைச் சார்ந்தோர் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று பாராட்டியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்" - ஆனால் நம்முடைய எண்ணம் எல்லாம் நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல என்னுடைய எண்ணங்களும், இந்த அரசின் செயல்பாடுகளும், இந்த நாட்டிலே வாழும் அடித்தட்டு மக்களையே சுற்றிச் சுற்றி சுழன்று வருகின்றது

என்பது தான் உண்மை என்பதற்கு அடையாளமே இந்த நிதி நிலை அறிக்கை.

இந்த நிதி நிலை அறிக்கையிலே தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் இந்த மருத்துவமனையிலே சிகிச்சை படுக்கையிலே இருந்து கொண்டு, ஒரு கடிதத்திலே எழுதி விட முடியாது. அவைகளையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு, அருமை உடன்பிறப்பே, உன் கையில்தான் உள்ளது. அதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும். அதற்கான நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். தற்போதே இளைஞர் அணி சார்பில் அத்தகைய கூட்டங்களை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளார்கள். அவர்களுடன் இணைந்து தமிழகம் எங்கும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்திட கேட்டுக் கொள்கிறேன். இறுதி எஜமானர்களாகிய மக்கள் எப்போதும் போல் இந்த திட்டங்களுக்கு தங்கள் மதிப்பெண்களை தந்தே தீருவார்கள்.

அன்புள்ள,

மு.க.

19-2-2009

3368. கையை நீட்டுகிறார்; காங்கிரசாரே எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

அபாயம் நிறைந்தது என்று எச்சரிக்கப்பட்டதும், இது எந்த முடிவில் கொண்டு போய் விடுமோ என்று பலர் ஆதங்கப்பட்டதுமான எனது முதுகு தண்டில் ஏற்பட்ட விபரீத நோயை குணப்படுத்த முடியும் என்று பல மருத்துவர்கள் நம்பிக்கையுடன் கூற முடியாத நிலையில் அதற்கு அறைகூவல் விடுவது போல - தைரியமாக முன் வந்து ராமச்சந்திரா மருத்துவ மனை டாக்டர் மார்த்தாண்டம், டாக்டர் தணிகாசலம் ஆகியோரும் - அவர்களைச் சார்ந்த குழுவினரும் - டெல்லியிலே உள்ள பிரபல மருத்துவ மேதை, எலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் அரவிந்த் ஜெயஸ்வால் அவர்களை அழைத்து - நடத்திய சிகிச்சையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டு - நீயும், தமிழ் நாட்டு உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் சகோதரர்களும் தொடர்ந்து வழங்கிடும் வாழ்த்துகள் மருந்தாகி இன்னும் சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவ மனையிலே இருந்தாலும் - என் உள்ளம் உன்னையும், உன் போன்ற உடன்பிறப்புகளாம் தமிழ்ப் பெருங்குடி மக்களையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

நேற்றைக்கு முன்தினம் டெல்லியிலிருந்து வந்த டாக்டர் அரவிந்த் ஜெயஸ்வால் என் உடல் நிலையைப் பரிசோதித்து, இன்னும் நான்கு வாரங்களாவது படுக்கையிலே ஓய்வெடுக்க வேண்டும் என்றும் கட்டிலிலிருந்து இறங்கக் கூடாது, எல்லாமே மருத்துவமனைப் படுக்கையிலேதான் என்கிற அளவிற்கும், இன்னும் கண்டிப்பாக ஓய்வெடுக்க வேண்டு மென்று வலியுறுத்திச் சென்றிருக்கிறார்.

அவர் வலியுறுத்தலை ஏற்றுக் கொண்டு, ஓய்வெடுப்பது என் உடலுக்கு நல்லது; ஆனால் உன்னைப் பார்க்காத என்

கண்களுக்கும், உன் உணர்வுகளை நேரில் அறிய இயலாத என் உள்ளத்திற்கும் எவ்வளவு வேதனை தரக் கூடியது என்பதை, நீ - நானாக இருந்தால்தான் தெரிந்து கொள்ள முடியும்.

உடன்பிறப்பே,

கேட்டு விடாதே; அப்படியானால் நீயும் நானும் "ஈருரு - ஓர் உள்ளம்" என்பதை நீ இன்னும் அறியாமல் இருக்கிறாயா என்று!

நிம்மதியாக ஓய்வெடுக்கச் சொல்கிறார்கள் டாக்டர்கள்! அரசு அதிகாரிகளைச் சந்தித்து, அரசாங்க விஷயங்களை ஆணையாகப் பிறப்பிக்க எந்த அளவிற்கு எனக்கு மருத்துவத் துறை நண்பர்கள் இந்த மருத்துவமனையில் அவகாசம் தருகிறார்களோ - அந்த அவகாசத்தைக்கூட நாட்டு நிர்வாகத்திற்கும், தமிழகத்திலே காக்கப்பட வேண்டிய அமைதியான சூழலுக்கும்தான் செலவிட்டுக் கொண்டிருக்கிறேன். என் அருகேயிருந்து என்னைக் கவனித்துக் கொள்ளும் மருத்துவர்களில் ஒருவராகவே மாறி துணை நிற்கும் தம்பி சண்முகநாதன் மூலம் - "டிக்டேட்" செய்து - நான் நினைப்பதை - நான் கருதுவதை உனக்கும் நாட்டிற்கும் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைதியை - ஓய்வை - உற்சாகத்தை தெரிந்து கொள்வதிலும், அது பற்றி தெளிவுரையை உன் போன்றவர்களிடம் கூறுவதிலும் - நான் அடைகிற நிம்மதியும், மகிழ்ச்சியும் நீடிக்கக் கூடாது - நீடிக்க வேண்டியது அவர் உடல் நலிவு ஒன்றுதான் என்று எண்ணுகிற சில பேர், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவராய் உண்மைகளை மறைத்து, ஊர் அமைதியை கெடுப்பவராய் - நன்முறையில் நடைபெறும் நலிந்தோருக்கான இந்த ஆட்சியை வன்முறையில் கவிழ்த்து விடலாமா என்று திட்டமிடுபவர்களும் இல்லாமல் இல்லை. "அவர்கள் எல்லாம் தீர்க்காயுசு பெற்று வாழ்க" என்று தாய் உள்ளத்தோடு நான் வாழ்த்துவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

நானே கேட்டுக் கொண்டும் - என் சார்பில் பேராசிரியப் பெருமகன், அன்பழகனார் கேட்டுக் கொண்டும், "இந்த நேரத்தில் அவருக்கு துன்பச் சுமையை தோளில் ஏற்றாதீர்கள்" என்ற வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு - இலங்கைத் தமிழர் பாதுகாப்பு என்ற உண்மையானதும், உணர்ச்சி மிக்கதும், உறுதியானதுமான கொள்கை அடிப்படையில் தமிழ் நாட்டு மக்களையெல்லாம் ஒன்று

சேர்த்து குரல் எழுப்ப ஆட்சியின் சார்பாகவே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இலங்கையிலே போர் நிறுத்தம் செய்ய வேண்டும், இல்லையேல் நாமனைவரும் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் பதவி விலக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம். ஏகமனதாக அந்தக் கூட்டத்தில் அது ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, தி.மு. கழக எம்.பி.க்கள் - மாநிலங்களவை உறுப்பினர்கள் உட்பட - அத்தனை பேரும்தான் உடன்பட்டு பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொடுத்தார்கள். மற்ற கடிதங்களும் வந்து சேரும் என்று காத்திருந்தேன். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த அகில இந்திய கட்சிகள் அனைத்தும் தங்கள் மேலிடத்து உத்தரவு இல்லாமல் ராஜினாமா கடிதங்களைக் கொடுக்க தயக்கமே காட்டினார்கள்.

அதன் பிறகு பிரமாண்டமான மனிதச் சங்கிலி - டெல்லிக்குச் சென்று பிரதமரை நேரில் சந்தித்தது - பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டது - அதில் கால தாமதம் ஏற்படவே, நானே முன் மொழிந்து "இறுதித் தீர்மானம்" என்ற பெயரால் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தது - அ.தி.மு.க., ம.தி.மு.க., போன்ற சில கட்சிகள் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்ள முடியாமல் வெளி நடப்பு செய்தது - அதற்காக நான் சோர்ந்து போகாமல் அந்தத் தீர்மானத்தை மத்திய அரசிடம் வலியுறுத்திக் கொண்டே இருந்தேன்.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்தியிலே உள்ள அமைச்சர்களையும், பிரதமரையும், சோனியா காந்தியையும் சந்தித்து என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தார்கள். அதன் பிறகு பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைக்குச் சென்று வந்தார்கள். 48 மணி நேரம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. முழுப் போர் நிறுத்தம் வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி டெல்லிக்கு பல கடிதங்கள் எழுதப்பட்டன.

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை ஒன்றை அமைத்தேன். அதில் கட்சிச் சார்பற்ற முறையில் பலரை அங்கம் வகிக்கச் செய்தேன். அதனையொட்டி சட்டத் துறை அமைச்சர், தம்பி துரைமுருகன் தலைமையில் நீதியரசர்களைக் கொண்ட ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது; ஒருவேளை இலங்கையில்

போர் நிறுத்த ஒப்பந்தம் நடைபெறுமானால், அதற்குப் பிறகு, அந்த நாட்டில் தமிழர்கள் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒப்பந்தம் நிறைவேறும்போது, அதற்கு உறுதுணையாக இருக்க, அந்த நீதிபதிகளைக் கொண்ட அந்தக் குழு பயன்படும் என்றே கருதினேன். அதற்காகவே அந்தக் குழுவையும் டெல்லிக்கு அனுப்பி அம்மையார் சோனியா காந்தியைச் சந்திக்கச் செய்தேன். குடியரசு தலைவரையும் சந்தித்து நிலைமைகளை அவர்கள் விளக்கினார்கள். ஐ.நா. மன்றத்திற்கு இதைப் பற்றி எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டேன்.

இதற்கிடையே பல நாடுகளிலேயிருந்து, இலங்கையிலே போரை நிறுத்த வேண்டும் என்று அனுப்பப்பட்ட செய்திகளுக்கு மூல காரணமாக நான் எடுத்த முயற்சிகளும் - இங்கு தமிழ்ச் சமுதாயம் பொங்கிய நிகழ்ச்சிகளும் விளங்கின. அவைதான் டெல்லியில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது என்பதும், அதன் காரணமாகத்தான் ஒரு வேளை, டெல்லியின் யோசனைப்படி சில அயல் நாடுகள் இலங்கைப் போர் நிறுத்தம் குறித்து கருத்துக் களை தெரிவித்திருப்பதுதானோ மூல காரணமாக அமைந்தது என்பதை நான் எண்ணி ஆறுதல் அடைவதை விளக்கமாகச் சொல்ல இயலாது. விளங்கிக் கொள்பவர்களுக்கு மட்டும் புரிந்தால் போதுமானது.

தமிழகத்தில் ஐம்பதாண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர்களுக்காக

குரல் கொடுத்து -

வாதாடி, போராடி -

சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை நானும் பேராசிரியரும் தூக்கி எறிந்து -

இரண்டு முறை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகவே நமது ஆட்சி கலைக்கப்பட்டு -

இன்னும் ஒரு தாயாகவே - வயிற்றில் பிறந்த உடன்பிறப்புக்களாகவே - இலங்கைத் தமிழர்களுக்காக என் பணியை அர்ப்பணிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.

இந்த ஐம்பதாண்டு கால இலங்கைத் தமிழர் வரலாற்றில் படிந்த சோகங்கள் - அடைந்த வேகங்கள் - ஏதோ வானத்தில்

வட்டமிட்ட மேகங்களைப் போல கலைந்து விடவில்லை. என் அடி மனத்தில் ஆழப் பதிந்து சீதையின் வன வாச ஓவியங்களாகவே விளங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கு போராடுகின்ற புலிகளுக்கும் எனக்கும் தனிப்பட்ட எந்த விரோதமும் இல்லை. நான் அவர்களை அன்று முதல் இன்று வரை கேட்டுக் கொள்வ தெல்லாம் சகோதர யுத்தங்களை கைவிட்டு விட்டு, ஒன்று கூடி, அங்கு தமிழர்களைக் காப்பாற்றுங்கள் என்பதுதான். போர் நிறுத்தம் வேண்டும் என்பது அசைக்க முடியாத திட்டவட்டமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து. அந்தக் கருத்தை வென்றெடுக்க இறுதி வரை என் தலைமையிலே உள்ள இந்த இயக்கம் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட சில கலங்கத் தக்க - கண்ணீர் விடத் தக்க - அதிர்ச்சி தரத் தக்க - ராஜீவ் காந்தி படுகொலை போன்ற கொடுமைகள் என்னைக் களைப்படைய செய்து விட்டன என்பதே உண்மை. ஆனால் அந்த இளந் தலைவர் ராஜீவை இழந்த காங்கிரஸ் நண்பர்கள் உட்பட, ஏன் அந்தக் குடும்பத்தார் உட்பட இன்றைக்கு இலங்கையில் நடைபெறுகிற தமிழ் இனப் படுகொலையை (ஜெனோசைட்) ஒத்துக் கொள்ளவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

சில பல நிலைமைகளை சரிப்படுத்தி விட்டு இலங்கையில் அறவே போர் நிறுத்தம் நடைபெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கூடிய வாய்ப்புள்ள கட்சிதான் அகில இந்திய காங்கிரஸ் கட்சி. அதன் தலைவிதான் சோனியா காந்தி அம்மையார். அதனால்தான் அவர்களை அவமானப்படுத்துகிற விதத்திலும், அவர்களது உருவப் படங்களைக் கொளுத்தியும், அவதூறாகப் பேசியும் கடைப் பிடிக்கிற முறை தான் கண்ணியமான முறை என்றும், தமிழர்களுக்காக கொடுக்கிற உண்மையான குரல் என்றும் சில சமூக விரோதிகள் கட்சியின் பெயரால் நடத்துகிற செயல்களை அண்ணாவும் காந்தியாரும் ஆட்சியில் இருந்தாலும் அவர்களால்கூட ஓரளவுதான் பொறுத்துக் கொள்ள முடியும்.

அதையும் மீறி இந்தத் தமிழ்நாட்டில் கட்சிக் கண்ணோட் டத்தோடு சில காரியங்கள் நடைபெறுகின்றன. அதன் ஒரு கூறுதான் அகில இந்தியா உணர்ந்த அரசியல்வாதியும் - ஜனதா கட்சித் தலைவரும் (எனது நண்பராக இல்லாவிட்டாலும்கூட நல்ல சிந்தனையாளர் என்று சொல்லப்படக் கூடிய) நண்பர்

சுப்பிரமணியன் சுவாமி, அவர் நம்புகிற மத உணர்வின் அடிப்படையில் - சிதம்பரம் நடராஜர் கோயிலை அரசு எடுத்துக் கொள்ளலாம் என்று அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வாதாட உயர்நீதி மன்றத்திற்கே வந்திருக்கிறார். அங்கே கூடியிருந்த என் தம்பிமார்களைப் போல நான் கருதும் வழக்கறிஞர்கள் - அந்த நண்பர் சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் மீது முட்டைகளை வீசி அவமானப்படுத்தி யிருக்கிறார்கள்.

கடந்த ஆட்சியில் இதைவிட மோசமாக சுப்பிரமணியன் சுவாமி அதே நீதிமன்ற வளாகத்திற்குள் அவமானப்படுத்தப்பட்டது உண்டு. ஆனால் அது வழக்கறிஞர்களால் அல்ல - அ.தி.மு.க.வின் மகளிர் அணியினரின் மகா மோசமான நடனத்தால்! அந்தக் காட்சியைக் கண்டவர்கள் யாரும், மனம் புண்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நீதி மன்றத்திற்குள் வழக்கறிஞர்கள் சிலர் சுப்பிரமணியன் சுவாமி மீது முட்டைகளை தற்போது வீசியதைப் பெரிதுபடுத்தி நீதி மன்றத்திற்குள் இப்படி நடக்கலாமா என்று அந்த வழக்கறிஞர்கள் மீது புகார் கொடுத்து சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கச் சொன்னார்கள்.

இவைகள் எல்லாம் நீதி மன்றத்திற்குள் நடந்தது. போலீசார் உயர் நீதி மன்ற உத்தரவை நிறைவேற்றுவதற்காக சுப்பிரமணியன் சுவாமி மீது முட்டை எறிந்த குற்றவாளிகளை கைது செய்ய கோர்ட்டுக்கு வந்தார்கள். அங்கே என்ன நடைபெற்றது? சுப்பிரமணியன் சுவாமி மீது என்ன புகார் கொடுக்கப்பட்டது என்பதில் இருந்து நீதிமன்றத்திற்குள் இருந்த காவல் நிலையம் கொளுத்தப்பட்டு சாம்பலான காட்சி வரை தொலைக் காட்சிகளிலே காண முடிந்தது. இந்த நிலையில் நான் மருத்துவமனையில் இன்னமும் முழுமையாகக் குணமடையாத நிலையில் அடுத்த வாரத்திற்கு மேல்தான் அறுவை சிகிச்சை நடந்த இடத்தில் தையல் பிரிக்கப்பட வேண்டும் என்று டாக்டர்கள் எச்சரித்திருந்த சூழலில் - தமிழக அரசின் தலைமைச் செயலாளரையும் உள்துறை செயலாளர் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகளையும் உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) அவர்களிடம் அனுப்பினேன். கலவரம் முழுமையாக ஓயவில்லை. நீதிபதிகளோடு தலைமை நீதிபதி விவாதித்துக் கொண்டிருக்கிறார் என்பதை கேள்விப்பட்டதும் - மருத்துவமனையில் இருந்தே பின் வரும் கடிதத்தை அனுப்பினேன்.

Unprecedented violence has taken place. I have sent the Chief Secretary, Secretary Home and D.G.P. to appraise you of the situation. To find out who is at fault, whether the Advocates or the Police and to ascertain the basic causes for this situation, your co-operation is very essential for me and for this Government. I am expecting your valuable suggestions to contain this violence and to ensure justice is done and peace is restored. Though I am in the hospital, if you wish to see me, I will come and meet you even in an Ambulance.

Thanking you,

Yours sincerely,
Sd.
(M. Karunanidhi).

To

Hon'ble Justice S.J. Mukhopadhaya,
Acting Chief Justice.
High Court of Madras, Chennai.

தலைமை நீதிபதி - மாண்புமிகு திரு முகோபாத்தியாய அவர்கள் சட்டம், ஒழுங்கு, அமைதி, நீதியை நிலைநாட்டுவதில் அக்கறை உள்ளவர் என்ற காரணத்தால், அந்தக் கடிதத்திலேயே நான் எழுதியிருந்தேன் - நானே உங்களிடம் நேரில் பேச வேண்டுமானால், மருத்துவ மனையிலிருந்து ஆம்புலன்ஸ் வண்டியில் ஏறி அங்கேயே வருகிறேன் என்று தெரிவித்திருந்தேன். அவர் அந்தக் கடிதத்தை கண்ட பிறகு நம்முடைய தலைமைச் செயலாளரிடமும், காவல் துறை அதிகாரிகளுடனும் கலந்து பேசி, நீதி மன்றத்தில் அறிவிக்கப்பட வேண்டிய முறைப்படி அரசு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்ற கருத்தை அனுப்பியுள்ளார். அதை ஏற்றுக் கொண்டு அரசு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவு விடுவதாகக் கூறி, மத்திய அரசுக்கு அது குறித்து வேண்டுகோள் விட்டுள்ளது.

அந்த சி.பி.ஐ. விசாரணையில் உண்மை எது, உண்மை அற்றது எது, திட்டமிட்டது எது, திட்டமிடாமல் நடந்தது எது, கலகத்திற்குக் காரணம் வழக்கறிஞர்களா? அல்லது காவல் துறையினரா? அல்லது இந்த விபரீத நிகழ்ச்சிக்குக் காரணமான

வீசப்பட்ட அழுகிய முட்டைகளா? என்ற விவரங்கள் எல்லாம் சி.பி.ஐ. விசாரணை மூலம் விரைவாகத் தெரிந்து விடும்.

அமைதியை உருவாக்க -
அமளியை அடக்க -

இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும் போது நானும், தமிழ்நாட்டில் அமைதியோடு வாழ்கிற மக்களும் சி.பி.ஐ. விசாரணையின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இதைத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா கட்சியினரும் - எல்லாக் கட்சித் தலைவர்களும் - இதை முடியாத தொடர் கதையாக ஆக்குவதற்கு இடம் தராமல் - முடிந்து போன சோக நிகழ்ச்சி என்ற அளவில் இப்போது நடந்து கொண்டிருக்கிற நல்லாட்சி தொடர்ந்திட உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்காகவும் அல்ல -
தனிப்பட்ட யாருக்காகவும் அல்ல -
தமிழ் நாட்டு மக்களுக்காக -
நாம் கட்டிக் காத்திடும் ஜனநாயகத்தின் மேன்மைக்காக!

"ஆசு, ஊசு" என்றால் "கலைத்து விடு கருணாநிதி ஆட்சியை" என்று அலறித் துடிப்பதற்கு இரண்டு மூன்று தலைவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்ததற்காக அகம்பாவம் பிடித்து அலைபவனும் நானல்ல;

கவிழ்ப்பதற்காக கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலைப் படுபவனும் அல்ல - இந்தக் கருணாநிதி!

பிறகு எதற்காக அண்ணா அவர்களின் இதயத்தை நான் இரவலாகப் பெற்றிருக்கிறேன்.

நேற்று வரையில் காங்கிரசோடு தொடர்பு இல்லை, உறவு இல்லை என்று கூறிக் கொண்டிருந்து விட்டு - கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஏமாற்றி விட்டு - நேற்றைய திருமண விழாவில் "நானும் காங்கிரசும் கூட்டுச் சேரப் போகிறோம்" என்று நாட்டை ஏமாற்றுகின்ற அரசியல் நாட்டியம் எனக்குத் தெரியாது.

"வெளி நாட்டுக்காரி, இந்தியாவிற்கு அரசியா?'' என்று கேட்டவர்கள் யார் என்று எனக்கும் தெரியும். நாட்டிற்கும் தெரியும்.

சோனியா காந்தி என்ற அந்தச் சொக்கத் தங்கத்தை "பதி பக்தி இல்லாதவர்'' என்று சொன்னவர் யார் என்று எனக்கும் தெரியும். நாட்டிற்கும் தெரியும்.

பதி பக்தியைப் பற்றி அவ்வாறு பேசியவர் - எம்.ஜி.ஆரைப் பற்றி ராஜிவ் காந்திக்கு கைப்பட என்ன கடிதம் எழுதினார் என்பதும் எனக்குத் தெரியும். அது பத்திரிகைகளிலேயே வந்திருக்கிறது.

இப்படிப்பட்டவரை காங்கிரஸ் கட்சி; கூட்டணி சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்!

இவர் பிறந்த கர்நாடக மாநிலத்தில் பிறந்தவராம் - கடமை தவறாத நண்பர் - வீரப்ப மொய்லி - இன்று இவருக்கு அளித்த மறுப்பு - தமிழ் நாட்டு காங்கிரஸ் நண்பர்களே, எண்ணிப் பார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு!

அன்புள்ள,

மு.க.

21-2-2009

3369. புதியதோர் விதி செய்வோம்!

உடன்பிறப்பே,

"சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் அறிக்கை அவையிலே வைக்கப்பட்டது" என்று அடிக்கடி செய்தி வருவதைப் பார்த்திருக்கலாம். அது என்ன பேரவை விதி 110? சட்டமன்றம் நடைபெறுவது பற்றியும், அப்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் பற்றியும் உள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் புத்தகத்தில், ஒவ்வொரு விதியாக வரிசையாக அச்சடித்து உறுப்பினர்கள் அனைவருக்கும் தரப்பட்டுள்ளது. அந்த விதிகளைத்தான் பல ஆண்டுகளாக பின்பற்றி வருகிறோம். அந்த வரிசையிலே பேரவை விதி 110 என்ன சொல்கிறது?

விதி 110 :-

(1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம்.

(2) அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

(3) உள் விதி 1இன் கீழ் அறிக்கை யளிக்க விரும்பும் ஓர் அமைச்சர் எந்நாளில் அந்த அறிக்கை அளிக்க விரும்புகிறார் என்பதையும், பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றையும் முன்கூட்டியே பேரவைச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

இதுதான் பேரவை விதி 110. இந்த விதியின் கீழ்தான் பேரவையில் முதல் அமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் குறித்து பல அறிக்கை களை அவையிலே வைத்திருக்கிறார்கள். அதுவும் கடந்த கால

ஜெயலலிதா ஆட்சியில் நாள் தவறினாலும், விதி 110இன் கீழ் அறிக்கை அளிக்கத் தவறுவதில்லை. அரசின் சார்பாக எந்த அறிவிப்பு செய்வதாக இருந்தாலும், அதற்கு விதி 110இன் கீழ் அறிக்கை வைத்து விடுவார்கள். காரணம் அதன் மீது யாரும் கேள்வி கேட்க முடியாது. எந்த உறுப்பினர் அதைப் பற்றிக் கேள்வி கேட்க எழுந்தாலும், உடனே பேரவைத் தலைவர் விதி 110இன் கீழ் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது, அதன் மீது கேள்வி கேட்க யாருக்கும் அனுமதி கிடையாது, உட்காருங்கள் என்பார். உறுப்பினர்களும் அமர்ந்து விடுவார்கள். இதற்கு பல எடுத்துக் காட்டுகள் அவை நடவடிக்கை குறிப்பிலே தேதிவாரியாக உண்டு. யார் வேண்டுமானாலும் எடுத்துப் பார்க்கலாம்.

உதாரணத்திற்கு உடனடியாக ஒன்றைக் காட்ட வேண்டுமானால் - 1.4.2002 அன்று பேரவை நடவடிக்கை புத்தகத்தின் 152வது பக்கத்தில் காணலாம். அப்போது பேரவைத் தலைவர் கூறிய வாசகம் என்ன?

“மாண்புமிகு பேரவைத் தலைவர் :- போலி கடவுச் சீட்டு பிரச்சினையில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் குவைத் பெண் தலால் ஆஸ்மி குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. போளூர் வரதன், திரு. எ.வ. வேலு மற்றும் திரு லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். கவன ஈர்ப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, செல்வி பாலபாரதி, திரு. வை. சுப்பிரமணியம் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்பு கொடுத் துள்ளார்கள். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் (ஜெயலலிதா) அவர்கள் விதி 110-ன் கீழ் ஓர் அறிக்கை அளிக்கிறார்கள்.”

இதற்குப் பிறகு அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா எழுந்து ஓர் அறிக்கையினை விதி 110இன் கீழ் படிக்கிறார். அதற்குப் பிறகு எந்த உறுப்பினருக்காவது அந்த அறிக்கை பற்றியோ, அந்தப் பிரச்சினை பற்றியோ கேள்வி எழுப்புவதற்கோ, பேசுவதற்கோ பேரவைத் தலைவரால் அனுமதி கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் நேற்றையதினம் பேரவையில் பிரச்சினையைக்

கிளப்பிய பா.ம.க., இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இப்படி அறிக்கை படிக்கப்பட்ட போது, அவையிலே இருந்த அதே பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்தவர்கள்தான். அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அப்போது விதி 110இன் கீழ் படிக்கப்பட்ட அறிக்கை குறித்து விவாதம் நடத்திட அனுமதிக்கப்பட்டார்களா என்றால் கிடையாது. அதை அப்போது மட்டும் ஏற்றுக் கொண்டார்களா என்றால், ஏற்றுக் கொண்டார்கள். இப்போது மட்டும் எழுந்து இவ்வளவு கேள்வி கேட்கிறார்களே, விவாதம் நடத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறார்களே, அவையிலிருந்து வெளியேற்றக் கூடிய அளவிற்கு நடந்து கொள்கிறார்களே, அதற்கெல்லாம் என்ன காரணம்? 2002ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியிலே விதி 110இன் கீழ் அறிக்கை வைத்தால், அதன் மீது விவாதம் நடத்துவதற்கோ, பேசுவதற்கோ அன்றைய ஆளுங் கட்சியான அ.தி.மு.க. அனுமதி கொடுத்ததே கிடையாது. ஆனால் இப்போது அதே கட்சியினர் விதி 110இன் கீழ் தி.மு. கழக ஆட்சியிலே அறிக்கை கொடுத்தால் மட்டும் எழுந்து பேச அனுமதிக்க வேண்டுமென்று பிரச்சினை கிளப்புகிறார்களே, அது சரியா? அது நியாயமா? இது தான் இன்று மக்கள் முன் உள்ள கேள்வி.

110வது விதியின் கீழ் அறிக்கை படிக்க விடாமல், அந்தப் பொருள் மீது விவாதம் நடத்தி, பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வாதாடிய பா.ம.க. நண்பர்கள் வெளியிலே வாயைப் பொத்திக் கொண்டு தற்போது போராட்டம் நடத்துகிறார்கள். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் விதி 110இன் கீழ் அவர் அறிக்கை படித்த போது, அதிலே எழுந்து விவாதம் நடத்த முன் வராமல் கையால் வாயைப் பொத்திக் கொண்டு தற்போது போராட்டம் நடத்துவதைப் போல நடத்தாமல், வெறுமனே வாயை மூடிக் கொண்டிருந்ததற்கும், தற்போது எவ்வளவு வேகமாக போராட்டம் நடத்துகிறார்கள் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பா.ம.க. வைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட, முதலமைச்சர் கலைஞர் அவையிலே இருந்திருந்தால், வெளியேற்றப்பட்ட எங்களை மீண்டும் அவைக்கு அழைத்திருப்பார் என்று கூறினாராம்.

உண்மைதான். நானே அழைத்திருப்பேன். அல்லது உறுப்பினர்கள் இந்தப் பொருள் குறித்து பேச வேண்டுமென்று என்னிடம் கூறியிருப்பார்களேயானால், அவர்களையும் சிறிது நேரம் அந்தப் பொருளிலே பேச விட்டு, 110இன் கீழ் படிக்கப்பட்ட அறிக்கை யினை பதிலாகவே அளித்திருக்கச் செய்திருப்பேன். விதிப்படி நடக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இராமல், கொஞ்சம் நீக்கு போக்கு தெரிந்து நடந்து கொண்டிருப்பேன். ஆனால் நான் இல்லாத நிலையில் ஆளுங்கட்சியும், பேரவைத் தலைவரும் விதியை உறுதியாக நிலைநாட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அது அவர்கள் மீது தவறு கிடையாது. அவை மரபுப்படி நடக்க வேண்டுமென்பதில் உள்ள அக்கறைதான் காரணம் என்று கூறலாம். அவையில் அமளியை உருவாக்கிய உறுப்பினர்கள் அவை விதிகளை அறியாதவர்கள் அல்ல; அப்படியிருந்தும் இப்படி நடந்து விட்டதே என்பதுதான் எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரி யமும்! என்ன செய்வது? அரசியல் குறுக்கிடும் போது, அதையும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

பேரவை விதி 56இன் கீழ் உறுப்பினர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு குறித்து விவாதிக்க வேண்டுமென்று கோரி தீர்மானம் கொடுத்தால், அதனை எடுத்துக் கொண்டே ஆக வேண்டுமென்று ஏதாவது விதியில் கூறப்பட்டிருக்கிறதா என்றால் அப்படியும் கிடையாது. பேரவையில் குறிப்பிட்ட பொருளை எழுப்புவதற்கு பேரவைத் தலைவர் தமது இசைவைத் தர மறுக்கலாம் என்றும், பேரவைத் தலைவர் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வதென்று முடிவு செய்தால், அவரது முடிவே இறுதியானதாகும் என்றும், பேரவை முன் அதே பொருளை எவ்வகையிலும் எழுப்ப முயலக் கூடாது என்றும் திட்டவட்டமாகச் சொல்லப் பட்டுள்ளது.

அ.தி.மு.க. வினர் ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதிலே உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படா மலேயிருக்க வேண்டி விதி 110இன் கீழ் அறிக்கை கொடுத்து வந்தவர்கள், நேற்றைய தினம் அமைச்சர் அந்தப் பொருள் குறித்து அறிக்கை படிக்கவிருக்கிறார் என்று தெரிந்த பிறகு - கேள்வி

நேரத்தையே ஒத்தி வைத்து விட்டு விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டு மென்று கேட்பது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டு மென்றால், அதற்கான தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டால்தான் ஒத்தி வைக்கலாம். யாராவது ஒருவர் எதிர்ப்பு தெரிவித்தால்கூட, கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க இயலாது. ஆனால் நேற்றையதினம் கேள்வி நேரம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, அதனை ஒத்தி வைத்து விட்டு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அதற்காக பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார்கள். உறுப்பினர்களை வெளியேற்றினார்கள் என்று சொல்லப்படுவதுகூட கேள்வி நேரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதனை நடக்க விடாமல் தொடர்ந்து கூச்சல் எழுப்பிய காரணத்தால்தான், பேரவை முறையாக - அமைதியாக நடக்க - கூச்சல் எழுப்பியவர்களை வெளியேற்ற வேண்டிய தவிர்க்க முடியாத நிலை பேரவைத் தலைவருக்கு ஏற்பட்டுள்ளது போலும்!

இடையில் பேரவைத் தலைவர் அவர்கள்கூட - வினா, விடை நேரத்திற்குப் பிறகு என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியதாக தினமணி நாளிதழிலேயே செய்தி வந்துள்ளது. ஆனாலும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இந்தப் பதிலால் சமாதானம் அடையாமல் தொடர்ந்து கூச்சல் எழுப்பியதாக அந்த ஏட்டிலே செய்தி உள்ளது. விதி 110-ன் கீழ் படிக்கப்படும் அறிக்கை குறித்து ஏதாவது கருத்து கூற வேண்டுமென்றால், அப்போதே அதனை தெரிவிக்க இயலவில்லை யென்றால், பிறகு அதே நாளில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறும்போது, அவர்கள் கட்சியின் சார்பில் யார் பேசுகிறார்களோ அவர்கள் மூலமாக அந்தக் கருத்தைப் பேச செய்யலாம்.

எப்படியோ நடந்தது நடந்து விட்டது. இனியாவது அவை அமைதியாக - முறையாக நடைபெற அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதி

மன்றத்திலே நடைபெற்ற சம்பவங்கள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. முறைப்படி விசாரணை நடைபெறும். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே வழக்கறிஞர்களா, காவல் துறையினரா என்ற வேறுபாடு கருதாமல் இருவரும் நம்மவர்கள் என்ற எண்ணத்தோடு செயல்படுவோம். ஒருவர் காக்கி உடையிலும், ஒருவர் கறுப்பு உடையிலும் இருக்கும் நம்முடையவர்களே! இப்போதுள்ள சட்டமன்ற விதிமுறைகள் பல ஆண்டுகளுக்கு முன்பு வகுக்கப்பட்டவை; அதில் சில மாற்றங்கள் வேண்டுமென்றால் சட்டசபைக்கான விதிகளைத் தயாரிக்கும் குழுவினர் கலந்து பேசி அந்தப் புது விதிகளைத் தயார் செய்யலாம். எனவே புதியதோர் விதி செய்வோம் - இருக்கும் விதியை இப்போது மதிப்போம்!

அன்புள்ள,

மு.க.

22-2-2009

3370. இங்கும் அங்குமுள்ள தமிழர்களைக் காத்திட!

உடன்பிறப்பே,

இன்று காலையிலிருந்து, ஏன் நேற்று மாலை தொலைக்காட்சி செய்திகளுக்கு பிறகு மருத்துவமனைக்கு ஏராளமான தொலைபேசி தொடர்புகள்! என்னிடம் பேச வேண்டுமென்று வற்புறுத்தல்கள்! தவிர்க்க முடியாமல் சிலரிடம் படுக்கையிலே படுத்தபடியே பேசினால் - உண்ணா விரதம் இருப்பதாக அறிவித்தது குறித்து ஏராளமான கேள்விக்கணைகள் - இவ்வளவு பெரிய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையில் - உண்ணா விரதம் இருக்கலாமா? அது உடல் நிலையை மேலும் பாதிக்காதா? எதற்காக இப்படிப்பட்ட அறிவிப்பு? காக்கிச் சட்டையினரும், கறுப்புச் சட்டையினரும் காது கொடுத்து உங்கள் பேச்சைக் கேட்க மாட்டார்களா? ஒரு சிலரின் தூண்டுதல் உண்டு என்ற போதிலும், அவர்கள் உண்மையை அறிந்து கொள்ளாமலா போய் விடுவார்கள்? வழக்கறிஞர்கள் போராட முன் வந்தது எதற்காக? இலங்கைத் தமிழர்களின் நலன்கள் கருதித்தானே! இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பிற்காக நீங்கள் பாடுபட்டது இன்று நேற்றிலிருந்தா? அரை நூற்றாண்டுக்கு மேலாக அல்லவா நீங்கள் அதற்காக எழுதியும், பேசியும், செயல்பட்டும் வருகிறீர்கள்! என்றெல்லாம் கேள்விக்கு மேல் கேள்விகள்!

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, கடற்கரை பெருவெளியில் அமர்ந்தவாறு பிரபாகரனுடனும், சிறீ சபா ரத்தினத்துடனும், பத்மநாபாவுடனும், முகுந்தனுடனும், பாலகுமாருடனும், ஆண்டன் பாலசிங்கத்துடனும், யோகியுடனும், பேபியுடனும், காசி ஆனந்தனுடனும் என்று மணிக்கணக்கிலே பேசிய நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகிறது. அது மட்டுமா? இன்று 2009ஆம் ஆண்டு. இதற்கு இருபதாண்டுகளுக்கு முன்பு 1989ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் தமிழீழத் தலைவர்கள் பலர், குறிப்பாக வழக்கறிஞர் சந்திரஹாசன், க. சச்சிதானந்தம், ஈழவேந்தன், எஸ்.

சிவசுப்ரமணியம், எஸ். சிவானந்தம், சு. சிவநாயகன், ர. பத்மநாபன், த. அருணாசலம், ஞானகணேசன், பி. ஆனந்தராஜா ஆகியோர் என்னை இல்லத்திலே சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மூன்று மணி நேரம் உரையாடினர். அதற்குப் பின் நான்கு நாட்கள் கழித்து, 4.1.1990 அன்று இலங்கை அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்னே, அவருடைய ஆலோசகர் பிராட்மேன் வீராகூன், மற்றும் ராணுவத் துறை செயலாளர் செபாலா அட்டிகலா ஆகியோர் என்னை இல்லத்தில் சந்தித்து, தமிழ்ப் போராளிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக நான் எடுத்து வரும் முயற்சிகளுக்காக தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர். அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித்து 7-ந்தேதியன்று ஈராஸ் குழுவினைச் சேர்ந்த பாலகுமார், சங்கர், முகிலன் ஆகியோர் என்னைச் சந்தித்தனர். 8-ந்தேதி யன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் மல்கோத்ரா என்னைச் சந்தித்தார். 9ஆம் தேதியன்று இலங்கை வடகிழக்கு மாகாண முதல் அமைச்சர், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த வரதராஜ பெருமாள் என்னைச் சந்தித்தார். அதே ஆண்டு பிப்ரவரி 16, 17 ஆகிய நாட்களில் பாலசிங்கம், யோகி போன்றவர்கள் மீண்டும் சந்தித்தார்கள். அப்போது மத்திய அரசின் பிரதிநிதியாக தம்பி முரசொலி மாறன் மத்திய அமைச்சர் என்ற முறையில் உடன் இருந்தார். ஒருசில நாட்களில் இந்த அளவிற்கு போராளிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை மாற்றி மாற்றி தொடர்ந்து நான் சந்தித்தது தற்போது போராட்டம் நடத்த முன் வந்திருப்பவர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

அந்தச் சந்திப்புகள் பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, போராளிகளுக்கிடையே மோதுதல் ஏற்படாமல் இருப்பதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறேன், சுமூகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்கிறேன் என்று கூறினேன். அந்தப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கு சில நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டார்கள். ஈழத்தில் ஜனநாயக அடிப்படையில் அமைதியும் பாதுகாப்பும் தொடர்ந்து நிலவ வேண்டும் என்பதே என் நோக்கமும், அன்றைய பிரதமர் வி.பி. சிங் அவர்களின் நோக்கமும் ஆகும் என்று அவர்களிடம் தெரிவித்தேன்.

நான் அப்போது தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் மட்டும் பலித்திருக்குமேயானால், வெற்றி பெற்றிருக்குமேயானால் இந்த இருபதாண்டு காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் செத்து மடிந்திட நேர்ந்திருக்காது.

1990ஆம் ஆண்டைப் பற்றிச் சொன்னேன். அதற்கு முன்பே 1981ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு. கழகம் நடத்திய போராட்டங்கள் எத்தனையெத்தனை? அதன் காரணமாக அப்போதிருந்த அ.தி.மு.க. ஆட்சியினரால் நான் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டதும் - அதனைக் கண்டித்து கோயிலடி பிருந்தாவன், திருச்சி மனோகரன், பெருந்துறை முத்துப்பாண்டியன், திருவாரூர் கிட்டு, சென்னை மேரி, கல்லாவி இராஜேந்திரன், மேல்மாயில் ஜெகன்னாதன் ஆகிய ஏழு பேர் தீக்குளித்து தங்கள் இன்னுயிரை தங்களுக்குத் தாங்களே போக்கிக் கொண்டார்கள் என்பது நாடறிந்த செய்தியாகும்.

அதன் பிறகு, யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்ட சிவனேசன் என்ற போலீஸ்காரரை சுட்டுக் கொன்றதாகக் கூறி - தமிழ் இளைஞர்கள் குட்டிமணி, ஜெகன் ஆகியோர் மீது வழக்கு நடைபெற்று, 13-8-1982 அன்று இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நீதி மன்றத்தில் அப்போது குட்டிமணி, தன்னைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக் கணக்கான குட்டிமணிகள் உதயமாவார்கள் என்றும், தன் இனத்திற்காக தரக் கூடியதாக இருப்பது தன் உயிர் மாத்திரம்தான் என்றும், தன் கண்களை பார்வையற்ற ஒரு தமிழ் மகனுக்கு வழங்கும்படியும், அந்தக் கண்களின் மூலம் மலரப் போகும் தமிழ் ஈழத்தைப் பார்க்கப் போவதாகவும், தன் உடலை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு வழங்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டதோடு - தனக்காக வாதாடிய வழக்கறிஞர்களிடம் தன் உயிரைக் காப்பாற்றுவதற்காக யாரிடமும் மண்டியிட வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தச் செய்தி வந்ததும், “தமிழ் இனம் மெல்ல மெல்ல அழிவதா?” என்ற தலைப்பிலே முரசொலியிலே கடிதம் எழுதியவன்தான் இன்று உண்ணா விரதம் இருப்பதாக அறிக்கை கொடுத்துள்ளேன். முரசொலியில் அப்போது எழுதிய கடிதத்தில் “வாழ்வின் எல்லைக் கோட்டில் நிறுத்தப்பட்டுள்ள

நேரத்திலும் அந்த வாலிபர்களின் வைரம் பாய்ந்த உள்ளத்தினை எண்ணியெண்ணி வையகமே திகைத்துத் தான் நிற்கிறது. தீரர் இருவர்க்கு அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு கேட்டுத் தீயை மிதிப்பது போல ஆகி விட்ட தமிழா! நீ உலகத்தின் எந்த மூலையிலே இருந்தாலும் அந்த இடத்தில் நீ தன்னந்தனியனாக ஒருவனாக இருந்தாலும், அந்த இளந்தம்பிகளின் உயிரைக் காக்க, எம்ஃகுக் கம்பிகளின் மரண தண்டனையைத் தடுத்து நிறுத்தக் குரல் கொடுத்தே ஆக வேண்டும். உடன் பிறப்பே, உனக்கும் எனக்கும் ஏற்படுகிற இந்த உணர்வு எங்கெங்குமிருக்கின்ற எல்லாத் தமிழர்க்கும் ஏற்பட்டே தீரும்! ஏற்பட்டே ஆக வேண்டும்! இல்லையேல் தமிழ் இனம், மெல்ல மெல்ல - ஆனால் உறுதியாக அழிக்கப்பட்டே விடும்" என்று இப்படித்தான் முடித்திருந்தேன்.

அதே திங்கள் 28.8.1982 அன்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாள் என்ற பெயரில் அனைவரும் தங்கள் உடையில் கறுப்புச் சின்னங்கள் அணிய வேண்டுமென்றும், மாலையில் பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். சென்னையிலே நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துகொண்டு உரையாற்றினேன். மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யும்படி கேட்டு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு தந்திகள் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டேன். அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு 25.7.1983 அன்று பிற்பகல் 2.30 மணி அளவில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இருந்த குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்ற தமிழ் இளைஞர்களை சிங்களக் காடையர் உள்ளே புகுந்து கொன்று குவித்தனர்.

பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மறுநாளே சென்னையில் தமிழர் பாதுகாப்புப் பேரணி நடைபெறும் என்று அறிவித்து, ஏழு மணி நேர அவகாசத்தில் எட்டு இலட்சம் பேர் சென்னையிலே திரண்டனர். கடைகளை மூட வேண்டுமென்று யாரும் கேட்கவில்லை, ஆனால் அன்று எந்தக் கடைகளும் திறக்கப்படவில்லை. ஆட்டோக்கள் ஓடாது என்று யாரும் கூறவில்லை, ஆனால் அன்று ஆட்டோக்கள் சென்னையிலே ஓடவில்லை. இதனைத் தொடர்ந்து எத்தனை யெத்தனையோ போராட்டங்களை நடத்தி யிருக்கிறோம்.

இதெல்லாம் தமிழகத்தின் வரலாற்றுப் புத்தகத்தில் அத்தியாயங்களாக பதிவாகியுள்ளன. ஆனால் தற்போது சிலர் இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது அவர்களுக்கு மட்டுமே உரியதைப் போலவும் - நானும், நமது கழகமும் அதிலே அக்கறையற்றதைப் போலவும் மக்களிடம் செய்தி பரப்பிட முனைகின்றார்கள். என் கையால் எழுதப்பட்ட செயற்குழு, பொதுக் குழு தீர்மானங்களிலேயே எந்தப் பிரச்சினைக்காக அதிகமான தீர்மானங்களை எழுதியிருப்பேன் என்று என் விரல்களைக் கேட்டால், அது கூறும் - இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் தான் என்று. ஆனால் சிலர் தற்போது நம்முடைய தீர்மானங்களில் தீவிரம் இல்லை என்கிறார்கள், பதவியைத் துறக்க விருப்பமில்லை என்கிறார்கள், ஆட்சியிலே இருப்பதால் அதனைக் காப்பாற்ற முயலுகிறேன் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆமாம், இலங்கையிலே இருக்கிற தமிழர்களைக் காப்பாற்ற எனக்கு இருக்கிற அக்கறையைப் போல, இங்கேயிருக்கின்ற தமிழர்களையும் காப்பாற்ற வேண்டிய அக்கறையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது அல்லவா? ஆனாலும், கடந்த மாதம் சட்ட மன்றத்திலே இலங்கைத் தமிழர்களுக்காக தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, இலங்கையிலே தமிழ் ஈழம் மலருமென்றால் அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என்று அறிவித்தவன் தான் நான். ஆனால் அதையெல்லாம் வசதியாக மறைத்து விட சிலர் முயலுகிறார்கள். தாங்கள் தான் இலங்கைத் தமிழர்களுக்கான பாதுகாவலர்கள் என்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள்தான் ஒரு சிலரைத் தூண்டி விட்டு தமிழகத்திலே ஒரு கலவரத்தைத் தூண்டி விட முடியாதா? அதைக் கொண்டு சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று ஆட்சியைக் கவிழ்த்து விட முடியாதா? சட்ட மன்றம் கூடப் போகிறது என்றவுடன் எந்தப் பிரச்சினையை கிளப்பலாம் என்று தேடிப் பார்த்து - தேவையில்லாமல் ஏதோ ஒரு வழக்கிற்காக நீதி மன்றம் செல்கிறேன் என்று கூறிக் கொண்டு, அங்கே சென்று, அந்த இடத்திலே ஒரு தகராறு வரக் கூடிய அளவிற்கு நடந்து கொண்டு, அதன் காரணமாக அங்கே ஒரு விரும்பத் தகாத சம்பவத்தை உருவாக்கினார்கள். நீதி மன்றத்திலே தகராறு - சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று ஏடுகளில் கற்பனையாக செய்தி வரக் கூடிய அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டன. அந்தச் செய்தி

கிடைத்தவுடன் நானே காவல் துறை அதிகாரிகளை விட்டு நடந்த சம்பவத்திற்காக வருத்தம் தெரிவிக்கச் செய்தேன்.

இதற்குப் பிறகும் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. வழக்கறிஞர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே கசப்புணர்வு ஏற்படுகின்ற அளவிற்கு நிலைமை போய் விட்டது. வழக்கறிஞர் வீட்டிலே உள்ளவர்கள் பலர் காவல் துறையிலே பணியாற்றுகிறார்கள். காவல் துறையினர் வீட்டிலே உள்ளவர்கள் பலர் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். ஆனால் இருவருக்குமிடையே பகை உணர்ச்சி. இரு தரப்பினரும் யார்? இரு தரப்பினருமே தமிழர்கள்தான். என்னுடைய உடன்பிறப்புகள்தான். இவர்கள் இடையே மோதுதல் உருவாகாதா, ரத்தம் வடியாதா? அதிலே இன்பம் காண முடியாதா என்று ஏங்குபவர்களுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் நேற்றையதினம் உண்ணாவிரத அறிக்கையை விட நேர்ந்தது. என் உயிரைப் பற்றிக் கவலைப்பட்டு, உடல் நலம் இல்லாத நிலையில் இப்படி அறிக்கை விடலாமா என்று அன்போடு கோபிக்கிறார்கள். இருப்பது ஓர் உயிர்தான், அது போகப் போவது ஒரு முறைதான், அது ஒரு நல்ல காரியத்திற்காகக் போகட்டும் என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களின் உண்மையான தம்பி நான் என்ற உணர்வோடு விடப்பட்டதுதான் அந்த அறிக்கை.

வீட்டிலே அண்ணன் தம்பி இருவரும் ஒருவருக்கொருவர் முரண்டு பிடித்துக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களை ஒற்றுமை படுத்த உண்மையான ஒரு தாயார் வேறு என்னதான் செய்ய முடியும்? நீங்கள் ஒழுங்காக இல்லாவிட்டால் எனக்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்று உரைப்பதில்லையா? அதைத்தான் நானும் அறிக்கையாக்கி யிருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-2-2009

3371. இன்று என் வாழ்விலோர் திருநாள்!

உடன்பிறப்பே,

இன்று என் வாழ்வில் ஒரு முக்கியமான நாள். ஆம், அருந்ததியர் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடு மசோதா சட்ட மன்றத்திலே நிறைவேறுகின்ற நாள் இன்றுதான். இந்த நாளில் நான் பேரவையிலே இருந்து - இந்த மசோதாவை நானே பேரவையில் முன் மொழிந்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று உறுப்பினர்களையெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தேன். இருந்தாலும், டெல்லியிலிருந்து வந்த மருத்துவர் டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் அவர்களும், இங்குள்ள டாக்டர் மார்த்தாண்டம் தலைமையிலான மருத்துவக் குழுவினரும் நேற்றிரவு (25.2.2009) என் அறுவை சிகிச்சைக்கான தையல்களைப் பிரித்த பின்னர் என்னை உட்கார வைக்கவும், நிற்க வைக்கவும் முயற்சித்தனர். கடந்த ஜனவரி 26ஆம் தேதியிலிருந்து அறுவை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் படுத்தபடுக்கையிலேயே ஒரு மாதமாக இருந்த காரணத்தால் கால்களை ஊன்றி நிற்க சில நாட்கள் பயிற்சி மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திய நிலையில் பேராசிரியர் அவையிலே ஆவலோடு நான் அவைக்கு நாளை வருவேன் என்று தெரிவித்ததைப் போல நேரடியாக வந்து அருந்ததியருக்கான மசோதாவை நானே முன் மொழிய இயலவில்லை.

எனினும் இன்று காலையில் நானே அருந்ததியர் மசோதாவினை அவையிலே முன்மொழிவதற்கான உரையை என் கைப்பட எழுதி அவையிலே அதனைப் படிக்குமாறு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்து, எனக்குப் பதிலாக இந்த மசோதாவினை அவரை முன்மொழியுமாறு கேட்டுக் கொண்டேன்.

இந்த மசோதாவை முன்மொழிந்து நான் எழுதிய முன்னுரை வருமாறு :-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
அவை முன்னவர் அருமைப் பேராசிரியர் அவர்களே,

சட்டப் பேரவை அனைத்துக் கட்சி அன்பு
உடன்பிறப்புகளே,

இன்று வந்து உங்களை சந்திப்பதாக இருந்தும் கூட டெல்லி மருத்துவரும் சென்னை மருத்துவ நண்பர்கள் குழுவும் அளித்த அறிவுரையாலும் அச்சுறுத்தலாலும் வர இயலவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன்.

நிமிர முடியாமலும், திரும்ப முடியாமலும் "நங்கூரம்" போட்டது போல நரம்பிணைந்து முதுகுத் தண்டில் வலி! வலி!

ஒன்று உடல் வலி - பிறிதொன்று நீங்கள் வழங்கியுள்ள மன வலி! கருத்து மாறுபாடுகளுக்கிடையிலேயும் நீங்கள் காட்டும் கனிவு- அரசியல் மாச்சரியங்களை மீறி நீங்கள் காட்டும் அன்பு - இன்று நம்மை மீண்டும் இணைக்கிறது - தமிழ்த் தாயின் கரம் நம்மை ஒரு சேர அணைக்கிறது. அறிவியக்கம் - ஆன்மிகம் - நாத்தீகம் ஆத்திகம் - இந்த வேறுபாடுகள் மாறுபாடுகள் கடந்த நன்றியுணர்வும் நன் மனித நேயமும் வளர்த்திடுவோம்.

ஆரம்ப கால பொதுவுடைமைவாதி என்ற முறையிலும் பெரியார், அண்ணா, காமராஜர், அண்ணன் ஜீவா போன்றோரின் அருமைத் தொண்டர்களில் ஒருவன் என்ற முறையிலும்- அடி மட்டத்துக்கெல்லாம் அடி மட்டமாகக் கிடந்து அவதியுறும் "மனித ஜீவன்கள்''

"அருந்ததி'' மக்கள், புதிய உலகம் - புரட்சியுகம் - காண்பதற்காக; இன்று அவையில் நான் முன் வைக்கும் சட்ட முன் வடிவை; உங்கள் ஆதரவு வழங்கி; நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்
உங்கள் அன்பு நதியில் -
என்றும் நனைந்திடவே விரும்பி வாழும்;
உடன்பிறப்பு - உங்களில் ஒருவன்

அன்பு மறவாத
(மு. கருணாநிதி)
26.2.2009
ராமச்சந்திரா மருத்துவமனை,
போரூர்.

அருந்ததியருக்கான இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற எனது உள்ளத்தின் அடித்தளத்தில் நீண்ட பல ஆண்டுகளாக இருந்து அதனை சட்டமாக நிறைவேற்றுகின்ற நேரம் இப்போதுதான் வந்துள்ளது. இந்தச் சட்டத்தின் காரணமாக சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற அந்த அருந்ததிய மக்கள் நாளை, நாளை மறுநாள் அவர்களும் முன்னேறி வாழ்க்கையிலே வளம் பெறுவார்களேயானால், அன்றுதான் என்னுடைய உள்ள வேட்கை முழுவதுமாக நிறைவேறிய திருப்தி எனக்கு ஏற்படும். ஆனால் இதனை சட்டமாக கொண்டு வருவதற்குள் நான் பட்ட பாட்டினை நான்தான் அறிவேன்.

இதற்காக நீதியரசர், எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவினை அமைத்து, அவர்களும் அல்லும் பகலும் பாடுபட்டு, இது சம்பந்தமான பல சட்டப் பிரிவுகளையும் படித்தாய்ந்து இதற்கான அறிக்கையினை அரசுக்கு அளித்தார்கள். அதன் பிறகு இதனை சட்டமாகக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அரசு உயர் அதிகாரிகள் சிலரிடம் இதுகுறித்து நான் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்கள் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவதற்கு மேலும் சில கால நீடிப்பு தேவை என்று கூறினார்கள். அப்போது நான் அவர்களிடம் கூறினேன். இது என்னுடைய சொந்தப் பிரச்சினை. இது எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் நிறைவேறுகிறதோ, அந்த அளவிற்கு நான் மகிழ்ச்சியடைவேன். எனவே இந்த மசோதா இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவ்வாறே இது நிறைவேறுகிறது.

நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் இது குறித்த பரிந்துரைகளை அரசிடம் தாக்கல் செய்து, அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்த நேரத்தில் - இந்த அருந்ததியச் சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் 50 பேர் என்னைத் தலைமைச் செயலகத்தில் வந்து சந்தித்தார்கள். அப்போது அவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது, எங்கள் சமுதாயத்திற்காக இவ்வளவு உறுதியாக இதுவரை யாரும் செயல் பட்டதில்லை. ஆனால் நீங்கள் இந்த அளவிற்கு எங்களுக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்காக நாங்கள் என்ன கைமாறு செய்யப் போகிறோமோ? எது எப்படியிருந்தாலும் இந்தப் பரிந்துரைகளையேற்று இட ஒதுக்கீடு செய்து அது சட்டமாக வர நாங்கள் உங்களோடு துணை இருப்போம் என்று தெரிவித்தார்கள்.

அவர்களின் எண்ணப்படி இன்றையதினம் அருந்ததிய சமுதாயத்தினருக்காக 3 சதவிகித உள் ஒதுக்கீடு நிறைவேறுகிறது. இந்த நாள் அவர்கள் வாழ்நாளில் எந்த அளவிற்கு முக்கியமான நாளாக விளங்குமோ, அது போலவே என்னுடைய வாழ்வில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு காரணமானவன் நான் என்ற முறையில் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

என் முதுகுத்தண்டில் அறுவை சிகிச்சை செய்து கொண்டு, காயம் பரிபூரணமாக குணம் ஆனதில் எந்த அளவிற்கு நான் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றேனோ, அதை விட அதிக அளவிற்கு அருந்ததிய சமுதாயத்திற்காக நடைபெற்றுள்ள சமூக நீதி அறுவை சிகிச்சையில் இன்று முதல் அந்தச் சமுதாயமே பெரிதும் நலம் அடையப் போகின்றது என்ற எண்ணத்தோடு மகிழ்ச்சி அடைகின்றேன். அருந்ததியர்களுக்கான நல்வாழ்வை அளித்திடக் கூடிய இந்த மசோதாவை சட்டமாக ஆக்கிட உதவி செய்த அத்தனை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், இந்த சட்டம் வெளிவர பெரிதும் எனக்கு துணையாக நின்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-2-2009

3372. இது எப்போதும் உங்கள் உயிர்!

உடன்பிறப்பே,

“சட்டம் ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒளிவிளக்கு” - என்ற வரலாற்றுப் புகழ் மிக்க பொன்மொழிக்குச் சொந்தக்காரர் அறிஞர் அண்ணா, இன்றிருந்தால் இப்போது நடைபெறுகிற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து எவ்வளவு வேதனைப்படுவார் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

தந்தை பெரியார், தன்மான இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கும், சுயமரியாதைக்கு மாறாக நடைபெறும் காரியங்களைச் சூழ்ந்து எதிர்ப்பதற்கும், எத்தனையோ போராட்டங்களை நடத்திய வையம் புகழ் வைக்கம் வீரர் ஆவார்.

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து சட்ட மறுப்பு இயக்கம் நடத்திய - வெள்ளை உள்ளம் கொண்ட காந்தியடிகள் - சௌரி சௌரா போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கச் சொல்லி வெளியிட்ட அறிக்கை - அந்த அண்ணலின் அறவழியை உலகிற்கு ஒளிகாட்டி உணர்த்திக் கொண்டிருக்கின்ற அறிக்கையாகும்.

இப்படி தமிழகத்திலும் - இந்தியத் திருநாட்டிலும் மக்களால் போற்றப்பட்ட - இன்னமும் போற்றப்படுகிற மாபெரும் தலைவர்கள் இன்றுள்ள இளைஞர்களுக்கும், எதிர்கால இளைஞர்களுக்கும் வழிகாட்டிகளாக; எழுத்தால் - எண்ணத்தால் - செயலால் என்றென்றும் திகழ வேண்டும்; அப்படித் திகழ்வதற்கான நிகழ்வுகள் மட்டுமே, நீடித்து, நிலைத்து இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்கான வழிமுறைகளாக மாற வேண்டும்.

இந்தச் சிந்தனையோடு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற நான் 85 ஆண்டுகளுக்கு முன்பு, தஞ்சைத் தரணியில் ஒரு சிற்றூராம், தேவார திருவாசகப் பாடல் பெற்ற திருக்கோளிலி என்று வழங்கப்படும் திருக்குவளையில் ஒரு சாதாரண, சாமான்ய இசைக் குடும்பத்தில் பிறந்து அந்த வட்டாரத்து சீமான்களால் சவுக்கடி பட்டு துடித்துக் கொண்டிருந்த

விவசாயப் பாட்டாளி மக்களின் வியர்வையும் - அவர்கள் தம் விழிகள் சிந்தியக் கண்ணீரும் - அந்தச் சிறு வயதிலேயே என்னைச் செதுக்கி, சிலையாக வடித்து, செங்கொடி அணிவித்து - சிந்தனைச் சிங்கமாம் பெரியாரின் கையிலே ஒப்படைத்தது.

செம்மொழியாம் தமிழின் செல்வர், அண்ணாவின் அரவணைப்புக்கு என்னை ஆளாக்கியது.

கோடையிடி அழகிரி அண்ணனின் பாசமழை, பாராட்டு மழையாகி என்னைக் கலைஞன் ஆக்கியது.

அண்ணன் ஜீவாவின் மீது கொண்ட பாசம், என் நெஞ்சில் நிறைந்திருந்தது. அவர் மறைந்தும், அது மறையாமல் இருந்தது.

இவற்றையெல்லாம் அசை போட்டுக் கொண்டுதான் - அடுத்து ஒரு பிறவி - இப்போது நான் எடுத்ததாகச் சொல்லப்படும் - அபாயகரமான - அறுவை சிகிச்சையிலிருந்து மீண்டு - எனக்கு உயிரளித்த மருத்துவத் துறை நண்பர்கள் ராமச்சந்திரா மருத்துவ மனையின் எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.எஸ்.கே. மார்த்தாண்டம் தலைமையில் டெல்லியைச் சேர்ந்த டாக்டர் அரவிந்த் ஏ.ஜெய்ஸ்வால், டாக்டர் எஸ். தணிகாசலம், டாக்டர் மயில்வாகணன், டாக்டர் கார்த்திக் கைலாஷ், டாக்டர் ஐ.எஸ். நாயுடு, டாக்டர் மகேஷ் வகாமுடி, டாக்டர் பாஸ்கர், டாக்டர் பி.எஸ். சண்முகம், டாக்டர் ராஜ் பி. சிங், டாக்டர் ஏ.வி. சீனிவாசன், டாக்டர் சவுந்தரராசன், டாக்டர் கே.ஆர். பழனிசாமி, டாக்டர் பி. கோபால் ஆகியோருக்கும் - உற்ற நண்பர்கள் - உடன்பிறப்பனையோர் அத்தனை பேருக்கும் நன்றி கூறியவாறு வாழ்த்துரைத்து - திரும்பி வருகிற நான், மாநிலம் ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கிற காரணத்தால் இந்த உடல் நிலையிலும் எனக்கு உபத்திரவம் தர வேண்டுமென்று ஊசிகள் கொண்டு என் நெஞ்சில் குத்திக் கொண்டிருப்போரை எண்ணி இவர்களுக்கு உள்ளம் என்று ஒன்று இருக்கிறதா? அல்லது அண்ணா அவர்கள் சொன்னது போல, உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் இருக்கிறதா? என்று ஐயுற்றவாறு இன்றிரவு இராமச்சந்திரா மருத்துவ மனையில் எண்ணம் அலை பாய்ந்து கொண்டிருக்கிறது.

அதில் ஒரு சிற்றலை தான் - சீறும் அலை தான் - சென்னை நீதிமன்ற நிகழ்ச்சியை யொட்டி நேற்று (27.2.2009) இரவோடு இரவாக நான் விடுத்துள்ள பின் வரும் அறிக்கை:-

"சென்னை உயர்நீதிமன்றத்தில் இலங்கை தமிழர் பாதுகாப்பு அறப்போர் என்று வழக்கறிஞர்கள் தொடங்கி- பிறகு அந்த நீதி மன்றத்திற்குள் திரு.சுப்பிரமணிய சுவாமி மீது வழக்கறிஞர்கள் முட்டை வீசியதாக வழக்கு - அந்த வழக்கின் விஸ்வரூபமாக போலீசார் - வழக்கறிஞர்கள் மோதல் என்று வன்முறைகள் நடை பெற்று - இறுதியாக உச்ச நீதிமன்றம் வரை இந்தப் பிரச்சினை சென்றுள்ளது.

தி.மு.க ஆட்சியை கலைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை - அதை உச்சநீதிமன்றம் உதறித்தள்ளி விட்டது.

சில போலீஸ் அதிகாரிகளை; உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி சென்னையிலிருந்து இந்த அரசு வேறு ஊர்களுக்கு மாற்றியாகிவிட்டது.

இன்னும் என்ன?

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் ஸ்ரீகிருஷ்ணா கமிஷனை உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. அந்த கமிஷனின் அறிவுரையை எதிர்பார்த்து அரசு காத்திருக்கிறது.

வழக்கறிஞர்கள் மட்டும் அதில் பொறுமை காட்டலாகாதா?

குறிப்பிடப்படும் இழப்பீடு தருவதற்கும் இருசாராரும் பெறுவதற்கும் அரசு தொகையும் ஒதுக்குகிறது.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவுகளையெல்லாம் அரசு செயல்படுத்த தயார் என்கிறபோது; அதே உச்ச நீதிமன்ற கருத்தை ஏற்று வழக்கறிஞர்கள் அனைவரும் மார்ச் 2ஆம் தேதி நீதிமன்றங்களுக்கு செல்வது தானே முறையாகும். இல்லையேல், இது இலங்கை தமிழர் பிரச்சினைக்கான போராட்டமல்ல; இங்குள்ள தி.மு.க ஆட்சிக்கு எதிரான போராட்டம் என்றுதானே உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது."

உடன்பிறப்பே,

கடந்த 17.2.2009 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நமது அரசின் சார்பில் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களால் படிக்கப்பட்ட

நிதி நிலை அறிக்கை - ஏழையெளியோர், சாதாரண, சாமான்ய மக்கள், உழவர்கள், உழைக்கும் பாட்டாளி மக்கள், வணிகர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் என எல்லாத் தரப்பினரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருப்பதை எண்ணியெண்ணி இறும்பூது எய்துகின்றேன்.

என் எண்ணக் கண்ணாடியில் - வண்ணப் புதுமையாக - ஜொலித்துக் கொண்டிருந்த அரசியல் தலைவர்களில் ஒரு சிலர், கொள்கை வீரர்களில் ஒரு சிலர் - மத்தாப்பு வெளிச்சம் காட்டி விட்டு இப்போது நட்புக்கு - பாசத்திற்கு - நாகரிகத்திற்கு விடை கொடுத்து விட்டு; "ஆட்சி மட்டுமல்ல, அவனே போனால்தான் என்ன'' எனக் கர்ச்சிக்கும் காந்தாரிகளாக அல்லவா என் கனவிலும் வந்து காட்சி தருகிறார்கள்.

என் கண்ணீரை - கவலையை - துச்சமாகக் கருதுகிறார்கள்.

இருக்கும் வரையில் ஏழைபாழைகளுக்கு - பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் ஆக்கப்பட்டுள்ள அடித்தட்டு மக்களுக்கு - எதையாவது செய்ய வேண்டும், அதையும் அவர்களை வாழ வைக்கும் வண்ணம் செய்ய வேண்டும், தன்மானம் பெறும் வண்ணம் செய்ய வேண்டும், தமிழ் வானம் இருக்கு மட்டும் - அதில் தமிழ் மக்களுக்காக நான் பாடும் கானம் - ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும், நான் இல்லாவிட்டாலும், அது ஒலித்துக் கொண்டே இருக்கும் என நினைத்துக் கொண்டே வாழ்வேன்.

அகவை 85 இப்போது!

அறுவை சிகிச்சை மூலம் பெற்றுள்ள இந்த உயிர் - என்னுயிர் என்று எழுதப்பட்டாலும்;

இனிய தமிழர்களே,
என்னரும் உடன்பிறப்புகளே,
இது அப்போதும் -
இப்போதும் -
இனி எப்போதும் உங்கள் உயிர்!

அன்புள்ள,
மு.க.
1-3-2009

3373. அனைவர் அகமும் அன்பகம் ஆகிட...!

உடன்பிறப்பே,

தூத்துக்குடி அனல் மின் நிலைய தொடக்க விழாவில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரும் - என் நீண்ட கால நண்பருமான மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள், அந்த விழா மேடையிலேயே - என் உடல் நிலை விரைவில் குணமாகி நலம் பெற வேண்டு மென்று வாழ்த்துரைத்துள்ளார். அது கேட்டு எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விட இரட்டிப்பான மகிழ்ச்சி எது தெரியுமா?

இதோ! அவர் உரையில் குறிப்பிட்டுள்ள இந்தச் செய்திதான்! அது என்ன அவ்வளவு முக்கியமான செய்தி?

தூத்துக்குடி விழாவில் அந்தத் தூயவர் பேசியது வருமாறு :-

"விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முன்வந்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இலங்கை அரசும் போர் நிறுத்தம் செய்து மக்களை பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு வர வேண்டும். இதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் தேவை.

தமிழ் மக்களை போர் நடைபெறும் இடத்தில் இருந்து பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்ல விடுதலைப் புலிகள் உதவ வேண்டும். தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவை சங்கம் ஆகிய அமைப்புகள் அவர்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் இடம் பெயர்ந்து உள்ள மக்களுக்கு மருத்துவ உதவிகளை செய்வதற்காக இந்திய அரசு மருத்துவக் குழு மற்றும் மருந்துகளை அனுப்பவும் ஏற்பாடு செய்து வருகிறது.

அடுத்து அரசியல் தீர்வாக இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும் சம உரிமை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அந்த அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களுக்கு இலங்கையின் சட்டத்துக்கு உட்பட்டு இறையாண்மை பாதிக்காத அளவில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும். இலங்கையில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக இந்தியாவின் இந்த பொறுப்பான வேண்டுகோளை இலங்கை அரசும், மற்றவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பு கிறேன்.''

உடன்பிறப்பே, பிரணாப் அவர்கள் இப்படிப் பேசியது மட்டுமல்ல; டெல்லியிலிருந்து அறிக்கையாகவும் இதை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிவிப்பில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களின் கருத்தும் - இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் கருத்தும் கலந்திருக்கின்றன என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

இலங்கைத் தமிழர்களை வாழ வைப்பதற்கும் -

அவர்களின் உரிமைகளை இலங்கையில் நிலைநாட்டுவதற்கும் -

தமிழகத்தில் அனைத்துக் கட்சிகள் சார்பிலும் - அரசு சார்பிலும் எடுத்த முயற்சிகளுக்கும் -

எரியுண்டு மாண்ட இனமான ஏந்தல்களின் தியாகத்துக்கும் -

தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கும் -

நேரில் சந்தித்து தமிழகத் தலைவர்கள் வலியுறுத்திய முறையீட்டுக்கும் -

பலன் கிடைத்தது என்பது போல; இந்தியப் பேரரசின் "போர் நிறுத்த'' வலியுறுத்தல், எனக்கு மருத்துவ சிகிச்சை வெற்றியைப் போன்ற மன ஆறுதலை அளிக்கிறது. மத்திய அரசுடன்,

தீர்மானங்கள் மூலமாகவும் - சந்திப்புகள் மூலமாகவும் - மகஜர்கள் மூலமாகவும் - நேரடியாகவும் - ஒல்லும் வகையெல்லாம் தொடர்பு கொண்டு செய்த முயற்சிகளினால் இன்று;

அனல் மின் நிலைய விழா - பிரணாப் பேச்சு - அவரது அறிக்கை - இவை அனைத்தும் நம் நெஞ்சத்து அனலைத் தணித்து ஆறுதல் பூங்காற்றாய் வீசச் செய்திருக்கிறது.

ஆனால் இந்த நேரத்தில் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மாசாக்கி - மண்ணாக்கி - காசாக்கி - அரசியலில் நாணயத்தை தூசாக்கி வாழும் சில வக்கிற மூளையினர்; தாங்கள் வகித்த பொறுப்புகளுக்கு தகுதியற்றோர் என்று காட்டிக் கொள்ள பிரணாப் வருகையை எதிர்த்து - மறியல் ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு - நாகரிகக் கேடாக நடந்து கொண்டு நமது மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப்பின் படங்களுக்கும் தீயிட்டுப் பார்த்து திருப்தி அடைந்திருக்கின்றனர்.

யார் அவர்கள் - சிங்களவத் தலைமையாளர், ராஜபக்சே தமிழர்கள் மீது நடத்தும் படுகொலைக்கு நியாய வாதம் எடுத்துரைத்த ஜெயலலிதாவின் பாதார விந்தங்களே; தமக்கு ஆதார அடி பீடங்கள் என அர்ச்சித்துக் கொண்டிருப்பவர்கள்; அந்த "அம்மா'' ஜெயாவின் அத்யந்த சீடர்கள், இலங்கைப் பகைவர்களை விட்டு விட்டு; இந்தியத் தலைவர்களின் படங்களுக்குத் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள் என்றால்; தேசப் பாதுகாப்புக்கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா?

முடியாது, முடியாது, முடியவே முடியாது!

இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரமும் - அங்கே அமைதியும் கிடைத்து அவர்கள் வாழ்ந்திட நாம் தமிழ் உணர்வோடு பணி புரிகிறோம் - அதில் கிடைக்கும் வெற்றிக்காகக் காத்து நிற்கிறோம் - மத்திய அரசுடன் இணைந்து இலங்கையில் போர் நிறுத்தம் இப்போதே கேட்கிறோம் - ஆம்; இந்த உலகில் பெரிய தேசமாம் - இந்திய நாடு கேட்கிறது - பிரணாப் முகர்ஜி கேட்டுள்ளார் - இந்திய அரசு கேட்கிறது - நாமும் கேட்கிறோம்;

"போரை நிறுத்து
போரை நிறுத்து'' என்று!

மத்திய அரசிடமிருந்து புறப்பட்டுள்ளது அந்த வாசகம் -

அதுவும் மார்ச் முதல் நாள் - மருத்துவ மனையிலிருந்து நான் மட்டுமல்ல; என் பழைய நண்பர் வாஜ்பய் அவர்களும் நலம் பெற்று வெளிவரும் நாள் -

சென்னையில் தம்பி மு.க. ஸ்டாலின், இளைஞர் அணியின் சார்பில், உருவாக்கிய "அன்பகம்" எனும் அழகு மாளிகையும் இந்த நாளில் திறக்கப்படுகிறது. நான் பொருளாளராக இருந்து, அண்ணா அவர்கள் திறந்து வைத்த அந்த அன்பகம், இன்று புதுப்பிக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டு பெரிய மாளிகையாக தம்பி ஸ்டாலின் பொருளாளராக இருக்கின்ற நேரத்தில் திறக்கப்படுகிறது.

இந்நாளில் -
அனைவர் அகமும்
பகையும் புகையும்
அகன்று; அன்பகங்களாக
மாறட்டும்!
அந்த ஆசையுடன்;
வலி நீங்கிய ஆறுதலுடன் -
வருகிறேன் உடன்பிறப்புகளே!
உமை வாரியணைத்து
மகிழ்ந்திட வருகிறேன்.

அன்புள்ள,
மு.க.
2-3-2009

3374. பட்டியல் தரவா; பாடம் பெறவே!

உடன்பிறப்பே,

அறிக்கை ராணி, ஜெயலலிதா இன்று விடுத்துள்ள அறிக்கையில் - "நீதிமன்றம் கொடுத்த நெற்றியடி" என்ற தலைப்பில் நான் எழுதியதற்கு பதில் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு எதையெதையோ எழுதியிருக்கிறார். அந்த அறிக்கையில் "சென்னை உயர் நீதி மன்றத்தில் காவல் துறையினரால் நடத்தப்பட்ட வன்முறை வெறியாட்டத்திற்கு நிகரான சம்பவம் சுதந்திர இந்தியாவில் இதுவரை நடைபெற்ற தில்லை என்பதுதான் தமிழக மக்களின் ஏகோபித்த கருத்து" என்று எழுதியிருக்கிறார். இதையே தான் மனுவாகத் தயாரித்து தன் கட்சியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் மூலமாக உச்ச நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்து, அதற்காக தமிழக அரசை 356வது விதியைப் பயன்படுத்தி கலைக்கச் செய்வதற்கு உச்ச நீதி மன்றம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அந்த வழக்கிலேதான் உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி அவர்களே, ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்றால், ஆளுநர் மாளிகைக்கு போக வேண்டும், ஜெயலலிதா தரப்பினர் தொடுத்துள்ள வழக்கு அரசியல் ரீதியானது என்று கருத்து தெரிவித்திருந்தார். அதைத்தான் நான் நீதிமன்றம் கொடுத்த நெற்றியடி என்ற தலைப்பிலே எழுதியிருந்தேன். மேலும் அப்போது ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையெல்லாம் பட்டியலிட்டும் காட்டியிருந்தேன். அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாத ஜெயலலிதா அவைகளை யெல்லாம் உண்மைக்கு மாறானவை என்று தற்போது அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். நான் பட்டியல் இட்ட சம்பவங்கள் உண்மையா அல்லவா என்பதை தமிழ்நாட்டு மக்களும், தமிழ் நாட்டுப் பத்திரிகைகளும் நன்றாக அறிவார்கள்.

உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி அளித்த தீர்ப்புக்கு மாறாக - அவருடைய தீர்ப்பையே சரியானதல்ல என்று அர்த்தம் தெரிவிக்கத் தக்க வகையில் ஆட்சியைக் கலைக்க எங்கே செல்ல வேண்டும், யாரிடம் முறையிட வேண்டும் என்பதெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும் என்று பதில் அளித்திருப்பதைப் பற்றி உச்ச நீதி மன்றம்தான் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் அவரது அறிக்கையில் ஆட்சியைக் கலைக்க முறைப்படி முறையிடுவது என்பது "திருடன் கையில் சாவியைக் கொடுப்பதற்கு சமம்" என்றும் எழுதியிருப்பது; எந்த உயர்ந்த அமைப்புகளைப் பற்றி ஜெயலலிதா விமர்சனம் செய்திருக்கிறார் என்பதை இந்திய நாட்டு அரசியல்வாதிகள் கருத்தில் கொள்வது நல்லது. இவ்வாறு உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்கு மாறாக - யாரிடம் முறையிட வேண்டுமென்பது தனக்குத் தெரியும் என்றும் - அவ்வாறு முறையிட்டால் "திருடன் கையில் சாவியைக் கொடுப்பது" என்றும் எழுதியிருப்பதற்கு என்ன பொருள் என்பதை அறிவார்ந்த மக்கள்தான் புரிந்து அறிவிக்க வேண்டும்.

சென்னை உயர் நீதி மன்றத்திற்குள் செல்ல காவல் துறையினருக்கு அறிவுறுத்தியது யார் என்று உச்ச நீதி மன்றம் எழுப்பிய கேள்விக்கு முறையாக எனது அரசின் சார்பில் பதில் தரப் பட்டுள்ளது. உச்ச நீதி மன்றத்தின் கேள்விக்கு என்ன பதில் என்று ஜெயலலிதா என்னைக் கேட்டிருக்கிறார். உச்ச நீதி மன்றம் ஜெயலலிதாவிற்கு என்னைப் பதிலளிக்கச் சொல்லவில்லை. உச்ச நீதி மன்றத்திற்கு காவல் துறை பதிலளிக்க வேண்டுமென்று சொன்னது, காவல் துறை அதற்கான பதிலையும் அளித்து விட்டது. அதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், என்னிடம் ஜெயலலிதா பதில் கேட்பது அவரது அறியாமையைத்தான் வெட்ட வெளிச்சம் போட்டுக் காட்டுவதோடு, அவருக்காக வாதாடும் வழக்கறிஞர்களே சிரிக்கக்கூடிய அளவிற்கு செய்துள்ளது.

காவல் துறையினரை நீதி மன்றத்திற்குள் செல்ல நான்தான் அறுவுறுத்தியிருக்க வேண்டு மென்று மக்கள் நினைக்கிறார்கள் என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். எந்த மக்கள் அப்படி நினைக்கிறார்கள்? ஜெயலலிதாவின் தோட்டத்திலே உள்ள அவரது மக்கள் அப்படி நினைக்கிறார்கள் போலும்!

19.2.2009 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சம்பவத்தை நினைத்தால் மக்களுக்கு ஆங்கிலேயர்

காலத்தில் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக் படுகொலை சம்பவம்தான் நினைவுக்கு வருமாம். ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி அவருக்குத் தெரியுமா? 1919ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ந்தேதி அமிர்தசரஸ் நகரில் உள்ள ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து கொண்டிருந்தது. ஜெனரல் டயர் என்ற வெள்ளைக்காரத் தளபதி 100 வெள்ளைக்காரச் சிப்பாய்களும், 50 இந்திய ராணுவத்தினரும் பின்தொடர மைதானத்துக்குள் வந்தான். கூடவே பீரங்கி வண்டிகள் அணிவகுத்து வந்தன. கூடியிருந்தவர்களைக் கலைந்து செல்லும்படி எச்சரிக்கை எதுவும் கொடுக்காமல், அவர்களை நோக்கி பீரங்கியால் சுடும்படி ஜெனரல் டயர் உத்தரவிட்டான். ராணுவத்தினர் பீரங்கிகளால் சரமாரியாகச் சுட்டனர். சுமார் பத்து நிமிட நேரம் 1650 ரவுண்டுகள் சுட்ட பிறகே பீரங்கிகள் ஓய்ந்தன. "சுட்டேன், சுட்டேன், குண்டுகள் தீரும் வரை சுட்டேன்" என்று கொக்கரித்தான் ரத்த வெறி பிடித்த ஜெனரல் டயர். ஜாலியன் வாலாபாக் சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 379 பேர். அம்மையார் அந்தச் சம்பவத்துடன் 19ஆம் தேதி சென்னை உயர் நீதி மன்றத்தில் நடைபெற்ற சம்பவத்தை ஒப்பிட்டுச் சொல்வது போல் சொல்ல முடியாது.

ஜெயலலிதா எழுதியிருப்பது போல் ஜாலியன் வாலாபாக் சம்பவத்திற்கு ஒப்பிட்டு ஒரு சம்பவத்தைச் சொல்ல வேண்டுமென்றால், ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது, தன் உடன்பிறவா சகோதரியை அழைத்துக் கொண்டு கும்பகோணம் சென்று சங்கராச் சாரியார் சொன்னது போல - இவர் அவருக்கு அபிஷேகம் செய்ய, அவர் இவருக்கு அபிஷேகம் செய்ய - "வைரம்" படம் போன்ற அந்தக் கண் கொள்ளா காட்சியைக் காண நெருக்கியடித்தவாறு பக்தர்கள் திரண்டு அதில் 100க்கு மேற்பட்டவர்கள் மடிந்தார்களே; மகாமக மோட்சம் பெற்றார்களே, அதைத்தான் ஜாலியன் வாலாபாக் சம்பவத்திற்கு சமமாக மக்கள் நினைத்துக் கொள்வார்களே தவிர, 19ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தை அல்ல. எனவே ஜெனரல் டயருடன் ஒப்பிடத்தக்க அளவிற்கு அனைத்துப் பொருத்தங்களும் நிறைந்தவர் ஜெகம் புகழும் ஜெயலலிதா தான்.

அவர் தனது அறிக்கையை முடிக்கும்போது ஜனநாயகத்தை நான் ஏதோ குழி தோண்டி புதைத்து விட்டதாகப் புலம்பியிருக்கிறார்.

கட்சி ஆரம்பித்த 1949ஆம் ஆண்டு முதல் இன்று வரை கட்சிக் கிளைக் கழகச் செயலாளர் முதல், தலைமைக் கழகம் வரை தேர்தல் நடத்தி வருகின்ற நாங்கள் எங்கே? கட்சி ஆரம்பித்த நாள் முதல் ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்தாமல் ஒவ்வொரு பொதுக் குழுவிற்கும் அழைப்பிதழ் யாருக்குக் கிடைக்கிறதோ அவர்கள் எல்லாம் பொதுக் குழு உறுப்பினர்கள் என்ற நிலையில் கட்சியை காட்சியாக நடத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதா எங்கே? ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்தவர் அவரா? நானா? எந்தவொரு மாவட்டக் கழகச் செயலாளராவது அங்கே தேர்தல் நடைபெற்று வெற்றி பெற்றது உண்டா? ஜனநாயகத்தைப் பற்றி ஜெயலலிதாவா பேசுவது?

நீதி மன்றம் கொடுத்த நெற்றியடி பற்றி யெல்லாம் ஜெயலலிதா பேசலாமா? ஒரு வழக்கு போதாதா? அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை ஜெயலலிதா தன் பெயரிலே குறைந்த விலைக்கு அவர் ஆட்சியிலே இருந்த காலத்தில் வாங்கியது பற்றி உச்ச நீதி மன்ற நீதிபதி சொன்னது என்ன? இதோ, அந்தப் பொன்னான வார்த்தைகளில் சில....

> "அரசின் நடத்தை விதிகளுக்கு சட்ட அங்கீகாரம் இல்லாத போதிலும் முதலமைச்சர் போன்று உயர் பதவியில் இருப்போர், அந்த விதிகளை மதித்து நடக்க வேண்டியது அவசியம். சாதாரண அரசு ஊழியர் ஒருவர் எப்படி அரசு சொத்துக்களை வாங்க முடியாதோ, அதே போல, முதல்வர் பதவியில் இருக்கும் ஒருவரும் அரசு நிறுவனத்தின் சொத்துக்களை வாங்க முயற்சிப்பது தவறு. சட்டம் என்பது சாதாரண அரசு ஊழியருக்கும், உயர் பதவியில் இருப்பவருக்கும் ஒன்று தான். எனவே நடத்தை விதிகள் தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும், நடத்தை விதிகளின்படி அமைச்சர்கள் அரசு சொத்துக்களை வாங்கக் கூடாது என்றும் உள்ள போதிலும், தான் வாங்கியது தவறு இல்லை என்ற வாதத்தை ஏற்க முடியாது. எனவே தனது தவறுக்கு வருந்தி, வாங்கிய நிலத்தை டான்சி நிறுவனத்துக்கே திரும்ப ஒப்படைக்க வேண்டும். முதல் குற்றவாளியான ஜெயலலிதா, தான் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக டான்சி நிலப்

பத்திரத்திலே உள்ள அவருடைய ஆடிட்டரும், அரசு அதிகாரிகளும் ஏற்றுக் கொண்ட அவருடைய கையெழுத்தையே இல்லை என்று மறுக்கக் கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறார். நிபந்தனையில்லாமல் சொத்துக்களைத் திரும்ப ஒப்படைப்பதோடு, நாங்கள் என்ன கூறியிருக்கிறோம் என்பதன் அடிப்படையில் அவர் தன்னுடைய மனச் சாட்சிக்கே பதிலளிக்க முன்வர வேண்டும்."

ஜெயலலிதா அவர்களே, நீதி மன்றம் 2003ஆம் ஆண்டு உங்களுக்கு கொடுத்த நெற்றியடி போதுமா? இதுபோல பல பல நெற்றியடிகள் இருக்கின்றன, அவைகளை யெல்லாம் பட்டியல் இட்டுக் காட்டட்டுமா?

எனக்கு முதுகுத் தண்டுவடத்தில் நடந்த அபாயகரமான அறுவை சிகிச்சைக்குப் பின்பும், அதில் நான் புத்துயிர் பெற்றுள்ளது பற்றியும் துளி இரக்கமும் இல்லாமல் ஜெயலலிதா கேலி செய்துள்ளதால் - பரவாயில்லை, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். நோயினால் வாடிய போதே, "அவரை நீக்கி விட்டு என்னை முதல்வராக்குக" என்று ராஜீவ் காந்திக்கு ஆங்கிலத்தில் கைப்பட கடிதம் எழுதி, உலகப் புகழ் பெற்ற உத்தமியல்லவா ஜெயலலிதா; எனவே என் உடல் நிலை பற்றிப் பேசுவதில் வியப்பு என்ன இருக்கிறது!

உடன்பிறப்பே, தனக்கு வரும் புகழ் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று ஜெயலலிதா அந்நாள் பிரதமர் ராஜீவுக்கு கடிதம் எழுதிய கதையெல்லாம் ஒன்றா? இரண்டா?

"உம்" என்று சொன்னால் ஓர் நொடியில் அவை ஒவ்வொன்றும் வெளிவராதா?

அன்புள்ள,

மு.க.

3-3-2009

3375. அமைகிறது மீண்டும் வெற்றிக் கூட்டணி!

உடன்பிறப்பே,

2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றப் பொதுத் தேர்தலின் போது - இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் யாரும் சொல்லாததற்கு முன்பு - தமிழ்நாட்டிற்கு திருமதி சோனியா காந்தி அவர்களை அழைத்து - "இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க!!" என்று வரவேற்பு கூறி வாழ்த்தி - அந்தத் தேர்தல் முடிவுகளும் அவ்வாறே அமைந்து - பிரதமராக அவர் தான் வர வேண்டுமென்றும் வருவார் என்றும் எதிர்பார்த்திருந்த போது அதற்கு மாறாக சோனியா காந்தி அவர்கள் தியாகத் திருவிளக்காக உயர்ந்து, தான் பிரதமர் பதவிக்கு வர விரும்ப வில்லை என்றும், டாக்டர் மன்மோகன் சிங் பிரதமர் பொறுப்பையேற்பார் என்றும் கூறி - கடந்த ஐந்தாண்டு காலமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழி காட்டும் தலைவியாக செயல்பட்டு - சாதனைச் செல்வியாக திகழ்ந்து, சாதனைக்கு மேல் சாதனை என்று சாதித்து வருகிறார்.

அத்தகைய ஆட்சிக்கும், தலைவிக்கும் தக்கதோர் துணையாக - தோழமைக் கட்சி என்றால் எப்படி இருக்க வேண்டுமென் பதற்கான இலக்கணமாக - ஒருவருக் கொருவர் எப்படி விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு சான்றாக தி.மு.க., காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் செயல்பட்டு வருகின்றன. மத்தியிலே உள்ள அரசுக்கு தி.மு.க. எந்த அளவிற்கு தோழமையாகச் செயல்பட்டு வருகிறதோ, அது போலவே மாநிலத்தில் நடைபெறும் தி.மு. கழக அரசுக்கு, காங்கிரஸ் கட்சியும் ஒத்துழைப்பு நல்கி வருகிறது. இந்த ஒற்றுமையும், செயல்படும் தன்மையும் ஒரு சிலருக்கு தொடக்கம் முதலே பிடிக்கவில்லை. குறிப்பாக ஒரு சில பத்திரிகைகளுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் இந்தக் கூட்டணி செழித்தோங்கி வளர்ந்து வருகிறது.

இந்தக் கூட்டணியைக் குலைக்கவும் - காங்கிரஸ் கட்சியை தங்கள் அணிக்கு இழுக்கவும் மறைமுகமாக முயற்சித்துப் பார்த்து, நடக்காத நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நேரடியாகவே வர வேண்டும் எங்கள் அணிக்கு - நான் இது வரை உத்தரவாதம் அளித்திருந்த இடது சாரி கட்சிகளை யெல்லாம் வஞ்சித்து விட்டு வரவேற்கத் தயார் - வாருங்கள், வாருங்கள் என்று அழைத்துப் பார்த்தார்கள். 1998-99ஆம் ஆண்டுகளில் அ.தி.மு.க. கூட்டணியோடு மத்தியிலே ஆட்சி நடத்திய வாஜ்பய் பட்ட பாட்டினையெல்லாம் நன்குணர்ந்தவர்கள் யாராவது அங்கே திரும்பிப் பார்ப்பார்களா? அருமை நண்பர் வீரப்ப மொய்லி அவர்கள், அடுத்த நாளே கொடுத்த பேட்டியில், காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி வலுவாக உள்ளது என்று பதிலளித்து விட்டார்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் இந்தக் கூட்டணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பிரச்சினையிலே கூட இரு தரப்பினருக்கும் இடையே அதன் காரணமாக ஏதாவது ஏற்படாதா? அதிலே குளிர் காய முடியாதா என்று நினைத்தார்கள். அந்தப் பிரச்சினையிலும், மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் திட்டவட்டமாக இலங்கையிலே போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று வெளியிட்ட சில அறிவிப்புகளுக்குப் பிறகு இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் சொல்லியும் கூட்டணிக்குள் குழப்பம் விளைத்திட முடியாமல் தோற்றார்கள். இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பிரச்சினையிலும் இரண்டு கட்சிகளும் கொண்டுள்ள கருத்துகள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்ல, இருவருக்குள் குறிக்கோள் ஒன்றுதான், அதனை வெளிப்படுத்துகின்ற முறைகளிலே வேண்டுமானால் வேறுபாடுகள் இருக்கலாம், இலங்கையிலே உள்ள தமிழர்கள் காப்பாற்றப் பட்டே ஆக வேண்டுமென்ற குறிக்கோளில் ஒரு குன்றிமணி அளவுக்குக்கூட என்றைக்கும் காங்கிரசுக்கும், தி.மு.க.விற்கும் இடையே வேறுபாடோ, மாறுபாடோ இருந்ததில்லை.

கடந்த காலத்தில் வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எடுத்த நடவடிக்கைகளை வேண்டு மென்றே திட்டமிட்டு - தமிழகத்திலே உள்ள தி.மு.க. வைப் பற்றி மத்தியில் இருந்த இந்திரா காந்தி அரசுக்கும் மற்ற அரசுகளுக்கும் திரித்துச் சொல்லி - கடுகை

மலையாக்கி - மலையை சுனாமி அலையாக்கி - அதன் காரணமாக தி.மு. கழக ஆட்சியைக் கவிழ்க்க முனைந்தார்கள். இருந்த போதிலும் அதன் பின்னர் உண்மையை உணர்ந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், சென்னை கடற்கரை கூட்டத்தில் பேசும்போது - "ஆதரித்த போதும், எதிர்த்த போதும் இரண்டு நிலையிலும் கொள்கை உறுதியோடு இருப்பவர் கலைஞர்" என்று புகழ் மாலை சூட்டினார்.

தற்போது குலாம் நபி ஆசாத் அவர்கள் நேற்றையதினம் என்னைச் சந்தித்து - என் உடல் நலம் விசாரித்ததோடு - நாட்டு நலம் எந்த வகையிலும் தொய்வடையாமல் இருப்பதற்காக - நம்முடைய கடந்த கால வெற்றிக் கூட்டணியே தொடர்ந்து நீடிக்கும் என்று அறிவித்திருக்கிறார். ஜனநாயகத்திலும், மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அக்கறை கொண்ட இன்றைய மத்திய மாநில அரசுகளை வாழ்த்தி வரவேற்கின்ற - புகழ்ந்துரைக்கின்ற இந்திய நாட்டு மக்களின் எண்ணத்தை உணர்ந்து கொண்டு - அதை எப்படியும் உடைத்தாக வேண்டுமென்று கருதிக் கொண்டு கோள் மூட்டி எதையாவது செய்ய வேண்டும், அது இம்மியளவு ஆனாலும் அது மத வாத கட்சிகளுக்கு ஆதரவாக அமைய வேண்டுமென்று கருதுகிறவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அவர்களில் ஓரிருவரை எல்லோரும் அறிந்திடுவர். அந்தச் சிலருக்கு உடல் எல்லாம் மூளை - மூளை எல்லாம் சிந்தனை - சிந்தனை எல்லாம் வஞ்சனை.

இதற்கு எடுத்துக்காட்டு கூற வேண்டுமேயானால் - திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள் நேற்றையதினம் என்னைச் சந்தித்து விட்டு - காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி தொடரும் என்று நிருபர்களிடையே சொன்ன பிறகும் - மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கின்ற மக்களை எப்படியாவது திசை திருப்ப வேண்டுமென்று கடும் முயற்சி செய்து, "தின மணி" மூலம் முதல் பக்கத்திலேயே ஒரு செய்தியை வெளியிட்டிருக் கிறார்கள். குலாம் நபி ஆசாத் அவர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களை, குறிப்பாகவும் சிறப்பாகவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களையெல்லாம் சந்தித்த பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் ஆகியவற்றின் வெற்றிக் கூட்டணி தொடரும் என்பதை அறிவித்தார்கள் - அது கேட்டு வாழ்த்தி

மகிழ்ந்தவர்கள் திடுக்கிடும் வண்ணம் "தினமணி" வெளியிட்டுள்ள செய்தி என்ன தெரியுமா? இதோ அது :-

> "அ.தி.மு.க. வுடன் கூட்டணி : தி.மு.க. வை விட அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்வதே காங்கிரஸ் கட்சிக்கு இயல்பான கூட்டணியாகவும், வெற்றிக் கூட்டணியாகவும் அமையும். எனவே அ.தி.மு.க. வுடன் கூட்டணி சேர்வது பற்றி கட்சி மேலிடம் பரிசீலிக்க வேண்டும் என சில மாவட்டத் தலைவர்களும், சில மாநில நிர்வாகிகளும் குலாம் நபி ஆசாதிடம் வற்புறுத்தினர் எனக் கூறப்படுகிறது."

எந்த காங்கிரஸ் நண்பர்கள், எந்த மாவட்டத்தலைவர்கள், எந்த மாநில நிர்வாகிகள் இப்படி வலியுறுத்தினார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. தி.மு.க. கூட்டணி பிடிக்க வில்லை என்று யாரோ சிலர் வற்புறுத்தினர் என்று கூறப்படுகிறது என்று "தினமணி" அக்கறையோடு எழுதிக் காட்டுகின்றது.

மத்திய அரசு மீது வீசப்படும் எதிர்க்கட்சிகளின் கணைகளை - அம்புகளை தாங்கிக் கொண்டு சோனியா காந்தியின் வழிகாட்டு தலோடு நடைபெறுகின்ற மத்திய ஆட்சியும் - மாநில தி.மு.கழக ஆட்சியும் நிலைத்திட - நீடித்திட கடந்த ஐந்தாண்டு காலமாக - மாற்றார் மனம் போனபோக்கில் பேசியதை யெல்லாம் அலட்சியம் செய்து - மதச் சார்பற்ற மத்திய அரசு - மனித நேயம் மிக்க மத்திய அரசு - வலுப்பெற்று, வளம் பெற்றுத் திகழ - ஒல்லும் வகையெல்லாம் ஒத்துழைத்து வரும் மாநில தி.மு. கழகத்துடன் அணி சேர வேண்டாம் என்றும், அதற்கு மாறாக அ.தி.மு.க. வுடன் சேர்ந்தால்தான் அமோக வெற்றி பெறலாம் என்றும் சில காங்கிரஸ் நிர்வாகிகள், குலாம் நபி ஆசாத் நடத்திய கருத்துக் கேட்பு கூட்டத்திலேயே சொன்னார்கள் என்று "தின மணி" செய்தி வெளியிடுகிறது. அந்தச் செய்தியை நம்புவதற்கு ஒரு வேளை அப்படி ஒரு சில காங்கிரஸ் நண்பர்கள் கிசுகிசுத்திருப் பார்களேயானால் - அவர்கள் கடந்த கால நிகழ்வுகளை, இந்த ஐந்தாண்டு காலத்தில் நடந்தவைகளை அவ்வளவு விரைவாகவா மறந்திருக்க முடியும்?

"யார் இந்தச் சோனியா காந்தி? வெளிநாட்டுக்காரிக்கு இந்தியாவிலே அரசியல் தலைமையா?"

என்று கேட்டவர் யார்? ஜெயலலிதா அல்லவா? அதைவிட, அந்தச் சொக்கத் தங்கம் சோனியா காந்தியைப் பார்த்து "பதி பக்தி இல்லாதவர்" என்று அழைத்த குரூர புத்திக்குச் சொந்தக்காரர் யார்?

இந்த வாசகங்களையெல்லாம் "தினமணி" யாரிடம் கருத்து சொன்ன காங்கிரஸ் நிர்வாகிகள் மறந்தா விட்டார்கள்?

"தீயினால் சுட்ட புண் உள்ளாறும்; ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்ற திருக்குறளை எந்தக் காங்கிரசாரும் மறந்திருக்க நியாயமில்லை.

அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் விவாதங்கள், வாதங்கள், போராட்டங்கள் இவற்றுக்கிடையிலேகூட - பிற கட்சித் தலைவர்களை இது போன்ற வார்த்தைகளால் தாக்கக் கூடாதென்றும், அப்படி தவறுதலாக ஒரு வேளை யாராவது தாக்கிப் பேசினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தும் - அவர்களையே மன்னிப்பு கேட்கச் சொல்லியும் - அரசியலில் அன்று தொட்டு இன்று வரை - அய்யா பெரியாரும், அறிஞர் அண்ணாவும் நடந்து காட்டிய வழியிலேயே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிற கழகத்தின் தலைமை - மற்றக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் - மற்ற கட்சிகளின் தியாகிகள் அனைவரையும் எந்த அளவிற்கு மனதில் நிறுத்தி மக்களிடையே நினைவுச் சின்னங்களாக அமைத்து - இந்த இயக்கம் வளர்க்கப்பட்ட விதத்தையும், வளர்ந்து வருகிற விதத்தையும் விரிவான வரலாறாக ஆக்கியிருக்கிறது என்பதையும் இனியும் அந்த அரசியல் நாகரிகம் இந்த இயக்கத்தால் கடைப்பிடிக்கப்படும் என்பதையும் ஏனோ, தினமணி மறந்து விட்டு - தேவையற்ற திசை திருப்பங்களைச் செய்ய முயற்சிகளை மேற்கொள்கிறது.

இந்த உண்மையை தினமணியாரே குறிப்பிட்டிருக்கின்ற ஒரு சில மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள்; அவர்கள் உண்மை யிலேயே அப்படிப்பட்ட கருத்து சொல்லியிருப்பார்களேயானால் - அல்லது அத்தகைய கருத்தைக் கொண்டிருப்பார்களேயானால் - சிந்தனை செய்து, அதற்காக தினமணியார் போன்றவர்களை நிந்தனை செய்ய வேண்டாம் - வஞ்சகர்களை வந்தனை செய்து வாழ்விழந்த நாடு என்ற நிலைமை ஏற்படாமல் இருக்க இன்றைக்கே

எடுத்துரைப்போம் சூளுரை!

ஆமாம், அமைகிறது அன்று போல்
இன்றும் தி.மு.க. – காங்கிரஸ் வெற்றிக் கூட்டணி.
அந்தக் கூட்டணி மேலும் பல வெற்றிகளைப் பெற
உழைப்போம்! உழைப்போம்!
உண்மைகளுக்கு மாறான செய்திகளை
தவிர்ப்போம்! தவிர்ப்போம்!
நம்மைப் பிரிக்க நினைப்போர் முயற்சிகளை
தகர்ப்போம்! தகர்ப்போம்!

அன்புள்ள,
மு.க.
4-3-2009

3376. கேள்வி கேட்கக் கூடாதாம்!

உடன்பிறப்பே,

இன்றையதினம் யாரையும் குற்றம் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல; பரவலாக ஒரு சிந்தனை - அதுபற்றி ஒரு விவாதம் நடைபெற்றால் நல்லது என்பதற்காக சில கருத்துகளை எழுதியிருக்கிறேன். ஒரு நல்ல தெளிவு ஏற்பட்டால், அதற்கு இந்த கருத்துகள் உதவுமானால் ஜனநாயகத்தை விரும்பும் அனைவருக்கும் நல்லது என்பதற்கே எழுதுகின்றேன். நடுநிலை என்பது வார்த்தையாக இல்லாமல்; வாழ்வில் வாய்மையாக அமைய வேண்டுமென்பதற்காக!

“தேர்தல் ஆணையம்” என்பது தன்னாட்சி பெற்ற அமைப்பு. ஆணையத்தின் செயல் பாடுகள் குறித்து கேள்வி கேட்க யாருக்கும் உரிமை கிடையாது. தேர்தல் நேரத்தில் அவர்கள் எந்த அலுவலரை வேண்டுமானாலும் மாற்றலாம். அதைப் பற்றி மாநில அரசோ, மத்திய அரசோ கேள்வி கேட்க முடியாது. ஏனென்றால் தேர்தல் ஆணையம் என்பது சர்வ வல்லமை பொருந்தியது. தேர்தல்களை எப்போது நடத்துவது என்பதைப் பற்றி தேர்தல் ஆணையம்தான் தேதியினை நிர்ணயிக்கும்.

அந்தத் தேர்தல் ஆணையத்தின் தலைவராக இருப்பவரும், உறுப்பினர்களாக உள்ளவர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு, இரண்டாவதாக இருப்பவரை நீக்க வேண்டுமென்று, முதல் இடத்தில் இருப்பவர் புகார் கொடுப்பதும், அதைப்பற்றி ஒவ்வொரு ஏடுகளும் விமர்சனம் செய்வதும் “துரதிருஷ்ட”வசமான நிகழ்ச்சிகளாகும்.

நாடாளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ காலி இடம் ஏற்பட்டு, அதற்கு இடைத் தேர்தல் அந்த இடம் காலியான ஆறு திங்கள்களுக்குள் நடத்தப்பட வேண்டும். அப்படி இடைத் தேர்தல் தேதி நிர்ணயிக்கும் போது - பொதுத் தேர்தல் பாராளுமன்றத்திற்கோ சட்டமன்றத்திற்கோ ஒரு சில மாதங்களில்

வருகிறதென்றால் - அப்போது இடைத் தேர்தல்களையும் சேர்த்து அந்தப் பொதுத் தேர்தலோடு நடத்துவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. காரணம்; தேவையில்லாமல் ஏற்படுகின்ற செலவைக் குறைப்பதற்காக - பொதுத் தேர்தல் வருகின்ற போதே இடைத் தேர்தலையும் சேர்த்து நடத்துவதுதான் வழக்கம்.

எப்படியோ மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தவரை அந்தத் தொகுதியின் உறுப்பினர் மறைந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்குள்ளே அவசர அவசரமாக இடைத் தேர்தலை நடத்தினார்கள்.

அந்த இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா; அந்தத் தொகுதியின் மறைந்த உறுப்பினர், ம.தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்றபோதிலும், அந்தக் கட்சியின் தலைவரை நேரில் அழைத்து, அந்தத் தொகுதியை தனக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு, அங்கே தோழமை உணர்வுகளுக்கே இடம் இல்லாமல் நடந்து கொண்டார். "சைவப் பெருமாட்டி உப்பு கண்டத்தை பறி கொடுத்தது போல" ம.தி.மு.க. வின் தொண்டர்களும், முன்னணியினரும் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி வாயை மூடிக் கொண்டார்கள்.

மத்திய தேர்தல் ஆணையம் போலவே, மாநிலத்திலே ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி இருக்கிறார். அவரது அதிகாரம் குறித்தும் யாரும் கேட்கக் கூடாது. அவர் மத்திய தேர்தல் ஆணையத்திலிருந்து தமிழகத் தேர்தல் அதிகாரியாக வந்தவரா என்றால் கிடையாது. தமிழகத்திலே உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் அவரும் ஒருவர். அவர் இந்தப் பதவியில் இத்தனை ஆண்டுகளுக்கென நியமிக்கப்பட்டுள்ளார். அந்தக் காலக் கெடு முடிந்ததும் மீண்டும் மாநில அரசுப் பணியிலே இணைந்து பணியாற்ற வேண்டியவர்தான். அந்த அதிகாரிக்கு மாதந்தோறும் அளிக்கப்படும் ஊதியம் தமிழக அரசினால் தான் வழங்கப்படுகிறது. அவருக்குக் கீழே பணியாற்றும் அதிகாரிகளை மாற்றுவதாக இருந்தால் கூட அதனை தமிழக அரசின் ஒப்புதலோடுதான் செய்திட முடியும்.

ஆனால் தற்போது தமிழகத் தேர்தல் அதிகாரியாக இருக்கும் அதிகாரி நரேஷ் குப்தா - தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற 2006ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து இன்று வரை

முதலமைச்சரை ஒரு முறையேனும் "மரியாதைச் சந்திப்பு" என்ற பெயரிலேகூட சந்திக்கவில்லை. ஏனென்றால் அவர் தேர்தல் அதிகாரி. அவர் மரியாதைக்காக முதல் அமைச்சர் என்ற முறையில் என்னைச் சந்தித்தால் கூட, நேர்மை கெட்டு விடுமாம்.

ஆனால் மத்திய தேர்தல் ஆணையத் தலைவரோ, உறுப்பினர்களோ அவர்களை நியமிக்கும்போது பிரதமரையும் குடியரசுத் தலைவரையும் மரியாதை நிமித்தம் சந்திப்ப தில்லையா என்று கேட்டால் அவர்கள் சந்திக்கத்தான் செய்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரிகளாக இருந்த ஓசா, ஐ.ஏ.எஸ்., சந்திரசூடன் ஐ.ஏ.எஸ்., சாரங்கி, ஐ.ஏ.எஸ்., மாத்யூ, ஐ.ஏ.எஸ்., போன்றவர்கள் அவ்வப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருந்த முதல் அமைச்சர்களைச் சந்தித்ததே கிடையாதா என்றால், மரியாதைக்காக மட்டுமல்ல பல முறை சந்தித்திருக்கிறார்கள்.

பொதுவாக பொதுத் தேர்தல்களை விட இடைத் தேர்தல் என்றால் அதற்கு முக்கியத்துவம் உண்டாவதும் - போட்டி கடுமையாவதும், அங்கே ஒரு சில சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படுவதும் இயற்கையான ஒன்று என்பதும், ஆளுங்கட்சி அங்கே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுவதும் எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் நடைபெறுகின்ற ஒரு நிலைமை தான். திருமங்கலம் தொகுதியிலும் அப்படிப்பட்ட ஒருசில சம்பவங்கள் நடை பெற்றுள்ளன என்று செய்திகள் வந்தன. அதற்கு முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க., அங்கே வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கின்ற செயலில் ஈடுபட்ட காரணத்தால், அதனை கையும் களவுமாக பிடிக்கின்ற முயற்சி நடைபெற்று தடுக்கப்பட்ட காரணத்தால் வன்முறைக்கு வித்திட்டுள்ளது. அதைக் கண்டித்து அ.தி.மு.க. வினரே, அவர்களே வன்முறைக்கு வித்திட்டு விட்டு - பிக்பாக்கெட்காரன் தானே திருடி விட்டு, அவனே அதோ திருடன், திருடன் என்று கூறிக் கொண்டே ஓடுவதைப் போல அன்றாடம் ஆளுங்கட்சியையும், காவல் துறையையும் குறைகூறி அறிக்கை விட்டுக் கொண்டிருந் தார்கள்.

அந்த அறிக்கையில் ஒன்றாக - 31-12-2008 அன்று எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், ஒரு

சில காவல் துறை அதிகாரிகளை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று அறிவித்தார்.

அவர் அறிவித்த அதே நாளில் - தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி - ஏடுகளுக்கு அளித்த பேட்டியில் மிரட்டுதல், தாக்குதல் நடத்துதல் என்றும், விதியை மீறி ஏராளமான சம்பவங்கள் நடந்துள்ளன என்றும், தேர்தல் ஆணையத்திற்கு தான் துரோகம் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டார். அந்த அளவிற்கு திருமங்கலம் இடைத் தேர்தலின் போது ஏதாவது பெரிய கலவரமோ, தாக்குதலோ, வன்முறையோ, கொலைச் சம்பவங்களோ நடைபெற்றதா என்றால் கிடையாது, கிடையாது.

ஆனால், தேர்தலை பாரபட்சமின்றி - ஒரு தரப்புக்கு ஆதரவாக இல்லாமல் செயல்பட வேண்டிய ஒரு பெரிய அதிகாரி தான் அளித்த பேட்டியில், "தொகுதியில் வன்முறைகள், பல தவறுகள் நடந்துள்ளன, ஜம்மு - காஷ்மீரில் கூட சுமூகமாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. திருமங்கலம் கறை படிந்ததாகி விட்டது, திருமங்கலம் சம்பவம் துரதிருஷ்டவசமானது" என்றெல்லாம் சொன்னது என்பது தேர்தல் விதிப்படி ஒரு அதிகாரி வாக்காளர்களை ஒருதலைப்பட்சமாக ஊக்குவிப்பது ஆகாதா என்பதற்கு சட்டம் படித்தவர்களும், அரசியல் வாதிகளும் தான் பதில் கூற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரும், வேறு சில அவருடைய தோழமைக் கட்சியினரும் அதிகாரிகளை மாற்றுவது குறித்து அறிக்கை விடுத்த அதே நாளில் தமிழக முதலமைச்சர் என்ற முறையில் நான் விடுத்த அறிக்கையில் "திருமங்கலம் இடைத் தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு பெரிதும் விரும்பி, நடவடிக்கைகள் எடுத்து வருகிற இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு ஒத்துழைப்பு தருவதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது.

இதற்கு உதாரணமாக எந்த அதிகாரிகளை எங்கே மாற்றுவது என்பது போன்று எதிர்க்கட்சியினர் கூறும் கோரிக்கைகளை தேர்தல் ஆணையம் ஏற்று, அவ்வாறு நடவடிக்கை எடுத்தால்; அதற்கும் உடன்பட்டுச் செயல்படவும் இந்த அரசு இதுவரை எவ்விதத் தயக்கமும் காட்டியதில்லை, இனியும் காட்டப் போவதுமில்லை, திருமங்கலத்தில் வெற்றி பெற வேண்டியது அமைதியும், ஜனநாயகமும்தான் என்பதில் இந்த அரசுக்கு இருவேறு கருத்துக்கள் இல்லை" என்று பட்டவர்த்தனமாக தெரிவித்திருந்தேன்.

ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நடந்ததைப் பற்றி "தினமலர்" நாளேடு குறிப்பிட்டிருந்தது என்ன தெரியுமா? 2006ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது, அன்றைய சென்னை மாநகர காவல் துறை கமிஷனர் நடராஜை மத்திய தேர்தல் ஆணையம் மாற்ற வேண்டுமென்று உத்தர விட்டபோது, அதை எதிர்த்து ஜெயலலிதா நீதி மன்றத்திற்கு செல்லவில்லையா என்று அந்த ஏடு கேள்வி கேட்டது. அதே ஜெயலலிதாதான் அதிகாரிகளை மாற்ற வேண்டுமென்றுகூட அல்ல, உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்றே அறிக்கை விட்டார். இந்தப் பிரச்சினையிலே மத்திய தலைமை தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு என்ன தெரியுமா? எதிர்க்கட்சித் தலைவர் மதுரையிலிருந்து மூன்று காவல் துறை அதிகாரிகளைப் பெயர் குறிப்பிட்டு அவர்களை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று அறிக்கை விடுத்த அதே நாளில் மத்திய தேர்தல் ஆணையம் வெகு வேகமாகச் செயல்பட்டு, அன்று மாலையிலேயே தமிழக அரசுக்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பியது. என்ன அவசர செய்தி? தமிழகக் காவல் துறையைச் சேர்ந்த - மதுரையிலே திருமங்கலம் தொகுதியிலே பணியாற்றிக் கொண்டு வரும் மூன்று காவல் துறை அதிகாரிகளை உடனடியாக மாற்ற வேண்டும் என்பது தான் அந்தச் செய்தி. அத்தோடு செய்தி முடியவில்லை. அந்த மூன்று இடங்களிலே யார் யாரை நியமிக்கலாம் என்பது குறித்து ஒரு பட்டியலை தமிழக அரசு அனுப்ப வேண்டும் என்றும் - அந்தப் பட்டியலிலே தாங்கள் (மத்திய தேர்தல் ஆணையம்) குறிப்பிட்டுள்ள அதிகாரிகளின் பெயர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் - தேர்தல் ஆணையம் எந்த அளவிற்கு நடுநிலையோடு (?) செயல்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு ஒரு எடுத்துக்காட்டினையா கூற முடியும்? மத்திய தேர்தல் ஆணையத்திற்கு தமிழகத்திலே உள்ள காவல் துறை அதிகாரிகளைப் பற்றியும், அவர்களின் செயல்பாடுகள் பற்றியும் எப்படி தெரிந்து கொண்டு மூன்று அதிகாரிகளை அவர்களே குறிப்பிட்டு பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கடிதம் எழுதுகிறார்கள்? மத்திய தேர்தல் ஆணையத்திற்கு அங்கே நியமனம் செய்யப்பட வேண்டிய மூன்று அதிகாரிகளின் பெயர்களை இங்கிருந்து எழுதிக் கொடுத்தது யார்? அவர்களுக்கே வெளிச்சம்.

அப்படி மத்திய தேர்தல் ஆணையம் அவசர அவசரமாக மூன்று பெயர்களைக் குறிப்பிட்டு, அந்தப் பெயர்களை பட்டியலிலே சேர்த்து அனுப்பவேண்டுமென்று கோரிக்கை வைத்ததைப் பார்க்கும்போது - டி.ஐ.ஜி. பதவியில் ஒருவரை நியமிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்ட அதிகாரி ஐ.ஜி. யாக இருக்கிறார். ஒரு ஐ.ஜி.யை டி.ஐ.ஜி. யாக நியமிக்க இயலுமா? எனவே அதைப் பற்றி தேர்தல் ஆணையத்திற்கு விளக்கியதோடு டி.ஐ.ஜி. அதிகாரிகளின் பட்டியல் ஒன்றையும், மற்ற இரண்டு பதவிகளுக்கு சில அதிகாரிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு, மத்திய தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்த பெயர்களையும் இணைத்து, தமிழக அரசு 1-1-2009 அன்று காலையில் கடிதம் அனுப்புகிறது. அதனைப் பெற்ற தேர்தல் ஆணையம், அன்றையதினம் விடுமுறை என்றபோதிலும், அதே நாளில் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று ஏற்கெனவே அவர்கள் பரிந்துரை செய்த அதிகாரிகளையே அங்கே நியமிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, அந்த அதிகாரிகள் எல்லாம் உடனடியாக அங்கே பணியில் சேர்ந்திட வேண்டுமென்றும் அவசர ஆணை பிறப்பித்தது.

திருமங்கலம் இடைத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் மத்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையர் இங்கே தனிப்பட்ட வருகையாக சென்னைக்கு வந்தபோது, திருமங்கலம் இடைத் தேர்தலைப் பற்றி செய்தியாளர்களிடம் பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறினார். தமிழகத் தேர்தல் அதிகாரியைப் பற்றி தமிழகத்திலே உள்ள எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா என்ன விமர்சனம் செய்தார்? "அவர் திறமையான அதிகாரி என்றும், நல்லவர் என்றும்" விமர்சனம் செய்து ஏடுகளில் வெளிவர வில்லையா? அதனால்தான் தமிழக அரசை தமிழகத் தேர்தல் அதிகாரி விமர்சனம் செய்தாரா என்ற சந்தேகம் வருமா வராதா?

தற்போது 2.3.2009 அன்று மதியம் 3.30 மணி அளவில் தான் மத்திய தேர்தல் ஆணையர் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறும் தேதியை அறிவிக்கின்றார். அதற்குப் பிறகுதான் தேர்தல் கட்டுப்பாடுகள் எல்லாம் நடைமுறைக்கு வருகின்றன. ஆனால் 2ஆம் தேதிக்கு முன்பு பிப்ரவரி 28ஆம் தேதியோ, மார்ச் முதல் தேதியோ ஏன் 2ஆம் தேதி காலையிலோ தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட சில திட்டங்கள் ஏடுகளில் வெளியே வரலாமா கூடாதா? உதாரணமாக வன்னியர் பொது சொத்து

நல வாரியம் என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்கான அதிகாரி நியமனம் செய்யப்பட்டதற்கான அறிவிப்பு ஏடுகளுக்கு 2.3.2009 தரப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத் தலைமை தேர்தல் ஆணையம் சில பத்திரிகையாளர்களுடன் தொலைபேசியில் பேசி, அந்தச் செய்தியினை ஏடுகளிலே வெளியிடக் கூடாது என்று தடுத்திருக்கிறார் என்றால், அவருக்கு இதிலே ஏன் இப்படிப்பட்ட அக்கறை?

தேர்தல் ஆணையமும், தேர்தல் அதிகாரிகளும் செய்கின்ற செயல்கள் பற்றி யாரும் கேள்வி கேட்கக் கூடாது என்ற போதிலும் - இப்படியெல்லாம் செயல்கள் நடைபெறுகின்றன என்று மக்களுக்குத் தெரிவிக்கக் கூட கூடாதா என்ன?

அன்புள்ள,

மு.க.

5-3-2009

3154. தயக்கமின்றி வரவேற்கிறோம்!

உடன்பிறப்பே,

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி அ.தி.மு.க. மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாகவும், அந்தக் கட்சியின் தலைவி சென்னையிலே அவரே தலைமை வகிக்கப் போவதாகவும் ஓர் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இது அனைவரும் வரவேற்கக் கூடிய செய்தியாகும். எதற்காக வரவேற்க வேண்டுமென்றால் - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.கழக ஆட்சியிலே என்ன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டது, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதை தெரிந்து கொள்வது தேவையான ஒன்று தானே!

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலே 3.11.1995 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர்:- திரு. பரிதி இளம்வழுதி இலங்கை இனத்தவரிடையே ஏற்பட்டுள்ள சூழ்நிலையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக "இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற போர் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற அந்தப் பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்று ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இந்த அரசோ, இந்த அவையோ நேரடியாக விவாதித்து ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதை அனைத்து உறுப்பினர்களும் அறிவீர்கள். இதில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும், இந்திய அரசுதான் இலங்கை அரசோடு பேசி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். எனவே இதை விவாதப்

பொருளாக இங்கே விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கொடுத்த அந்த அறிவிப்பு என்னால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர்களுடைய உணர்வை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்கின்ற வகையில் அவர் கொடுத்துள்ள அந்த அறிவிப்பை மட்டும் இங்கே வாசிக்கலாம்.

திரு. இளம்வழுதி:- இந்தப் பேரவைக்கு இறுதி நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் இல்லை என்றாலுங்கூட, இந்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்ள இந்தப் பேரவைக்கு உரிமை இருக்கிறது.

பேரவைத் தலைவர்:- இந்திய அரசாங்கத்தின் கையில் இல்லாத பிரச்சினையில் போய் தலையிட முடியாது. இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினை என்றால் நாம் இந்திய அரசாங்கத்தை கேட்கலாம். இது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினைகூட அல்ல. இன்னொரு நாட்டினுடைய பிரச்சினை. ஆகவே இதை பேரவை விதி 56-ன் கீழ் ஒத்தி வைத்து விவாதப் பொருள் ஆக்கக் கூடாது. நீங்கள் கொடுத்த அறிக்கையை நானே படித்து விடுகிறேன் -

> "சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழர்களை அன்றாடம் கொன்று குவித்து இனப்படுகொலை நடத்தி வருகிறது. இதனால் தமிழ் நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும், எஞ்சியுள்ள தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்க"

என்று கேட்டிருக்கிறீர்கள். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் பதில் அளிப்பார்.

மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா:- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே விவாதிப்பதற்கு ஏதுமில்லை. அரசின் நிலையை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதுகுறித்து இலங்கைவாழ் தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புக் கொடுப்பது பற்றி இந்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதுகுறித்து தமிழக அரசும் இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளும்.

திரு. இளம்வழுதி:- இந்தப் பேரவையின் மூலம் இந்திய அரசை நிர்ப்பந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேரவைத் தலைவர்:- அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அதற்கு மேல் வேண்டாம்.

உடன்பிறப்பே, இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக அ.தி.மு.க. ஆட்சியிலே எடுக்கப்பட்ட நிலை இதுவாகத்தான் இருந்தது. ஆனால் 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் 7.12.2006 அன்றும், 23.4.2008 அன்றும், 12.11.2008 அன்றும், 23.01.2009 அன்றும் நான்கு முறை சட்டப் பேரவையிலே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே, இவ்வாறு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தம்பி பரிதி இளம்வழுதி ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு சென்றபோது, அவரை அங்கே விரிவாகப் பேசுவதற்குக் கூட அனுமதிக்காமல், அவருடைய தீர்மானத்தைப் பேரவைத் தலைவரே படித்து, முதலமைச்சர் இரண்டே வரிகளில் "இந்திய அரசுதான் ஏற்பாடு செய்யும், அதை மாநில அரசு வலியுறுத்தும்" என்பதோடு முடித்து விட்டார்கள். ஆனால் தற்போது 23.1.2009 அன்று இந்திய அரசுக்கு இறுதி வேண்டுகோள் என்ற தலைப்பில் தமிழக அரசின் சார்பாகவே நான் தீர்மானம் கொண்டுவந்து, அதற்கு அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டு மென்று கேட்டுக் கொண்டபோது - ஜெயலலிதா கட்சியின் சார்பில் பேசிய

ஓ. பன்னீர்செல்வம் என்ன பேசினார்?

"*** ***** **** உண்ணா நோன்பு போல பல போராட்டங்கள் நடத்தினீர்கள், மனித சங்கிலி நடத்தினீர்கள், பிரதமரைச் சென்று சந்தித்தீர்கள், இவ்வளவு நடத்தியதற்குப் பின்னாலும், யாரை வலியுறுத்தி நடத்தினீர் கள்? மத்திய அரசில் யார், யாரெல்லாம் பொறுப்பில் இருக்கின்றீர்கள்? அந்தப் பொறுப்பை தட்டிக் கழித்து விட்டு மத்திய அரசு பார்த்துக்

கொள்ளும், இந்தியப் பேரரசு பார்த்துக் கொள்ளும் என்று சொன்னால் அந்த மத்திய அரசில் அங்கமாக நீங்கள் ஏன் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?"

★★

அவர்களின் ஆட்சிக் காலத்திலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக்கூட அவையிலே எழுப்பி பேசுவதற்கு அனுமதி கொடுக்க மறுத்து, பேரவைத் தலைவரே அதைப் படித்து, முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா "அது இந்திய அரசின் பொறுப்பு, அவர்களை வலியுறுத்துவோம்" என்று மட்டுமே கூறி பிரச்சினையை முடித்து விட்டவர்கள்; - தற்போது "நீங்கள் எப்படி மத்திய அரசைக் காட்டி பிரச்சினையைத் தட்டிக் கழிக்கலாம், ஏன் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று நம்மைப் பார்த்து கேட்கிறார்கள்.

கேட்பதோடு மட்டுமல்ல, அந்தத் தீர்மானத்தையே நாங்கள் நடத்தும் நாடகம் என்று கூறிவிட்டு அவையிலிருந்து வெளி நடப்பே செய்தார்கள். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக "இந்திய அரசுக்கு இறுதி வேண்டுகோள்" என்று கழக அரசு கொண்டு வந்த தீர்மானத்தைக் கூட ஆதரிக்க மறுத்து வெளிநடப்பு செய்தவர்கள் தான் வரும் 10ஆம் தேதியன்று இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகிறார்கள் என்றால் அதனை வரவேற்கத்தானே வேண்டும்!

அது மாத்திரமல்ல; 17.1.2009 அன்று, எம்.ஜி.ஆரின் 92வது பிறந்த நாளையொட்டி, பத்திரிகையாளர்களுக்கு ஜெயலலிதா அளித்த பேட்டியின்போது, "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை, எந்தப் போரின் போதும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது போலத்தான் இலங்கையில் தற்போது நடக்கிறது" என்று இலங்கை ராணுவத்திற்கு ஆதரவாக கூறியவர் - தற்போது அந்த இலங்கை ராணுவத்தை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகிறார் என்றால் அது வரவேற்கத்தக்கது தானே?

"தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் அமைப்பை எதிர்க்கின்ற ஒரே தலைவர் நான் தான்" என்று ஜெயலலிதா 22.10.2008 தேதிய அறிக்கையிலே கூறிக்கொண்டார். பிரபாகரனின் தலைமையில் விடுதலைப் புலிகள் சிங்கள ராணுவத்துடன் நடத்தும் போருக்கு

இலங்கைத் தமிழர்களை கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்று குற்றம் சாட்டுகிறார் ஜெயலலிதா. அந்தப் பிரபாகர னோடு தானும் அமர்ந்துள்ள புகைப் படத்தை ஜெயலலிதாவின் தோழமைக் கட்சியிலே உள்ள வைகோ வெளியிட்டு அதிலேயே பெருமைப்பட்டுக் கொள்கிறார். அந்த வைகோவையும் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு, ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதுதானே?

2-10-2008 அன்று இலங்கைத் தமிழர்களுக்காக சென்னையில் தற்போது அ.தி.மு.க.வுடன் உறவு கொண்டுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியபோது, அதிலே கலந்து கொள்வதாக முதலில் தெரிவித்துவிட்டு, பின்னர் அதிலே கலந்து கொள்ளாமல் புறக்கணித்த ஜெயலலிதா;

14.10.2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை அரசாங்கமே கூட்டியபோது, அது ஒரு கண் துடைப்பு நாடகம், அந்தக் கூட்டத்தை கூட்டுவதற்கான எந்த தார்மீக உரிமையும் கருணாநிதிக்கு கிடையாது என்று கூறி அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்த ஜெயலலிதா;

24.10.2008 அன்று சென்னையில் பிரமாண்டமான மனித சங்கிலி ஒன்றை அனைத்துக் கட்சி சார்பில் நடத்திய போது அதனைப் புறக்கணித்த ஜெயலலிதா; 4.12.2008 அன்று தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் என் தலைமையில் டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து மனு கொடுத்தபோது, அதனைப் புறக்கணித்த ஜெயலலிதா;

25.11.2008 அன்று சட்டமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றபோது, அதிலே கலந்து கொள்ள மறுத்த ஜெயலலிதா; 2.12.2008 அன்று மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு தலைமையில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பிரதமரைச் சந்தித்த போது, அதனைப் புறக்கணித்த ஜெயலலிதா; இலங்கைப் பிரச்சினை மீண்டும் உரு வெடுத்த 6 மாதங்களுக்குப் பிறகு "நாங்கள் உண்ணா விரதம் இருக்கப் போகிறோம், ஜெயலலிதாவே இருக்கப் போகிறார்" என்றெல்லாம் அறிவித்திருப்பது உண்மையில் வரவேற்கத் தக்கதுதானே?

அதனால்தான் 7.2.2009 அன்று நான் எழுதிய "ஒன்று பட்டால் உண்டு வாழ்வே" என்ற தலைப்பிட்ட "உடன்பிறப்பு மடலில்"

"தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கிடையே ஆம்; நமக்குள்ளே போராட்டம் நடத்திக் கொண்டிராமல் - விரைவில் வர இருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும், இலங்கைப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை - இது, பாசம் - உறவு - உணர்வு - இவற்றோடு ஒன்றிக் கலந்தது எனும் உண்மை உணர்ந்து; கட்சி வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலித்து; இரண்டு பிரிவுகளாய் இருப்பினும் "கத்தரிக்கோல்" போல இருந்து காரியமாற்றிடக் கடமைப் பட்டவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

இன்றைய பிரதான எதிர்க் கட்சியான, அ.தி.மு.க.வின் சார்பில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது - கொண்டிருந்த இலங்கைத் தமிழர் பற்றிய கொள்கையை - அவர் ஏற்ற நடைமுறையை - இன்றைக்கும் அக்கட்சியின் உடன்பிறப்புகள், அம்மையார் ஜெயலலிதா தலைமையில் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டு; அவ்வாறே எதிர்பார்த்து -

இரு பிரிவாக நமது ஆதரவு அணிகள் இயங்குவது தவிர்க்க முடியாதது என்றாலும்; இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும் உயிர்களையும் பாதுகாப்பதில், ஒன்றாக இருப்போம் வாரீர் என்று அழைக்கிறேன்.

எல்லோரும் ஒன்றுபட்டால் இலங்கைத் தமிழினம் காக்கப்படும் என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!"

என்று எழுதினேன்.

இலங்கைப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தான் - அரசியல் கருத்து மாறுபாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும், இதிலே நமக்குள் சகோதர யுத்தம் வேண்டாம் என்று நானே முன்வந்து எழுதினேன்.

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது - இலங்கை அரசுடன் பேசுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொள்வோம் என்று

மட்டும் தான் பதில் அளித்தார்கள். இப்போது அதே ஜெயலலிதா 15.10.2008 அன்று விடுத்த அறிக்கையில் "இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம், இந்திய அரசிடம் இல்லை என்பதை, ஐந்து முறை முதலமைச்சரான கருணாநிதி புரிந்து கொள்ளாதது விந்தையாக உள்ளது. இலங்கை உள்நாட்டு விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டால் பின்னர் நம் நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அது இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும். அடுத்த நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளாது" என்று குறிப்பிட்டவர் - தற்போது உண்ணாவிரதம் இருப்பதாக குறிப்பிட்டுள்ள அறிக்கையில் "தமிழினத் தலைவர் என்று தன்னைத்தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதியும், அவர் தாங்கி நிற்கும் மத்திய அரசும் இந்த இனப் படுகொலையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன" என்று தெரிவித்தவர் என்பதையும் மறந்து விடாமல் - அவர்தான் தற்போது உண்ணாவிரதமிருக்க முன் வந்துள்ளார் என்பதையும் மனதிலே கொண்டு அதனை நாமும் தயக்கமின்றி வரவேற்கலாம்.

அன்புள்ள,

மு.க.

7-3-2009

3378. அந்தக் குறளை மறக்க முடியுமா?

உடன்பிறப்பே,

5-3-2009 தேதியிட்டு ஜெயலலிதா பெயரில் வெளி வந்த இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் "அ.தி.மு.க. கூட்டணிக்கு காங்கிரசை அழைக்கவில்லை" என்று ஜெயலலிதா தெரிவித்திருப்பதாக செய்திகள் வந்துள்ளன. அந்தச் செய்தியிலும் என்னை தேவையில்லாமல் வம்புக்கு இழுத்து, "கருணாநிதி, தனது அறிக்கையில், அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு நான் காங்கிரசுக்கு அழைப்பு விடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். அ.தி.மு.க. விற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள நீண்ட கால நட்பை கருத்தில் கொண்டு, காங்கிரஸ் கட்சி புதை மண்ணில் மாட்டிக் கொண்டு விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில், தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளி வர வேண்டும் என்று ஆலோசனை கூறினேனே தவிர, எங்கள் கூட்டணியில் வந்து சேர வேண்டும் என்று நான் அழைப்பு விடுக்கவில்லை என்பதை முதலில் கருணாநிதிக்கு தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு காங்கிரசுக்கு ஜெயலலிதா அழைப்பு விடுத்தார் என்று நான் எனது அறிக்கையிலே கூறியதாக ஜெயலலிதா தன் அறிக்கையிலே கூறியிருப்பது உண்மைதானா? 19.2.2009 அன்று சென்னையில் நடைபெற்ற திருமண விழாவிலே ஜெயலலிதா பேசிய பேச்சுக்கு "தினத்தந்தி" கொடுத்த தலைப்பு - "காங்கிரஸ் கட்சிக்கு ஜெயலலிதா அழைப்பு" என்பதாகும். "தினமணி" கொடுத்த தலைப்பு - "காங்கிரசுக்கு ஜெயலலிதா அழைப்பு, தி.மு.க. வேண்டாம், அ.தி.மு.க. அணிக்கு வாருங்கள்" என்பதாகும். அ.தி.மு.க. வின் அதிகாரபூர்வ ஏடான "நமது எம்.ஜி.ஆர்." "தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலக வேண்டும்" என்று தலைப்பு கொடுத்து அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. "Jayalalitha asks Congress to snap ties with D.M.K." என்று "இந்து" நாளிதழ் தலைப்பிட்டிருந்தது. "தினமலர்"

நாளேடு "அழைப்பு - அ.தி.மு.க. கூட்டணியில் சேர காங்கிரசுக்கு ஜெயலலிதா தூது" என்று தலைப்பிட்டு அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. "டெக்கான் கிரானிகல்" நாளிதழ் "Jaya woos Congress" என்று தலைப்பிட்டிருந்தது.

இந்தச் செய்திகளையெல்லாம் படித்த பிறகு தான், 21.2.2009 அன்று நான் எழுதிய "உடன்பிறப்பு மடலில்" இலங்கைப் பிரச்சினை, என் உடல் நிலை, வழக்கறிஞர்கள் பிரச்சினை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எழுதி விட்டு, கடைசியில் ஒரு பத்தியில், திருமண விழா ஒன்றில் ஜெயலலிதா பேசிய பேச்சு ஏடுகளில் வெளி வந்ததையொட்டி,

> "நேற்று வரையில் காங்கிரசோடு தொடர்பு இல்லை, உறவு இல்லை என்று கூறிக் கொண்டிருந்து விட்டு - கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஏமாற்றி விட்டு - நேற்றைய திருமண விழாவில் "நானும் காங்கிரசும் கூட்டுச் சேரப் போகிறோம்" என்று நாட்டை ஏமாற்றுகின்ற அரசியல் நாட்டியம் எனக்குத் தெரியாது.
>
> "வெளி நாட்டுக்காரி, இந்தியா விற்கு அரசியா?'' என்று கேட்டவர்கள் யார் என்று எனக்கும் தெரியும். நாட்டிற்கும் தெரியும்.
>
> சோனியா காந்தி என்ற அந்தச் சொக்கத் தங்கத்தை "பதி பக்தி இல்லாதவர்'' என்று சொன்னவர் யார் என்று எனக்கும் தெரியும். நாட்டிற்கும் தெரியும்.
>
> பதி பக்தியைப் பற்றி அவ்வாறு பேசியவர் - எம்.ஜி.ஆரைப் பற்றி ராஜிவ் காந்திக்கு கைப்பட்ட என்ன கடிதம் எழுதினார் என்பதும் எனக்குத் தெரியும். அது பத்திரிகைகளிலேயே வந்திருக்கிறது.
>
> இப்படிப்பட்டவரை காங்கிரஸ் கட்சி; கூட்டணி சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்!
>
> இவர் பிறந்த கர்நாடக மாநிலத்தில் பிறந்தவராம் - கடமை தவறாத நண்பர் - வீரப்ப மொய்லி - இன்று இவருக்கு அளித்த மறுப்பு - தமிழ் நாட்டு காங்கிரஸ் நண்பர்களே, எண்ணிப் பார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு!"

என்று எழுதியிருந்தேன்.

ஜெயலலிதா காங்கிரசுக்கு அழைப்பு விடுத்ததாக பத்திரிகைகள் எல்லாம் 20.2.2009 அன்று வெளியிட்ட செய்திக்கு 13 நாட்கள் கழித்து, காங்கிரசை அ.தி.மு.க. கூட்டணிக்கு அழைக்கவில்லை என்று ஜெயலலிதா மறுப்பு தெரிவித்திருக்கிறார் என்றால், தமிழ்நாட்டு மக்கள்தான் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை பத்திரிகைகளுமா ஜெயலலிதாவின் பேச்சை தவறாக வெளியிட்டு விட்டன? தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பத்திரிகைகளும் காங்கிரசுக்கு ஜெயலலிதா அழைப்பு விடுத்ததாக செய்தி வெளியிட்டு, அந்தச் செய்தி தவறாக இருந்தால் அந்தச் செய்திகள் வெளி வந்த மறுநாளே அல்லது அதற்கு அடுத்த நாளே ஜெயலலிதா ஏன் மறுப்பு தெரிவிக்கவில்லை?

எது எதற்கோ மறுப்பு தெரிவிக்கும் ஜெயலலிதா காங்கிரசுக்கு தான் அழைப்பு விடுக்கவில்லை என்று இத்தனை நாட்களும் மறுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம்? அ.தி.மு.க. வுடன் கூட்டணி வைப்பது குறித்து எந்தவொரு திட்டமும் இல்லை என்று காங்கிரஸ் மேலிடத்தின் சார்பில் அருமை நண்பர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் மறுத்த பிறகாவது ஜெயலலிதா தான் காங்கிரசுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கலாமே? அப்படியென்றால் நேற்று வரை காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு வருமென்று எதிர்பார்த்துக் காத்திருந்தாரா? தற்போது அவர்கள் வரவில்லை என்பது உறுதியானவுடன், தான் காங்கிரசை அழைக்கவில்லை என்று மறுக்கிறாரா?

இப்போது கூட காங்கிரசை கூட்டணிக்கு அழைக்கவில்லை என்று ஜெயலலிதா அறிக்கை விட்டிருப்பது தன்னுடன் கூட்டு சேருவதற்காக முதலிலே வந்து பேசிய இடது சாரி கட்சிகளை ஏமாற்றுவதற்காகத்தானா? காங்கிரசுக்கு எதிராக அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர ஜெயலலிதாவுடன் இடதுசாரி கட்சிகள் பேசிய பின்னரும் - அந்த இடதுசாரிகளுக்கு எதிரான காங்கிரஸ் கட்சிக்கு ஜெயலலிதா அழைப்பு விடுத்தது சரிதானா?

தனது பழைய நண்பன் என்பதற்காக காங்கிரசுக்கு ஆலோசனை தான் கூறினேனே தவிர, அவர்களை கூட்டணி சேர்வதற்கு அழைக்கவில்லை என்று இப்போது ஜெயலலிதா கூறியிருப்பதாவது நம்பத் தகுந்ததுதானா? ஆடு நனைகிறதே

42249
கதை-811
கதை.42

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்

என்று ஓநாய் கவலைப்பட்டது என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதைப் போல தங்கள் அணியிலே இல்லாத காங்கிரஸ் கட்சியின் நலனைக் கருதி ஆலோசனை சொன்னேன் என்று கூறுவது ஏதாவது பொருத்தமாக இருக்கிறதா? எதிர் அணியிலே இருப்பவர் வெற்றி பெற நான் ஆலோசனை கூறினேன் என்றால், அது தற்போது கூட்டணியிலே உள்ள நண்பர்களுக்கு துரோகம் விளைவிப்பது ஆகாதா?

அ.தி.மு.க. கூட்டணியில் சேர காங்கிரசுக்கு அழைப்பு விடுக்கவில்லையாம், ஆனால் தி.மு.க. அணியிலிருந்து வெளியே வர வேண்டும் என்று ஆலோசனை கூறினாராம் ஜெயலலிதா. தி.மு.க. அணியிலிருந்தும் வெளியே வர வேண்டும், தங்கள் அணிக்கும் அழைப்பு விடுக்கவில்லை என்றால், காங்கிரசின் கதி என்ன? அவர்கள் தனியாக நிற்க வேண்டு மென்பது ஜெயலலிதாவின் எண்ணமா? அது பழைய நண்பர்கள் என்பதற்காக உண்மையிலேயே அக்கறையோடு சொல்லப்பட்ட ஆலோசனையா?

ஜெயலலிதாவின் 19ஆம் தேதிய பேச்சுக்கும் - இன்றைய அறிக்கைக்கும் உள்ள உண்மையான பொருளைப் புரிந்து கொண்டு - "தினமலர்" நாளேடு இன்று ஜெயலலிதாவின் அறிக்கைக்கு வெளியிட்டுள்ள தலைப்பே, "காங்கிரசை அழைக்கவில்லை, ஜெயலலிதா திடீர் பல்டி" என்பதாகும். தினமலர் நாளேடு என்ன தி.மு.க. நாளேடா? எங்களையும் விமர்சிக்கும் நாளேடுதான். அந்த நாளேடே ஜெயலலிதாவின் பல்டி என்று தெரிவித்திருக்கிறது என்றால் - காங்கிரசுக்கு எதிராக அ.தி.மு.க., இருப்பதால் தான், தி.மு.க. அணியில் இருந்து விலகி அ.தி.மு.க. பக்கம் நாங்கள் செல்கிறோம் என்று வாதம் செய்யும் எனதருமை கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோழர்கள்தான் இந்த உண்மைகளை யெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். ஜெயலலிதாவின் வார்த்தைகளை நம்பி காங்கிரஸ் கட்சியின் சார்பில் அ.தி.மு.க. அணிக்கு வரத் தயார் என்று ஒப்புக் கொண்டிருந்தால் - ஒப்புக்கொள்ளவில்லை, ஒப்புக் கொள்ளவும் மாட்டார்கள் - ஒரு பேச்சுக்காக சொல்கிறேன், அப்படி அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தால், ஜெயலலிதா கம்யூனிஸ்ட் கட்சிகளை என்ன செய்திருப்பார் என்று சிந்தனை செய்யக் கூடிய அந்தக் கட்சியின் நண்பர்கள் சிந்திக்க வேண்டாமா? கருவேப்பிலை மாதிரி ஆக்கி விட மாட்டாரா?

ஜெயலலிதா தனது அறிக்கையில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தி.மு.க. செயல்பட்ட சில நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துக் கூறி - எங்கள் அணியிலே "சிண்டு" முடிய முயற்சி செய்திருக்கிறார். பாவம், இந்திரா காந்தி அம்மையார் கடற்கரை கூட்டத்திலே பேசும்போது, "கருணாநிதி எங்கள் அணிக்கு எதிராக இருந்தாலும், ஆதரவாக இருந்தாலும் இரண்டு நிலையிலும் உறுதியாக இருப்பார்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். எனவே தி.மு.க. தோழமை அணியிலே இருந்தால் உள்ளன்போடு செயல்படுவதைப் போலவே, எதிர் அணியிலே இருந்த காலத்திலும் உறுதியாக இருந்துள்ளதே தவிர, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி இரண்டு தரப்பினரையும் ஏமாற்றும் செயலிலே என்றைக்கும் ஈடுபட்டது கிடையாது.

"அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பது குறித்து காங்கிரஸ் கட்சி மேலிடம் பரிசீலிக்க வேண்டும் என காங்கிரஸ் மாவட்டத் தலைவர்களும், மாநில நிர்வாகிகளும் திரு. குலாம் நபி ஆசாத்திடம் வற்புறுத்தினர் என்ற உண்மைச் செய்தியை அனைத்து நாளிதழ்களும் வெளியிட்டுள்ளன" என்று ஜெயலலிதா அறிக்கையிலே எழுதியிருக்கிறார். அனைத்து நாளிதழ்களும் என்று அவர் எழுதியிருப்பதே முழுப் பொய். "தினமணி" நாளிதழ் ஒன்று மட்டும்தான், அதுவும்கூட "கூறப்படுகிறது" என்ற வகையிலேதான் அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. அவ்வாறு எந்தக் காங்கிரஸ் தலைவர்களும் தன்னிடம் பேசியதாக குலாம் நபி ஆசாத் அவர்களே செய்தியாளர்களிடம் கூறவில்லை என்பதிலிருந்தே, தினமணியில் வந்த செய்திக்கே காரணம் ஜெயலலிதா தரப்பினர் தான் என்று நான் எழுதியது உண்மை என்றாகிறது.

மேலும் ஜெயலலிதா தனது இரண்டாவது அறிக்கையில் "நாட்டைச் சுரண்டி எடுப்பதில் தி.மு.க., காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுக்கிடையே ஒத்த கருத்து இருக்கிறது" என்று தி.மு.க.வையும் காங்கிரசையும் சாடியிருக்கிறார் என்றால், அந்தக் காங்கிரஸ் கட்சியின் மீது ஏன் திருமண விழாவில் திடீர் அக்கறை காட்டினார்?

காங்கிரஸ் கட்சியிடம் தனக்குள்ள நீண்ட கால நட்பைக் கருதி ஆலோசனை கூறினேன் என்று ஜெயலலிதா இப்போது கூறுகிறார். காங்கிரஸ் கட்சிக்கும் ஜெயலலிதாவிற்கும் உள்ள நீண்ட கால நட்பைப் பற்றி நமக்குத் தெரியாதா?

1999ஆம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்த போது அ.தி.மு.க.வும் காங்கிரசும் தோழமை கொண்டு போட்டியிட்ட போதே - விழுப்புரம் பொதுக் கூட்டத்தில் ஜெயலலிதாவும், சோனியா காந்தியும் இணைந்து 4 மணி அளவில் பேசுவார்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அந்த 4 மணி கூட்டத்திற்கு சென்னையிலிருந்து ஜெயலலிதா மாலை 3.20 மணிக்கு கிளம்பினார். சோனியா இரண்டு மணி நேரம் மேடையிலே காத்திருந்தார். ஜெயலலிதாவிற்காக போடப்பட்டிருந்த நாற்காலியும் இரண்டு மணி நேரம் காலியாக கிடந்தது. அந்த அளவிற்கு அவமானப் படுத்தியதுகூட காங்கிரஸ் கட்சியிடம் உள்ள நீண்ட கால நட்பின் அடிப்படையில்தானா என்பதை ஜெயலலிதா தான் கூற வேண்டும்.

- ❖ "ராஜிவ் காந்தி மரணத்தால் ஏற்பட்ட அனுதாபத்தில் நாங்கள் வெற்றி பெற வில்லை, அவர் மரணமடையா திருந்தாலும் நாங்கள் வெற்றியை பெற்றிருக்க முடியும்."
- ❖ "சோனியாவின் உறவினர்கள் இத்தாலி நாட்டுக்காரர்கள், பேராசை பிடித்தவர்கள். சோனியா காந்தி பிரதமரின் மனைவியாக இருந்து இந்த நாட்டை வேட்டையாடியிருக்கிறார். சூறையாடியிருக்கிறார். எவ்வளவோ கொள்ளை லாபம் அடித்திருக்கிறார்."
- ❖ "சோனியா காந்தி என்ற அரசியல் வியாபாரியின் கைகளில் இந்தியா என்ற மாபெரும் நாடு சிக்கி விடக் கூடாது."
- ❖ "செயல்படாத பிரதமர் நரசிம்ம ராவ். அவருக்கும் எனக்கும் தலைமுறை இடைவெளி."
- ❖ "ராஜீவ் காந்தி கொலையில் மூப்பனாருக்கும் பங்கு உண்டு."
- ❖ "நிதியமைச்சர் ப. சிதம்பரம் பேசுவது எல்லாம் முழுமையான நான்சென்ஸ்."

இப்படி காங்கிரஸ் தலைவர்களைப் பற்றி ஜெயலலிதா சிந்திய புண்மொழிகள்தான் பொன்மொழிகளா?

ஜெயலலிதா தன் விளக்க அறிக்கையை ஒரு திருக்குறளைக் குறிப்பிட்டு முடித்திருக் கிறார். ஒருவேளை ஜெயலலிதாவிற்காக அறிக்கை எழுதியவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு, அந்தத் திருக்குறளை அதிலே இணைத்திருக்கிறார்களோ என்னவோ!

"நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

இந்தத் திருக்குறள் 1995ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது, கொடைக்கானல் "ப்ளசண்ட் ஸ்டே" ஓட்டலுக்கு அரசு சார்பில் அனுமதி வழங்கப்பட்டதை யொட்டிய வழக்கில் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி - திரு. சீனிவாசன் அவர்கள் ஏப்ரல் 10ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்பின் முடிவில்,

"சட்டத்தின் நடைமுறையிலிருந்து சட்டத்தை உடைப்பதற்கு (அ.தி.மு.க.) அரசு விதி விலக்கு அளித்துள்ளது. இது கட்டிலின் அளவுக்குத் தக்கபடி மனிதனின் உடல் அளவை வெட்டுவது போன்றதாகும். இந்த வழக்கில் வள்ளுவர் சொன்ன அறிவு செறிந்த கருத்தை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

"நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

★★

உடன்பிறப்பே, இவ்வாறு அ.தி.மு.க. ஆட்சிக்காகவும், குறிப்பாக ஜெயலலிதாவுக்காகவும் உயர் நீதி மன்ற நீதிபதி அளித்த தீர்ப்பிலே உள்ள இந்தத் திருக்குறளை மறக்க முடியுமா?

அன்புள்ள,
மு.க.
8-3-2009

3379. நலிவும் நானும் - நாட்குறிப்பு

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக் கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்)

★★

உடன்பிறப்பே,

கடந்த நாற்பது நாட்களுக்கு மேலாக மருத்துவமனையிலும், வீட்டிலும் உடல் நலம் பாதிக்கப்பட்டு, அபாயகரமான அறுவை சிகிச்சை செய்து கொண்டு, சிகிச்சைக்கு இடையிலேயும் தவறாமல் பொதுப் பிரச்சினை குறித்தும், அரசுப் பிரச்சினை குறித்தும் அவ்வப்போது உடன்பிறப்பு மடல்கள் மூலமும், அறிக்கைகள் மூலமும் உன்னோடு தொடர்பு கொண்டு வருகிறேன் என்றபோதிலும், என்னுடைய உடல் நிலை என்ன, எனக்கு என்ன ஏற்பட்டது, என்ன செய்தார்கள், அதன் விளைவுகள் என்ன என்பதைப் பற்றி நான் உனக்கு எதுவுமே தெரிவிக்கவில்லை.

நான் செய்து கொண்ட சிகிச்சைகள் பற்றி என்னைச் சந்தித்த - பார்க்க வந்த முக்கியஸ்தர்களுக்கு எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் விளக்கினார்கள். ஆனால் உடன்பிறப்புகளாகிய உங்களுக்கு நான் தெரிவிக்கவில்லையோ என்ற குறைபாடு எனக்கு இருந்தது. அதன் காரணமாக தற்போது சற்று உடல் நிலை தேறி வருகின்ற நிலையில் எனக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி தேதி வாரியாக உனக்கு விளக்கிட விரும்புகிறேன்.

26-1-2009

கடந்த ஓரிரு மாதங்களாக என்னுடைய முதுகுப் புறத்தில் தாங்க முடியாத வலியிருந்த போதிலும், அதனைப் பொறுத்துக் கொண்டு - அதைப் பெரிதுபடுத்தினால் மருத்துவர்கள் படுக்க வைத்து விடுவார்கள் என்று எண்ணிக் கொண்டே வெளியே யாரிடத்திலும் சொல்லாமல் - குடும்ப டாக்டர் கோபால்

அவர்களிடம் கூறி - அவர் எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் மயில்வாகனன் அவர்களை வீட்டிற்கு வரவழைத்து - வலிக்கின்ற இடத்தில் மின் ஒத்தடம் கொடுக்கச் செய்தும் - தற்காலிக வலி நீக்கத்திற்கான மாத்திரைகளைப் போட்டுக் கொண்டும் காலம் கடத்திப் பார்த்தேன்.

இதற்கிடையே தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்ததை யொட்டி இரண்டு ஆண்டுகளாக தம்பி துரைமுருகனும், தம்பி ஜெகத்ரட்சகனும் இணைந்து, ஒரு நாள் முழுவதும் வள்ளுவர் கோட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, ஆயிரக் கணக்கான மக்களைக் கூட்டி கவியரங்கம், பட்டி மன்றம், வாழ்த்தரங்கம் போன்றவைகளை நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருப்பதால் இந்த ஆண்டும் அதற்கான நாளைக் கேட்டார்கள். நான் கூட அவர்களிடம் அப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருப்பதால் பிறிதொரு நாளில் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிப் பார்த்தும் கேட்காமல், சட்டமன்றம் இல்லாத ஒரு நாளில் வைத்துக் கொள்வதாகக் கூறி ஒப்புதல் பெற்று விட்டார்கள்.

தமிழின் பெயரால் எடுக்கப்படும் அந்த விழாவின் பல நிகழ்ச்சிகளையும் நான் கண்டு மகிழ்வதில் அவர்களுக்கு "ஆத்ம திருப்தி." அதனால் அந்த விழா நிகழ்ச்சியில் ஒரு நாள் முழுவதும் அங்கேயிருந்து - நம்மை மதித்து மற்றவர்கள் நம்முடைய உரையினைக் கேட்பதைப் போல - அவர்களைப் பெருமைப்படுத்த நாமும் அமர்ந்து அவர்களுடைய உரைகளைக் கேட்பதென்பது அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியது என்பதை உணர்ந்த நான் - வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற அந்த விழா நிகழ்ச்சியில் பத்து மணி நேரம் என்னுடைய முதுகு வலியை மறந்து விட்டு அமர்ந்திருந்தேன். தமிழின் இனிமையில் முதுகு வலி தெரியவில்லை, ஆனால் விழா முடிந்து வீட்டிற்குத் திரும்பிய பிறகு தாங்கொணா வலி. நான் துடிதுடிப்பதைப் பார்க்க முடியாமல் வீட்டார் ஏன் அவ்வளவு மணி நேரம் விழா நிகழ்ச்சியில் உட்கார்ந்திருந்தீர்கள் என்று கடுமையாகக் கோபித்துக் கொண்டார்கள்.

25-1-2009

அன்று நள்ளிரவு நேரம் ஆக ஆக, வலி குறைவதற்கான அடையாளம் தெரியவில்லை. குடும்ப மருத்துவர் கோபாலும் என்ன செய்வதென்று தெரியாமல் டாக்டர் மயில்வாகனன்

அவர்களின் யோசனையையும் பெற்று, ராமச்சந்திரா மருத்துவமனையின் எலும்புச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.எஸ். கே. மார்த்தாண்டம் அவர்களை வீட்டிற்கு வரவழைத்தார். டாக்டர் மார்த்தாண்டம் அவர்கள் என்னை வந்து பார்த்து விட்டு, நான் படும் வேதனையைக் கண்டு உடனடியாக ராமச்சந்திரா மருத்துவமனையில் உள் நோயாளியாகச் சேர்ந்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தார். அப்போது இரவு மணி 1. எனவே உடனடியாகப் புறப்பட்டு, ராமச்சந்திரா மருத்துவமனைக்கு இரவு 2 மணிக்கு சென்றடைந்தோம்.

இரவு 2 மணி அளவில் மருத்துவமனையைச் சென்றடைந்த நான் - டாக்டர் தணிகாசலம் அவர்களாலும், தம்பி வெங்கடாசலத்தாலும் வரவேற்கப்பட்டேன். டாக்டர் தணிகாசலம் அவர்களை கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். அவர் சென்னை பொது மருத்துவமனையிலே பணியாற்றிக் கொண்டிருந்தபோதே, பதவி உயர்வு குறித்து அவருக்கு தீங்கிழைக்கப் பட்டதாக என்னிடம் முறையீடு செய்தபோது, அதனையேற்று உடனடியாக நியாயம் வழங்கியதன் பேரில் என்னிடம் அவருக்கு தனி மரியாதை உண்டு. அவர் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு ராமச்சந்திரா மருத்துவமனையில் பணிபுரிந்த போதிலும் அடிக்கடி என்னைச் சந்திக்கக் கூடியவர். அந்த முறையில் நான் அங்கே உள் நோயாளியாக சேருவதற்காக வருகிறேன் என்ற செய்தி சென்றதுதான் தாமதம், வாசலிலேயே வந்து காத்திருந்தார்.

மருத்துவமனைக்குச் சென்றதும் நேராக அறைக்கு அழைத்துச் செல்லப்படாமல் - காரிலிருந்து இறங்கிய அளவிலேயே எக்ஸ்ரே எடுப்பதற்காகவும் - எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுப்பதற்காகவும் அழைத்துச் செல்லப்பட்டேன். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுப்பதைப் பற்றி அனுபவப் பூர்வமாக உணர்ந்தவர்கள் நன்றாக அறிவார்கள். கூண்டு போன்ற ஒரு இயந்திரத்திற்குள் முழு உடம்பையும் தள்ளி, அங்கே கை கால்களையெல்லாம் அசைக்காமல் படுக்க வைத்து உடலின் பல்வேறு பாகங்களின் செயல்பாடுகள் குறித்து இயந்திரத்தின் மூலம் சோதனை செய்வார்கள். அந்த இயந்திரத்தின் சத்தமே மிகவும் பயமுறுத்துவதாக இருக்கும். யாரும் விரும்பி அந்தச் சோதனைக்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அன்றையதினம் எம்.ஆர்.ஐ. சோதனை கூட எனக்குப் பெரிதாக அல்ல. தள்ளிக் கொண்டு போகும் நாற்காலியிலே

என்னை அமர வைத்து அழைத்துச் சென்றவர்கள் - எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுப்பதற்காக படுக்க வைக்க முயன்ற போதே வலி தாங்க முடியாமல் "ஓ" வென அலறி விட்டேன். "எக்ஸ்ரே எல்.எஸ். ஸ்பைன்" மற்றும் "எம்.ஆர்.ஐ. ஆப் எல்.எஸ். ஸ்பைன்" எடுக்கப்பட்டதில் - முதுகுத் தண்டில் எல்.2 மற்றும் எல். 3 இடையே உள்ள ஜவ்வு (டிஸ்க்) ஒரு கணு விலகி, நரம்புப் பகுதியை அழுத்திக் கொண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எழுதுவதற்காக நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கின்ற காரணத்தாலும் மற்றும் வயதான காரணத்தால் முதுகு தண்டு வடத்திலும் தேய்மானம் ஏற்பட்டிருப்பது நன்கு தெரிய வந்தது. (X Ray L-S Spine and M.R.I. of L.S. Spine was done which revealed Disc Prolapse at L2-L3, Spinal Canal Stenosis and degenerative Spondylosis). இந்தச் சோதனைகள் முடிந்து டி.7 வார்டில் இருந்த என் அறைக்கு விடியற்காலை 4.30 மணி அளவில் தான் அழைத்துச் செல்லப்பட்டு படுக்க வைக்கப்பட்டேன். வலி கொஞ்சம் கூட குறையாத அளவிற்கு என்னை துடிக்க வைத்துக் கொண்டே இருந்தது. எந்தப் பக்கமும் புரள முடியவில்லை. மருத்துவர்கள் வலி நிவாரணத்திற்கான மாத்திரைகளை அளித்தார்கள். அந்த மாத்திரைகள் ஓரளவிற்குத்தான் என் வலியைக் குறைத்தன.

4.30 மணி அளவிலேயே மருத்துவ மனையில் இருந்தபோதே - உதவியாளரை அழைத்து காலையில் குடியரசு நாளையொட்டி - ஆளுநருடன் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சிக்குச் செல்ல முடியாது. எனவே பேராசிரியரை தொடர்பு கொண்டு, அந்த நிகழ்ச்சிக்கு அவரை அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்வதோடு, அந்தத் தகவலை ஆளுநருக்கும், தலைமைச் செயலாளருக்கும் தெரிவித்து விடு என்று கூறினேன்.

காலை 7 மணி அளவில் டாக்டர் தணிகாசலம் அவர்கள் என் உடம்பின் பொதுவான நிலைமைகளையெல்லாம் பரிசோதித்தார். இரத்த சோதனைகள் செய்ததில் புரதச் சத்து குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நான் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டது அதற்குள் பத்திரிகையாளர்கள் வாயிலாக வெளி உலகத்திற்குத் தெரிந்து தொலைபேசிகள் வாயிலாகவும், பல பேர் நேரிலும் மருத்துவ மனைக்கு வரத் தொடங்கி விட்டனர்.

தமிழக அரசின் சார்பாக மருத்துவ மனையிலே நான் அனுமதிக்கப்பட்ட செய்தியினை தெரிவித்தும் - ஒப்புக் கொண்ட

நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு சில நாட்களுக்கு தள்ளி வைக்கப்படும் என்று அறிவித்தும் ஒரு செய்திக் குறிப்பினைக் கொடுக்கச் செய்தேன்.

27-1-2009

மருத்துவமனையிலே எனது இரண்டாவது நாள் வாழ்க்கை தொடங்கியது. வலியைக் குறைப்பதற்காக "பிசியோதெரபி" (டென்ஸ்) சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து அன்றிலிருந்து நாள் ஒன்றுக்கு இரண்டு முறை கொடுத்தார்கள். அன்று காலையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டித் தலைவருமான திருமதி சோனியா காந்தி அவர்கள் - மாநிலங்களவை உறுப்பினர், என் மகள் கனிமொழியை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, என் உடல் நலம் குறித்து கேட்டறிந்ததோடு, நான் விரைவில் நலம் பெற்று பணி தொடர்ந்திட தன்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து டெல்லிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் நான் சென்று பிரதமரைச் சந்தித்தபோது, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க - இலங்கைக்குச் செல்வதாக உறுதி அளித்திருந்த மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் 27ஆம் தேதி இலங்கை செல்வதற்கு முன்பு மருத்துவமனையிலே இருந்த என்னிடம் தொடர்பு கொண்டு என் உடல் நலம் விசாரித்தார். நான் உடல் நலம் குறித்து அவரிடம் தெரிவிப்பதற்கு முன்பாக, அவர் இலங்கைச் செல்வதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். விரைவில் உடல் நலம் பெற வேண்டுமென்ற அவருடைய வாழ்த்தினை தெரிவித்தார். பிரணாப் முகர்ஜி என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடல் நலம் விசாரித்ததையும், இலங்கைக்குப் புறப்பட்டு செல்வதாக கூறியதையும் பேரவையில் அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் அறிவித்தார்.

28-1-2009

அன்றையதினம் என்னால் வலியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மருத்துவர்கள் உடனடியாக விரைந்து வந்து வலியைக் குறைப்பதற்காக ஊசி போடலாம் என்று முடிவு செய்து ஊசி போட்டார்கள். அன்று மாலையில் பிரபல எலும்பு சிகிச்சை

நிபுணரும் என்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவருமான டாக்டர் மோகன்தாஸ் அவர்கள் ராமச்சந்திரா மருத்துவமனைக்கு வந்து என்னைப் பார்த்தார். அங்கிருந்த மருத்துவர்களோடும் கலந்துரையாடினார். அளிக்கப்பட்டு வந்த சிகிச்சை முறைகளை தொடருமாறும் விரைவில் உடல் நலம் பெறும் என்றும் கூறிவிட்டுச் சென்றார்.

29-1-2009

விடியற்காலையிலேயே வலி என்னால் தாங்க முடியவில்லை. மருத்துவர்கள் உடனடியாக அழைக்கப்பட்டு அன்று காலையிலும் மாலையிலும் வலியைக் குறைப்பதற்கான ஊசிகள் போடப்பட்டன.

30-1-2009

எனது கல்லீரல் செயல்பாடு எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றி ஒரு சோதனை செய்யப்பட்டது. அதன் முடிவுகளில், கல்லீரல் முறையாகவும் நன்றாகவும் செயல்படுவதாகவும் அங்கே எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

கடுமையான முதுகு வலி, விலாப்புற வலிகளால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையிலே நான் இருந்த நிலையிலே கூட - என்னை இயங்க வைக்க வேண்டுமென்ற அக்கறையோடு - எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா பல்வேறு கேள்விகளைக் கேட்டு - என்னை மிகவும் கடுமையாகத் தாக்கி - தன் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டும் என்று அறிக்கை விட்டிருந்தார். என் தாங்க முடியாத வலியைக் குறைப்பதற்கு - மருத்துவர்களின் மருந்துகளை விட சக்தி வாய்ந்தது எழுத்துதான் என்பதால் - ஜெயலலிதாவின் கேள்விகளுக்கு பதில் கூறி - மருத்துவமனையில் படுத்துக் கொண்டே எழுதினேன். முடியாத நிலையில் பதில்களை உதவியாளர் மூலமாக "டிக்டேட்" செய்தேன்.

இன்று என் மகன் மு.க. அழகிரியின் 58வது பிறந்த நாள் என்ற வகையில் காலையிலேயே என்னை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு என் வாழ்த்துகளைப் பெற்றார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைக்கு செல்வதாக என்னிடம் கூறி விட்டுச் சென்றதைத் தொடர்ந்து 30ஆம் தேதியன்று எனக்கு ஒரு கடிதமும் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில்

"தாங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில மருத்துவச் சோதனைகளும் சிகிச்சைகளும் பெற்று வருவதை அறிந்து நான் மிகவும் வருந்துகிறேன். நீங்கள் விரைவில் முழுமையாக குணம் அடைவீர்கள் என்றும் நம்புகிறேன்.

கடந்த ஜனவரி 27 அன்று கொழும்பில் இலங்கை அதிபர் ராஜ பக்சேயுடன் எனது பேச்சு வார்த்தை குறித்து நான் முன்னர் தங்களுக்குக் கடிதம் எழுதினேன். நேற்று மாலை, அதிபர் ராஜபக்சே, மோதல் பகுதியிலிருந்து தமிழர்கள் பாதுகாப்பையும், பத்திரத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சுதந்திரமாக வெளியேற 48 மணி நேரம் அவகாசம் அளித்து அழைப்பு விடுத்துள்ளார். மோதல் பகுதியில் சிக்கிக் கொண்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வதை அனுமதிக்கத் தேவையான உத்தரவுகளை இலங்கை அரசு பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நான் எழுப்பிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்று என்பதையும், அதன்படி பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற வகை செய்ய வேண்டும் என்று இந்திய அரசு குரல் எழுப்பியது என்பதையும் தாங்கள் அறிவீர்கள். அதிபர் ராஜபக்சே மற்றும் நமது வெளி உறவுத் துறை செயலாளர் ஆகியோரது அறிக்கைகள் தங்கள் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் விரைவில் அமைதி திரும்புவதற்காகவும், அங்கு நல்ல அரசியல் தீர்வு ஏற்படுவதற்கும் இந்திய அரசு தொடர்ந்து பாடுபடும். போரினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி பொது மக்கள் நலனுக்காகவும், அவர்களுடைய நிலை மேம்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும்."

என்று எழுதியிருந்தார். மருத்துவமனையில் இருந்தவாறே அந்தக் கடிதத்தை தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி பேரவையில் அவை முன்னவர் பேராசிரியரைக் கொண்டு அறிவிக்கச் செய்தேன்.

இந்த நாட்குறிப்பை தொடர்ந்து நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-3-2009

3380. நலிவும் நானும் - நாட்குறிப்பு (2)

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்)

★★

உடன்பிறப்பே,

31-1-2009

தொடர்ந்து நான்கைந்து நாட்களாக படுத்தே இருந்த காரணத்தினால் இருமல் தொந்தரவு வேறு அதிகமாக இருந்தது. அதனால் அதற்குரிய மருத்துவரை அழைத்துக் காட்டினார்கள். இருமலுக்கான "ஸ்ரப்" அருந்தினால் நல்லதென கூறியதன் பேரில் அதனையும் அருந்தினேன்.

நான்கைந்து நாட்களாக வலி குறையாததாலும் - அவ்வப்போது திடீர் திடீரென வலி அதிகமாகி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமையாலும் - மருத்துவர்கள் ஆய்வு செய்து - என்னுடைய முதுகுத் தண்டிலேயே வலிக் குறைப்புக்கான மருந்தினை ஊசியின் மூலம் போட முடிவு செய்து - அதுகுறித்து என் வீட்டாரோடும், உறவினரோடும் கலந்து கொண்டு - 4.2.2009 அன்று போடலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. ஆனால் 4-ந்தேதி அந்த ஊசியைப் போடுவதென்றால் 1 ஆம் தேதியிலிருந்தே சில மருந்துகளை தவிர்க்க வேண்டுமென்று மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.

என்னுடைய உடல் வலியையும் மீறி - உள்ளத்தை வலிக்கச் செய்கின்ற அளவிற்கு சென்னையில் தூத்துக்குடியைச் சேர்ந்த தமிழ் இளைஞர், முத்துக்குமார் என்பவர் இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தீக்குளித்து மாண்டுவிட்டார் என்ற செய்தி மருத்துவமனையிலே உள்ள என்னை அடைந்து மனதை

பெரிதும் பாதித்தது. கழகப் பொதுச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, அத்தகைய தற்கொலைகளை ஊக்கப்படுத்தக் கூடாது என்ற வகையில் அறிக்கை ஒன்றை வெளியிடச் செய்தேன். பொருளாளர் தம்பி ஸ்டாலினை தொடர்பு கொண்டு, பேரவையில் அவர் உரையாற்றும்போது - தீக்குளித்து மாண்ட முத்துக்குமாரின் குடும்பத்திற்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கச் செய்தேன். ஆனால் அவரது மறைவுக்கு கழகத்தின் சார்பில் இரங்கல் செலுத்தச் சென்ற வடசென்னை மாவட்டக் கழகச் செயலாளர் மீது அரசியல் கண்ணோட்டத்தோடு அ.தி.மு.க., ம.தி.மு.க.வினர் கற்களை வீசி தாக்க முயன்றதாகவும், அரசின் சார்பில் அறிவிக்கப் பட்ட நிதியினைக்கூட வாங்க மறுத்துவிட்ட தாகவும் செய்தி வந்து, ஒரு இளைஞரின் தியாகச் செயலைக்கூட அரசியல் ஆக்குகிறார்களே என்றெண்ணி வேதனை யடைந்தேன்.

1-2-2009

ஜனவரி சென்று பிப்ரவரியும் வந்தது. ஆனால் வந்த வலி மட்டும் சென்றபாடில்லை. இரவு 9 மணியளவில் திடீரென உடல் சோர்வும், வியர்வையும் அதிகரித்தது. இதயத்தில் ஏதாவது பிரச்சினையோ என்று மருத்துவர்களின் யோசனையின் பேரில் ஈ.சி.ஜி. எடுக்கப்பட்டு, டாக்டர் தணிகாசலம் அதன் முடிவுகளைப் பார்த்து விட்டு அதிலே எந்தவிதமான மாறுதலோ, பயப்படுவதற்கான நிலையோ இல்லை என்று கூறினார்.

3ஆம் தேதியன்று அண்ணா அவர்களின் நினைவு நாள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த 1969ஆம் ஆண்டிலிருந்து ஒரு ஆண்டு கூட நான் தவறாமல் அவரது நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தி வந்தவன் என்ற முறையில் - இந்த ஆண்டு எப்படியும் அங்கே சென்று வந்து விட வேண்டுமென்ற விழைவினைத் தெரிவித்தேன். பொதுச் செயலாளர் பேராசிரியரும், கழக முன்னோடிகளும் உடல் நலிவு இந்த நிலையில் இருக்கும்போது நான் வர வேண்டாமென்றும், என் சார்பில் மற்றவர்கள் எல்லாம் சென்று வருவதாகவும் கூறினார்கள். இருந்தாலும் என் மனம் கேட்கவில்லை. மருத்துவர்களை யெல்லாம் அழைத்து எப்படியாவது நான் அண்ணா நினைவிடத்திற்குச் சென்று வந்தாக வேண்டுமென்று உறுதியாகக் கூறினேன். அவர்களால் என் வலியுறுத்தலை மறுக்க இயலவில்லை.

ஆம்புலன்ஸ் வேன் ஒன்றில் - நான் பயணம் செய்வதற்கேற்ற வகையில் மாறுதல் செய்து - மருத்துவர்கள் உடன் வர - நேரில் அண்ணா நினைவிடத்திற்கு மருத்துவமனையிலிருந்து காலை 9 மணி அளவில் புறப்பட்டுச் செல்வதென்றும் - அண்ணா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி விட்டு, நேராக அங்கிருந்து தலைமைச் செயலகம் சென்று நிதிநிலை குறித்த அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்து கொள்வதென்றும், அதன் பின்னர் அங்கிருந்து அண்ணா அறிவாலயம் சென்று இலங்கைத் தமிழ் இனப் படுகொலை குறித்து அவசரமாகக் கூட்டப்பட்ட கழகச் செயற்குழுவிலே கலந்து கொண்டு விட்டு, மருத்துவமனைக்குத் திரும்பி தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தச் செய்தியை அறிந்த மருத்துவ மனையின் நிர்வாக இயக்குநர் தம்பி வெங்கடாசலம் இரவோடு இரவாக - ஆம்புலன்ஸ் வண்டியில் பொறியாளர்களைக் கொண்டு நான் பயணம் செய்வதற்கேற்ற வகையிலும் மருத்துவர்கள் உடன் வரத்தக்க வகையிலும் மாற்றங்களைச் செய்து - வாகனத்தைத் தயார் செய்து விட்டார்.

2-2-2009

அன்றையதினம் எந்தவிதமான முன்னேற்றமோ பின்னடைவோ இல்லை. டாக்டர் தணிகாசலம் உடல் முழுவதையும் குறிப்பாக இதயத் துடிப்பை நன்கு பரிசோதனை செய்து விட்டு, எந்தவிதமான ஐயத்திற்கும் இடமில்லை என்று கூறினார்.

அன்று புதுவை மாநில முதல் அமைச்சர்

வெ. வைத்தியலிங்கம், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் மத்திய அமைச்சருமான வெ. நாராயணசாமி ஆகியோர் மருத்துவமனையில் என்னைச் சந்தித்தனர்.

மருத்துவமனையிலே இருந்தபோதும், இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருந்த நிலைவேறு மனதிற்கு மிகவும் வேதனை கொடுத்துக் கொண்டிருந்தது. எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவதற்காக மருத்துவ மனையிலேயே அனைத்து தமிழ் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தேன். மாலை 6 மணி அளவில் மருத்துவமனையில்

எனது அறைக்குப் பக்கத்து அறையிலேயே அந்தக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. அந்தக் கூட்டத்தில் பேராசிரியர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வி. தங்கபாலு, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் டி. சுதர்சனம், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, ஓய்வு பெற்ற நீதியரசர் மோகன், தவத்திரு குன்றக் குடி பொன்னம்பல அடிகளார், தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன், புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜெகன் மூர்த்தி, எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர். எம். வீரப்பன், ம.தி.மு.க. (செஞ்சி) சார்பில் எல். கணேசன், எம்.பி., தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் ஜெகத்ரட்சகன், உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவர் கே. செல்லமுத்து, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ், மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் அருட்திரு வின்சென்ட் சின்னதுரை, விவசாயத் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன். குமார், சமூக நீதி இயக்க நிறுவனர் எஸ்றா சற்குணம், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மற்றும் கழகப் பொருளாளர் மு.க. ஸ்டாலின், முதன்மை செயலாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன்,

மத்திய மாநில அமைச்சர்களான வீரபாண்டி ஆறுமுகம், டி.ஆர். பாலு, ஆ. ராஜா, முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், கவிஞர் கனிமொழி, எம்.பி., டாக்டர் பொன்முடி, எ.வ. வேலு, அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் - மறு நாள் 3ஆம் தேதி நடைபெறவிருந்த கழகச் செயற்குழுவில் கொண்டுவரப்படவேண்டிய தீர்மானங்களையெல்லாம் எழுதி முடித்தேன்.

3-2-2009

இன்று அண்ணா நினைவு நாள். ஒரு வார காலமாக தொடர்ந்து மருத்துவமனையிலே படுக்கையிலேயே இருந்த காரணத்தால் - ஏற்கெனவே திட்டமிட்டபடி, பயணத்திற் கேற்றவாறு - உடல் நிலையை தயார் செய்து கொண்டு - சரியாக

9 மணிக்கு ராமச்சந்திரா மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் வேனில் படுத்துக் கொண்டே அண்ணா நினைவிடத்திற்குப் புறப்பட்டு விட்டேன். டாக்டர் மார்த்தாண்டம் அவர்களும், டாக்டர் கோபால் அவர்களும் மற்றும் குழுவினரும், உதவியாளர்களும் உடன் வந்தனர். அண்ணா நினைவிடத்தில் பேராசிரியரும், கழக முன்னணியினரும் குழுமியிருந்தனர். அனைவரோடும் சேர்ந்து அண்ணா அவர்களுக்கு; சக்கர நாற்காலியிலே அமர்ந்தவாறே அஞ்சலி செலுத்தி விட்டு, அங்கிருந்து தலைமைச் செயலகம் சென்று அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வது பற்றியும், அதில் முக்கியமாக எதையெதை இணைக்க வேண்டுமென்பது பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து அண்ணா அறிவாலயம் சென்று கழகச் செயற்குழுவிலே கலந்து கொண்டேன்.

செயற்குழுவில், "இலங்கைத் தமிழர் வாழ்வுரிமையைப் பெற்றுத் தர, அந்த நாட்டில் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதியான நிலை தோன்றிட ஒத்த கருத்துடைய சமுதாய இயக்கங்கள், தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் அரசியல் கட்சிகளைக் கொண்டு "இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை" என்ற அமைப்பின் பெயரால் தமிழகம் எங்கும் மக்களைத் திரட்டி விளக்கக் கூட்டங்கள், பேரணிகள், மனிதச் சங்கிலிகள் போன்ற பிரச்சாரச் சாதனங்களைப் பயன்படுத்தி அறப் போராட்டங்களை நடத்தி எழுச்சிப் பணிகளைத் தொடர்வது" என்றும்,

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் முழுமையான அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் கிடைக்கின்ற அளவிற்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றினை குறிப்பிட்ட காலவரையறைக்குள் உருவாக்கிச் செயல்படுத்திட இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் பிரச்சார விளக்கப் பொதுக் கூட்டங்கள், பேரணிகளை பிப்ரவரி 7 அன்று சென்னையிலும், 8, 9 ஆகிய நாட்களில் மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்துவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயற்குழு கூட்டத்திற்குப் பின் அங்கேயே செய்தியாளர்களைச் சந்தித்தேன். பின்னர்

1 மணி அளவில் அண்ணா அறிவாலயத்திலிருந்து புறப்பட்டு நேராக ராமச்சந்திரா மருத்துவமனைக்குத் திரும்பினேன்.

2ஆம் தேதி கழகச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஏமாற்றம் தருவதாக பா.ம.க. தலைவர் ராமதாஸ் அறிக்கை விடுத்திருந்தார். அதைப்பற்றி சில செய்தி யாளர்கள் மருத்துவமனையில் என்னிடம் கேட்டபோது, ஆட்சியிலிருந்து விலகி விடுவதாக தீர்மானம் நிறைவேற்றி யிருந்தால் அவர்களுக்கெல்லாம் ஏமாற்றம் ஏற்பட்டிருக்காது என்று கூறினேன். இத்தகைய விமர்சன செய்திகள் என் முதுகு வலியை அதிகப்படுத்தியபோதிலும் - அதே நாளில் ஈழத் தந்தை செல்வா அவர்களின் திருமகன் சந்திரகாசன் மருத்துவமனைக்கே எழுதியிருந்த ஒரு கடிதம் என் உள்ளப் புண்ணைப் பெரிதும் ஆற்றுகின்ற வகையிலே அமைந்திருந்தது. என் உடல் நலத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு, "ஈழத் தமிழர் இன்னல், அதையொட்டித் தமிழ் நாட்டில் கொந்தளிப்பு இவையெல்லாம் தங்களைப் பாதிக்கும் என்பதை அறிவோம், ஆயினும் தாங்கள் ஆட்சியில் இருப்பதால்தான் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் ஓரளவுக்கேனும் அடக்கி வாசிக்கிறது. உலகத் தமிழர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட முடிகின்றது" என்று எழுதியிருந்தார்.

4ஆம் தேதியன்று என் முதுகுத் தண்டிலேயே வலியைக் குறைப்பதற்கான ஊசியைப் போடலாம் என்று ஏற்கெனவே எடுத்த முடிவின்படி - 3ஆம் தேதியன்று டாக்டர்கள் எல்லாம் என்னை அணுகி அதைப் பற்றிய சாதக பாதகங்களை யெல்லாம் விவரித்தார்கள். என்னுடைய ஒப்புதல் பெற்ற பிறகுதான் அந்த ஊசியைப் போடலாமென்றும் தெரிவித்து, அதற்கான அனுமதியையும் பெற்றார்கள். அதற்கான ஒப்புதல் கையெழுத்தை என்னிடமும், தம்பி ஸ்டாலினிடமும் பெற்றார்கள்.

இந்த ஊசியைத் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு என் இதயம் இருக்கிறதா என்பதை சோதனை செய்ய 3ஆம் தேதியன்று "எக்கோ-கார்டியோகிராம்" சோதனை செய்யப்பட்டது. மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்களும் என்னைச் சோதனை செய்து அவர்களும் தங்களுடைய ஒப்புதலைத் தெரிவித்தார்கள்.

3ஆம் தேதியன்று மாலையில் தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் மருத்துவமனைக்கு வருகை தந்து என் உடல் நலம் விசாரித்தார்.

4-2-2009

முதுகுத் தண்டில் இன்று தான் எனக்கு ஊசி போடப்பட்டது. அந்த ஊசியை அறுவை சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் சென்று அங்கே தான் போடவேண்டுமென்று கூறி - படுக்க வைத்த நிலையிலேயே அறுவை சிகிச்சை அரங்கிற்கு காலை 6 மணி அளவில் அழைத்துச் சென்றார்கள். வெற்றிகரமாக என் முதுகுத் தண்டில் ஊசி போடப்பட்டது. பெரிய அளவில் வலி தெரியாமல் அந்த ஊசி போடப்பட்டது. 7 மணி அளவில் நான் மீண்டும் என் அறைக்குத் திரும்பினேன். அதன்பின்னர் அந்த ஊசியின் விளைவு என் உடல் நிலையில் ஏதாவது மாற்றத்தை உண்டாக்குமோ என்று சோதிப்பதற்காக அன்று நாள் முழுவதும் சோதனையிலேயே வைக்கப்பட்டேன்.

இதன் பின்னர் மருத்துவர்கள் சார்பில் விடப்பட்ட அறிக்கையில் - முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எலும்பு சிகிச்சை நிபுணர், டாக்டர் மார்த்தாண்டம் அவர்கள் தலைமையில், அறுவை சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டு - குறிப்பிட்ட உடல் பகுதியில் ஊசி போடப்பட்டு (Epidural Injection) முதுகெலும்பில் வலியை ஏற்படுத்தி வரும் தசைப் பிடிப்பை அகற்றுவதற்கான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. டாக்டர் தணிகாசலம், டாக்டர் மகேஷ், டாக்டர் கோபால், டாக்டர் அருணா ஆகியோர் உடன் இருந்தனர். இந்தச் சிகிச்சைக்குப் பிறகு முதலமைச்சர் ஒரு வாரத்திற்கு மருத்துவர்களின் கண்காணிப்பில் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் நேரில் வருவதைத் தவிர்த்து முதலமைச்சர் விரைவில் முழு உடல் நலம் பெற்று பணியைத் தொடர ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் - அந்த நாட்டில் சிங்களவர்களுக்கு இணையான சம உரிமையும் - அதிகாரப் பகிர்வும் பெற்றிடும் இனமாகத் தமிழ் இன மக்களும் சுமூக சூழலில் வாழ்ந்திட வகை காணும் ஒப்பந்தங்களும் நிறைவேறிட; தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுவில் தீர்மான வடிவில் சுட்டிக்காட்டியுள்ள குறிக்கோள் நிறைவேறிட,

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவைக்கு துணை அமைப்பாக - உச்ச நீதி மன்ற, உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற

நீதியரசர்களைக் கொண்ட குழு ஒன்றினை மருத்துவமனையில் இருந்தவாறே அறிவித்தேன். அந்தக் குழுவிற்கு தமிழகச் சட்ட அமைச்சர் துரைமுருகன் அமைப்பாளராகவும், தமிழர் தலைவர் கி. வீரமணி, மத்திய அமைச்சர் ஆ. இராசா, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் செயலாளர்களாகவும் இருப்பார்கள் என்றும், அவர்கள் பல்வேறு நாடுகளிலே உள்ள ஆர்வலர்களோடு தொடர்பு கொண்டு உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவார்கள் என்றும் அறிவித்தேன். அந்தக் குழுவில் நீதியரசர்கள் மோகன், பி.ஆர். கோகுலகிருஷ்ணன், பாஸ்கரன், ஏ.கே. இராஜன், ஜனார்த்தனம், சாமிதுரை ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள்.

5-2-2009

இன்றையதினம் கடுமையான வலி. வலியைக் குறைப்பதற்கான ஊசி உடனடியாக போடப்பட்டும், வலி குறையவில்லை. நேரம் அதிகமாக அதிகமாக வலியும் அதிகமாகவே, நரம்பியல் நிபுணர் டாக்டர் வேல் முருகேந்திரன் வரவழைக்கப்பட்டார். அவர் என் உடல் நிலையைப் பரிசோதித்து - நரம்புகள் தளர்ச்சி அடையாமல் இருக்க - அதற்காக ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு ஊசி போட வேண்டுமென்று பரிந்துரை செய்தார். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ்வாறே ஊசி போடப்பட ஒப்புக் கொள்ளப்பட்டது.

காலை ஏடுகளில் இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு.கழகம் எதையும் செய்ததில்லை என்பதைப் போல ஒரு சிலர் அறிக்கைகளை விடுத்திருந்ததைப் படித்து விட்டு - வலியைப் பொருட்படுத்தாமல் - பல்வேறு காலங்களில் இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு. கழகம் என்னென்ன செய்தது, எந்தெந்த போராட்டங்களில் ஈடுபட்டது என்பதையெல்லாம் நினைவிலே கொண்டு வந்து பட்டியலிட்டு கட்டுரை எழுதினேன்.

இந்த நாட்குறிப்பை தொடர்ந்து நாளையும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

11-3-2009

3381. நலிவும் நானும் - நாட்குறிப்பு (3)

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக் கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்)

★★

உடன்பிறப்பே,

6-2-2009

மாயவரம் காந்தி என்று இளமைக் காலத்தில் எனக்கொரு நண்பர். கழகத் தோழர். அவர் இப்போது இல்லை. அந்தப் பகுதிகளுக்கு பெரியார் வரும்போதெல்லாம் அவர் வீட்டில் தான் தங்குவார். மாயவரம் காந்திக்கு இரண்டு புதல்வர்கள். ஒருவர் சம்பத், மற்றொருவருக்கு "கருணாநிதி" என்று என் பெயரைத்தான் வைத்திருந்தார். சம்பத் தற்போது பால் வளத் துறை அமைச்சரிடம் உதவியாளராகப் பணியாற்றுகிறார். அவர் மகளுக்கு என் இல்லத்து வாயிலிலேயே இன்று திருமணம் செய்து வைப்பதாக ஒப்புக் கொண்டிருந்தேன். ஆனால் மருத்துவமனையிலே நான் இருந்த தால், மணமக்களை அழைத்துக் கொண்டு மருத்துவ மனைக்கே வந்து திருமணத்தை நடத்தி வைக்கக் கேட்டுக் கொண்டார். நானும் படுத்த படுக்கையில் இருந்தவாறே அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தேன்.

மருத்துவமனையிலே நான் இருந்தபோது, பொதுச் செயலாளர் பேராசிரியரும், கழக முன்னணியினரும், அமைச்சர்களும் அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து என் உடல் நிலையை கேட்டறிந்தும் அன்றாட அரசியல் நிலவரங்கள் குறித்து நிலைமைகளை விளக்கியும் சென்றனர். என் துணைவியார் தயாளு, ராஜாத்தி ஆகியோரும், என் மகள்கள் செல்வி, கனி ஆகியோரும் செவிலியர்களோடு செவிலியர்களாக என்னைக் கவனித்துக் கொண்டார்கள். செல்வி பெங்களூரையே மறந்து

விட்டு இரவு முழுவதும் தூங்காமல் மருத்துவ மனையிலேயே தங்கி என் கோபத்தையெல்லாம் தாங்கிக் கொண்டது. கனி பொது நிகழ்ச்சிகள், பாராளு மன்றம், மகன் ஆதி என்ற பொறுப்புகளுக் கிடையே நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் எனக்குத் துணையாக இருந்தது. என் மருமகள்கள் பகல் நேரங்களில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் மருத்துவ மனைக்கு வந்து மாமியாருக்கு உதவியாய் இருந்தனர். தம்பிகள் பொன்முடி, எ.வ. வேலு, ஆ. ராஜா ஆகியோர் அன்றாடம் இரவில் மருத்துவ மனையிலேயே தங்கி, ஒத்துழைப்பாக இருந்தனர். வேறு சில நாட்களில் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், கே.என். நேரு ஆகியோரும் மு.க. அழகிரி, மு.க. ஸ்டாலின், மு.க. தமிழரசு ஆகியோரும் மருத்துவ மனையிலே தங்கியிருந்தனர்.

முதுகுத் தண்டில் ஊசி போடுவதற்காக இடையில் நிறுத்தப்பட்டிருந்த Anti-Platelet மாத்திரையை மீண்டும் கொடுக்கத் தொடங்கினார்கள். இன்று மதியம் 2 மணி அளவில் தூங்க முயன்றபோது - வலி கடுமையான அளவிற்கு என்னைத் தாக்கியது. என்னால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. மருத்துவர்களுக்கும் என்ன செய்வதென்று தோன்ற வில்லை. மீண்டும் ஒரு முறை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் செய்து பார்க்கலாம் என்று டாக்டர் மார்த்தாண்டம் எண்ணியதன் பேரில் - எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டேன். அய்யோ; மீண்டும் ஒரு "எம்.ஆர்.ஐ" எடுப்பதா? குடும்பத்தாரும், நண்பர்களும் நடுங்கிச் சோர்ந்து போயினர்.

கடுமையான வலிக்கிடையிலே எம்.ஆர்.ஐ. மீண்டும் எடுக்கப்பட்டது. அப்போது எல்.2 - எல்.3 ஆகியவற்றுக்கிடையே விலகியிருந்த டிஸ்கின் நீளம் மேலும் அதிகமாகியிருப்பது கண்டறியப்பட்டது. அதுதான் வலி அதிகமானதற்குக் காரணம் என்றும் மருத்துவர்கள் விளக்கினார்கள். வலிக்கு காரணம் தெரிந்து என்ன பயன், அதனை குணம் ஆக்குவதற்கு என்ன வழி என்று கேட்டேன். "முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை ஒன்றுதான் அதற்கு வழி" என்றார் டாக்டர் மார்த்தாண்டம். மற்ற மருத்துவர்களும் அதனை ஆமோதித்தனர். டாக்டர் மோகன்தாஸ் அவர்களையும் அழைத்து அவருடைய கருத்தையும் கேட்டபோது, அவரும் அறுவை சிகிச்சைதான் நல்லது என்று அபிப்பிராயம் கூறினார்.

மருத்துவர்கள்; - குடும்பத்தார் அனை வரையும் அழைத்து - "என் வயதை எண்ணிடும் போது - இந்த அறுவை சிகிச்சை மிகவும் அபாயகரமானது என்றும் - ஆனால் வலியைப் போக்க வேறு வழியில்லை என்றும் - மிகுந்த துணிச்சலோடுதான் அறுவை சிகிச்சைக்கு முன்வர வேண்டும்" என்றும் கூறினார்கள். நான் வலியால் படுகின்ற துன்பத்தை பார்க்க சகிக்காமல், அதனைப் போக்குவதற்கு வேறு வழியும் இல்லை என்று மருத்துவர்கள் திட்டவட்டமாகக் கூறியதால் - குடும்பத்தார்; இந்த விஷயங்களை யெல்லாம் என்னிடம் சொல்வதற்கு முன்வராமல் - அறுவை சிகிச்சை மிகவும் சாதாரணமானது என்றும், பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றும், செய்து கொள்ளலாம் என்றும் சமாதானப்படுத்தினார்கள். குறிப்பாக கலாநிதி மாறன் "தாத்தா, இதிலே பயப்படுவதற்கு ஒன்றுமில்லை தாத்தா, செய்து கொள்ளலாம்" என்று அவருடைய தந்தையைப் போலவே கூறினார். அவர்களின் வாய்கள்தான் எனக்கு சமாதானம் கூறின. ஒருவரின் முகத்தைப் பார்த்தவுடன் அவர்களைப் பற்றி எடை போடக் கூடிய திறமை எனக்கு உண்டு என்பதால், அத்தனை பேருடைய முகங்களையும் ஒரு முறை பார்த்தவுடனேயே உண்மையைப் புரிந்து கொண்டேன். நான் ஏதாவது விசாரித்தால் ஒவ்வொருவருடைய விழிகளிலிருந்தும் வெடித்துக் கொண்டு வர கண்ணீர் காத்திருந்ததை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நானே அவர்களுக்கெல்லாம் தைரியம் அளித்தாக வேண்டிய கட்டாயத் திற்கும் ஆளாகி - "சாதாரண அறுவை சிகிச்சைதானே, ஏன் இப்படி முகத்தை வைத்துக் கொண்டு பயப்படுகிறீர்கள்" என்று ஆறுதல் கூறியதோடு, அறுவை சிகிச்சைக்குத் தயார் என்றும் எப்போது வைத்துக் கொள்ளலாம் என்றும் கேட்டேன்.

இரவு எட்டு மணி அளவில் மீண்டும் மருத்துவர்கள் எல்லாம் கூடி, அறுவை சிகிச்சையை எங்கே வைத்துக் கொள்ளலாம், வெளி நாட்டிற்கு அழைத்துச் செல்லலாமா, அல்லது டெல்லிக்குச் செல்லலாமா என்றெல்லாம் பேசப்பட்டது. நரம்பியல் டாக்டர் ஏ.வி. சீனிவாசன் அவர்கள் அங்கிருந்தவாறே "டெலி-மெடிசின்" மூலமாக அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு - இந்த அறுவை சிகிச்சை பற்றிய விவரங்களை யெல்லாம் அறிந்தார். இறுதியாக டெல்லியிலே உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் பணியாற்றும் டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் அவர்கள் இந்த அறுவை சிகிச்சையில்

மிகவும் திறமை வாய்ந்தவர் என்பதால், அவருடன் தொடர்பு கொண்டு அவரை வரவழைக்கலாம் என்று பேசி முடிவெடுக்கப் பட்டது.

தம்பி தயாநிதி மாறன் உடனடியாக டெல்லியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி அன்புமணியிடம் தொடர்பு கொண்டு - டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தம்பி அன்புமணி உடனடியாக அந்த நிறுவனத்தின் இயக்குநரிடம் பேசி அடுத்த நாளே டாக்டர் ஜெய்ஸ்வால் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைப்பதாக தகவல் அனுப்பினார்.

7-2-2009

அப்பல்லோ மருத்துவமனையில் பணி யாற்றும் முதுகெலும்பு டாக்டர் சாஜன் ஹெக்டே அவர்களை அழைத்து என் உடல் நிலை குறித்து கருத்து கூறுமாறு கேட்கப்பட்டது. அவரும் என்னை சோதித்து விட்டு, நடைபெறும் சிகிச்சை முறைகள் சரியாக இருப்பதாகவும், அறுவை சிகிச்சை செய்வதுதான் சரியானது என்றும் கருத்து தெரிவித்தார்.

அன்றையதினம் மாலையில் டெல்லியிலிருந்து டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் ராமச்சந்திரா மருத்துவமனை வந்தடைந்தார். அவரும் டாக்டர் மார்த்தாண்டம் அவர்களும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்த போது, முதுகிலே தொடங்கும் வலி எதுவரை பரவியுள்ளது என்று கேட்டனர். இது "தை மாதம்" அல்லவா, எனவே என் "தை (Thigh) (தொடை) வரை நீடிக்கிறது என்று சிரித்துக் கொண்டே கூறினேன். டாக்டர் ஜெய்ஸ்வால் என்னை நேரடியாக பரிசோதித்ததோடு, அனைத்து எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே படங்களையும் பார்த்தார். அறுவை சிகிச்சை செய்வது என்று முடிவெடுத்த நிலையில், மருத்துவர்களைக் கொண்ட ஒரு குழு அமைப்பதுதான் சரியானதென்று தீர்மானிக்கப்பட்டது. டாக்டர் மார்த்தாண்டம் அவர்கள் தலைமையில் டாக்டர் தணிகாசலம் (இருதய நிபுணர்), டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் (முதுகெலும்பு நிபுணர்), டாக்டர் கோபால் (குடும்ப டாக்டர்), டாக்டர் கார்த்திக் கைலாஷ் (முதுகெலும்பு நிபுணர்), டாக்டர் ஏ.எஸ். நாயுடு (மயக்க மருந்து நிபுணர்), டாக்டர் மகேஷ் வகாமுடி (மயக்க மருந்து நிபுணர்), டாக்டர் ஏ.வி. சீனிவாசன் (நரம்பியல் நிபுணர்), டாக்டர் கே.ஆர்.

பழனிசாமி (குடல் மற்றும் இரைப்பை நோய் நிபுணர்), டாக்டர் ராஜ் பி. சிங் (நுரையீரல் நிபுணர்), டாக்டர் மயில்வாகனன் (எலும்பு சிகிச்சை நிபுணர்), டாக்டர் சண்முகம் (மயக்க மருந்து நிபுணர்), டாக்டர் பாஸ்கர் (மயக்க மருந்து நிபுணர்), டாக்டர் சவுந்தரராசன் (சிறுநீரகவியல் நிபுணர்) ஆகிய 14 பேரைக் கொண்ட மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டு, அது அறிவிக்கப்பட்டது.

மருத்துவக் குழுவினர் அனைவரும் அமர்ந்து அறுவை சிகிச்சையை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று நீண்ட நேரம் யோசனை செய்து - 11.2.2009 அன்று வைத்துக் கொள்வதென்றும், சென்னையில் ராமச்சந்திரா மருத்துவமனையிலே அறுவை சிகிச்சை செய்யலாம் என்றும், டெல்லி மருத்துவர் ஜெய்ஸ்வால் அவர்கள் 10ஆம் தேதியன்றே சென்னைக்கு வந்துவிட வேண்டு மென்றும் பேசி முடிவெடுக்கப்பட்டது.

மத்திய உள் துறை அமைச்சர், அருமை நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் மருத்துவ மனைக்கு இன்று வந்திருந்தார். சிவகங்கையில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தி - அரசின் சார்பில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கல்லூரிக்கு நானே நேரில் வந்து அடிக்கல் நாட்டு விழா நடத்த வேண்டுமென்று அவர் விருப்பப்பட்டு என்னிடம் தேதி பெற்றிருந்தார். மருத்துவ மனையிலே என்னை வந்து நேரிலே கண்ட பிறகு - மருத்துவமனையில் நான் இருந்த வாறே

"வீடியோ கான்பரன்ஸ்" மூலமாக அடிக்கல் நாட்டவேண்டு மென்றும், மாநில அமைச்சர்கள் இருவரை சிவகங்கைக்கு அதே நாளில் அனுப்பி வைத்தால் அங்கே விழாவினை நடத்திக் கொள்வ தாகவும் கூறினார். நானும் அதற்கான ஒப்புதலை அளித்தேன்.

8-2-2009

மருத்துவமனையில் இருந்த போதிலும் - தாங்கொணா வலி உடலை வறுத்திக் கொண்டிருந்த நிலையிலும் - ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் ஏடுகளைப் படிக்க நான் தவறியதில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சகோதர யுத்தம் இங்கும் கூடாது என்றும் குறிப்பாக தமிழகத்திலே உள்ள அனைவரும் இலங்கைப் பிரச்சினையிலே மட்டுமாவது ஒற்றுமையாக இருந்திட வேண்டுமென்றும் "ஒன்றுபட்டால்

உண்டு வாழ்வே" என்ற தலைப்பில் எழுதியிருந்தேன். என்னுடைய அந்த வேண்டு கோளை அலட்சியப்படுத்தியதோடு மட்டு மல்லாமல், என்னை சிலர் மிகவும் இழிவுபடுத்தி பேசியும், எழுதியும் இருப்பதை காலை ஏடுகளில் காண நேர்ந்தது. அதனால் எனக்கு அணுவளவு வருத்தமும் இல்லை என்றும், அவர்கள் என்னைத் தாக்கியிருப்பது அவர்கள் மனச்சாட்சிக்கு சரியென்று பட்டால் அதில் எனக்கு மகிழ்ச்சிதான் என்றும் அவர்கள் தூற்றியிருப்பதை என் உடல் தாங்குகிறதோ இல்லையோ - இலங்கைத் தமிழர் வாழ்வில் பள்ளம் ஏற்படாமலிருக்க, என் உள்ளம் தாங்கித் தானே ஆக வேண்டுமென்று எழுதினேன்.

ஜெயலலிதா விடுத்த நீண்ட அறிக்கையில் விவசாயிகளுக்காக கழக ஆட்சியில் குறிப்பாக நான் எதுவும் செய்யவில்லை என்று குற்றஞ் சாட்டியிருந்தார். ஆளுநர் உரைக் காகவும், அதன் பதில் உரைக்காகவும் தயாரித்து வைத்திருந்த குறிப்புகளிலேயிருந்த ஜெயலலிதாவின் அறிக்கைக்கு விரிவாக பதில் எழுதி, ஏடுகளுக்கெல்லாம் அனுப்பச் செய்தேன்.

இதற்கிடையே Nerve Conduction Study and Electro Myography என்று சொல்லப்படும் ஒரு சோதனை - நரம்பின் செயல் திறனைக் கண்டறிவதற்கான சோதனை செய்யப்பட வேண்டுமென்று டெல்லி மருத்துவர் அரவிந்த் ஜெய்ஸ்வால் கூறிய அறிவுரைப்படி, நரம்பியல் நிபுணர் டாக்டர் மீனாட்சிசுந்தரம் இன்று அதனை மேற்கொண்டார். இந்தச் சோதனை நடைபெறவே இரண்டு மணி நேரத்திற்கு மேலானது.

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை சார்பில் தென் சென்னை தி.மு.க. சார்பில் அன்றைய தினம் ஏற்பாடாகியிருந்த எழுச்சிப் பேரணி எவ்வாறு உள்ளது என்று தொலை பேசியிலே பேசி விவரம் கேட்கச் சொன்னேன்.

தஞ்சை மாநகரத்தின் ஒவ்வொரு அங்குல எழிலுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டு உழைத்த தஞ்சை சுல்தான் மறைந்து விட்டார் என்ற செய்தி வந்தது. மிகவும் வருந்தி நானே என் கைப்பட ஒரு இரங்கல் செய்தியினை எழுதிக் கொடுத்தேன்.

மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி டாக்டர் அன்புமணி ராமதாஸ் மருத்துவ மனைக்கு வந்து எனது உடல் நலம் விசாரித்தார்.

9-2-2009

மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு இன்று காலையிலேயே என்னை மருத்துவமனையில் சந்தித்து டெல்லி அரசியல் நிலவரங்களை யெல்லாம் எடுத்துக் கூறி சில பிரச்சினைகள் பற்றி என் அறிவுரைகளைப் பெற்றுச் சென்றார்.

இதயத் துடிப்பு எவ்வாறு இருக்கிறது, அதுவும் தொடர்ந்து 24 மணி நேரத்திற்கு இதயத் துடிப்பு எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதற்காக - Holter E.C.G. என்று கூறப் படும் ஒரு இயந்திரத்தை என் உடலிலேயே பொருத்திவிட்டார்கள். அது மறுநாள் தான் என் உடம்பிலிருந்து அகற்றப் பட்டது. இதயத் துடிப்பு சீராக இருக்க வேண்டுமென்பதற்காக Tablet Betaloc மாத்திரை தரப்பட்டது.

நிதித் துறை செயலாளரையும், மற்றும் அந்தத் துறையின் அதிகாரிகளையும் மருத்துவ மனைக்கு அழைத்து நிதி நிலை அறிக்கை தயாரிப்பது குறித்து தனி அறையில் அன்று காலை முழுவதும் விவாதித்தேன். காலை 10.45 மணிக்கு தொடங்கிய அந்தக் கூட்டம், நண்பகலைத் தாண்டியும் நீண்டதால், டாக்டர்கள் வந்து பரிசோதனைகளைச் செய்யவும் மாத்திரைகள் சாப்பிடவும் நேரமாகி விட்டது என்பதை நினைவூட்டினர்.

இந்து நாளிதழின் செய்தியாளர் ராதா கிருஷ்ணன் காலையிலேயிருந்து மருத்துவ மனையிலே தங்கி என்னுடைய செயல் பாடுகளைப் பற்றி கவனித்து வருவதாகவும், என்னை ஐந்து நிமிடங்கள் சந்திக்க விரும்புவதாகவும் இந்து நாளிதழின் முன்னாள் செய்தியாளரும், என் மகளுமான கனிமொழி பரிந்துரைத்ததின் பேரில் வரச் சொன்னேன். ஐந்து நிமிடங்கள் என்று கூறி வந்தவர் ஐம்பது நிமிடங்களுக்கு மேல் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். மருத்துவ மனையிலே இருக்கும்போதே இவ்வளவு பணிகளை மேற்கொள்ள வேண்டுமா என்று இந்து ராதாகிருஷ்ணன் உரிமையோடு கேட்டார். செய்யத்தானே வேண்டுமென்று கூறினேன். மக்கள் எனக்கு இவ்வளவு பெரிய பொறுப்பை நம்பிக் கொடுத்திருக்கும்போது, படுக்கையிலே இருப்பதாலேயே நான் மக்களுக்காகப் பணியாற்றுவதை நிறுத்த முடியுமா என்று கூறினேன்.

என்னுடைய அறுவை சிகிச்சை பற்றி அவர் மிகுந்த கவலையோடு விசாரித்த போது, நீங்கள் எல்லாம் இருக்கீங்களே, அப்புறம் என்ன என்றபோது கண் கலங்கி விடைபெற்றார்.

அரசு செயலாளர்களுடன் நிதி நிலை அறிக்கை மீதான விவாதம் மாலையிலும் தொடர்ந்தது. என் கையெழுத்திற்காக காத்திருந்த முக்கிய கோப்புகளை மட்டும் மருத்துவ மனைக்கே வரவழைத்து கையெழுத்திட்டேன்.

10-2-2009

மிகப் பெரிய அறுவை சிகிச்சையை நாளையதினம் செய்து கொள்ளப் போகிறோம் என்ற நினைவுடன் காலை ஏடுகளை வரவழைத்தேன். ஏடுகளைப் படித்தவுடன் அறுவை சிகிச்சை மறந்து விட்டது. அந்த அளவிற்கு அன்றைய தினம் என் மீது தாக்குதல். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக நானும், பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளையே ஒரு காலத்திலே ராஜினாமா செய்தோம் என்று எழுதியதைப் பற்றிக் குறிப்பிட்டு, ஒரு கட்சியின் தலைவர் "அவ்வாறு பதவி விலகியதால் என்ன பயன் ஏற்பட்டு விட்டது, ஒட்டு மொத்தமாக ஆட்சியை விட்டே விலகினால்தான் பயன் ஏற்படும்" என்று என்மீது மிகுந்த அக்கறையோடு வழக்கம்போல் அறிக்கை விட்டிருந்தார்.

அதே தலைவர், தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது தான் இலங்கைத் தமிழர்களுக்காக போராட்டம் நடத்தியதே தவிர, ஆளுங் கட்சியாக இருந்த போது எதையும் செய்யவில்லை என்றும் எழுதியிருந்தார். ஆளுங்கட்சியாக இருந்த போது எவ்வெப்போது என்னென்ன போராட்டங்களை தி.மு. கழகம் செய்தது என்பது பற்றி விவரமான பட்டியலை எழுதினேன். அதற்கு "மறுப்பும் - விளக்கமும்" என்று தலைப்பிட்டுவிட்டு, அதன் கீழே "பின்வரும் மறுப்பும் விளக்கமும் மருத்துவமனையிலிருந்து எழுதப்பட்டது, பிழையிருப்பின் மன்னித்தருள்க!" என்று குறிப்பும் எழுதித்தான் ஏடுகளுக்கே அனுப்பச் செய்தேன்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழி காட்டும் தலைவருமான திருமதி சோனியா காந்தி அவர்கள் 10ஆம் தேதி மாலையில் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு உடல் நலம் விசாரித்ததோடு, அடுத்த நாள் நடைபெறவுள்ள அறுவை சிகிச்சை பற்றி யெல்லாம் விவரமாகப் பேசினார். அறுவை சிகிச்சை முடிந்து நலம்பெற்று விரைவில் பணிக்குத் திரும்ப வேண்டுமென்று வாழ்த்தினார்.

Echo-Cardiogram எடுக்க வேண்டுமென்று டாக்டர் தணிகாசலம் அறிவுறுத்தியதின் பேரில், என் அறையிலேயே அதை எடுப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெற்றன. இதன் முடிவுகளைக் கணக்கிலே கொண்டும், 2007 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட 64 slice C.T. Angio gram முடிவுகளைக் கணக்கிலே கொண்டும், Holter E.C.G. முடிவுகளைக் கணக்கிலே கொண்டும் டாக்டர் தணிகாசலம் 11 ஆம் தேதியன்று அறுவை சிகிச்சை செய்யலாம் என்றும், ஆனால் என்னுடைய வயதை உத்தேசித்துப் பார்க்கும் போது அது மிகவும் அபாயகரமானது (High Risk) என்றும் தெரிவித்தார்.

மாலையில் மயக்க மருந்து நிபுணர், டாக்டர் மகேஷ் வகாமுடி தலைமையில் மயக்கம் கொடுப்பதற்காக மட்டுமே நியமிக்கப்பட்டிருந்த மருத்துவ குழுவினர் என்னைப் பரிசோதனை செய்தனர். கிருமி தொற்று வராமல் இருப்பதற்காக அன்று மாலையிலிருந்தே நரம்பு மூலம் செலுத்தப்படும் ஊசி மருந்து ஆரம்பிக்கப்பட்டது. மறுநாள் அறுவை சிகிச்சை என்பதால் பார்வையாளர்கள் அனைவரையும் தவிர்க்க வேண்டுமென்று கூறியதோடு - என்னுடைய அறை, மற்றும் பக்கத்து அறைகள் எல்லாம் கூட கிரிமிநாசினி கொண்டு சுத்தப்படுத்தப்பட்டது. தவிர்க்க முடியாத பார்வையாளர்களும், வீட்டாரும், மருத்துவர்களும் கூட முகமூடி அணிந்த பிறகே என் அருகே வர அனுமதிக்கப்பட்டனர்.

சிறுநீரகத் துறை நிபுணர் டாக்டர் சவுந்தரராசன் வந்து தனது சோதனையை நடத்திவிட்டு எந்த அளவிற்கு நான் நீர் அருந்த வேண்டும் என்றெல்லாம் அறிவுரைகள் வழங்கினார். மருத்துவக் குழுவினர் 14 பேரும் என்னுடைய குடும்பத்தாரை அழைத்து, அறுவை சிகிச்சை பற்றியும், அதன் பின் விளைவுகள் பற்றியும் விவரமாக எடுத்துக் கூறி, அறுவை சிகிச்சைக்கான ஒப்புதலையும் கையெழுத்தையும் குடும்ப மருத்துவர் டாக்டர் கோபால் அவர்கள் மூலம் முறைப்படி பெற்றார்கள்.

"Ailing but active `Kalaignar' turns Hospital into Chief Minister's Office" என்ற தலைப்பில் "தி டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு 10 ஆம் தேதி பின்வருமாறு எழுதியிருந்தது.

"ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் ஏழாவது மாடியில், வெள்ளைக் கோட்டுகளுக்கு

(மருத்துவர்களுக்கு) மத்தியில் முதல்வர் கலைஞர் அனுமதிக்கப் பட்டுள்ள வார்டுக்குள் - உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக மூத்த அரசு அதிகாரிகள் கோப்புகளைக் கையில் தாங்கியவாறு - திட்டங்களை முதல்வருடன் விவாதித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். பார்வையாளர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள அந்த இடம், தற்போது தலைமைச் செயலகத்தில் உள்ள முதலமைச்சரின் அலுவலகம் போல் காட்சி அளிக்கிறது.

நிதித் துறையைச் சேர்ந்த ஒரு மூத்த அதிகாரி, "இங்கு நாங்கள் விவாதம் நடத்துகிறோம். நிதி நிலை அறிக்கை மீது கலந்துரையாடி பல முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்றார். மருத்துவர் ஒருவரிடம் கேட்டபோது, "முதலமைச்சருடன் முக்கியமான சந்திப்புகளுக்காக அமைச்சர்களும், தி.மு.க. முன்னணி உறுப்பினர்களும், அதிகாரிகளும் இங்கு வருகிறார்கள். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், திரைப்பட பிரமுகர்கள், கட்சியின் தொண்டர்கள் என்று பார்வையாளர்களின் பட்டியல் மிக நீளமானது. முதலமைச்சர் யாரையும் சந்திக்காதபோது செய்தித்தாள்களை ஒரு வரிவிடாமல் படிக்கிறார். அல்லது கட்சியின் நாளேடான முரசொலிக்காக எழுதுகிறார். மொத்தத்தில் அவர் எங்களது மிகவும் செயல் துடிப்பான நோயாளிகளில் ஒருவர்" என்றார். தான் சுகவீனமாகி உள்ளதால் எந்தக் கோப்பும் காத்திருக்கக் கூடாது என்று அதிகாரிகளிடம் அவர் கூறியிருக்கிறார்."

என்று எழுதியிருந்தது.

விடிந்தால் எனக்கு அறுவை சிகிச்சை என்பதால் - மதுரையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்த நிலையிலும் என் மகன் அழகிரி சென்னை வந்து மருத்துவமனையிலேயே தங்கினார். மேலும் என் மகன் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் எல்லாம் அங்கேயே தங்கிவிட்டனர்.

இந்த நாட்குறிப்பை தொடர்ந்து நாளையும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

12-3-2009

3382. நலிவும் நானும் - நாட்குறிப்பு (4)

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்.)

★★

உடன்பிறப்பே,

11-2-2009

இன்றுதான் எனக்கு அறுவை சிகிச்சை. காலை 6 மணிக்கெல்லாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்று மருத்துவர்கள் முதல் நாளே சொல்லியிருந்தார்கள். காலை 5 மணிக்கெல்லாம் அன்றாடம் என்னிடம் வரக் கூடிய நாளேடுகள் அன்று வரவில்லை. எங்கே ஏடுகளைப் படித்து விட்டு, நான் உணர்ச்சி வயப்பட்டு விடுவேனோ என்பதற்காக ஏடுகளை எனக்குத் தரவில்லை போலும். 6 மணிக்கு என்னிடம் வந்து புறப்படலாமா என்ற போது, முதலில் நாளேடுகள் வரட்டும், ஒரு பார்வை பார்த்து விட்டு புறப்பட்டு விடலாம் என்று கூறி, அவ்வாறே படித்து விட்டுத் தான் அறுவை சிகிச்சை அரங்கிற்குப் புறப்பட்டேன்.

என் அறையிலிருந்து 6வது மாடியில் இருந்த அறுவை சிகிச்சை அரங்கிற்கு செல்லும் வரையில் - காலை 7 மணி அளவில் என் இரு புறமும் கலங்கிய கண்களோடு நெருங்கிய உறவினர்களும் கழக முன்னணியினரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே அறுவை சிகிச்சை அரங்கிற்குள் நுழைந்தேன். முறைப்படி மயக்க மருந்து கொடுக்கப்பட்டு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடை பெற்றது. அறுவை சிகிச்சையின் முடிவினை அறிந்து கொள்ள நூற்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் மருத்துவ மனையிலே குவிந்து விட்டனர். அவர்களைத் தவிர மருத்துவமனை வாயிலிலே

கழகத் தோழர்களும், முன்னணியினரும் அறுவை சிகிச்சையின் முடிவினை அறிந்து கொள்ள ஆயிரக்கணக்கிலே காத்திருப்பதாக எனக்கு தகவல் தரப்பட்டது.

அறுவை சிகிச்சை முடிந்த பிறகு, டாக்டர் மார்த்தாண்டம் அவர்களும், டாக்டர் ஜெய்ஸ்வால் அவர்களும் செய்தியாளர்களைச் சந்தித்து என்னுடைய உடல் நிலை பற்றிய அனைத்து விவரங்களையும் அவர்களுக்கு எடுத்து விளக்கினர். அறுவை சிகிக்சைக்கு பின் என்னை நேராக ஐ.சி.யு. அறைக்கு அழைத்துச் சென்று வைத்ததோடு, அங்கே 48 மணி நேரம் இருக்க வேண்டு மென்றும், அதன் பின்னர் தான் 7வது மாடியிலே உள்ள அறைக்குச் செல்ல வேண்டுமென்றும் கூறினார்கள்.

ஐ.சி.யு. அறையில் நான் 48 மணி நேரம் இருக்க வேண்டுமென்று தெரிவித்த போது, மருத்துவ மனையின் உரிமையாளர் தம்பி வெங்கடாசலம் மற்ற நோயாளிகள் எல்லாம் இருக்கக் கூடிய பொதுவான ஐ.சி.யு. அறையில் நான் தங்கக் கூடாது என்றும், நான் மட்டும் தங்கக் கூடிய அளவிற்கு ஒரு ஐ.சி.யு. அறையை ஆறாவது மாடியிலே இரவோடு இரவாக தயாரித்து விட்டார். அது ஒரு பெரிய அறை. அந்த அறையிலே நான் ஒருவன் மட்டுமே தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அந்த ஐ.சி.யு. அறையில் இருந்த எனக்கு நினைவு வந்த போது, நேரம் பகல் 1 மணி. மிகவும் வறட்சியாக இருந்ததால் தண்ணீர் வேண்டு மென்று கேட்டேன். உதடு கூட நனையாத அளவிற்கு எனக்கு உதவியாக இருந்த செவிலியர் ஒருவர் தண்ணீர் கொடுத்தார். நான் அப்போது அவரிடம் உன் பெயர் காவேரியா? என்று கேட்டேன். இல்லையே அய்யா, எதற்காக கேட்கிறீர்கள் என்றார். கர்நாடகா கொடுக்கின்ற காவேரியைப் போலவே நீயும் கொடுக்கிறாயே என்றவுடன் அது ஐ.சி.யு. அறை என்பதைக் கூட மறந்து விட்டு, என்னைச் சூழ்ந்திருந்த மருத்துவர்கள் சிரித்தனர்.

செய்தியாளர்களை மருத்துவர்கள் சந்தித்து பேட்டியளித்த போது கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் அதிலே கலந்து கொண்டு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் களுக்கும் ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் கழகத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் நன்றியும் பாராட்டும் கூறினார். பார்வையாளர்கள் தங்கள் வருகையைக் குறைத்து மேலும் சில நாட்களுக்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோருடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு அறுவை சிகிச்சை பற்றியும், நான் எவ்வாறு இருக்கிறேன் என்பதையும் கேட்டறிந்ததோடு, விரைவிலே நலம் பெற வேண்டு மென்றும் வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

பிற்பகலில் மருத்துவர்கள் என்னை வந்து பார்த்து விட்டு, அறுவை சிகிச்சைக்குப் பிறகு என் நரம்பு மண்டலம் சீராக உள்ளதா என்று சோதித்துப் பார்த்து விட்டு திருப்தியைத் தெரிவித்தனர்.

மாலை 5 மணி வரையில் மாலை நாளேடுகளைக் கொடுக்கவில்லை. பின்னர் நானே டாக்டரை அழைத்து மாலை ஏடுகளைக் கொண்டு வரச் சொல்லி வாங்கிப் படித்தேன்.

12-2-2009

இன்றைக்கும் நான் ஐ.சி.யு. அறையிலே தான் இருந்தேன். அங்கே மிகவும் கட்டுப்பாடு. பார்வையாளர்கள் யாருக்கும் அனுமதி இல்லை. என் துணைவியர், மகள்கள், மகன்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். நல்ல வேளையாக தொலைக்காட்சி பெட்டி அங்கே வைக்கப்பட்டிருந்தது. நாடாளு மன்றத்தில் குடியரசு தலைவர் ஆற்றிய உரையை கேட்டேன். அவரது உரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இடம் பெற்றதைக் கேட்ட போது மகிழ்ச்சியாக இருந்தது. உடனடியாக உதவியாளரை அழைத்து, நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர், தனது உரையிலே இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், பிரச்சினைக்கு அமைதியான முறையில் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் குறிப்பிட்டிருப்பது, மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வரும் எனக்கு மிகுந்த ஆறுதலையும், மகிழ்ச்சியையும் தருவதாக அமைந்துள்ளது என்று "டிக்டேட்" செய்து ஏடுகளுக்கு அறிவிக்கச் செய்தேன்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு இன்று எனக்கு திட உணவு அளவோடு தரப்பட்டது. எக்கோ-கார்டியோ கிராம் எடுக்கப்பட்டு, அதுவும் சரியாக இருப்பதாக உறுதி செய்யப்பட்டது. மாலை 5

மணியளவில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட முதுகுப்புறம் சுத்தம் செய்யப்பட்டு புதிதாக மருந்துகள் போடப்பட்டன.

13-2-2009

அறுவை சிகிச்சை முடிந்து 48 மணி நேரத்திற்குப் பிறகு (டி.7) வார்டுக்கு நான் மாற்றப்பட்டேன். மருத்துவர் குழு தலைவர் டாக்டர் மார்த்தாண்டம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் அறுவை சிகிச்சை பற்றியும் - அதன் பின்னர் உடல் நலம் பெற்று வருவது பற்றியும் விளக்கினார். டெல்லி டாக்டர் ஜெய்ஸ்வால் அன்றையதினம் டெல்லி திரும்பியதோடு, மீண்டும் 21ஆம் தேதி சென்னை வருவதாகவும் கூறிச் சென்றார்.

தொடர்ந்து படுத்துக் கொண்டே இருப்பதால் முதுகுப் பக்கம் புண்கள் வந்து விடாமல் இருப்பதற்காக இரண்டு பக்கங்களிலும் மாறி மாறி என்னை படுக்க வைத்துப் பார்த்துக் கொண்டனர். மாறி மாறி நான் படுக்க உதவி செய்த சிப்பந்தியின் பெயரே "மாரி" தான்! அறுவை சிகிச்சை செய்யப்பட்ட போது என் உடலில் பொருத்தப்பட்டிருந்த குழாய்கள் எல்லாம் இன்று தான் அகற்றப் பட்டன.

14-2-2009

நிதித் துறை செயலாளரை வரவழைத்து நிதி நிலை அறிக்கை 17ஆம் தேதி தாக்கல் செய்யப்படுவது குறித்துப் பேசினேன்.

அறுவை சிகிச்சை செய்வதற்கான முயற்சியில் மூத்த மருத்துவர்கள் அடிக்கடி வந்து என்னைப் பார்த்துக் கொண்ட போதிலும், நான் மருத்துவமனை யிலே இருந்த காலத்திலும் சரி, பின்னர் வீட்டிற்குத் திரும்பிய பின்னரும் டாக்டர் ஜம்பு, டாக்டர் சமீர், மற்றும் டாக்டர் பூபேஷ் கார்த்திக் ஆகியோர் எனக்கு மாறி மாறியும், ஒன்றாகவும் இருந்து ஆற்றிய பணியினைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். நான் புரண்டு படுக்க வேண்டுமென்றால் கூட அவர்கள் ஒவ்வொரு முறையும் என் அருகிலே வந்து, நான் எந்தவிதத்திலும் சிரமப்படக் கூடாது என்ற அக்கறையோடு கவனித்து வருகிறார்கள். அப்போது ஒரு முறை டாக்டர் ஜம்பு என் பக்கத்தில் நின்று கொண்டு, அவர் பக்கம் என்னைத் திரும்பிப் படுக்குமாறு கூறினார். அவரிடம் நான், மற்றவர்களை எல்லாம் என் பக்கம் திரும்பிட நான் முயற்சிகளை மேற்கொள்கிறேன், ஆனால் நீயோ என்னை உன் பக்கம் திரும்பச் சொல்கிறாயே

என்று சிரித்துக் கொண்டே கூறினேன். செவிலியர்கள் என்று எடுத்துக் கொண்டால், குறிப்பாக செந்தாமரை, ஜாக்குலின், ப்ளோரா, சித்ரா, சாந்தி, அமீனா ஆகியோர் 24 மணி நேரமும் மாறி மாறி என்னுடனே இருந்து தங்களுக்கு வேண்டிய நெருங்கிய உறவினரைக் கவனிப்பது போல, எனக்கு வேளை தவறாமல் மாத்திரைகள் கொடுக்கவும், தேவையான உதவிகளை அளிக்கவும் உதவி புரிந்தனர். அதைப் போலவே வார்டு பாய் மாரிமுத்துவும், என்னுடைய தனி உதவியாளர் நித்யாவும் கடந்த ஒரு மாத காலமாக என்னை விட்டு அங்கும் இங்கும் அகலாமல் ஆற்றிய பணிகளை நான் இந்தத் தொடரிலே குறிப்பிட்டே ஆக வேண்டும்.

எனது வலி தாங்காமல் நான் ஏதாவது கோபித்துக் கொண்டால் கூட, இங்கே குறிப்பிட்ட மருத்துவர்களிலிருந்து யாருமே முகம் சுளிக்காமல் பணியாற்றுவார்கள். குறிப்பாக என் குடும்ப மருத்துவர் கோபால், அவரே இதய நோயாளி என்ற போதிலும் அனைத்து மருத்துவர்களையும் ஒருங்கிணைத்து அவர்களை யெல்லாம் கலந்து கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டதை நன்றியுடன் குறிப்பிட்டாக வேண்டும்.

15-2-2009

அறுவை சிகிச்சைக்குப் பிறகு இன்று தான் திடீரென்று என் கால்களில் ஒரு எரிச்சலான வலி ஏற்பட்டது. மருத்துவர்களிடம் கூறினேன். வலி நிவாரணத்திற்கான ஊசி உடனே போடப்பட்டது. ஊசி போட்டவுடன் வலி சற்று குறைந்த போதிலும் இரவு 8 மணி அளவில் உடம்பெல்லாம் அதிக வியர்வையும், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. உடலின் வெப்ப நிலையும் குறைந்தது. மூத்த மருத்துவர்கள் எல்லாம் உடனடியாக விரைந்து வந்தனர். என்னவோ தெரியவில்லை, பேராசிரியர் உள்ளிட்ட மூத்த அமைச்சர்களையும் கழக முன்னோடிகளையும் பார்க்க வேண்டும் போல் எனக்கு எண்ணம் ஏற்பட்டது. உதவியாளரை அழைத்து அவர்களை தொலை பேசியில் தொடர்பு கொண்டு மருத்துவ மனைக்கு வருமாறு கூறினேன். மற்றொரு அறையில் தூங்கிக் கொண்டிருந்த பொன்முடி, வேலு போன்றவர்களும் பதற்றமடைந்தனர். ஸ்டாலினை அழைத்து, என்னமோ என்னை செய்கிறது, எனக்குச் சொல்லத் தெரியவில்லை. நிதி நிலை அறிக்கை பற்றியே எண்ணம் வருகிறது. தமிழக மக்களுக்கு இன்னும் உழைக்க வேண்டுமென்று நினைத்தது நடக்காது

போல் இருக்கிறது. நிதி நிலை அறிக்கை ஒவ்வொரு பத்தியும் நான் எண்ணி எண்ணி எழுதியது. அதையே நான் எழுதிய இறுதி சாசனமாக வைத்துக் கொள். என்றெல்லாம் கூறினேன். "அப்பா, அப்பா" என்று கதறிவிட்டான். "இப்படியெல்லாம் பேசாதீர்கள் அப்பா, ஒன்றும் ஆகாது" என்றான்.

உடனடியாக "ஆக்சிஜன்" செலுத்தப்பட்டது. "ஈ.சி.ஜி." யும் எடுக்கப்பட்டது. மருத்துவர்கள் அனைவரும் என்னை தீவிரக் கண்காணிப்பில் வைத்துக் கொண்டனர். Forced Air Warmer என அழைக்கப்படும் - உடலை சூடாக வைத்துக் கொள்ள உதவிடும் போர்வையைக் கொண்டு வந்து எனக்கு போர்த்தி விட்டார்கள். என்ன செய்கிறது என்றே எனக்குச் சொல்லத் தெரியாத நிலை. என் மகள் செல்வி தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. அருகிலே அழைத்தேன். கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. மருத்துவ மனையிலே இருந்த நாட்களிலேயே இன்று தான் நான் சற்று உணர்ச்சி வயப்பட்ட நாள் என்று சொல்ல வேண்டும். ஆனால் மருத்துவர்கள் மாற்றி மாற்றி பல முயற்சிகளைச் செய்து என்னை சாதாரண நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தார்கள். டாக்டர் மார்த்தாண்டம், டாக்டர் தணிகாசலம், டாக்டர் மகேஷ் போன்றவர்கள் யாரும் வீட்டிற்குச் செல்லவே இல்லை. என் அறையிலேயே அன்று இரவு முழுவதும் தூங்காமல் என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். என் தலையைப் பிடித்துக் கொண்டே நின்ற தயாளுவிற்கு சில நிமிடங்கள் கூட நிற்க முடியாது, ஆனால் அப்போது இரண்டரை மணி நேரம் தொடர்ந்து நின்று கொண்டே இருந்தது. தொலைபேசியில் செய்தியை கேட்டு ராஜி அழுது கொண்டே உள்ளே நுழைந்தது. எனக்கு ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக அதற்கு நான் ஆறுதல் கூற வேண்டியதாயிற்று.

4.30 மணிக்குப் பின்னர் நான் உறங்கி விட்டேன். சில மணி நேரங்கள் உறங்கி எழுந்த போது நான் சாதாரண நிலைக்கு திரும்ப வந்ததை உணர்ந்தேன். அப்போது தான் எல்லோருக்கும் ஒரு நிம்மதி பிறந்தது. எனக்கும் "மறு பிறவி" எடுத்தது போன்ற ஒரு உணர்வு தோன்றியது. மருத்துவர்களும் அதன் பின்னர் தான் பெருமூச்சு விட்டனர். அன்றைக்கே எனக்கு ஏதாவது ஆகியிருந்தால் இன்றைக்கு சில பேருக்கு வசை பாடுவதற்கு ஆள் கிடைக்காமல் போய் இருக்கும்!

16-2-2009

இன்று எனக்கு ரத்த பரிசோதனை மற்றும் இதய எக்ஸ்ரே போன்றவை எடுக்கப்பட்டு, அனைத்தும் சரியாக இருப்பதாக தெரிய வந்தது.

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இன்று நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றினார். தொலைக் காட்சியில் முழு உரையையும் கேட்டேன். நிதி நிலை அறிக்கை குறித்து எனது கருத்துகளை வெளியிட்டேன். மத்திய நிதி அமைச்சருக்கு என் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டேன்.

கழகப் பொருளாளரும், இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி மு.க. ஸ்டாலின் பிப்ரவரி 21ஆம் தேதியன்று சென்னை மற்றும் மாவட்ட தலை நகரங்களில் இளைஞர் அணியின் சார்பில் "இளைஞர் சங்கிலி" ஒன்றினை நடத்த என்னிடமும் பொதுச் செயலாளரிடமும் இன்று அனுமதி கேட்டார். அவ்வாறே நடத்திடுமாறு அனுமதியும் வழங்கினோம்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் தம்பி துரைமுருகன் என்னையும், பொதுச் செயலாளரையும் சந்தித்து, இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை துணைக் குழுவின் சார்பில் டெல்லி சென்று குடியரசு தலைவர் அவர்களையும், சோனியா காந்தி அவர்களையும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாக நிரந்தர தீர்வு காண உதவிட வேண்டுமென்று 17ஆம் தேதியன்று கோரிக்கை வைக்க அனுமதி கேட்டனர். அதற்கும் அனுமதி வழங்கினோம்.

அது போலவே அரசு தலைமைக் கொறடா தம்பி அர. சக்கரபாணி எங்களைச் சந்தித்து, 17ஆம் தேதி மாலையில் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுவதற்கான அனுமதியைக் கோரினார். அதற்கும் அனுமதி வழங்கினோம்.

17-2-2009

அறுவை சிகிச்சை முடிந்து இன்றோடு ஆறு நாள். இருமல் காரணமாக என்னால் தொடர்ந்து தூங்க முடியவில்லை. நுரையீரல் பயிற்சி அளிக்கப்பட்டது. கால் வலி மீண்டும் இன்று தலை காட்டியது. உடனடியாக வலி நிவாரணத்திற்காக ஊசி

போட்டு வலியைக் குறைத்தனர். கால் பகுதியில் "ஸ்கேன்" எடுக்கப்பட்டு, ரத்த ஓட்டம் சீராக இருப்பதை மருத்துவர்கள் கண்டு திருப்தியடைந்தனர்.

இன்று தான் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை. ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை அறிக்கை ஆனாலும், ஆளுநர் உரை ஆனாலும் தி.மு. கழக ஆட்சி நடைபெற்ற போதெல்லாம் இவைகளுக்காக சுமார் பதினைந்து நாட்களாவது அந்தந்த துறையின் அதிகாரிகளோடு அமர்ந்து நீண்ட நேரம் விவாதித்து ஒவ்வொரு திட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக பாடுபடுவது என் பழக்கம்.

அதிகாரிகள் தயாரித்து அனுப்பும் அறிக்கைகளில் வெறும் கையெழுத்தை மட்டுமே போட்டு, ஒப்புதல் அளித்துப் பழக்கப்பட்டவன் நானல்ல என்பதை அந்தந்த துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளே அறிவார்கள். திரும்பத் திரும்ப அவைகளைப் படிக்கச் செய்து, அவற்றிலே எப்படியெல்லாம் மாற்றம் செய்யலாம் என்று யோசித்து - செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு - இன்னும் சொல்ல வேண்டுமேயானால் - நாளைய தினம் நிதி நிலை அறிக்கை வருகிறது என்றால், அதற்கு முதல் நாள் நள்ளிரவில் கூட தலைமைச் செயலகம் சென்று, "ப்ரூப்" சரி பார்த்து விட்டு வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு மருத்துவ மனையிலே நான் இருந்த காரணத்தால், நிதி நிலை அறிக்கைக்கு முதல் நாள் தலைமைச் செயலகம் செல்லவில்லை.

ஆனால் நேரில் செல்லவில்லையே தவிர, பல முறை நிதித் துறை செயலாளரோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அப்படி மாற்றுங்கள், இப்படி மாற்றுங்கள் என்று சொல்லிக் கொண்டு தான் இருந்தேன். ஆனால் அந்தத் துறையின் அதிகாரிகளும் அலுப்பு படாமல், என் விருப்பத்திற்கேற்ப ஒத்துழைப்பு கொடுத்ததைப் பாராட்டத்தான் வேண்டும்.

காலை 7 மணிக்கெல்லாம் நிதியமைச்சர், அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும், அமைச்சர்கள் மு.க. ஸ்டாலின், ஆர்க்காடு வீராசாமி ஆகியோரும் நிதித் துறை செயலாளரும் மருத்துவ மனைக்கே வந்து என் கையினால் நிதி நிலை அறிக்கையைப் பெற்றுச் சென்றார்கள். பேராசிரியர் அவர்கள் எனக்கு அணிவித்த

பொன்னாடையை திரும்ப நான் அவருக்கே அணிவித்து, நிதி நிலை அறிக்கையையும் அவரது கையில் கொடுத்து அனுப்பினேன்.

நிதி நிலை அறிக்கை தயாரிக்க மருத்துவ மனையில் இருந்த நிலையில் எடுத்துக் கொண்ட சிரமத்திற்கான பயனை இன்று கண்டேன். நிதி நிலை அறிக்கை அவையிலே படிக்கப்பட்டதை தொலைக் காட்சியிலே நேரடியாக ஒலி-ஒளிபரப்பினார்கள். எனவே நிதி நிலை அறிக்கை அவையிலே படிக்கப்பட்ட போதும், அதனை அவையின் உறுப்பினர்கள் எந்த அளவிற்கு மன மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள் என்பதையும் நான் காண நேரிட்டது.

நிதி நிலை அறிக்கையை அவையில் அழகாகவும், ஆணித் தரமாகவும், அவருக்கே உரிய கம்பீரத்தோடும் இரண்டு மணி நேரத்திற்கு மேல் படித்த நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தொடக்கத்திலேயே முதுகு வலியினால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை பெற்று வந்த நிலையிலும், நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் நான் சிரமங்களை ஏற்றுக் கொண்டமைக்காக தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, விரைவில் நான் நலம் பெற்று பணிக்குத் திரும்ப வேண்டுமென்ற விழைவினையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விவசாயிகளுக்குத் தரப்படும் கூட்டுறவு கடன்களுக்கு இனிமேல் வட்டியே கிடையாது என்ற அறிவிப்பு - யாருமே எதிர்பார்க்காதது - பொதுவாக இது போன்ற பெரிய அறிவிப்புகள் அரசின் சார்பில் வருகிறது என்றால் - அதைப்பற்றி பரவலாக வெளியிலே செய்தி கசிந்திடும். ஆனால் விவசாயிகளின் கடன்களுக்கு வட்டி கிடையாது என்பது அமைச்சர்களுக்கே புதிய செய்தி.

அது போலவே, விவசாயிகளுக்கு 2000 கோடி ரூபாய் புதிய பயிர்க் கடன், பெயருக்கு மட்டுமே நிலவரி என்ற அளவிற்கு குறைப்பு, வெள்ளம் பாதித்த 12 மாவட்டங்களில் அதுவும் ரத்து, ஒரு கோடிக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞரின் காப்பீட்டுத் திட்டம், 14,600 கோடி ரூபாயில் மெட்ரோ ரெயில் திட்டம், ஏழையெளிய மக்களுக்கு 1 லட்சத்து 35 ஆயிரம் காங்க்ரீட் வீடுகள், ஒரு லட்சம் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள், அடுக்கடுக்கான வரிச் சலுகைகள் என்பன

போன்ற எண்ணிலடங்கா சாதனைகள், சாதனைகள் கொண்ட நிதி நிலை அறிக்கை.

நிதி நிலை அறிக்கை படிக்கப்பட்டதும், மூத்த அமைச்சர்கள் எல்லாம் மருத்துவ மனைக்கு வந்து பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள். என்னுடைய வாழ்க்கையில் நான் எப்போதும் தொடர்ந்து மகிழ்ச்சியாக இருப்பதில்லை. மகிழ்ச்சியாக சில மணி நேரங்களை கழித்தேன் என்றால் உடனே ஏதோவொரு பிரச்சினை வராமல் இருக்காது. அதைப் போலத் தான் நிதி நிலை அறிக்கை குறித்து மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருக்கும்போதே, சென்னை உயர் நீதி மன்றத்திற்கு, சிதம்பரம் நடராஜர் கோவில் பிரச்சினையில் தீட்சிதர்களுக்கு ஆதரவாக ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி மேல் முறையீட்டு வழக்கில் தன்னையும் இணைத்துக் கொள்வதற்காக சென்றார் என்றும் - அவர் அதற்கு சில நாட்களுக்கு முன்பு இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காக வழக்கறிஞர்கள் நடத்திய போராட்டம் குறித்து கண்டித்துப் பேசியதற்காக - சில வழக்கறிஞர்கள் சுப்பிரமணியம் சுவாமி அமர்ந்திருந்த நீதி மன்றத்திற்குள் சென்று, அழுகிய முட்டையால் அவரைத் தாக்கினார்கள் என்றும் மருத்துவ மனைக்கு எனக்கு செய்தி வந்தது. அதற்குப் பிறகு அன்று முழுவதும் நான் தூங்கவில்லை.

இந்த நாட்குறிப்பை தொடர்ந்து நாளையும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

13-3-2009

3383. நலிவும் நானும் - நாட்குறிப்பு (5)

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத் தளிக்கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்)

★★

உடன்பிறப்பே,

18-2-2009

அரசின் நிதி நிலை அறிக்கை குறித்து பல்வேறு ஏடுகளில் ஏராளமான பாராட்டுகள் வந்திருந்தன. எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரை - ஏதாவது குறை சொல்ல வேண்டுமே என்பதற்காக ஒன்றிரண்டை மிகவும் சிரமப் பட்டுத் தேடி அறிக்கையாக கொடுத் திருந்தார்கள். ஒரு சில பேர் குறை கூற முடியாமல், விரைவில் தேர்தல் வருகிறதல்லவா, அதற்காக தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை என்று கூறி - மறைமுகமாக அது நல்லதோர் நிதி நிலை அறிக்கை தான் என்பதை ஒப்புக்கொண்டார்கள். பிரதான எதிர்க்கட்சியின் சார்பில் நிதி நிலை அறிக்கை குறித்து ஜெயலலிதா நீண்டதோர் அறிக்கை விடுத்திருந்தார். அவரும் தேர்தலை மனதிலே கொண்டு தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை என்று கூறியிருந்தார். "திருமணத்திற்காக எடுத்த பட்டுப் புடவை தான்" என்ற தலைப்பில், நிதி நிலை அறிக்கை குறித்து எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்த குறைபாடுகளுக்கெல்லாம் விளக்கங்களை உடன்பிறப்பு மடலாக எழுதினேன்.

டெல்லிக்கு தம்பி துரைமுருகன் தலைமையில் சென்ற இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை துணைக் குழுவினர் சோனியா காந்தி அவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர்களுக்கான மனுவினைக் கொடுத்து விட்டு, அங்கிருந்து

தொலைபேசி மூலமாக எனக்கு தகவல் கூறினர். அந்தக் குழுவில் தமிழர் தலைவர் கி. வீரமணி, மத்திய அமைச்சர் ஆ. இராசா, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, கம்பம் செல்வேந்திரன், ஓய்வு பெற்ற நீதியரசர்களான மோகன், பி.ஆர். கோகுலகிருஷ்ணன், ஜனார்த்தனம், ஏ.கே. ராஜன், பாஸ்கரன், சாமிதுரை, சண்முகம் மற்றும் பேராசிரியர் தனபாலன் ஆகியோர் சோனியா காந்தியைச் சந்திக்கச் சென்றனர்.

இன்று மக்களவையில் கேள்வி நேரம் முடிந்ததும், மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் ஒரு அறிக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், அப்போது இலங்கையில் சண்டை நடைபெறும் முல்லைத்தீவு பகுதியில் சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிக்கியுள்ளதாகவும் அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல அந்நாட்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அதற்கான உதவிகளை செய்ய இந்தியா தயாராக இருப்பதாக கூறியதாகவும் எனக்கு தகவல் கூறினார்கள்.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, நீதி மன்றத்தில் தாக்கப்பட்டது குறித்து - காவல்துறை தலைமை இயக்குநர் திரு. கே.பி. ஜெயின் அவர்களையே உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தலைமை நீதிபதி பொறுப்பிலே இருந்த எஸ்.ஜே. முகோபாத்யாயா அவர்களைச் சந்தித்து நீதிமன்றத்தில் நடைபெற்ற சம்பவத்திற்காக வருத்தம் தெரிவிக்கக் கூறினேன். அந்தச் சம்பவம் குறித்து நான் காவல்துறை அதிகாரிகளை அழைத்துக் கேட்டபோது, அந்தச் சம்பவம் தொடர்பாக சட்டக் கல்லூரி போலீசார் 20 வழக்கறிஞர்கள் மீது வழக்குப்பதிவு செய்திருப்பதாகவும், வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மீது கைது நடவடிக்கையில் காவல் துறையினர் ஈடுபட்டிருப்பதாகவும், இரவு 10.30 மணி அளவில் வழக்கறிஞர் கினிலியோ இம்மானுவேல் என்பவர் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் கூறினார்கள். புலனாய்வுத் துறை ஐ.ஜி. அவர்களை அழைத்து, சுப்பிரமணியன் சுவாமி அவர்களோடு தொடர்பு கொண்டு, உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற சம்பவத்திற்காக நான் வருத்தம் தெரிவித்ததாகவும்,

உரிய நடவடிக்கை காவல் துறையினரால் எடுக்கப்படும் என்றும் கூறச் செய்தேன். மதுரையில் இருந்த சுப்பிரமணியன் சுவாமியோடு புலனாய்வுத் துறை சார்பில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் தெரிவித்த செய்தியைத் தெரிவித்தபோது, அவர் அதற்காக நன்றி கூறியதாகவும் நான் அறிந்தேன்.

கடந்த சில நாட்களாக உறக்கம் சரியாக இல்லாததாலும், வலது காலில் எரிச்சல் போன்ற ஒரு உணர்வு இருந்ததாலும், நரம்பியல் நிபுணர் டாக்டர் ஏ.வி. சீனிவாசன் வரவழைக்கப்பட்டு அவரது ஆலோசனையின் பேரில் பழைய மருந்துகள் சிலவற்றை மாற்றி விட்டு புதிய மருந்துகள் கொடுத்தார்கள். டாக்டர் மார்த்தாண்டம் குழுவினர் அறுவை சிகிச்சை புண்ணைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு நன்றாக ஆறி வருவதாகக் கூறினர்.

19-2-2009

இன்று காலையிலிருந்து உடல் நிலை நன்றாக இருந்தது. டெல்லியிலிருந்து வரவழைக்கப்பட்ட முதுகுதண்டு கவசம் ஒன்றை எனது உடம்பில் பொருத்தி சரி பார்த்தார்கள். அதைப் பொருத்திப் பார்ப்பதற்காக நான் இன்று முதன் முதலாக உட்கார வைக்கப்பட்டேன்.

பிற்பகலில் மருத்துவமனைக்கு வந்த செய்திகள் சரியாக இல்லை. ஆம், அன்று தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் காவல் துறையினருக்கும் போலீசாருக்கும் இடையே மோதல். தொலைபேசி வாயிலாக தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டிருந்தன.

சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கான வழக்கில் சம்பந்தப்பட்ட 20 வழக்கறிஞர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தவிர - மீதமுள்ள வழக்கறிஞர்கள் காவல் துறையினரிடம் சரண் அடைவதாகக் கூறி, காவல் நிலையத்திற்கு வந்த பிறகு கைதுக்கு ஆளாக வேண்டிய வழக்கறிஞர்கள் போலீசாரிடம் நாங்கள் கைதாக தயாராக இருக்கிறோம், ஆனால் அதே நேரத்தில் வழக்கறிஞர்களைப் பற்றி தாறுமாறாக பேசிய சுப்பிரமணியன் சுவாமி மீதும், அவருடன் வந்த ராதாராஜன் மீதும் நாங்கள்

கொடுக்கின்ற புகார் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். காவல் துறையினர் அதற்கு ஒப்புக் கொள்ளவே, வழக்கறிஞர் ரஜினி காந்த் என்பவர் அதற்கான புகார் மனுவினைக் கொடுத்துள்ளார். போலீசார் அதனைப் பெற்று வழக்கையும் பதிவு செய்துள்ளார்கள். அது தொடர்பான நகல் வேண்டும் என்று வழக்கறிஞர்கள் அடுத்த கோரிக்கை வைக்க, அதுவும் ஏற்கப்பட்டு கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து காவல்துறையினர், உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி விட்டோம். தற்போது கைதாக வேண்டியவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டபோது, சுப்பிரமணியன் சுவாமியை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் கைது செய்தால் தான் எங்களை கைது செய்ய அனுமதிப்போம் என்று ஒரு புதிய கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையொட்டித்தான் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதத்தில் தொடங்கி மோதலில் முடிவடைந்தது. இதிலே எந்தத் தரப்பு மீது தவறு என்றெல்லாம் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நான் எதையும் சொல்ல விரும்பவில்லை.

இரு தரப்பினரையும் அமைதிப்படுத்தச் சென்ற ஒரு நீதிபதி காயமடைந்ததாக செய்தி வந்ததும், காவல் துறையோடு தொடர்பு கொண்டு அனைத்து நீதிபதிகளையும் பத்திரமாக வீட்டிற்கு கொண்டு சேர்க்க ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறினேன். மோதுதல் காரணமாக நீதிமன்ற வளாகத்திற்குள் இருந்த காவல் நிலையம் கொளுத்தப் பட்டதாகவும், வாகனங்களுக்கு தீ வைப்ப தாகவும் தொடர்ந்து செய்திகள் வந்தன.

நிலைமை மோசமாவதை அறிந்த நேரடியாக நானே உயர்நீதி மன்றத்திற்குப் புறப்பட்டு செல்லலாமா என்று யோசித்தேன். மருத்துவர்கள் கண்டிப்பாக அந்த நிலையில் செல்லக் கூடாது என்றார்கள். உடனே தலைமைச் செயலாளர், மற்றும் உள்துறை செயலாளருடன் தொடர்புகொண்டு, அவர்களை உடனடியாக நீதி மன்றத்திற்கு சென்று தலைமை நீதிபதி பொறுப்பில் இருந்த நீதிபதியைச் சந்தித்து நிலைமைகளை பற்றி பேசும்படி கூறினேன். அவர்களும் அவ்வாறே புறப்பட்டுச் சென்றார்கள். அது போலவே

காவல் துறையைச் சேர்ந்த டி.ஜி.பி., கமிஷனர் ஆகியோரையும் நீதி மன்றத்திற்குச் செல்லும்படி கூறினேன். காவல் துறை கமிஷனர் அங்கே தான் இருப்பதாக தகவல் கிடைத்தது.

தலைமை நீதிபதியுடன் தொலைபேசியில் பேசுவதற்கான முயற்சியில் ஈடுபட்டேன் போன் கிடைக்கவில்லை. எனவே, நானே பொறுப்பில் இருந்த தலைமை நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் "எதிர்பாராத சம்பவம் நடைபெற்றுவிட்டது. இந்தச் சம்பவம் பற்றி உங்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவதற்கு தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர் மற்றும் தமிழக டி.ஜி.பி. ஆகியோரை அனுப்பியுள்ளேன்.

இந்தப் பிரச்சினையில் வக்கீல்கள் மீது தவறு உள்ளதா அல்லது போலீசார் மீது தவறு உள்ளதா என்பதை கண்டறிவதற்கும் இந்தப் பிரச்சினைக்கு அடிப்படை காரணம் என்ன என்பதை உறுதி செய்வதற்கும் உங்களது ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இந்தப் பிரச்சினையில் நீதி நிலை நாட்டப்படவும், தங்களது மதிப்பு மிக்க கருத்துக்களை எதிர்பார்க்கிறேன். நான் மருத்துவமனையில் இருந்தாலும், தாங்கள் என்னைப் பார்க்க விரும்பினால் ஆம்புலன்சில் வந்து உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" என்று எழுதி, பேக்ஸ் மூலமாக தலைமை நீதிபதிக்கு அனுப்பச் செய்தேன்.

தலைமைச் செயலாளரும், உள்துறை செயலாளரும் நீதி மன்றத்திலிருந்து மருத்துவ மனைக்கு எனக்கு போன் செய்து, தலைமை நீதிபதி இதுபற்றிய வழக்கினை சி.பி.ஐ. விசாரணைக்கு அனுப்ப வேண்டுமென்று எண்ணுவதாகவும், அதற்கு ஒப்புதல் தரலாமா என்றும் கேட்டனர். உடனடியாக அதற்கு ஒப்புக் கொள்ளக் கூறினேன். அவர்களும் அதை நீதிபதியிடம் தெரிவித்தவுடன் உயர் நீதி மன்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது.

இதற்கே இரவு 10 மணியாகிவிட்டது. அதன் பின்னர் தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், டி.ஜி.பி., மாநகர காவல் துறை கமிஷனர், புலனாய்வுத் துறை அதிகாரிகள் மருத்துவமனைக்கு வந்து நீதிமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும், நீதிபதிகள் தெரிவித்த கருத்துகளையும் என்னிடம் விளக்கினார்கள்.

அடுத்த நாள் சட்டமன்றத்திலே நிலைமைகளை யெல்லாம் விளக்கி அரசின் சார்பில் 110வது விதியின்கீழ் அறிக்கை வைக்க முடிவு செய்து, இரவே மருத்துவமனையிலேயே அறிக்கை தயாரிக்கப்பட்டது. பேரவையில் சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் தம்பி துரைமுருகன் அதனைப் படிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

20-2-2009

இன்றைய ஏடுகளில் எல்லாம் நீதிமன்ற நிகழ்ச்சிகள் அதிக இடத்தை எடுத்துக் கொண்டிருந்தன. உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி அவர்களும் சென்னை உயர்நீதி மன்ற தற்காலிக தலைமை நீதிபதிக்கு போன் செய்து, நடைபெற்ற சம்பவங்கள் குறித்து கேட்டறிந்தார் என்றும் ஏடுகள் செய்தி வெளியிட்டிருந்தன. எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை கொடுத்திருந்தார்கள். குறிப்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் 356வது பிரிவைப் பயன்படுத்த வேண்டும் என்றும், மத்திய அரசு நடவடிக்கை எடுத்து ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும் அறிக்கை விடுத்திருந்தார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர்; சம்பவத்திற்கு என்னைப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்.

சட்டப் பேரவையிலும் நீதி மன்றச் சம்பவங்கள்தான் எதிர்க்கட்சியினரால் பெரிதாக எழுப்பப்பட்டது. முதலில் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, நீதி மன்றப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். கேள்வி நேரத்தினை ஒத்தி வைக்க விதி இடம் கொடுக்காது என்று கூறிய போதும் கேட்கவில்லை. அ.தி.மு.க. வினர் வெளிநடப்பு செய்தனர். பா.ம.க. தொடர்ந்து குரல் எழுப்பிய காரணத்தால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர். கேள்வி நேரம் முடிந்த பிறகு அரசின் சார்பில் 110வது விதியின் கீழ் சட்டத் துறை அமைச்சர் நீதிமன்ற சம்பவங்கள் குறித்து விரிவான அறிக்கை படித்த போதிலும், அதனை ஏற்காமல் அனைத்து எதிர்க்கட்சிகளும் கூச்சல், குழப்பம் ஏற்படுத்த முயற்சித்ததால் அவர்கள் பேரவைத்தலைவரால் வெளியேற்றப்பட்டனர்.

20ஆம் தேதிய அனைத்து ஏடுகளில் ஒரு பெரிய கொட்டை எழுத்து செய்தி வெளி வந்திருந்தது. அதாவது ஜெயலலிதா ஒரு திருமண விழாவில் பேசிய பேச்சுதான். அனைத்து ஏடுகளுமே அதே தலைப்பைத்தான் வெளியிட்டிருந்தன. "காங்கிரஸ் கட்சிக்கு ஜெயலலிதா அழைப்பு" என்பதுதான் அந்தத் தலைப்பு. ஜெயலலிதா இந்த நாள் வரை காங்கிரஸ் கட்சியுடனோ, அந்த அணியிலோ இல்லை. காங்கிரஸ் கட்சியைப் பிடிக்காமல் தான் இடது சாரி கட்சிகளான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தி.மு.க. அணியிலிருந்து பிரிந்து அ.தி.மு.க. அணிக்குச் செல்வதாகக் கூறி விட்டு, ஜெயலலிதாவின் வீட்டிற்கே சென்று அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி யிருக்கிறார்கள். அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடித்த நிலையில், ஜெயலலிதா திடீரென்று அவர்களுக்கு துரோகம் செய்வதைப் போல - காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு என்ற பெயரில் - அ.தி.மு.க. வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் நீண்ட கால தொடர்பு என்றும், அ.தி.மு.க. தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற போகிறது என்றும், எந்தக் கட்சி அ.தி.மு.க. வோடு சேருகிறதோ அவர்களுக்குத்தான் இலாபம் என்றும் அந்தத் திருமண விழாவில் பேசியிருந்தார். அந்தப் பேச்சுதான் அனைத்து ஏடுகளிலும் வெளி வந்தது. இதைவிட பச்சைத் துரோகம் என்ன இருக்க முடியும் என்று சிலர் கருதினார்கள். சைவப் பெருமாட்டி உப்புக் கண்டத்தை பறி கொடுத்ததைப் போல இரண்டு கம்யூனிஸ்ட் காரர்களாலும் என்ன நடக்கிறது என்றே புரிந்து கொள்ள முடியாத நிலை.

20ஆம் தேதிய காலை ஏடுகள் இந்தச் செய்தியை பெரிதாக வெளியிட்ட பிறகு, அன்று நான் எழுதிய கடிதத்தில் என் உடல் நிலை குறித்து பேராசிரியர் வெளியிட்ட அறிக்கை பற்றியும், இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும், சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்தும் எழுதி முடித்த பிறகு ஜெயலலிதா காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுத்து பேசிய பேச்சு ஏடுகளிலே வெளி வந்ததைக் குறிப்பிட்டு - காங்கிரஸ் கட்சியையும், அதன் தலைவர் சோனியா காந்தியையும் எப்படியெல்லாம் ஜெயலலிதா இழிவுபடுத்தி பேசினார் என்பதை நினைவுபடுத்தி, காங்கிரஸ்காரர்கள் அதையெல்லாம்

நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தை முடிக்கவே நீண்ட நேரம் ஆகிவிட்டது.

ஜெயலலிதாவின் அழைப்பைப் படித்துப் பார்த்து விட்டு, காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளரும், எனது அருமை நண்பருமான வீரப்ப மொய்லி அவர்கள் தி.மு.க. வுடன் காங்கிரஸ் கூட்டணி மிகவும் உறுதியாக இருக்கிறது. ஜெயலலிதா கூறியிருப்பதைப் போன்று காங்கிரஸ் கட்சியில் எந்தத் திட்டமும் தங்களிடம் இல்லை என்று ஏடுகளுக்கு பதிலளித்தார்.

மாலையில் மருத்துவமனையில் படுக்கையில் இருக்கின்ற நிலையிலே - தொலை ஒளி பரப்பு (வீடியோ கான்பரன்ஸ்) மூலமாக - சென்னை பாடி சந்திப்பில் கட்டப்பட்டுள்ள புதிய உயர் மட்ட சுற்று வட்ட மேம்பாலத்தினை திறந்து வைத்தேன். நான் போரூரில் மருத்துவமனையில் இருந்து தொலை ஒளிபரப்பு மூலமாக பாலத்தை திறந்து வைக்க - நிதி அமைச்சர் பேராசிரியர், மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, கே.பி.பி. சாமி, செ. குப்புசாமி எம்.பி., மேயர் சுப்பிரமணியம், சட்டமன்ற உறுப்பினர்கள் சிவாஜி, ப.ரங்கநாதன் ஆகியோர் பாடியிலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உரையாற்றினார்கள். தொலை ஒளி பரப்பில் நான் பேசும்போது - நல்ல பரிபாலனம் செய்கின்ற அரசுக்கு தொல்லைகள் தர சிலர் நினைப்பது சரியல்ல, கழக அரசைக் கவிழ்க்க நினைக்கும் சில சதிகாரர்களின் திட்டத்திற்கு பயப்படாமல் நம்முடைய நேர்மையான பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம் என்று கூறினேன்.

அறுவை சிகிச்சை முடிந்து ஒன்பது நாட்கள் ஆகிவிட்டது. முதுகு தண்டு கவசம் பொருத்தப்பட்டு, சக்கர நாற்காலியில் அமர்த்தப்பட்டு, அறையின் உள்ளேயே சிறிது நேரமும், பின்பு தங்கியிருந்த அந்த ஏழாவது தளத்தையும் சுற்றி வந்தேன். அங்கே எனக்காக காத்திருக்கும் பார்வையாளர்களில் ஒரு சிலரை நாற்காலியிலே அமர்ந்தவாறே சந்தித்தேன்.

காவல் துறை அதிகாரிகளை அழைத்து உயர் நீதி மன்றத்தின் அன்று என்ன நிலைமை என்று கேட்டேன். பதற்றம் தொடர்ந்து

நீடிப்பதாகவும், நீதிபதியின் உத்தரவின் பேரில் போலீசார் யாரும் அங்கே வரவில்லை என்றும், சேத நிலைமைகளையெல்லாம் நான்கு நீதிபதிகள் ஆய்வு செய்ததாகவும், வழக்கறிஞர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், என்னுடைய உருவப்படத்தையும் சில வழக்கறிஞர்கள் எரித்தார்கள் என்றும், பத்திரிகையாளர்கள் செய்திகளை சரியாக வெளியிடவில்லை என்று கூறி, அந்தப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டார்கள் என்றும் காவல் துறையினர் என்னிடம் விளக்கினார்கள். என் உருவப் படத்தையே எரிக்கிற அளவுக்கு நான் வழக்கறிஞர்களுக்கு என்ன வஞ்சனை செய்தேன் என்று யோசிப்பதிலேயே அந்த இரவு முழுதும் கழிந்து; வலி நோயும் வாட்டத் தொடங்கியது - மறு நாள் விடிந்து; காலை ஏடுகளில் "வழக்கறிஞர்கள்" என் உருவப் படத்தைக் கொளுத்தியதாக வந்த செய்தி கண்டதும் "வாழ்க வசவாளர்கள்" என்று அண்ணா சொல்வாரே; அதே பாணியில்; "வாழ்க வழக்கறிஞர்கள்" என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். நாளையும் இந்த "டைரி" தொடரும்.

அன்புள்ள,

மு.க.

14-3-2009

3384. நலிவும் நானும் - நாட்குறிப்பு (6)

(ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை, அதைத் தொடர்ந்து தொடர் சிகிச்சைகள் இவற்றினூடே பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத் தளிக்கிறேன், இந்த தொடர் கட்டுரை மூலம்)

★★

உடன்பிறப்பே,

21-2-2009

சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் சட்ட அமைச்சர் துரைமுருகன் அறிக்கை படித்த பிறகு, அதன் மீது விவாதம் நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் எல்லாம் கூச்சல் எழுப்பி, அதன் காரணமாக அவையிலிருந்து வெளியேற்றப்படும் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து 21ஆம் தேதி காலையில் எழுந்ததும் உடன்பிறப்பு மடல் எழுத உட்கார்ந்தேன். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2002ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதியன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்த நிலையில், அதனை ஏற்காமல் அரசின் சார்பில் 110வது விதியின் கீழ் அறிக்கை மட்டுமே படிக்கப்பட்டது என்பதையும், அதன் மீது கேள்வி கேட்கவோ, பேசிடவோ யாரும் அனுமதிக்கப் படவில்லை என்பதையும் உதாரணத்தோடு எடுத்து அந்தக் கடிதத்தில் எழுதினேன்.

விளக்கத்தை எழுதி விட்டு, அதே கடிதத்தில் எப்படியோ நடந்தது நடந்துவிட்டது, இனியாவது அவை அமைதியாக, முறையாக நடைபெற அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். நீதி மன்றச் சம்பவங்கள் பற்றி அந்த மடலில் எழுதும்போது, சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. முறைப்படி விசாரணை நடைபெறும். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இதிலே வழக்கறிஞர்களா, காவல் துறையினரா என்ற வேறுபாடு கருதாமல் இருவரும் நம்மவர்கள் என்ற எண்ணத்தோடு செயல்படுவோம். ஒருவர் காக்கி உடையிலும், ஒருவர் கறுப்பு உடையிலும் இருந்தாலும் இருவரும் நம்முடையவர்களே! என்றும் எழுதியிருந்தேன்.

இன்று மாலையில் இளைஞர் அணி சார்பில் இலங்கைத் தமிழர்களுக்காக நடத்தப்பட்ட "இளைஞர் சங்கிலி"யில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்து கொண்டதாக தொலைபேசியில் செய்திகள் வந்து கொண்டே இருந்தன. இளைஞர் அணியில் பங்குபெற வந்த 154 வது வட்டத்தைச் சேர்ந்த முன்னாள் பகுதிக் கழகப் பிரதிநிதி, சிவப்பிரகாசம் என்பவர் தீக்குளித்து விட்டதாகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் படுவதாகவும் தகவல் வந்ததைத் தொடர்ந்து அவர் உயிரைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடும்படி ஸ்டாலினிடம் கூறினேன். ஆனால் எவ்வளவோ முயற்சித்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

கழகத்தின் சார்பில் அவரது குடும்பத்தாருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிதிஉதவி அளிக்கக் கூறி, அதனை பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் மு.க.ஸ்டாலின், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, அமைப்புச் செயலாளர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், பெ.வீ. கல்யாணசுந்தரம், தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் கொண்டு சென்று நேரில் அளித்தனர்.

மத்திய உள்துறை அமைச்சர், நண்பர் ப.சிதம்பரம் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, மாலையில் மருத்துவமனையில் இருந்தவாறே சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழாவிலே தொலை ஒளிபரப்பு (வீடியோ கான்பரன்ஸ்) மூலமாக கலந்து கொண்டேன். அந்த விழாவில் சென்னையில் என்னுடன் தம்பி துரைமுருகனும், சிவகங்கை யில் நடைபெற்ற விழாவில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம், தமிழக அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோரும் மற்றும் சுதர்சன நாச்சியப்பன், எம்.பி., ராமசாமி, எம்.எல்.ஏ., சுந்தரம் எம்.எல்.ஏ., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த விழா முடிந்ததும், பொதுப்பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் கேட்டுக் கொண்டவாறு, தொலை ஒளிபரப்பு முறை மூலமாகவே - தாமிரபரணி - நம்பியாறு இணைப்புத் திட்டத் தொடக்க விழாவிலே கலந்து கொண்டேன். நெல்லையில் நடைபெற்ற விழாவில் பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன், அமைச்சர்கள் டி.பி.எம். மைதீன்கான், பி. கீதாஜீவன், ராதிகா செல்வி, மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்பாவு, வேல்துரை, வசந்தகுமார், ராணி வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்று இரவு டெல்லி டாக்டர் அரவிந்த் ஜெய்ஸ்வால் சென்னை வந்து மருத்துவ மனையில் என்னைப் பரிசோதித்தார். உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும் கூறினார். மேலும் நான்கு வார காலம் ஓய்வு தேவை என்றும், படிப்படியாக உட்கார்ந்து, நின்று, நடக்கலாம் என்றும் அறிவித்தார்.

22-2-2009

இன்றைய தினம் காலை ஏடுகளில் மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர், பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேசிய பேட்டி ஒன்று வெளி வந்திருந்தது. அந்தப் பேட்டியில் "விடுதலைப் புலிகளின் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. இது கவலை அளிக்கும் விஷயமாகும். விடுதலைப் புலிகளின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத்தான் தீர்வு காண வேண்டும். ராணுவ நடவடிக்கையால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே வழியாகும். இரு தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும். முதலில், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏற்ற சுமூகமான அமைதிச் சூழல் அங்கே உருவாக்கப்பட வேண்டும். அப்படியொரு சூழல் உருவாகாத வரை எதிர் காலத்தில் தாக்குதல், பதில் தாக்குதல் என்ற நிலை அங்கு தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவானது. போர்முனைப் பகுதியில் சிக்கியுள்ள தமிழ் மக்களின் நிலை குறித்து நாங்கள் மிகவும் கவலை கொண்டிருக்கிறோம். அவர்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களது இயல்பு வாழ்க்கை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் சிறுபான்மையாக உள்ள தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் இந்தியா கேட்டுக் கொண்டிருக்கிறது. மறைந்த பிரதமர் ராஜீவ் காந்திக்கும் மறைந்த இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவுக்கும் இடையே 1987-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் அமல்படுத்தப்பட வேண்டும். அந்த ஒப்பந்தத்தின்படி அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மாகாண கவுன்சிலுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு சட்ட ரீதியிலான உரிமைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கையின் பிராந்திய ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் பாதகம் இல்லாத வகையில் அந்த நாட்டின் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டு இவை நிறைவேற்றப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வின் மூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று இந்தியா கருதுகிறது. பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டால்தான் இலங்கையில் இயல்பு நிலை திரும்பும்" என்று கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய அமைச்சர் கூறிய வாசகங்கள் மகிழ்ச்சியை அளித்தபோதிலும், போரினால் தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ள 36 ஆயிரம் பேரில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உடல் நலம் குன்றியுள்ளனர் என்றும், பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் சிக்கித் தவிக்கிறார்கள் என்றும் தொடர்ந்து செய்தி வந்ததையொட்டி, 22ஆம் தேதியன்றே பிரதமருக்கும், சோனியா காந்தி அம்மையாருக்கும் விவரமாக ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசு மருத்துவக் குழுவையும் மருந்துகளையும் அனுப்புவதற்கு தயாராக இருக்கிறது என்றும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிட மருந்து மற்றும் மருத்துவக் குழுக்களை உடனடியாக அனுப்ப விரைந்து நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

வழக்கறிஞர்கள், காவல் துறையினர் பிரச்சினை இன்னும் தீரவில்லை என்றும், வழக்கறிஞர்கள் பணிக்குத் திரும்ப மறுக்கிறார்கள் என்றும் செய்தி வந்தது. அவர்களுக்கிடையே ஆன மோதுதல் தீர்ந்து விடக் கூடாது என்பதில் சிலர் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டார்கள். வழக்கறிஞர்கள்பால் அவர்களுக்கு

உண்மையில் அக்கறை உண்டோ, இல்லையோ இந்த அரசுக்குக் கெட்ட பெயர் வர வேண்டுமென்ற அக்கறையோடு அவர்கள்தான் வழக்கறிஞர்களின் தீவிர ஆதரவாளர்கள் என்பதைப் போலச் சொல்லிக் கொண்டு காவல்துறையினர் மீது நடவடிக்கை எடு, காவல் துறையினருக்காக இந்த அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் என்றெல்லாம் அறிக்கை மேல் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர்.

எனவே உண்மை நிலவரங்களை விவரங்களாக ஒரு நீண்ட அறிக்கை விடுத்தேன். அதன் முடிவில் இரு தரப்பினரும் ஒன்றுபடுகிறோம் என்று இணக்கம் தெரிவிக்கின்ற வரையில் - மருத்துவ மனையிலே இருக்கிற நான் உண்ணா நோன்பு இருப்பதாக முடிவு செய்திருக்கிறேன் என்று அறிவித்தேன்.

இந்த அறிக்கை வெளியிட்டது தான் தாமதம், இரு தரப்பினரும் ஒன்றுபட்டார்களோ இல்லையோ, தோழமைக் கட்சிகளின் தலைவர்களும், நமக்கு வேண்டியவர்களும் மருத்துவமனையில் இந்த நிலையிலே இருக்கும்போது எப்படி உண்ணாவிரதம் இருக்கலாம் என்று கடுமையாகக் கோபித்துக் கொண்டார்கள். அரசியல் ரீதியாக ஒத்த கருத்து இல்லாத பெரியவர் ராம கோபாலன் அவர்கள் கூட மருத்துவமனைக்கே வந்திருந்து நீண்ட நேரம் காத்திருந்து என்னிடம் உண்ணா விரதம் கூடவே கூடாது என்றார்.

மருத்துவர்கள் குழுவினர் அனைவரும் இன்று என்னைச் சோதித்தனர். ஊசி மருந்துகளை குறைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக மாத்திரைகள் வழங்கப்பட்டன. மருத்துவமனையில் சேர்ந்தது முதல் 100 ஊசிகள் போட்டு என் உடலில் "சதம்" அடித்து விட்டனர் மருத்துவர்கள் என்றால் மிகையாகாது.

அன்று பிற்பகலில், மருத்துவமனையிலிருந்த வாறே, தொலை ஒளிபரப்பு மூலமாக பி.எஸ்.என்.எல்., 3 ஜி மூன்றாம் தலைமுறைக்கான தொலைபேசி சேவையைத் தொடங்கி வைத்தேன். அதற்கான முதல் தொலைபேசி அழைப்பினை நிகழ்ச்சி நடைபெற்ற சென்னை அண்ணா சாலை தொலைபேசி நிலையத்தில் மத்திய அமைச்சர் ராஜா இருந்தவாறு பெற்றுக் கொண்டார்.

23-2-2009

இன்று காலை முதல் ஏராளமான தொலைபேசிகள். உண்ணா விரதம் பற்றி பல கேள்விகள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம்

பதில் அளிக்கும் வகையில் முரசொலிக்கு "உடன்பிறப்பு" மடல் எழுதினேன். இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு இரண்டு ஆஸ்கர் விருதுகள் கிடைத்த செய்தியினை தொலைக்காட்சியில் அறிந்து உடனடியாக வாழ்த்துச் செய்தி கிடைத்து, அவர் இருக்குமிடத்திற்கே அனுப்பி வைக்கச் செய்தேன்.

முதுகில் உள்ள அறுவை சிகிச்சை புண் மீண்டும் பரிசோதிக்கப்பட்டது. ஐந்தில் மூன்று தையல்களை டாக்டர் மார்த்தாண்டம் இன்று பிரித்தார்.

24-2-2009

இன்று காலையில் மருத்துவமனைக்கு கவிப்பேரரசு தம்பி வைரமுத்து வந்தார். ஆஸ்கர் விருதுக்காக அனைவரையும் முந்திக் கொண்டு ரகுமானுக்கு வாழ்த்து அனுப்பியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். "சூரியனுக்கு சுகமில்லை" என்ற தலைப்பில் அவர் எழுதி வந்த கவிதையை அவரே எனக்குப் படித்துக் காட்டினார். அருமையான கவிதை. அதைப் படித்தவுடன் அவருக்கு நான் ஒரு அன்பு முத்தம் கொடுத்தேன்; அவர் கையில்தான்! ரகுமானுக்குக் கிடைத்த ஆஸ்கரை விட உயர்ந்த விருது எனக்குக் கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சி பெருகிடக் கூறிக் கொண்டே திரும்பினார்.

உண்ணா விரதம் இருப்பதற்கான முயற்சியில் நான் தீவிரமாக ஈடுபட்டு வருவதை அறிந்த மருத்துவக் குழுவினர் என்னிடம் வந்து சமாதானமாகப் பேசத் தொடங்கி, நான் கோபமாக மறுத்ததைக் கேட்டுக் கொண்டு போனதோடு, அவர்கள் எல்லாம் இணைந்து நான் உண்ணா விரதம் இருந்தால், அது செய்து கொண்ட அறுவை சிகிச்சையிலிருந்து தேறி வருகின்ற நிலையின் பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்றும், உடல் நலம் முழுவதுமாக தேறிய பிறகு உண்ணாவிரதம் பற்றி முடிவு செய்வதுதான் உசிதமாக இருக்குமென்றும் அறிக்கை ஒன்றை ஏடுகளில் கொடுத்து விட்டனர்.

அன்று இரத்த அளவும், கல்லீரல் மற்றும் சிறுநீரக செயல் திறனை கண்டறிவதற்கான இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்தும் சரியாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

25-2-2009

அறுவை சிகிச்சை முடிந்து 14வது நாள். டெல்லி டாக்டர் ஜெய்ஸ்வால் அன்று என்னை மீண்டும் சந்தித்தார். பிரிக்கப்படாமல் இருந்த இரண்டு தையல்களும் இன்று பிரிக்கப்பட்டன. அறுவை சிகிச்சை புண் நன்றாக ஆறி உள்ளதாகத் தெரிவித்தார்கள். என்னை படுக்கையில் இருந்து எழுந்து நிற்க வைத்தார்கள். இருக்கையிலே அமரவும் வைத்தார்கள். மருத்துவர்கள் அன்று விடுத்த அறிக்கையில் நான் மேலும் நான்கு வாரங்களுக்கு ஓய்வெடுக்க வேண்டு மென்றும், மார்ச் 1-ந் தேதியன்று இல்லம் திரும்பலாம் என்றும் அறிக்கை விடுத்தார்கள்.

வேளாண்மைத் துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் - நான் எனது உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தால், அவர் சாகும்வரை உண்ணா விரதம் இருப்பேன் என்று ஏடுகளிலேயே அறிக்கை வெளியிட்டு விட்டார்.

தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கையில் என்னுடைய உண்ணா நோன்பு மிகுந்த மனவேதனை அளிக்கிறது என்றும், வழக்கறிஞர்களும், காவல் துறையினரும் நல்ல தீர்வுக்கு ஒத்துழைத்து மனித நேயக் கடமையாற்றிட முன் வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதோடு, மருத்துவமனைக்கே வந்து எனக்கு வேண்டுகோளும் விடுத்தார்.

காயமடைந்த வழக்கறிஞர்கள் மற்றும் காவல் துறையினருக்கு இடைக்கால உடனடி நிவாரணமாக தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று பேரவையில் அறிக்கை கொடுக்கச் செய்தேன். வழக்கறிஞர்களின் முக்கிய கோரிக்கையான - குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மத்திய அரசு செய்துள்ள திருத்தத்தை தமிழகம் ஏற்காது என்றும், அதுபற்றி மத்திய அரசுக்கு கடிதம் எழுதும் என்று பேரவையில் அறிவிக்கக் கூறினேன். விடுதலை சிறுத்தைகள் இயக்கத் தலைவர்கள் திருமாவளவன், ரவிக்குமார் மருத்துவமனையிலே என்னைச் சந்தித்து உடல் நலம் கேட்டதோடு, கடலூரைச் சேர்ந்த அவர்களுடைய கட்சிக்காரர் இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து இறந்து விட்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அந்தத் தொகுதியின் கழகச் சட்டமன்ற உறுப்பினர் தம்பி அய்யப்பனும் அதற்காக கோரிக்கை மனு கொடுத்

திருந்ததை ஏற்று, கழகத்தின் சார்பில் ஐம்பதாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கிடக் கூறினேன்.

நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்கு இன்று பேராசிரியர் நீண்ட, விளக்கமான பதிலுரை அளித்தார். நகைச்சுவையும் - நாகரிகமும் கலந்த, நாட்டோர்க்குப் பயன்படும் நல்லதோர் பதிலாகும் அது!

26-2-2009

இன்றையதினம் சட்டப் பேரவைக்கு செல்ல வேண்டுமென்று பிடிவாதத்தோடு இருந்தேன். ஆனால் கண்டிப்பாக செல்லக் கூடாது என்று மருத்துவர்கள் தடுத்து விட்டார்கள். காரணம் அன்று சட்டமன்ற கூட்டத் தொடர் கடைசி நாள் என்பதால் அல்ல, நான் அன்று கடிதத்திலே "இன்று என் வாழ்விலோர் திருநாள்" என்று எழுதியிருந்ததைப் போல - அன்றையதினம் சட்டமன்றத்திலே அருந்ததியர் சமுதாய மக்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்ட நாள். அந்த மசோதாவை நானே முன்மொழிந்து நிறைவேற்றப்பட வேண்டுமென்று கருதித்தான் அன்று சட்டப் பேரவைக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தேன். மருத்துவர்கள் தடுத்து விட்ட காரணத்தால் - காலையிலே நானே எழுந்து - நான் அவையிலே இருந்தால் மசோதாவை முன்மொழிவதற்கு முன்பாகவே என்ன உரை ஆற்றுவேனோ அந்த உரையை என் கைப்பட எழுதினேன். அந்த உரையை பேரவைக்கு அனுப்பி தம்பி மு.க. ஸ்டாலினை விட்டு தீர்மானத்தை முன்மொழியும்படி கூறிவிட்டு, என்னுடைய உரையை அவையிலே படிக்கவும் கேட்டுக் கொண்டேன். அந்த என் உரை நகல்கள் எடுக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டு, ஏடுகளுக்கும் தரப்பட்டது.

காலை ஏடுகளில் மத்திய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டதாக செய்தி வந்திருந்தது. நிதித் துறை செயலாளருடன் தொடர்பு கொண்டு நம்முடைய மாநில அரசு அலுவலர்களின் நிலை என்ன என்று விசாரித்தேன். நம்முடைய அரசு அலுவலர்களுக்கும், அந்த அகவிலைப் படி உயர்வினை இரண்டொரு நாட்களில் அறிவிக்கலாம் என்று தொலைபேசியில் கூறினார். எதற்காக இரண்டொரு நாட்களுக்கு பிறகு அறிவிக்க வேண்டும், இன்றைக்கே அறிவித்தால் என்ன

என்று கேட்டேன். செய்யலாம் என்று உறுதி அளித்தார். உடனடியாக மருத்துவமனையில் இருந்தவாறே அறிவிக்கை தயார் செய்து ஏடுகளுக்கு அனுப்பினேன். அதன்படி மத்திய அரசு கொடுத்ததைப் போல அகவிலை உயர்வு மாநில அரசு அலுவலர்களுக்கும் முன் தேதியிட்டு வழங்கப்பட்டது. மறுநாளே அந்தச் செய்தியைப் பார்த்து விட்டு அரசின் பல்வேறு சங்கத்தினர் நன்றி அறிக்கைகளை ஏடுகளுக்கு கொடுத்ததோடு, ஒருசிலர் மருத்துவ மனைக்கே வந்து நன்றி தெரிவித்தார்கள்.

புதிய பிரச்சினையாக வாயிலும், நாக்கிலும் சிறு சிறு புண்கள் ஏற்பட்டன. காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் இரவிக்குமாரும், வயிறு மற்றும் குடல் சார்ந்த மருத்துவ நிபுணர் டாக்டர் பழனிசாமி அவர்களும் என்னைப் பரிசோதித்து மேலும் சில பரிசோதனைகளை மேற்கொண்டு புதிய மருந்துகளை உட்கொள்ளச் செய்தனர்.

இன்றைய தினம் மாலையில் சக்கர நாற்காலியில் (இதனை கட்டிலாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்) அமர வைத்து தரைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். மருத்துவ மனைக்கு எதிரே உள்ள அழகான தோட்டத்தில் அரை மணி நேரத்திற்கு மேல் தங்கியிருந்து, மருத்துவர்களுடனும், அமைச்சர்களுடனும் தேநீர் அருந்தினேன்.

27-2-2009

வாயிலும், நாக்கிலும் உள்ள புண்ணின் காரணத்தினால் சரிவர உணவு அருந்த முடியவில்லை. எல்லாம் மருந்துகளின் வேகம்!

இன்று மாலையும் சக்கர நாற்காலியில் அமர்ந்து கீழ்த்தளத்திற்குச் சென்று தோட்டத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்தேன். என்னைப் பார்ப்பதற்காக வந்த முக்கியஸ்தர்களை அங்கிருந்தவாறே சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

28-2-2009

ஒரு மாதத்திற்கு மேலான மருத்துவமனை வாசம் முடிந்து நாளை இல்லம் திரும்பலாம் என்று மருத்துவர்கள் கூறியிருந்ததால் இன்று மனம் மகிழ்ச்சியாக இருந்தது. ராமச்சந்திரா மருத்துவமனைக்கான இருதயப் பிரிவில், புதிதாக

அமைக்கப்பட்டுள்ள இதய மின் அலை பிரிவினை என் அறையில் இருந்தவாறே திறந்து வைக்க வேண்டுமென்றும் இதய சிகிச்சை நிபுணர், டாக்டர் தணிகாசலமும், உரிமையாளர் வெங்கடாசலமும் கேட்டுக் கொண்டதின் பேரில் அறையில் இருந்தவாறே அன்று மாலையில் அதனைத் திறந்து வைத்தேன்.

அதைத் தொடர்ந்து மறுநாள் மார்ச் 1 அன்று வீடு திரும்புவதையொட்டி மருத்துவமனை டாக்டர்கள், துணை மருத்துவர்கள், சிப்பந்திகள் அனைவரிடமும் அன்பினைப் பரிமாறிக் கொண்டு, பிரியா விடைபெற்ற நிகழ்ச்சி - அது மருத்துவமனையல்ல, நம் சொந்த இல்லம் என்பதையே என் மனத்தில் பதியச் செய்வதாக இருந்தது.

மறுநாள் 1ஆம் தேதி இல்லம் திரும்புகின்ற வழியில், கழகத்தின் பொருளாளரும், இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி ஸ்டாலின் பெரு முயற்சியெடுத்து கட்டியிருந்த "அன்பகம்" கட்டிடத்தை நான் திறந்து வைத்து விட்டுச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற் கிணங்க அதற்கும் ஒத்துக் கொண்டேன்.

1-3-2009

அன்று காலையில் விரைவில் எழுந்து விட்டேன். 33 நாட்களுக்குப் பின் இல்லம் திரும்புகிறோம் என்ற நினைவு. அன்று இல்லம் திரும்புகின்ற செய்தி அறிந்து வழியெங்கும் வரவேற்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், வேனில் இருந்தவாறே அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் மாவட்டச் செயலாளர்கள் கூறினர். அந்த வரவேற்புக் கூட்டம் ராமச்சந்திரா மருத்துவ மனை வரையிலும் சேர்ந்துவிட்டது.

அமைச்சர்களும், கழக முன்னணியினரும் என்னை வரவேற்று அழைத்துச் செல்ல மருத்துவ மனைக்கே வந்து விட்டனர். இல்லம் திரும்பும் வழியில் புதுப்பிக்கப்பட்ட "அன்பகம்" கட்டிடத்தை வேனில் இருந்தவாறே திறந்து வைத்தேன்.

இல்லத்தின் வாயிலில் என் அக்காள் மற்றொரு சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு என்னை வரவேற்கக் காத்திருந்தார். இன்று என்னைப் பெற்ற தாயும், தந்தையும் இல்லை. என் பெரிய அக்கா பெரிய நாயகமும் இல்லை. என் முதல் பிள்ளையைப் போல நானே வளர்த்த என் கண்மணி முரசொலி மாறன் இல்லை. மிச்சம்

இருப்பது என் சின்னக்கா ஒருவர்தான். குழந்தை பருவத்தில் என்னைத் தூக்கி, தூக்கி அவருடைய இடுப்பே வளைந்து விட்டது என்று ஊரார் அப்போதே பேசுவார்கள். அந்த என் சின்னக்கா, வாயிலில் எனக்காக காத்திருந்ததைக் கண்டதும் நாங்கள் இருவரும் பேச முடியாமல் உருகி விட்டோம்.

இல்லம் திரும்பி பத்து நாட்கள் ஓய்வுக்குப் பிறகு - 13.3.2009 அன்று தலைமைச் செயலகத்திற்கும் சென்றேன். செய்தியாளர்கள் குழுமியிருந்தனர். 2006ஆம் ஆண்டு மே திங்களில் நான் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வந்து அமர்ந்து கையெழுத்திட்டதும் 13ஆம் தேதிதான். இன்றும் 13ஆம் தேதி தான் என்று கூறிவிட்டு உலமாக்கள் வாரியத்திற்கான கோப்பிலே கையெழுத்திட்டேன். செய்தியாளர்களைச் சந்தித்தேன், அதிகாரிகளுடன் பிரச்சினைகளை விவாதித்தேன். காங்கிரஸ் சார்பில் என்னை வாழ்த்த வந்த சுதர்சனம் அவர்களையும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களையும் சந்தித்தேன். தொடர்ந்து உழைக்கத் தயாராகி விட்டது "மறுபிறவி" எடுத்ததாகக் கூறப்பட்ட இந்த இயந்திரம்.

(முற்றும்)

அன்புள்ள,

மு.க.

15-3-2009

3385. ஆயத்தமாகுக; அறப்போர் முனைக்கு!

உடன்பிறப்பே,

தற்போது நடைபெற்று வரும் 14வது பாராளுமன்றத்தின் பதவிக் காலம் ஜூன் திங்கள் 1ஆம் தேதியுடன் முடிந்து, ஜூன் 2ஆம் தேதி 15வது பாராளுமன்றம் அமையப் பெற வேண்டும். அது போலவே மத்திய அரசின் பதவிக் காலம் மே திங்கள் 22ஆம் தேதியுடன் முடிகிறது. எனவே புதிய அரசு மே திங்கள் 23ஆம் தேதிக்குள் பதவியேற்க வேண்டும். இதற்கான நாடாளுமன்றத் தேர்தல் முறையாக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு விட்டது.

மொத்தமுள்ள 543 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் ஐந்து கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. ஏப்ரல் 16ஆம் தேதியன்று முதல் கட்டமாக 124 தொகுதிகளுக்கும் - ஏப்ரல் 23ஆம் தேதி இரண்டாவது கட்டமாக 141 தொகுதிகளுக்கும் - ஏப்ரல் 30ஆம் தேதி மூன்றாவது கட்டமாக 107 தொகுதிகளுக்கும் - மே 7ஆம் தேதி நான்காவது கட்டமாக 85 தொகுதிகளுக்கும், மே 13ஆம் தேதி ஐந்தாவது கட்டமாக 86 தொகுதிகளுக்கும் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மே 13ஆம் தேதிதான் கடைசி கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது.

உத்தரப் பிரதேசம், காஷ்மீர் ஆகிய இரண்டு மாநிலங்களில் ஐந்து கட்டங்களாகவும் - பீகாரில் நான்கு கட்டங்களாகவும் - மராட்டியம் மற்றும் மேற்கு வங்காளத்தில் மூன்று கட்டங்களாகவும் - ஆந்திரா, அஸ்ஸாம், மணிப்பூர், ஜார்கண்ட், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப் மாநிலங்களில் இரண்டு கட்டங்களாகவும் தேர்தல் நடைபெற விருந்த போதிலும், தமிழ்நாடு உள்ளிட்ட 15 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 7 யூனியன் பிரதேசங்களில் ஒரே கட்டமாக ஒரே நாளில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

வாக்குப் பதிவு பல கட்டங்களாக நடை பெற்றாலும், வாக்குகள் மே 16-ந்தேதியன்று எண்ணப்படவுள்ளன.

மே 13ஆம் தேதிக்கும் நமக்கும் ஒரு பொருத்தம் உண்டு. 1996ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிந்து மே 13ஆம் தேதி தான் ஆளுநர் மாளிகையில் நான் முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டேன். 2004ஆம் ஆண்டு மே திங்களில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை எண்ணப்பட்டு நம்முடைய கூட்டணி நாற்பது இடங்களிலும் அமோக வெற்றி பெற்றது 13ஆம் தேதியன்றுதான். 2006ஆம் ஆண்டும் சட்டமன்றத் தேர்தல் முடிந்து மே 13ஆம் தேதி தான் நான் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். ஏன் தற்போது உடல் நலம் பெற்று 45 நாட்களுக்குப் பிறகு அரசின் தலைமைச் செயலகம் சென்றது கூட 13ஆம் தேதியன்றுதான். பெரியார், அண்ணா வழி பகுத்தறிவுவாதியாகிய எனக்கு நல்ல நாள், கெட்ட நாள் என்றெல்லாம் எழுதுவதிலும், பேசுவதிலும், நம்புவதிலும் ஆர்வமும் இல்லை, அக்கறையும் இல்லை. இருந்தாலும் ஆங்கிலேயர்களுக்கு 13ஆம் தேதி என்பது பிடிக்காத ஒன்று. தீய நாள் என்பதற்காக அந்நாளில் எச்செயல்களிலும் ஈடுபடமாட்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதே 13ஆம் தேதிதான் எப்படியோ நமக்கு பொருந்தி வந்து விட்டது. இதில் சாஸ்திர சம்பிரதாயம் ஒன்றுமில்லை.

நம்முடைய பெரியோர்கள் திருமணம் போன்ற நல்ல காரியங்களுக்கு நாள் குறிக்கும் போது, செவ்வாய்க்கிழமை என்று வந்தால் - "செவ்வாயோ, வெறுவாயோ" என்று கூறி, அந்த நாளை ஒதுக்கி விடுவார்கள். பெண்ணின் அழகுகளில் செவ்வாயும் ஒன்று எனக் கவிதை பாடுகிறோம். ஆனால் நல்ல நாள் வரிசையிலே அந்தச் செவ்வாயை வைக்காமல் அதை ஒதுக்கி விடுகிறோமே, அது சரிதானா என்று ஒரு மண விழாவிலே நான் பேசியது நினைவுக்கு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் இன்னொரு திருமண விழாவிற்கு மாலை நேரத்தில் நாள் பார்த்திருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை மாலை - 4.30 மணி முதல் 6.00 மணிக்குள் திருமணம் என்று அந்த மணமகன் அழைப்பிதழில் அச்சிட்டிருந்தார். நான் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு சரியாக 6.15 மணிக்குத் தான் அந்தத் திருமண விழாவுக்குச் சென்றேன். அப்போது நான்

ராகுகாலத்திற்குள் வரவில்லை என்று கோபித்துக் கொண்டு - தீவிர சுயமரியாதைக் காரரான மணமகன் மணப்பந்தலை விட்டு வெளியே போய் - இன்னொரு வீட்டுத் திண்ணையில் அழுது கொண்டிருந்தார். என்ன காரணம் என்று கேட்ட போது - நான் 4.30 மணி முதல் 6 மணி வரை கொழுத்த ராகுகாலத்தில் நேரம் பார்த்து மண விழா வைத்திருந்தேன், ஆனால் அந்த எண்ணம் எனக்கு ஈடேறாமல் போய் விட்டது, நீங்கள் தாமதமாக வந்ததுதான் அதற்குக் காரணம் என்று கூறினார்.

நான் அவரை சமாதானப்படுத்தி, எல்லாவற்றிலும் தீவிரம் கூடாது, எது எதற்கு கொள்கையில் உறுதி வேண்டுமோ அதில் உறுதியாக இருந்தால் போதுமானது. ஞாயிற்றுக் கிழமை 4.30 முதல் ராகுகாலம் என்று நீ நம்புகிறாயா? நம்புவதால்தானே அந்தக் காலக் கட்டத்திற்குள் திருமணத்தை வைத்திருக்கிறாய்! இதுவும் ஒரு மூட நம்பிக்கைதான் என்று அறிவுரை கூறினேன். அதற்குப் பிறகுதான் மணமகன் சமாதானம் அடைந்து மணப்பந்தலுக்கே வந்தார்.

தேதி பொருத்தம் பற்றி சில சேதிகளை எழுதுவதற்கும் இந்த 13ஆம் தேதி இப்போது பயன்பட்டிருக்கிறது அல்லவா? நிற்க.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு பல்வேறு அரசியல் கட்சிகளும் கூட்டணி அமைக்கும் பணியிலே ஈடுபட்டுள்ளன. கழகத்தின் சார்பிலும் தோழமைக் கட்சிகளுடன் கூட்டணி குறித்து பேசிடுவதற்கான குழு ஒன்று கழகப் பொருளாளர் மு.க. ஸ்டாலின், முதன்மை செயலாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் வீரபாண்டி ஆறுமுகம், க. பொன்முடி ஆகியோர் நியமிக்கப்பட்டு - அந்தக் குழுவினர் - நம்முடைய பிரதான கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் குழுவான திரு. கே.வி. தங்கபாலு, திரு. ப. சிதம்பரம், திரு. ஜி.கே. வாசன், திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், திரு. டி. சுதர்சனம் ஆகியோருடன் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை பேசியிருக்கின்றார்கள். இறுதியாக எந்தெந்த கட்சிகள் நம்முடைய அணியிலே இடம் பெறவுள்ளன, எந்தெந்த கட்சிகளுக்கு எத்தனை இடங்கள், எந்தெந்த தொகுதிகள் என்பன பற்றியெல்லாம் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற வுள்ளன.

பேச்சுவார்த்தைகள் சுமூகமாக முடிந்து வேட்பு மனு தாக்கல் ஏப்ரல் 17ஆம் தேதி தொடங்கி - ஏப்ரல் 24ஆம் தேதி வரையில்

என்று தேர்தல் ஆணையம் தேதி நிர்ணயம் செய்திருக்கின்றது. நமது அணியின் மேல்மட்ட அளவில் இத்தகைய பணிகள் நடைபெறத் தொடங்கிய போதிலும், கழக உடன்பிறப்புக்களாகிய உங்கள் பணிதான் மகத்தான பணி என்பதை நான் நன்றாகவே அறிவேன்.

கழகத்தின் சார்பில் சுமார் 1500 பேர் - 40 தொகுதிகளிலே போட்டியிட விண்ணப்பம் செய்துள்ளார்கள். 40 இடங்களிலே தி.மு.கழகம் எத்தனை இடங்களிலே போட்டியிடப் போகிறது - அது எந்தெந்த இடங்கள் என்பதெல்லாம் இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படவுள்ளன. தோழமைக் கட்சிகளோடு பகிர்ந்து கொள்ளும் இடங்களுக்கு விண்ணப்பம் செய்துள்ள உடன் பிறப்புகள் செலுத்தியுள்ள கேட்புத் தொகை திரும்ப வழங்கப்பட்டு விடும். அதன் பிறகு நமக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி தொடங்கவுள்ளது.

அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க இயலாது. கூடுமான வரை புதியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் பரவலாக உள்ளது. செய்தியாளர்கள் கூட அதுபற்றி என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அதற்காக அனைவரையுமே புதியவர்களாக நிறுத்தவும் இயலாது.

கடந்த தேர்தலுக்கும் இந்தத் தேர்தலுக்கும் இடையே தொகுதிகள் பிரிப்பதில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதிலே சில குழப்பங்களும் உள்ளன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் கடந்த தேர்தலில் புதுக் கோட்டை நாடாளுமன்ற தொகுதி என்ற ஒன்று இருந்தது. இப்போதுள்ள பட்டியலில் புதுக் கோட்டை நாடாளுமன்றத் தொகுதியே இல்லாமல் போய் விட்டது.

புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியிலே இடம் பெற்றிருந்த புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியே திருச்சி நாடாளுமன்றத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. பட்டுக்கோட்டை, பேராவூரணி சட்டமன்றத் தொகுதிகள் தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு மாற்றப்பட்டுவிட்டன. ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது. அறந் தாங்கி சட்டமன்றத் தொகுதி இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியே இல்லாமல் போய்விட்டது.

வட சென்னையிலேயிருந்த வில்லி வாக்கமும், துறைமுகமும் மத்திய சென்னைக்கும் - தென் சென்னையிலே யிருந்த திருவல்லிக்கேணி மத்திய சென்னைக்கும் - தென் சென்னையிலே யிருந்த ஆலந்தூர், தாம்பரம் ஆகிய தொகுதிகள் தற்போது திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கும் மாறிவிட்டன.

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்த அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிகள் தற்போது சிதம்பரம் நாடாளுமன்றத்திற்குப் போய்விட்டன. பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்த வரகூர் மற்றும் ஆண்டி மடம் சட்டமன்ற தொகுதிகள் இரண்டும் பெயர் மாறி அதுவும் அந்தத் தொகுதியோடு இல்லாமல் போய் விட்டன.

திருச்சி நாடாளுமன்றத் தொகுதியிலே இருந்த லால்குடி, முசிறி, மண்ணச்ச நல்லூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் - கரூர் நாடாளுமன்றத் தொகுதியிலே இருந்த குளித்தலையும் சேர்க்கப்பட்டு - பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி என்று பெயர் பெற்றுள்ளது.

இந்த மாறுதல்களையெல்லாம் புரிந்து கொண்டு தேர்தல் பணியாற்றும் முன்னோடிகளுக்கு, இவற்றை தெளிவுபடுத்தி தேர்தலுக்கான ஆக்கப் பணிகளை ஆற்றுவதற்கு உன் போன்றோர் பயிற்சி முகாம்களை அமைத்து - அவற்றின் மூலம் நமது அணியின் செயல் வீரர்கள் ஓய்வறியா உழைப்பை வழங்கியும் - உறுதியும் நம்பிக்கையும் கொண்ட செயல் புரிந்தும் - ஓங்கு புகழ் வெற்றியினை தமிழகத்தில் எல்லா தொகுதிகளிலும் பெற்று - இந்தியத் திருநாட்டில் மதச் சார்பற்றதும், மனிதநேயமிக்கதும், ஒருமைப்பாடு, இறையாண்மை இவற்றைக் கட்டிக் காக்க வல்லதுமான திட்டங்கள் பல தீட்டி - தமிழகம் உள்ளிட்ட தாய்த்திருநாடாம் இந்தியத் திருநாட்டில் - கடந்த ஐந்தாண்டு காலம் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியின் மாட்சி மீண்டும் தொடரவும் - மூட நம்பிக்கைகளை வலியுறுத்தி - முத்தான திட்டங்களை முழுமை பெற விடாமல் தடுக்கின்ற தருக்கர்தம் சூழ்ச்சி தவிடு பொடியாகவும் - புறப்படுவோம் - பொதுத் தேர்தல் எனும் ஜனநாயக அறப்போர் முனைக்கு என அழைக்கின்றேன் - உன்னையும், உன் போன்ற நமது கூட்டணியின் உடன் பிறப்புகளாம் செயல் வீரர்களையும்!

வாக்காளர்கள் சேர்ப்பு பணிகள் எல்லாம் முறையாக நடைபெற்று - அதிலே உன் போன்றோர் பணிகள் சிறப்பாக நடைபெற்றிருந்த போதிலும் - கடைசி நேரத்தில் விடப்பட்ட வாக்குகளை சரிபார்க்கும் வேலைகளில் நீ அக்கறை செலுத்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இருந்தாலும் ஞாபகப்படுத்த வேண்டிய கடமை உணர்வு எனக்குள்ளது அல்லவா? அதற்காகத்தான் இந்தக் கடிதம்.

இந்தத் தொகுதியில் நமது வேட்பாளர்தான் நிற்பார் என்று எதிர்பார்த்திருந்திருக்கலாம், அந்தத் தொகுதி தவிர்க்க முடியாத காரணத்தால் பேச்சுவார்த்தையின் போது தோழமைக் கட்சிக்குச் சென்றிருக்கலாம். எந்த தொகுதியாக இருந்தாலும், அங்கே நமது கூட்டணியின் சார்பில் யார் நின்றாலும் அது நம்முடைய தொகுதி, நம்முடைய வேட்பாளர் என்ற எண்ணத்தோடு நீ பாடுபடுவாய் என்பதும் எனக்குத் தெரியும்.

அதைப்போலவே நமது கட்சிக்குள்ளேயே இவர்தான் வேட்பாளராக வர வேண்டுமென்று சிலருக்கு எண்ணம் இருந்திருக்கலாம். அவருக்கு வாய்ப்பு கிடைக்காமல், வேறொருவருக்கு தலைமைக் கழகம் அந்த இடத்தை அளித்திருக்கலாம். நாம் நினைத்தவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வில்லையே என்று நினைக்கும் பழக்கம் எப்போதும் உனக்குக் கிடையாது. வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும் வரை விருப்பங்கள் வேறு வேறாக இருந்திருக்கலாம். ஆனால் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட பிறகு, அவரது வெற்றிக்காக உழைத்திடுவதுதான் உன்னுடைய கடமை. அதனை நினைவூட்டுவது என்னுடைய கடமை.

உடன்பிறப்பே, வாக்கு கேட்டு நீ மக்களிடம் செல்லும்போது - கடந்த ஐந்தாண்டு கால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலும் - கடந்த மூன்றாண்டு காலத்தில் தமிழகத்தில் கழக ஆட்சியிலும் என்னென்ன சாதனைகளைச் செய்தோம் என்பதை பலமுறை நான் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறேன். மத்திய, மாநில அரசுகள் மக்களுக்காக நிறைவேற்றியுள்ள சாதனைகளைச் சொல்லி தைரியத்தோடு நாம் வாக்கு கேட்கலாம்.

கடந்த 2004ஆம் ஆண்டு தேர்தலில் நம்முடைய அணியிலே இருந்த ம.தி.மு.கவும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இப்போது

ஜெயலலிதாவின் அணியிலே இடம் பெற்றுள்ளன. அந்த இரண்டு கட்சிகளைப் பற்றி 2004 ஆம் ஆண்டு தேர்தலின் போது, வாஜ்பய் முன்னிலையிலே ஜெயலலிதா கூறும்போது - தண்டமாக தமிழகத்தில் ம.தி.மு.க. என்ற பெயரில் கட்சியை நடத்திக் கொண்டிருக்கும் வாய்ச் சவடால் வைகோ என்றும்; - தடம் புரண்டு பேசும் தத்துவ பச்சோந்திகளாகிய கம்யூனிஸ்டுகள் என்றும் விமர்சித்தார். அவர் விமர்சித்ததை அந்தக் கட்சித் தலைவர்கள் மறந்து விட்டாலும் நாம் மறக்கவில்லை.

1999 ஆம் ஆண்டு மத்தியில் வாஜ்பய் பிரதமராக இருந்த போது - அந்த ஆட்சிக்கு ஜெயலலிதா எந்த அளவிற்கு சிரமங்களைக் கொடுத்தார் என்பதையும் - ஆட்சி அமைப்பதற்கான பரிந்துரை கடிதத்தைக்கூட எவ்வளவு தாமதப்படுத்தினார் என்பதையும் நாட்டு மக்கள் நன்றாகவே அறிவார்கள். அது போலவே வாஜ்பய் அரசு, தமிழக தி.மு.க. அரசைக் கலைக்க முன் வரவில்லை என்ற காரணத்தினால், மத்திய அரசுக்கு ஜெயலலிதா கொடுத்து வந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு ஆட்சியையே கலைத்த வரலாற்றையும் தமிழகம் நன்கறியும். கடந்த ஐந்தாண்டு கால ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு தி.மு.கழகம் தோழமைக் கட்சியாக இருந்து துணை புரிந்து வருவதையும் தமிழகம் நன்கறியும்.

ஜெயலலிதா இன்றைய பேட்டியில் மூன்றாவது அணி பற்றி என்னிடம் செய்தியாளர் கேட்டதற்கு, அதை மூன்றாவது கண் என்று நான் கூறியதற்குப் பதில் கூறியிருக்கிறார். மூன்றாவது கண் என்பது பொதுவாக மனிதர்களுக்கு இல்லாத ஒன்றாகும். என்றாலும்கூட மூன்றாவது அணி பற்றி நான் சொன்னதும் சிவ பெருமான் நெற்றியிலே உள்ள மூன்றாவது கண் பற்றி ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தால் தவறு செய்பவர்கள் சாம்பலாக்கப்படுவார்கள் என்கிறார் ஜெயலலிதா. உண்மையிலேயே பெரியார், அண்ணா வழி வந்த பகுத்தறிவு வாதிகள்; "முக்கண்ணனை" நம்புவதில்லை - ஆனால் ஜெயலலிதா; முக்கண்ணனை நம்பி; தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறார்! பாவம் பகுத்தறிவு!

உடன்பிறப்பே, இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து உண்மை நிலவரங்களை எடுத்துக் கூறி - மத்திய மாநில அரசுகளின் சார்பில் என்னென்ன

சாதனைகள் என்பதை யெல்லாம் எடுத்து விளக்கிட வேண்டும். குறிப்பாக சேது சமுத்திரத் திட்டத்தினை வரவிடாமல் செய்தவர்கள் யார், அவர்கள் மட்டும் தடுத்திராவிட்டால் 100 ஆண்டு களுக்கு மேலாக நாம் கனவு கண்டதும், அறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் வலியுறுத்தியதுமான அத்திட்டம் நிறைவேறியிருக்குமே, அதற்கு இடைஞ்சல் செய்தவர்கள் யார் என்பதையெல்லாம் மக்களுக்கு விளக்கிட வேண்டும். இப்படிப் பல - பல - பயனுள்ள திட்டங்களை - பாமரரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும் - தொகுத்துரைக்க வேண்டும்! நானும் தொடர்ந்து எழுதுவேன்!

அன்புள்ள,

மு.க.

18-3-2009

3386. மடல் அல்ல; மானசீக அறிவுரை!

உடன்பிறப்பே,

தேர்தலில் நிற்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி; தேர்தல், பதவி, பட்டம், பவிசு என்றெல்லாம் எதிர்பார்த்து செயல்பட்டால்; சுய மரியாதை இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புகிற பணியில் சுணக்கம் ஏற்படும் - நேர்மையான தொண்டறம் பாதிக்கப்படும் - ஊசி முனையளவு என்று தோன்றி ஊழல்; உத்திரமளவுக்குப் பெருத்து விடும் - அது புரட்சிகரமான நமது இயக்கத்தை "புலி பசித்தால் புல்லையும் தின்னும்" என்கிற அளவுக்குக் கொண்டு போய் விட்டு விடும் - என்ற எண்ணத்தை மனத்திற் கொண்டு; சுயமரியாதை இயக்கத் தின் தந்தை பெரியார் அவர்கள்; அந்த இயக்கத்தினர் பதவி சுகம் பக்கத்தில் போகாமலிருக்க; தேர்தல்களை புறக்கணித்து வந்தார்.

ஆனால்; நீதிக்கட்சி எனும் அரசியல் கட்சியைத் தலைமை வகித்து நடத்த வேண்டிய பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைவராகப் பெரியார் அவர்களும், தளபதியாக அண்ணா அவர்களும் தன்மான இயக்கத்தை யும், நீதிக்கட்சியையும் ஒருசேர வழி நடத்திய போதுதான்; வெள்ளைக்காரன் தந்த பட்டம் பதவிகளைத் துறக்க வேண்டு மென்றும் - இந்தப் பேரியக்கத்தைப் பிரபுக்கள், ஆதிக்கக் காரர்கள் கையிலிருந்து மீட்டு - இன உணர்வு ஒளிரும் வகையில் திராவிடர் கழகமெனும் ஏழை எளிய சாதாரண சாமான்ய மக்களின் பாசறையாக மாற்றி சேலத்திலே நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "அண்ணாதுரை தீர்மானம்" என்றே அதற்குப் பெயர்!

அடித்தட்டு மக்களையும், விவசாயப் பெருங்குடி மக்களையும், நடுத்தர மக்களையும் - அவர்களுள் குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிட மக்கள் ஆகியோரும் அணி அணியாகச் சேர்ந்து திராவிடர் கழகம் திக்கெட்டும் கொள்கை பரப்பிய அந்தக் கால கட்டத்தில்தான், 1949ஆம் ஆண்டில் பிரளயம் ஒன்று வந்தது போல் இயக்கத்தில் ஒரு பிளவு வந்தது. பெரியார் தலைமையில் திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணாவின் வழி காட்டுதலில் திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிட தமிழ் மக்களுக்கு இரட்டைக் குழல் துப்பாக்கியாக அமைந்து - சமுதாய முற்போக்குப் பணியை; திராவிடர் கழகமும் - சமுதாயம் முற்போக்கு அடைய அரசியல் துணையும் தேவையென்ற வகையில்; திராவிட முன்னேற்றக் கழகமும் - நிலைகள் எடுத்து இயங்கியபோது - திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் சிந்தனையோட்டத்தில் பெரியாரின் சுயமரியாதை இலட்சியங்களையும் - சாதி சமய வேறுபாடற்றதுமான சமுதாய நலத் திட்டங்களை சட்டங்களாக்குவதற்கும் - எல்லோருக்கும் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் சமூக நீதியை நிலைநாட்டு வதற்கும் - திராவிடர் கழகத்தின் பிரச்சார மெனும் பெரும் தொண்டு ஒரு புறம் இருந்தாலும், அந்தத் தொண்டினைச் செயல்வடிவம் கொடுத்து சட்ட ரீதியாக ஆக்குவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் 1920க்கு முன்பு நீதிக் கட்சியாக இருந்து ஆட்சி மன்றத்தில் அமர்ந்து சில சமுதாயச் சீர்திருத்தங்களையும் - வகுப்புவாரி உரிமையையும் அறிமுகப்படுத்துவதில் முதற் கட்ட வெற்றி அடைந்ததைப் போல் இப்போதும் அந்த வெற்றி களைத் தொடர தி.மு.கழகம் ஆட்சி மன்றங்களுக்கு சென்றால் என்ன என்ற கேள்வி யெழுந்து அது விரிவாக கழகத்தின் அமைப்புகளிலே விவாதிக்கப்பட்ட போதுதான் 1956ஆம் ஆண்டு திருச்சியில் தி. மு. கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட முன்னணியினர் மற்றும் பேச்சாளர்கள், கழக அமைப்புகளின் செயலாளர்கள் அனைவருமே அண்ணா அவர்களிடத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். அதற்கு அண்ணா அவர்கள் நான் ஒருவன் மாத்திரமல்ல - இன்னும் சொல்லப் போனால் நம்முடைய

செயற்குழு, பொதுக்குழுக்கள் மாத்திரமல்ல - இந்த மாநாட்டில் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருக்கிற கழகத்தினரிடத்தில் நாம் ஆட்சி மன்றங்களுக்குச் செல்லலாமா வேண்டாமா என்பதை வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்வோம் என்று கூறியதற்கிணங்க அந்த மாநாட்டில் நடைபெற்ற வாக்கெடுப்பில் மிகப் பெரும்பாலான வாக்குகள் தி.மு.க.; தனது இலட்சியங்களையும் சமூக முன்னேற்றத்திற்கான கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு தேர்தலில் நின்று ஆட்சி மன்றங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற அளவில் தேர்தலுக்கு நிற்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

அது வரையில் இரு கழகங்களின் சார்பில் நடைபெற்ற சுய மரியாதை மாநாடுகள் - பகுத்தறிவு மாநாடுகள் - இன உணர்வு மாநாடுகள் - இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகள் - தமிழ் வளர்ச்சி மாநாடுகள் - சாதி ஒழிப்பு மாநாடுகள் அனைத்திலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் - இரட்டைக் குழல் துப்பாக்கியாக - இந்த இயக்கத்தின் கொள்கைகளை பரப்புவதற்கு மட்டுமே பயன் படுத்தப்பட்டு - அதே நேரத்தில் - தமிழ் மண்ணில் தி.மு. கழகத் தின் அரசியல் விதை செழித்து வளர்வதற்கும் பக்குவப்படுத்தப் பட்டது என்றும் கூறலாம்.

எடுத்துக்காட்டாக 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் டபிள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியனார் தலைமையில் தந்தை பெரியார் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களில் மிக முக்கியமானவை - பெண்களுக்கு சம உரிமை, அவர்களுக்கு சொத்தில் சம பங்கு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பன போன்ற புரட்சி கரமான தீர்மானங்கள். அவைகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துப்படி - குறிப்பாக திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தின் படி தேர்தலிலே நின்று வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பிலும் அமர்ந்த காரணத்தால்தான் - செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பெண் உரிமைக்கான தீர்மானங்களைப் போல - புரட்சிகரமான தீர்மானங்களை - சட்டங்களாக ஆக்க முடிந்தது என்கிற போது - அரசியல் - தேர்தல் - ஆட்சிப் பொறுப்பு - இவை சமுதாய முன்னேற்றத்திற்கானதும், சமத்துவ நெறிகளைக் கடைப்பிடிக்கக் கூடியதுமான தீர்மானங்களுக்கு உயிர் கொடுக்கும் சட்டங்களை நிறைவேற்ற முடிந்தது.

உதாரணமாக –

- சென்னை ராஜ்யத்துக்கு “தமிழ்நாடு” என்று பெயர்.
- ஒரு கோடியே 86 லட்சம் குடும்பங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி; ஒரு கிலோ ஒரு ரூபாய் வீதம்.
- தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கச் செய்து, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இத்திருநாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, ஒரு கோடியே 84 இலட்சம் குடும்பங்களுக்கு 80 கோடி ரூபாய் செலவில் பொங்கல் பரிசாக அரிசி, பருப்பு, வெல்லம் ஆகியன.
- 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7000 கோடி ரூபாய் கூட்டுறவு கடன் ரத்து.
- உழவரும் நுகர்வோரும் பெரும்பயன் அடைந்திட மாநிலமெங்கும் 117 உழவர் சந்தைகள் புதுப்பொலிவுடன் திறப்பு.
- 3 லட்சத்து 74 ஆயிரத்து 357 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 104 கோடியே 97 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.
- 1374 கோடியே 54 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் இதுவரை 56 லட்சத்து
- ஆயிரத்து 557 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள்.
- 220 கோடி ரூபாய் செலவில் 11 லட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப் புடன் இலவச எரிவாயு அடுப்புகள்.
- 2 லட்சத்து 10 ஆயிரத்து 289 ஏக்கர் நிலம் 1 லட்சத்து 75 ஆயிரத்து 159 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசம்.

- 6 இலட்சத்து 54 ஆயிரத்து 308 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.
- 73 இலட்சம் குழந்தைகள், மாணவர்களுக்கு வாரம் 3 முறை முட்டைகள், வாழைப்பழங்கள்.
- தமிழ் வழியில் பயிலும் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும் 10, 12ஆம் வகுப்புகளின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.
- 24 லட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 2லட்சத்து 99 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பஸ் பாஸ்.
- 2 லட்சத்து 14 ஆயிரத்து 189 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 335 கோடியே 89 லட்சம் ரூபாய் திருமண நிதி உதவி.
- 10 லட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் நிதி உதவி.
- 1 லட்சத்து 42 ஆயிரத்து 369 கைத்தறி நெசவாளர்களுக்கும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 182 விசைத்தறி நெசவாளர் களுக்கும், சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்ற 2 லட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.
- 3 லட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 176 கோடியே 15 லட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித்தொகை.
- 3 லட்சம் இளைஞர்களுக்கு அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள்.
- 15 லட்சத்து 29 ஆயிரத்து 582 முதியோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை.

❖ 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்களுக்கு கால முறை ஊதியம், ஓய்வூதியம்.

இவை அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்க முடிவெடுத்து நின்று - வென்று - ஆட்சிப் பொறுப்பில் 19 ஆண்டுக் காலம் இருந்ததால் - இருப்பதால் ஏற்பட்டுள்ள பயன்கள் என்பதை வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போர் எவரும் மறுக்க முடியாது.

1949 தொடங்கி மக்களிடையே தொடர் பிரச்சாரம் செய்து அதன் பிறகும் நாமே முடிவெடுத்து செயல்படாமல் - 7 ஆண்டுகள் பொறுத்திருந்து 1956இல் திருச்சி மாநாட்டில் திரண்டிருந்த மக்களிடம் கருத்து கேட்டு - அவர்கள் வழங்கிய கருத்தின் அடிப்படையில் முடிவெடுத்து - 1957இல் பொதுத் தேர்தலிலே ஈடுபட்டோம். அப்போது அண்ணா தலைமையில் 15 பேர் வெற்றி பெற்றோம். அதன் பிறகு நடை பெற்ற 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் - 50 பேர் வெற்றி பெற்றோம் என்றாலும், அண்ணா காஞ்சி மண்ணில் வெற்றி வாய்ப்பை இழந்தது - 50 பேர் பெற்ற வெற்றியை மகிழ்ந்து கொண்டாட முடியாத நிலைக்கு நம்மை மட்டுமல்ல - நாட்டையே உள்ளாக்கியது. அதன் பிறகு, 1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

உடன்பிறப்பே, எனக்கு நன்றாக நினை விருக்கிறது. சென்னையில் நுங்கம்பாக்கத்தில் அண்ணா இல்லத்தில் மாடி தாழ்வாரத்தில் அண்ணா அவர்களும், நாவலர் நெடுஞ்செழியனும், நானும், பேராசிரியர் அன்பழகனாரும், அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசனும் மற்றும் கழக முன்னணியினரும் ஆவலோடு அமர்ந்திருக்கிறோம். எதற்காக அந்த ஆவல் தெரியுமா?

1967இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் அன்று பிற்பகலில் இருந்து வானொலி மூலமாக வெளியிடப்பட்டன. பிற்பகல் 3 மணி அளவில் மொத்தம் எண்ணப் பட்ட வாக்குகள் அடிப்படையில் 50 தொகுதி களில் தி.மு. கழகம் வெற்றி பெற்றது என்று வானொலி அறிவித்தது. அடுத்து எந்த தொகுதி, யாருக்கு வெற்றி என்று அறிவதிலே தான் எங்களுடைய கவனம் எல்லாம் இருந்தது. 50 என்ற எண்ணிக்கைக்கு பிறகு 60, 70, 80, 100 என்று

கழக வேட்பாளர்களின் வெற்றிச் செய்திகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன.

அண்ணாவோடு அமர்ந்திருந்த எங்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. நுங்கம்பாக்கம் தெருக்களில் எல்லாம் கழகத்தினர் பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்தனர். 100 பேர் வெற்றி என்றிருந்த கணக்கு - 101 என்றும்,

102 என்றும் பெருகத் தொடங்கியது. எல்லோருடைய முகத்திலும் "பளீர்" சிரிப்பு. அண்ணா முகம் மாத்திரம் வாடியிருந்தது. நாங்கள் கேட்டோம் அண்ணாவைப் பார்த்து. "என்ன அண்ணா? வெற்றி செய்திகள் வரவர நாங்கள் எல்லாம் மகிழ்ந்து கொண்டாடுகிறோம். நீங்கள் மாத்திரம் சோகமாக இருக்கிறீர்களே" என்று கேட்டோம். அதற்கு அண்ணா சற்று தழுதழுத்த குரலிலே சொன்னார். **"நாம் பெற்ற வெற்றி 100 பேர் என்ற அளவில் நின்றிருந்தால் ஒரு பலமான எதிர்க் கட்சியாக இருந்து - சட்டமன்றத்திலே செயல்பட்டு - மேலும் நம்முடைய கழகத்தை வலிவும் பொலிவும் உள்ளதாக ஆக்கியிருக்கலாம். 100க்கு மேல் போய் விட்டது. ஆட்சி வந்து விட்டால் கழகத்தை எப்படி காப்பாற்ற போகிறோமோ என்ற சிந்தனைதான் என் சோகத்திற்குக் காரணம்" என்று சொன்னார்.**

எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது அண்ணாவின் நிலை. பரிசு சீட்டில் திடீரென்று ஆயிரமோ, பத்தாயிரமோ கிடைத்தால் - அது கிடைத்தவன் எப்படி துள்ளிக் குதித்து என்னென்ன செலவு செய்யலாம் என்று "டாம்பீகமாக" கனவுகளைக் காண்பானோ - அது போன்று கழகமும் இருந்து விடக் கூடாதே என்பது தான் அண்ணா அவர்களுக்கு ஏற்பட்ட கவலை. அந்தக் கவலை அண்ணாவிற்கு ஏற்படாமல் நாங்கள் எல்லாம் துணை நிற்போம் என்று அவருக்கு உறுதி அளித்த பிறகுதான் 1967இல் கிடைத்த அந்த வெற்றி மலரின் இதழை முகர்ந்து பார்க்க முனைந்தார்.

அவர் அன்று அடைந்த கவலையின் எதிரொலி போல - சில மாதங்களுக்கெல்லாம் தஞ்சை கீழ்வெண்மணியில் நடைபெற்ற நிகழ்ச்சி அமைந்து அவர் கண்களைக் குளமாக்கியது. உடனடியாக அங்கே செல்லுமாறு அண்ணா என்னையும், அமைச்சராக இருந்த சத்தியவாணி முத்துவையும், மன்னையையும் பணித்தார்.

அதற்கடுத்து - இரண்டாண்டு கால அவருடைய ஆட்சியிலே தான் பஸ் தொழிலாளர்கள் - மாணவர்கள் கலவரம். மாணவர் விடுதிக்கு அண்ணாவே நேராகச் சென்றார். என்னையும், அமைச்சர் கோவிந்த சாமியையும் கிளர்ச்சி நடக்கும் இடத்திற்கே அனுப்பினார். அமைதியை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகளும், அவர் பட்ட பாடுகளும் இன்றைக்கும் என் கண் முன்னால் காட்சிகளாக நிற்கின்றன.

இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு - அவரை நம்மிடமிருந்து பிரிக்க யாராலும் இயலாது என்று நாம் இறுமாந்திருந்த நேரத்தில் - "இதோ, நான் இருக்கிறேன், அந்தக் காரியத்தைச் செய்ய" என்று ஒரு கொடிய நோய் அவரைப் பற்றிக் கொண்டு - உள்ளத்தால் அல்ல, உடலால் அவரை நம்மிடமிருந்து பிரித்தது.

அவருக்குப் பிறகு அவர் ஏற்றிருந்த பொறுப்பு என் தோளில் சுமத்தப்பட்டது. அந்தப் பொறுப்பை ஏற்கும்போதும் சரி, இன்றைக்கும் சரி - அதன் பின் தேர்தல் முடிவுகள் வரும்போ தெல்லாம் அண்ணா சொன்னாரே - **"நாம் பெற்ற வெற்றி 100 பேர் என்ற அளவில் நின்றிருந்தால் ஒரு பலமான எதிர்க் கட்சியாக இருந்து - சட்டமன்றத்திலே செயல்பட்டு - மேலும் நம்முடைய கழகத்தை வலிவும் பொலிவும் உள்ளதாக ஆக்கியிருக்கலாம். 100க்கு மேல் போய் விட்டது. ஆட்சி வந்து விட்டால் கழகத்தை எப்படி காப்பாற்ற போகிறோமோ என்ற சிந்தனைதான் என் சோகத்திற்குக் காரணம்"** - என்ற அந்த வாசகம் தான் என் இதயத்தின் அடித்தளத்தில் பதிந்து என்னை இயக்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அண்ணாவிற்குப் பிறகு - அவர் வழியில் ஆட்சி நடத்தி வந்த நான் - முதல் சோதனையாக சென்னை மாநகராட்சி மன்றத்தில் "மஸ்டர் ரோல்" என்ற ஒரு பயங்கரமான பூதத்தைச் சந்தித்து - அதை விரட்டியடிக்க வேண்டிய நிலையில் ஆட்சி சக்கரத்தை சுழற்ற வேண்டியவன் ஆனேன். சட்டமன்றத்தில் ஒரு நாள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சென்னை மாநகராட்சி மன்றத்தில் "மஸ்டர் ரோல்" ஊழல் என்று ஆரம்பித்ததுதான் தாமதம் - நான் உடனே எழுந்து "எனக்கு அந்த ஊழலைப் பற்றித் தெரியும்;" என்று கூறியதோடு - அதிலே ஈடுபட்டவர்கள் யார் யார் என்பதும்

- அவர்கள் யாராக இருந்தாலும் சட்டம் அவர்களைக் கொட்டியே தீரும் என்பதையும் எடுத்துரைத்து - நானே அப்போதே மேலும் அறிவித்தேன். சென்னை மாநகராட்சி மன்றம் உடனடியாகக் கலைக்கப்படும் - மஸ்டர் ரோல் ஊழலில் ஈடுபட்டோர் யாராக இருந்தாலும் - எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - அவர்கள் ஆளுங்கட்சி ஆனாலும், எதிர்க் கட்சி ஆனாலும் - என் ஆருயிர் நண்பர் ஆனாலும் - அல்லாதவரானாலும் தண்டிக்கப்படுவார்கள் - என்றுரைத்தேன்.

அதற்கேற்ப மாநகராட்சி மன்றத்தில் மேயராக இருந்தவர்கள், முக்கிய புள்ளிகளாக இருந்த உறுப்பினர்கள் - பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுமார் 25 பேர் அந்த ஊழலில் சிக்கியவர்கள் அன்று கண்டு பிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு கூண்டிலே ஏற்றப்பட்டனர்.

இந்தப் பாரபட்சமற்ற நடவடிக்கைகளை புகழ்ந்து அந்த வழக்கை நடத்திய ஒரு பெரிய போலீஸ் அதிகாரி பின்னாளில் ஒரு பத்திரிகையில் நான் தயவு தாட்சண்யமின்றி எடுத்த நடவடிக்கையை பாராட்டி எழுதினார்.

அதைப்போல தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கியில் என்னுடைய ஆருயிர் நண்பர், இளமைக்கால நண்பர், வழக்கறிஞர், கழகத்தின் அந்தப் பகுதியைக் கட்டிக் காத்த தூண் போன்றவர் கையாடல் செய்தார் என்ற குற்றச் சாட்டை விசாரித்து அவரை கைது செய்யவும், அவருடைய வழக்கறிஞர் பதவியே பறி போக வுமான நிலை நான் எடுத்த நடவடிக்கையால் ஏற்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள்.

அதைப் போலவே என் உறவினர் ஒருவருக்கு செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பட்டா வழங்கிய செய்தியை அறிந்ததும் - அதைப் போலவே வானூர் தொகுதியில் கழகச் சட்டப் பேரவை உறுப்பினருக்கு பட்டா வழங்கிய செய்தியை அறிந்ததும் - அந்த இடங்களைப் பறிமுதல் செய்ய ஆணையிட்டவன் நான் என்பதையும் பலரும் அறிவார்கள்.

நான் ஆட்சிப் பொறுப்பிலோ - பதவிப் பொறுப்பிலோ இருந்து புரிந்த சாதனைகளை விட - அவை என் புகழ் பாடும் கல்வெட்டுகள்

என்பதை விட - நான் பதவிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் - தவறு செய்வோர் எவராயினும் - என் நண்பராயினும் - கழகத்த வராயினும் - உற்றார் உறவினராயினும் - பெற்ற பிள்ளைகள் ஆயினும்; அறவழி நின்று அவர்களைக் கண்டிப்பேன், தண்டிப் பேன் என்பது தான் என் சாதனைகளை விளக்கும் கல்வெட்டு களை விட - உயர்ந்த கல்வெட்டாகும்.

இப்போது பதவிகளில் இருப்போரும் - பதவி பெற விழைவோரும் - யார் தலைமையிலே இயங்குகிற இயக்கத்தின் கீழ் நாம் பணி புரிய வேண்டும் என்பதை நினைவிலே அழுத்தமாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் தொடக்க காலத்திலிருந்து இன்றைக்கும் தொடர் வெற்றி பெற தொண்டூழியம் செய்ய தோள் தட்டிப் புறப்படும் கழகத்தினர் அனைவருக்கும் ஒரு மானசீக அறிவுரையாகவே இந்த மடல் தீட்டியுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

21-3-2009

3387. அடடா, அவர்தானா இவர்?

உடன்பிறப்பே,

"பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே" என்று ஒரு பாடல் வரி உண்டு. அதற்கு இன்று ஒட்டுமொத்தச் சான்றாக தமிழகத்திலே விளங்கி வருபவர் ஜெயலலிதாதான். அறிக்கைகள் என்ற பெயரால் தன்னால் முடிந்த அளவிற்கு மக்கள் நம்புகிறார்களோ, இல்லையோ - எதையாவது எழுதி மக்களை நம்ப வைக்கும் முயற்சியில் அன்றாடம் முயன்று வருகிறார்.

22-3-2009 தேதியிட்ட அறிக்கையில் ஜெயா "கச்சத் தீவை இந்தியா இலங்கைக்கு தாரை வார்த்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் கை கட்டி, வாய் பொத்திக் கொண்டிருந்தவர் தான் தற்போது தமிழகத்தில் முதலமைச்சராக இருக்கிறார்" என்ற பச்சைப் பொய்யைச் சொல்லியிருக்கிறார். கச்சத் தீவை இந்தியா தாரை வார்த்த போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் நான் இருந்ததாகச் சொல்கிறாரே, நான் தெரிவித்த எதிர்ப்பை ஆதார பூர்வமாக எடுத்துச் சொன்னால் - எழுதியது தவறு என்று மன்னிப்பு கேட்க ஜெயலலிதா தயாராக இருக்கிறாரா?

15-8-1991 அன்று ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து கோட்டையிலே சுதந்திர தின விழாவினைக் கொண்டாடிய போது ஆற்றிய உரைக்கு அனைத்து ஏடுகளும் கொடுத்த தலைப்பே, "கச்சத் தீவை மீட்க ஜெயலலிதா சபதம்" என்பது தான். "கச்சத் தீவை திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது. இது எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஒரு வாக்குறுதியாகும். இந்த மண்ணின் ஒரு பகுதியை திரும்ப மீட்கும் சூளுரையாக இதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்று 91ஆம் ஆண்டு முழங்கிய ஜெயலலிதா 1991 முதல் 1996 வரையிலும் - பிறகு 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும் பத்தாண்டு காலம்

முதலமைச்சராக இருந்த போது கச்சத் தீவை ஏன் மீட்கவில்லை. 91ஆம் ஆண்டு அவர் செய்த சபதம் என்னவாயிற்று? அதற்காக அவர் மத்திய அரசை எதிர்த்து நடத்திய போராட்டங்கள் என்ன? அவ்வப்போது மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதைத் தவிர வேறு என்ன கிழித்தார்? "கச்சத் தீவு" என்றால் கச்சேரிக்கு எடுத்துச் செல்லும் வீணை என்று நினைத்துக் கொண்டு; அதை "மீட்டுவேன்" என்று சபதம் செய்திருப்பார். பாவம்; அவர் கோட்டை கொத்தளத்தில் சபதம் செய்து ஆட்சியிலே இருந்த போது எதை மீட்டிக் கொண்டிருந்தார்? ஆனால் இன்று எழுதியுள்ள அறிக்கையிலே தனது ஆட்சிக் காலத்தில் கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன் என்று பொய்யாகத் தெரிவித்துள்ளார். தற்போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கழகம் ஏன் ஆட்சிப் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்யக் கூடாது என்று வக்கணையாக அறிக்கை விடும் ஜெயலலிதா அப்போது பத்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்த போது - கச்சத் தீவை மீட்கும் பிரச்சினையிலே தனது சபதத்தை நிறைவேற்ற அ.தி.மு.க. ஆட்சி ராஜினாமா செய்யும் என்று அறிவித்தது உண்டா? ராஜினாமா செய்ததுதான் உண்டா? விடுதலை நாள் விழாவிலே கோட்டை கொத்தளத்திலே இருந்துகொண்டு வாய் சவடாலாக முழங்கி விட்டு - அந்தப் பேச்சு ஏடுகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் வெளி வந்ததே தவிர - வேறு என்ன செய்தார்? இரண்டு மூன்று கடிதங்களை மத்திய அரசுக்கு எழுதிவிட்டு, ஒரு முறை பிரதமரிடம் நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்ததோடு சரி. ஆனால் நான் ஏதோ ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் கை கட்டி, வாய் பொத்திக் கொண்டிருந்ததாக அறிக்கையிலே வாய் நீளம் காட்டியிருக்கிறார்.

மத்திய அரசால் கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்ட போது தி.மு.க. எதிர்ப்பு தெரிவிக்க வில்லை என்பது உண்மையா?

1974ஆம் ஆண்டிலேயே ஆகஸ்ட் 21ஆம் தேதியன்று தமிழகச் சட்டமன்றத்தில் "கச்சத் தீவு" பற்றி நான் முன் மொழிந்த தீர்மானம் இதோ:

> "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு

பற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு - மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ் நாட்டு மக்களின் உணர்வு களுக்கு மதிப்பளிக்க வேண்டு மென்று வலியுறுத்துகிறது."

எனவே தி.மு.க. அப்போது வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கவில்லை. மேலும் அந்தத் தீர்மானத்தில் நான் பேசும்போது,

"கச்சத் தீவு இலங்கைக்கு அளிக்கப்படக் கூடாது, தமிழ் மக்கள் அதை விரும்ப மாட்டார்கள் என்பதைப் பற்றி பல நேரங்களில் மத்திய பேரரசுக்கு தமிழக அரசு எடுத்துச் சொல்லி இருக்கிறது. நடைபெற்ற ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும் இந்தியா கச்சத் தீவை விட்டுத் தருவது கூடாது என்ற கருத்து தமிழக தி.மு.க. அரசின் சார்பாக வலியுறுத்தப் பட்டிருக்கிறது" .....

"கச்சத் தீவு பிரச்சினையை முடிந்து விட்ட பிரச்சினையாகக் கருதாமல் ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்கின்ற முயற்சிகளை மத்திய அரசு மேற் கொள்ள வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதில் தமிழ் நாட்டு மக்கள் யாருக்கும் அல்லது அந்த மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கின்ற எந்தக் கட்சிகளுக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு எந்தவகையான நியாயமும் இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்.

தமிழக அரசை இது போன்ற பெரிய பிரச்சினைகளில் மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலைக் கேட்க வில்லை; ஆக்க பூர்வமான முறையில் பிரதமர் - முதல் அமைச்சர் இது பற்றி ஆலோசனை நடத்துவதற்கு வாய்ப்புக் கூறுகள் வழங்கப்படவில்லை என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அனைத்துக் கட்சியினுடைய தலைவர்கள் அடங்கிய கூட்டத்திலே கூட - எத்தனை முறை இது பற்றி

பிரதமரிடத்தில் தமிழக அரசின் சார்பிலே ஒரு முறையீடாக இந்த அரசு கச்சத் தீவுப் பிரச்சினையில் விட்டுக் கொடுக்கக்கூடாது என்று வலியுறுத்தியது, பிரதமருக்கு தமிழக அரசின் சார்பில் எழுதப்பட்ட கடிதத் திலே எவ்வளவு ஏராளமான ஆதாரங்களை - கச்சத் தீவு தமிழ்நாட்டுக்கு, இந்தியாவுக்குத் தான் சொந்தம் என்பதை வலியுறுத்தும் வகையில் வழங்கியது, அதைப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது என்பதையும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே எடுத்துக் காட்டி யிருக்கிறேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த ஜூன் மாதம் 29ஆம் தேதியன்று கோட்டையிலே கூடி எடுத்த முடிவினை உடனடியாக நான் தலைமை அமைச்சருக்கு எழுதியிருக் கிறேன். அது, வருமாறு :-

Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Srilanka agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India.

May I express the hope that you will take into consideration the unanimous decision contained in the Resolution and take appropriate action?

(அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு,

கச்சத் தீவின் மீது இலங்கை கொண்டாடி வரும் உரிமையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு இரு நாடுகளுக்குமிடையே சமீபத்தில் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம், மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக அமைந்துள்ளது என்று தமிழக அரசின் சார்பாகவும் தமிழக மக்களின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் ஒருமன தாக நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானத்தை கருத்திலே எடுத்துக் கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.)

★★

மேலும் அப்போது நான் ஆற்றிய உரையில்,

"1974ஆம் ஆண்டு ஜூன் 27-ம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தது. இப்போதும் சொல்கிறேன். இது பற்றி எந்தவிதமான சூசகமான தகவலையும் இந்த அரசுக்கு அறிவிக்க வில்லை. 27-ம்தேதி பத்திரிகையில் பார்த்தவுடன் பதறிப் போய் எல்லாக் கட்சித் தலைவர் களுக்கும் தந்தி கொடுத்தேன். சில பேருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தேன். சில தலைவர் களுக்கு அதிகாரிகளையே அனுப்பினேன். அவ்வளவு அக்கறையோடு இந்தக் காரியத்தில் நாங்கள் செயல் பட்டிருக்கிறோமே அல்லாமல் இதில் தமிழக அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளிப்பதில் எந்த விதத்திலும் உடந்தையாக இல்லை என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்கிறேன்."

★★

"சில மாதங்களுக்கு முன்பு கூட செய்தியாளர்கள் "கச்சத் தீவு" பற்றி கேட்ட போது கூட, கச்சத் தீவை விட்டுக் கொடுக்கும் போது, தமிழ்நாடு தி.மு.க. அரசு அதனை வன்மையாக மறுத்திருக்கிறது. அப்போது இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தார். அவர்கள் சமாதானம் செய்து - கச்சத் தீவிலே நமக்குள்ள உரிமைகளுக் கெல்லாம் வழி வகுத்து விதிகள் செய்யப்பட்டன. அந்த உரிமைகள் - தேவாலயத்திற்கும், கிறித்தவ ஆலயத்திற்கும் சென்று வருவதற்கான உரிமை, மீன்களை காய வைப்பதற்கும், மீன் பிடிப்பதற்குமான உரிமை, நம்முடைய மீனவர்கள் அங்கே தங்கள் வலைகளை காய வைப்பதற்கான உரிமை என்று பல உரிமைகள் நமக்கு இருந்தன. ஆனால் நெருக்கடி நிலைக்குப் பிறகு 1976இல் நம்முடைய ஆட்சி இல்லை. ஆளுநர் ஆட்சி தான் இருந்தது. ஆளுநர் ஆட்சியில் அந்த விதிகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டன. அது தொடர்ந்து இப்போதும் இருக்கிறது. அதை நாமும் பல முறை அந்த விதிமுறைகளை யெல்லாம் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது அதற்குரிய நேரம் வந்து விட்டதாகவே கருதுகிறேன்" என்று கூறியிருக்கிறேன்.

அண்மையில் நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் "கச்சத்தீவு" பிரச்சினை பற்றி விரிவாக எழுதியிருக்கிறேன்.

இப்போது மட்டுமல்ல, 25-7-1997 அன்று டெல்லி சென்று அப்போது பிரதமராக இருந்த குஜ்ரால் அவர்களைச் சந்தித்த போது தமிழக மீனவர்கள் இலங்கை ராணுவத்தால் தாக்கப்படுவதைக் குறித்துத் தான் எடுத்துக் கூறி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அதன் பின்னர் பல முறை பிரதமர்களிடம் இந்தக் கோரிக்கை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

17-8-1991 அன்றே "தினமணி" நாளேடு எழுதிய தலையங்கத்தில், 1974இல் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி திருமதி பண்டார நாயாகவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட, கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகு முன்னர் இதைப்பற்றி தமிழக மக்களிடம் மத்திய அரசு கலந்தாலோசிக்கவில்லை" என்று அப்போதே எழுதியிருந்தது. அதே தலையங்கத்தில், "1976இல் இந்திய நாட்டில் அமலில் இருந்த நெருக்கடி காலத்தில், மக்களை கலந்தாலோசிக்காமல் இலங்கை அரசுடன் செய்து கொண்ட மற்றொரு ஒப்பந்தத்தின் மூலம், இந்திய மீனவர்களுக்கு கச்சத் தீவின் அருகில் மீன் பிடிக்கும் பரம்பரை உரிமையும் விட்டுக் கொடுக்கப்பட்டது" என்று எழுதப் பட்டிருப்பதிலிருந்தே, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில் மீன் பிடிக்கும் உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டதாக கூறுவது அசல் மோசடியும், பித்தலாட்டமும் ஆகும்.

ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையில் இலங்கை அமைச்சர் ஒருவர் கச்சத் தீவை புனிதப் பகுதியாக அறிவிக்கப் போவதாக இலங்கை பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார் என்றும், அதற்கு மத்திய, மாநில அரசுகள் கண்டனம் தெரிவிக்கவில்லை என்றும், கண்டனம் தெரிவிக்காததால், இலங்கை அரசின் அறிவிப்புக்கு இந்திய அரசும், தமிழக அரசும் உறுதுணையாக இருக்கின்றனவோ என்ற சந்தேகம் தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாகவும் ஜெயலலிதா எழுதியுள்ளார். இந்தப் பொருள் பற்றிய அறிக்கையை 22ஆம் தேதி காலையில் வைகோ விடுத்திருந்தார். அதே பொருள் பற்றி 22ஆம் தேதி மாலையில் ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார். பொதுவாக ஜெயலலிதா அறிக்கை விட்ட பிறகு, அதே பொருள் பற்றி அடுத்த நாள் வைகோ அறிக்கை விடுவார்.

இது இலங்கை பிரச்சினை என்பதால், வைகோ அறிக்கை விடுத்து, அதனை ஜெயலலிதா பின்பற்றியிருக்கிறார் போலும்!

"கச்சத்தீவை முழுவதுமாக தனித்த புனித இடமாக இலங்கை அரசு அறிவிக்கப் போகிறதாம்" என்று தான் இவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். -

இது பற்றி விசாரித்த அளவில் - இலங்கை அரசு கச்சத் தீவை புனித பூமியாக அறிவிக்கவிருப்பதாக எந்த நோக்கமும் இல்லை என்றும், ஆனால் அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது ஜெயலலிதா மொழியிலே சொல்வதென்றால் வாய் தவறி சொல்லியிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது. எது எப்படியிருந்த போதிலும், அது உண்மையாக இருந்து அப்படி அறிவித்துச் செயல்படத் தொடங்கினால்; தமிழகக் கழக அரசு அதற்கான விளக்கம் கேட்டுப் பெற்று; அதை வன்மையாகக் கண்டிக்கவும் - மத்திய அரசுக்கு அறிவித்து - உரிய சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவும் தயங்கப் போவதில்லை.

உடன்பிறப்பே, இதில் எனக்கு என்ன ஆச்சரியம் என்றால் - திடீரென்று ஜெயலலிதாவுக்கு இலங்கை மீது இவ்வளவு இன உணர்வு மிக்க அக்கறை எப்படி வந்தது? ஏன் வந்தது? என்பது தான்.

இலங்கைத் தமிழர் படுகொலையை, அப்பாவித் தமிழர்களைக் குண்டு போட்டு இலங்கை ராணுவம் வதைப்பதை - தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கண்டித்த போதும் - பேரணிகள் நடத்திய போதும் - டெல்லி சென்று பிரதமரிடம் முறையிட்ட போதும் - திருமதி சோனியா காந்தியிடம் கோரிக்கை வைத்த போதும் - இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் துணைக்குழுவாக; தமிழகத்து நீதியரசர்களின் குழு டெல்லி சென்று திருமதி சோனியா காந்தி அவர்களையும், குடியரசு தலைவர் திருமதி பிரதிபா பட்டீல் அவர்களையும் சந்தித்த போதும் - அந்த முயற்சிகளை "கபட நாடகம்" என்றும்; உண்மையில் சிங்கள ராணுவம்; விடுதலைப் புலிகளைத் தான் வேட்டையாடுகிறார்கள்; அப்பாவித் தமிழர்களை அல்ல என்றும் - யுத்தம் என்றால் அதில் அப்பாவி மக்கள் சாவது இயற்கை தான் என்றும் - சிங்களத்துக் காளிகாதேவியாக நின்று முழங்கிய ஜெயலலிதாவுக்கு இப்போது

திடீரென்று - இலங்கைத் தமிழர் மீதும் - கச்சத் தீவு மீதும் - இவ்வளவு அக்கறை வருவானேன்? எல்லாம் தேர்தல் தேதி நெருங்குகிறது என்பதால் தானே?

ஆமாம்; "பிரபாகரனை இலங்கையில் கைது செய்து தமிழ்நாட்டிற்கு கொண்டு வருக" என்று ஜெயலலிதா; முதலமைச்சராக இருந்த போது 16-4-2002 அன்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தாரே; அந்த ஜெயலலிதா தானா; இந்த ஜெயலலிதா? அய்யோ பாவம்; அவர் தான் இவர் என்று தெளிவடைய அவர் முகமூடியைத் திறந்து பாருங்கள் என்று தான் கூறவேண்டியுள்ளது!

அன்புள்ள,

மு.க.

24-3-2009

3388. அந்த நினைவுக்கு ஒரு நன்றி!!

(கலைஞர் கவிதைக் கடிதம்)

(முன்னுரை :- கழகக் குடும்பத்தின் உடன்பிறப்புகள் - பாசமிகு தம்பிமார்கள் எல்.ஜி., செஞ்சி - அவர்களைத் தொடர்ந்து தம்பிகள் மு. கண்ணப்பன், கம்பம் ராமகிருஷ்ணன், டி.கே. சுப்பு ஆகியோர் ஆயிரக்கணக்கான கழக மாமணிகளுடன் தாய்க் கழகத்திற்கு வந்து இணைந்தபோது அந்த ஐவருடனும் தனித்து உரையாடிய நேரத்தில் எழுந்த நினைவலைகளே இந்தக் கடிதம்)

உடன்பிறப்பே,

குமரி முனைக் கடற்கரை விருந்தினர் மாளிகையில்
குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தேனாம்;
அந்த நள்ளிரவில் அப்போது நமது தம்பிமார்கள் -
ஆற்காட்டார் - துரைமுருகன் - இன்னொருவர்
இப்போது நான்,
பெயர் சொல்ல விரும்பாதவர்; இவர்கள் மூவரும்
மாடித் தாழ்வாரத்தில் - தேடக் கிடைக்காத திரவியமாய்த்
திராவிடர்க்குக் கிடைத்த தி.மு. கழகத்தின் வளர்ச்சி,
வலிமை, வற்றாத பாச உணர்வு - இவை பற்றியும் - அதன்
வருங்காலம் பற்றியும் வானம் வெளுக்கும் வரையில்
உரையாடினார்களாம்.

அப்போது, அந்தத் தம்பி - நான் பேர் சொல்லாப் பெருமகன்; என் தம்பிகள் ஆற்காட்டாரையும், துரைமுருகனையும் பார்த்து;

“சரி, கலைஞருக்கு அடுத்து கழகத்தின் தலைவர் -

ஸ்டாலின் தானா ?” என வெகுண்டெழுந்து கேட்டாராம் -

எப்படி அதைச் சொல்கிறாய் என அந்தத் தம்பியர்
கேட்டவுடன்;

“பேராசிரியர் அவர்கள், கூட்டங்கள் - மாநாடுகளில்
கூறுகின்ற புகழுரைகள் ஸ்டாலினைப் பற்றி

மழையாகப் பொழிகிறதே
என ஆயாசப்பட்டாராம்; அந்த அருமைத் தம்பி!

உடன்; ஆற்காட்டாரும், துரைமுருகனும்; “அன்பழகனார்

அப்படிப் பேசுவதில் என்ன தவறு? அந்தப்
பிள்ளையாண்டான்

செய்துள்ள தியாகம் - இளைஞர் அணியை வளர்க்கும்

இணையற்ற ஆற்றல் - இவற்றைப் பேராசிரியர்
பாராட்டுவதில்

என்ன குறை - யாரையும் எடை போட்டுத்தான் -
பேராசிரியர் ஏற்றுக் கொள்வார் -

கலைஞரையே உரைத்துப் பார்த்து உண்மைத்திறனை
உணர்ந்த

பிறகுதான் ஒப்புக் கொண்டார்; தனக்கே தலைவராக!

எனவே இப்போது கலைஞருக்குப் பிறகு ஸ்டாலின்தான்

என்ற பேச்சுக்கு என்ன அவசரம்? நீர் ஏன் நெருப்பைத்

தொட்டது போல் துடிக்க வேண்டும்? கலைஞரே இப்போது

உம்மைத் தானே “போர்வாள்” என்று புகழ்கிறார் -
போற்றுகிறார் -

மாநிலங்களவை உறுப்பினர் பதவியை உமக்கு வழங்கியது
போல

வேறு யாருக்கு இப்படித் தொடர்ந்து வழங்கியிருக்கிறார்;

கவலைப்படாமல் இருந்திடுக! கலைஞர் அவர்கள்;
தனக்குப் பிறகு

உம்மைத்தான் தலைவராக்குவார் இயக்கத்திற்கு” என்று நம்பிக்கை

தெரிவித்து அந்த நள்ளிரவிலும் நமது பேர் சொல்ல விரும்பாத

பெருமை மிகு தம்பியின் முகத்தில் ஒளி பிறக்கச் செய்திருக்கிறார்கள்.

புன்னகை தவழ்ந்த அந்தத் தம்பியின் முகத்தில்

புதியதோர் சிந்தனை - அது ஒரு கேள்வியாகவும் மாறியது!

“ஏன் துரைமுருகன்; நான் கலைஞருக்குப் பிறகு

தலைவனாவேன் என்கிறீர்களே? ஒரு வேளை நமது

கலைஞர், பெரியார் போல - ராஜாஜி போல - தொண்ணூறு

வயதுக்கு மேல் வாழ்ந்து விட்டால்; நான் தலைவனாவதற்கு

எத்தனை வருடம் காத்திருப்பது?”

இதைக் கேள்வியாகக் கருதாமல்; மற்ற இரு தம்பியரும்

தேள் பிலிற்றும் விஷமாக எண்ணிக் கலங்கி -

இருவரும் இரகசியமாக சத்தியம் செய்து கொண்டார்களாம்

இந்தச் செய்தியை இருவரும் தலைவரிடம்

எப்போதும் சொல்வதில்லையென்று!

ஆனால் -

துரைமுருகன் ரகசியத்தைக் காப்பாற்றுவதில் இரும்புப் பெட்டி!

ஆற்காட்டாரோ - அசல்; கண்ணாடிப் பேழை -

எனினும்

ஆண்டுகள் சில பல கடந்த பிறகே;

அன்றைய குமரி முனையில் குமுறிய எரிமலையின்

குட்டை மனப் பேராசையின் வெளிப்பாட்டைக் கூறினர் எனக்கு

குறளின் அமுத மொழியாம்;

“செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி”

(செப்பு எனப்படும் சிமிழில் அதன் மூடி பொருந்தியிருப்பது போல வெளித் தோற்றத்துக்கு மட்டுமே தெரியும். அவ்வாறே உட்பகை உள்ளவர்கள் உளமாரப் பொருந்தியிருக்கமாட்டார்கள்)

உடன்பிறப்பே,

குறளோவியம் நூல் தொகுப்பில் நான்
குறிப்பிடாமல் விட்டுப் போன இந்தக் குறட்பா;
இந்த நேரத்தில் நினைவுக்கு வந்ததே;
அந்த நினைவுக்கு ஒரு நன்றி!

அன்புள்ள,

மு.க.

29-03-2009

3389. இலங்கைத் தமிழரின் இணையற்ற செல்வம் ஈழத்தந்தை செல்வாவின் 112-வது பிறந்தநாள்!

ஈழத் தந்தை செல்வாவின் 112-வது பிறந்தநாள் நேற்று தந்தை செல்வா அவர்கள் 28.4.1977 அன்று மறைந்த போது, பெரும் துயருற்று, தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய உடன்பிறப்பு கடிதம் இங்கே வெளியிடப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

படுக்கையின் ஓரத்தில் இருந்த தொலைபேசி நள்ளிரவு பனிரெண்டு மணியளவில் ஒலித்தது. இலங்கையிலிருந்து வந்தது குரல். சுதந்திரன் பத்திரிகை நண்பர் மகேசன் தழுதழுத்த தொனியில் அந்த அதிர்ச்சிக்குரிய செய்தியைச் சொன்னார். செல்வா மறைந்துவிட்டார். இலங்கைத் தமிழர்களின் செல்வம் மறைந்து விட்டது. அந்தோ! இலங்கையில்தான் அடுக் கடுக்காக எத்தனை வேதனைகள்! தமிழர்களின் உணர்ச்சி விளக்காக ஒளிவிட்டுக்கொண்டிருந்த திருச்செல்வம் பிரிந்தார். தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய பொன்னம்பலமும் திடீரென மறைந்தார். இதோ அள்ளக் குறையாத அரும்பெரும் செல்வமாம் ஈழத்துத் தந்தையையும் இழந்துவிட்டோம்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணிரோடு வாழ்வை நகர்த்திக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு இவரன்றோ போர் வாளாய் – கேடயமாய்த் திகழ்ந்தார்.

அங்கு எத்தனை அடக்குமுறைகளைத் தமிழர்கள் ஏற்கவேண்டியிருந்தது. தூண்டி விடப்பட்ட கலவரங்கள் பலவற்றில் தூண்டில் மீன்களாய்த் தமிழ்க்குலத்தைச் சார்ந்த ஆடவரும் பெண்டிரும் அவதிப்பட்டுத் துடித்திட்ட போது

அவர்களுக்குத் துணைநின்ற "காவல் தெய்வம்" என்ற நிலையில் அல்லவா செல்வா அவர்களின் தொய்வில்லாத் தொண்டு அமைந்திருந்தது.

பசப்பு மொழி பேசி அவரைத் தம் பக்கம் இழுத்திட நினைத்தோர் - பதவி சுகம் காட்டி அவரது பகையைத் தவிர்த்திட முனைந்தோர் - அவர்கள் யாருக்கும் வணங்காத தலையினராக - வைர நெஞ்ச வேங்கையாக - கொண்ட கொள்கையில் குன்றென நிமிர்ந்து நின்று இறுதி மூச்சு போகும் வரையில் இலங்கைத் தமிழர் களின் நல்வாழ்வு ஒன்றையே எண்ணிக் கொண்டிருந்தார் அந்த ஈழத்துப் பெருத் தமிழர்.

மூன்று நான்கு ஆண்டுகட்கு முன்புத் தமிழகம் வந்திருந்தார். எங்களையெல்லாம் சந்தித்தார். எலும்பினால் மட்டுமே உருவானதோ அந்த உடல் என வியக்கத்தக்க அளவுக்கு அவ்வளவு இளைத்திருந்தார். எனினும், இலங்கைத் தமிழர்களுக்காகப் போர் தொடுப்பதில் களைத்திருந்தார் என்று எவரும் கூறிட இயலாது!

உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக நமது திமுகழகம் இருப்பது கண்டும் அந்தத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகத் தேவைப்படும்பொழுதெல்லாம் குரல் கொடுப்பது கண்டும் - அவர் அடைந்திருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இலங்கையில் தமிழர்கள் அவதிக்கு ஆளானபோது அறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில் தி.மு.க. நடத்திய இலங்கைத் தமிழர் ஆதரவுப் பேரணியும் அதன் பின்னர் இலங்கை வாழ் தமிழர்களின் துன்ப துயரங்களைப் போக்கத் தி.மு.கழகம் இந்தியப் பேரரசிடம் முறையிட்டு ஆவன செய்திடுமாறு கேட்டுக் கொண்டதையும் மறைந்துவிட்ட தமிழர்களின் மாணிக்கமாம் செல்வா அவர்கள் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்திடத் தவறியதே இல்லை.

இலங்கையே அழுதுகொண்டிருக்கும் இன்று! ஏன் தமிழன் எங்கெங்கு வாழ்கிறானோ அங்கெல்லாம் அவனது இல்லம் இருள் சூழ்ந்துதான் கிடக்கும். உள்ளம் அழுதுகொண்டு தான் இருக்கும்.

இங்கே கடந்த 15-ஆம் தேதியன்று கழகம் பிரச்சினைக்கு உட்பட்டபோதுதான் செல்வாவின் உடல்நிலை பற்றிக்

கவலை தரும் செய்தி இலங்கையிலிருந்து தெரிவிக்கப்பட்டது. இலங்கைவாழ் தமிழர்களின் அன்புக் கட்டளையை ஏற்று நரம்பியல் மருத்துவமேதை இராமமூர்த்தி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளைச் செய்தோம். அவரும் மிக்க ஆர்வமுடனும் அக்கறையுடனும் அந்தப் பணியினை ஏற்றுத் தன்னால் முடிந்த முயற்சிகளைச் செய்து விட்டுத் திரும்பினார். இலங்கையில் உள்ள மருத்துவ மேதைகளும் செல்வாவின் உயிரை மீட்க அரும்பாடுபட்டு அயராது உழைத்தனர். ஆனால் காலம் தன் முழு வல்லமையைக் காட்டிச் செல்வநாயகம் அவர்களை நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டது.

செல்வா மறைந்துவிட்டார் எனினும் அவரால் உருவாக்கப்பட்ட ஆற்றல்மிகு தலைவர்கள், தளபதிகள், வீரக் கவிஞர்கள், இலட்சியக் காளைகள் பலர் இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக செல்வா ஆற்றிய பணியை அவர் வழியில் மற்றவர்கள் தொடர்வார்கள்,

அவர் காத்திட்ட அமைதி - தமிழர் சிங்களவரிடையே பகை மூளாமல் தவிர்த்திடவும் - அதே நேரத்தில் தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி அமைத்திடவும் அவர் ஓயாது வழங்கிய உழைப்பு -

இவை என்றென்றும் அந்தத் தியாகச் செல்வத்தை உலகத் தமிழர்களின் நெஞ்சத்தில் அணையாத தீபமாக ஆக்கி வைத்திருக்கும் என்பது மட்டும் உறுதி

அன்புள்ள,

மு.க.

01-04-2009

3390. கிளம்பட்டும்; தமிழச் சிங்கக் கூட்டம்!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் பதினைந்தாவது நாடாளுமன்றத்திற்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை நேற்றைய தினம் காலையில் - கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆய்வு தொடங்குவதற்கு முன்பாக பத்திரிகையாளர்கள் முன்னிலையில் நான், பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்கள் முன்னிலையில் வெளியிட்டேன். கழகப் பொருளாளர் தம்பி தளபதி மு.க.ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், பரிதி இளம்வழுதி, சற்குணப் பாண்டியன் மற்றும் கழக முன்னணியினர் வீரபாண்டி ஆறுமுகம், மத்திய அமைச்சர் ஆ. ராஜா, அமைச்சர் பொன்முடி, மத்திய முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி தயாநிதி மாறன், தென் மண்டலச் செயலாளர் மு.க.அழகிரி, மாநிலங்களவை உறுப்பினர் மு.க. கனிமொழி, அமைப்புச் செயலாளர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், கல்யாணசுந்தரம், தலைமைத் தேர்தல் பணிக்குழு செயலாளர் எல். கணேசன் உடன் இருந்தனர்.

2009ஆம் ஆண்டிற்கான இந்தத் தேர்தல் அறிக்கை தயாரிக்க டாக்டர் நாதன் தலைமை யில் மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராஜா, சற்குணபாண்டியன், டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் குறுகிய காலத்தில் சிறந்ததோர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து - அந்த அறிக்கையை நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் ஆய்வு செய்து இறுதியாக அச்சியற்றப்பட்டு இன்றைய தினம், வெளியிடப்பட்டுள்ளது. உடன்பிறப்பே, இந்த அறிக்கையை உன் போன்றோர் முழுவதும் படித்துப் பார்ப்பதோடு - பொதுமக்களிடமும் இதிலே உள்ள நல்ல திட்டங்களையெல்லாம்

விளக்கிச் சொல்லி அவர்களின் ஆதரவைத் திரட்டிட மிகவும் துணையாக இருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தலில் நிற்கின்ற கட்சிகளின் சார்பில் தனித்தனியாக தேர்தல் அறிக்கைகள் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வெளியிடப் பட்டபோதிலும் - தி.மு. கழகத்தைப் பொறுத்த வரையில் தேர்தல் அறிக்கை தயாரித்து வெளியிடுவதில் தனக்கென முக்கியமான தொரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் இயக்கமாகும். 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை மத்திய அமைச்சராக இருந்த அருமை நண்பர்

ப. சிதம்பரம் அவர்கள் படித்துப் பாராட்டியதோடு - அந்தத் தேர்தல் அறிக்கைதான் அந்தத் தேர்தலுக்கான கதாநாயகன் என்றே தேர்தல் பிரச்சாரத்தில் அறிவித்தார். அந்த அளவிற்கு அந்தத் தேர்தல் அறிக்கையிலே தி.மு. கழகம் தேர்தலில் வெற்றி பெற்றால் என்னென்ன திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் என்பதை யெல்லாம் முன்கூட்டியே எடுத்துவைத்திருந்தது. சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற வார்த்தைகளுக்கிணங்க அந்தத் தேர்தல் அறிக்கையிலே எடுத்து வைத்த வாக்குறுதிகளையெல்லாம் முறையாக தமிழக அரசின் சார்பில் நிறைவேற்றிய பெருமையும் நமக்கு உண்டு. தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டங்கள் எல்லாம், நிறைவேற்றப்பட முடியாத திட்டங்கள் என்றும் - மக்களை ஏமாற்றுவதற்காக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் என்றும் அப்போது அ.தி.மு.க. வினரும், அவரது தோழமைக் கட்சியினரும் தேர்தல் நேரத்தில் கடுமையான அளவில் பிரச்சாரம் செய்தனர். ஆனால் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று

13-5-2006 அன்று பதவியேற்ற அந்த மேடையிலேயே மூன்று கோப்புகளை வரவழைத்து - விவசாயிகளுக்கு 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் ரத்து - இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி - சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகள் என்ற அறிவிப்புகளுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டவன் நான் என்பதை நன்கறிவீர்கள். அதைத் தொடர்ந்து கழக அரசு தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் முறையாக ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றி வருவதையும், அதன் பயன்களை தமிழ்நாட்டு மக்கள் முறையாக துய்த்து வருவதையும் அனுபவப்பூர்வமாக நாம் கண்டு வருகிறோம்.

அது போலவே மத்தியில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில் நாம் 2004ஆம் ஆண்டு வெளியிட்ட தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் முறையாக மத்திய அரசு முழு மனதோடு நிறைவேற்றி வருகின்றது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் - 2004ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் - "அனைத்து தகுதிகளும் கொண்ட தமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்று தி.மு. கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்" என்று சொல்லியிருந்தோம். இன்றையதினம் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவோம்.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையிலே 18-8-2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த நிறுவனத்தின் சார்பில் அய்யன் திருவள்ளுவர் பெயரில் உலக அளவில் சிறந்து விளங்கும் தமிழறிஞருக்கும், தொல்காப்பியர் பெயரில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் தமிழறிஞருக்கும் ஆண்டுதோறும் குடியரசு தலைவர் விருதுகள் முன்தேதியிட்டு வழங்கும் திட்டத்திற்கும் மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மத்திய அரசு செம்மொழிக்கு ஒப்புதல் வழங்கியதோடு நிற்காமல் - அந்த நேரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்தி எனக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்ததும் குறிப்பிடத் தக்கது.

November 8, 2005.

Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 28th October. I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party.

With regards,

Yours sincerely,

Sonia Gandhi.

நீண்ட காலமாக வாக்குறுதி அளவிலேயே இருந்து வருகிற சேது கால்வாய்த் திட்டப் பணியை விரைவில் தொடங்கி செயல்படுத்த உரிய நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தோம். அவ்வாறே வலியுறுத்தி 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு - நிதி ஒதுக்கப்பட்டு - 60 சதவிகிதப் பணிகள் முடிவுற்ற நிலையில் - மதவாதிகள் சிலராலும், நமது அரசுக்கு புகழ் வந்துவிடுமேயென்று பொறாமை கொண்ட சிலராலும் சேதுத் திட்டம் தற்போது நீதி மன்ற முடிவுக்காக காத்திருக்கின்றது.

அதுபோலவே "பொடா" சட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெற தி.மு.கழகம் வற்புறுத்தும் என்று தேர்தல் அறிக்கையிலே உறுதி கொடுத்தோம். அவ்வாறே வற்புறுத்தி பொடா சட்டம் தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் வருமான வரி விலக்கை ஐம்பதாயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வரி விலக்கு அளிக்க மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறே அது ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டதோடு நிற்காமல் ஒன்றரை லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு தற்போது உயர்ந்துள்ளது.

நெசவாளர்களின் துயரத்தைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்வோம் என்று 2004ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்திருந்தோம். அதற்கேற்ப ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சி அமைந்தவுடன் நெசவாளர்களுக்கான "சென்வாட் வரி" ரத்து செய்யப்பட்டது.

சென்னை குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னோம். அதற்கேற்ப சென்னைக்கு அருகே நெம்மேலியில் 908 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து நிதியும் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது.

"சொன்னதைச் செய்வோம்" என்பதற்கு அடையாளமாக இவ்வளவு சாதனைகளையும் செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு - "சொல்வதற்கு மேலும் செய்வோம்" என்பதற்கேற்ப பின்வரும் சாதனைகளையும் செய்துள்ளது.

- சென்னைக்கு அருகில் ஓரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம்.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலம் உருட்டாலையை சர்வதேச அளவுக்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை 1,553 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.
- 120 கோடி ரூபாய் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவ மனையாக மேம்படுத்தப்படுகிறது.
- கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடி ரூபாய் செலவில் 4,676 கி.மீ. நீள தேசிய நெடுஞ் சாலைகளில், 3,276 கி.மீ. சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு, போக்குவரத்து மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர் வழிப் போக்குவரத்து வசதிகள்.
- தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின்கீழ் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி.
- 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே பறக்கும் சாலை அமைத்திட - 8-1-2009 அன்று பிரதமர் மன்மோகன் சிங் வருகை தந்து அடிக்கல் நாட்டினார்.
- மதம் மற்றும் சிறுபான்மை பிரிவினரின் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின் தங்கியோர் நலன் காக்கும் தேசிய ஆணையம்.
- இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான மூன்றாம் தலைமுறை தகவல் தொழில் நுட்பத் திட்டம்.

- அனைத்துக் கிராமங்களிலும் முழு கணினி நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கணினி நிர்வாகத் திட்டம் அறிமுகம்.
- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி.
- செல்போன் கட்டணங்கள் குறைப்பு
- தமிழகத்திலுள்ள மீட்டர்கேஜ் ரயில் பாதைகள், அகல ரயில் பாதைகளாக மாற்றிட அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
- தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் 10 புதிய ரயில்கள் இயக்கம்.
- 1,859 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 ரயில்வே மேம்பாலங்களைக் கட்ட மத்திய அரசு அனுமதித்து, இதுவரை 12 ரயில்வே மேம்பாலங்கள் 137 கோடியே 31 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 16 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.
- சேலத்தில் புதிய ரயில்வே மண்டலம்.
- திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.
- ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர்க்கான தேசிய நிறுவனம்.
- சென்னையில் மத்திய அதிரடிப்படை மையம் (என். எஸ்.ஜி.)
- விவசாயிகளுக்கு 72 ஆயிரம் கோடி மதிப்பிலான கடனும் வட்டியும் தள்ளுபடி.
- மாணவர்களுக்கு கல்விக் கடன்
- 57 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி துறைமுகத்தில் 9வது தளம் அமைக்கப்பட்டு 14-7-2008 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- கோவையில் உலகத் தரத்திலான மத்திய பல்கலைக் கழகம்.
- திருச்சியில் மேலாண்மைக்கான இந்தியக் கல்வி நிறுவனம்.
- திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம்.
- 245 கோடி ரூபாய் முதலீட்டில் இந்திய கடல்சார் பல்கலைக் கழகம்; சென்னையில் 31-12-2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இந்தப் பட்டியல் நீளமானது; இவ்வளவு சாதனைகளையும் மக்களுக்காக செய்து விட்டுத்தான் - அந்தச் சாதனைகளின் அடிப்படையில் திரும்பவும் மக்களிடம் வாக்குகளைக் கேட்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி முன் வந்துள்ளது. அந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பிரதான கட்சியான காங்கிரஸ் கட்சி சார்பில் ஒரு தேர்தல் அறிக்கையும் - நேற்றையதினம் தி.மு. கழகத்தின் சார்பில் ஒரு தேர்தல் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளன.

தி.மு.கழகத்தின் சார்பில் நேற்றைய தினம் நான் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை ஏடுகளில் எல்லாம் வெளிவந்துள்ளது. இந்த தேர்தல் அறிக்கையில் மாநிலத்தில் கழக அரசும், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் செய்த சாதனைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் நீங்கள் வாய்ப்பளித்தால் தொடர்ந்து என்னென்ன செய்வோம் என்பதும் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. இவற்றை கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புகளும் வாக்காளப் பெருமக்களிடம் எடுத்து விளக்கிட வேண்டும். கடந்த முறை வாக்களித்த மக்களின் மனம் நிறைவு பெறத்தக்க அளவிற்கு நாம் பணி யாற்றியிருக்கிறோம் என்பதை ஆதார பூர்வமாக எடுத்துக் கூற வேண்டும். மத்தியில் எவ்வாறு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சாதனைகளையும், திட்டங்களையும் நிறை வேற்றியிருக்கிறதோ அதைப்போலவே தமிழகத்தில் 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணி

அரசின் சார்பில் என்னென்ன சாதனைகளை செய்திருக்கிறோம் என்பதையும் தொடர்ந்து எழுதுகிறேன்.

நீயும் தொடர்ந்து வாக்காளர்களைச் சந்திக்கும் பொறுப்பைத் தட்டிக் கழித்திடாமல், வாக்குகள் எண்ணி முடித்து, வெற்றி வாகை சூடிய பிறகுதான் - உணவு, உறக்கம், ஓய்வு என்று முடிவெடுத்துக் கொண்டு உழைத்திட இக்கணமே புறப்படு - நமது அணியின் வேட்பாளர்கள் எந்தத் தொகுதியில் யார் என்று பெயர்கள் மிக விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

அப்படி அறிவிக்கப்பட்ட பெயருக்குரிய வேட்பாளர்தான்; நமது வெற்றி வேட்பாளர் என்ற பற்று பாச உணர்வுடன்; வெற்றிக் கனிகள் பறித்துக் குவித்திடுக! குன்றேறி நின்று கொடி உயர்த்திடுக!

1950ஆம் ஆண்டுக்கு முன்பே திருவாரூர் நகராட்சித் தேர்தலில் இருந்து - கொடி பிடிக்கும் தொண்டனாக - கொள்கைப் பரப்பும் சிங்க இளைஞனாக - பணியாற்றிடப் பம்பரமெனச் சுழன்றவன் நான் - அப்போதெல்லாம் தேர்தல்களில் சின்னங்கள் இல்லை - பச்சைப்பெட்டி, சிகப்புப் பெட்டி, மஞ்சள் பெட்டி என்றுதான் மக்கள் வாக்களிப்பர் - திருவாரூரில் தேர்தல் பிரச்சார ஊர்வலங்கள்; முழக்கமிட்டு (அமைதியாக) மோதிக் கொள்வதுண்டு - எமக்கு எதிரணி ஊர்வலத்தில் "பெண்கள் முகத்திலிடுவது மஞ்சள் - அந்த மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப் போடுக" என்பார்கள் எதிர் அணியினர். நான் உடனே என் அணி யினரை ஆர்த்தெழச் செய்து "அந்த மஞ்சள் முகத்திலிடுவது சிகப்பு; ஆகவே எங்கள் சிகப்புப் பெட்டிக்கு ஓட்டுப் போடுக" என முழங்குவேன் - இப்படி ஆரவாரம் மிகுந்த போட்டிகளே தவிர, அனைத்தும் அப்போது அமைதியான அறவழிப் போட்டிகளே ஆகும்.

பின்னர் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் - நமது மேயராக அ.பொ. அரசு வர அரும்பாடுபட்டு; அண்ணாவின் கரத்தினால் "கணையாழி" அணிவிக்கப் பெற்றேன். அதற்கடுத்து அண்ணாவின் ஆணையேற்று 1957இல் "குளித்தலை" சட்டமன்றத் தொகுதி யில் நின்று வென்றேன்.

ஆம்; சட்டமன்றப் பொன்விழா காணும் அளவுக்கு; அப்பப்பா; எத்தனை தேர்தல்கள் - என்னே உழைப்பு - என்னே! என்னே!

- தோல்வியிலும் வெற்றியிலும் முறையே துவளாமலும் - துள்ளிக் குதிக்காமலும் அண்ணா வழியில் ஆற்றிய தொண்டு - அதுதானே இன்றைக்கு ஐந்தாம் முறையாக உடன்பிறப்பே; நமது கழகத்தை - இந்த உன் அண்ணனை ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்திருக்கிறது.

இந்தப் பயணத்தில் நான் கண்டெடுத்த அனுபவக் கனிகளை - உனக்கும் உண்டிடத் தந்துள்ளேன் அவ்வப்போது!

அதனால் பெற்ற வலிவும் பொலிவும் உனக்கும் எனக்குமல்ல; உயிரனைய நமது கழகத்திற்கே என்பதை இந்த உலகறியும்.

அதில் உனக்கும் எனக்கும் உவகை! உவகை! இந்த உவகைதான், சில எரிச்சல்காரர்களின் உள்ளங்களை உறுத்துகிறது, உளறுகிறார்கள் ஏதேதோ! அதைப் "பாய்ச்சல்" என்கிறார்கள் பத்திரிகையாளர்கள்; புலி பாய்ந்தால் "கிலி" அடைவோம்; பூனை பாய்ந்தால் பானைதானே உருளும்!

எனவே அவற்றை உதறித் தள்ளிவிட்டு; என் உயிரினும் மேலான உடன்பிறப்பே; உடனே ஆர்த்தெழுந்து புறப்படு!

மே திங்கள் 16ஆம் நாள் - வாக்குகள் எண்ணப்படுகின்றன - அவற்றில் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றி வாக்கும்; உன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ நீ உழைத்துப் பெற்ற வாக்காக அமையட்டும்! எங்கே; புரட்சிக் கவிஞரின் "கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்" என்ற பாடலுடன்; இளைஞர் படை; இலட்சியவாதிகளின் படை; புறப்படட்டும்!

அன்புள்ள,

மு.க.

4-4-2009

3391. தேர்தல் களம் அழைக்கிறது; கண்மணியே; புறப்படு!

உடன்பிறப்பே,

2009ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் நடைபெறும் 15வது நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு. கழகத்தின் சார்பில் போட்டியிடுகின்ற 21 வேட்பாளர்களின் பட்டியலை - பரபரப்பு எதுவுமின்றி - பத்திரிகையாளர் சந்திப்பு இன்றி - தட்டச்சு செய்து ஏடுகளுக்கு அனுப்பப்பட்டு - அது ஏடுகளிலும் வெளிவந் துள்ளது. நமது அணியின் தோழமைக் கட்சிகள் சார்பில் மற்ற 19 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல் இன்னும் சில நாட்களில் வெளிவரவுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் புது முகங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுவதும் - செய்தியாளர்கள் அதனை ஒரு கேள்வியாகக் கேட்பதும் - புது முகங்களும் இருப்பார்கள் என்று பதில் சொல்வதும் வாடிக்கையான ஒன்று. இந்த முறையும் அந்தக் கேள்வி என்னிடம் கேட்கப்பட்டு, புது முகங்களுக்கு நிச்சயமாக வாய்ப்பு அளிக்கப்படும் என்று பதில் கூறியிருந்தேன். தேர்தலையொட்டி நான் கூறிய இந்த வாக்குறுதி நிறைவேற்றப் பட்டுள்ளதை பட்டியலைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். ஆமாம், 21 பெயர்கள் கொண்ட இந்தப் பட்டியலில் 13 பேர் 14வது நாடாளு மன்றத்தில் இடம் பெறாதவர்கள் - கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 15 பேர்களில் 8 பேர்கள் மட்டுமே தற்போதைய பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள். அதாவது பழைய முகம் 8 - புதிய முகம் 13.

கடந்த முறை பட்டியலிலே இடம் பெற்றிருந்த ஏழு பேர்களுக்கு இந்த முறை வாய்ப்பளிக்கப் படவில்லை என்பதில் எனக்கு மிகவும் வருத்தம்தான். இதற்கும் அண்ணா கூறிய

உவமையைக் கூற வேண்டுமென்றால் - பீரோ நிறைய ஏராளமான பட்டுப் புடவைகள் இருந்த போதிலும் - இன்று செல்லும் இந்தத் திருமணத்திற்கு இந்தக் கலர் பட்டுப் புடவையை எடுத்துக் கட்டிக்கொள்கிறேன் என்றால், அடுத்து இன்னொரு திருமணத் திற்குச் செல்லும்போது மற்றொரு புடவையை எடுத்துக் கட்டிக்கொள்வேன். இன்று இதனைக் கட்டிக்கொள்வதால் மற்றது எல்லாம் பிடிக்காது என்று அர்த்தமல்ல என்று சொன்னதைப் போல இந்தத் தேர்தலுக்கு இவர்கள் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

கடந்த முறை உறுப்பினர்களாக இருந்த ஏழு பேர்களுக்கு இந்த முறை வாய்ப்பளிக்கப்பட வில்லை என்று எழுதியதில் - தம்பி ரகுபதி, தம்பி வேங்கடபதி, தங்கை சுப்புலட்சுமி ஜெகதீசன், தங்கை ராதிகா செல்வி ஆகியோர் அமைச்சர்களாகவே பங்கேற்று திறம்பட செயல் பட்டவர்கள். இவர்களில் தங்கை சுப்புலட்சுமி ஜெகதீசன் தேர்தலுக்கு பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே என்னைச் சந்தித்து - "இந்த முறை குடும்ப சூழ்நிலை காரணமாக நான் போட்டியிடவில்லை, வேறு ஒருவருக்கு வாய்ப்பளிக்கலாம்" என்று கைப்பட கடிதமே எழுதி கொடுத்தபோது - இப்படியே ஒவ்வொருவரும் இருந்தால் என்று ஒரு கணம் நினைத்தேன். அமைச்சராக இருந்த தம்பி ரகுபதியின் புதுக்கோட்டை தொகுதியே இந்த முறை காணாமல் போய் - புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியே திருச்சி நாடாளுமன்றத் தொகுதிக்குப் போய்விட்டது. அதோடு திருச்சி நாடாளுமன்றத் தொகுதி - தம்பி வேங்கடபதி போட்டியிட்ட கடலூர் நாடாளுமன்றத் தொகுதி - தங்கை ராதிகா செல்வி கோரிய திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி ஆகிய மூன்றும் தொகுதி உடன்பாட்டின்போது காங்கிரஸ் கட்சிக்கு பகிர்ந்து கொள்ளப்பட்டுவிட்டது.

இவர்கள் தவிர கடந்தமுறை நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்களாக இருந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைவர் - பாட்டாளிகளின் நம்பிக்கை நட்சத்திரம் தம்பி குப்புசாமிக்கு; வயது, உடல் நிலை காரணமாகவும் - ஒரு பெண்ணுக்கு இத்தேர்தலில் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக தம்பி கிருஷ்ணசாமிக்கும் - புதியவர் ஒருவருக்கு ராமனாதபுரம் தொகுதியிலே வாய்ப்பு தர வேண்டுமென்பதற்காக; தங்கை

பவானி ராஜேந்திரனுக்கும் இம்முறை வாய்ப்பளிக்க முடியாமல் போய் விட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் இவர்கள் இப்போது பயன்படுத்தப்படாவிட்டாலும், வருங்காலத்தில் அடுத்தடுத்து வரும் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் இவர்கள் வாய்ப்புக்கு உரியவர்களாவார்கள். குறிப்பாக தம்பி கிருஷ்ணசாமி நேற்று காலையில் என்னை சந்தித்து வாய்ப்பு கேட்டபோது - இந்தமுறை பெண்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்க முடியாமல் இருக்கிறது, உன் தொகுதியிலாவது உனக்குப் பதிலாக ஒரு பெண்ணை நிறுத்தலாம் என்று நினைக்கிறேன், யாரை நிறுத்தலாம் என்று நீயே யோசனை கூறு என்று சொன்னவுடன், சரி அண்ணே, அழைத்து வருகிறோம் என்று கூறி அவரும் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி சிவாஜியும் சென்று - தற்போது நிறுத்தப்பட்டுள்ள சகோதரி காயத்ரி ஸ்ரீதரனை அழைத்து வந்தார்கள். அந்தக் காயத்ரி யார் தெரியுமா? பல ஆண்டுகளுக்கு முன்பே சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், பிறகு என்னுடனே சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த பழம்பெரும் கழக நண்பர் கிண்டி கோபாலின் பேத்தி என்கிறபோது நான் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

எந்த அளவிற்கு தம்பி கிருஷ்ணசாமி பெருந்தன்மையோடு நடந்து கொண்டார் என்பதை எண்ணி நான் எனக்குள்ளேயே பெருமைப்பட்டுக் கொண்டேன். இன்னும் சொல்லப்போனால் அவரது செயல்பாட்டில் எனக்கோ, கழகத்திற்கோ எந்தவிதமான குறைபாடும் இல்லை. இருந்தாலும் தனக்கு வாய்ப்பு தரப்படவில்லை என்பதை அவர் பெருந்தன்மையாக எடுத்துக் கொண்டார்.

இது போலவே தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பெரியசாமியின் புதல்வர் போட்டியிட மனு செய்திருந்தார். அந்தத் தொகுதியிலிருந்து வந்திருந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்லாம் அவரைத்தான் பரிந்துரையும் செய்திருந்தார்கள்.

அதற்குப் பக்கத்து தொகுதியான திருநெல்வேலிக்கு மனு செய்திருந்த சகோதரி ராதிகா செல்விக்கு அந்தத் தொகுதி காங்கிரஸ் கட்சிக்குப் பகிர்ந்து கொள்ளப்பட்டுவிட்ட

காரணத்தால் - தூத்துக்குடி தொகுதியிலாவது வாய்ப்பு தரலாமா என்றும் யோசிக்கப்பட்டது. அவரிடமும் அதுபற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. அவர் தனக்கு வாய்ப்பு தரவேண்டும் என்பதைவிட, அந்தத் தொகுதியிலே கழகம் வெற்றிபெற வேண்டியது முக்கியம் என்பதை நினைவூட்டினார். பின்னர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பெரியசாமியை வரவழைத்துப் பேசினேன். அப்போது அவர் அண்ணே, நானோ மாவட்டக் கழகச் செயலாளர், என் பெண்ணோ அமைச்சராக இருக்கிறார், இதிலே என் மகனுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு என்றால் ஒரு சிலர் அசூயை கொள்ள நேரிடும் என்று அவரே முன்வந்து கூறியதோடு எழுதியும் கொடுத்தார்.

பின்னர் நான் அவரிடம் நீயே யோசனை சொல், யாரை நிறுத்தலாம் என்று கேட்டபோது, அவரே ஒருவரை அழைத்து வந்து, இவரை நிறுத்தலாம், வெற்றிக்கனியைக் கொண்டு வருகிறேன் என்று சொன்னதின் பேரில் - தன் குடும்ப நலனைவிட, கழகத்தின் நலனைப் பெரிதாகக் கருதிய அந்தத் தம்பியை வாழ்த்திவிட்டு, அவர் அழைத்து வந்தவரையே அந்தத் தொகுதியிலே வேட்பாளராக நிறுத்தியிருக்கிறோம். அவரைப் போலவே வாய்ப்பு கிடைக்காத மற்றவர்களும் பெருந்தன்மையாக இந்தமுறை வாய்ப்பு கிடைக்கா விட்டாலும் அடுத்தமுறை நிச்சயம் கிடைக்கும் என்று நினைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 1999ஆம் ஆண்டு கடலூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தம்பி ஆதிசங்கருக்கு 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அவருக்குப் பதிலாக தம்பி வேங்கடபதிக்கு அந்தத் தொகுதியிலே வாய்ப்பு தரப்பட்டு அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்தார். கடந்தமுறை வாய்ப்பு தரப்படவில்லை என்பதற்காக தம்பி ஆதிசங்கர் கோபித்துக் கொண்டு சோர்வுற்றுவிடவில்லை. முறையாக கழகப் பணிகளை ஆர்வமுடன் தொடர்ந்து ஆற்றி வந்தார். இப்போது மீண்டும் ஆதி சங்கருக்கு போட்டியிட வாய்ப்பு தரப் பட்டுள்ளது. எனவே அண்ணா சொன்னதைப் போல மாறி மாறி வாய்ப்புகள் வந்து கொண்டு தான் இருக்கும்.

நேர்காணல் பணிக்காக இரண்டு நாட்கள் காலை முதல் இரவு வரை சக்கர நாற்காலியை விட்டு நான் இறங்காமல் உட்கார்ந்திருந்ததை உடன்பிறப்பே, நீ நன்கறிவாய். பேராசிரியர் போன்றவர்கள், நீங்கள் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள், நாங்கள் பார்க்கிறோம் என்று சொன்னபோது கூட, நான் கேட்கவில்லை. ஏனென்றால் தகுந்தவர்களை தேர்வுசெய்து வேட்பாளர்களாக உன்முன் கொண்டு வந்து நிறுத்தினால், நீ மக்களிடம் சென்று அவர்களுக்காக வாக்குகளை முறையாகச் சேர்க்க முடியுமென்பதற்காகத் தான் என் சிரமத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அமர்ந்திருந்தேன்.

அப்படி அமர்ந்திருந்ததின் விளைவை நேற்று அதிகாலை 3 மணி அளவில் என்னால் உணர முடிந்தது. ஆமாம், அறுவை சிகிச்சை செய்துகொண்ட இடத்திற்கு கீழே இடுப்பு மற்றும் கால் பகுதியில் கடுமையான வலி. வீட்டாரிடமும், மருத்துவரிடமும் வலி பற்றி கூறினால் - தொடர்ந்து பலமணி நேரம் உட்கார்ந்திருந்ததைக் கூறி; அவர்கள் நம்மைத் தான் கோபிப்பார்கள் என்பதற்காக வலியைப் பொறுத்துக் கொள்ளப் பார்த்தும் முடியவில்லை. வலியையும் பொறுத்துக் கொண்டு - இரண்டு மூன்று தொகுதிகளுக்கு சரியான வேட்பாளரை நிர்ணயிக்க முடியவில்லையே என்பதற்காக அந்த இரவு நேரத்தில் தம்பி துரைமுருகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரையும், சில மாவட்டக் கழகச் செயலாளர்களையும் வரச்செய்து பேசினேன். தொடர்ந்து அதே நேரத்தில்தான் திருவள்ளூர் தொகுதி பற்றி சிந்தித்து, மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி சிவாஜியையும், தம்பி கிருஷ்ண சாமியையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களை நேரில் வரச்செய்து, அந்த தொகுதி பற்றி முடிவெடுத்து அறிவித்தோம்.

கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள 21 வேட்பாளர்களில் ஒருவரைத் தவிர அனைவருமே பட்டதாரிகள் - ஒரு சிலர் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள். கழகத் தலைமையின் சார்பில் தோழமைக் கட்சிகளோடு கலந்து பேசி தொகுதி உடன்பாடு கண்டு - தேர்தல் அறிக்கை வெளியிட்டு - வேட்பாளர்களையும் தேர்வு செய்து அறிவித்துவிட்டோம். வாக்காளர்களிடம் சென்று மத்திய, மாநில அரசுகளின் சாதனைகளைப் பட்டியலிட்டு - இத்தகைய

சாதனைகள் மேலும் தொடர்ந்திட இந்த அணியினை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு வெற்றியைத் தேடித்தர வேண்டிய பொறுப்பு கூட்டணிக் கட்சிகளின் முன்னணி தோழர்களுக்கும் இருக்கிறது. அந்தப் பணியிலே அவர்கள் எல்லாம் ஈடுபட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கான உந்து சக்தியை நமது தோழமைக் கட்சிகளான அனைத்துக் கட்சி உடன்பிறப்புகளுக்கும் வழங்க வேண்டிய பொறுப்பு உனக்கு உண்டு என்பதை மறவாதே - தேர்தல் களம் அழைக்கிறது, புறப்படு!

அன்புள்ள,

மு.க.

7-4-2009

3392. பூச்சாண்டிப் பொம்மை?

உடன்பிறப்பே,

வீட்டோரத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பறவைகள் பதம் பார்த்து விடாமல் இருப்பதற்காக ஒரு கலயத்தில் கண்ணும் மூக்கும் எழுதி - அதை ஒரு கொம்பில் குத்தி - அந்தக் கொம்பை ஒரு பானையில் பொருத்தி, அதற்கு ஒரு கிழிந்த சட்டை போட்டு; அந்தப் பூச்சாண்டிப் பொம்மையை தோட்டத்து நடுவில் சிலர் நாட்டி வைப்பார்கள்.

அதாவது அதைப் பார்த்து பயந்து போய், பழங்களைக் கொத்த வரும் பறவைகள் அருகில் நெருங்காமல் அஞ்சி நடுங்கிப் பறந்து போய்விடும் என்பது அந்தச் சில பேரின் எண்ணம். ஆனால் அதற்கு மாறாகத் தோட்டத்துப் பக்கம் பறந்து வரும் சில பறவைகள் காவலுக்கு வைக்கப்பட்ட அந்தப் பூச்சாண்டிப் பொம்மையின் மீதே உட்கார்ந்து எச்சமிட்டுக் கொண்டிருக்கிற காட்சிகளையும் கண்டிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி பற்றி ஏன் குறிப்பிடுகிறேன் என்றால்; இப்போதுதான் திக்கித் திணறி, தெண்டனிட்டு - "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்று 'சவடால்' அடிக்கும் சில வீராதி வீரர்கள் - துளியோண்டு தொகுதிகளைப் பெறுவதற்கு அம்மையாரிடம் அலையாய் அலைந்து - கூனிக் குறுகி - கும்பிட்டுத் தொழுது - பெற்றுவிட்டு பெருமூச்சு விடக்கூட நேரமில்லை!

ஆசுவாசப்படுத்தி களைப்பு நீக்கிட அருகில் ஆள் கூட இல்லை - அதற்குள் தொகுதி தரும் தோட்டத்துப் பழங்களை, காய்கறிகளை எந்தப் பறவையாவது கொத்தி விடுமென்று "பூச்சாண்டி" பொம்மை காட்டிக் கூத்தடிக்கிறார்கள்.

அய்யோ பாவம், முன்கூட்டியே முடிவை அறிந்து கொண்டு விட்டதால்; பழியை யார் மீது போடலாம் என்று ஆள் தேடுகிறார்கள் - அவர்கள் யார் தெரிகிறதா?

ஆம்; ஆலவாயப்பனுக்கும், அன்னை மீனாட்சிக்கும் வைகைக் கரையோரம் அமைந்த தங்கக் கோபுரக் கலசம் போல் தகதகவெனப் பளபளக்கும் கோடிச் செல்வர் குமார மங்கல மாளிகையில் மழலைகளாய்த் தவழ்ந்து; பாட்டனார் - தந்தையார் - மகனார் என்று வம்சா வழி வழித் தோன்றல்களாய் வாய்த்தவர்களுக்குத் தளகர்த்தராய் வாய்த்தவர்கள்.

பொன்மலை குவித்த பொதுவுடைமை வாதிகள் - நம் தயவினால் புதுச்சேரி பாராளுமன்றத் தொகுதி பெற்றிருந்தபோது; அந்தப் புனிதர்கள், புத்தர்கள்; கணக்கின்றி வாரியிறைத்த கரன்சி காகிதங்களில் காந்தியடிகள் உருவம்; படமாகத் திகழ்ந்து சிரித்த காட்சி இன்னமும் பசுமையாகத் தெரிகிறது.

மதுரையில் சங்கரராக நின்று சவுராட்டிரர்களின் வாக்குகளைப் பெற்றிட அள்ளிக் கொட்டிய வெள்ளிப்பணம் பற்றித் தெரியாதா யாருக்கும் - அந்தத் தொகுதியில் மனம் கூசாமல் இஸ்லாமியர் வாக்குகளைப் பெற்றிட குல்லாய் அணிந்து சென்ற காட்சியை மதுரை மக்கள்தான் மறக்க முடியுமா?

நமது அழகிரி அங்கே போட்டியிட விரும்பித் தலைமையிடம் விண்ணப்பித் திருக்கிறார் என்றதும்; ஏ யப்பா; என்ன குதி குதிக்கிறார்கள் - அழகிரி; பாவம் அந்தப் பிள்ளையைக் கண்டு ஏன் இவ்வளவு அஞ்சுகிறார்கள்? அழகிரியைப் பற்றி எனக்கே அல்லவா அச்சமாக இருக்கிறது! போட்டிக்கு நாள் குறிப்பதற்கு முன்பே புஜங்களைத் தட்டிக் கொண்டல்லவா; பொய்ப் புகார்களை அடுக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்; வங்கத்தில் துப்பாக்கியேந்தி வாக்கு சேகரிக்கும் தொண்டர்கள்;

அழகிரியை என்ன செய்வார்களோ;
ஏது செய்வார்களோ; அழகிரி எதற்கும் -
எந்தத் தியாகத்துக்கும் தயார் -
என் மகன்களில் ஒருவன்; மதுரையில்
சிலரது கண்களை உறுத்துவதை
இந்த மாநிலம் அறியும்.

"இருப்பது ஓர் உயிர்; அது போகப் போவதும் ஒரு முறை; அது ஒரு நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே" என்று அறிஞர் அண்ணா சொன்ன வாசகம் நம் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

அன்புள்ள,
மு.க.
8-4-2009 பூச்சாண்டிப் பொம்மை?

உடன்பிறப்பே,

வீட்டோரத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பறவைகள் பதம் பார்த்து விடாமல் இருப்பதற்காக ஒரு கலயத்தில் கண்ணும் மூக்கும் எழுதி - அதை ஒரு கொம்பில் குத்தி - அந்தக் கொம்பை ஒரு பானையில் பொருத்தி, அதற்கு ஒரு கிழிந்த சட்டை போட்டு; அந்தப் பூச்சாண்டிப் பொம்மையை தோட்டத்து நடுவில் சிலர் நாட்டி வைப்பார்கள்.

அதாவது அதைப் பார்த்து பயந்து போய், பழங்களைக் கொத்த வரும் பறவைகள் அருகில் நெருங்காமல் அஞ்சி நடுங்கிப் பறந்து போய்விடும் என்பது அந்தச் சில பேரின் எண்ணம். ஆனால் அதற்கு மாறாகத் தோட்டத்துப் பக்கம் பறந்து வரும் சில பறவைகள் காவலுக்கு வைக்கப்பட்ட அந்தப் பூச்சாண்டிப் பொம்மையின் மீதே உட்கார்ந்து எச்சமிட்டுக் கொண்டிருக்கிற காட்சிகளையும் கண்டிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி பற்றி ஏன் குறிப்பிடுகிறேன் என்றால்; இப்போதுதான் திக்கித் திணறி, தெண்டனிட்டு - "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்று 'சவடால்' அடிக்கும் சில வீராதி வீரர்கள் - துளியோண்டு தொகுதிகளைப் பெறுவதற்கு அம்மையாரிடம் அலையாய் அலைந்து - கூனிக் குறுகி - கும்பிட்டுத் தொழுது - பெற்றுவிட்டு பெருமூச்சு விடக்கூட நேரமில்லை!

ஆசுவாசப்படுத்தி களைப்பு நீக்கிட அருகில் ஆள் கூட இல்லை - அதற்குள் தொகுதி தரும் தோட்டத்துப் பழங்களை, காய்கறிகளை எந்தப் பறவையாவது கொத்தி விடுமென்று "பூச்சாண்டி" பொம்மை காட்டிக் கூத்தடிக்கிறார்கள்.

அய்யோ பாவம், முன்கூட்டியே முடிவை அறிந்து கொண்டு விட்டதால்; பழியை யார் மீது போடலாம் என்று ஆள் தேடுகிறார்கள் - அவர்கள் யார் தெரிகிறதா?

ஆம்; ஆலவாயப்பனுக்கும், அன்னை மீனாட்சிக்கும் வைகைக் கரையோரம் அமைந்த தங்கக் கோபுரக் கலசம் போல் தகதகவெனப்

பளபளக்கும் கோடிச் செல்வர் குமார மங்கல மாளிகையில் மழலைகளாய்த் தவழ்ந்து; பாட்டனார் - தந்தையார் - மகனார் என்று வம்சா வழி வழித் தோன்றல்களாய் வாய்த்தவர்களுக்குத் தளகர்த்தராய் வாய்த்தவர்கள்.

பொன்மலை குவித்த பொதுவுடைமை வாதிகள் - நம் தயவினால் புதுச்சேரி பாராளுமன்றத் தொகுதி பெற்றிருந்தபோது; அந்தப் புனிதர்கள், புத்தர்கள்; கணக்கின்றி வாரியிறைத்த கரன்சி காகிதங்களில் காந்தியடிகள் உருவம்; படமாகத் திகழ்ந்து சிரித்த காட்சி இன்னமும் பசுமையாகத் தெரிகிறது. மதுரையில் சங்கராராக நின்று சவுராட்டிரர்களின் வாக்குகளைப் பெற்றிட அள்ளிக் கொட்டிய வெள்ளிப்பணம் பற்றித் தெரியாதா யாருக்கும் - அந்தத் தொகுதியில் மனம் கூசாமல் இஸ்லாமியர் வாக்குகளைப் பெற்றிட குல்லாய் அணிந்து சென்ற காட்சியை மதுரை மக்கள்தான் மறக்க முடியுமா?

நமது அழகிரி அங்கே போட்டியிட விரும்பித் தலைமையிடம் விண்ணப்பித் திருக்கிறார் என்றதும்; ஏ யப்பா; என்ன குதி குதிக்கிறார்கள் - அழகிரி; பாவம் அந்தப் பிள்ளையைக் கண்டு ஏன் இவ்வளவு அஞ்சுகிறார்கள்? அழகிரியைப் பற்றி எனக்கே அல்லவா அச்சமாக இருக்கிறது! போட்டிக்கு நாள் குறிப்பதற்கு முன்பே புஜங்களைத் தட்டிக் கொண்டல்லவா; பொய்ப் புகார்களை அடுக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்; வங்கத்தில் துப்பாக்கியேந்தி வாக்கு சேகரிக்கும் தொண்டர்கள்;

அழகிரியை என்ன செய்வார்களோ;
ஏது செய்வார்களோ; அழகிரி எதற்கும் -
எந்தத் தியாகத்துக்கும் தயார் -
என் மகன்களில் ஒருவன்; மதுரையில்
சிலரது கண்களை உறுத்துவதை
இந்த மாநிலம் அறியும்.

"இருப்பது ஓர் உயிர்; அது போகப் போவதும் ஒரு முறை; அது ஒரு நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே" என்று அறிஞர் அண்ணா சொன்ன வாசகம் நம் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

அன்புள்ள,
மு.க.
8-4-2009

3393. தமிழ் இன மீட்புக்காகக் குரல் கொடுத்திட வாரீர்!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த போதிலும் அண்மைக் காலமாக மிகவும் மோசமான நிலைமை உருவாகியுள்ளது.

23-4-2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் திரு. ஜி.கே. மணி தலைமையில் பா.ம.க. உறுப்பினர்களும், ம.தி.மு.க. சார்பாக தம்பி திரு. மு. கண்ணப்பன், விடுதலை சிறுத்தைகள் சார்பாக திரு. கு. செல்வம், திரு. து. ரவிக்குமார் ஆகியோரும் விதி 36-ன் கீழ் ஒத்தி வைப்பு தீர்மானம் ஒன்றைக் கொடுத்து - அதனைத் தகவல் கோரல் என்ற முறையில் பேரவைத் தலைவர் அனுமதித்து - அவர்கள் எல்லாம் பேசிய பிறகு - அரசின் சார்பில் நானே அவர்களின் கருத்துகளை உள்ளடக்கி ஒரு தீர்மானத்தை அவையில் முன் மொழிந்தேன்.

அடுத்து 6-10-2008 அன்று சென்னை மயிலை மாங்கொல்லையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிகளின் சார்பில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் தமிழர்களுக்காக இயக்கம் நடத்துகிற அனைவரும், தமிழர்கள் அனைவரும் ஒரே உருவில் ஒரே வடிவில் ஒரே உணர்வில் நின்று இந்த ஆபத்துக்கு விடை காண்போம் என்று வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு முதல் நாள் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி பிரதமருக்கும், சோனியா காந்திக்கும் அனுப்பி வைத்ததின் அடிப்படையில் - பிரதமர் நம்முடைய கழக அமைச்சர் தம்பி டி.ஆர். பாலுவை 6ஆம் தேதி காலையில் அழைத்துப் பேசி விவரங்களையெல்லாம் கேட்டதோடு என்னிடமும் தொலைபேசியிலே தொடர்பு

கொண்டார். அவரிடம் நான் புது டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை மத்திய அரசு உடனடியாக அழைத்து, நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தமிழர்களைக் கொல்வது குறித்து இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் - இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கையும் இனப் படுகொலையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் - இலங்கை அரசு அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிட வேண்டும் - இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் எத்தகைய துன்பங்களுக்கும் இனி ஆளாகவே கூடாது என்றெல்லாம் கேட்டுக் கொண்டேன். அவரும் அக்கறையுடனும் கவலையுடனும் என் பேச்சைக் கேட்டு, உடனடியாகக் கவனிக்கிறேன், என்னை நம்புங்கள் என்றார். கூறியது மாத்திரமல்ல, உடனடியாக இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரை அழைத்து அவர் மூலமாக டெல்லியில் உள்ள இலங்கை நாட்டுத் தூதரை வரச் சொல்லி, அவரை எச்சரித்து இப்படி தமிழகத்திலே இருந்து அபயக் குரல் வந்திருக்கிறது, நீங்கள் எங்களுடைய கருத்தை அறிந்து ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டு மென்ற எச்சரிக்கையை இந்திய அரசு அன்றைக்கே செய்தது.

இதனைத் தொடர்ந்து 14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை தலைமைச் செயலகத்திலே கூட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதித்தோம். அந்தக் கூட்டத்தை அ.தி.மு.க. வும், ம.தி.மு.க.வும் புறக்கணித்தன. தே.மு.தி.க.வும் கலந்து கொள்ளவில்லை. அதைத் தொடர்ந்து 16-10-2008 அன்று மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி வெளியிட்ட அறிக்கையில் "இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்தியாவில் உள்ள எங்களுக்கு பெரிதும் கவலை அளிக்கிறது. ராணுவ பலத்தைப் பயன் படுத்தியோ, போர்க்கள வெற்றிகளாலோ இயல்பு நிலையைத் திரும்பக் கொண்டுவர முடியாது என்று இந்தியா உறுதிபட தெரிவித்து வருகிறது. பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்" என்று கூறினார். தொடர்ந்து 18-10-2008 அன்று நமது பிரதமர் டாக்டர் மன் மோகன் சிங் அவர்கள் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் தொலை பேசியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நேரடியாகவே பேசினார். அடுத்து 22-10-2008 அன்று மத்திய அமைச்சர் பிரணாப் அவர்கள் நாடாளுமன்றத்தில் "இலங்கையின் வடக்குப் பகுதியில் மனிதாபிமான சூழல்கள்

மிகவும் மோசமாகிக் கொண்டு வருகின்றன. எந்த நிலையிலும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் இலங்கை அரசை நாம் வலியுறுத்தியுள்ளோம். இனப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை தீர்வாகாது என்ற நமது ஆழ்ந்த நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்" என்று கூறினார்.

24-10-2008 அன்று தமிழகத்தின் தலைநகர் சென்னையில் அதுவரை நடைபெறாத அளவிற்கு பிரமாண்டமான "மனிதச் சங்கிலி" ஒன்றினை நடத்தினோம். திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் ராமேஸ்வரம் சென்று பேரணியும், பொதுக் கூட்டமும் நடத்தியதோடு- 1-11-2008 அன்று சென்னையில் உண்ணா நோன்பும் இருந்தார்கள். அதே நவம்பர் திங்கள் 12ஆம் தேதி மீண்டும் ஒரு முறை இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் ஒன்றினை நான் முன் மொழிந்து நிறைவேற்றப்பட்டது. 4-12-2008 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து வேண்டுகோள் விடுத்ததுடன், மத்திய அமைச்சர் பிரணாப் அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டோம். 27-12-2008 அன்று நடைபெற்ற கழகப் பொதுக் குழுவிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம் நிறைவேற்றினோம். 12-1-2009 அன்று பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாசு, தமிழர் தலைவர் கி. வீரமணி, விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோர் என்னைச் சந்தித்து உடனடியாக பிரணாப் அவர்களை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். அவ்வாறே நான் மத்திய அமைச்சர் தம்பி பாலுவிடமும், என் மகள் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியிடமும் கூறி, அவர்களும் முறையே பிரதமரையும், சோனியா காந்தியையும் சந்தித்து நிலைமைகளை விளக்கினார்கள்.

இதற்கிடையே தமிழக அரசின் சார்பில் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக நிதி ஒன்றும் திரட்டப்பட்டு அதிலே சுமார் ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் சேர்ந்து - அந்தத் தொகையிலிருந்து உணவு பண்டங்கள், துணிகள், மருந்து பொருள்களை மத்திய அரசின் உதவியோடு செஞ்சிலுவை சங்கங்களின் மூலமாக

வழங்கியிருக்கிறோம். அந்த உதவிகள் முறையாகப் போய்ச் சேர்ந்ததாக நமக்கு தகவல்களும் கிடைத்தன.

ஆனால் 18-1-2009 தேதிய நாளிதழ்களில் வெளி வந்த ஜெயலலிதாவின் பேட்டியில், "இலங்கை வேறு நாடு, எனவே அந்த நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கு ஒரு எல்லை உண்டு. இலங்கையில் ஈழம் என்ற ஒரு நாடு இன்னும் அமையவில்லை. இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று சிங்கள ராணுவம் எண்ணவில்லை. ஒரு போர் நடை பெறும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதிவிலக்கு அல்ல" என்று கூறியிருந்தார்.

உடல் நலம் குன்றிய நிலையிலே இருந்தாலும் 3-2-2009 அன்று நடைபெற்ற கழகச் செயற்குழுவிலும் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் நான் உரையாற்றினேன். மேலும் நான் மருத்துவ மனையிலே இருந்த போதே - "இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை" என்ற அமைப்பை பல்வேறு கட்சிகளின், அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகளைக் கொண்டும் - தம்பி துரைமுருகன் தலைமையில் நீதியரசர்கள் மோகன், கோகுலகிருஷ்ணன், ஜனார்த்தனம், ராஜன், பாஸ்கரன், சாமிதுரை, சண்முகம், பேராசிரியர் தனபாலன் மற்றும் தமிழர் தலைவர் கி. வீரமணி, மத்திய அமைச்சர் ஆ. ராஜா, கனிமொழி ஆகியோரைக் கொண்டும் துணைக்குழு நியமித்து அவர்கள் மூலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை தீருவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம்.

உடன்பிறப்பே, தமிழகத்தின் சார்பிலும் - தமிழக அரசின் சார்பிலும் - மத்திய அரசின் சார்பிலும் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை இலங்கைத் தமிழர்களுக்காக எடுத்து வந்துள்ள நிலையிலும் அங்கே நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டுதான் போகின்றது. இலங்கை அரசு 48 மணி நேரத்திற்கு தற்காலிகமாக போர் நிறுத்தம் செய்ய முன் வந்ததே தவிர - நிரந்தர போர் நிறுத்தத்திற்கு வரவில்லை. அதுவும் இரண்டு நாட்களாக வந்துள்ள செய்திகள் நம்மை மிகவும் பாதித்துள்ளது. நேற்றைய தினம் பல முனைகளிலிருந்தும் எனக்கு வந்த செய்திகளைத் தொடர்ந்து - மத்திய உள்துறை அமைச்சர் அருமை நண்பர் ப.சிதம்பரம் அவர்களோடு நானும் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியும் அடுத்தடுத்து தொலைபேசி

மூலம் தொடர்புகொண்டு நீண்ட நேரம் உரையாடிய பிறகு - அவரும் உடனடியாக பிரணாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்து இலங்கை நிலைமைகளை எல்லாம் விளக்கியிருக்கிறார். நானும் நேற்றையதினமே பிரதமருக்கும், சோனியா காந்தி அவர்களுக்கும், ப. சிதம்பரம் அவர்களுக்கும் தந்தி கொடுத்துள்ளேன். அதுபற்றிய செய்தி ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

மேலும் ஏப்ரல் 9 ஆம் நாள் மாலை 4 மணிக்கு சென்னையில் மன்றோ சிலையிலிருந்து சேப்பாக்கம் வரையில் என்னுடைய தலைமையில் இலங்கை அரசை போரை நிறுத்தும்படி கோரி மாபெரும் தமிழர் பேரணி ஒன்றினை கட்சி வேறுபாடின்றி நடத்திட முடிவு செய்து, அது பற்றிய விளம்பரங்கள் வெளி வந்துள்ளன.

1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இது போன்றதொரு சூழ்நிலை இலங்கையிலே ஏற்பட்டு - தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது - ஜூலை 27 ஆம் தேதி பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்காக சென்னையில் பேரணி நடைபெறும் என்று அறிவித்தேன். 24 மணி நேர அறிவிப்பில் பல இலட்சம் மக்கள் திரண்ட அந்த மகத்தான பேரணி நடைபெற்றது.

தற்போது கடந்த ஓராண்டு காலமாக இலங்கைத் தமிழர்கள் மாண்டு மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்காகத் தாய்த் தமிழகம் தொடர்ந்து மத்திய அரசின் உதவியோடு பல வகைகளிலும் குரல் கொடுத்து வருகிறது.

அனைத்துக் கட்சிக் கூட்டம்,

மனிதச் சங்கிலி,

உண்ணா விரதப் போராட்டம்,

ஆர்ப்பாட்டம்,

பேரவையிலே கண்டனத் தீர்மானங்கள்,

பிரதமரிடம் சந்திப்பு, முறையீடு

மனுக்கள், மகஜர்கள்

தற்போது பேரணி அறிவித்திருக்கிறோம். இலங்கைத் தமிழனுக்காக நமது நலனைத் துச்சமாக கருதி, நம்மையே

வருத்திக்கொண்டு - அறப்போரில் ஈடுபடுவதே நமக்கிருக்கும் ஒரே வழி!

அந்த வழி, அண்ணா வழி, அறவழி, அமைதி வழி.

அந்த வழியிலே இலங்கை அரசைச் சிந்திக்கவைத்திட நாம் நடத்தவுள்ள பேரணியிலே உன்னைச் சந்திக்கக் காத்திருப்பேன், புறப்பட்டிருப்பாய் இந்நேரம். மாலை 4 மணி - மன்றோ சிலை அருகில்! நீ கலை உலகத்திலே இருக்கிற தம்பியானாலும் - கல்வி கூடங்களில் இருக்கின்ற தம்பியானாலும் - ஆலைகளில், அலுவலகங்களில் பணியாற்றும் தம்பியானாலும் - வேறு யாரானாலும் தமிழன் என்றால் தன் தசையாடும் உணர்வோடு - தணலில் புழுப்போல் இலங்கைத் தீவில் துடித்துக் கொண்டிருக்கும் தமிழ் இனத்தைக் காப்பாற்ற இந்தப் பேரணியில் கலந்துகொள்!

இது தமிழர் பேரணி!
தமிழ் இனத்திற்காக குரல் கொடுக்கின்ற பேரணி!

அன்புள்ள,
மு.க.
9-4-2009

3394. சுட்டெரிக்கும் நெருப்பில் சுடர் விடும் தங்கம்!

உடன்பிறப்பே,

இன்று 9-4-2009 “தினமலர்” இதழில் ஒரு புகைப் படம் வெளி வந்துள்ளதே அதைப் பார்த்தாயா? வழக்கறிஞர்கள் ஆடவரும், பெண்டிருமாக கறுப்புக் கோட்டு அணிந்து - வழக்கு நடத்துவதற்கு, வாதாடுவதற்கு நீதிமன்றத்துக்குச் செல்வார்கள் என்றுதானே கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக அந்தப் படத்திலே உள்ள சில வழக்கறிஞர்கள்; நீதி மன்றத்துக்கு வெளியே வீதி மன்றத்தில் “இடுகாடு - சுடுகாடு” அமைத்து - சுடலை காப்போர் வேலையைப் போல், திருமதி சோனியா காந்தி படத்தையும், டாக்டர் மன்மோகன் சிங் படத்தையும், என் உருவப் படத்தையும் கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நாங்கள் என்ன தீங்கிழைத்தோம் - ஏன்; எங்களுக்குத் தீயிடுகிறார்கள்?

எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு நீதி மன்றக் கட்டிடங் களை மாவட்டந்தோறும் கட்டி; திறப்பு விழா நடத்தியிருக்கிறோமே; அதற்காகவா தீ வைக்கிறார்கள்?

இந்தியாவிலேயே முதன் முதலாக அண்ணல் அம்பேத்கர் பெயரால் சட்டப் பல்கலைக் கழகம் அமைத்து; எனக்காக (முதல் அமைச்சருக்காக) கட்டப்பட்ட மாளிகை போன்ற இல்லத்தை; அந்தப் பல்கலைக் கழக முதன்மை அலுவலகத்திற்காக அளித்தோமே; அதற்காகவா?

சென்னை உயர் நீதி மன்றத்துக்கு எந்த ஆண்டையும் விட; நமது ஆட்சியில் அதிக நிதியாக 300 கோடி ரூபாய் வழங்கியிருக் கிறோமே; அதைக் கண்டித்து அக்கினியில் என் படங்களையும், திருமதி சோனியா காந்தி படங்களையும் இரையாக்குகிறார்களா?

கொளுத்தட்டும் - நன்றாகக் கொளுத்தட்டும் - எனக்கு இப்போது வயது 85 ஆகி விட்டது - அறுவை சிகிச்சைக்குப் பிறகு இன்னமும் நலிவு தீரவில்லை. நடக்க முடியாமல் சக்கர நாற்காலியில் வருகிறேன் - என்றைக்கோ, எப்போதோ; என் கதை முடிந்து விட்டால், என்னை எப்படிச் சுட்டெரிப்பார்களோ - அதை நான் பார்க்கவா முடியும்; அது எப்படி இருக்குமென்று இப்போதே முன் கூட்டியே வழக்கறிஞர்களாம் என் அருமைத் தம்பிமார்களும் - அன்புத் தங்கைகளும் - என் உருவப் படத்துக்குத் தீயிட்டுக் கொளுத்திக் காட்டுகிறார்களே; மகிழ்ச்சி! மகிழ்ச்சி! வாழ்க, வாழ்க, அவர்களின் வம்சாவழி; வளம் பலபெற்று!

தீயிட்டது மட்டுமல்லாமல்; இன்னும் அதன் தொடர்ச்சியாக செய்ய வேண்டிய இறுதிக் கடன்களையும் செய்வார்களேயானால் - எனக்கு இன்னும் பெரு மகிழ்ச்சி!

நம் வாழ்வு முடிந்த பிறகு என்ன செய்வார்கள் என்பதை முன் கூட்டியே காட்சியாக்கிக் காட்டுவதும், அதைப்பார்ப்பதும் சாதாரணமா? சரித்திர சாதனையல்லவா? சட்டம் படித்த சகலகலாவல்லவர்கள் - சகல கலாவல்லிகள் நீதித் துறையில் யார் யார் இருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களின் "அருள்மிகு" அக்கினி சேட்டைக்கு ஆயிரம் நன்றிகள் அல்லவா சொல்ல வேண்டும்.

"எங்கள் உருவப் படங்களுக்கு தீயிட்டோர் -
எல்லையில்லா வருடங்கள் இன்பமுடன் வாழ்க!"

"அக்கினியில் அடியேனையும், அம்மையார்
சோனியாவையும் கொளுத்திச் சிரிக்கும்
கோகிலங்களின் குடும்பம் செழித்து ஓங்குக!"

"சட்டம் படித்தோர்; தமது இட்டமுடன்
என்னையும்
எரித்துச் சிரித்தமைக்காக ஏழேழு தலைமுறையும்
ஏற்றமுடன் வாழ்ந்திடுக!"

"நீதி காத்திடப் போவீர்கள் என்று மகிழ்ந்தோம்;
நீவிர்; சுடலைக் காத்திடச் செல்லலாமா?"

"சுட்டெரிக்கும் நெருப்பில், "சுடர் விடும் தங்கம்"
என்ற உண்மையறிந்து; உலவிடுவீர்;

இனியாகிலும் உத்தமர்களாய்!”

இல்லையேல்
உலகின்
பழிப்புக்கு
ஆளாவீர்! ஆனால்;

நான் மட்டும் உம்மை
நாளும் வாழ்த்திக் கொண்டிருப்பேன்.

“எதையும் தாங்கும் இதயம்” –

“வாழ்க வசவாளர்கள்’’

இவை என் அண்ணன் தந்த வாசகங்களன்றோ?

அன்புள்ள,
மு.க.
10-4-2009

3395. மூப்பனார் வழங்கிய புத்தகம்!

உடன்பிறப்பே,

2000ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் கன்னியாகுமரியில் 133 அடி உயரமுள்ள வள்ளுவரின் சிலை திறப்பு விழா! ஆம், என்னுடைய நீண்ட நாள் கனவை சிற்பி பத்மஸ்ரீ கணபதி ஸ்தபதி அவர்களின் குழுவினரைக் கொண்டு நிறைவேற்றி மகிழ்ந்த நாள் - பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் கலந்து கொண்டார்.

அப்போது 2001ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சி தி.மு.க. வுடன் கூட்டணி சேருமா, சேராதா என்று தெரியாத நிலையில் - அந்த விழாவில் கலந்து கொண்ட மூப்பனார் அவர்கள் எனக்கு ஒரு புத்தகத்தைப் பரிசாக அளித்தார். அந்தப் புத்தகத்தின் பெயர் You Can Win - உம்மால் வெல்ல முடியும் - என்பதாகும். விழாவிலே நான் பேசும்போது - அந்தப் புத்தகத்தின் தலைப்பைப் பற்றி பேசினேன்.

அதாவது, "மூப்பனார் அவர்கள் இந்தப் பந்தலுக்கு வந்ததும் என்னிடத்திலே ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். புத்தகத்தின் தலைப்பு "உம்மால் வெல்ல முடியும்". என்ன அர்த்தத்தில் கொடுத்தாரோ எனக்குத் தெரியாது. அது பலித்திடுவதற்கு ஆவன நான் செய்வேன். அந்த நூலினை வழங்கியவரின் மனதிலே என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. சுற்றுச் சார்பு சரியில்லை என்ற ஒன்றைத் தவிர அவருடைய உள்ளம் என்பால் ஈர்க்கப்பட்ட - இன்று நேற்றல்ல பல ஆண்டுக் காலமாக உள்ள உள்ளம் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்" என்று குறிப்பிட்டேன்.

அதன் பின்னர் பலமுறை அந்தப் புத்தகத்தை நான் படித்திருக்கிறேன். ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம். கருத்துக்களின் சுரங்கம் அந்தப் புத்தகம் என்று சொன்னால் மிகையாகாது.

அந்தப் புத்தகத்தை மீண்டும் படிக்கும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. அதன் காரணமாக இன்றைய கடிதத்தில் அந்தப் புத்தகத்திலிருந்து எடுத்த சில பகுதிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"ஒவ்வொரு இடத்திற்கும் - அது வீடாக இருந்தாலும் - நிறுவனமாக இருந்தாலும் - அல்லது ஒரு நாடாக இருந்தாலும் ஒரு கலாச்சாரம் இருக்கிறது. சில சமயங்களில், நீங்கள் ஒரு கடைக்குச் செல்லும்போது, அங்கே விற்பனையாளர் பண்பட்டவராகவும், ஏன் கண்காணிப்பாளரும், மேலாளரும், முதலாளியும் கூட பண்பட்டவர்களாக இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அதே சமயம், நீங்கள் இன்னொரு கடைக்குச் செல்லும்போது, அங்கே யுள்ள எல்லோருமே ஆணவத்துடனும், மரியாதையின்றியும் நடந்து கொள்வதைப் பார்க்கிறீர்கள். நீங்கள் ஒரு வீட்டிற்குச் செல்லும்போது, அங்கே குழந்தைகளும், பெற்றோர்களும் ஒழுங்காகவும், மரியாதையாகவும் விட்டுக் கொடுக்கும் பண்பு உடையவர்களாக இருப்பதைப் பார்க்கிறீர்கள். அதே சமயம், இன்னொரு வீட்டில் ஒவ்வொருவரும் கீரியும் பாம்புமாகச் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்க்கிறீர்கள்" (பக்கம் 10-11)

இந்த வரிகளுக்கு நான் விளக்கம் எழுதத் தேவையில்லை என்று கருதுகிறேன். உடன்பிறப்பே, உனக்குப் புரிந்திருக்கலாம்.

★★

"நீங்கள் வெற்றி பெற்றவர்களோடு சேர்ந்தால், நீங்களும் ஒரு வெற்றி வீரர் ஆவீர்கள். சிந்தனையாளர்களோடு சேர்ந்தால் நீங்களும் சிந்தனையாளர் ஆவீர்கள். கொடுப்பவர்களோடு சேர்ந்தால், நீங்களும் கொடுப்பவர் களாக ஆவீர்கள். குற்றம் குறை சொல்பவர்களோடு சேர்ந்தீர்கள் என்றால், நீங்களும் குற்றம் குறை சொல்லிக் கொண்டு உட்கார்ந்து விடுவீர்கள்.

யாராவது வாழ்க்கையில் வெற்றி பெற்றால், அப்போதெல்லாம் சின்ன புத்திக்காரர்கள் அவர்களிடம் குறைகளைக் கண்டு அவர்களின் தன்னம்பிக்கையைக் குலைக்க முயற்சிப்பார்கள். இப்படிப்பட்ட அற்பப் புத்திக் காரர்களை எதிர்க்க நினைக்காமல், விலகிச் சென்றீர்களானால் நீங்கள் ஜெயித்தவர்கள்

ஆவீர்கள். ஒருக்காலும் இப்படிப்பட்ட எதிர்மறை எண்ணமுடையவர்கள் உங்களைக் கால்வாரிவிட வாய்ப்பு கொடுக்காதீர்கள். ஒரு மனிதனின் குணத்தை அவன் யாருடன் சேர்ந்திருக்கிறான் என்பதை வைத்து மட்டுமல்லாமல், அவன் யார் யாருடன் சேர்வதைத் தவிர்க்கிறான் என்பதையும் வைத்தே முடிவெடுக்க முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்"
(பக்கம் 42-43)

உடன்பிறப்பே, இந்த வரிகளுக்கான விளக்கத்தையும் நான் எழுதாமலே நீ புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்!

★★

"ஒரு குறிக்கோளை அடைவதற்காக நமக்குள் கொழுந்து விட்டெரியும் ஆசையிலிருந்துதான் வெற்றி பெறுவதற்கான தூண்டுதல் வருகின்றது. ஓர் இளைஞன் சாக்ரடீஸிடம் வந்து வெற்றிக்கான ரகசியத்தைப் பற்றிக் கேட்டான். அதற்கு சாக்ரடீஸ் அந்த இளைஞனிடம் அடுத்த நாள் காலையில் ஆற்றங்கரை அருகில் தன்னைச் சந்திக்கும்படி சொன்னார். அடுத்த நாள் அவர்கள் ஆற்றங்கரையில் சந்தித்தனர். சாக்ரடீஸ் அந்த இளைஞரைத் தன்னுடன் ஆற்றை நோக்கி நடந்து வரும்படி கேட்டுக் கொண்டார்.

அவர்களது கழுத்தளவிற்கு ஆற்று நீர் வந்தவுடன் சாக்ரடீஸ் அந்த இளைஞனை திடீரென நீரினுள் பிடித்து அழுத்தினார். அந்த இளைஞன் வெளியே வரப் போராடினான். ஆனால் சாக்ரடீஸ் மிகவும் வலுவானவர். ஆதலால், அப்படியே அவனை அமுக்கியவாறு; அவனது முகம் நீல நிறமாக மாறுகிற அளவுக்கு அமுக்கினார். சற்றுப் பொறுத்து சாக்ரடீஸ் அவனது தலையை நீரினுள்ளிருந்து வெளியே இழுத்தவுடன் அந்த இளைஞன் செய்த முதல் வேலையே தன்னால் இயன்ற அளவு காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்ததுதான்.

சாக்ரடீஸ் அவனிடம், "நீ நீருக்குள்ளே இருந்தபோது நீ எதை அதிகம் விரும்பினாய்?" என்று கேட்டார். அந்த இளைஞன், "காற்று" என்று பதில் அளித்தான்.

சாக்ரடீஸ், "வெற்றியின் ரகசியமே அதுதான். நீ எவ்வளவு அதிகமாகக் காற்றை விரும்பினாயோ, அதுபோன்றே வெற்றியையும் விரும்பினால் உனக்கு அது கிட்டும்" என்று சொன்னார். இதைத் தவிர வேறு எந்த ரசசியமும் இல்லை. ஒரு சுட்டெரிக்கும் ஆசையே சாதனைகளின் தொடக்க மாகும். ஒரு சிறிய தீயால் எப்படி அதிக வெப்பத்தைத் தர முடியாதோ, அது போல ஒரு பலவீனமான ஆசையால் மிகப் பெரிய விளைவுகளை உருவாக்க முடியாது" (பக்கம் 70-71)

உடன்பிறப்பே, வரப் போகின்ற தேர்தலில் வெற்றியையே எதிர் நோக்கும் உனக்கு இந்தக் குறிப்பு முக்கியம் அல்லவா? வெற்றியை விரும்பு - அதற்காக உழைத்திட, உழைத்திட - நிச்சயம் வெற்றி கிட்டும்!

★★

"ஒரு நாள் ஒரு பத்து வயது சிறுவன் ஒரு ஐஸ் கிரீம் கடைக்குச் சென்றான். ஒரு இருக்கையில் உட்கார்ந்தான். "ஐஸ் க்ரீம் கோன் எவ்வளவு?" என்று கடைப் பணிப்பெண்ணிடம் கேட்டான். அவள், "எழுபத்து ஐந்து செண்ட்டுகள்" என்றாள். அந்தச் சிறுவன் தனது கையில் இருந்த சில்லறைகளை எண்ணத் தொடங்கினான்.

பிறகு அவன், "ஒரு சிறிய அளவு ஐஸ் கிரீம் எவ்வளவு?" என்று கேட்டான். பணிப்பெண், பொறுமையிழந்து, "65 செண்ட்டுகள்" என்று பதில் அளித்தாள். அந்தச் சிறுவன், "எனக்கு சிறிய ஐஸ் கிரீம் கப் வேண்டும்" என்றான். அவனுக்கு ஐஸ் கிரீம் கிடைத்தது. பில் பணம் கொடுத்து விட்டு வெளியேறினான். அந்த வெற்றுக் கப்பை எடுக்க வந்த பணிப்பெண், மனமுருகிப் போனாள். அந்தக் கப்புக்கு அடியில் பத்து ஒரு செண்ட் சில்லறைகள் டிப்ஸாக வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிறுவன் ஐஸ் கிரீமை வாங்குவதற்கு முன்னால் அந்தப் பெண்ணுக்கு ஏதாவது தர எண்ணி இருந்திருக்கிறான். அவன் தனது உணர்வையும், அக்கறையையும் காட்டி விட்டான். அவன் தன்னைப் பற்றி எண்ணுவதற்கு முன்னால், பிறரைப் பற்றி எண்ணியிருக்கிறான்."

உடன்பிறப்பே, இந்தக் கதையை எதற்காக மேற்கொள் காட்டியிருக்கிறேன் என்பதையும் நீயே புரிந்து கொள்ள முயற்சி செய்; புரியும்.

★★

"வெற்றிக்கு எந்த மந்திரக் கோலும் இல்லை. இந்த உலகில் வெற்றி என்பது செயலாற்றுபவர்களுக்குத் தான் கிடைக்கும். வேடிக்கை பார்ப்பவர்களுக்கு அல்ல. வண்டி இழுக்கிற குதிரை, உதைக்க முடியாது. உதைக்கிற குதிரை வண்டி இழுக்காது. நாம் இழுக்கிற குதிரை போல இருப்போமாக. உதைக்கிற குதிரை போன்று இருப்பதை நிறுத்துவோமாக. கடின உழைப்பில்லாமல் வெற்றி என்பதே இல்லை" (பக்கம் 79)

உடன்பிறப்பே, வெற்றி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு உழைக்கப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு இறுதியாக சுட்டிக் காட்டியிருக்கும் இந்த வரிகளே போதுமானது என்று கருதுகிறேன். ஆமாம் - நீ இழுக்கிற குதிரை போல இருப்பாயாக - உதைக்கிற குதிரையாக உன் எதிரிகளே இருந்து விட்டுப் போகட்டும்.

அன்புள்ள,

மு.க.

14-4-2009

3396. இவர்களும் அவர் பக்கமா?

உடன்பிறப்பே,

16-4-2009 அன்று அ.தி.மு.க. கூட்டணி சார்பில் சென்னைத் தீவுத் திடலில் நடைபெற்ற வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் - அ.தி.மு.க. வின் சார்பில் தயாரிக்கப்பட்ட தேர்தல் அறிக்கை; அந்தக் கூட்டணியின் தலைவியான ஜெயலலிதாவினால் வெளியிடப்பட்டு, அதன் முதல் பிரதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் அவர்களால் பெறப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வின் அந்த அறிக்கை நாளேடுகளில் வெளியாகியிருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 2009ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையினை கடந்த 2-4-2009 அன்று நான் வெளியிட்டு, முதல் பிரதியை கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் பெற்றுக் கொண்டார். அந்த அறிக்கையில் பக்கம் 37இல் ஒரு பத்தி - சேதுக் கால்வாய் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும் - என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. அது இதோ :-

> “தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான சேதுக் கால்வாய் திட்டம் தமிழக முதல்வர் கலைஞர் தொடர்ந்து வலியுறுத்தியதின் காரணமாக 2.7.2005 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நேரத்தில் மத காரணங்களைக் காட்டி தடை செய்யப் பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை மத்திய அரசு விரைந்து முடித்து இத்திட்டத்தின் எஞ்சிய பணிகளை முடித்து தமிழ் நாட்டின் தென் மாவட்ட பொருளாதார வளர்ச்சிக்கும், இந்தியாவின் பாதுகாப் பிற்கும் வழிகோல வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.”

சேது கால்வாய்த் திட்டம் குறித்து தி.மு. கழகத்தின் கருத்து இதுதான். அ.தி.மு.க. கூட்டணியில் தற்போதுள்ள பா.ம.க.வின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் சேது சமுத்திரத் திட்டம் குறித்து என்ன கருத்தினை கொண்டுள்ளார் என்பதை தெளிவாக்கும் வகையில் அவர் 2007ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள் வெளியிட்ட ஓர் அறிக்கையினை உன் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது வருமாறு :-

"சேது கால்வாய்த் திட்டம் பொதுவாகத் தென் மாநிலங்களுக்கும் குறிப்பாக தமிழ் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் இன்றியமையாத் திட்டமாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சேது கால்வாய்த் திட்டத்தை எப்படியும் முடக்கிப் போட்டுவிட வேண்டும் என்று பல வெளிநாட்டுச் சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. அந்த வெளிநாட்டுச் சக்திகளுக்கு துணை போகின்ற வகையில் இங்குள்ள சிலர் மத உணர்வுகளைத் தூண்டி அதன் மூலம் தேவையற்ற சர்ச்சைகளைக் கிளப்பி இந்தத் திட்டத்தை முழுமையாக முடக்கிப் போட்டு விட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் பாதுகாப்புத் தேவைக்கும் நடுவமாக விளங்கப்போகிற சேது கால்வாய்த் திட்டத்தை முடக்கிப் போட்டுவிட எண்ணுகிறார்கள். எனவே, தேவையற்ற சர்ச்சைகளுக்கு இத்துடன் முற்றுப் புள்ளி வைத்துவிட்டு சேது கால்வாய்த் திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாகத் தொடங்க வேண்டும்."

இதிலிருந்து சேது சமுத்திரத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்பது தான் பா.ம.க.வின் எண்ணமாகவும் உள்ளதை அறியலாம். ஆனால் 16ஆம் தேதி சென்னைத் தீவுத் திடலில், அ.தி.மு.க. சார்பாக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் பற்றி கூறப்பட்டிருப்பது என்ன?

"சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மக்களின் கனவுத்

திட்டமாக இருந்த ஒன்று. ஆரம்பத்தில் இந்த திட்டம் குறித்து ஆலோசனை செய்த பிரிட்டிஷார் பின்பு இதைக் கை விட்டனர். பின்னர், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்ற தலை சிறந்த தலைவர்களும் கூட, தமிழகத்தின் நீண்ட காலத் தேவையை இந்தத் திட்டம் பூர்த்தி செய்யும் எனக் கருதினர். இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதன் மூலம், பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட கனவை நனவாக்கு வதாக தி.மு.க.வும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால், அதிக வேகமும் மிக அதிக எடை கொண்ட சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறனும் கொண்ட கப்பல்கள் பயணிக்கும் இன்றைய நவீன யுகத்தில், இது தற்காலத்திற்கு ஒவ்வாதத் திட்டம் என்ற உண்மை வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதால், தமிழ் நாட்டின் கடற்கரை மாவட்டங்களில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பறி கொடுப்பார்கள். இந்தப் பகுதியில் உள்ள அரிய வகை கடல் தாவரங்களும், உயிரினங்களும் நிரந்தரமாக அழிந்துவிடும். மேலும், சுருக்கமாகச் சொல்வதென்றால், இப்போது திட்டமிட்டுள்ளபடி இந்தக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப் படுவதால், நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு எந்தப் பொருளாதார ஆதாயமும் கிடைக்க வாய்ப்பே இல்லை. மேலும், இந்தத் திட்டம் சீர்படுத்த முடியாத அளவுக்கு சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவிக்கும். லட்சக்கணக்கான மக்களின் வேலை வாய்ப்புகளுக்கு உலை வைக்கும். மேலும், நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும். இந்தத் திட்டத்தால் பலனடைபவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு மற்றும் கருணாநிதி குடும்பத்தினர்தான். ஏராளமான பொதுமக்களின் நலன்களைப் புறக்கணித்து, ஒரு தனி நபருக்கோ அல்லது தனி குடும்பத்திற்கோ பலன்

அளிக்கும் எந்தத் திட்டத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்காது. இந்தத் திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்யும்."

உடன்பிறப்பே, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் - அவர்கள் பொறுப்புக்கு வந்தால் சேது சமுத்திரத் திட்டத்தையே ரத்து செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். அ.தி.மு.க.வும் இடம் பெறும் அரசு ஒன்று தப்பித் தவறி மத்தியிலே அமைந்து விட்டால் கூட, இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தை ரத்து செய்ய அ.தி.மு.க. வே குரல் கொடுக்கும் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். நான் கேட்க விரும்புவதெல்லாம், ஜெயாவின் தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டுள்ள இந்தக் கருத்து, அதே அணியில் இடம் பெற்றுள்ள பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உடன்பாடான கருத்துதானா? சேது சமுத்திரத் திட்டத்தை கை விட வேண்டும் என்பதைப் பற்றி அவர்களின் கருத்து என்ன? தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அதைத் தெரிந்து கொள்ள மிகவும் ஆவலாக உள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் விஷயத்தில் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை கைது செய்து இந்தியாவிற்கு அழைத்து வந்து தண்டனை தர வேண்டும் என்பது ஜெயாவின் எண்ணம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையையே ரத்து செய்ய வேண்டும் என்பது வைகோவின் கருத்து. இருவரும் சேர்ந்து இன்றைக்கு ஒரே அணியில் இருக்கிறார்கள். அதைப் போலத்தான் சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினையிலும், அ.தி.மு.க. வின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டம் கூடாது என்பது எப்படி ஜெயாவினால் கூறப்படுகிறதோ, அதே எண்ணத்தை எதிரொலிப்பவர்களாகத்தான் பா.ஜ.க.வினரும் இருக்கிறார்கள். அவர்களின் கருத்தைத்தான் அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை இன்று பிரதிபலித்துள்ளது. அதற்கு உதாரணமாக சேது சமுத்திரத் திட்டத்தில் ஜெயாவிற்கு ஆதரவாக ஒரு குரல் நேற்று கூட ஓங்கி ஒலித்திருக்கின்றது. எங்கேயிருந்து தெரியுமா? பா.ஜ.க.வின் தேசியத் தலைவரான ராஜ்நாத் சிங் அவர்கள் மக்களவை தேர்தலில் போட்டியிடும் பாரதிய ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து கர்நாடக

மாநிலத்தில் பேசும்போது, சேது சமுத்திரத் திட்டம் பற்றிய ஜெயாவின் கருத்தைத்தான் அங்கே எதிரொலித் திருக்கிறார்.

இப்போது தெரிகிறதா? ஜெயா அணிந்திருக்கும் முகமூடி யாருடையது என்று? ஒத்தக் கொள்கை யார் யாரிடம் உள்ளது என்பதற்கு இதைவிட வேறு சான்றா வேண்டும்? தேர்தல் முடிவுக்குப் பிறகு ஜெயா எந்தப் பக்கம் சாய்வார் என்பதற்கு இது ஒரு உதாரணம் போதாதா? "சேது சமுத்திரத் திட்டத்தையே நான்தான் நாடு முழுதும் ஆதரித்துப் பேசினேன்" என்று முழங்கிய வைகோவும் - "சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே தீரவேண்டு''மென்று முழங்குகிற டாக்டர் ராமதாசும் ஜெயா தேர்தல் அறிக்கையிலே சேது சமுத்திரத் திட்டத்தை ரத்து செய்வேன் என்று குறிப்பிட்டுள்ளதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அருமை சகோதரி எடுக்கும் முடிவே எங்கள் முடிவென்று கூறிக்கொண்டு, சேதுத் திட்டத்தை ரத்து செய்யுங்கள் என்று முழங்கியவாறு பா.ஜ.க. பக்கம் இவர்களும் போய் விடுவார்களா?

அன்புள்ள,

மு.க.

19-4-2009

3397. நாதியற்ற ஈழத் தமிழரைக் காத்திட நடுவணரசுக்கு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

இலங்கையில் கொந்தளிப்பு - நிலைமை மிக மிக மோசம் - கெடு முடிந்தது - தமிழர்கள் பலி - ராணுவத் தாக்குதல் - இறுதிக் கட்டம் என்ற செய்திகள் கடந்த சில நாட்களாக தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. தொலைக்காட்சிகளைக் காண முடியவில்லை. அங்கே நம் இனம் உயிரை விட்டுக் கொண்டிருக்கும் காட்சியை படம் பிடித்துக் காட்டுகிறார்கள். தமிழினத்தின் நரம்புகள் அங்கே அறுபடுகின்றன. அவல ஓசை கேட்டுக் கொண்டே உள்ளது. வருகின்ற செய்திகள், நம் உடம்பில் தீயை அள்ளிக் கொட்டுகின்றன.

எனக்கு வழி தெரியவில்லை - பொறுப்பான இடத்தில் இருக்கிறோமே - கையறு நிலையில் நம் இனத்தைக் காப்பாற்ற இயலாத வகையில் இருக்கிறோமே - என்ன செய்வதென்று புரியவில்லை. மூன்று நாட்களில் மத்திய அரசுக்கு - பிரதமருக்கு - காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு - வெளி உறவுத் துறை அமைச்சருக்கு இரண்டு முறை தந்தி கொடுத்து விட்டேன். அங்குள்ள தமிழர் படும் வேதனைச் செய்திகளைக் கேட்டு துடித்துக் கொண்டிருக்கும் நம் உள்ளத்தை மேலும் துளைத்திடும் வண்ணம் இங்கேயுள்ள அரசியல் கட்சிகள் இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக - நம்மால் தமிழர் களைக் காப்பாற்றிட முடியுமென்றும், ஆனாலும் நான் எதுவும் செய்யாமல் இருப்பதைப் போலவும் ஏசுகிறார்கள், பேசுகிறார்கள். அவர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைவிட அதைக் காரணமாகக் கொண்டு தி.மு.க. வை ஒழித்திட முடியுமா என்றுதான் கனவு காண்கிறார்கள்!

இந்தியாவை விட பெரிய நாடுகள் எல்லாம் இலங்கையில் நடைபெறும் கொடுமைகளைக் கண்டிக்கின்றன, எச்சரிக்கை

செய்கின்றன, வேண்டுகோள் விடுக்கின்றன. ஆனால் சிங்கள அரசோ எதையும் காதில் போட்டுக் கொள்ளத் தயாராக இல்லாத நிலையில் உள்ளது. இந்திய அரசினர் நம் வேண்டு கோளுக்கிணங்க இலங்கைக்கு பல வழிகளிலும் முயற்சி மேற்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீதும் பழி சொல்லப்படுகிறது. நம் இல்லத்தில் குழந்தைகள் நோயினால் துன்பப்படுவதை காண சகிக்காமல் கடவுளை நினைத்து கண்ணில்லையா உனக்கு என்று தூற்றுவதில்லையா? அதைப் போலத்தான் மத்திய அரசு மீது சாற்றப்படும் பழிச் சொற்களை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் சிலர் மத்திய அரசு மீது வேண்டுமென்றே அரசியல் நோக்கத்தோடு பழி கூறுவதையும் நம்மால் காண முடிகிறது.

இலங்கையிலே பாதிக்கப்படும் தமிழர்களின் துன்பத்திற்கு முடிவு காண வேண்டுமென்பதில் நான் எவ்வளவு வேதனையோடு இருப்பேன், இருக்கிறேன் என்பதை என்னை அறிந்தவர்கள் நன்கறிவார்கள். ஆட்சியை விட்டு வெளியேற வேண்டும் - காங்கிரஸ் கட்சியோடு உறவு கொள்ளக் கூடாது - பதவிகளைத் துறக்க வேண்டும் என்றெல்லாம் சிலர் மனதிலே எதையோ எண்ணிக் கொண்டு சொல்கிறார்கள். இலவச ஆலோசனைகளை உள் நோக்கத்தோடு வெளியிடுகிறார்கள். ஆனால் நாம் பதவியிலிருந்து விலகி விடுவதாலோ - பதவிகளைத் துறந்து விடுவதாலோ இலங்கையிலே உள்ள பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விடிவு காலம் வந்து விடுமா? அவர்களுக்கு தற்போதுள்ள சிறிய ஆதரவு கூட நாம் பதவி இழப்பதால் போய் விடும் என்று அவர்களைச் சார்ந்தவர்களே நம்மிடம் கூறுகிறார்கள். மத்திய அரசிடம் வலியுறுத்தி வேண்டுகோள் விடுவதற்குக் கூட அதிகாரப் பொறுப்பிலே ஆள் இல்லாத நிலை தமிழகத்திலே ஏற்பட்டு விடும் என்கிறார்கள்.

இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக இடைவிடாது போர்க்கோலம் கொண்டிருக்கிற சிங்களவர்களின் இன வெறியை அகற்றுவதற்கு ஏற்ற மனிதாபிமான நடவடிக்கைகள் இதுவரையில் தக்க வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். மாடாக உழைத்து, இலங்கை தீவுக்கோர் மகிமையை ஏற்படுத்திய நம்மின மக்கள் இன்று மண்ணில்

நெளியும் புழுவாக மிதிக்கப்படுகின்றார்கள். அங்கே தமிழ் மழலைகளை - அவர்களை பெற்றவர்களை - ஈழத்தின் வளத்திற்காக உழைத்தவர்களை - ஈரத்தை இதயத்தில் காய வைத்துக் கொண்டோர், வாட்டி வதைக்கின்ற கொடுமைகளைத் தொலைக்காட்சி பெட்டி களிலும், செய்தியேடுகளிலும் கண்டும் கேட்டும், நம் கண்களுக்கு பார்வைத்திறன் பட்டுப் போய் இருக்கக் கூடாதா? காதுகள் செவிடாகியிருக்கக் கூடாதா என்று அலறிடத் தான் தோன்றுகின்றது.

எத்தனை ஆண்டுகளாக இந்தக் கொடுமை? எத்தனையெத்தனை இன்னல்கள்? மத்திய அரசைப் பொறுத்தவரையில் இது இன்னொரு நாட்டுப் பிரச்சினை. மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் அணுகிட வேண்டிய பிரச்சினை. ஆனால் அவற்றுக்கெல்லாம் மேலாக இது மனிதாபிமான பிரச்சினை. ஆறு கோடி மக்கள் தமிழர்கள் இங்கே இந்தியாவில், தமிழ்நாட்டில்! அந்த தமிழ் இனத்தின் ஒரு பகுதி - சில லட்சம் பேர் - இலங்கையிலே வேட்டையாடப்படுவதை எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்? இந்த உண்மையை அறியாதவர்கள் அல்ல மத்தியிலே ஆட்சி புரிவோர்! நாம் கை பிசைந்து நிற்கிறோம். தாய்க் குலம் சில நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் செய்தியும் - அவர்களில் ஒருசிலரின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்ட செய்தியும் ஏடுகளில் வெளிவந்ததைப் பார்த்து விட்டு - அய்யோ, அவர்களுக்கு ஏதாவது ஆகி விடக் கூடாதே என்று துடித்துப் போய் என்ன செய்வதென்று புரியாமல், என் மகள் கனிமொழியை தொலைபேசியிலே அழைத்து - அந்தத் தாய்மார்கள் உண்ணாவிரதம் இருக்கும் இடம் எது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நீயே அங்கே சென்று அந்தப் பெண்களிடம் பேசம்மா, பெண்ணுக்குப் பெண் தான் ஆறுதல் கூறி சமாதானம் செய்திட முடியும், தந்தை மூலமாக சோனியா காந்தியிடம் முயற்சி செய்யச் சொல்கிறேன், உங்கள் உடல் நிலை முக்கியம், உண்ணா விரதத்தை கை விடுங்கள் என்று கேட்டுக் கொள்ளத்தான் என்னால் முடிந்தது? அதற்கு முன்பே அரசு தரப்பில் அவர்களைப் பேச்சுவார்த்தை நடத்த அழைத்த போது அவர்கள் வரவில்லை. ஆனாலும் இங்கேயுள்ள சில கட்சிகளின் தலைவர்கள், அந்த உண்ணாவிரதத்தைப் பற்றி அரசு இரக்கமின்றி இருப்பதாக - இரக்கமின்றி அறிக்கை விடுகிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் மூலமாகத்தான்

நம்முடைய மனக் குறையை இலங்கை அரசுக்கு தெரிவித்திட முடியும். இலங்கை அரசோடு நேரடியாக சர்ச்சைக்குப் போக வேண்டுமென்று சொல்கிற அளவிற்கு அரசியல் தெரியாதவர்கள் அல்ல நாம். இதிலே ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையே உள்ள பிரச்சினை என்பதை விட - இது ஒரு மனிதாபிமான பிரச்சினை என்பதை யாரும் மறந்து விட முடியாது.

அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது - அயர்லாந்தில் ஏறத்தாழ நான்கு அல்லது ஐந்து இளைஞர்கள் சிறைச் சாலையிலே தங்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அறுபது நாள், எழுபது நாள் உண்ணாநோன்பு மேற்கொண்டு துடிக்கத் துடிக்கச் செத்தார்கள். அப்போது அம்மையார் இந்திரா காந்தி அயர்லாந்திற்கும், இந்தியாவிற்கும் என்ன தொடர்பு என்று பார்க்கவில்லை. அதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகத் தான் எடுத்துக் கொண்டு அப்போதிருந்த இங்கிலாந்து பிரதமர் தாட்சர் அவர்களுக்கு அந்த நிலைமையைக் கவனிக்க வேண்டு மென்று கண்டிப்பான வேண்டுகோள் விடுத்தார்கள். அந்த இந்திரா காந்தியின் மருமகளாம் சோனியா காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே செத்துக் கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற மாமியாரின் வழியிலே குரல் கொடுக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய எதிர்பார்ப்பு.

இதற்கொரு வழியாகத்தான் இந்திய அரசு, இலங்கையிலே உள்ள தூதுவரக தொடர்புகளை அறுத்துக் கொள்ள உடனடியாக முன் வர வேண்டுமென்று இரண்டு நாட்களுக்கு முன்பு தந்தி கொடுத்தேன். அந்த வேண்டுகோள் மீதான முடிவு உடனடியாக எடுக்கப்படா விட்டால், மிச்சம் இருக்கின்ற தமிழர்களும் அங்கே கொல்லப்பட்டு விடுவார்களோ என்ற அளவிற்கு நிலைமை போய்க் கொண்டிருக்கின்றது.

"தமிழ் ஈழம் வேண்டும்" - "அது ஒன்று தான் வழி" - "விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்" - "அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தீவிரவாதியா இல்லையா" - இதுவெல்லாம் தற்போது எங்களுக்குப் பிரச்சினை அல்ல. எங்களுக்கு இப்போது வேண்டியது எல்லாம் எங்கள் தமிழனின் உயிர். நாளும் நாளும் இத்தனை பேர் பலி என்று வந்து கொண்டிருக்கும் செய்தி உடனடியாக நிறுத்தப்பட

வேண்டும். அதற்கு வழி நிரந்தரமான போர் நிறுத்தம்தான். உலகில் உள்ள மிகப் பெரிய நாடுகள் எல்லாம் சொல்லியும் - சிங்கள அரசு அந்த நிரந்தர போர் நிறுத்தத்திற்கு சம்மதிக்க மறுக்கிறது. அதற்கு என்ன வழி? இதுதான் எங்களின் கோரிக்கை! நானும் என் வாழ்நாளில் 1956ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழர்களுக்காக எத்தனையோ போராட்டங்களில் பங்கெடுத்து விட்டேன். அதற்காகவே சிறைச் சாலை சென்றிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்திருக்கிறேன். ஏன் ஆட்சியையே எங்கள் கட்சி இழந்திருக்கின்றது. என்றாலும் தமிழர்கள் அல்ல - தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரே இலங்கைத் தமிழர்களுக்காக நான் குரல் கொடுப்பதை நாடகம் என்றும் மோசடி என்றும் விமர்சனம் செய்யும் போது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதை விட நான் என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்றார்கள். மத்திய அரசை நான் வலியுறுத்தவில்லையா? கடிதம் எழுதவில்லையா? பிரதமரைச் சந்திக்க வில்லையா? சோனியாவை பார்க்க வில்லையா? பிரணாப் முகர்ஜியை சென்னைக்கே வரச் செய்து அவரிடம் பேசவில்லையா? ப.சிதம்பரம் அவர்களிடம் விவாதிக்க வில்லையா? தந்திகள் கொடுக்க வில்லையா? அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தவில்லையா? மனித சங்கிலி நடத்த வில்லையா? நீதியரசர்களைக் கொண்ட குழு வினை டெல்லிக்கு அனுப்பி குடியரசுத் தலைவரிடமும், சோனியா காந்தியிடமும் பேசச் செய்யவில்லையா? என்ன செய்யவில்லை? இவ்வளவும் செய்த பிறகும் அரசியலுக்காக - நான் நாடகமாடுவதாக இவர்கள் கூறலாமா?

கூறுபவர்கள் கூறட்டும்.
கூர்த்த மதி படைத்தோர்க்கு
உண்மை புரியும்!
ஆனால் உலகத் தமிழர்களின்
உள்ளம்; சோக வெள்ளத்தில்
மிதக்கிறதே;
அந்த வேதனையைத் துடைத்திட

வழிவகை; இந்தியப் பேரரசிடம் தானே
இருக்கிறது;

நாம் என்ன செய்வது?

அழுது, புலம்புவதைத் தவிர!

குறிப்பு :- பொதுச் செயலாளர் பேராசிரியர் சுற்றுப்பயணத்தில் வெளியூரில் இருக்கிறார். அவர் வந்தவுடன் கலந்து பேசி கழகத்தின் உயர் நிலை செயல் திட்டக் குழுவினை கூட்டலாமென்று கருதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-04-2009

3398. இதற்குமா எதிர்ப்பு!
அந்தோ - தமிழகமே!

உடன்பிறப்பே,

தமிழ் இனத்தைப் படுகொலை புரியும் இலங்கை அரசுக்கு நமது கண்டனத்தைத் தெரிவிக்கவும் -

ஈழத்தில் மாண்டு மடிந்து கொண்டிருக்கின்ற தமிழர்களைக் காப்பாற்றவும் -

மத்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல் இலங்கையில் போர் நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காக -

கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் அமைதியான முறையில் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது வேண்டுகோளை இணைத்து காங்கிரஸ் - அ.தி.மு.க. - பா.ம.க. - சி.பி.எம். - சி.பி.ஐ. - திராவிடர் கழகம் - பா.ஜ.க. - ம.தி.மு.க., - தே.மு.தி.க. - விடுதலை சிறுத்தைகள் - புரட்சி பாரதம் - இ.யூ.மு.லீக் - மூ.மு.கழகம் - மனித நேய மக்கள் கட்சி - எம்.ஜி.ஆர். கழகம் - புதிய தமிழகம் - பார்வர்டு பிளாக் (சந்தானம்) - இலட்சிய தி.மு.க. - த.மா.தே.லீக் - தமிழர் தேசிய இயக்கம் - அ.இ.ச.ம.கட்சி - அ.இ.நா.ம.கட்சி - திராவிட இயக்க தமிழர் பேரவை - இந்திய சமூக நீதி இயக்கம் - பார்வர்டு பிளாக் (வல்லரசு) - உழவர் உழைப்பாளர் கட்சி - விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி - தேசிய லீக் ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கும், பல்வேறு அமைப்புகளுக்கும், பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சியினருக்கும் - இந்த வேலை நிறுத்தத்திற்கு அவர்களின் ஒத்துழைப்பைக் கோரி கடிதம் எழுதியுள்ளேன்.

இலங்கைத் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் - அதிலே நம்மிடையே உள்ள சகோதர யுத்தத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது - நம்மிடையே ஒற்றுமை ஏற்பட்டு விட்டது

என்றாலே சிங்கள அரசு பயப்படும் என்றெல்லாம் எண்ணித்தான் அனைவரின் ஒத்துழைப்பையும் நாடினேன். என்னுடைய வேண்டுகோளை பெரும்பான்மையான கட்சிகள் ஏற்றுக் கொண்டு வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பதாக அறிக்கை விடுத்துள்ளார்கள், கடிதம் எழுதியுள்ளார்கள். ஆனால் இலங்கைத் தமிழர்களின் உயிரை விட, இந்தத் தேர்தல் தான் முக்கியம் என்றும், தி.மு.க. விற்கு எதிராக நடக்க வேண்டுமென்றும் கருதுகின்ற அ.தி.மு.க. கூட்டணி கட்சிகள் மட்டும் - இலங்கையிலே தமிழர்கள் செத்துக் கொண்டிருப்பதை விட - அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதை விட - "தி.மு.க. இந்த வேலை நிறுத்தத்திற்காக குரல் கொடுத்துள்ளதே, அதற்கு நாம் ஒத்துழைப்பு கொடுப்பதா" என்று மீண்டும் மீண்டும் என்னைத் தாக்குவதையே பிறவிப்பயனாகக் கருதி அறிக்கை விடுத் துள்ளார்கள். வழக்கம் போல இந்த வேலை நிறுத்தத்தை "கபட நாடகம்" என்று தூற்றியிருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு நாளில் இலங்கையிலே தமிழ் இனமே பூண்டற்றுப் போய் விடுமோ என்று கதறிக் கொண்டிருக்கின்ற நேரத்திலேகூட - "இலங்கைத் தமிழர்களுக்காக ஒன்றுபட்டு குரல் கொடுப்போம், சிங்கள அரசை பணிய வைப்போம், அதற்கு இந்திய அரசையும் தொடர்ந்து குரல் கொடுக்க வைப்போம்" என்றெல்லாம் அவர்கள் கருதிட வில்லை.

கடந்த மூன்று நாட்களாக ராஜபக்ஷேயின் ராணுவம் முழுப் பகுதியையும் பிடித்து விட வேண்டுமென்ற வெறியோடு இதுவரை இல்லாத அளவிற்குத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. உலக நாடுகள் எல்லாம் கொடுக்கும் குரலை சிங்கள அரசு செவி கொடுத்து கேட்க மறுக்கின்றது. ஐ.நா. சபையின் வேண்டுகோளையே உதாசீனப்படுத்துகின்றது. இங்கிலாந்து நாட்டின் பிரதமர்; ராஜபக்ஷையை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு உடனடியாக போரை நிறுத்தும்படி கேட்டுக் கொண்ட போதிலும், ராஜபக்ஷே; போரை நிறுத்த முடியாது என்று கூறுகிறார். அமெரிக்க வெளி உறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ராபர்ட் உட்; - "இலங்கையில் போரை நிறுத்தி மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி இலங்கை அதிபர் ராஜபக்ஷே மற்றும் விடுதலைப் புலிகளுக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தோம் - இதே போல சர்வதேச நாடுகளும் வேண்டுகோள் விடுத்தன - ஆனால் இருவருமே எங்களை மதிக்கவில்லை - பலமுறை வற்புறுத்திய

பிறகும் பல்வேறு வித முயற்சிகளை எடுத்த போதும் அதற்கு பலன் கிடைக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்.

"போர் நிறுத்தம் செய்யுங்கள்" என்று உலகமே கேட்கும் இந்த நேரத்தில் கூட "வேலை நிறுத்தம் செய்யுங்கள்" என்று இங்கே தி.மு.க. தலைவர் என்ற முறையில் நான் அறிவிப்பு வெளியிட்டிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கிறது என்று அறிக்கை விடுத்துள்ளார் ஜெயா. இலங்கையில் நிரந்தர போர் நிறுத்தம் வேண்டும் என்பதற்காகத்தானே நாம் வேலை நிறுத்தம் செய்து - "நம்முடைய குரலை ஒலிக்கலாம் வாருங்கள் - மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தி சிங்கள அரசை இணங்கச் செய்ய முயற்சிக்கலாம் வாருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தேன்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்கக் கூடத் தேவையில்லை. நான் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கோ - மனித சங்கிலி நிகழ்ச்சிக்கோ - டெல்லியிலே பிரதமரைச் சந்திப்பதற்கோ ஜெயாவோ, வைகோவோ வரவில்லைதான், அப்போது புறக்கணித்ததைப் போல இப்போதும் புறக்கணித்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் இவர்களின் அறிக்கைகளைப் படிக்கும் - ராஜபக்ஷேயோ, மத்திய அரசோ என்ன நினைத்துக் கொள்ளும். "இலங்கையிலே தமிழன் செத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் இவர்களுக்குள் தான் எத்தனை பகை" என்று எண்ணிக் கொள்ளாதா? இலங்கையிலே போர் நிறுத் தம் நிரந்தரமாக ஏற்படுகின்ற வரையிலாவது இங்கேயுள்ள கட்சிகள் ஒற்றுமையாக இருப்பதாகவாவது காட்டிக் கொள்ளக் கூடாதா? தேர்தலில் இவர்களுக்கு இரண்டொரு இடங்கள் வேண்டும் என்பதற் காக இலங்கையிலே தமிழர்கள் சாக வேண்டுமா? இலங்கையிலே இந்த நிலை மேலும் தொடருமேயானால், அதற்கு எப்படி ராஜ பக்ஷே மூலக் காரணமோ, அதைப் போல, இங்கேயுள்ள இப்படிப்பட்ட இந்தத் தமிழ் இன எதிர்ப்பாளர்களும் ஒரு காரணம் என்று உலகத் தமிழினம் கருதிக் கொள்ளாதா?

அவர்கள் ஒரு சிலரைத் தவிர தமிழகத்திலே உள்ள மற்ற கட்சிகள் எல்லாம் இந்த வேலை நிறுத்தத்திற்கு தங்களின் முழு ஒத்துழைப்பைத் தர முன் வந்தமைக்காக அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வேலை நிறுத்தம்

காரணமாக பாதிக்கப்படும் பொது மக்களிடம் நம்மினம் இலங்கையிலே செத்து மடிந்து கொண்டிருக்கிறது; அவர்களுக்காக நாம் செய்யும் இந்தச் சிறிய தியாகத்தைப் பொறுத்துக் கொள்ள முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும் - ஐம்பது ஆண்டுக் காலமாக நம் இலங்கைத் தமிழரைக் காத்திட நடத்தும் அறப் போராட்டங்களை இடைவிடாது நடத்திக் கொண்டே இருப்போம்.

நமது இந்த இடைவிடா முயற்சியின் விளைவாக இந்திய தேசிய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அவர்கள்; காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக வெளியிட்டுள்ள - இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் அறிக்கை நமக்கு ஆறுதல் வழங்குகிறது. அதற்காக தமிழ் மக்களின் சார்பாக நன்றியைக் குவிக்கிறேன். இந்த அறிக்கைக்கு பிறகாவது சிங்கள அரசு உடனடியாக நிரந்தர போர் நிறுத்தத்தை அறிவிக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

அனபுள்ள,

மு.க.

23-4-2009

3399. "சேது" திட்டம் எதிர்ப்போரை அடையாளம் காண்க!

உடன்பிறப்பே,

2001 மற்றும் 2004 தேர்தல் அறிக்கைகளில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று காரசாரமாகக் குறிப் பிட்டிருந்த அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயா தன்னுடைய தேர்தல் கூட்டங்களில் சேது சமுத்திர திட்டத்தினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும், ஆயிரக்கணக்கான மீனவர்கள் நிர்க்கதியான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்றும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்ற பகுதிகளில், கடலோர சுற்றுச்சூழல் மோசமாகும் என்றும் கூறி இத்திட்டத்தை எதிர்ப்பதாகக் கூறிவருகிறார். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், சேது சமுத்திரத் திட்டத்தால் லட்சக்கணக்கான மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பறிகொடுப்பார்கள் என்றும், இத்தேர்தலில் அவர் கூட்டணி வெற்றி பெற்றால், சேதுத் திட்டத்தை அ.தி.மு.க. ரத்து செய்யும் என்றும் அறிவித்திருக்கிறார்.

இதற்கான விளக்கம் பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற போதிலும், ஒவ்வொரு கூட்டத்திலும் ஜெயா இதையே கிளிப்பிள்ளை போல திரும்பத் திரும்பப் பேசுவதால் மீண்டும் ஒருமுறை இதனைத் தெளிவாக்கிட விரும்புகிறேன். இத்திட்ட மானது அரசு மற்றும் புகழ் பெற்ற தனியார் நிறுவனங்களைச் சார்ந்த அறிவியல் விஞ்ஞானிகள்/வல்லுநர்கள் உதாரணமாக எல்.அண்ட்.டி., ராம்போல், அல்கியான் ஹைட்ராலிக் கன்சல்டன்ஸ் நெதர்லாந்து, இந்தோமர் கடலோர ஹைட்ராலிக் பிரைவேட் லிமிடெட், தேசிய சுற்றுப்புற பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI), இந்திய தொழில்நுட்ப நிறுவனம் சென்னை, தேசிய கடலோர தொழில் நுட்ப நிலையம், மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி நிறுவனம், மத்திய சுற்றுச் சூழல் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் மற்றும் ஆழ்கடல் மேம்பாட்டுத் துறை கோவா,

தேசிய கப்பல் வடிவமைப்பு ஆராய்ச்சி மையம் விசாகப்பட்டிணம், தேசிய நீர்வள அமைப்பு டேராடூன் போன்ற பிற நிறுவனங்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மேலும், இந்திய மற்றும் உலகில் உள்ள 14 முதன்மை நிறுவனங்களின் கருத்துக்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவைதவிர, இராணுவம் மற்றும் கப்பற்படையின் ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்பட்டது.

அறிவியல் அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்கள் மேற் கொண்ட ஆய்வுகள் அளித்த உள்ளீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய சுற்றுப்புற பொறியியல் நிலையம் விரிவான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டு ஆய்வுகளை இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கையினை சமர்ப்பித்தது.

இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் சார்ந்த விவரங்கள் பின்வருமாறு:-

- இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாதையில், மொத்த கடலோரப் பரப்பினோடு ஒப்பிடுகையில் மிகக் குறைவான கடல் நுண்ணுயிர்கள் மற்றும் குறைவான ஆழ்கடல் உயிரினங்கள் மட்டுமே உள்ளன.

- 10,500 ச.கி.மீ. பரப்பளவுள்ள மன்னார் வளைகுடா உயிர்கோள மண்டலத்தில் 6 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மட்டும் பாதிக்கப்படலாம். இது, மொத்த பரப்பில் மிகக் குறைந்த பகுதியே ஆகும்.

- மன்னார் வளைகுடா உயிர்கோள மண்டலம் தேசிய கடற்பூங்கா பகுதியாகும். இதில் பவளப் பாறைகள் மற்றும் கடல் பொருட்கள் உள்ளன. இந்திய கடல் பகுதியில் கடற்புற்கள், வேதாரண்யத்தை ஒட்டிய சதுப்பு நிலப்பகுதி தவிர இப்பவளப் பாறைகள் சில வகையான மீன்கள் இனப்பெருக்கம் செய்வதற்கு உகந்த பகுதியாக உள்ளது. மேலும் சேது சமுத்திர கால்வாய் அமைக்கப்படும் பகுதி இந்த இனப்பெருக்கப் பகுதிகளிலிருந்து

20 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்திட்டத் திற்காக கடற்பகுதியை ஆழப்படுத்துதல் மற்றும் கப்பல் இயக்க நடவடிக்கைகளினால் பவளப் பாறைகளுக்கோ அல்லது சதுப்பு நிலக் காடுகளுக்கோ எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை.

- சதுப்பு நிலக் காடுகள், கடற்புற்கள், பவளப்பாறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய செழிப்பான கடல் வளம் கொண்ட இப்பகுதி எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் சேது சமுத்திர கால்வாய் அமைக்கும் பணி வடிவமைக்கப்பட்டதால் இப்பகுதியில் மீன் வளம் உறுதியாகப் பாதுகாக்கப்படுகிறது.

- மேலும் மன்னார் வளைகுடாவிலுள்ள பவளப்பாறைகள் மீன் இனப்பெருக்க மையங்களாக உள்ளதால் அப்பகுதி ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மன்னார் வளைகுடா உயிர் கோள மண்டல அமைப்பினால் பராமரிக்கப்படுகிறது. மன்னார் வளைகுடா பகுதியில் கடல் வாழ் வளங்கள் மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரத்திற்கு உயிர்நாடியாக உள்ளதால், கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு உயிரின கோளப் பகுதியை பாதுகாப்பதற்கு மேற்கண்ட அமைப்பு பயிற்சி அளிக்கிறது.

மணல் படிவங்கள் மற்றும் கடல் நீரோட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வுகள் இவ்வுயிர்க்கோள மண்டல பகுதி ஆழப்படுத்துதல் மற்றும் தோண்டிய மணலை வேறு இடத்தில் கொட்டுதல் ஆகிய பணிகளால் பாதிப்பு அடையாது என்று சேது சமுத்திரக் கால்வாய் அமைக்கும் பணி (பாதை எண்.6) தெரிவிக்கின்றன. ஆழப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆதம் பாலத்தில் எந்தவித சதுப்பு நிலக்காடுகளும் இல்லை.

மேற்கூறப்பட்டுள்ள விவரங்கள் இத் திட்டத்தை செயல்படுத்துவதால் அப்பகுதியிலுள்ள கடல் சுற்றுச்சூழல் எந்தவகையிலும் பாதிப்படையாது என்பதை நிரூபிக்கின்றன.

இத்திட்டத்தின் வாழ்வாதாரம் சார்ந்த விவரங்கள்

மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தபோது திட்டம் செயல்படுத்துகின்ற பகுதியில் வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் கடலோர மீனவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு திட்டத்தின் மொத்த செலவினத்தில் 2 சதவீதத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளது. சேது சமுத்திர திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையில் சமுதாய மேம்பாட்டுத் திட்டம், திட்டம் செயலாக்கப்படும் பகுதியிலுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குதல் போன்ற வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால் மீனவர்கள் நேரடியாகப் பயன்பெறுவர். சேது சமுத்திர கால்வாய் திட்டத்தின்கீழ், பின்வரும் வசதிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமேசுவரத்தில் பல்நோக்கு துறைமுக வசதியை ஏற்படுத்துதல்.
- 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூக்கையூர், தொண்டி, சேதுபவாசத்திரம் மற்றும் முத்துப்பேட்டையில் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் ஏற்படுத்துவதற்கு நிதியுதவி அளித்தல்.
- 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீனவ மக்கள் தொகை அதிகமாக உள்ள இராமநாதபுரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் 5 இலட்ச ரூபாய் வீதம் சமூக கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டங்களில் கடலோர சமுதாய மேம்பாட்டுத் திட்டம் கைத்தொழில் மற்றும் வாழ்வாதார பயிற்சிகள் அளித்தல்.
- 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதர செலவினங்கள்

கடலோர மீனவர்களுக்குப் பயன்படும் வகையில் பல்நோக்கு கடலோர சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கைத்தொழில் மற்றும் இதர அத்தியாவசிய பயிற்சிகள் கண்டறியப்பட்டன. இவை மீனவர்கள் தங்களது தினசரி வருவாயை ஈட்டுவதற்கு

உதவுகின்றன. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு இரண்டாம் கட்டத்தில் பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மீனவர்களுக்காக இதுவரை என்னென்ன செய்யப்பட்டுள்ளன என்பதற்கு சில சான்றுகள் பின்வருமாறு :-

கடலோர சமுதாய மக்களுக்கு டீசல் இயந்திரம் பழுது பார்த்தல், பனையோலை கைவினைப் பொருட்கள் செய்தல், கடற்சிப்பியால் ஆபரணங்கள் செய்தல், நண்டு கொழுக்க வைத்தல், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், கயிறு கைவினைப் பொருட்கள் செய்தல், கடல் தொழில் நுட்பப் பயிற்சி, வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி, கைபேசி பழுது பார்த்தல், குளிர் சாதன இயந்திரங்களைப் பழுது பார்த்தல், சணற் பைகள் தயாரித்தல், நைலான் வலை பின்னுதல், தையற் பயிற்சி, செவிலியர் பயிற்சி, பரிசோதனைக்கூட வல்லுநர் பயிற்சி போன்ற பல பயிற்சிகள் தூத்துக்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களைச் சேர்ந்த 9725 பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டன.

நுண்ணிய நிதியுதவித் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், 12 கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்கு மரத்தினாலான அறையணிகள் அளித்தல், சுகாதார மையம், சூரிய ஒளியினால் இயங்கும் விளக்குகள், அங்கன்வாடி மற்றும் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு நிதியுதவி அளித்தல் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு 32 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்வித் தொகையாக 4 இலட்சத்து 45 ஆயிரத்து 385 ரூபாய் வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 100 கணினிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் மற்றும் உதவிகள் மூலமாக கடலோர மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்யப்பட்டது.

வளர்ச்சியடையும் உலகத்தில் கடல் வழிப் போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கருத்தின் அடிப்படையில் பல்வேறு வல்லுநர்களின்

அறிவுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகள் பெறப்பட்ட பின்னர் சேது சமுத்திர கால்வாய்த்திட்டம் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டப் பகுதியில் உள்ள மீனவர்களுக்காக இத்தகைய சலுகைகள் அளிக்கப்படுவதைத் தவிர, ஒட்டுமொத்த மீனவர்களுக்காக கடந்த மூன்றாண்டு கால கழக ஆட்சியில் செய்யப்பட்டுள்ள சாதனைகள் வருமாறு :-

1) மீன்பிடி தடை காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 500 ரூபாய்.

2) மீனவர்களின் வருமானம் பெருக முட்டுக்காட்டில் உலகத்தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி நிலையம்.

3) சுனாமி பாதித்த 42 ஆயிரம் மீனவர்களுக்கு ரூ.110.36 கோடி செலவில் மீன்பிடி சாதனங்கள், வலைகள், உயிர்காப்பு கவச உடைகள், கை விளக்குகள், மிதிவண்டிகள், குளிர் சாதனப் பெட்டிகள்.

4) கடல்சார் கல்வி பயிலும் 100 மீனவ இளைஞர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் உதவித் தொகை.

5) மீன்வள வேளாண்மை கூட்டுறவு இணையத்தின்மூலம் 5635 மீனவர்கள் பெற்ற கடன் ரூ. 19.56 கோடி தள்ளுபடி.

6) மானிய விலையில் 1550 மீனவர்களுக்கு 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் வெளி பொருத்தும் இயந்திரங்கள்.

7) புதிய துறைமுகங்கள்

அ) 27 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் மீன்பிடி துறைமுகம்.

ஆ) கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினத்தில் 40 கோடி ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட ஒப்புதல்.

இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் ராஜாக்க மங்கலத்தில் மீன்பிடி துறை முகங்கள்.

ஈ) பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட விரைவான நட வடிக்கை.

உ) தமிழக கடலோர மீனவர்கள் பயன் பெற 10 இடங்களில் தலா 5 கோடி ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்கு தளங்கள்.

ஊ) 5 கோடியே 4 இலட்ச ரூபாய் செலவில் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தப்பட்டுள்ளது.

எ) 6 கோடியே 38 இலட்ச ரூபாய் செலவில் சென்னை மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) 1 கோடி ரூபாய் செலவில், நான்கு கடலோர மாவட்டங்களில் குளிர் தொடர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8) 12ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மீனவர் சமுதாய மாணவ, மாணவியருக்கு 5000 ரூபாய்; மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு 3000 ரூபாய்.

10ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு 3000 ரூபாய்; மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு முறையே 1000 ரூபாய், 500 ரூபாய், 300 ரூபாய்.

இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 1 இலட்சம்

ரூபாயை 3 இலட்சம் ரூபாயாகவும், ஆதரவற்ற குடும்பங்களுக்கு இத்தொகையை 5 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டின்போது சிறு காயமடையும் மீனவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயாகவும், படுகாயம் அடையும் மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயாகவும் வழங்கப்படுகிறது.

9) மீன்பிடிக்கும் போது காணாமல் போகும் மீனவர் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக நாளொன்றுக்கு ரூ.50 வீதம் மாதத்திற்கு ரூ. 1500 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

10) 100 சதவீதம் வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் விசைப் படகுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 1000 லிட்டர் என்பதை 1500 லிட்டராக உயர்த்தி வழங்கப்படுகிறது.

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 250 லிட்டர் வழங்கப்படுகிறது.

11) தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்மூலம் மூன்றாண்டுகளில் 4 இலட்சத்து 30 ஆயிரத்து 479 உறுப்பினர்களுக்கு 51 கோடியே 31 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது.

தேசிய கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகளில் 3 இலட்சத்து 13 ஆயிரத்து 471 உறுப்பினர்களுக்கு 37 கோடியே 57 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது.

12) மூன்றாண்டுகளில் 8298 மீனவர்களுக்கு டீசல் மானிய திட்டத்தின்மூலம் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதம் மானியம் வழங்கியுள்ளது.

மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பயன்பெற மீன்வளத்துறை அமைச்சர் தலைமையில் மீனவர் நல வாரியம் அமைத்து 5 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

மீனவர் நல வாரிய உறுப்பினர்களுக்கு -

1) விபத்தில் இறப்பு, மீன்பிடிப்பின் போது நிகழும் இறப்பு, இயற்கை மரணம், ஈமச்சடங்கு செலவினம்,

கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு, கருச்சிதைவு மற்றும் ஓய்வூதியம் போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகிறது.

(அ) விபத்தில் மரணம் அடைந்தால் 1 இலட்சம் ரூபாய்

(ஆ) இரண்டு கைகளை இழக்க நேர்ந்தால் 1 இலட்சம் ரூபாய்

(இ) இரண்டு கால்களை இழக்க நேர்ந்தால் 1 இலட்சம் ரூபாய்

(ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழக்க நேர்ந்தால் 1 இலட்சம் ரூபாய்

(உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழந்தால் 1 இலட்சம் ரூபாய்

(ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் 50 ஆயிரம் ரூபாய்

(எ) கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு ஏற்பட்டால் 20 ஆயிரம் ரூபாய்

-எனவும்,

2. மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல் இறந்து விட்டால் 1 இலட்ச ரூபாய்.

3. மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர்க்காக - குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாய்

4. இயற்கை மரணம் 10 ஆயிரம் ரூபாய்

5. ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை

2 ஆயிரத்து 500 ரூபாய்

மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித்தொகை

(i) **மகப்பேறு உதவிக்காக 6,000 ரூபாய்**

(மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ஆறு மாதங்கள்)

(ii) **கருச்சிதைவு நிகழ்ந்தால் 3,000 ரூபாய்**

(iii) **கருக்கலைப்பு செய்தால் 3,000 ரூபாய்**

6. முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) 400 ரூபாய்

இவ்வாறு, அல்லும் பகலும் நல்ல பல திட்டங்களை வகுத்து, நடைமுறைப்படுத்தி மீனவர் சமுதாயம் முன்னேற பாடுபடுகிறது இந்த அரசு. ஆனால் ஜெயா ஊருக்கு ஊர் சென்று மீனவர்களின் நலன்கள் பாதிக்கப்படும் என்று உண்மைக்கு மாறாக பிரச்சாரம் செய்து வருகிறார். இதனை மீனவர்களுக்கு நினைவு படுத்த வேண்டிய கடமையை அந்த சமுதாய நண்பர்களே செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். "சேது" திட்டத்தினால் வளமான வாழ்வு பெறப்போகும் தமிழகத்தையும், தமிழக மீனவர்களையும் ஏமாற்ற தளுக்கு நடைப்பேச்சு நடத்தும் தந்திரக்காரர்களை தமிழ்ச் சாதியே; அடையாளம் கண்டு கொள்க!

அனபுள்ள,

மு.க.

25-4-2009

3400. இரு முனை பாதுகாப்புக்காக; இன்றே எழுக!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் 15வது நாடாளு மன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கான பணி முடிந்து விட்டது. இந்தத் தேர்தலில் தி.மு. கழகத் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு அணியில் - தி.மு. கழகம் 21 இடங்களிலும், காங்கிரஸ் கட்சி 16 இடங்களிலும், விடுதலை சிறுத்தைகள் 2 இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 1 இடத்திலும் போட்டியிடுகின்றன.

வேட்பாளர்கள் எல்லாம் வாக்குச் சேகரிக்கும் பணியிலே முனைப்பாக ஈடுபட்டுள்ள செய்தியினை அன்றாடம் ஏடுகளின் வாயிலாகப் படித்தும் - தொலைபேசி வாயிலாக ஒரு சிலர் கூறுவதிலிருந்தும் தெரிந்து கொண்டிருக்கிறேன். சில தொகுதி களில் அந்தப் பணி வேகமாக நடைபெற்ற போதிலும், ஒரு சில இடங்களில் நான் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வாக்கு சேகரிக்கும் பணி நடைபெறவில்லை என்பதை குற்றச்சாட்டாக அல்ல - இன்னும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செய்திட வேண்டுமென்ற எண்ணத்தோடும் ஆர்வத்துடனும் எழுதிட விரும்புகிறேன். 1967ஆம் ஆண்டு வாக்கில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் கழகத் தோழர்களின் தேர்தல் பணிகளைப் பார்த்து விட்டு - "சிங்கிள் டீ யைக் குடித்துவிட்டு மணிக் கணக்கில் பணியாற்றக் கூடியவர்கள் தி.மு.கழகத் தோழர்கள்" என்று பாராட்டியதை மறந்திருக்க மாட்டாய். அத்தகைய பாராட்டுக்குச் சொந்தக்காரர்களாகிய உங்களிடம் நான் மேலும் மேலும் அத்தகைய பணிகளை எதிர்பார்க்கின்றேன்.

நடைபெறும் தேர்தல் தமிழகச் சட்டமன்றத்திற்கான தேர்தல் அல்ல - மத்திய அரசிலே யார் அமரப் போகிறார்கள்

என்பதைப் பற்றி முடிவு எடுக்கக்கூடிய தேர்தல். நாம் தொடர்ந்து - கடந்த ஐந்தாண்டு காலமாக நாம் யாரோடு கூட்டணி அமைத்து 2004ஆம் ஆண்டிலே வெற்றி பெற்றோமோ - அவர் களுடன்தான் இப்போதும் இருக்கிறோம் என்ற பெருமையோடு இருக்கின்றோம். ஐந்தாண்டுகால மத்திய ஆட்சிக்கு நாம் எந்த நேரத்திலும் இடைஞ்சல் கொடுத்ததில்லை. நல்லவை நடைபெற உரிமைக்குரல் எழுப்பாமல் இருந்ததும் இல்லை. தோழமை என்றால் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு உதாரணமாக நாம் அங்கே பணியாற்றியிருக்கிறோம். மத்திய அரசின் முக்கிய பங்குதாரர்களான காங்கிரஸ் கட்சியும் நாம் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றியிருப்பதை நீயும் அறிவாய், நம் தமிழ்நாடும் அறியும். குறிப்பாக நம்முடைய மொழியை செம்மொழியாக்கிய ஒரே காரியத்திற்காகவே நாம் மீண்டும் மீண்டும் அந்தக் கட்சியை ஆதரிக்கலாம். அது போலவே சேது சமுத்திரத் திட்டம் எத்தனை ஆண்டுகளாக நாம் கேட்ட கோரிக்கை? 2427 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்தத் திட்டத்தை நமக்கு அளிக்க முன் வந்த அரசல்லவா ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு. பதவியேற்றவுடன் - நாம் கோரிக்கை வைத்தவுடன் நெசவாளர்களுக்கான சென்வாட் வரியை ரத்து செய்த அரசு அல்லவா? விவசாயிகளின் கடன்களை ரத்து செய்த அரசு அல்லவா? செம்மொழி மைய அலுவலகத்தை மைசூரிலிருந்து மாற்றிக் கொடுத்து - சென்னையிலே அமைத்திட்ட அரசல்லவா? கடல் நீரை குடி நீராக்கும் திட்டத்தை சென்னைக்கருகிலே அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று ஆயிரம் கோடி ரூபாய் வழங்க முன் வந்த அரசல்லவா? தமிழகத்தைச் சேர்ந்த 13 பேர் மத்திய அமைச்சர்களாக இடம் பெற உதவிய அரசு அல்லவா தற்போதைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு. இப்படி எழுதிக் கொண்டே போகலாம். ஏட்டில்தான் இடமில்லை!

இந்தக் கடிதத்தை நீ படித்துக் கொண்டிருப்பது 26-4-2009. இன்னும் 17 நாட்கள்தான் எஞ்சி இருக்கின்றன. எதற்கு? நீ வாக்குச் சாவடிக்குள் சென்று உன் வாக்குகளை பதிவு செய்யவும் - உன் முயற்சியால் எத்தனை வாக்காளர்களை நம் அணிக்கு ஆதரவாக நீ திரட்டி வைத்திருக்கிறாயோ, அவர்கள் எல்லாம் - அவர்களின் வாய்மைநிறை வாக்குகளை நம் அணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பதிவு செய்திடவும்!

தி.மு. கழகம் என்றால் சொந்தக் கட்சி வேட்பாளர்களை விட அதிகமாகத் தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பணியாற்றும் என்ற பெருமை நமக்குண்டு. எனவே தோழமைக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் - வந்து நம்மை அழைக்க வேண்டும் - நமக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்த்துக் காத்திருக்காமல் - நிற்பது எந்தக் கட்சி என்பதல்ல - ஜனநாயக முற்போக்கு அணியின் சார்பில் போட்டியிடுவது யார் எவர் என்பது முக்கியமல்ல - இந்த அணியின் வெற்றிதான் குறிக்கோள் என்ற உணர்வோடு நீ பாடுபடுவாய் என்று எனக்குத் தெரியும் - இருந்தாலும் அண்ணன் எழுதினானா என்று நீ கேட்கக் கூடாதல்லவா? என் பணியிலே நான் தவறி விடக் கூடாது அல்லவா? அதற்காகவே நினைவூட்டுகின்றேன்.

அடுத்து - உன்னுடைய தொகுதியிலே தி.மு. கழகம் போட்டியிட வேண்டுமென்று விரும்பி, தொகுதிப் பகிர்வில் தொகுதி தோழமைக் கட்சியோடு பகிர்ந்து கொள்ளப் பட்டிருக்கலாம். ஆனால் நீயே போட்டியிட கருதியிருந்து அந்த வாய்ப்பு பறி போய் வேறொருவருக்கு வாய்ப்பு கிடைத்திருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் நினைப்பதற்கான நேரம் முடிந்து விட்டது. களத்திற்குள்ளே இறங்கி விட்டோம். இனி வெற்றி ஒன்றுதான் நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று அண்ணன் நான் என் அருமைத் தம்பியை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் பிரச்சாரங்கள் தொடங்கி விட்டன. கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் பேராசிரியர் இரு முறை சுற்றுப் பயணம் சென்று வந்துள்ளார். சென்ற இடங்களில் எல்லாம் நீ நன்றாகப் பணியாற்றுவதாக மன நிறைவோடு என்னிடம் கூறினார். பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின் முதற்கட்டமாக தென் மாவட்டங்களில் தன் சுற்றுப் பயணங்களை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளார். அவர் அன்றாடம் அந்தந்த தொகுதியின் நிலவரங்களைப் பற்றி என்னிடம் விவரித்துக் கொண்டிருக்கிறார். என்னிடம் சான்றிதழ் வாங்கினாலும் வாங்கலாம், அவரிடம் சான்றிதழ் பெறுவது கடினமான காரியம். இருந்தாலும் அவர் ஒரு சில இடங்களில் உங்களில் பலர் நன்றாகப் பணியாற்றுவதாகவும், ஒரு சிலர் மட்டும் அவ்வளவு தீவிரமாகப் பணியாற்றவில்லை என்றும் சொல்லியிருக்கிறார். அப்படி அடையாளமிடப்பட்ட

உடன்பிறப்புகள் என்னிடமிருந்து அழைப்பு வருமென்று எதிர்பாராமல் நீங்களாகவே இன்று முதல் தேர்தல் பிரச்சாரப் பணிகளிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் பிரச்சாரத்தில் கழகத்தின் முக்கிய பேச்சாளர்களும், கலைத் துறையைச் சேர்ந்த நம்முடைய நண்பர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தத் தேர்தல் நேரத்தில் - ஆபத்தான அறுவை சிகிச்சை செய்து கொண்டு நான் நேரில் வர இயலாமல், வந்து வாக்கு கேட்க இயலாமல் இருக்கிறேனே என்ற குறை பெரும்பாலான தோழர்களுக்கு இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு நாளும் மருத்துவர்களிடமும், என் வீட்டாரிடமும் நான் போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறேன். தேர்தல் நேரங்களில் முதல் நாள் மாலை 2 மணி, 3 மணி என்ற அளவில் வேனில் ஏறினால், மறுநாள் பொழுது விடிந்து சூரியன் புறப்படுகிற வரை நூற்றுக்கணக்கான மைல்கள் அந்த வேனிலேயே சென்று நான் தேர்தல் பிரச்சாரம் செய்த நிகழ்ச்சிகளை எல்லாம் நீ நன்றாக அறிவாய். ஒரு முறை கிருஷ்ணகிரியிலும் - ஒரு முறை தூத்துக்குடியிலும் காலை 7 மணி அளவிலேதான் உதய சூரியன் எழுந்த பிறகு தான் என்னுடைய சுற்றுப்பயணம் நிறைவுற்ற நினைவுகள் எல்லாம் எனக்கு வருகின்றன.

காலையில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து அன்னை இந்திரா காந்தி அம்மையாரோடு தேர்தல் பிரச்சாரம் செய்யத் தொடங்கி - மறுநாள் விடிகின்ற நேரத்தில் கன்னியாகுமரியில் பிரச்சாரத்தை முடித்த நினைவும் வருகிறது. அதைப் போல தற்போது என்னால் பிரச்சாரம் செய்ய இயலா விட்டாலும் - ஒரு சில முக்கிய நகரங்களுக்கு வந்தாவது அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் செய்யலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறேன்.

முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை என்பதால் நான் அன்றாடம் - அணுஅணுவாக அவதியுற்று; அதனையும் தாங்கிக் கொண்டுதான்; இருப்பது ஓர் உயிர், அது இந்த நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே என்ற நினைவுடன்; இந்தப் பயணங்களை மேற்கொள்கிறேன். எனவே நான் ஒவ்வொரு தொகுதிக்கும் நேரில் வரவில்லை என்பதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தேர்தல் பணிகளைத் தொடர்ந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்த ஊர்களுக்கு

நான் வருகிறேன் என்பதைப் பற்றி தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

தேர்தல் பணிகளிலே நாம் இந்த அளவிற்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் - நம்மோடு தொப்பூழ்க் கொடி உறவு கொண்ட ஈழத் தமிழர்கள் இலங்கையிலே அன்றாடம் செத்துக் கொண்டிருக்கும் செய்திகளை ஏடுகளின் மூலமாகவும், தொலைக் காட்சிகளின் வாயிலாகவும் கண்டும் கேட்டும் வேதனைத் தீயிலே வாடிக் கொண்டிருக்கிறோம். நம்மால் முடிந்த முயற்சிகளை எடுத்து வருகிறோம். நம்முடைய மத்திய அரசின் வாயிலாக எப்படியாவது தமிழ் இனத்தைக் காப்பாற்றுங்கள் - அதற்கான முயற்சிகளிலே ஈடுபடுங்கள் என்று பல்வேறு முனைகளிலிருந்தும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இலங்கைத் தமிழர்பால் உண்மையான அக்கறை கொண்ட கலைத்துறையைச் சேர்ந்தவர்களும், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே மிகுந்த அக்கறையோடு குரல் எழுப்பியிருக்கின்றார்கள்.

அதே நேரத்தில் இலங்கையிலே போர் நிறுத்தம் நிரந்தரமாக செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழகத்திலே வெற்றிகரமாக வேலை நிறுத்தத்தை நாம் நடத்திக் கொண்டிருந்த வேளையில், இலங்கைத் தமிழர்களுக்கு செய்யும் துரோகத்தைப் போல - தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்களையும், குறுக்குச்சால் ஓட்டியவர்களையும் வேலை நிறுத்தத்திற்கு எதிராக செயல்பட்டவர்களையும் அடையாளம் கண்டு கொண்டு, உண்மையிலே இலங்கைத் தமிழர்களுக்குக் குரல் எழுப்புபவர்கள் யார், போலியாக நடிப்பவர்கள் யார் என்பதை புரிந்து கொள்ள முடியாதவர்கள் அல்ல தமிழ் மக்கள்! நம்முடைய நிலைமைகளையும், இலங்கைத் தமிழர்களையும் நன்றாகவே உணர்ந்துள்ள மத்திய அரசும், திருமதி சோனியா காந்தி அவர்களும் எப்படியாவது இலங்கைத் தமிழர்களுக்கு உதவிட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அவர்களும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த உண்மையான உறவு கொண்ட உள்ளத்துடன்தான் அறிக்கைகள் மூலமாக வேண்டுகோள்களை விடுப்பதோடு நிறுத்தாமல் - இரண்டு நாட்களாக நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் அவசர ஆலோசனை கூட்டங்களை நடத்தியதோடு - தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளி உறவுத் துறை செயலாளர் சிவசங்கர

மேனன் ஆகியோரும் இலங்கை சென்று ராஜபக்சேயை சந்தித்து - இந்திய அரசின் சார்பில் நிலைமைகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பிரதமர் என்னிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார். உள்துறை அமைச்சர் அன்பு நண்பர் ப. சிதம்பரமும் சென்னை வந்து என்னைச் சந்தித்து விபரம் கூறிச் சென்றுள்ளார்.

எனவே ஒரே நேரத்தில் இரண்டு முக்கியமான பணிகளைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றியாக வேண்டும் - மற்றொன்று தேர்தல் களத்திலே எதிரிகளைச் சந்தித்து வெற்றி பெற்றாக வேண்டும். எனவே உதவாதினி ஒரு தாமதம் என்று உடன் எழுக; உடன்பிறப்பே! இலங்கையில் இனத்துக்குப் பாதுகாப்பு! இங்கே நமது தமிழர்க்கும் தாயகத்துக்கும் பாதுகாப்பு!

அன்புள்ள,

மு.க.

26-4-2009

3401. வருக நீ - வெற்றி பெற்றுத் தருக நீ

கழக உடன்பிறப்பே,

தலைவர்கள் வரும்போது அவர்கள் கண் முன்னே காட்சி அளித்து - கனிவுடன் வரவேற்றால் மட்டும் போதாது. அவர்களும் நானும் எதிர்பார்ப்பது உன்னுடைய கடின உழைப்பே! நீ எறும்பு போல் சுறுசுறுப்பு காட்டி உழைப்பாய் என்று எனக்குத் தெரியும். உழைத்த களைப்பில் உறங்கி விடக் கூடாது அல்லவா? அதனை உள்ளத்தில் நிறுத்தி உழைத்திடுக! உழைத்திடுக! உழைத்திடுக!

உன்னோடு சேர்ந்து நானும் ஓடியாடி உழைக்க வேண்டும் என்றுதான் துடிக்கிறேன். என் செய்வது? வயது தடுக்கிறதே? அதை விட வந்த நோய் மேலும் தடுக்கிறதே! அந்தத் தடைகளை யெல்லாம் மீறிக்கொண்டுதான், தங்கமே உன்னைத் தரிசிக்க வருகிறேன். அந்தத் தரிசனத்தில் எனக்குள்ள கரிசனம், உனக்குப் புரியுமே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே உள்ள காங்கிரஸ் அணியின் வேட்பாளர்களும், விடுதலை சிறுத்தைகள் அணியின் வேட்பாளர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அணியின் வேட்பாளரும் அபரிமிதமான வெற்றிகளைப் பெற்றுக் குவிக்க வேண்டும் என்பதுதான் என் கரிசனம் ஆகும் என்பதை நீ அறிவாய். என்றைக்காவது இந்த அண்ணனின் வேண்டுகோளை தம்பி நீ தட்டிக் கழித்திருக்கிறாயா?

எனவேதான் உன்னை நம்பிக் கொண்டிருக்கிறேன் - நீ இருக்கும்போது - உன் நெஞ்சில் நான் இருக்கும்போது - நான் ஏன் கவலைப்பட வேண்டும்? இந்த ஜனநாயக புனிதப் போரில் நாடாளுமன்றத்தில் நமது கூட்டணியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்று சென்று அமர்ந்திடவும் - செந்தமிழ் நாட்டிற்கு இதுவரையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பாக பெற்ற நன்மைகளையும், திட்டங்களையும் மேலும் மேலும் குவித்திடவும்

உன் கூர்மையான உழைப்பு

உன் நேர்மையான பணி வெல்லட்டும்.

“தம்பி உடையான் படைக்கஞ்சான்” என்று என்னைப் பற்றி இந்த உலகம் சொல்லட்டும்!

அதற்கு எனக்கொரு வாய்ப்பு தந்திடு!

வருக நீ - வெற்றி பெற்றுத் தருக நீ.

அன்புள்ள,

மு.க.

1-5-2009

3402. கண்ணல்ல, மணியல்ல; களம் இறங்கிடு! காரியம் ஆற்றிடு!

உடன்பிறப்பே,

விடியலுக்கு முன்பே திருச்சியிலிருந்து எழுதுகிறேன் இந்தக் கடிதம் - அந்த ஏப்ரல் 27 அதிகாலை ஐந்து மணிக்கு படுக்கை யிலிருந்து எழுந்து உட்கார்ந்து விட்டேன். அதுவரையில் நான் தூங்கிக் கொண்டிருந்தால் அல்லவா; எழுந்து உட்கார்ந்தேன் என்று சொல்ல முடியும். இரவு முழுவதும்தான் உறக்கம் கிடையாதே! இரவு 10 மணி அளவில் தொலைபேசி மணி அடித்தது. தம்பி கவிப்பேரரசு பேசினார். இலங்கையிலிருந்து ஏதாவது செய்தி உண்டா என்று கேட்டார். எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் - இந்தப் பதிலுடன் நிறுத்தி விட்டேன். மீண்டும் இரண்டொரு செய்தியாளர்கள் தொலை பேசியில் தொடர்பு கொண்டனர். "நல்ல சேதியையே எதிர்பார்ப்போம்'' என்று நேற்று மாலை திரு. ப. சிதம்பரம் அவர்களின் சந்திப்புக்குப் பிறகு; "நல்லதே நடக்குமென நம்புவோம்'' என்றீர்களே; அது என்ன ஆயிற்று? என்பதே தொடர்ந்து கேள்விகளாக ஒலிக்கத் தொடங்கின.

இன்று ஓர் இரவு பொறுத்திருந்து பார்ப்போம் என்றேன். என் மனோ நிலை இரவு உணவு எடுத்துக் கொள்ள இடந்தர வில்லை. சுருண்டு கொண்டு படுத்தேன். என் அவசர அவசிய உதவிகளுக்காக என்னுடன் இருந்த மருத்துவ நண்பர் ஜம்பு என் முகத்தைப் பார்த்து விட்டு; "என்ன தலைவரே; இன்று காலை முதல் ஏதோ கவலையில் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டபோது "ஒன்றுமில்லை ஜம்பு - உடல் நிலையைப் பற்றிய வேதனை தான்'' என்று கூறி சமாளித்துக் கொண்டேன். ஆனால் என் காதுகளில் கடந்த காலத்தில் என்னுடன் நேச பாசத்துடன் பழகிய நண்பர்கள் சிலர் பொது மேடைகளில் என்னைப் பற்றிப் புழுதி வாரித் தூற்றுகின்ற அந்த ஒலி முழக்கம்; ஓராயிரம் உளி கொண்டு தாக்குவது போலிருந்தது.

தமிழ்ப் பால் குடித்து வளர்ந்து, 13ஆம் வயதிலேயே எனக்கும் என் போன்ற இளைஞர்கள் சிலருக்கும், தமிழ் வேல் வடித்துக் கொடுத்து;

“ஓடி வந்த கட்டாய இந்திப் பெண்ணே கேள்; நீ
தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!
வாருங்கள் எல்லோரும்
இன உணர்வுப் போருக்குச் சென்றிடுவோம்
வந்திருக்கும் இந்தித் திணிப்பை விரட்டித்
திரும்பிடுவோம்’’

என்று நான் இயற்றிய பாடலை நாள்தோறும், திருவாரூர் தெருக்களில் குழு முழக்கமாக (கோரஸ் பாட்டு) இசைத்துக் கொண்டு, புலி, வில், கயல் பொறித்த கொடிகளைத் தோளில் தாங்கி - இந்தி ஆசிரியரால் அடிபட்டு விரட்டப்பட்டு, அல்லற்பட்ட அந்தக் காலத்திலிருந்து பெரியாரின் பிள்ளையாக அண்ணாவின் தம்பியாக வளர்ந்து விட்ட எனக்கு; அவர்கள் வழங்கிய வலிமையும், உறுதியும், வாய்மையும் எப்படி என்னை விட்டு அகன்று விடும்? பாலப் பருவம் கடந்தும் பல தடவை; எனக்குப் பாலுடன் கலந்தூட்டிய என் தமிழுக்காக அளவிட முடியா அடக்கு முறைகளைத் தாங்கியிருக்கிறேன்.

பாதி இரவில் என்னைக் கைது செய்து, பாளையங்கோட்டை சிறைக்கு அழைத்துச் செல்லும் வழியில் - மதுரை இராணுவ முகாமில் நான் நெஞ்சு வலியால் துடித்தபோது - சிகிச்சை யளித்து, அந்த இரவோடு இரவாக பாளைச் சிறையில் கொண்டு போய் - அங்கே 24 கொட்டடிகள் காலியாக இருக்க - ஒரே ஒரு கொட்டடியில் என்னைத் தன்னந்தனியாக அடைத்து வைத்தார்கள்.

ரயில் ஓட்டியவர் ஒருக்கணம் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருந்தால் - நானும், முல்லை சத்தியும், கஸ்தூரிராஜும், குழந்தைவேலனும், குமாரவேலனும் கல்லக்குடியில் தண்ட வாளத்தில் தசைக்குன்றுகளாகத்தான் காட்சியளித்திருப்போம்.

தமிழ் காத்திடத் தண்டவாளத்தில் தலை வைத்தமைக்காக அரியலூர் நீதிபதி அளித்த தண்டனை ஆறு மாதக் கடுங்காவல்.

இலங்கையில் 1956இல் தந்தை செல்வா அவர்கள் தொடங்கிய தமிழர் சம உரிமைக்கானப் போராட்டத்திற்கு ஆதரவளித்து அண்ணா முன்னிலையில் சிதம்பரம் பொதுக் குழுவில் தீர்மானம் கொண்டு வந்து, அதைப் பொன்னம்பலனார் வழிமொழிந்திட - அதனையொட்டி நான் செய்த அறப்போர் முழக்கம் இன்னமும் எல்லோரின் செவிகளிலும் எதிரொலித்துக் கொண்டு தானே இருக்கிறது?

1983இல் இலங்கை வெலிக்கடை சிறைச் சாலையில் - குட்டிமணியைக் குருடாக்கி கொன்று குவித்தபோதும் - ஜெகன், தங்கதுரை போன்றோர் செத்தொழிந்த போதும் - அரை நாள் அறிவிப்பில் சென்னை குலுங்கிட ஆறு லட்சம் பேர் நடத்திய அணிவகுப்புக்குத் தலைமை தாங்கியதும் - அகில இந்தியத் தலைவர்கள் வாஜ்பய், என். டி. ராமராவ், பகுகுணா, ராம்வாலியா, உபேந்திரா, ஜஸ்வந்த் சிங், ராச்சையா போன்றவர்களை மதுரை டெசோ மாநாட்டுக்கு அழைத்து, தமிழ் ஈழம் மலர்வதற்கு வலியுறுத்தியதும் - அதனைத் தொடர்ந்து போராளிகளுக்குள் ஏற்பட்ட பூசல்களால்; சபாரத்தினம் முதல் சமரச சன்மார்க்க சீலராம் அருமை நண்பர் அமிர்தலிங்கனார் வரையில் சவங்களாக்கப்பட்டதும் - இந்தத் தமிழ் நெஞ்சில் ஆணிகள் கொண்டு அடித்து இன்னமும் ரத்தம் வழியும் காயங்கள் அல்லவா?

இந்தியாவின் ஈடற்ற இளந்தலைவர் ராஜீவ் காந்தியை வீழ்த்தி சின்னாபின்னப்படுத்திய பிறகும் - அதற்கு முன்பே சட்ட மன்றப் பதவிகளை இலங்கைப் பிரச்சினைக்காகத் துறந்த எனக்கும், எனதருமைப் பேராசிரியருக்கும் எத்தகைய துயரம் ஏற்பட்டு எங்களைத் துவள வைத்தது என்பதை யார் அறிவார்?

வெறுக்கத்தக்கதும் - வேண்டத் தகாததுமான இத்தனை கொடுமைகளுக்கும் "விடுதலைப் போர்'' என்று பெயரிட்டு அழைத்தாலும் - இலங்கையில் விடுதலைப் போர் - இங்கே யிருந்து ஆதரவு தரும் தமிழர்களுக்கு கெடுதலை உருவாக்கும் காரியமன்றோ செய்கின்றார்; களத்தில் நிற்போரிடம் கள்ள உறவு வைத்துக் கொண்டு!

எல்லோரும் ஒன்றாய்க் கூடி இலங்கைத் தமிழர்க்கு ஆதரவு தரும் கூட்டு முயற்சிக்கு இங்கே வேட்டு வைத்தது யார் என்று;

திருச்சி கூட்டத்தில் தம்பி திருமாவளவன் அடுக்கடுக்கான ஆதாரங்களை வரிசைப்படுத்தினாரே

1. அனைத்துக் கட்சிகளின் கூட்டத்திற்கு வர மறுத்தவர் யார்?
2. மனிதச் சங்கிலிக்கு வர மறுத்தவர் யார்?
3. டெல்லியில் பிரதமரைச் சந்திக்க வர மறுத்தவர்கள் யார்?
4. உண்ணா விரதங்களை கபட நாடகம் என்றுரைத்தவர் யார்?
5. ஈழ விடுதலைக்காக அடுக்கடுக்கான போராட்டங்களை நடத்திய தலைவர் கலைஞர் அல்லவா? இப்போது நீலிக் கண்ணீர் வடிப்போர் இது வரை ஈழத் தமிழ் சொந்தங்களுக்காக கண்ணீர் வடித்ததுண்டா?
6. இப்போது ஈழம் வாங்கித் தருகிறேன் என்பவர் தேர்தலுக்குப் பிறகு அதைப் பற்றிப் பேசுவாரா?
7. ஒரு சில இடங்களுக்காகத்தான் அந்த அணியோடு கூட்டணி சேர்ந்தார்களே தவிர, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பார் என்று நினைத்தா தோழமை கொண்டார்கள்?

என்றெல்லாம் அடுக்கடுக்காக கேள்விகளைத் தொடுத்தார் திருமாவளவன். நாடாளுமன்றத் தேர்தல் தேதி நெருங்கியவுடன்; இலங்கையில் படையெடுத்து ஈழத்தை அமைப்போம் என்று இன்றைக்கு எக்காளமிடுகிறாரே; இவருடைய கூட்டணிக் கட்சியாம் கம்யூனிஸ்ட் சீனா கை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்குமா?

இத்தகையோர் கோமாளி நடவடிக்கைகளுக்கிடையே அங்கே இலங்கையில் போரில் சிக்கி அவதிப்படும் தமிழர்களைக் காத்திட நமது ஒரு உயிர் பயன்பட்டால் என்ன என்று எடுத்த முடிவுதான் - யாருக்கும் தெரிவிக்காமல் நான் மேற்கொண்ட உண்ணா நோன்பு.

வீட்டில் உள்ளவர்களும் - நாட்டில் உள்ள உடன்பிறப்புகளும் - உங்களிடம் அறிவிக்காமல் மேற்கொண்ட இந்த அறப் போருக்காக என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

ஆனால் ஒன்று;
அன்று வெற்றி பெற்றதால்
இன்று உம்மோடு இருக்கிறேன்.
இல்லையேல்
விருதுநகர் சங்கரலிங்க நாடார்
கல்லறையின் அருகில் -
ஈழத்து திலீபன்
கல்லறைக்குப் பக்கத்தில் தான்
இருந்திருப்பேன் -

இது என்
தமிழ் மீது சத்தியம் -
அண்ணா, அய்யா மீது ஆணை

என்பதை மட்டும் அறிந்திடுக!
எல்லாம் ஓரளவு நன்மையாக முடிந்த வரையில் சரி;

அடுத்த கட்ட தொடர் பணி - நாடாளுமன்றத் தேர்தல் தொடர் பணி இருக்கிறதே - திருச்சியில் உன் திருமுகம் கண்டேன். அடுத்து, மதுரையிலும் - கோவையிலும் - மேட்டுப்பாளையத்திலும் என்னுயிரே உன்னைச் சந்திக்கிறேன்.

களைப்பைப் பொருட்படுத்தாமல் காரியமாற்றுக!
என் கண்ணல்ல, மணியல்ல;
களத்திலேயே இரு -
இது ஜனநாயக வெற்றிக்கான களம்

என்பதை மறவாதே!

அன்புள்ள,
மு.க.
3-5-2009

3403. பாதம் பணிகிறேன்; பணியாற்றப் புறப்படு!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரம் எல்லா கட்சிகளின் சார்பிலும் நடைபெற்று - அந்தந்த கட்சிகளின் தரத்திற்கேற்ப விமர்சனங்கள், கருத்துரைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் வழங்கப்பட்டு - அந்த நிலை இன்றோடு (11.5.2009) நிறைவடைந்து, நாளை மறுநாள் (13.5.2009) - தகத்தகாய ஒளிபரப்பி உதய சூரியன் எழும் காட்சியையும் - அக்கதிரவனை "கை" கூப்பி வணங்கி இந்தியத் திருநாட்டு மக்கள் தொழும் மாட்சியையும் - பொருத்தமிலா முரண்பாட்டுக் கூட்டணியின் முகமூடியைக் கிழித்தெறிய - விடுதலை சிறுத்தைகளின் 'திருமாப் படை' வரிசை தொண்டர்களுடன் நமது பைந்தமிழ் நாட்டின், பட்டி தொட்டி முதல் பட்டினக் கரை வரையில் பவனி புறப்படு -

பாருக்குள்ளே நல்ல நாடு - நமது இந்தியத் திருநாடு - அதில் தாகூரும், பாரதியும், பாரதிதாசனும் போற்றிய ஜனநாயக மாண்புக்கு, வேறெங்குமில்லை ஈடு - என்ற உரத்த குரலெழுப்பி, உணர்வு பொங்கிட நமது அணியினர் வாகை சூடிட - வாக்கு திரட்டிட - கிளம்பியிருப்பாய் என எனக்குத் தெரியும். அல்லும் பகலும் அயர்வின்றி, கழக உடன் பிறப்பாம் நீயும் - காங்கிரஸ் நண்பர்களும் - விடுதலை சிறுத்தைகளின் செயல் வீரர்களும் ஆற்றி வந்துள்ள பணிக்கு - கரம் குலுக்கி நன்றி தெரிவிப்பதா?

எனக்கு உடல் நலம் இல்லா நேரத்திலும் என் பணியையும் சேர்த்து ஆற்றிட ஆங்காங்கு ஆடி ஓடிய அணியின் தொண்டர்களாம் உமது பாதங்களைப் பணிவதா?

கொளுத்தும் வெயிலில் உடலில் முத்து முத்தாக வடியும் வியர்வைத் துளிகளைக் கூடத் துடைத்திட நேரமின்றி, நீ தொண்டாற்றி வரும் தூய பாங்கு என் இதயத் துடிப்புக்களுக்கு

இன்னும் இன்னும், மேலும் மேலும் வலிமை சேர்த்து என்னை ஊக்கப்படுத்தி வருகின்றன.

கடந்த 6 ஆம் தேதி இந்தியத் திருநாட்டின் தியாகத் திருவிளக்கு திருமதி சோனியா காந்தி வருவதாக இருந்து, என் உடல்நிலை காரணமாக அந்நாள், பத்தாம் தேதி அன்று ஒத்தி வைக்கப்பட்டு - பசு மரத்தாணி போல் கழகம், காங்கிரஸ் ஆகிய இரண்டின் ஒற்றுமை ஓங்கி வளர்ந்திருக்கின்றது - உரமாகப் பதிந்திருக்கின்றது என்ற உண்மையை எரிச்சல்காரர்களுக்கும் எடுத்துக் காட்டுகின்ற மாட்சியாகவன்றோ, அன்றைய தீவுத் திடல் காட்சி அமைந்தது.

அக்காட்சி என் உடல் நலிவைப் போக்கிற்று.
அம்மையார் சோனியா காந்தியின் மன வலிவைப்
பெருக்கிற்று.

நலிவும் குறைந்து - வலிவும் மிகுந்துள்ள இந்த நிலை நம்முடைய தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தோழமைக்குரிய தலைவர்களும், தொண்டர்களும், முன்னோடிகளும், முற்போக்குவாதிகளும் மத நல்லிணக்க சமுதாய தேவை என்றும், மதச் சார்பற்ற அரசு அமைய வேண்டும் என்றும், அரும்பணிகளை ஆற்றுகின்ற நமக்கு - அய்யாவும், அண்ணாவும், அருமைக் காமராஜரும் வழங்குகின்ற வாழ்த்துகளாகக் குவியட்டும்.

அந்த வாழ்த்துகள் அனைத்தும்
என்னுயிரே!
உடன்பிறப்பே,
உன் போன்றோர் உழைப்பால்
வாக்குகளாக திரளட்டும்!

தீவுத் திடல் கூட்டத்தில் நான் சொன்னது போல் பகைவர்களின் பச்சைப் பொய்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு நம் பணியில் கவனம் செலுத்துவோம் நாம். யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் பேசட்டும்.

நான் பத்தாம் தேதி கூட்டத்தில் குறிப்பிட்டதைப் போல், "பாம்பு நம்மைக் கடித்து விட்டது என்பதற்காக - அந்தப் பாம்பை திரும்பக் கடிப்பது பைத்தியக்காரத்தனம்'' என்பதை மறவாமல் பணி தொடர்ந்திடு!

இந்தியத் தாயகத்தின் பாதுகாப்புக்கும் -
தமிழ் நிலத்தின் வளத்திற்கும் -

வெற்றிபெற வேண்டியது நமது அணிதான் என்பதை மறவாதே!

நான் உன்னிடத்திலிருந்து தொலைவில் இல்லை - உன்னோடுதான் இருக்கிறேன்.

உன் உயிர் மூச்சாய் -
உள்ளத்தின் துடிப்பாய் -

உன்னுயிரோடும் - உயிர் மூச்சோடும் கலந்து பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறேன்.

மறந்தும் இந்நாளில் சிறிது ஓய்வு கொள்ள நேரிட்டால் -
எந்நாளும் இந்நாட்டு மக்கள் - தாழ்வு மிஞ்சி;
மதமாச்சரியங்களுக்கு பலியாகி விடுவார்கள் என்பதையும் -
மத நல்லிணக்கத்தை மறந்து விடுவார்கள் என்பதையும்
கவனத்தில் கொண்டு காரியம் ஆற்றிடு!

கவனம்! கவனம்! இதற்கு மேல் உனக்கு நான் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது?

உலகமெங்கும் வாழ்கிற தமிழர்களுக்காக -

இலங்கையில் வாழ்கின்ற ஈழத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் சம உரிமைக்காக -

ஐம்பதாண்டு காலத்திற்கு மேலாக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன், உன்னை வேண்டுகின்றேன்.

என் உயிரின் உயிரே!
உதவாதினி ஒரு தாமதம்!
உடனே புறப்படு!
உழைத்திடு! ஓயாது உழைத்திடு!
இமாலய வெற்றியைக் குவித்திடு!

அன்புள்ள,
மு.க.
12-5-2009

3404. இந்தப் பேனா வேண்டுகிறது!

உடன்பிறப்பே,

பழைமை வழக்கமாக நம் வீடுகளில் குழந்தை தவழும் பருவத்தில் "பல் கொழுக்கட்டை விழா" நிகழ்ச்சி ஒன்று நடத்து வார்கள். கூடத்தில் விளக்கேற்றி வைத்து - கோலமிட்டு - தரையில் ஒரு பெரிய தாம்பாளத்தில் கொழுக்கட்டை, வடை, நகை நட்டுகள், எழுதுகின்ற பேனா, சிறிய கத்தி முதலியவற்றை வைத்து அங்கே தவழ்ந்து செல்கின்ற குழந்தை அந்தப் பொருள்களில் எதை எடுக்கிறது என்று கவனிப்பார்கள்.

எனக்கு இப்படி குழந்தை பருவத்தில் பல் கொழுக்கட்டை நிகழ்ச்சியை என் வீட்டார் நடத்தியபோது - நான் ஊர்ந்து, நகர்ந்து, தவழ்ந்து குறிப்பிட்ட தாம்பாளத்தை அடைந்து - அதிலேயிருந்த பேனாவை எடுத்தேனாம்.

"அன்னையர் தினம்" கொண்டாடி அடுத்தடுத்த நாட்களில் அந்த நினைவு எனக்கு வருவது ஒரு சுவையான அனுபவம்!

அந்த நிகழ்ச்சியை என் வாயிலாக ஒரு முறை கேள்விப்பட்ட இளம் ஓவியர் ராஜபரணி என்பார், என்னை எழுதுகோலாகச் சித்திரித்து, அன்னை அஞ்சுகம் அம்மையார் ஆட்டுகின்ற தொட்டிலையும் ஓவியமாகத் தீட்டி ஒரு அற்புதக் கற்பனையைச் செய்து தந்தார். அந்த ஓவியம் இன்னமும் என் வீட்டில் இருக்கிறது. அது தான் இந்த ஓவியம்.

ஆனால், தொட்டிலில் ஆடும் பேனா தூங்கவே இல்லை. இன்னமும்;

ஏழை எளியவர்களுக்காக -

ஏதுமறியா பாமரர்களுக்காக -

உடல் ஒடிய உழைக்கின்ற தொழிலாளர்களுக்காக -

உத்தம நெஞ்சம் கொண்ட உழவர் பெருமக்களுக்காக -

அடித்தட்டு, அடித்தட்டு என்று அடுக்கிக் கொண்டே போகக் கூடிய அடித்தட்டு மக்களுக்காக -

என் மூச்சாக விளங்கும் தமிழ் மொழிக்காக -

என் இதயத் துடிப்பாம் இன உணர்வுக்காக -

எங்கெங்கே தமிழர்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் அவர்களின் உரிமைக்குப் போராடுவதற்காக -

அன்னையார் முன்னிலையில் நான் எடுத்த பேனா இன்னமும் தன் அலுவலை முடித்துக் கொள்ளவில்லை.

கண்ணொளி இழந்தோர்க்கு கையெழுத்திட்டதும் - இந்தப் பேனா தான்!

கையில் ஓடேந்தி பிச்சையெடுத்தோர்க்கு மறு வாழ்வளிக்க திட்டம் தீட்டியதும் - இந்தப் பேனா தான்!

மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷா கொடுமை இன்னமும் கம்யூனிஸ்ட் மாநிலத் தலைநகரான கொல்கொத்தாவில் இருந்தும் - அதனை தமிழகத்தில் அறவே ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கிட கையெழுத்திட்டதும் - இந்தப் பேனாதான்!

குடிசை மாற்று வாரியம் கண்டதும் - இந்தப் பேனா தான்!

குடிநீர் வாரியம் கண்டதும் - இந்தப் பேனா தான்!

ஊனமுற்றோர்க்கு திட்டம் தந்ததும் - இந்தப் பேனா தான்!

குடியிருப்பு மனைச் சட்டம் கொணர்ந்ததும் - இந்தப் பேனா தான்!

உச்ச வரம்புச் சட்டம் உருவாக்கியதும் - இந்தப் பேனா தான்!

உழவர்களுக்கும், நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கியதும் - இந்தப் பேனா தான்!

அண்ணா மறுமலர்ச்சி திட்டம் தீட்டியதும் - இந்தப் பேனா தான்!

பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைத்ததும் - இந்தப் பேனா தான்!

காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக சட்டம் ஆக்கியதும் - இந்தப் பேனா தான்!

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாள் என்று சட்டம் ஆக்கியதும் - இந்தப் பேனா தான்!

அய்யன் திருவள்ளுவர்க்கு 133 அடி உயரத்தில் சூழும் தென் கடல் ஆடும் குமரி முனையில் அழகிய சிலையெடுக்க உத்தர விட்டதும் - இந்தப் பேனா தான்!

இந்தியாவில் எங்குமில்லாத அளவிற்கு ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு தர ஆணையிட்டதும் - இந்தப் பேனா தான்!

மகளிர் வாழ்வில் மகிழ்ச்சியைப் பெருக்கிட அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் இலவசமாக வழங்கிடச் செய்ததும் - இந்தப் பேனா தான்!

பதவிப் பொறுப்பேற்ற அன்றையதினமே விவசாயிகளின் கூட்டுறவு கடன் 7000 கோடி ரூபாயை அறவே ரத்து செய்து ஆணையிட்டதும் - இந்தப் பேனா தான்!

ஏழை மகளிர் திருமணம் செய்ய ஏதுவாக இலவசமாக இருபதாயிரம் கொடுக்கும் திட்டத்திற்கு வித்திட்டதும் - இந்தப் பேனா தான்!

கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா ஆறாயிரம் ரூபாய் வழங்கிட வழி செய்ததும் - இந்தப் பேனா தான்!

ஒரு கோடி ஏழை மக்கள் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததும் - இந்தப் பேனா தான்!

சிறுபான்மையோர் உரிமைக்கும்; சீர் பெறவே அருந்ததியர்க்கும்; செம்மொழியாம் தமிழுக்கும்; சேது சமுத்திரத் திட்டத்திற்கும் கையெழுத்திட்டதும் - இந்தப் பேனா தான்!

தேசத் தியாகிகளை மறவாமல் அவர்கள் செய்த தியாகத்தை மதித்து நினைவுச் சின்னங்களும், மணி மண்டபங்களும், சிலைகளும் எழுப்பிட ஏற்பாடு செய்ததும் - இந்தப் பேனா தான்!

இவ்வாறு,

பல்லாயிரம் கோடி திட்டங்களை தீட்டுதற்கும் -
பல கோடி மக்களின் பசிப்பிணி தீர்ப்பதற்கும் -

என் அன்னையின் தாலாட்டை பெரும் பாராட்டாகக் கருதி பாடுபடுகிறவன் தான் இந்தப் பிள்ளை - ஆம், உங்கள் வீட்டுப் பிள்ளை.

அன்னையர் தினம் கொண்டாடி அகம் மகிழ்ந்துள்ள அருமைத் தாய்மார்களே! அவர்தம் குடும்பத்துப் பெரியோர்களே!

பேனா முனையால் பெரும் பெரும் சாதனைகளை - திட்டங்களை -

பெற்ற தாயும்
பிறந்த பொன்னாடும்
மகிழ்ந்திட

உற்ற உடன்பிறப்புகளின் துணையோடு -
நிறைவேற்றி வரும் என் வேண்டு கோளை
ஒரு கணம் சிந்தித்துப் பார்த்து

"குழந்தை பருவத்தில் பேனாவை எடுத்தான்;
அதனால் வீணாகப் போகவில்லை நாடும் நாமும்" -

என்ற நன்றியினைத் தெரிவித்திட
வாய்த்திடும் நாள் தான், மே 13ஆம் நாள்!

இவ்வளவும் செய்து இனியும் செய்யவிருக்கின்ற இந்தப் பேனா தான் -

உதய சூரியன் - கை - நட்சத்திரம் சின்னங்களில் உங்களின் பொன்னான வாக்குகளை அளித்திட வேண்டுகிறது.

அன்புள்ள,
மு.க.
13-5-2009

3405. குழந்தையின் உயிரைக் குடித்து தாயின் குடலுக்குள் சென்ற குண்டு!

உடன்பிறப்பே,

மக்களவைக்கான தேர்தல்கள் தமிழகத்தில் ஒன்றிரண்டு சிறு சிறு சம்பவங்களைத் தவிர அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளன என்று தேர்தல் ஆணையமே அறிவித்துள்ளது. தமிழகத்தில் 67 முதல் 68 சதவிகிதம் வரை வாக்குப் பதிவுகள் நடந்துள்ளதாக ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன. வாக்குப் பதிவு இயந்திரத்தில் கோளாறு என்று காலையில் ஒரு சில இடங்களிலிருந்து செய்திகள் வந்த போதிலும், அதுவும் சிறிது நேரத்திற்குள் சரி செய்யப்பட்டு விட்டது. அந்தச் சிறு சிறு கோளாறுகள் கூட தேர்தல் ஆணையத்தின் பொறுப்பே தவிர, அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை.

ஆனால் ஒரு சில நாட்களாக சிலர் தேர்தல் நேரத்தில் ஆளுங் கட்சி வன்முறையில் ஈடுபடப் போகின்றது என்றும், பெரிய கலவரம் ஏற்படப் போகிறது என்றும் தமிழ்நாடே ஸ்தம்பித்து விடப் போகிறது என்றும் எப்படி யெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். தேர்தல் நேரத்தில் எப்போதும் நடைபெறும் ஒன்றிரண்டு அசம்பாவிதங்களைத் தவிர பெருமளவிற்கு எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் ஆளுங்கட்சியின் அத்துமீறல்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு எங்கும் நடைபெறவில்லை என்பதை நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாடே இந்தத் தேர்தலில் ரத்தக் களறியாகப் போகிறது என்று பிரச்சாரம் செய்தவர்களின் முகத்தில் கரிபூசக் கூடிய அளவிற்கு தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றுள்ளன.

ஆனாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏட்டில் "ஆளுங்கட்சியினர் வன்செயல் - தி.மு.க. வினர் கொலை வெறித் தாக்குதல்" என்றெல்லாம் தலைப்பிட்டு அறிக்கை அரசி ஜெயலலிதா கொடுத்த செய்திகளை கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் மேற்கு வங்கத்தில் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி நான் அல்ல; கொல்கத்தாவிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில நாளேடான "டெலகிராப்"; 9-5-2009 அன்று தனது இதழின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்ட செய்தி என்ன தெரியுமா? அந்தச் செய்திக்கு அந்த ஏடு எழுதியுள்ள தலைப்பே, "Tragedy of Sania, 1 year 11 months : Bullet kills baby, then hits her mother:" என்பதாகும். அந்தச் செய்தியின் சில பகுதிகள் மட்டும் வருமாறு :-

Nandigram, May 8 : The "politically conscious" State that threw up the highest turnout yesterday also witnessed the death of probably the youngest victim of political violence this election. Sania Khatoun, a year and 11 months old, was in mother Aleya Bibi's lap last night, being fed her dinner, when alleged CPM supporters entered their home and opened indiscriminate fire. One of the bullets went through Sania's leg, and then lodged in the stomach of Aleya, 27.

No political party in Bengal could recall anyone as young as Sania being killed in poll violence in recent memory. During last year's Panchayat elections, Mili Khatoon, 4, was killed by a bomb as she played on the verandah of her home in Murshidabad's Talibpur village.

No one has been arrested for Sania's murder because "No one has filed any complaint," East Midnapore S.P. said.

(நந்திகிராமம், மே 8 : அரசியல் தெளிவுள்ள மாநிலமான மேற்கு வங்கத்தில், நேற்று நடைபெற்ற தேர்தலில் மிக அதிக எண்ணிக்கையில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர் என்ற செய்தியோடு அங்கு ஏற்பட்ட அரசியல் வன்முறை காரணமாக தேர்தல் களத்தில் மிகக் குறைந்த வயதில் (சிறு குழந்தை) பலியான சம்பவமும் இணைந்து வந்ததைக் காண முடிந்தது. நேற்றிரவு தன் தாயின் மடியில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்கள் வீட்டிற்குள் நுழைந்து கண்மூடித்தனமாக சுட்டபோது ஒரு துப்பாக்கி குண்டு ஒரு வயது 11 மாதங்களே ஆன சானியா கட்டோன் என்ற குழந்தையின் கால் வழியாகச் சென்று, 27 வயதான அலியா என்ற தாயின் வயிற்றுக்குள்

சென்றது. அண்மைக் கால அரசியல் வரலாற்றில், மேற்கு வங்கத்தில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் நேரத்தில் இது போன்ற அரசியல் வன்முறை நடைபெற்று குழந்தையைக் கொன்ற சம்பவத்தை நினைவுகூர இயல வில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது, நான்கு வயதான மிலி கட்டூன் என்ற குழந்தை முர்ஷிதாபாத்தில் உள்ள தாலிப்பூர் கிராமத்தில் உள்ள தன் வீட்டு வராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்தபோது வெடி குண்டு வெடித்து மடிந்தது. தற்போது சானியா கொலையுண்டது பற்றி யாரும் கைது செய்யப்படவில்லை. ஏனெனில் இந்தச் சம்பவம் குறித்து யாரும் புகார் கொடுக்கவில்லை என்று கிழக்கு மிட்னாபூர் காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.")

இவ்வாறு மேற்கு வங்கத்தில் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற வன்முறைச் சம்பவம் குறித்து "டெலகிராப்" செய்தி வெளியிட்டதோடு மட்டும் நிற்கவில்லை. 11-5-2009 அன்று, ஆம் மூன்று நாட்களுக்கு முன்பு "Violent State" - "வன்முறை மாநிலம்" என்றே தலைப்பிட்டு எழுதிய தலையங்கம் என்ன தெரியுமா?

"மேற்கு வங்கத்தில் அரசியல் வன்முறையின் புதிய பரிமாணம், தாயின் கரங்களில் இருந்த ஒரு குழந்தை துப்பாக்கியால் சுடப்பட்டு இறக்கும் காட்சி தான். (A baby shot dead in her mother's arms is the new image of the horror of political violence in West Bengal.) அரசியலில் வன்முறையைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்தி 32 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிக்கு வந்த மார்க்சிஸ்ட்களின் நீண்ட கால ஆட்சியின் பாரம்பரியமிக்க வரலாற்றுத் தொடர்ச்சியாக இது உள்ளது. மேற்கு வங்கத்தில் அரசியலில் வன்முறையை அடிப்படையாக வைத்து அவர்கள் ஆட்சியில் நீடித்து வருகின்றனர். அதன் காரணமாக சட்டம் மற்றும் நிர்வாகம் உட்பட இதர துறைகள் அனைத்தும் வன்முறைப் போக்கிற்கு அடிபணிந்து போகும் வகையில் அடக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு தொழில் தாவாவிற்கு தீர்வு காண்பதாகட்டும், அல்லது தேர்தலில் போட்டியிடுவதாகட்டும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரின் கரங்களில் அச்சுறுத்தல், மிரட்டுதல்,

வன்முறை ஆகியவை பிரதான ஆயுதங்களாக உள்ளன. தற்போதைய தேர்தல் பிரச்சாரம் துவங்கியதிலிருந்து மாநிலத்தில் வெடித்துக் கிளம்பியுள்ள வன்முறை இத்தனை ஆண்டுகளாக மார்க் சிஸ்ட் கட்சி பேணி வருகின்ற அரசியல் கலாச்சாரத்தின் விளைவேயாகும். (The violence that has rocked the State since the current poll campaign started is thus a result of the political cult that the CPI(M) has nurtured all these years) அக்கட்சியின் தலைமையிலான அரசு வன்முறையைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ தவறிவிட்டது என்றால், அது நிர்வாகத் திறமையின்மையினால் மட்டுமல்ல, அந்தத் தோல்விக்கு வன்முறையை ஒரு அரசியல் தந்திரமாகக் கருதும் அக்கட்சியின் கண்ணோட்டமே பெரும் காரண மாகும்."

இவ்வாறு "டெலகிராப்" ஏட்டில் தலையங்கம் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய பாராட்டுக்குரியவர்கள்(?) தான் தமிழகத்திலே ஆளுங் கட்சியினர் வன் செயல் என்றும், கொலை வெறி தாக்குதல் என்றும் செய்தி வெளியிட்டுள்ளனர். மேற்கு வங்கத்தில் "டாட்டா" நிறுவனத்தின் சார்பில் கார் தொழிற்சாலை ஒன்றினை தொடங்கு வதில் - விவசாய நிலத்தை தொழிற்சாலைக்குக் கொடுக்க மாட்டோம் என்று போராடிய அப்பாவி விவசாயிகள் மீது மார்க்சிஸ்ட் அரசு நடத்திய தடியடி, துப்பாக்கி சூட்டினால் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களில் பதினான்கு பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை மறக்க முடியுமா? அது மாத்திரமல்ல; தற்போது நடைபெற்ற மக்களவை தேர்தலில் மேற்கு வங்க மாநிலத்தில் எட்டு பேர் பலியான செய்தி ஏடுகளில் வெளி வந்ததை இல்லையென்று கூற முடியுமா?

ஆனால், தமிழகத்திலே உள்ள ஆளுங்கட்சியைப் பற்றி இந்த அளவிற்கு குறை கூறும் அருமை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஒரு சில மாதங்களுக்கு முன்பு பேசியது என்ன தெரியுமா? அதிலும் கூட மதுரையிலே நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றின்போது தெரிவித்த கருத்து என்ன தெரியுமா? அதையும் ஞாபகமாக எடுத்து வைத்திருக்கிறேன். அது இதோ:-

"இந்தியாவின் பெரிய பதவியான ஜனாதிபதி தேர்தலுக்கு மாதர் குல பிரதிநிதியாக பிரதிபா பாட்டிலை அறிவித்தபோது நாடே

மகிழ்ச்சிக் கடலில் திளைத்தது. அதை எதிர்த்து தமிழ்நாட்டில் இருந்து ஒரு அவலக் குரல் - பிரதிபா பாட்டீல் தேர்வு "அரசியல் ஜோக்" என ஜெயலலிதா கூறினார். ஜெயலலிதா கூட்டத்தின் இந்த அகம்பாவத்திற்கு மேற்குத் தொகுதி மக்கள் சரியான அடி கொடுக்க வேண்டும்.

தேச நலன் கருதி, எடுத்த சிறந்த முடிவை "அரசியல் ஜோக்" என்பது அகம்பாவம். உத்தரப்பிரதேச தேர்தலுக்கு பிரச்சாரம் செய்யச் சென்ற ஜெயலலிதா பா.ஜ.க. பற்றி வாயே திறக்கவில்லை. நாளை மதவெறி கூட்டத்தோடு இணைந்திட ஜெயலலிதா எடுக்கும் முயற்சி தான் இது. இதை வாக்காளப் பெருமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். போர்க் காலத்தில் வதந்திகளைப் பரப்புவது தேச துரோகம் என்று கூறப்பட்டது. தற்போது ஜெயலலிதா வதந்திகளைப் பரப்பி வருகிறார். தமிழகத்தில் குடிசைகளுக்கு பட்டா வழங்கப்படுவது குறித்து குறை சொல்ல ஜெயலலிதா விற்கு அருகதை உள்ளதா? (மார்க்சிஸ்ட் ஏடு - தீக்கதிர் - 25-6-2007)

"தி.மு.க. அரசு தனது பட்ஜெட்டில் அறிவித்துள்ள மக்களுக்கான பல சிறந்த திட்டங்களை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால் அவற்றையெல்லாம் தேவையின்றி எதிர்க்கிற கட்சியாக அ.தி.மு.க. இருக்கிறது. எதிர்க்கட்சியாக இருக்கவும் லாயக்கற்றதாக அக்கட்சி மாறியிருக்கிறது. சிறுதாவூரில் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தங்குவதற்காக கட்டப்பட்ட பங்களா யாருக்குச் சொந்தமானது என்பதைக் கூட சொல்ல முடியாமல் தட்டுத் தடுமாறுகிறார். சட்ட மன்றத்தில் எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் தரம் தாழ்ந்து பேசுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் தி.மு.க. அரசுக்கு ஜால்ரா போடுவதாக கூசாமல் பேசுகிறார்கள். யார் ஜால்ரா போடுவது? உள்நாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும் பன்னாட்டு பகாசூர முதலாளி களுக்கும் ஜால்ரா போட்டது அ.தி.மு.க. ஆட்சி தான் என்பதை மக்கள் அறிவார்கள். தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரேஷன் கடைகளில் இருந்து நல்ல அரிசி கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளை பாராட்டுகிறோம். கல்விக் கொள்ளைக்குத்தான் கடந்த கால ஜெயலலிதா அரசு உடந்தையாக இருந்தது." (மார்க்சிஸ்ட் ஏடு - தீக்கதிர் - 13-8-2006)

"வண்டலூர் பகுதியில் துணை நகரம் அமைப்பது குறித்து அரசின் அறிவிப்பைக் கண்டித்து ஜெயலலிதா ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அது மிகவும் ஆரோக்கியமற்ற முறையிலும், முதலமைச்சர் கருணாநிதி மீது தனி நபர் வெறுப்பைக் காட்டுகிற முறையிலும் வெளிவந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. துணை நகரம் சம்பந்தமான விஷயங்களை விட்டு விட்டு, இன்றைய முதல்வர் கருணாநிதி அவர்களின் குடும்பத்தினரையும், சொந்த பந்தங்களையும் குறிவைத்து வன்மத்துடன் செய்யப்பட்ட தனி நபர் தாக்குதல் நடவடிக்கையாகும். ஜெயலலிதாவின் இந்த அணுகுமுறை, காழ்ப்புணர்ச்சியாகவும், அருவருக்கத்தக்க வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தக் கூடிய விவாதமாகவும் மாறி சட்டமன்றம் முடக்கப்படுவதில் சென்று முடிவடைகிறது. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டு அவை நடவடிக்கைகளை குலைப்பதிலும், மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதை திசை திருப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். இது சட்டமன்ற ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கி உள்ளது. 2006 மே மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஜெயலலிதா அவர்களின் அராஜக மக்கள் விரோத போக்கிற்கு மக்கள் தங்கள் தீர்ப்பின் மூலம் புகட்டிய பாடத்தை அவர்கள் புரிந்து கொண்டதாக தெரியவில்லை. (மார்க்சிஸ்ட் ஏடு - தீக்கதிர் 4-9-2006)

உடன்பிறப்பே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும், முன்னணியினரும் இப்படியெல்லாம் அவர்களே பேசியதை மறந்து விட்டுத் தான் - நமது அணியை விட்டுச் சென்றார்கள். அவர்கள்தான் இப்போதும் தங்கள் இதழ்களில் நம்மீது காழ்ப்பு வீசும் கருத்துகளை எழுதி வருகிறார்கள்.

நம்மைப் பற்றி தாக்குகிறவர்களைப் பற்றி நண்பர்கள் கூறும்போது நான் ஒன்றைச் சொல்வதுண்டு. அவர்கள் நம்மைப் பாராட்டிய அளவிற்கு திட்டவில்லையே என்று கூறுவேன். எனவே தான் அந்த அருமை நண்பர்கள் நம்மைப் பற்றி தாக்குவதைப் படித்து விட்டு, அவர்கள் இதற்கு முன்பு எழுதிய பாராட்டுகளை படித்துப் பார்த்து எனக்கு நானே சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-5-2009

3406. தூங்கற்க தூங்காது செய்யும் வினை!

உடன்பிறப்பே,

2008ஆம் ஆண்டு சுதந்திரத் திருநாள் அன்று கோட்டையிலே கொடியேற்றி வைத்து விட்டு நான் உரையாற்றியபோது,

> "அரசு நிறைவேற்றிடும் திட்டப் பணிகளிலும், வளர்ச்சிப் பணிகளிலும் அரசு அலுவலர்களின் ஒத்துழைப்பும் கணிசமான பங்காக இருப்பதால் அந்தப் பங்கின் விகிதத்தையே அவர்களுக்கு பகிர்ந்து தருகிறோம் என்ற கொள்கையுடைய இந்த அரசு - மத்திய அரசு அலுவலர்களுக்கான ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு நேற்று அறிவித்துள்ள ஆணைகளையொட்டி, அந்த ஊதிய உயர்வினை, பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழக அரசு அலுவலர்களுக்கும் மன நிறைவு அளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆணைகளை விரைவில் வெளியிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்"
>
> என்று கூறினேன்.

கூறியதோடு விட்டு விடாமல், 20-8-2008 அன்று மத்திய அரசு அறிவித்த ஆறாவது ஊதியக் குழுவின் திருத்திய ஊதிய விகிதங்களை தமிழகத்திலே நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றி அரசுக்கு பரிந்துரை கூறிட, அரசு அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. உள்துறை முதன்மை செயலாளர் திருமதி எஸ். மாலதி, ஐ.ஏ.எஸ்., தலைமையில் அமைந்த அந்தக் குழுவில் நிதித் துறை முதன்மை செயலாளர், திரு. கு. ஞானதேசிகன், ஐ.ஏ.எஸ்., பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளர், திரு. கே.என். வெங்கட்ரமணன், ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர் திரு. எம். குற்றாலலிங்கம், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டார்கள்.

இந்தக் குழுவினர் கடந்த ஒன்பது மாத காலமாக மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டு, மத்திய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையெல்லாம் நன்கு ஆய்வு செய்து, கடந்த 27 ஆம் தேதியன்று என்னைச் சந்தித்து குழுவின் சார்பாக அறிக்கையினை தாக்கல் செய்தார்கள். இதற்கிடையே இந்தக் குழுவின் அறிக்கை வர தாமதமான நேரத்தில், அதனால் அரசு அலுவலர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்று கருதிய இந்த அரசு - 2008 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் பரிசாக - அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகையை வழங்கவும் ஆணையிட்டதை அரசு அலுவலர்களே நன்கறிவார்கள். அதன்படி 1-1-2009 அன்று இரண்டு ஆண்டுகள் பணி புரிந்துள்ளோர்க்கு மூன்று மாத ஊதியமும், 1-1-2009 அன்று இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணிபுரிந்துள்ளோருக்கு ஒரு மாத ஊதியமும், 1-1-2009 அன்று ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மூன்று மாத ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமும் இடைக்கால நிலுவைத் தொகையாக ரொக்கமாக அளிக்கப்பட்டது.

ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவதற்கான குழந்தைகள் நல மையங்களிலும், பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கான சத்துணவு மையங்களிலும், மொத்தம் சுமார் இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களில், அங்கன்வாடி உதவியாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட சுமார் 1 இலட்சத்து 30 ஆயிரம் பணியாளர்கள் தொகுப்பூதியத்தின் கீழ் (Consolidated Pay) பல ஆண்டுக் காலமாக இருந்து வந்தார்கள். இவர்களுக்கான தொகுப்பூதியத்தை தி.மு.கழக அரசு 1.9.2006 முதல் உயர்த்தி வழங்கியது. எனினும், இவர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் (Time Scale of Pay) வழங்க வேண்டுமென பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தார்கள். இதை நிறைவேற்ற வேண்டுமென்ற அக்கறையும் ஆர்வமும் இருப்பினும்; உற்றார் உறவினர்போல் இருந்து தாய்மை உணர்வுடன் ஊட்டி வளர்க்கும் பணியில் இருக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு

அதேவிதமான பரிவுகாட்டி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு நீண்ட காலமாக உண்டு. அதனால் அந்தக் கோரிக்கையை ஏற்று, இவர்கள் அனைவருக்கும் தகுந்த சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் (Special Time Scale of Pay) ஊதியம் வழங்க இந்த அரசுதான் முடிவு செய்தது.

அஃதன்னியில், சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 90 ஆயிரம் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வரையறுக்கப்படாத காலமுறை ஊதிய விகிதத்தையும் 1.9.2006 முதல் இந்த அரசுதான் உயர்த்தி வழங்கியது. இவர்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருவோரும், தற்போது பணியில் சேர்ந்தோரும், ஒரே ஊதியம் பெறும் நிலை இருந்தது. இந்நிலையை மாற்றி, பணிமூப்பு அடிப்படையில் பணியில் மூத்தோருக்கு ஊதியம் உயர்த்தப்பட்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி வந்தார்கள். இக்கோரிக்கையை ஏற்று, பணியில் பத்தாண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் வழங்கி, பணி மூப்பு அடிப்படையில் ஊதியத்தை உயர்த்த இந்த அரசுதான் முடிவு செய்தது.

இதுமட்டுமன்றி, குழந்தைகளுக்கு அன்ன மிட்டு அரும்பணியாற்றிடும் இந்த சிறப்புப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசெய்யும் வகையில், இவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் அளிக்கப்படவும் இந்த ஆட்சியிலேதான் வழி வகை செய்யப்பட்டது.

சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் பணியாளர்களுக்கு பயன் தரும் இந்த முடிவுகளால், அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு கொண்டாடப்படுகின்ற 2008-2009 ஆம் ஆண்டில் செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் முதல் இந்த அறிவிப்புகள் நடைமுறைக்கு வந்தன.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதின் வாயிலாக; பல ஆண்டுகளாக சத்துணவுப் பணியாளர்களின் ஊதியம் குறித்த என்னுடைய ஏக்கம் ஓரளவு நீங்கியது என்பதையும் - புதிய ஊக்கம் பிறந்து இன்றைய மழலையர் - நாளைய நாட்டின் அறிவு மேதைகளாக வளர்ந்திட அவர்களை ஆளாக்கும் அரும்பணியில்

இந்த இரண்டு இலட்சத்து இருபதாயிரம் சத்துணவுப் பணியாளர்களும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதையும் நான் நன்றாக அறிவேன்.

மத்திய அரசின் கீழ் பணியாற்றும் அலுவலர் என்றால், அதிக ஊதியம் என்பதும், மாநில அரசின் கீழ் பணியாற்றும் அலுவலர் என்றால் அதை விட குறைந்த ஊதியம் என்பதும் எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வரும் நடைமுறையாகும். அந்த நடைமுறையை அடியோடு மாற்றி மாநில அரசு அலுவலர் என்றாலும், மத்திய அரசு அலுவலருக்கு இணையான ஊதியம் என்பதை முதன் முதலாக தி.மு. கழக அரசுதான் 1989ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக பொறுப்புக்கு வந்த போது கொண்டு வந்தது என்பதை அரசு அலுவலர்கள் நன்றாக அறிவார்கள்.

மத்திய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப் படி அவ்வப்போது உயர்த்தப்படும்போது, அதே நாளில் மாநில அரசு அலுவலர்களுக்கும் அக விலைப்படியை உயர்த்துவது என்பதை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட கழக அரசு, அதிலே எவ்வித கால தாமதத்தையும் செய்யாமல் நடைமுறைப்படுத்தி வருவதையும் அரசு அலுவலர்கள் அறிவார்கள்.

மத்திய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை தமிழக அரசு ஏற்பதால், ஆண்டு ஒன்றுக்கு 5,156 கோடி ரூபாய் கூடுதல் தொடர் செலவு ஏற்படும். இந்த ஊதிய உயர்வினை முன் தேதியிட்டு வழங்க ஒப்புக் கொண்டு நிலுவைத் தொகை வழங்கும் வகையில் தமிழக அரசுக்கு 11,093 கோடி ரூபாய் செலவாகும். உலகமெங்கும் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அதன் காரணமாக அரசின் வருவாய் குறையக் கூடுமென்று எதிர்பார்த்திடும் நிலையில் அரசு தன் அலுவலர்களுக்காக இந்த ஊதிய உயர்வினைக் கொடுக்க முன்வரக் காரணம், அவர்களும் இந்த அரசின் ஓர் அங்கம் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பதால் தான்!

மேலும் தற்போது மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப் படியினை இரட்டிப்பாக்கி திருத்திய ஊதிய விகித முறைக்கேற்ப வழங்கவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்புக் காலமுறை ஊதியம் பெற்று வரும் சத்துணவுத் திட்டப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் முதன் முறையாக வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கவும் தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொகுப்பூதியம், நிலையான ஊதியம் மற்றும் மதிப்பூதியம் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தற்போது பெற்று வரும் ஊதியத்தில் ஒரே சீராக 25 சதவிகிதம் உயர்வு அளிக்கவும் அரசு முன்வந்துள்ளது.

தற்போது அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தினப்படி இரண்டு மடங்காக இனி உயர்த்தி வழங்கப்படும்.

உடன்பிறப்பே, அரசு அலுவலர் அல்லாதோர் இந்த அரசு; அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமே உதவி செய்வதைப் போல மற்றவர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்க வில்லை என்பதாக நினைத்துவிடக் கூடாது என்பதற்காக ஏழையெளியவர்களின் நலன் கருதி இந்த அரசு எந்தெந்த பணிகளுக்காக எவ்வளவு செலவிடுகிறது என்பதையும் சுருக்கமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

1998-99ஆம் ஆண்டில் உணவு மானியமாக வெறும் 500 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டு வந்ததற்கு மாறாக, தற்போது கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று 20 கிலோ வரை வழங்கும் திட்டம், 50 ரூபாய்க்கு குறைந்த விலையில் மளிகைப் பொருட்களை வழங்கும் திட்டம் போன்றவற்றுக்காக ஆண்டு ஒன்றுக்கு 2800 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

நெல் கொள்முதல் விலை உயர்வுக்கான மானியமாக 200 கோடி ரூபாயும், கூட்டுறவு பயிர்க்கடன் தள்ளுபடியாக 1034 கோடி ரூபாயும், விவசாயிகள் நல வாரிய உதவிக்காக 152 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுக்க 140 கோடி ரூபாயும், பயிர்க்காப்பீடு மற்றும் இழப்பீட்டிற்காக 240 கோடி ரூபாயும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும், இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்பு வழங்கும் திட்டத்திற்காக 140 கோடி ரூபாயும், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்காக 250 கோடி ரூபாயும், மின்சார மானியமாக 1608 கோடி ரூபாயும், முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்

திட்டத்திற்காக 250 கோடி ரூபாயும், ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டத்திற்காக 150 கோடி ரூபாயும், சத்துணவில் வாரம் மூன்று முட்டை வழங்கும் திட்டத்திற்காக 176 கோடி ரூபாயும், முதியோர், ஆதரவற்றோர், விதவைகள் ஓய்வூதியத் திட்டத்திற்காக 958 கோடி ரூபாயும், மாணவர்களுக்கு இலவசமாக பேருந்து பாஸ் வழங்க 300 கோடி ரூபாயும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக 509 கோடி ரூபாயும், சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிக்காக 3967 கோடி ரூபாயும், பாசன மேம்பாட்டுப் பணிகளுக்காக 957 கோடி ரூபாயும், குடிநீர் திட்டப் பணிகளுக்காக 1013 கோடி ரூபாயும், புதிய பேருந்துகள் வாங்க 250 கோடி ரூபாயும், மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 600 கோடி ரூபாயும், புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்காக 300 கோடி ரூபாயும் என்ற அளவில் இந்த ஓர் ஆண்டில் மட்டும் 16,494 கோடி ரூபாய் ஏழையெளிய மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்களுக்காகத்தான் செலவிடப்படுகிறது என்பதையும் அறியலாம்.

எனவே, தமிழக அரசு ஏழையெளிய மக்கள் நல்வாழ்வில் எந்த அளவிற்கு அக்கறையோடு செயல்படுகிறதோ, அதைப் போலவேதான் அரசு அலுவலர்களின் நலனிலும் ஆசிரியர் நலனிலும் அக்கறையோடு பணியாற்றுகின்றது என்பதை விளக்குவதற்காகத்தான் இதனை எழுதியுள்ளேன். 'தூங்கற்க தூங்காது செய்யும் வினை' என்பது அய்யன் வள்ளுவரின் வாய்மொழியன்றோ!

அன்புள்ள,

மு.க.

2-6-2009

3407. உலக அதிசயம் மட்டுமல்ல; உலக மகா அதிசயம்!

உடன்பிறப்பே,

உலக அதிசயங்களில் உச்ச கட்ட அதிசயத்தைக் காண வேண்டுமானாலும் - கேட்க வேண்டுமானாலும் அதிகத் தொலைவு செல்லாமலேயே, அதிக சிரமம் எடுத்துக் கொள்ளாமலேயே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசியல் ரீதியான - சமுதாய ரீதியான அறிக்கைகளையும், அவர் வெளியிட்ட சூளுரைகளையும், அறைகூவல்களையும் திரும்பத் திரும்பப் படித்தாலே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு உலக அதிசயத்தை நாம் காண முடியும்.

அவர் தலைமையேற்றிருக்கும் அ.தி.மு.க. கட்சியின் சார்பாக அவரே கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கைகள் முக்கியமாக மூன்று உண்டு. 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையை எடுத்துப் படித்துப் பார்த்தால்,

"சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்!"

என்று உறுதிமிகுந்திட - குருதி கொப்பளித்திட அந்தத் திட்டத்தால் தமிழகத்திற்கு ஏற்படும் நன்மைகளையெல்லாம் விவரித்து -

- சேது சமுத்திரத் திட்டம் சிறப்பான திட்டம்!
- சீர் மிகுத் திட்டம்!
- தமிழ்நாட்டை செழிக்க வைக்கும் திட்டம்!
- தரணி போற்றும் திட்டம்!
- எந்தத் தடை வந்தாலும், அதனை எதிர்த்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்!

என்று தேர்தல் அறிக்கையில் வெளியிட்டவர் இதே ஜெயலலிதாதான்!

அடுத்து, 2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது அதற்கும் ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். வெளியிட்டவர் வேறு யாருமல்ல! இதே ஜெயலலிதா தான்! அந்தத் தேர்தல் அறிக்கையிலும் அழுத்தந்திருத்தமாக சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கெக்கலி கொட்டினார்.

அதற்கடுத்து, 2009இல் மற்றொரு தேர்தல். நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல். அதற்காகவும் ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் பற்றிய பேச்சே இல்லை. இல்லாதது மாத்திரமல்ல; "அ.தி.மு.க. அணியின் சார்பாக ஒரு ஆட்சி வந்தால் சேது சமுத்திரத் திட்டத்தை ரத்து செய்வோம்" என்று மண்ணுக்கும் விண்ணுக்குமாக நின்று, மமதை பொங்க கர்ச்சனை செய்தார்.

திட்டத்திற்காக பாடுபடுவோம் என்று ஒரு தேர்தல் அறிக்கை!

அதே திட்டத்தை நாங்கள் ஆதரிக்கும் கட்சி மத்தியிலே ஆட்சிக்கு வந்தால் ரத்து செய்வோம் என்று இன்னொரு தேர்தல் அறிக்கை!

இந்த இரண்டையும் படித்து விட்டு தமிழ்நாட்டு மக்கள் என்ன நினைத்தார்களோ, தெரியாது. ஆனால் அவரது அடிவருடிகளாக இருக்கும் ஆழ்வார்களின் கூட்டம் "அம்மா என்றால் அம்மா தான்" - 2,467 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சேது சமுத்திர திட்டத்தையே - அறுபது சதவிகிதத்திற்கு மேலான பணி முற்றுப் பெற்றுள்ள நிலையில் - அதை ரத்து செய்வோம் என்று கூறிய தைரியத்தை "உச்சக்கட்ட அதிசயம்" என்று சொல்லாமல் வேறென்ன சொல்வதென வியந்து நின்றார்கள்; மகிழ்ந்து நின்றார்கள்; தலை குனிந்து நின்றார்கள்!

அண்மையில் இந்த அம்மையாரின் சொல்லும் செயலும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதுவரையில் மௌனமாக இருந்து அங்கே நடந்த கொடுமைகளைப் பார்த்து ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தாரே; அப்படியே தொடர்ந்து இருந்து தொலைக்காமல், இப்போது நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டல்லவா நீட்டி முழக்குகிறார்?

இலங்கையிலே நடந்த அப்பாவித் தமிழர்களின் படுகொலையும், சிங்கள ராணுவத்தின் தாக்குதலால் உருண்ட தமிழர் தலைகளும் - அப்போதெல்லாம் இந்த அம்மையாருக்கு இலங்கைத் தமிழர்களை எதிர்த்து நடத்தும் யுத்தமாக தெரியவில்லை! அது பற்றி என்ன சொன்னார்? விடுதலைப் புலிகளை எதிர்த்துத்தான் ராஜபக்சே போர் நடத்துகிறார், ஆனால் தமிழர்களை எதிர்த்து என்று இங்கே உள்ள அரசியல் கட்சிகள் சொல்வதை ஏற்க முடியாது என்றல்லவா ஜெயலலிதா வாய்ப் பறை கொட்டினார். அப்போது ஏடுகளில் வெளிவந்த அந்த வாசகங்களை அந்த ஏடுகள் எல்லாம் இப்போது மறைக்க முடியுமா? அதுமட்டுமல்ல, "ஒரு யுத்தம் நடந்தால், அதிலே அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்" என்று ஓங்கியடித்து, ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பேசியவர் - தேர்தல் நெருங்கி விட்டதும் - திரையை விலக்கிக் கொண்டு தெருவுக்கு வந்து "நானும் தமிழ் ஈழம் கேட்கிறேன்" என்று அதற்காக கவசமணிந்து, கட்கம் ஏந்தி, களம் புகுவோம் வாரீர் என்று முரசு கொட்டினாரே; இப்போது எங்கே புகுந்துள்ளார்? கொடை நாட்டு குகைக்குள் ஒளிந்து கொண்டல்லவா எனக்கு சவால் விடுகிறார்.

"தமிழ் இனத் தலைவர் என்று தன்னைத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழக அரசின் முதலமைச்சர் கருணாநிதிக்கு தமிழர்களைப் பற்றி அறவே கவலை கிடையாது; இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு, அவர்களுக்குச் செய்ய வேண்டிய நிவாரண உதவி ஆகியவற்றை அறிந்து கொள்ளும் அக்கறை கருணாநிதிக்கு இல்லை" - இப்படி கொக்கரித்திருக்கிறார், வக்கரித்து அறிக்கை விடுத்துள்ள அந்த வனிதாமணி!

உடன்பிறப்பே, இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரண உதவி பற்றி எனக்கு அக்கறை இல்லை என்று சொல்கிற ஜெயலலிதாவுக்கும் அவரை இன்னமும் நம்புகிற அ.தி.மு.க. தோழர்களுக்கும் இதோ நினைவுபடுத்துகிறேன்.

நிவாரண உதவிகளுக்காக தமிழக அரசின் சார்பில் நான் நிதி கேட்டு, தமிழக மக்கள் உதவிய தொகை 50 கோடி ரூபாய்க்கு மேல்! அந்தத் தொகையில் 25 கோடி ரூபாய்க்கு பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு உடை, உணவு, மருந்து போன்ற பொருள்களை வாங்கி, செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டு, அவைகள் முறையாக விநியோகிக்கப்பட்ட

செய்தியை மத்திய அரசின் வாயிலாக நாம் அதனைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். பொருள்கள் வாங்கியது போக மீதமிருந்த 25 கோடி ரூபாயை மத்திய அரசின் மூலமாக இலங்கைத் தமிழர்களின் மறு வாழ்வுக்காகவே அனுப்பி வைப்பதாகவும் உறுதியளித்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, மத்தியில் உள்ள தி.மு. கழக அமைச்சர்களும், தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருமதி சோனியா காந்தி அம்மையாரையும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கான பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றும், அவர்களுக்குக் கொடுக்கின்ற நிவாரணத் தொகை அதிகப்படுத்தப்பட வேண்டு மென்றும் என் சார்பில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நானும் தொடர்ந்து கடிதங்கள் மூலமாகவும், தந்திகள் வாயிலாகவும் வேண்டுகோள் அனுப்பிக் கொண்டேயிருக்கிறேன். அவை களையும் கவனித்து ஆவன செய்வோம் என்று அம்மையார் திருமதி சோனியா காந்தியும், பிரதமர் மன்மோகன் சிங்கும் உறுதியளித்து வருகிறார்கள். நமது தொடர் வேண்டுகோள்களின் காரணமாகத் தான் மத்திய அரசு இலங்கைத் தமிழர்களின் புனர் வாழ்விற்காக இந்திய அரசின் சார்பில் 500 கோடி ரூபாய் நிதியுதவியளிக்க முன்வந்து, அதற்காக நாம் நன்றியும் தெரிவித்திருக்கிறோம்.

ஆனால் இங்கேயுள்ள ஜெயலலிதா "கருணாநிதி, இலங்கைத் தமிழர்களைப் பற்றி வாய் திறக்க மாட்டேன் என்கிறார்" என்று ஒரு வடிகட்டிய பொய்யை தன்னுடைய அறிக்கையின் வாசகமாக ஆக்கியிருக்கிறார். பிரபாகரனை கைது செய்து, இந்தியாவிற்குக் கொண்டு வர வேண்டுமென்றும், அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் சட்டமன்றத்திலே தீர்மானத்தை முன்மொழிந்தவரே இதே ஜெயலலிதாதான். அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தமிழக அரசின் சார்பில் இலங்கைப் பிரச்சினைக்காக சென்னை தலைமைச் செயலகத்திலே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்திய போதும், மகத்தான மனித சங்கிலி ஒன்றை நடத்தியபோதும், டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்த போதும்; அதையெல்லாம் புறக்கணித்து விட்டு தேர்தல் நேரத்தில் மட்டும் இலங்கைத் தமிழர்களுக்காக அக்கறை கொண்டவர் போல் செயல்பட்டதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஆனால், இதில் உலக அதிசயம் என்ன வென்றால், அவரே நம்ப முடியாத ஒரு பொய்யை அவரே எழுதி, அவரே அறிக்கை யாக வெளியிட்டிருப்பதுதான்! அதைவிட உலக அதிசயம் என்னவென்றால் அதை இங்குள்ள சிலர் நம்பி இலங்கைத் தமிழர்களைப் பற்றி ஜெயலலிதாவுக்குத்தான் அக்கறை என்று கூறுவார்களேயானால், அதுதான் உலக அதிசயம் மட்டுமல்ல, உலக மகா அதிசயமும் ஆகும்!

அன்புள்ள,

மு.க.

11-6-2009

3408. அதைப் படித்து ஆறுதல் கொள்க!

உடன்பிறப்பே,

கோடைவாசஸ்தலமான, கொடை நாடு எஸ்டேட்டில் போய் மாதக் கணக்கில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அன்றாடம் அறிக்கை விட்டு, அதன் மூலமாக தன் கட்சியின் அரசியலை நடத்தி விடலாம் என்று எண்ணிக் கொண்டு நாள் தவறினாலும் தவறாமல் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா! தமிழ்நாட்டு மக்கள் அதைப்பற்றி யாரும் எந்தக் கவலையும் படுவதில்லை. அவர்கள் கவலைப்படுகிறார்களா என்று அறிக்கை விடுபவரும் கவலைப்படுவதில்லை. ஏதோ தன் பெயர் ஏட்டிலே வந்தாலே "ஜென்ம சாபல்யம்" அடைந்து விட்டதாகக் கருதிக் கொண்டு அறிக்கை விடுகிறார்.

அந்த அறிக்கைகள் குறித்து நாமும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லையென்ற போதிலும், ஜனநாயகத்தில் பிரதான எதிர்க் கட்சியின் தலைவர் சாற்றிய குற்றச்சாட்டிற்கு ஒரு முதலமைச்சர் பதில் கூற வேண்டாமா என்று ஒரு சிலராவது எண்ணக் கூடுமல்லவா? அதற்காகவே இந்தக் கடித வாயிலான விளக்கம்; உனக்கு!

"கச்சத் தீவுக்காக தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கருணாநிதி பெரிய அளவில் ஏன் போராட்டம் நடத்தவில்லை? சட்ட மன்றப் பேரவையில் ஏன் தீர்மானம் கொண்டு வரவில்லை?" என்பதுதான் இன்றையதினம் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையிலே முக்கியமான கேள்வி.

தி.மு.கழகம் ஏன் போராடவில்லை என்று கேட்கும் ஜெயலலிதாவை திரும்பக் கேட்கிறேன். 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு முதல்வராக வந்ததும் 15-8-1991 அன்று சென்னை கோட்டையிலே கொடியேற்றி வைத்து விட்டு, கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்று முழங்கி அனைத்து ஏடுகளிலும்

கொட்டை எழுத்துக்களிலே அது வெளி வந்ததே, அதற்குப் பிறகு ஐந்தாண்டு காலமும், அதற்குப் பின்னர் 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலமுமாக பத்தாண்டு காலம் முதல் அமைச்சராக ஜெயலலிதா இருந்தாரே, அப்போது ஏன் அவர் கச்சை கட்டிக் கொண்டு கச்சத் தீவுக்காக போராட்டம் நடத்தவில்லை? அப்படி போராட்டம் எதுவும் அவர் நடத்தாத நிலையில் நம்மைப் பார்த்து ஏன் போராட்டம் நடத்தவில்லை என்று கேட்க அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

கச்சத் தீவை இந்தியா இலங்கைக்கு தாரை வார்க்கப் போகிறது என்பது கருணாநிதிக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும் அதை ஏன் எதிர்க்கவில்லை என்கிறார் ஜெயலலிதா! கச்சத் தீவை இலங்கைக்கு இந்தியா வழங்கப் போகின்ற தகவல், அதற்கு முன்பு பல ஆண்டுகளாக செய்தி அளவிலேதான் இருந்தது. இன்னும் ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்றால் தமிழகச் சட்டமன்றத்தில் 29-3-1972 அன்று கச்சத் தீவு பற்றிய ஒரு கேள்வியே இடம் பெற்று, அதற்கு நான் பதிலும் கூறியிருக்கிறேன். அந்தப் பதிலில் "நாம் கச்சத் தீவு குறித்த நியாயமான விவகாரங்களை மத்திய அரசிற்கு தெரிவித்திருக்கிறோம். கச்சத் தீவு பிரச்சினை இந்திய அரசு தலையிட்டு சுமூகமாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை" என்றும் தெரிவித்திருக்கிறேன்.

அதனைத் தொடர்ந்து மதுரையில் ஒரு நிகழ்ச்சியில் நான் பேசும்போது, "கச்சத் தீவு தமிழ்நாட்டிற்கே சொந்தம், இந்தியாவிற்கே சொந்தம் என்ற ஆதாரங்களை எல்லாம் (அன்றைய) பிரதமருக்கு எடுத்து வைத்தேன். எதையும் லட்சியம் செய்யாமல் என்னை அழைத்து இதுபற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல், கச்சத் தீவை இலங்கைக்கு தானம் செய்திருக்கிறார் பிரதமர்" என்றும், தொடர்ந்து திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் நான் பேசும்போது, "கச்சத் தீவு தமிழகத்தின் உரிமை. கச்சத் தீவு பிரச்சினையில் நாட்டில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள். அதைக் கேளாமல் இலங்கைக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு, ஒப்பந்தம் ஆகிவிட்ட செய்தியை உலகுக்கு அறிவிக்கிறார்கள். நாம் பத்திரிகையைப் பார்த்து தெரிந்து கொள்கிறோம்" என்றும் பேசியிருக்கிறேன்.

சட்டசபையில் கருணாநிதி ஏன் தீர்மானம் கொண்டு வரவில்லை என்று ஜெயலலிதா கேட்டிருக்கிறார். 21-8-

1974 அன்று சட்டசபையில் நானே முன்மொழிந்த தீர்மானம் - "இந்தியாவுக்கு சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவு பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்பதாகும். ஆனால் இப்படி தீர்மானம் நிறைவேற்றியதை தெரிந்து கொண்டு, மத்திய அரசு கச்சத் தீவை இலங்கைக்கு கொடுப்பதற்கு முன்பே ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை என்று இப்போது கேட்கிறார்.

அன்றைய தினம் கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்கான தீர்மானத்தை ஆளுங்கட்சியான தி.மு.க. கொண்டு வந்தபோது எதிர்க் கட்சியாக இருந்த அ.தி.மு.க. அதனை ஆதரிக்காமல் வெளிநடப்பு செய்தது என்பதும் குறிப்பிடத் தக்கது.

அதுமட்டுமல்ல; 1974 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதி திடீரென்று மத்திய அரசினால் கச்சத் தீவு பற்றிய அறிவிப்பு வந்தது. உடனடியாக அதே ஆண்டு ஜூன் 29 ஆம் தேதியன்றே சென்னை தலைமைச் செயலகத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து அவர்களோடு பேசி, அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், அன்றைய பிரதமருக்கு நான் எழுதிய கடிதம் வருமாறு :-

Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Sri Lanka Agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the unanimous decision contained in the Resolution and take appropriate action?

உடன்பிறப்பே, "நல்ல வகை மீன் கிடைக்கும் என்று எண்ணுகின்ற சில பேராசை கொண்ட மீனவ மக்களால், அவர்கள்

தங்களுடைய உயிரை இழக்க நேரிடுகிறது" என்று நான் பேரவையில் கூறியதை எடுத்துக்காட்டி, மீனவ மக்களை பேராசை கொண்டவர்கள் என்று நான் கூறிவிட்டேன் என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

நல்ல வகை மீன்கள் இந்திய பவுண்டரி லைனுக்கு அப்பால் தான் கிடைக்கும் என்றும், அதனால் மீனவர்கள் அந்த இடங்களுக்கு மீன் பிடிக்கச் செல்லுகிறார்கள் என்றும் அந்தக் கருத்தைப் பேசியதே 20-4-1992 அன்று இதே சட்டசபையில் ஜெயலலிதாதான். அவரே அதைப் பேசிவிட்டு, அதை நான் எடுத்துக்காட்டியதற்காக எனக்கு கண்டனம் தெரிவிப்பேன் என்று அறிக்கை விட்டிருப்பது நல்ல கோமாளித்தனம். அதே நாள் பேச்சில்தான் ஜெயலலிதா "கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்றும் சட்டப் பேரவையில் கூறியிருக்கிறார்.

ஒரு முன்னாள் முதலமைச்சர், இந்நாள் முதலமைச்சரைப் பற்றி தன் அறிக்கையிலே அடுத்து கூறும்போது, "திருவாரூரில் இருந்து திருட்டு ரயில் ஏறி சென்னைக்கு வந்த கருணாநிதியின் குடும்பம்" என்று எழுதியிருக்கிறார் என்றால், அவருடைய தகுதியைப் பற்றி தமிழ் நாட்டு மக்கள் தான் எடை போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அவரது இந்த தரத்திலான வார்த்தைகளுக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை என்றபோதிலும், திரும்பத் திரும்ப அவர் இந்தத் தொடரைப் பயன்படுத்தி வருவதால், இவர் எதை "மூலதனமாக" வைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார்? எப்படி இன்று கொட நாட்டில் தங்கியிருக்கிறார்? எங்கிருந்து வந்தது இந்தச் சொத்து என்றெல்லாம் திருப்பி கேள்வி யெழுப்ப நமக்குத் தெரியாதா?

கச்சத் தீவில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் ஏடுகளிலே செய்தி வந்துள்ளதாக ஜெயலலிதா அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்தத் தகவலை இலங்கை தூதுவரகமே மறுத்து அப்படி எந்தக் கண்காணிப்பு கோபுரம் அமைக்கும் பணிகளும் நடைபெறவில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்து, அது ஏடுகளில் வெளி வந்ததைக் கூடப் படிக்காமல் - ஜெயலலிதா

அறிக்கை விடுத்திருப்பது அவருடைய அறியாமையைத் தான் எடுத்துக் காட்டுகின்றது.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது பிரதமருக்கு இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவு கெடக் கூடாது என்பதற்காகத்தான் கச்சத் தீவு இலங்கைக்கு மத்திய அரசினால் தரப்பட்டுள்ளது என்று அவரே எழுதிய கடித வாசகங்களைச் சுட்டிக் காட்டியதற்கு எந்த விளக்கத்தையும் ஜெயலலிதாவினால் அவரது அறிக்கையிலே தர இயலவில்லை என்பதையும் மறந்துவிட முடியாது. அது மாத்திரமல்ல, 23-7-2003 அன்று ஜெயலலிதா அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே நல்லுறவுப் பேணவும், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் உரிமைகளைக் காப்பாற்றவும் உள்ள ஒரே வழி என்று குறிப்பிட்டு மேலும் எழுதியிருக்கிறார். "The best possible solution is to get the island of Katcha Theevu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri Lanka's Sovereignty over Katcha Theevu could be upheld at the same time." (அதாவது கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக் காய வைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தர குத்தகைக்கு பெறலாம்; அதே நேரத்தில் கச்சத் தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக் கொள்ளலாம்.) இப்படி யெல்லாம் அன்றைக்கு எழுதியவர்தான் இன்றைக்கு நம்மைப் பார்த்து கேள்விக்கணை தொடுக்கிறார். நம்மைப் பார்த்து கேள்வி கேட்கும் ஜெயலலிதா நேற்றையதினம் நான் அவையிலே கச்சத் தீவு பிரச்சினைக்காக தமிழக அரசின் சார்பில் தீர்மானம் கொண்டு வந்தால், அதனை ஆதரிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் தயாரா என்று கேட்டதற்கு அக்கட்சியினர் எந்தப் பதிலும் சொல்லவில்லை என்பதிலிருந்தே, அவருக்கு கச்சத் தீவு பிரச்சினை தீர வேண்டும் என்பதைவிட ஆளுங்கட்சியை எதிர்க்க வேண்டும் என்பதிலேதான் அக்கறை என்பது புரிகிறதல்லவா?

கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்று 15-8-1991 அன்று ஜெயலலிதா சூளுரைத்தது - அதற்குப் பிறகு தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் திடீரென்று ராஜபக்ஷே விற்கு எதிராக மாறி, தமிழ் ஈழத்தை மீட்டே தீருவேன் என்று

கர்ச்சனை செய்தது எல்லாமே வெறும் பிதற்றல், மாய்மாலம், மக்களை ஏமாற்ற ஜெயலலிதா ஆடிய கபட நாடகம் என்பதை "மனோகரா" கதையிலே வருவது போல அவரது மனச்சாட்சியே கேசரி வர்மனாக மாறி, வசந்த சேனையை கழுத்தை நெரிப்பது போன்ற காட்சியாகவே தோன்றுகிறது.

தன்னை மறந்து ஜெயலலிதா தனது அறிக்கையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார். "கச்சத் தீவு பிரச்சினை என்பது மற்றொரு நாட்டுடனான பிரச்சினை. அதை மீட்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. மாநில முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் இருந்திருந்தால் அன்றைக்கே கச்சத் தீவு மீட்கப்பட்டிருக்கும்" என்று அவரே தனது அறிக்கையில் தன்னையும் மறந்து ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறார். இப்படி தன்னை மறந்து பல நேரங்களில் உளறிக் கொட்டுவதும், அந்த நேரங்களில் உண்மைகள் வெளிவந்து விடுவதும் ஜெயலலிதாவின் வாழ்க்கையில் வாடிக்கையாக நடைபெறுகின்ற ஒன்று. எனவே அவரது அறிக்கைக்கான பதிலை மேலும் வளர்த்தாமல், "திருட்டு ரயில்" போன்ற அவரது தரக்குறைவான வார்த்தைகளால் உடன்பிறப்பே, உனக்கும் மற்ற உடன்பிறப்புகளுக்கும் கொதிப்பு, கோபம் வருமேயானால், அதனை அடக்கிக் கொள்ள ஏற்கெனவே முன்னாள் பேரவைத் தலைவர், தம்பி காளிமுத்து தயாரித்து வெளியிட்டுள்ள அம்மையாரைப் பற்றிய "அகராதி பட்டியல்" ஒன்று இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்து ஆறுதல் கொள்ள வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-6-2009

3409. பட்டினத்தார் அப்பொழுதே பாடியிருக்கிறாரே!

உடன்பிறப்பே,

"டாஸ்மாக்" நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் 36 ஆயிரம் பேரின் கோரிக்கைகளை வலியுறுத்தி அ.தி.மு.க. வின் தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் 27-7-2009 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாநிலம் முழுவதும் உள்ள டாஸ்மாக் தொழிலாளர்கள் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் கொடைநாடு எஸ்டேட்டில் இருந்து விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவித்துள்ளார்.

மாநிலம் தழுவிய அளவிலே டாஸ்மாக் பணியாளர்கள் பணியாற்றும்போது - ஒரு மாவட்டத் தலைநகரிலே மட்டுமே ஜெயலலிதா போராட்டத்தை அறிவித்துள்ளதன் காரணம் தெரியவில்லை.

அந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வதில் தி.மு.க. அரசு தொடர்ந்து பாரபட்சம் காட்டுவதாக ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். அந்தத் தொழிலாளர்களை ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோதே ஏன் பணி நிரந்தரம் செய்யவில்லை என்ற கேள்விக்கு அவருடைய பதில் என்ன?

ஜெயலலிதா ஆட்சியில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்கு ஊதியம் உயர்த்தப்படவில்லை என்கிறார் ஜெயலலிதா. முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைக்க முயலுகிறார். கடந்த நான்கு நாட்களுக்கு முன்னால் 20-7-2009 அன்று தமிழகச் சட்டப் பேரவையிலே டாஸ்மாக் பணியாளர்களுக்கு அவர்களின் ஊதியத்தை உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைகளில் மேற்பார்வையாளர்களாக 8,061 பேரும், விற்பனையாளர்களாக 17,362 பேரும், "பார்" உதவியாளர்களாக 4,050 பேரும் பணியாற்றுகிறார்கள். கழக அரசு 2006ஆம் ஆண்டு மே திங்களில் பதவியேற்ற பிறகு, 2007ஆம் ஆண்டில் மேற்பார்வையாளர்களின் தொகுப்பூதியத்தை 3000 ரூபாயிலிருந்து 3500 ரூபாயாகவும் - விற்பனையாளர்களின் தொகுப்பூதியத்தை 2000 ரூபாயிலிருந்து 2400 ரூபாயாகவும் - "பார்" உதவியாளர்களின் தொகுப்பூதியத்தை 1500 ரூபாயிலிருந்து 1800 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு இந்த அளவிற்கு தொகுப்பூதியத்தை உயர்த்திய போதிலும், தற்போது இந்தத் தொகுப்பூதியத்தை மேலும் உயர்த்த வேண்டுமென்று டாஸ்மாக் பணியாளர்கள் கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கையையும் ஏற்று கடந்த 20ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் அறிவிக்கும்போது - மேற்பார்வையாளர்களின் தொகுப்பூதியத்தை 4000 ரூபாய் என்றும் - விற்பனையாளர்களின் தொகுப்பூதியத்தை 2800 ரூபாய் என்றும் - "பார்" உதவியாளர்களின் தொகுப்பூதியத்தை 2100 ரூபாய் என்றும் உயர்த்தியதோடு - இந்த ஊதிய உயர்வு 1-8-2009 முதல் அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை தெரிந்து கொண்டோ அல்லது தெரியாமலோ ஜெயலலிதா அவர்கள் அவருடைய ஆட்சியிலே பணியிலே சேர்க்கப்பட்டார்கள் என்ற காரணத்தால் கழக அரசு பாரபட்சமாக நடந்து கொள்வதாகக் கூறி ஆர்ப்பாட்டம் அறிவித்திருக்கிறார். அது சரிதானா என்பதை அந்த டாஸ்மாக் பணியாளர்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமாத்திரமல்ல, 2006ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த இந்த அரசு, 2007ஆம் ஆண்டு ஒரு முறை ஊதிய உயர்வும், 2009ஆம் ஆண்டு ஒரு முறை ஊதிய உயர்வும் அளித்திருக்கிறது என்பதை பொது மக்கள் எண்ணிப் பார்த்து, அந்தப் பணியாளர்கள் அவ்வாறு கோரிக்கை வைப்பது முறைதானா என்பதையும் சீர்தூக்கிப் பார்த்திட கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், டாஸ்மாக் நிறுவனத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதம் போனசும், 1.67 சதவிகிதம் கருணைத் தொகையும் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 17-10-2006 அன்று வழங்கப்பட்டன. இப்பணியாளர்கள் தங்களுக்கு கூடுதல் போனஸ்

வழங்க வேண்டுமென அரசிடம் கோரிக்கை வைத்ததை அடுத்து, அவர்களது கோரிக்கையை கழக அரசு மிகுந்த பரிவோடு பரிசீலித்து மேலும் 5 சதவிகிதம் கூடுதலாக கருணைத் தொகை வழங்கிடவும் 27-11-2006 அன்று ஆணை பிறப்பித்தது.

மீண்டும் 2007-2008ஆம் ஆண்டிலிருந்து போனஸ் மற்றும் கருணைத் தொகை இருபது சதவிகிதமாக உயர்த்தப்பட்டதும் கழக அரசிலேதான்.

மேலும் பணியிலே இருக்கும்போது இறக்கும் இந்தப் பணியாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப நலத்திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபாய் என்பது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயாக 3-7-2007இல் உயர்த்தப்பட்டது.

தனியார்களால் எடுத்து நடத்தப்படாத மதுக் கூடங்களில், தின்பண்டம் மற்றும் காலி பாட்டில்கள் சேகரிப்பதற்கு, "டாஸ்மாக்" மேற்பார்வையாளர்கள் செலுத்தி வந்த மாதக் கட்டணம் கடையின் விற்பனையில் 2.5 சதவிகிதம் என்றிருந்ததை 1.5 சதவிகிதமாகக் குறைத்து - அதன் மூலமாக மாதம் ஒன்றுக்கு அந்த மேற்பார்வையாளர்கள் ஆயிரம் ரூபாய் அளவுக்கு பயனடைய வழி வகை செய்யப்பட்டதும் கழக ஆட்சியிலே தான்.

மேற்பார்வையாளர்களிடமிருந்து 50 ஆயிரம் ரூபாயும் - விற்பனையாளர்களிடமிருந்து 15 ஆயிரம் ரூபாயும் - மதுக்கூட உதவியாளர்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயும் காப்புத் தொகையாக பெறப்பட்டது. அந்தக் காப்பு தொகைக்கு வட்டி தரவேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்று - அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு மேற்பார்வையாளர்களுக்கு 1750 ரூபாயும் - விற்பனையாளர்களுக்கு 525 ரூபாயும் - மதுக்கூட உதவியாளர்களுக்கு 350 ரூபாயும் கிடைக்க கழக அரசு ஒப்புக் கொண்டு வழங்கி வருகிறது.

டாஸ்மாக் பணியாளர்களின் வேலை நேரம் ஜெயலலிதா ஆட்சியிலே நாள் ஒன்றுக்கு 16 மணி நேரம் என்றிருந்ததை தற்போது கழக ஆட்சியில் 4 மணி நேரம் குறைத்து நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்தால் போதும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் நியமனம் பெற்றவர்கள் என்று கழக ஆட்சி நினைத்திருக்குமேயானால் - இத்தனை சலுகைகளையும் அளித்திருக்குமா என்பதை ஒருக்கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஜெயலலிதா தனது அறிக்கையிலே அவருடைய ஆட்சியிலே அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையை நிறுத்திவிட்டதாகச் சொல்லியிருக்கிறார். அதுவும் விவரம் தெரியாமல் எழுதப்பட்ட உளறல் ஆகும். ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊக்கத் தொகையை விட அதிகமாக மேலும் பரவலாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. எனவே எதையும் சீர்தூக்கிப் பார்க்காமல் - என்ன நடக்கிறது என்பதையே தெரிந்து கொள்ளாமல் - பொறுப்பற்ற தன்மையிலே ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்த ஜெயலலிதா முற்படுகிறார் என்பதுதான் உண்மையே தவிர வேறல்ல.

ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் நியமனம் செய்தவர்கள் என்பதற்காக அவர்களிடம் பாரபட்சம் காட்டுவதாக அறிக்கை விடுத்துள்ளார். ஆனால் ஒரு உதாரணம் கூற வேண்டுமேயானால், தி.மு. கழக ஆட்சியிலே பத்தாயிரம் பேர் சாலைப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் அத்தனை பேரையும் அவர்கள் தி.மு. கழக ஆட்சியிலே நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காகவே வீட்டிற்கு அனுப்பி வைத்த பெருமைக்குரிய பெருமாட்டிதான் ஜெயலலிதா.

அது போலவே மக்கள் நலப் பணியாளர்களாக தி.மு. கழக ஆட்சியிலே நியமனம் பெற்றிருந்த 13 ஆயிரம் பேரையும் - ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் பணியிலிருந்து வீட்டிற்கு அனுப்பினார். இவ்வாறு பாரபட்சம் என்பதற்கே அடையாளமாக ஆட்சி நடத்திய ஜெயலலிதா, தற்போது தி.மு. கழக ஆட்சி பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்று அறிக்கை விடுவதைப் பார்த்து அந்த டாஸ்மாக் நிறுவனத்திலே பணிபுரியும் அலுவலர்களே சிரிப்பார்கள், எள்ளி நகையாடுவார்கள் என்பதில் சிறிதும் அய்யமில்லை.

ஒரு சந்தேகம்; ஒரு வேளை, இவரது கூட்டாளியான டாக்டர் ராமதாஸ் அவர்களின் கருத்தை ஏற்று; தமிழ்நாட்டில் "மதுவிலக்கு சட்டத்தை" மீண்டும் கொண்டு வந்து, எல்லா மதுக்கடைகளையும்

இந்த "மைனாரிட்டி அரசு" மூடி விட்டால் அப்போது வேலையிலிருந்த தொழிலாளர்க்கு வேலை கொடுக்க "மதுக்கடைகளைத் திறந்திடுக!" என்று திருமதி ஜெயலலிதா அம்மையார் ஒரு போராட்டத்தை நடத்தக் கூடுமல்லவா? அப்போது தன்னால் நியமிக்கப்பட்ட டாஸ்மாக் தொழிலாளர்களை பழிவாங்குவதாக ஒரு குற்றச் சாட்டையும் கூறக்கூடும் அல்லவா?

என் செய்வது; ஆகாயக் கோட்டை கட்டி; இந்தியப் பிரதமராகும் வாய்ப்பே வருகிறது என்று ஆரூடக்காரர்கள் சொன்னதை நம்பி, டெல்லி மாநகரில் வீடெல்லாம் வாங்கி; தோழியை அனுப்பி அலங்காரமும் செய்து; கடைசியில் தோல்வியில் துவண்டு போனவருக்கு - அந்தத் தோல்வியினால் உள்ளத்தில் ஏற்பட்ட நமைச்சல் இப்படியெல்லாம் சொறிந்து கொள்ளச் செய்கிறது. சொறிந்து கொள்ள, சொறிந்து கொள்ள எரிச்சல்தான் அதிகமாகும் - ஆனால் உள்ளமெல்லாம் புண்பட்டு உதிரம் கொட்டும். பாவம்; "தன் வினை தன்னைச் சுடும்" என்று பட்டினத்தார் அப்பொழுதே பாடியிருக்கிறாரே!

அன்புள்ள,

மு.க.

27-7-2009

3410. ஆனந்த விகடன் அன்றும் இன்றும்!

உடன்பிறப்பே,

அருகில் இருந்தும், தொலைவில் இருந்தும் உன்னைப் போன்ற உடன் பிறப்புகள் என் மீது அன்பைப் பொழிந்து கொண்டும் - "அண்ணனே, உனக்காக உயிரையே தரத் தயாராக இருக்கிறேன்" என்ற உறுதிமொழிகளை வழங்கிக் கொண்டும் - என் நாடி நரம்புகளில் பாசப் பெரு வெள்ளமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்போது - சில பார்ப்பன வார ஏடுகள் (எல்லா ஏடுகளும் அல்ல) என்னைக் கேலி செய்தும், என் எழுத்துக்களை இழிவுபடுத்தி விமர்சித்தும் - கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் என கான மயிலாட கண்டிருந்த வான்கோழி போல ஆடிப் பார்க்கும் அவலட்சணத்தின் அநாகரீகத்தின் உச்சமே அந்த ஏட்டாளர்களுக்கு மிச்சம்.

இதோ! என் துணைவி ஆம் - உன் அண்ணி தயாளு அம்மையாரைப் பற்றி கேலிச் சித்திரம் போடவும், பார்ப்பனீய பேனா தயங்கிடவில்லை என்பதற்கு அடையாளமாக 24-6-2009 தேதிய ஆனந்த விகடனில் வந்துள்ள "கன்னா பின்னா" கார்ட்டூன்களில் ஒன்றை உனக்குக் காட்டியிருக்கிறேன்.

உடன்பிறப்பே, அக்ரகாரத்துக்கு எவ்வளவு ஆணவம் பார்த்தாயா? நாமும் கார்ட்டூன் வரைந்திட அவா ஆத்துல ஒரு அம்மாமி கிடைக்காமலா போய்டுவா?

என்னிடத்தில் ஆழ்ந்த அன்பும் பற்றும் பாசமும் கொண்ட இளங்கவிஞர் தமிழ்தாசன் இந்தப் படங்கள் குறித்தே ஒரு கண்டனக் கடிதத்தை எனக்கெழுதி - அதே ஆனந்த விகடன் 25-4-1954இல் எழுதிய "மனோகரா" திரைப்பட விமர்சனத்தையும் - அந்த ஏட்டிலிருந்தே எடுத்து எனக்கு அனுப்பியுள்ளார். அதை நீ பார்ப்பதற்காக அப்படியே இந்தக் கடிதத்துடன் இணைத்திருக்கிறேன்.

மனோகரா – சினிமா விமர்சனம்.

“தாயைத் தெய்வமாகக் கொண்டாடும், அவளை வழிபட்டு வணங்கும் தமிழ்ப் பெருமரபிலே, ஒரு தமிழ் மகன் எத்தனை வீறுகொண்டு எழுந்தாலும், எப்பேர்ப்பட்ட எரிமலை போல் குமுறிக் கிளம்பினாலும், “தாய்” என்ற ஒரே ஒரு மந்திரச் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அடங்குவான்.

இந்த மகத்தான உண்மையை வற்புறுத்துகிறது “மனோகரா.”

மனோகரனைச் சங்கிலிகளால் கட்டிச் சபை நடுவே இழுத்து வரச் செய்து, வசந்தசேனையிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்கிறான் மன்னன். “என்ன குற்றம் செய்தேன், அரசே! பதில் சொல்லும்” என்று இடி முழக்கம் செய்த இளவரசன், சங்கிலிகளை அறுத்துக் கொண்டு கத்தியை ஓங்கியவாறு சண்டமாருதமென முன்னேறும் சமயம், “இனி இந்தச் சூறாவளியை யாரால் நிறுத்த முடியும்? தொலைந்து போனான் அரசன்!” என்று நாம் முடிவு கட்டும்போது, “என் மார்பிலே உன் கத்தியை முதலில் பாய்ச்சு! பிறகு என் சவத்தின் மீது நின்று கொண்டு உன் தந்தையுடன் சண்டை போடு!” என்று கூறுகிறாள் அந்தப் பதி விரதா ரத்னம்.

தாய்மையின் வெற்றி மனோகரனை அடக்குவதுடன் மட்டும் நின்று விடவில்லை. அவனை வீரனாக்கி, மாசற்ற மனம் படைத்தவனாகவும் ஆக்குகிறது.

மனோகரனைத் தூணிலே சங்கிலியால் கட்டியிருக்கிறது. சாட்டை கொண்டு அவனை அடிக்கிறான் ஒரு பாதகன். வசந்தசேனையும் அவள் ஆரம்பக் காதலனும் மனோகரனின் பச்சிளம் பாலகனை எடுத்துவரச் செய்து, அவன் கண்ணெதிரிலேயே கத்திக்கு பலியாக்க விழைகிறார்கள்.

எந்தக் கணவனை உத்தேசித்து இதுவரை பொறுமையை மேற்கொண்டாளோ, அவனே சிறையிலே விழுந்து விட்ட பின், பொறுமையைக் கைவிடும்படி மகனுக்கு ஆக்ஞை கொடுக்கிறாள் தாய்.

"மகனே, பொறுத்தது போதும்... பொங்கி யெழு!" என்று அவள் கூறியதும், எதிர்பார்த்தது நடைபெறுகிறது. சங்கிலி அறுகிறது; தாயின் துயர் துடைக்க, தாய் நாட்டை மீட்க, கொந்தளித்துக் கொண்டு பாய்கிறான் மனோகரன்.

தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலே போட்டா போட்டி! தர்மம் சளைத்து விட்டது போன்று காண்கிறது; அதர்மம் வலுவடைந்து வருவது போலும் தோன்றுகிறது. கடைசியில் தர்மம் வென்று, அதர்மம் புல் முளைத்துப் போகிறது.

சிவாஜி கணேசனும், கண்ணாம்பாவும் இவ்விரு பாத்திரங்களை ஏற்று, அவற்றிலே ஊறி, படமெங்கும் தங்கள் ஒளியைப் பரவி வீசி விட்டார்கள்.

வசந்த சேனை (டி.ஆர். ராஜகுமாரி) கல் நெஞ்சம் படைத்த வஞ்சகி. ஹாஸ்ய பாத்திரமாக வரும் வஸந்தன் (எஸ். ராதாகிருஷ்ணன்) பயித்தியக்காரன். அரசன் புருஷோத்தமன் (சதாசிவராவ்) நூற்றுக்கு நூறு மோகாந்த காரத்தில் மூழ்கிப் போனவன். இந்த பாகங்களை ஏற்று நடிப்பவர்கள் பிரதான பாத்திரங் களுடைய தரத்தைக் குன்றச் செய்யாமல் இருப்பது, இந்தப் படத்திலே ஒரு சிறந்த அம்சம்.

நல்ல கதையாக இருந்தால், ஜீவசக்தியுள்ள சம்பாஷணைகள் இருந்தால், பிரதான நடிகர்கள் நன்றாக நடித்து விட்டால், பொது ஜன அபிமானம் கிட்டாமல் போகாது என்பதற்கு "மனோகரா"வை எடுத்துக் காட்டலாம்."

இவ்வாறு விகடன் விமர்சனம்

எழுதியது 1954-ல்!

★★

உடன்பிறப்பே, அந்தத் தம்பியின் கடிதத்தின் முடிவில் அந்தத் தம்பியே எழுதியிருக்கிறார் - மனோகரா வசனங்களைப் புகழ்ந்து விட்டு அந்த வசனங்களை எழுதியுள்ள உங்கள் பெயரை அந்த ஏடு வெளியிடவே இல்லையே என்று ஆதங்கப்பட்டிருக்கிறார் தம்பி தமிழ்தாசன்!

தம்பி தமிழ்தாசனுக்குச் சொல்கிறேன், மற்ற தம்பிமார்களுக்கும் கவனமூட்டுகிறேன். அந்த ஏடு மனோகரா படத்துக்கு வசனம் எழுதிய என் பெயரையே மறைத்து விட்டது என்ற கோபம் எனக்கு இருந்திருந்தால் அதே ஏடு நடத்திய ஐம்பதாம் ஆண்டு பொன் விழாவுக்கு நான் சென்றிருப்பேனா? அதே போல, ஆனந்த விகடன் சார்பில் வெளியிட்ட "பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள குடியரசு தலைவராக இருந்த அப்துல் கலாம் அவர்கள் வர மறுத்த நிலையிலும்கூட, நான் அந்த விழாவிலே கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் அரசு நூலகங்களில் எல்லாம் அந்தப் புத்தகங்களை முப்பது இலட்சம் ரூபாய்க்கு வாங்கிட வேண்டுமென்றும் ஆணையிட்டிருப்பேனா?

அது மாத்திரமல்ல, ஆனந்த விகடன் ஆசிரியராக இருந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் மீது தமிழகச் சட்டமன்றத்தின் சார்பில், அ.தி.மு.க. ஆட்சியிலே நடவடிக்கை எடுத்து, அவரை கைது செய்யும் அளவிற்கு நிலைமை சென்ற நேரத்தில், அந்தச்செய்தியினை வெளியூருக்கு காரிலே சென்று கொண்டிருந்த நான் வானொலியிலே கேட்டு விட்டு - உடனடியாக திண்டிவனத்திலே என் காரை நிறுத்தச் சொல்லி - அந்தச் செய்கையைக் கண்டித்து அங்கிருந்தே அறிக்கை கொடுத்திருப்பேனா?

நானும் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில் பத்திரிகைகளிடம் பகைமை பாராட்டுவதில்லை. அப்படிப் பாராட்டும் பண்பு எனக்கு இல்லாமல் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்து கொண்டிருப்பேனா?

அன்புள்ள,

மு.க.

29-7-2009

3411. இடைத் தேர்தலில் இணையற்ற வெற்றியினை வழங்கிடுக!

உடன்பிறப்பே,

வருகின்ற ஆகஸ்ட் திங்கள் 18ஆம் நாள் பர்கூர், தொண்டாமுத்தூர், இளையான்குடி, திருவைகுண்டம், கம்பம் ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. கம்பம், தொண்டாமுத்தூர் ஆகிய தொகுதிகளில் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்த தம்பிகள் மு. கண்ணப்பன், கம்பம் ராமகிருஷ்ணன் ஆகிய இருவரும் ம.தி.மு.க. விலிருந்து விலகி தி.மு. கழகத்திலே தற்போது இணைந்த காரணத்தால், அவர்கள் பதவி விலகியதின் பேரில் அங்கே இடைத் தேர்தல் நடைபெறுகிறது. அதில் தொண்டாமுத்தூர் தொகுதியில் கடந்த முறை ம.தி.மு.க. வேட்பாளரை எதிர்த்து, நமது தோழமை அணியின் சார்பில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டதால், இந்த முறையும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டதின் பேரில் அந்தத் தொகுதியும், ஏற்கெனவே காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்த திருவைகுண்டம் தொகுதியும் இந்த முறை காங்கிரஸ் கட்சிக்கு பகிர்ந்து கொள்ளப்பட்டு, அவர்கள் அந்த இரண்டு தொகுதிகளிலும் ஏனைய மூன்று தொகுதிகளில் தி.மு.கழகமும் தற்போது போட்டியிடுகின்றன.

இதில் தொண்டாமுத்தூர் தொகுதியில் கடந்த முறை வெற்றி பெற்று ம.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவராகவே பொறுப் பேற்றிருந்து இந்த முறை கூட்டணி தர்மத்தை கருத்திலே கொண்டு, தான் போட்டியிடா விட்டாலும், காங்கிரஸ் கட்சிக்கு விட்டுக் கொடுக்க முன் வந்ததோடு முழு மூச்சோடு காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற அரும்பாடுபட்டு வரும் தம்பி மு. கண்ணப்பனை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் எப்போதும் போல கழகக் கண்மணிகள், முன்னணியினர், அமைச்சர்கள் எல்லாம் ஒவ்வொருவரும் தங்களுக்கு அருகேயுள்ள தொகுதிகளில் தாங்கள் பணியாற்றவிருப்பதாக அறிவித்து விட்டு, அந்தப் பணிகளிலே ஈடுபட்டு விட்டார்கள். குறிப்பாக துணை முதலமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் தன் மருத்துவ சோதனைக்காக லண்டன் செல்ல விருந்த பயணத்தையே ஒத்தி வைத்துவிட்டு, 4, 5 ஆகிய நாட்களில் திருவைகுண்டம் தொகுதியிலும் - 6, 7 ஆகிய நாட்களில் கம்பம் தொகுதியிலும் - 8, 9 ஆகிய நாட்களில் இளையான்குடி தொகுதியிலும் - 12, 13 ஆகிய நாட்களில் தொண்டாமுத்தூர் தொகுதியிலும் - 14, 15, 16 ஆகிய நாட்களில் பர்கூர் தொகுதியிலும் சுற்றுப் பயணத் திட்டங்களை வகுத்துக் கொண்டு தேர்தல் பணியாற்ற புறப்பட்டுவிட்டார்.

கழகப் பொதுச் செயலாளர், பேராசிரியர் அவர்கள் முதற்கட்டமாக 4-ந் தேதியன்று பர்கூர் தொகுதியிலும், 5ஆம் தேதியன்று தொண்டா முத்தூர் தொகுதியிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தேர்தல் பணியாற்றியுள்ளார்.

அதுபோலவே மத்திய அமைச்சர் தம்பி மு.க. அழகிரி தென் மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதோடு, ஓய்வின்றி கழக அணியின் வெற்றிக்காக உழைத்து வருகிறார். மேலும் கழக மகளிர் அணி உள்ளிட்ட பல்வேறு அணிகளின் சார்பில் பலரும் வாக்கு சேகரிப்பு பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, 10ஆம் தேதியன்று தொண்டா முத்தூர் தொகுதியிலும், 11ஆம் தேதி பர்கூர் தொகுதியிலும், 13ஆம் தேதி திருவைகுண்டம் தொகுதியிலும், 14ஆம் தேதி இளையான்குடி தொகுதியிலும், 15ஆம் தேதி கம்பம் தொகுதியிலும் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அதுபோலவே கழகத்தின் கலைத் துறையைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் தம்பி நெப்போலியன், இயக்குநர் பாக்கியராஜ், நடிகர் வாகை சந்திர சேகர், நகைச்சுவை நடிகர் குமரி முத்து ஆகியோரும் தொடர்ந்து இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

எல்லோரையும் சொல்லிவிட்டு, உன்னைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே என்று விழியால் நீ கேட்பது எனக்குத் தெரியாமல் இல்லை. தொடர்ந்து சட்டப் பேரவைத் தொடரில் கடந்த ஒரு மாத காலமாக கலந்து கொண்ட காரணத்தினால் என்னுடைய உடல் நிலை கருதியும், கழகத்தின் முதன்மையினர் நான் சுற்றுப் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்று கடுமையாக தடுத்த காரணத்தினாலும் எனக்குப் பிடிக்காமலே நான் இந்த கட்டாய ஓய்வினை மேற்கொள்ள வேண்டிய நெருக்கடிக்கு ஆளானேன்.

ஆனாலும் மனம் கேட்காத காரணத்தால், அண்ணன் இந்த முறை நம்மிடம் வாக்கு கேட்கவில்லையே என்ற மனவருத்தம் உன் மனதில் சிறிதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதாலும் நான் இந்தக் கடிதத்தின் மூலமாக எப்போதும்போல் உனக்கு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே - பிரதான எதிர்க் கட்சியின் தலைவியான திருமதி ஜெயலலிதா இந்த இடைத் தேர்தல்களையே புறக்கணிக்கப் போவதாக ஓர் அறிவிப்பினை என்ன காரணத்தினாலோ செய்தார். அது அவருடைய சொந்தக் கட்சியின் கருத்து என்ற முறையில் நாமும் அதைப் பற்றி பெரிதாக எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. இன்னும் கூடச் சொல்லப் போனால், ஜெயலலிதா மீண்டும் விடுத்த அறிக்கையில் -

நான்தான் தேர்தலைப் புறக்கணித்துவிட்டேனே, பிறகு ஏன் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்த வேண்டும், தி.மு.க.வும், காங்கிரசும் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டியதுதானே என்றும் கேள்வியை எழுப்பினார். ஆனாலும் ஜெயலலிதாவின் கருத்துக்களை இதுவரை அவருடன் தோழமைக் கட்சிகளாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்க மறுத்து - அவருடைய தயவு இன்றியே இடைத் தேர்தலில் போட்டி போடப் போவதாக அறிவித்து, தேர்தல் களத்திலும் குதித்து விட்டன.

இடைத்தேர்தல்களை புறக்கணிக்க ஜெயலலிதா பல்வேறு காரணங்களைத் தெரிவித்திருந்த போதிலும், அதிலே ஒன்று மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் தில்லுமுல்லு செய்ய முடியும் என்றும், அவற்றில் மோசடிகளை நிகழ்த்த முடியும் என 2000ஆம் ஆண்டிலிருந்து திரும்பத் திரும்ப வலியுறுத்தி

வந்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அவரது இந்தக் குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க வேண்டிய கடமை தேர்தலை நடத்துகின்ற தேர்தல் ஆணையத்திற்குத்தான் உண்டு.

2000 ஆம் ஆண்டிலிருந்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் தில்லுமுல்லு என்று கூறும் ஜெயலலிதாவைக் கேட்க விரும்புவ தெல்லாம் - 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததே, அது எப்படி? அதன் பிறகு நடைபெற்ற பல இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதே, அது எப்படி? அப்போதெல்லாம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தானே பயன்படுத்தப்பட்டது.

தேர்தலை நடத்துகின்ற தேர்தல் ஆணையம் எந்தக் கட்சியையும் சாராத ஒரு அமைப்பு. அவர்களால் ஒரு குறிப்பிட்ட தொகுதியிலே உள்ள மின்னணு இயந்திரத்தில் தில்லுமுல்லு செய்வதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் குற்றஞ்சாட்ட முயலுகிறார்கள்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் ஜெயலலிதா இதே குற்றச் சாட்டைக் கூறி, அதற்கு தலைமைத் தேர்தல் ஆணையம் - ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதத்தில் டெல்லிக்கு தேர்தல் ஆணையத்திற்கு வருமாறும், அங்கேயுள்ள எந்தவொரு இயந்திரத்தை வேண்டுமானாலும், எடுத்து அதிலே தில்லுமுல்லு செய்ய முடியும் என்பதை நிரூபிக்கத் தயாரா என்றும் கேட்டது. அப்போது ஜெயலலிதா அதற்கு பதிலும் சொல்லவில்லை, டெல்லிக்குச் செல்லவும் இல்லை.

கடந்த ஜூலை மாதம் மத்தியில் தேர்தல் கமிஷனர் திரு. எஸ்.ஒய். குரேஷி அவர்கள் சண்டிகார் வந்த போது, செய்தியாளர்களுக்கு அளித்த பதிலில், "ஓட்டுப் பதிவு இயந்திரங்கள் குறித்து அவ்வப்போது சிலர் புகார் கூறியும், சந்தேகம் எழுப்பியும் வருகிறார்கள். ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் உட்பட பல்வேறு கோர்ட்டுகளில் வழக்குகளும் தொடரப்படுகின்றன. ஆனால் ஓட்டுப் பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்ய முடியாது என்பது தான் உண்மை. சுமார் 25 வருட கடின உழைப்புக்கு பிறகு, ஓட்டுப் பதிவு இயந்திரங்கள் உருவாக்கப்பட்டன. அதன் செயல்பாடுகளில் தேர்தல் கமிஷனுக்கு முழு திருப்தி உள்ளது.

இந்த இயந்திரங்கள் 100 சதவீதம் முறைகேடு செய்ய முடியாதவை. இதை சுப்ரீம் கோர்ட்டே கூறியிருக்கிறது. இந்த இயந்திரங்கள், நாட்டுக்கே பெருமை என்று ஒரு ஐகோர்ட்டு கூறியிருக்கிறது. ஒரு பாராளுமன்ற கமிட்டி உட்பட, இரண்டு தொழில்நுட்ப குழுக்கள் ஓட்டுப் பதிவு இயந்திரங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளன. நமது ஓட்டுப் பதிவு இயந்திரங்கள் ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் ஓட்டுப் பதிவு இயந்திரங்களை விடச்சிறந்தவை.

இவற்றை உடைக்கலாமே தவிர, முறைகேடுகளை நிகழ்த்த முடியாது. எனவே இயந்திர ஓட்டுப் பதிவு முறையை கைவிட்டு, ஓட்டுச் சீட்டு முறையை கொண்டு வரும் பேச்சுக்கே இடமில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஆனால், இதற்குப் பிறகும் ஜெயலலிதா இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னதும், அவருடைய முக்கிய தோழமைக் கட்சித் தலைவர்களான டாக்டர் ராமதாசும், வைகோவும், ஆமாம், ஆமாம் தேர்தல் வாக்குப் பதிவு இயந்திரத்திலே கோளாறு, நாங்களும் தேர்தலை புறக்கணிக்கிறோம் என்று பஜனை பாடியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிற்கு உடனடியாக தேர்தல் ஆணையம் பா.ம.க. தலைவருக்கு எழுதிய கடிதத்தில், "மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் தில்லுமுல்லு என்று நீங்கள் கூறிவரும் குற்றச்சாட்டு மிகவும் கடுமையானது. எனவே, தாங்கள் டெல்லி வந்து தேர்தல் ஆணையம் பயன்படுத்துகிற இயந்திரங்களை பரிசோதிக்கலாம், தில்லுமுல்லு செய்ய முடியும் என்று நேரில் கண்டு நிரூபித்துக் காட்டலாம்" என்று தெரிவித்திருந்தது. தமிழகத்திலே உள்ள செய்தியாளர்களை அழைத்து தேர்தல் இயந்திரத்தில் தில்லுமுல்லு என்று பேட்டி கொடுக்கும், பா.ம.க. நிறுவனர் தேர்தல் ஆணையத்தின் அழைப்பினையேற்று டெல்லி சென்று நிரூபித்துக் காட்டியிருக்க வேண்டியதுதானே? ஏன் அவர் டெல்லி செல்லவில்லை? ஏன் வாக்குப் பதிவு இயந்திரத்தில் தில்லுமுல்லு என்பதை நிரூபித்துக் காட்டவில்லை?

தேர்தல் ஆணையம் பா.ம.க. தலைவருக்கு மட்டும் அழைப்பு அனுப்பவில்லை. தேர்தல் வாக்குப் பதிவு இயந்திரத்தில் கோளாறு என்று கூறிய எல்லாக் கட்சியினரையும் டெல்லிக்கு அழைத்து, நிரூபித்துக் காட்டச் சொல்லியிருந்ததே, அந்தச் செய்தி 4-8-2009 தேதிய ஏடுகளில் எல்லாம் வந்ததே? ஏன்

எந்தத் தலைவர்களும் செல்லவில்லை. தங்கள் குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்டவில்லை?

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு எதிராக பல உயர் நீதிமன்றங்களிலும், உச்ச நீதி மன்றங்களிலும் வழக்குகளும் தொடுக்கப்பட்டன. அந்த வழக்கில் உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பு, "இது தொடர்பாக தேர்தல் கமிஷனிடம் முறையிட வேண்டும்" என்பதுதான்.

ஜெயலலிதா போன்றவர்களின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து, தேர்தல் கமிஷன் செயலாளர், திரு. ஆர்.கே. ஸ்ரீவத்சவா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

"மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் செயல்பாடுகளில் சிறிதளவு கூட சந்தேகத்தின் நிழல் படிவதை அனுமதிக்கக் கூடாது என்ற கடுமையான பொறுப்பு தேர்தல் கமிஷனுக்கு உள்ளது. வாக்குப் பதிவு இயந்திரங்களில் தவறு ஏற்படலாம் என்ற குற்றச்சாட்டை தேர்தல் கமிஷன் முற்றிலுமாக நிராகரிக்கிறது. எனினும், வாக்குப்பதிவு இயந்திரம் குறித்து சந்தேகம் எழுப்பும் அனைவரையும் அழைக்க தேர்தல் கமிஷன் தீர்மானித்திருக்கிறது. அவர்கள் அனைவரும் டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் கமிஷன் அலுவலகத்துக்கு இந்த வாரம் வந்து, முறைகேடு குறித்து செயல் முறை விளக்கம் அளிக்கலாம். இயந்திரம் குறித்த அவர்களுடைய குற்றச்சாட்டுகளை சுட்டிக் காட்டலாம். அதற்காக தொழில் நுட்ப வல்லுநர் குழுவும், வாக்குப் பதிவு இயந்திரங்களை தயார்செய்து அளிக்கும் நிறுவனங்களின் பொறியாளர்களும் தேர்தல் கமிஷன் அலுவலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் முன்னிலையில் குறைபாடுகளை எடுத்துக் கூற வாய்ப்பு வழங்கப்படுகிறது. அப்போது வல்லுநர் குழுவினர் விளக்கம் அளிப்பார்கள். இதன் மூலமாக நாட்டின் தேர்தல் ஜனநாயகத்தின் மீது எழுந்துள்ள தவறான அபிப்பிராயங்கள் மாறக் கூடும் என்று நம்புகிறோம்" என்று கூறி, இது அனைத்து ஏடுகளிலும் வெளி வந்துள்ளது.

இதற்குப் பிறகு திருமதி ஜெயலலிதாவின் கம்பெனி டெல்லிக்குச் சென்றிருக்க வேண்டுமே தவிர, தேர்தல் ஆணையத்தின் இந்த அறிக்கைக்குப் பிறகும், வாக்குப் பதிவு இயந்திரத்திலே கோளாறு, எனவேதான் புறக்கணித்தோம்

என்று இன்று அறிக்கை விட்டிருக்கிறார் என்றால், அது ஊரை ஏமாற்றுகின்ற செயல்தானே? தேர்தல் ஆணையத்தின் அறிக்கையை ஜெயலலிதா படித்தாரா? இல்லையா?

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் தேர்தல் ஆணையத்தின் அழைப்பையேற்று டெல்லிக்கு உடனடியாகச் செல்லாமல், தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைப் போல அறிக்கை என்ற பெயரால் என்ன எழுதியிருக்கிறார் என்று யாருக்குமே புரியாத வகையில் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

"ஆடத் தெரியாதவள் மேடை கோணல்" என்று சொன்னதைப்போல - தேர்தல் புறக்கணிப்புக்கு வாக்குப் பதிவு இயந்திரத்திலே கோளாறு என்று கூறுவதும் இருக்கிறது என்பது தானே உண்மை! எது எப்படியோ போகட்டும் - அதைப் பற்றியெல்லாம் உடன்பிறப்பே, நீ கவலைப்படாமல் - வெற்றிக் கோட்டினை எட்டிட உன் பணி தொடரட்டும்!

அன்புள்ள,

மு.க.

7-8-2009

3412. வாழ்விலோர் திருநாள்; வாழ்க வள்ளுவம்!

உடன்பிறப்பே,

"இன்று வாழ்விலோர் திருநாள்" என்பார்களே, அப்படிப்பட்ட திருநாள்தான் இன்று! ஆம், பெங்களூரு நகரத்தில் அய்யன் திருவள்ளுவருக்கு சிலை திறக்கப்படுகிறது. அய்யன் வள்ளுவருக்கு இங்கே பெங்களூரில் சிலை திறக்கின்ற விஷயமாகட்டும் - தமிழகத்தில் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள சிலை திறப்பு நிகழ்ச்சியாகட்டும் - சென்னை மாநகரத்தில் திருவள்ளுவருக்காக நான் முயற்சியெடுத்து எழுப்பிய வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா நிகழ்ச்சியாகட்டும் - சென்னையில் சட்டப் பேரவை மண்டபத்தில் வள்ளுவரின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சியாக இருக்கட்டும் - அனைத்திலும் என் வாழ்க்கையும் இணைக்கப்பட்ட ஒன்று என்று சொன்னால் அது தவறாகாது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வாழ்க்கை நெறி வகுத்துக் காட்டி வள்ளுவரால் வழங்கப் பெற்ற அறிவுக் கருவூலமே திருக்குறள். திருக்குறளும், அதனை யாத்து இவ்வுலகிற்கு வழங்கிய வாலறிவன் வள்ளுவரும், இளமையிலேயே எனக்கு அறிமுகமாகி, என் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு உரத்தையும், தரத்தையும் தந்து வருகின்ற பாங்கினை என்னென்பேன்!

"திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்கு உரிய நெறியைத் தந்திருக்கிறார். அதனை நாம் உலகத்தின் பொதுச் சொத்து என்று எண்ணத்தக்க விதத்தில் பொதுக் கருத்தைப் பரப்ப வேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா கூறியுள்ளார்.

1948இல் தந்தை பெரியாரோ திருக்குறள் மாநாடு ஒன்றினையே கூட்டினார்.

1953ஆம் ஆண்டு மொழியுரிமை காக்க; கல்லக்குடி போராட்டத்தில் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் நான் இருந்தபோது, கைதிகளாக இருந்த தோழர்களின் மத்தியில் அன்றாடம் பேசும்போது, திருக்குறள் பற்றி உரையாற்றியதும் என் நினைவிலே உள்ளது.

1963ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, பேரவையில் திருவள்ளுவர் திருவுருவப் படம் ஒன்றினை வைக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டேன். அப்போது பேரவைத் தலைவராக இருந்த திரு. யு. கிருஷ்ணாராவ் அவர்கள், அந்தத் திருவள்ளுவர் படத்தினை நான் வாங்கித் தருவதாக இருந்தால், அதை மன்றத்திலே வைப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தார். நான் அவ்வாறே வாங்கித் தர இசைவு தந்த பிறகு, அந்தப் படத்தினை தாழ்வாரத்தில் தான் வைக்க முடியும், மன்றத்திற்குள் வைத்தால் வேறு சிலர் கம்பர் படத்தினை வைக்க வேண்டுமென்றோ, காளமேகத்தின் படத்தினை வைக்க வேண்டுமென்றோ கோரிக்கை வைக்கக் கூடும் என்று சொல்லப்பட்டது.

அதற்குப் பதிலாக நான் கூறும்போது, மன்றத்திற்குள் காந்தி படம், ராஜாஜி படம் வைக்கப்பட்டுள்ளது, அதைப் போல படேல் அவர்களுக்கோ, வேறு ஒரு கட்சித் தலைவருக்கோ படம் வைக்கப்பட வேண்டு மென்று எந்தக் கோரிக்கையும் வைக்கப்பட வில்லை, எனவே மன்றத்திற்குள் தான் திருவள்ளுவருக்கு படம் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனாலும் அந்தக் கோரிக்கை உடனடியாக ஏற்கப்படா விட்டாலும், நான் அவையிலே எழுப்பிய அந்தக் கோரிக்கை 22-3-1964 அன்று பேரவை மன்றத்திற்குள் திருவள்ளுவரின் படத்தினை அன்றைய குடியரசுத் தலைவர் திரு.ஜாகீர் உசேன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதைப் போலவே சட்டப் பேரவையில் நான் பேசும்போது வேறொரு கருத்தையும் தெரிவித்தேன். அதாவது தமிழ்நாட்டில் உள்ள புலவர் பெருமக்கள் எல்லாம் கூடி, குறிப்பிட்டுச் சொல்லும் நாளை திருவள்ளுவர் தினம் என்ற பெயரால் ஆண்டு தோறும் கொண்டாட வேண்டுமென்றும் கூறினேன். அதன் பின்னர் 30-10-1969 அன்று எனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவினைத் தொடர்ந்து - ஆண்டு தோறும் பொங்கல் விழா கொண்டாடப்படும் நாளுக்கு

அடுத்த நாள் திருவள்ளுவர் நாள் என்றும், அன்று அரசு விடுமுறை என்றும் முடிவு செய்து அதற்கான அரசாணை 3-11-1969இல் என்னுடைய ஆட்சிக் காலத்தில்தான் வெளியிடப்பட்டது.

அது போலவே, 1973இல் திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயத் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டிய போது, திருவள்ளுவருக்கு தமிழகத் தலை நகரில் அழியாத நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்று அறிவித்தேன். அது அறிவிப்பாகவே நின்று விடாமல், 18-9-1974 அன்று வள்ளுவர் கோட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நுங்கம்பாக்கத்தில் நடைபெற்று, பணிகள் தொடங்கப்பட்டு, திறப்பு விழாவுக்கான தேதியினைக் குறிக்கவும், விழாவினை எவ்வாறு நடத்துவது என்பதற்கான திட்டங்களைத் தீட்டவும் - 8-1-1976 அன்று அரசின் தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டமும் நடை பெற்றது. பிப்ரவரி திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் அந்தத் திறப்பு விழாவை கழக அரசு முன்னின்று நடத்துவதென்று நாளும் குறிக்கப்பட்டது. ஆனால் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினை கழக அரசு நிறைவேற்றுவதற்கு முன்பாகவே ஜனவரி 31ஆம் தேதியன்று மாலையிலேயே கழக அரசு கலைக்கப்பட்டு விட்டது.

கழக அரசு கலைக்கப்பட்டு விட்டாலும், 1976ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது. அதற்கான அழைப்பிதழ் கூட, அப்போது எனக்கு அனுப்பப்படவில்லை. அந்தக் கோட்டம் திறக்கப்பட்ட நாளன்று, "கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம் தீட்டப் படுகிறது" என்ற தலைப்பில் முரசொலியில் இரண்டரை பக்கத்திற்கு நான் உடன்பிறப்பு மடல் ஒன்றினைத் தீட்டியிருந்தேன். இன்று எப்படி "இன்று வாழ்விலோர் திருநாள்" என்று தொடங்கி கடிதத்தை எழுதுகிறேனோ, அது போலவே அன்றும் "இன்று சென்னையில் ஒரு விழா! திருவிழா! திருமிகு விழா! திருவள்ளுவர்க்கு எடுக்கும் விழா" என்று தொடங்கி எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தின் ஒரு சில பத்திகளை மட்டும் இப்போதும் அது பொருந்தும் என்பதால் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

❖ கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப் பருளுங் களிப்பாய் - காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய் - வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய் - மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும்

மதியாய் - நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய் - எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்றமிகு குறளுக்கு ஓவியம் தீட்டப்படுகிறது. அந்தக் குறளோவியக் கோட்டம் திறக்கப்படுகிறது.

❖ மாசறு பொன்னாக, வலம்புரி முத்தாக, காசறு விரையாக, கரும்பாக, தேனாகத் திகழ்கின்ற திருக்குறளுக்கு விழா என்றால், உலகப் பந்தின் மீது எந்த மூலையில் இருக்கிற தமிழனும் நெஞ்சு புடைத்து நிற்பான் - மகிழ்வான் - தகதகவெனக் குதிப்பான் - தண்மதி கண்ட ஆம்பலாகும் அவன் உள்ளம் - தாமரை, கதிர் கண்டது போன்ற துள்ளல் எழும் என்பதில் ஐயமுண்டோ?

❖ ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறைக்கன்றோ பெருமைசேர் விழா, தாயகத்து மண்ணில் திகழ்கின்றது.

❖ இந்த விழா நாள் என்று வரும்? இன்றே வராதா? என்று எத்தனை நாள் காத்திருந்தோம் நாம்! அந்த நாள் தானே இந்த நாள்!

❖ "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று இடைக்காடர் கூற, "அல்ல, அல்ல, அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று ஔவையார் திருத்தம் கூறியதாகப் புகழப்படும் பொய்யா மொழிக்கல்லவா இன்று விழா! புத்தொளி பாய்ச்சிய புலவனுக்கல்லவா விழா!

❖ சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன் தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன்.

❖ உயிர் வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக் கால வேதனையையும், இனிய

வேதனையாகக் கொண்டு, பாலூட்டிச் சீராட்டிப் பழ முத்தம் சுளை சுளையாய்த் தந்து, பள்ளிக்கு அனுப்பி பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும்போது, தாலி கட்டும் காட்சியினைக் காண முடியாமல் மணப் பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒரு விதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மண விழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்!

❖ என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத்தான் பெறுகிறேன் இன்று! ஆம் - என் வாழ்நாளின் குறிக்கோள்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன், ஆனந்தப் பள்ளு பாடுகிறேன்.

உடன்பிறப்பே,

அன்றையதினம் நான் அடைந்த அதே மகிழ்ச்சியைத்தான் இன்றும் அடைகின்றேன். அடுத்து, 31-12-1975 அன்று கூடிய கழக அமைச்சரவைக் கூட்டத்தில் குமரி முனையில் விவேகானந்தர் பாறைக்கு எதிரே உள்ள மற்றொரு பாறையில் 75 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை நிறுவப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்த மாதமே கழக அரசு கலைக்கப்பட்டு விட்டது. அதன் பின்னர் 1989ஆம் ஆண்டு மீண்டும் கழக அரசு ஏற்பட்டவுடன் 25-3-1989 அன்று நான் படித்த நிதி நிலை அறிக்கையில் குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைப்பது பற்றி மீண்டும் அறிவித்தேன். 6-9-1990 அன்று நானே நேரில் சென்று குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைப்புப் பணியைத் தொடங்கி வைத்தேன். 1991இல் கழக அரசு மாறியது. வள்ளுவர் சிலை அமைப்பு பணியும் சுணங்கியது.

நான்காவது முறையாக முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு 25-6-1997 அன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் மீண்டும் முடிவெடுக்கப்பட்டு, போதிய நிதி ஒதுக்கப்பட்டு - சுமார் ஒன்பது கோடி ரூபாய் செலவில் 133 அடி உயரமுள்ள வள்ளுவரின் சிலை நிர்மாணிக்கப்பட்டு 1-1-

2000 அன்று கழக ஆட்சியிலே திறந்து வைக்கப்பட்டது. உலக அதிசயங்களில் ஒன்றாக அது கருதப்பட்டு, உலகத்திலிருந்து வருபவர்கள் எல்லாம் அதனை அன்றாடம் கண்டு களித்து வருகிறார்கள். "சுனாமி" பேரலைக்கே ஈடு கொடுத்து அந்தச் சிலை தமிழனின் பெருமையை இன்று பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அந்தச் சிலையை அங்கே அமைத்திட எனக்கு பெரிதும் உதவியாக இருந்த சிற்பி கணபதி ஸ்தபதி அவர்களுக்கு நான் பலமுறை நன்றி தெரிவித்திருந்தாலுங்கூட, இந்த மடலிலும் அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமரி முனையில் நடைபெற்ற அந்த இரண்டு நாள் விழாவிலே நான் கலந்து கொண்டபோது - மறைந்த அருமை நண்பர் கோவை செழியன் அந்த விழாவில் பேசும்போது, பெங்களூரிலே பத்தாண்டு காலமாக திருவள்ளுவருடைய சிலை ஒன்று மூடிக் கிடக்கின்றதே, அது என்னவாயிற்று என்று கேட்டார். அடுத்துப் பேசிய நண்பர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், அதற்காக, தான் கடிதம் எழுதியதாகவும், அதற்கு பதில் வரவில்லை என்றும் கூறினார். அதை ஏன் கவனிக்கக் கூடாது என்று என் பக்கத்திலே அமர்ந்திருந்த மக்கள் தலைவர் மூப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். இலக்கியச் செல்வர் குமரி அனந்தனோ, அதைப்பற்றி அந்த மேடையில் கோபா வேசமாகப் பேசினார். அதற்கெல்லாம் பிறகு நான் அந்த விழாவிலே முடிவுரை ஆற்றும்போது,

> "நான் ஒரு உறுதி எடுத்திருக்கிறேன். மூன்று மாதங்களுக்கு முன்பு கர்நாடகத்திலிருந்து ஒரு அமைச்சர் சென்னை மாநகரில் வந்து பேசிய போது, "தமிழக முதலமைச்சர் கலைஞர் விரைவிலே எங்கள் ஊருக்கு வர வேண்டும், ஒரு விழாவிலே கலந்து கொள்ள வேண்டும்" என்று ஒரு கோரிக்கை வைத்தார். நான் அதற்கு பதிலளித்துப் பேசும்போது, "பெங்களூருக்கு ஒரு விழாவிற்காக நான் வருவதென்றால், நான் அங்கே வந்து இனி கலந்து கொள்கின்ற முதல் விழா, அந்தத் திருவள்ளுவருடைய சிலை திறப்பு விழாவாக இருந்தால்தான் வருவேனே தவிர, வேறு எந்த விழாவிற்காகவும் நான் அடியெடுத்து வைக்கமாட்டேன்" என்று சொல்லி விட்டேன்"
>
> என்று கூறியிருந்தேன்.

உடன்பிறப்பே, பெங்களூரு தமிழ்ச் சங்கம், பெங்களூருவில் ஏறத்தாழ 18 ஆண்டுகளுக்கு முன்பு அய்யன் திருவள்ளுவருக்கு சிலை நிர்மாணித்து - 1-9-1991 அன்று அப்போது கர்நாடக மாநில முதலமைச்சராக இருந்த திரு. பங்காரப்பா அவர்கள் தலைமையில் - கர்நாடக மாநில அமைச்சராக இருந்த திரு. கே.ஜே. ஜார்ஜ் அவர்களைக் கொண்டு திறந்திட ஏற்பாடுகளைச் செய்தது. ஆனால் 30-8-1991 அன்று பெங்களூரு நீதிமன்றம் விதித்த தடை காரணமாக அப்போது அங்கே திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது. சிலை அமைப்பதற்கு பெங்களூரு மாநகர் மன்றம் வழங்கியிருந்த அனுமதியை 21-9-1991 அன்று திரும்பப் பெற்றுக் கொண்டது. அதன் பிறகு பல முறை அந்தச் சிலையைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், அது நடைபெறவே இல்லை.

இதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் வகையிலே தான் கர்நாடக அரசும், அதன் முதலமைச்சர், அருமை நண்பர், மாண்புமிகு எடியூரப்பா அவர்களும் பெரு முயற்சியெடுத்து அடுத்தடுத்துள்ள மாநிலங்கள் நல்லுறவுடன் இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்தச் சிலையினை இன்று நிறுவியிருக்கிறார்கள். மணவிழா அழைப்புகளில் எல்லாம் உறவினர்களும், நண்பர்களும் முன்கூட்டியே வந்திருந்து வாழ்த்த வேண்டுமென்று அச்சிடுவார்கள். அதற்கேற்ப நானும், இந்த விழாவிலே உள்ள மகிழ்ச்சி காரணமாக ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே பெங்களூருக்கு வந்திருந்து திருவள்ளுவரின் சிலையினை திறந்து வைக்கவிருக்கிறேன். எனவே "இன்று வாழ்விலோர் திருநாள்" என்று நான் தொடக்கத்தில் எழுதியது பொருத்தம் தானே?

அன்புள்ள,

மு.க.

9-8-2009

3413. காப்பீட்டுத் திட்டத்தினால் யாருக்கு ஆதாயம்?

உடன்பிறப்பே,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வ ஏடான "தீக்கதிர்" இதழில் 20-8-2009 அன்று "கலைஞர் காப்பீட்டுத் திட்டம்; யாருக்கு ஆதாயம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அரசு செயல்படுத்திவரும் இரு மருத்துவ காப்பீட்டுத் திட்டங்களான அரசு அலுவலர்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஏழை எளியவர் பயன்பெறும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் குறித்து சரியாக புரிந்துகொள்ளாமையின் காரணமாக தவறான பல கருத்துகள் மற்றும் தகவல்களுடன் அந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. பொதுமக்களின் வரவேற்பையும், அரசு அலுவலர்களின் வரவேற்பையும் பெருமளவில் பெற்றுள்ள, இவ்விரு மருத்துவ காப்பீட்டுத் திட்டங்களில் முதலாவதாக செயல்படுத்தப்பட்ட அரசு அலுவலர்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் குறித்து முதலில் விளக்கம் அளித்துவிட்டு, அதன் பின்னர் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் பற்றிய விளக்கத்தை அளிக்கின்றேன்.

அரசு அலுவலர் காப்பீட்டுத் திட்டம்:

இத்திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில்தான் அரசு அலுவலர்கள் அனைவரும் மருத்துவ காப்பீடு மூலமாக பயன்பெறும் வகையில் 2008-2009 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களின் மாநாட்டில் நானே அறிவித்து அதன் பிறகு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து அரசு அலுவலர்கள், வாரியங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி

அமைப்புகள், சத்துணவுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகை பணியாளர்களும் பயன் பெறுகின்றனர். அவர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தை உளப்பூர்வமாக வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்து வருகின்றனர். இன்றைய தேதியில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இத்திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 47283 பணியாளர்கள் பல்வேறு விதமான உயர் சிகிச்சைகளை தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்டு கட்டணம் எதுவும் செலுத்தாமல் பயன்பெற்றுள்ளனர். இவர்கள் பெற்ற சிகிச்சைகளுக்காக இதுவரை காப்பீட்டு நிறுவனம் ரூபாய் 154.22 கோடி செலவிட்டுள்ளது. ஆனால் இதுவரை காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசின் சார்பில் செலுத்தப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ.121.7 கோடிதான். எனவே கட்டிய காப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக ரூபாய் 32.52 கோடி அளவிற்கு இத்திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் பயன் பெற்றுள்ளனர் என்பது கண்கூடாகத் தெரிகிறது. எனவே இத்திட்டம் திருப்தியாக செயல்படவில்லை என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது.

மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 3000 அரசு பணியாளர்களே ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் மருத்துவ சிகிச்சைக்கான கட்டணங்களை அரசிடமிருந்து திரும்பப் பெற்று வந்தனர். அரசுப் பணியாளர் எதிர்பாராத விதமாக இருதய அறுவை சிகிச்சை போன்ற உயர் சிகிச்சைகளைப் பெற வேண்டிய நேரத்தில் அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சொந்த பணத்தை முன்பணமாக கட்டி சிகிச்சை பெற்று, சிகிச்சைக்கான செலவை அரசிடமிருந்து திரும்பப் பெறும் நிலை மாறி இன்று அரசு அலுவலர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எவ்வித கட்டணமும் செலுத்தாமல் தனியார் மருத்துவமனைகளில் தமது திட்ட உறுப்பினர் அட்டையை மட்டுமே காண்பித்து உரிய நேரத்தில் உடனடியாக உயர் சிகிச்சை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான
கலைஞர் காப்பீட்டுத் திட்டம்:

தற்போது நடைபெற்று வரும் கழக அரசு பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ துறைகளுக்கு தொடர்ந்து உரிய முன்னுரிமை அளித்து வருகிறது.

2005-2006ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு முந்தைய ஆட்சியில் ரூபாய் 1487.11 கோடி செலவிடப்பட்டது.

இதற்கு மாறாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 2006-2007ஆம் ஆண்டில் ரூபாய் 1662.17 கோடியும், 2007-2008ஆம் ஆண்டில் ரூபாய் 2047.45 கோடியும் செலவிட்டு 2008-2009ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 2762.33 கோடி ஒதுக்கீடு செய்தும் நடப்பு நிதியாண்டான 2009-2010 வரவு செலவுத் திட்டத்தில் மிக உயர்ந்த ஒதுக்கீடாக ரூபாய் 3391.23 கோடியும் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடுகள் எந்த அளவிற்கு அரசு மருத்துவ மனைகளின் மேம்பாட்டிற்கும், செயல்பாட்டிற்கும் தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் சிறப்பாக செயல்பட்டு வருவதன் காரணமாக; தனியார் மருத்துவ மனைகளில் நடைபெறும் மகப்பேறுகள் குறைந்து; அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கை மும்மடங்காக உயர்ந்துள்ளது.

2005-2006ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்ற மகப்பேறுகளின் எண்ணிக்கை 81190 லிருந்து 2008-2009ஆம் ஆண்டில் 2,59,104 ஆக உயர்ந்துள்ளது. இந்த சாதனையை மத்திய அரசு தொடர்ந்து பாராட்டி வருகிறது.

மேலும் தமிழகத்தில் உள்ள அனைத்து தாலுக்கா அரசு மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனைகள் ரூபாய் 607 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவ மனைகளுக்கு தேவைப்படும் புதிய கட்டடங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டு தேவையான கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்லாது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உருவாக்க ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே பொது சுகாதாரத்தை பொது மருத்துவமனைகளின் மூலம் உறுதிப்படுத்தும் அடிப்படை கடமையை அரசு கை கழுவுகின்றது என்று தீக்கதிர் கட்டுரையில் எழுதியிருப்பது உண்மைக்கு மாறான கூற்றாகும். அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் தொடர்ந்து இவ்வாறு மேம்படுத்தப்பட்டாலும் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை போன்ற உயர் சிகிச்சை தேவைப்படும் அனைவருக்கும் உடனடியாக செய்வதில் இடர்ப்பாடுகள் உள்ளன என்பதை நன்கு உணர்ந்த இந்த தமிழக அரசு, ஏழை எளிய மக்களின் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளையே நாடி காத்திருக்க வேண்டிய நிலையை மாற்றி வசதி படைத்தவர்களைப் போன்று சாமானிய மக்களும் உடனடியாக உயிர் காக்கும் உயர் சிகிச்சையை உரிய தனியார் மருத்துவ மனையிலும் பெறக் கூடிய ஒரு அரிய வாய்ப்பை உருவாக்கிட புரட்சிகரமான இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை 2009ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவித்தது.

இதைப்போன்ற திட்டம் அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் ராஜீவ் ஆரோக்யஸ்ரீ திட்டம் என்ற பெயரில் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சாமானிய மக்களைப் பொறுத்தவரையில் பல்வேறு சாதாரண நோய்களுக்கு அவர்கள் அரசு மருத்துவமனைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய அதே நேரத்தில் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் ஒரு கூடுதல் வசதியை (supplementary facility) உருவாக்கித் தந்துள்ளது. எனவே அரசு மருத்துவமனை களுக்கு இந்த அரசு அளித்துவரும் முன்னுரி மையில் எந்த ஒரு மாற்றமும் இல்லை.

இத்திட்டத்தை செயல்படுத்தும் மருத்துவ காப்பீட்டு நிறுவனமான Star Health and Allied Insurance Company திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்

நிறுவனத்துடன் United India Insurance Company, Oriental Insurance Company போன்ற பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் co insurers என்ற முறையில் பங்கேற்றுள்ளன.

இத்திட்டத்தை செயல்படுத்தும் Star Health நிறுவனம் மத்திய அரசின் காப்பீட்டு ஒழுங்கு முறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். மேலும் இந்நிறுவனம்தான் ஆந்திர மாநில அரசின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அரசு பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் இவ்வொப்பந்த புள்ளியில் கலந்துகொண்டு ஆண்டு காப்பீட்டுக் கட்டணமாக குடும்பம் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 1000 என்ற வீதத்தில் கேட்டிருந்தனர். இக்கட்டணத்தை அப்படியே ஏற்று அரசு அளித்திருந்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய செலவு ஆண்டுக்கு ரூபாய் 1000 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூபாய் 4000 கோடியாக இருந்திருக்கும்.

ஆனால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்துடன் அரசின் சார்பில் அதிகாரிகள் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தி குறைந்த கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 517 கோடி மட்டுமே காப்பீட்டுத் தொகையாக செலுத்தக் கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

“காப்பீட்டு நிறுவனம் 358 மருத்துவ மனைகளைக் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளது. அரசு மருத்துவமனை ஒன்று கூட தகுதியான மருத்துவமனையாக காப்பீட்டு நிறுவனத்தின் பார்வையில் தென்படவில்லை” என்று தீக்கதிர் கட்டுரையாளர் எழுதியுள்ளார். ஏற்கெனவே இத்திட்டத்திற்கான அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு, இத்திட்டத்தின் கீழ் உயர் சிகிச்சை அளிக்கவல்ல அரசு மருத்துவமனைகளும் சேர்த்துக்கொள்ளப்படும். தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்ட அரசு மருத்துவமனைகளின் பட்டியல் 10.9.2009-க்குள் இறுதியாக்கப்பட்டு அறிவிக்கப்படும். எனவே இத்திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகளில் மட்டுமல்லாது அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

'மத்திய அரசு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தமிழகம் முழுவதும் அமலாக்கப்பட்டால் தொழிலாளர்கள் மிகுந்த பயன்பெறுவர். இதை தவிர்ப்பதில் கலைஞரின் உள்நோக்கம் என்ன?' என்று தீக்கதிர் ஒரு வினா எழுப்பியுள்ளது.

மத்திய அரசின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.30,000 வரை தான் சிகிச்சை பெற முடியும் என்று இக்கட்டுரையாளரே ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1 இலட்சம் வரை உயர் சிகிச்சை பெற முடியும். எனவே மத்திய அரசின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தைவிட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அதிக அளவில் பயன் அளிக்கும் திட்டம் என்பது வெள்ளிடைமலை.

இதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை. மேலும் மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் மட்டும்தான் பயன்பெற இயலும். அதிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 78 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேளாண் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் 35 இலட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பங்கள் எந்தவித வருமான வரம்பும் இன்றி பயன் பெறுகின்றனர். இதுமட்டுமல்லாது ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு குறைவாக வருவாய் உள்ள குடும்பங்கள் அனைவருக்கும் இத்திட்டத்தில் பயன் பெற வகை செய்யப் பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படத் தொடங்கி மூன்று வாரங்களுக்குள் இதுவரை 298 பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக இதுவரை ரூபாய் 1 கோடியே 72 லட்சம் காப்பீட்டுத் தொகையாக Star Health காப்பீட்டு நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் பயனாளிகள் ரூ.30 கட்டவேண்டும். ஆனால் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் எவ்விதமான கட்டணமோ, பதிவுக் கட்டணமோ அல்லது அடையாள அட்டைக்கான கட்டணமோ செலுத்தவேண்டியதில்லை. இத்திட்டத்தின் பயன்கள்

பயனாளிகள் அனைவருக்கும் இலவசமாக கிடைக்கப் பெறுகிறது. ஆகமொத்தத்தில் "கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" பன்மடங்கு பயனளிக்கும் திட்டம் என்பது தெளிவு. எனவே மத்திய அரசின் திட்டத்தை தவிர்ப்பதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை என்பது சுட்டிக் காட்டப்படுகிறது.

உண்மை விவரங்கள் இவ்வளவிருக்க - தீக்கதிர் நாளேடு - அரசுத் திட்டங்கள் அத்தனையையும் குறை கூற வேண்டுமென்ற எண்ணத்தோடு கட்டுரை தீட்டியுள்ளது. அரசின் திட்டங்களை உண்மையில் அரசு அலுவலர்களும், பொது மக்களும் பெரிதும் வரவேற்கிறார்கள். 23.7.2009 அன்று "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டபோது - "ஒவ்வொரு சாமானிய மனிதனின் வீட்டு வாசலுக்கும் சென்றடையத்தக்க வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்று கூறியதோடு - "மருத்துவ சேவையை வழங்குவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களுக்கெல்லாம் முன் மாதிரியாகத் திகழ்கிறது" என்றும் பாராட்டினார். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடு மட்டும் இத்திட்டத்தினால் யாருக்கு ஆதாயம் என்று கட்டுரை தீட்டியுள்ளது. இந்தத் திட்டத்தினால் பொது மக்களுக்கு ஆதாயம் - அரசு அலுவலர்களுக்கு ஆதாயம் - ஏன் கட்டுரை தீட்டியவர்களுக்கும் ஆதாயம் என்பது தான் உண்மை! உண்மை!

அன்புள்ள,

மு.க.

22-8-2009

3414. “தடுக்கும் சொல் பாராய் தம்பீ!”

உடன்பிறப்பே,

நூறாண்டுகள் நிறைந்து; நிறைந்த இந்த நூறாண்டும் முழுமையாக வாழ்ந்திடாமல் - ஆனால் அப்படி வாழ்ந்தவர்களை விட பல மடங்கு அதிகமான தாக்கத்தை நம் நெஞ்சில் பதித்து விட்டு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் விழா எடுத்து - அவர் வாழ்ந்த நாட்களில் அவரால் விளைந்த அற்புதங்களை யெல்லாம் எண்ணிப் பார்க்கிறது.

அவற்றுக்கும் அப்பாலே; அவர் காலத்தில் நமக்கும் தொடர்புடைய நிகழ்வுகள் பலவற்றை மறக்க முடியாமல், நினைந்து நினைந்து மகிழ்கிறோம். ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன், கேள்! அந்த நிகழ்ச்சி; அவரைப் போல பேச வேண்டும்; அவரைப் போல் எழுத வேண்டும்; அடுக்குச் சொற்கள் தவழ வேண்டும்; அழகு தமிழ் கொழிக்க வேண்டும்; எனும் அவா கொண்டு; நாடக மேடை ஏறிய ஒரு “நல்லதம்பி” நடத்திக் காட்டிய நாடக நிகழ்ச்சியாகும். ஒருநாள்; அண்ணாவின் இல்லத்தில் அவரோடு உரையாடிக் கொண்டிருந்த போது, அந்த நல்லதம்பி - அவர் எழுதி நடிக்கும் “மரணப் படுக்கை” எனும் நாடகத்திற்கு அண்ணா தலைமை தாங்க வேண்டுமென்றும், நான் (கருணாநிதி) முன்னிலை ஏற்க வேண்டு மென்றும் எவ்வளவு வலியுறுத்த முடியுமோ அவ்வளவு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அமெச்சூர் நாடகங்களையும், தெருக் கூத்துக்களையும் காண்பதில் தனித்ததோர் ஆர்வம் கொண்ட அந்த எளிய மனிதராம், கலையுலக ஏந்தல், காஞ்சி தந்த பொன்னாட்ஷா அண்ணா அவர்களும் - அந்த நாடகத்திற்கு தலைமையேற்க ஒப்புக் கொண்டு, “நீயும் வா முன்னிலை ஏற்க” எனப் பரிந்துரை மூலம் என்னைப் பணித்தார். இருவரும், அந்த நாடகத்திற்குச் சென்றோம்.

நாடகத்தை எழுதி நடித்த நல்லதம்பி தொடக்கம் முதல் அடுக்குச் சொற்களை கை வலிக்க, கழுத்து வலிக்க உரையாடல்களாக எழுதித் தள்ளியிருக்கிறார் என்பதை நானும் உணர்ந்தேன். நமது தலைவர் அண்ணாவும் உணர்ந்து வாய் விட்டுச் சிரிக்க வேண்டிய காட்சிகளிலேகூட மெல்லப் புன்னகை புரிந்தார். அது அவருடைய பண்பு. மேடை நாகரிகம் கற்றவர் அல்லவா? எத்தனை மேடைகளில் கலகலவென சிரிக்க வேண்டிய கட்டங்களில் அவற்றை மறைத்து கமுக்கமாக தன்னுடைய ரசனையை வெளியிட்டிருக்கிறார் என்பதை அறியாதவனா நான்? இருப்பினும், அவராலேயே தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு அந்த நாடக வசனங்களைக் கேட்கக் கேட்க அவர் குலுங்கக் குலுங்க சிரித்த அந்தக் காட்சி இன்னமும் என் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கிறதே; இப்போது ஏன் அந்த நினைவு உனக்கு வந்தது என்று உடன்பிறப்பே, நீ கேட்கக் கூடும். ஏன் வந்தது என்பதைச் சொல்லுகிறேன்.

"பொசுங்கிய பொதுப்பணி துறை
பொறுப்புகளை செய்யவும்!
உலர்ந்த உள் துறை உயர்வாக விளங்கவும்!
இருண்ட மின்சார துறையின் இருள் நீங்கிடவும்!
சரிந்த சட்ட துறை சரித்திரம் காணவும்!
கடன்படும் கல்விதுறை கடமையை ஆற்றவும்!
வறட்சி கண்ட வருவாய் துறை வரலாற்றில்
இடம் காணவும்!
விவசாயத் துறை வியப்பினை உருவாக்கவும்!
அழிந்த அறநிலையத் துறையை அழிவிலிருந்து மீட்கவும்!
சுருங்கிய சுகாதார துறையை சுற்றமும் போற்றிடவும்!
தமிழக தலைமை செயலகத்தை தலை நிமிர செய்யவும்!

யாரோ ஒருவர் தலமையில் தமிழக அரசு உருவாகிட வேண்டும் என்று சபதம் ஏற்பதாக" ஒரு பிறந்த நாள் விளம்பரம் ஏடுகளில் வெளி வந்திருக்கிறது.

இதைப் படித்த போது எனக்கு பழைய நாளில் நமது பகுத்தறிவுப் பகலவன் - சிங்க நடையும் - சிங்காரத் தென்றல் நடையும் - பொங்கு கடல் நடையும் - புரட்சித் தமிழ் நடையும் - தன் எழுத்தில் காட்டும் ஏந்தல்; பேரறிஞர் அண்ணாவின் நினைப்பும் - ஒழுங்கு முறை தவறாமல் ஒப்பற்று விளங்கும்

அவர் சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் என் நெஞ்சில் சுழன்றிடத் தொடங்கின.

- ❖ கோடு உயர்ந்தது; குன்றம் தாழ்ந்தது! என்ற அண்ணாவின் அரசியல் தலையங்கம் எங்கே?
- ❖ இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!
- ❖ தம்பி உடையான் படைக்கு அஞ்சான்!
- ❖ நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நாட்டடித்தால் போதாது!
- ❖ கையில் காசில்லாதவர்கள் - மனதிலே மாசில்லாதவர்கள்!
- ❖ சாலை ஓரத்திலே சில வேலையற்றதுகள்; வேலையற்றதுகள் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்!
- ❖ இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது!
- ❖ கிளிக்குப் பச்சை பூசுவதா?
- ❖ ஐந்து கால் பசு!
- ❖ அங்கே பவளம், இங்கே படம்!
- ❖ கண்ணீரும் பன்னீரும்!
- ❖ இடியோசையில் கிடைக்காது இன்ப நாதம்!
- ❖ தடைக்கற்கள் படிக்கட்டுகளாக ஆகட்டும்!
- ❖ கணக்குத் தீர்க்கும் காலம்!
- ❖ தன்னை வெல்வான், தரணியை வெல்வான்!
- ❖ வெந்த புண்ணிலே வேல்!
- ❖ குன்றின் மேலிட்ட விளக்கு!
- ❖ இன்ப நாளிது, இதயம் பாடுது!

என்ற அண்ணாவின் எழுத்துக்களின் வெளிப்பாடுகள்தான் என்னே?

வெல்லமாய் இனிக்கும் அந்த நல்ல தமிழ் புது நடையைப் படித்து விட்டு - பூரித்துப் பொங்கியெழ நம்மை உலுக்கிய அந்தச் சொற்கள் - குலுக்கிய மரத்திலிருந்து உதிர்ந்திட்ட மணமிகு மலர்கள் அல்லவா? அந்த மலர்களைக் கண்டு மகிழ்ந்த நமக்கு இன்று அடுக்குச் சொல் என்ற பெயரால் "ஆனாவுக்கு ஆனா" போட்டால் போதும் - அந்த அடுக்குச் சொல்லே அழகு தமிழ்ச் சொல் என்று எண்ணுகின்ற அப்பாவிகள் அல்லவா; அன்னைத் தமிழைக் காக்கவும், அதற்காகவே அரசியல் நடத்துகிறோம் என்று ஆர்த்திடவும் புறப்பட்டுள்ளனர்.

அண்ணாவும் நானும் கண்ட நாடகத்தில், ஆம், 'மரணப் படுக்கை' எனும் அந்த நாடகத்தில் வில்லனைப் பார்த்து கதாநாயகன் பேசுவான்.

"உன் விஷயத்தில் நான் சர்ப்பமாக
இருப்பேன்" என்று!

அதற்கு எதிர் வசனம் வில்லன் பேசுவான்.

"அந்த சர்ப்பத்தையும் நான் சாம்பார் வைத்து
சாப்பிடுவேன்" என்று!

உடன்பிறப்பே, இந்த வசனத்தைக் கேட்ட போதுதான் - இதுபோன்ற நெருக்கடியான நேரங்களில் அடக்கமாக இருக்கும் அண்ணா அவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்த காட்சியை நான் கண்டேன். இப்போதும் அந்தக் காட்சி என் முன்னால் தெரியத்தான் செய்கிறது. மீண்டும் அப்படியொரு காட்சியைக் காண நேரிடுமோ என்றிருந்த வேளையில்தான் இன்று இந்த விளம்பரத்தைக் கண்டேன்.

என் செய்வது? சிரிப்பதற்கு அண்ணாவும் இல்லை - இந்தக் கசப்பான அடுக்கு மொழியை எரிப்பதற்கு என் நெற்றியிலே கண்ணும் இல்லை.

குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை;
குரும்பி அளவாக் காதை குடைந்து தோண்டி
எட்டின மட்டு அறுப்பதற்கோ வில்லி யில்லை;
இரண்டொன்றா முடிந்து தலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தன் இல்லை;

வினையாட்டா கவிதை தனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லா துரைகள் உண்டு;
தேசமெங்கும் புலவரென திரியலாமே!

என்ற பாட்டைத்தான் மனதிற்குள் மந்திரம் போல் ஜபித்துக் கொண்டேன்.

இதெல்லாம் அடுக்குச் சொல் அல்ல; "தடுக்குச் சொல் பாராய் தம்பீ" என்று ஒரு முறை அண்ணாவே ஒரு நீண்டக் கட்டுரை "திராவிட நாடு" இதழில் எழுதியிருக்கிறார். அதையும் நினைத்துக் கொண்டேன். தமிழுக்கு இப்படி ஒரு கேடு விளைவிக்க தகவிலர் சிலர் புறப்பட்டிருக்கிறார்களே என்பதையும் எண்ணி என் விழிகளை நனைத்துக் கொண்டேன்.

அன்புள்ள,
மு.க.
25-8-2009

3415. இரு நாள் நமக்குத் திருநாள்!

உடன்பிறப்பே,

இரு நாள் நமக்குத் திருநாள்! பொங்கல் நாளை பூரிப்பு பொங்கிட தமிழர் திருநாள் என்று குறிப்பிடுகிறோம். தேனும் திராட்சையும் கலந்து தெவிட்டாமல் இனிக்கின்ற தெள்ளமுதை அள்ளி அருந்துகிறோம். புள்ளி வைத்துப் போடும் கோலங்களில் புதுப் பானையென்ன; புனல் பாயும் அருவிகளென்ன; புகையும் வத்திகள் பதித்த சித்திரங்கள் என்ன; என்ன என்னவென்று எத்தனையோ உற்சாகப் பெருக்கினை வெளிப்படுத்தி வீடெல்லாம் - வீடுகள் அமைந்த வீதியெல்லாம் ஒளியூட்டி மகிழ்கிறோம்.

ஒருநாள் பொங்கலுக்கு; அது தமிழர் திருநாள் என்பதற்காக இத்தனை மகிழ்ச்சி! அத்தனை பூரிப்பு!

இதோ; அந்தத் தமிழர் திருநாளை நம் நினைவில் பதித்து - நெஞ்சில் செதுக்கிய - நிகரில்லாத் தமிழர் கோமான் யார் என்ற கேள்விக்கு - ஒரே விடையாக விளங்குகின்ற வித்தகர் - தன்மானக் குன்றம் - தரணி வாழ் தமிழர்க்கெல்லாம் பெருமன்றம் - தகைமைக்கு இலக்கணமாய் - பகைமைக்கும் பரிவு காட்டும் நற்குணச் செல்வமாய்த் திகழும் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டினை அவர் பிறந்த நாள் முதல் இந்நாள் வரையில் தமிழ் கூறும் நல்லுலகில் நமது கழகத்தின் வேர் பதிந்துள்ள மண் - கிளைகளின் நிழல் படிந்துள்ள கூரைகள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நமக்குரிய இரு வண்ணக் கொடிகளை ஊன்றியும் - ஊரெல்லாம் பறக்க விட்டும் - அவர் பிறந்த நாளின் சிறப்பையும் - அவர் பிறந்ததால் நாட்டுக்கும், நம் இனத்துக்கும், நம் தாய்த் தமிழுக்கும் ஏற்பட்ட உயர்வையும், அவற்றை விரிவாக எடுத்துரைத்து வினை முடித்திட நமக்குள்ள பொறுப்பையும் எடுத்தியம்பியும் தொகுத்து விளக்கியும் உள்ளோம்.

பிறந்த நாள் நூறாவது ஆண்டு நிறைவாக - காஞ்சிபுரத்தில் மாபெரும் விழா மட்டுமல்ல; அதனை மாநாடு போலவே நடத்துகிறோம்....

நாட்டு வாட்டம் போக்கிடவும், நலிவு தீரவும் எத்தனையோ மாநாடுகளை திட்டமிட்டு நடத்திக்காட்டிய நம் அண்ணனுக்கு நாம் நடத்துகின்ற மாநாடு இது. காஞ்சியம்பதி வாழ் கழகக் காவலர்களும் அமைச்சர் தம்பி தா.மோ.அன்பரசனும், சி.வி.எம்.அ.சேகரும் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளும் - காஞ்சிபுரத்தில் கண் கொள்ளாக் காட்சி காண நம்மை அழைத்திருக்கின்றனர்.

அதற்கு முன்பே சென்னை மாநகர், பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் செப்டம்பர் 15ஆம் நாள் மாலை 5 மணிக்கு மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் அண்ணா அவர்களின் திரு உருவமும், தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றியமைத்த அவரது கையெழுத்தும் பொறித்த ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிடுகிறார். தமிழக அரசின் சார்பில் நடைபெறும் அந்த விழாவில், அரசின் சார்பாக அரியதொரு கருத்துக் கருவூலமாக, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்படவுள்ளது. கழகப் பொதுச் செயலாளர், நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் தலைமையில் மலர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பாக மலர் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அந்த விழாவிற்கு நான் தலைமை தாங்குகிறேன். பேராசிரியர் முன்னிலை வகிக்கிறார். துணை முதல் அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு மற்றும் அண்ணாவைப் பற்றிய இன்னிசைப் பாடல்கள், அண்ணாவின் அழகிய ஆங்கில உரைகளும், தமிழ் உரைகளும் அடங்கிய இணைய தளம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து, அண்ணாவின் பொன்மொழிகள் மற்றும் அகர முதலி நூல்களை வெளியிடுகிறார்.

மத்திய அமைச்சர்கள் தம்பிகள் தயாநிதி மாறன், பழனிமாணிக்கம் மற்றும் மலர்க் குழு உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி ஆகியோர் விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றவிருக்கிறார்கள்.

செய்தித் துறை அமைச்சர் தம்பி பரிதி இளம்வழுதி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார். அரசு சார்பில்

அன்று தொடங்கும் அந்த விழாவின் எழுச்சி; கழகத்தின் சார்பில் செப்டம்பர் 26 அன்று காஞ்சியில் மாநாடு போல் நடைபெற இருக்கின்ற மகத்தான விழாவாக அமைய இருக்கிறது.

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் காலை 9 மணியளவில், சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரே அமைந்துள்ள அண்ணாவின் திரு உருவச் சிலைக்கு நானும், பேராசிரியரும் மற்றும் கழக முன்னணியினரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த விருக்கிறோம்.

கழகத்தின் சார்பில் செப்டம்பர் 26-ந் தேதியன்று காஞ்சிபுரத்தில் நடத்தப்படும் விழாவில் - காலை 10 மணியளவில் - காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் தலைமையில் அண்ணாவைப் பற்றிய கவியரங்கம் நடைபெறவுள்ளது. அந்தக் கவியரங்கில், "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற தலைப்பில் காவியக் கவிஞர் வாலி அவர்களும், "நீதி தேவன் மயக்கம்" என்ற தலைப்பில் கவிப் பேரரசு தம்பி வைரமுத்து அவர்களும், "ஆரிய மாயை" என்ற தலைப்பில் கவிச்சுடர் தம்பி கவிதைப் பித்தன் அவர்களும், "அண்ணாவின் உயில்" என்ற தலைப்பில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி அவர்களும், "சாமானியர்களின் சகாப்தம்" என்ற தலைப்பில் கவிஞர் விவேகா அவர்களும், "வெள்ளை மாளிகையில்" என்ற தலைப்பில் கவிஞர் யுகபாரதி அவர்களும் கவிதை பாடவுள்ளார்கள்.

காலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் - அண்ணா அவர்கள் தன் வாழ்வில் மாணவர்கள்பால் பெரிதும் அன்பும் அக்கறையும் கொண்டு, அவர்கள் முன்னேறப் பாடுபட்டார் என்பதற்கு அடையாளமாக - மேல்நிலைப் பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு முரசொலி அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல, தொழிலாளர்கள்பால் அண்ணா தூய நேசம் கொண்டவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும்

வழங்குவதைப் போலவே இந்த ஆண்டும் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான நற்சான்று, பண முடிப்பு, பதக்கம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

செப்டம்பர் 26ஆம் தேதி மாலையில் காஞ்சிபுரம், நசரத்பேட்டை அறிஞர் அண்ணா நகரில் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவும், முப்பெரும் விழா விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் மாநாடு போலவே ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அந்த விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமை தாங்கி, விருதுகளை வழங்கிட வுள்ளார்.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா விருதுகள் என்பதால் இந்த ஆண்டு அண்ணா விருதினை எனக்கு வழங்குவ தென்று முடிவெடுத்து அறிவித்துள்ளார்கள். கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா விருதுகள் வழங்குவதென்று தொடங்கி முதல் ஆண்டு அந்த விருதுகளை வழங்கியபோது முதல் அண்ணா விருதினை கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள்தான் பெற்றார். முதல் ஆண்டில் அண்ணா விருதினை பேராசிரியர் பெற்று, அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா விருதினை நான் பெறவிருக்கிறேன் என்பதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி அல்லவா? அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் பெரியார் விருது, தமிழர் தலைவர், இளவல் மானமிகு கி. வீரமணி அவர்களுக்கும், கலைஞர் விருது தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கும் பேராசிரியர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினை காலமெல்லாம் நினைவு கூர்ந்திடும் வகையில் - காஞ்சி மாநகரின் நுழைவாயிலில் - அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவுத் தூண் ஒன்று சிறப்பாக அமைப்பதற்கான பணிகளும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 26ஆம் தேதியன்று காலை அந்த நினைவுத் தூணும் திறந்து வைக்கப்படவுள்ளது.

உடன்பிறப்பே,

இந்த விழாக்கள் பற்றிய செய்திகள் ஏற்கெனவே ஏடுகளில் வெளிவந்து அவற்றில் கலந்துகொள்ள புறப்பட வேண்டுமென்ற

எண்ணத்தோடு நீ இருக்கிறாய் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், அண்ணாவின் விழாவிற்கு, அண்ணன் நான் அழைக்க வில்லையே என்ற குறை உனக்குமிருக்கு மல்லவா? அதற்காகவே இந்தக் கடிதம்! தலைமைக் கழகமும், அரசும் அண்ணாவிற்கு விழா எடுத்த போதும், உனது சொந்த ஊரில் உன்னால் முடிந்த அளவிற்கு அண்ணாவுக்கு விழா எடுப்பாய் என்பதை நான் அறிவேன். அதுதான் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசும். இருந்தாலும் தலைமைக் கழகம் எடுக்கும் இந்த விழாவிற்கு நீ உன் குடும்பத்தோடு புறப்படத் தயாராகிடு!

தம்பிகள் நாம் நடத்தும் இந்த விழாக்களுக்கு அண்ணா வந்திருந்து நம்மை வாழ்த்திட வேண்டாமா? அந்த வாழ்த்தினைப் பெற்றிட வரிப்புலி போல் வந்திடுக தம்பி - புறநானூற்றுத் தாய்களே புறப்படுவீர்; காஞ்சித் தலைவன் பிறந்த நகருக்கு!

அன்புள்ள,

மு.க.

13-9-2009

3416. அருந்தவத்தில் ஆழ்கின்றேன்!

உடன்பிறப்பே,

எத்தனையோ முறை நான் பிறந்த இல்லத்தைப் பார்ப்பதற்காக திருக்குவளைக்குச் சென்றிருக்கிறேன். இப்போதும் அப்படிச் சென்ற போது 1996ஆம் ஆண்டு என் கைப்பட எழுதிய - கல்வெட்டு போன்ற ஒரு கடிதம் - 18-6-1996 என்று தேதியிட்டு - பெரிய அளவில் - திருக்குவளை வீட்டுச் சுவரில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்.

"நான் பிறந்த மண்ணில் நான் பிறந்த இல்லத்திற்கு எத்தனை முறை வந்தால்தான் என்ன; தெவிட்டுவதில்லையே! எத்தனையோ பசுமையான நினைவுகள் -எத்தனையோ மறக்க முடியாத நிகழ்ச்சிகள் - தந்தையார் முத்துவேலரையும், அன்னை அஞ்சுகத்தையும் வாழ வைத்த இந்த வீடு; இன்று நாடு, மக்களை வாழவைக்க என்னை எதிர் பார்க்கும் நிலையில் உயர்த்தி விட்டுள்ளதே! நான் பிறந்த மண்ணுக்கு நான் எப்படித்தான் நன்றி சொல்லப் போகிறேன்.

மு. கருணாநிதி,
18-6-1996."

அதில் உள்ள இந்த வாசகத்தை நான் கண்டபோது நான் பிறந்த அந்த இல்லம் இன்னும் எனக்கு கடுமையான கட்டளை களை வழங்கி, அதற்கான பயணத்திற்கு என்னை விரட்டுபவை போலவே இப்போதும் உணர்ந்தேன், உணருகிறேன்.

1996ஆம் ஆண்டு இதை எழுதியதற்குப் பின்பு இடையில் 13 ஆண்டு காலத்தில் என் பயணத்தில் ஏற்பட்ட விளைவுகள் தமிழ் அறிஞர்கள் பலரின் கனவாக இருந்த தமிழுக்கு செம்மொழி தகுதி என்ற கோரிக்கை நிறைவேறியது என்பதையும் -

சேதுக் கால்வாய்த் திட்டத்திற்கான கால்கோள் விழா நடத்தப்பட்டு அதை நிறைவேற்றியே தீர வேண்டுமென்ற

அக்கறை ஓரிரு கட்சிகளைத் தவிர மற்ற எல்லா கட்சிகளுக்கும் தமிழ் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது

என்பதையும் -

மற்றும் தமிழகத்திலே முதல் முறையாக 7000 கோடி ரூபாய் விவசாயிகளுக்கான கடன் தொகை முழுவதும் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதையும் - அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் இயற்றப்பட்டது என்பதையும் - இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகித உள்ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது என்பதையும் - அருந்ததியினருக்கு 3 சதவிகித உள்ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதையும் - ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்க முடியும் என்பதையும் -

உலகச் செய்திகளை ஏழை எளிய நடுத்தர மக்களும் அறிந்துகொள்ள அவர்களின் ஓய்வு நேரத்தை உற்சாகமாகக் கழித்திட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தமிழகத்தில்தான் முதன் முதலாக வழங்கப்பட்டுள்ளன என்பதையும் -

நமது பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்த உடல் நலத்தையும் பேண வேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜரால் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், அந்தக் குழந்தைகளுக்கு இப்போது என் தலைமையில் உள்ள ஆட்சியில் மூன்று முட்டைகள் வாரத்திற்கு என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதையும் -

அவ்வளவு ஏன்? ஆரம்பக் கல்விக் கூடங்களையே காணாதிருந்த பட்டிக்காட்டுப் பகுதிகளில் எல்லாம் பாமரத்தன்மை விலகிடவும் -

பகுத்தறிவுப் பரிதிகளாக அவை தோன்றிடவும் -

இதோ! என் பிறந்தகத்திற்கு அருகிலேயே திருவாரூரில் ஆயிரம் கோடி ரூபாயில் மத்தியப் பல்கலைக் கழகமே அமைந்துவிட்டது என்பதையும் காணும்பொழுது - அன்று நான் 1996இல் திருக்குவளையில் எழுதியுள்ள; “நான் பிறந்த மண்ணுக்கு எப்படித்தான் நன்றி சொல்லப்போகிறேன்” - என்று எழுதியுள்ள அந்த வாசகத்தோடு

ஓ! இப்படியும் பல்வேறு சாதனைகளைப் பட்டியலிட்டு நன்றி சொல்லலாமே! என்று பெருமிதமடைகிறேன்.

அந்தப் பெருமிதத்தோடு திருக்குவளையில் என் வீட்டிற்குள் நுழைந்தவுடன் அங்கேயே மீதம் உள்ள என் வாழ்நாளையும் கழித்துவிடலாமா என்றும் -

அந்த வீட்டில் நான் தவழ்ந்த தாழ்வாரம் -

குலவி மகிழ்ந்த கூடம் -

வேலிக்கு அப்பால் விளையாடிய தோட்டம் -

வீதிக்கடுத்துள்ள குளத்தில் நீராடி மகிழ்ந்த நேரங்கள் -

இவையெல்லாம் "எங்களை விட்டுப் போகாதே! போகாதே!" என்று தடுத்த போதிலும் -

தொல்லைகளுக்குள்ளே துன்பத்தையே இன்பமெனக் கருதிக்கொண்டு தொடர்ந்து இப்போது மேற்கொண்டுள்ள பயணத்தையே தொடருவது என்ற முடிவோடும்;

உடன்பிறப்பே, நீ துணை இருக்கிறாய் என்ற துணிவோடும் பிறந்தகத்திலிருந்து விடைபெற்று;

தமிழ் மக்களுக்காக மேலும் மேலும் உழைக்கின்ற அருந்தவத்தில் ஆழ்கின்றேன்!

அன்புள்ள,

மு.க.

3-10-2009

3417. சொன்னது; யாராம்? என்ன பேராம்?

உடன்பிறப்பே,

கடந்த செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள் புது டெல்லியில் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை; தி.மு.கழக, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து - இலங்கையில் நடைபெற்ற போரின்போது உள்நாட்டில் இடம் பெயர்ந்த இலட்சக் கணக்கான தமிழர்கள் மீண்டும் அவர்களது இல்லங்களுக்குத் திரும்பவும்; அவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்றும்; அப்பாவித் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை நிறுத்தும்படி எச்சரிக்கை செய்யவேண்டும் என்றும்; இலங்கையில் முள் கம்பி வேலிகளுக்குள் அல்லல்படும் தமிழர்களின் உண்மை நிலையினை நேரில் சென்று பார்த்து அறிந்துவர, நமது கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றினை இலங்கைக்கு அனுப்பிட ஆவன செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதை அறிவாய்! மனுவினைப் பெற்றுக்கொண்ட பிரதமர் அவர்கள் இந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று பதில் அளித்தார்.

இதன் தொடர்ச்சியாகத்தான் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் ஆலோசனைப் படி மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் சென்னை வந்து என்னை நேரில் சந்தித்து உரையாடியதன் விளைவாக - கடந்த 22 ஆம் தேதி பிரதமரைச் சந்தித்து கோரிக்கை வைத்த கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றினை இலங்கைக்கு அனுப்பி, அங்கே அகதிகள் முகாம்களில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களின் நிலையை அறிந்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவினை மத்திய அரசோ, மாநில அரசோ அவர்கள் செலவிலே அனுப்பவில்லை. அந்தந்த கட்சிகளுக்கான

நாடாளுமன்ற உறுப்பினர்களின் விமானக் கட்டணம் உட்பட்ட செலவுகளை அந்தந்த கட்சிகள்தான் ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்தக் குழு இலங்கைக்குச் சென்று நிலைமைகளை அறிந்துவர இந்திய, இலங்கை அரசுகள் அனுமதி அளித்துள்ளன.

ஆனால் இலங்கை சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு பற்றி மூன்று மாத ஓய்வுக்குப் பின் தலைநகரம் திரும்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவியும் - அவரோடு இன்னமும் தோழமையிலே இருக்கிறோமா இல்லையா என்று தெரியாத நிலையில் உள்ள சில கட்சிகளும் தனித்தனியாக அவசர அவசரமாக அறிக்கைகளை தந்துள்ளனர்; பேட்டிகளை அளித்துள்ளனர். அவர்களுக்கு இலங்கையில் முகாம்களில் தமிழர்கள் அவதிப்படுவதைப் பற்றியோ அவர்களைச் சென்று பார்த்து நிலைமைகளை அறிந்து வர வேண்டும் என்பதைப் பற்றியோ கவலையில்லை.

இங்கேயுள்ள தி.மு.க., காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணியைப் பற்றி தாக்கி அறிக்கை விட வேண்டும் என்பதுதான் குறிக்கோள். அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏன் அனுப்பவில்லை என்கிறார்கள். அந்தக் கட்சியிலே உள்ளவர் களுக்கு உண்மையிலேயே இலங்கை சென்று நிலைமைகளை அறிந்துவர வேண்டுமென்று அக்கறை இருக்குமேயானால், அவர்கள் பிரதமரைச் சந்தித்து கோரிக்கை வைத்து - இந்திய அரசு இலங்கை அரசோடு அதைப்பற்றி கலந்தாலோசித்து அனுமதி பெற்று சென்று பார்க்க வேண்டியதுதானே? அவர்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபடாமல், நாம் ஈடுபட்டாலும் அதற்கு குற்றம், குறை கூறி அறிக்கை விட்டுக் கொண்டிருந்தால், அது இலங்கைத் தமிழர்களைக் காப்பதாக ஆகிவிடுமா? இலங்கைப் பிரச்சினை பற்றி விவாதிக்க தி.மு.கழகச் சார்பில் நடத்தப்பட்ட - அவ்வளவு ஏன், அரசு சார்பிலேயே அழைப்பு அனுப்பப்பட்டு நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டும் - பின்னர் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தும் - அரசு நடத்துகின்ற இந்த அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் "கபட நாடகம்" என்று ஒவ்வொரு முறையும் அறிக்கை வெளியிட்டவர்கள் இன்னமும் அத்தகைய அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பவர்கள் யார் என்பது தமிழ்நாட்டிலே உள்ள மனச்சாட்சி கொண்ட அத்தனை மக்களுக்கும் மிக நன்றாகவே தெரியும்.

அறியாமைக்கும் அவசரத்துக்கும் பெயர் போன ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் - ''இந்த நாடாளுமன்றக் குழுவிற்கு கருணாநிதியின் மகன் மு.க. ஸ்டாலின் தலைமை வகிக்கப் போவதாக அறிவிப்பு வருகிறது. நாடகத்தின் தன்மை அப்போதுதான் தெளிவாகப் புரிகிறது. இதில் எழுந்துள்ள முக்கியமான கேள்வி என்னவென்றால், ஒரு நாடாளுமன்றக் குழுவிற்கு சட்டமன்ற உறுப்பினரும், மாநில அமைச்சருமான மு.க. ஸ்டாலின் எப்படி தலைமை வகிக்க முடியும் என்பதுதான்'' என்று கேட்டு எழுதியிருக்கிறார்.

தம்பி மு.க.ஸ்டாலின் தலைமை வகிக்கப் போவதாக அறிவிப்பு அரசின் சார்பிலோ, கட்சியின் சார்பிலோ வந்ததா? அல்லது நான் விடுத்த அறிக்கையிலே அவர் தலைமை வகிக்கப் போவதாகக் கூறினேனா? பத்திரிகையில் வெளி வந்த ஏதோவொரு யூகச் செய்தியைப் படித்துவிட்டு, மு.க.ஸ்டாலின் எப்படி தலைமை வகிக்க முடியும் என்று அவரே அறிக்கை விட்டிருப்பதைப் பார்க்கும்போது - ஜெயலலிதா எப்படி அரசியலில் அவசரப் படுகிறார்; என்பது புரிகிறதா இல்லையா?

அடுத்து அந்தக் குழுவில் கருணாநிதியின் செல்ல மகள் கனிமொழி இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது என்று என் குடும்பத்தினர் மீது வயிறு எரிகிறார். இவர்களுக்கெல்லாம் - இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டாமென்று நினைத்தாலும், வம்புக்கு இழுத்தால் என்ன செய்வது?

இந்தக் குழு இலங்கை சென்று திரும்பியதும், கருணாநிதியிடம் அறிக்கையை அளிக்குமா? அல்லது இந்திய நாடாளுமன்றத்திடம் அறிக்கையை அளிக்குமா? என்றும் ஜெயலலிதா கேட்டிருக்கிறார். நிச்சயமாக ஜெயலலிதாவிடம் அந்த அறிக்கையை அளிக்காது! எங்கள் தோழமை அணியின் சார்பில் சென்றுள்ள குழு அது. எங்கள் கட்சிகளின் செலவிலே அனுப்பி வைக்கப்பட்ட குழு அது. அறிக்கையை எங்களிடம்தான் அது அளிக்கும். குழு பற்றிய அறிவிப்பு நாடாளுமன்றத்திலே அறிவிக்கப்பட்டு, அரசின் சார்பில் - அரசின் செலவில் குழு சென்றிருக்குமேயானால், அப்போது குழு அரசிடமோ, நாடாளுமன்றத்திலோ அறிக்கையை அளிக்கும். இந்த எளிய நடைமுறை கூடத் தெரியாமல் கேள்வி கேட்டு அறிக்கை விடுத்திருக்கிறார் அம்மணி!

இலங்கையிலே முள் வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு, இலங்கைத் தமிழர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அறிந்து அவர்களின் இன்னல்களைக் களைய எப்படியோ முயற்சி செய்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அதற்கு வக்கணை பேசுவதோடு, அதனை ஜெயலலிதா கேலிக் கூத்தான நாடகம் என்று அறிக்கை விடுகிறார் என்றால், இலங்கைத் தமிழர்களிடம் அவருக்கு உள்ள அக்கறை நமக்குத் தெரிகிறதா இல்லையா? இலங்கையிலே தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஆதரித்து, இலங்கை அரசுக்கும் அதன் அதிபருக்கும் ஆதரவாக அறிக்கை விட்டவர்தானே ஜெயலலிதா. அவருக்கு இந்தச் செயல் கேலிக் கூத்தான நாடகமாகத்தான் தெரியும்.

மேலும் ஜெயலலிதா அறிக்கையிலே இறுதியாக ஆத்திரத்தின் உச்ச கட்டத்திற்குச் சென்று - ''திருக்குவளை கோயிலில் உள்ள அங்காளபரமேஸ்வரி அம்மனுக்கு என்னதான் பிரார்த்தனை செய்தாலும், தமிழ் மக்களுக்கு எதிராக கருணாநிதி செய்த பாவச் செயல்களுக்கு விமோசனம் கிடைக்காது'' என்று முடித்திருக்கிறார். நான் என்ன பாவச் செயல்களைச் செய்து விட்டேன்? அவரை ஒருமுறை கூட பார்த்தது கிடையாதே? பேசியதில்லையே? வேறு என்ன பாவம் செய்துவிட்டேன்? பிரார்த்தனை, யாகம், பூஜை, புனருத்தாரணம் எல்லாம் ஜெயலலிதாவுக்குத் தான் கை வந்த கலை என்பதும், தமிழ் மக்களுக்கு எதிராக நான் பாவச் செயல்களை செய்தேனா? அல்லது அவர் பாவச் செயல்களை செய்தாரா? என்பதை தமிழ் மக்கள் நன்கறிவார்கள் என்பதும் அவர் செய்த பாவச் செயல்களுக்குத்தான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கெனவே பல முறை பாடம் புகட்டி மூலையிலே அவரை இப்போது உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதும் எழுதி தெரிந்து கொள்ள வேண்டியதல்ல. நேற்று நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே கூட 100 இடங்களுக்கு 17 இடங்களில்தான் அந்தக் கட்சி வெற்றி பெற்றது என்ற ஓர் உதாரணம் போதுமல்லவா?

அயல்நாடு ஒன்றுக்கு, வேறொரு நாட்டிலிருந்து அதிகாரபூர்வமான குழு ஒன்றையோ, அதிகாரப்பூர்வமற்ற குழு ஒன்றையோ அனுப்ப வேண்டுமென்றால், அந்த அயல்நாட்டின் அனுமதியின்றி அனுப்ப முடியாது என்பது சிறுபிள்ளைக்குக்கூடத் தெரிந்த விஷயம். அதனால்தான் இரண்டு அரசுகளின்

அனுமதிகளையும் பெற்று எங்கள் தோழமைக்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் நிலைமைகளை அறிந்து வர அங்கே சென்றுள்ளார்கள். தற்போதுகூட, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் பிரச்சாரப் பயணம் நடத்தப் போவதாகவும், பொதுக்கூட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய கட்சியின் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கை. அதற்கு ஏன் எங்களை அழைக்கவில்லை என்றா கேட்க முடியும்? பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழுவை அனுப்பா விட்டால் உண்மைகளை கண்டறிய முடியாது என்றும் அந்த இயக்கத்தினர் பேட்டியில் கூறியுள்ளார்கள். அந்த இயக்கத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் அழைத்துக் கொண்டு போய், பிரதமரைச் சந்தித்து கோரிக்கை வைப்பதை யார் தடுத்தார்கள்? அதற்கான முயற்சியிலே ஈடுபடாமல், நாம் செய்கின்ற முயற்சிகளை கண் துடைப்பு நாடகம் என்று விமர்சனம் செய்வது சரியா?

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ராஜபக்சேயின் விருந்தினராக எம்.பி.க்கள் குழு போயிருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். ராஜபக்சேயின் விருந்தினராக இந்தக் குழு செல்லவில்லை. அந்த நாட்டின் அதிபர் அவர் என்ற முறையிலே அவருடைய அனுமதியோடு இந்தக் குழு சென்றுள்ளது என்பதுதான் உண்மையாகும். எப்படியாவது இலங்கையிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நாங்கள் எங்களாலான முயற்சிகளிலே ஈடுபடுகிறோம். இலங்கைத் தமிழர்கள்பால் எல்லோருக்கும் அக்கறை உண்டு. அவர்களுக்கு எந்த வகையில் எல்லாம் உதவிட முடியுமென்று பார்க்க வேண்டுமே தவிர, இங்கே யுள்ளவர்களே ஒருவருக்கொருவர் அறிக்கை விட்டுக்கொண்டிருந்தால், இலங்கைத் தமிழர்களின் இன்னல் களைந்துவிடுமா? எனவே இங்குள்ள எதிர்க்கட்சிகள் உண்மையிலேயே இலங்கைத் தமிழர்கள்பால் அவர்களுக்கு அக்கறை இருக்குமேயானால், எதற்கெடுத்தாலும் எங்கள் மீது காய்ந்து விழுவதை நிறுத்திக் கொண்டு - இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற என்ன வழி என்பதிலே கவனத்தைத் திருப்பிட வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். இப்படி தமிழ்நாட்டில் நமக்குள்ளே மோதிக் கொண்டு தானே - இலங்கைவாழ் தமிழர்களிடையேயும் சகோதர யுத்தத்திற்கும் வழிவகுத்து இன்றைக்கு இந்த அவலநிலைக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை இனியாவது சிந்திக்க வேண்டாமா? தமிழகச் சட்டமன்றத்தில்; விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஜெயலலிதா அம்மையார் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தை அதற்குள் மறந்துவிட இங்குள்ள தமிழ் மக்கள்; ஏமாளிகளா? அல்லது கோமாளிகளா? ஒரு யுத்தம் என்றால் அதில் அப்பாவி மக்கள் சாவது சகஜம்தான் என்று சொன்னது; யாராம்? அவருக்கு என்ன பேராம்?

அன்புள்ள,

மு.க.

12-10-2009

3418. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

உடன்பிறப்பே,

"முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் புதிய அணை கட்டுவதற்கான ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள கேரள அரசுக்கு மத்திய அரசு அளித்த அனுமதிக்கு தடை விதிக்கக் கோரி, தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை 20-10-2009 வரை ஒத்தி வைத்துள்ளது என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. கருணாநிதியின் முகத்தில் உச்சநீதி மன்றம் அறைந்தாற்போல் ஆணை இட்டிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை."

இந்த அறிக்கையை விட்டிருப்பவர் கேரள மாநில முதல்வரோ, அந்த மாநில அமைச்சர்களோ அல்ல. தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதாவின் அறிக்கைதான் இது. தமிழ் நாட்டு மக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டின் உரிமைக்காக வாதாடும்போது, அதற்கு உடனடியாக சாதகமான தீர்ப்பு கிடைக்காவிட்டால், அதற்காக மகிழ்ச்சியடைந்து இப்படியொரு அறிக்கையை விடக்கூடியவர் எப்படிப்பட்டவர் என்பதை தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும்தான் உணர்ந்துகொள்ள வேண்டும்.

முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் புதிய அணை கட்டுவது பற்றி தமிழக அரசின் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் ஏற்கெனவே ஒரு வழக்கு தொடரப்பட்டு அதன் விசாரணை 20-10-2009 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழக அரசின் சார்பில் தற்போது மத்திய அரசு வழங்கிய அனுமதிக்கு தடையாணை கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவிலேதான் உச்சநீதிமன்றம், இதற்கான பிரதான வழக்கே விசாரணைக்கு இந்தத் திங்கள் 20ஆம் நாளில் நடைபெற விருப்பதால், அப்போது இதையும் சேர்த்து விசாரித்துக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்துள்ளது. இது என் முகத்தில்

அறைந்தாற்போன்ற ஆணையாம். ஆடிப் பாடுகிறார் ஜெயலலிதா! இது முகத்தில் அறைந்தாற்போன்ற ஆணை என்றால், பின்வரும் தீர்ப்புகளுக்கு என்ன பெயரிட்டு அழைக்கலாம் என்பதை அவர்களே முடிவு செய்துகொள்ளட்டும்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜெயலலிதா கிருஷ்ணகிரி, ஆண்டிபட்டி, புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய நான்கு தொகுதிகளில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தார். வேட்பு மனுக்களின் பரிசீலனை நடைபெற்றபோது, கிருஷ்ணகிரி தொகுதி தேர்தல் அதிகாரி மதிவாணன் வேட்பு மனுவைப் பரிசீலித்துவிட்டு, ஜெயலலிதாவுக்கு 2 ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாலும், அவர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாலும் அவரது வேட்பு மனு நிராகரிக்கப்படுவதாக அறிவித்தார். டான்சி நில பேர வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இரண்டாண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவு கூறுகிறது.

நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறை தண்டனை விதிக்கப்பட்டால் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட நாள் முதல் தேர்தலில் போட்டியிட தகுதியை இழந்தவராக ஆகிறார். மேற்குவங்க மாநில முன்னாள் முதல்வரும், பிரபல வழக்கறிஞருமான சித்தார்த்த சங்கர் ரே அவர்களே ஜெயலலிதாவுக்காக ஆஜராகி, அவருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறை தண்டனை உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அவரது மனுவை ஏற்க வேண்டுமென்று வாதாடினார். ஆனால் தேர்தல் அதிகாரி மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் 1997ஆம் வருஷத்திய சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஜெயலலிதாவின் வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்தார்.

ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து 2001ஆம் ஆண்டு ஏப்ரல் 26-ந்தேதிய எக்ஸ்பிரஸ் நாளிதழ், "அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா நான்கு இடங்களிலே தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அனைத்தும்

தள்ளுபடி செய்யப்பட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தேர்தல் ஆணையம் 1997இல் பிறப்பித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற ஒருவர் தேர்தலிலே நிற்க முடியாது என்ற ஆணையை தேர்தல் அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றியிருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்புமனு தாக்கல் செய்யக்கூடாது என்று சட்டத்திலே இருந்தபோதிலும், நான்கு தொகுதிகளிலே தனது அதிர்ஷ்டத்தை ஜெயலலிதா சோதிக்க முயற்சித்தார். பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி செய்வதின் காரணமாக தனக்கு ஏற்படும் அனுதாப அலையை வைத்து ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று கணக்கிட்டுள்ளார்'' என்று எழுதியது.

இந்து நாளிதழ், "எதிர்பார்த்தவாறே தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் கமிஷன் 1997ஆம் ஆண்டு தகுதியின்மை குறித்து பிறப்பித்த உத்தரவை உறுதிப்படுத்திய பிறகு ஜெயலலிதாவின் தகுதியின்மை என்பது நிச்சயமாகிவிட்டது. ஜெயலலிதா நான்கு இடங்களில் போட்டியிடுவதன் மூலம் தனக்கு ஏதாவதொரு இடத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு ஏற்படாதா என்று எண்ணியிருந்தால் அது தவறான முடிவாகும் என்பதோடு, அவருடைய தகுதியின்மையை உறுதி செய்வதற்கு அதுவே மற்றொரு காரணமாகவும் ஆகிவிட்டது'' என்று எழுதியது.

6-5-2001 தேதிய "ஆனந்தவிகடன்'' இதழ் தனது தலையங்கத்தில், "இந்தத் தேர்தலில் ஜெயலலிதாவின் அணுகுமுறை நியாய தர்மங்களையெல்லாம் மீறிய ஒன்றாக இருந்து வருகிறது. வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும், சட்டசபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்படுவதற்கான தகுதியை தான் இழந்துவிட்ட பிறகும் தன்னுடைய திட்டத்தை ஜெயலலிதா மாற்றிக் கொண்டதாகவே தெரியவில்லை. அ.தி.மு.க. கூட்டணி ஜெயித்தால் அவரே முதல்வராக இருப்பேன் என்று போகும் இடமெல்லாம் அவர் பறைசாற்றி வருகிறார். அரசியல் மரபுகள் பற்றியெல்லாம் மக்களுக்கு என்ன தெரியும் என்ற நினைப்பில் தன்னை முதல்வராக முன்னிறுத்திப் பேசினால்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற சிந்தனையில் மக்களையே முட்டாளாக்கத் துணிந்திருப்பது வேதனைக்குரிய விஷயம். போட்டியிடுவதற்கு

தடை ஏற்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பை முழுமனதோடு ஏற்று "எங்கள் கூட்டணியை வெற்றிபெறச் செய்யுங்கள். அப்படி செய்தால், என் சார்பாக உங்களுக்கு ஏற்புடைய ஒரு தலைவரை முதல்வர் பதவியில் அமர்த்துவேன், நல்லாட்சி வழங்கப் பாடுபடுவேன்'' என்று ஜெயலலிதா சொல்லியிருந்தால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கும்'' என்று விகடன் எழுதியது.

ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த 14ஆம் தேதி அன்றே அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப்பெற்றது. ஜெயலலிதா சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனடியாக 14ஆம் தேதி மாலையிலேயே அவருக்கு கவர்னர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்க தடை கோரி யாராவது வழக்கு தொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவசர அவசரமாகப் பதவியேற்றதாக அப்போது ஏடுகள் எல்லாம் கூறின.

ஜெயலலிதா முதல்வராக பதவி ஏற்றதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கில் "ஊழல் வழக்கில் தண்டனை அடைந்த ஒருவர் மீது நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்படும் வரை, அரசுப் பதவியில் நீடிக்கக் கூடாது, குற்றவாளி என்று கீழ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேல் நீதிமன்றம் நிறுத்தி வைக்கக் கூடாது, தண்டனையை வேண்டுமானால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். ஆனால் ஊழல் குற்றவாளி ஒருவர் குற்றச் சாட்டுகளில் இருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்படும் வரை அரசுப் பதவியில் நீடிக்கக் கூடாது. அப்படி அமர்வதற்கு நீதிமன்றம் துணை போகக் கூடாது" என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.டி. தாமஸ், எஸ்.என். வரியவா ஆகியோர் 2-8-2001 அன்று பரபரப்பான ஒரு தீர்ப்பை தெரிவித்தனர்.

ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமித்தது சட்டப்படி செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் 21-9-2001 அன்று உச்சநீதி மன்ற நீதிபதி எஸ்.பி. பரூச்சா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் வழங்கிய ஒருமனதான தீர்ப்பில், "தமிழக முதல்வராக ஜெயலலிதா நியமனம் செய்யப்பட்டது செல்லாது.

அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி, மே 14-ந்தேதி ஜெயலலிதாவிற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது அரசியல்

சாசனத்துக்கு எதிரானது. இனியும் அவர் முதல் அமைச்சராக நீடிக்க முடியாது. ஏனெனில் மே 14-ல் அவர் நியமிக்கப்பட்டது சட்டப்படி செல்லத் தக்கதல்ல'' என்று தெரிவித்தனர். மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு சில நாட்கள் அவகாசம் தேவையென்று ஜெயலலிதாவின் வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால் நீதிபதிகளிடம் கேட்டபோது, "முதல் அமைச்சர் இறந்தால் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யப் படுகிறது, இவ்வளவு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் ஒரு கட்சி எந்த நேரத்திலும் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம்'' என்று கூறி அந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது.

★★

இன்னொன்று; ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், நீதித் துறையில் காலியாக உள்ள நீதிபதிகள் மற்றும் இதரப் பணி இடங்களை நிரப்பக் கோரி உயர்நீதி மன்ற பதிவாளரே தொடர்ந்த வழக்கு தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி, நீதிபதி ரவிராஜ பாண்டியன் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் 6-3-2003 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு நீதிபதிகள் ஜெயலலிதாவுக்கு தெரிவித்த கண்டனம் வருமாறு :-

"நீதிபதிகள் மற்றும் பணியாளர்கள் இல்லாமல் நீதிமன்றங்கள் எப்படி செயல்பட முடியும்? காலிப் பணி இடங்களை நிரப்பும்படி தமிழக அரசுக்கு கடிதம் எழுதி நீதி மன்றம் சோர்ந்து விட்டது. நீதித் துறைக்கு அரசு தர்மம் செய்யவில்லை. அரசியல் அமைப்புச் சட்டப்படி உரிய நிதி ஒதுக்க வேண்டிய கடமை உள்ளது. நீதித்துறைக்கு அரசு உரிய நிதி ஒதுக்கா விட்டால் நீதிமன்றங்களை மூட வேண்டியிருக்கும். இதே நிலை நீடித்தால் தமிழகத்தைப் பொருளாதார நெருக்கடியால் பாதித்த மாநிலமாக அறிவிக்கும்படி அரசின் சட்டத்தைக் காக்கும் அதிகார மேலிடத்திற்குப் பரிந்துரைக்கப்படும். இதுதான் தமிழக அரசு உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கும் மரியாதையா?"

இந்தத் தீர்ப்பைப் பற்றி "கல்கி" வார இதழ் தனது 23-3-2003 தேதிய தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது :

"தமிழகத்தில் நிதி நெருக்கடி நிலை பிரகடனம் செய்யுமாறு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டியதுதான் என்று கடுமையாக விமர்சித்திருக்கிறார் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி. போதிய அளவில் நீதிமன்ற ஊழியர்களை நியமிக்காததற்காகவும்,

நீதிமன்றங்களின் அடிப்படைத் தேவைகளை அபிவிருத்தி செய்ய, போதிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யாததற்காகவும், தமிழக அரசைக் கண்டனம் செய்திருக்கிறார்.

இதே நேரத்தில் தமிழக அரசு மாவட்டத்துக்கு மாவட்டம் புதிய நலப் பணிகளையும், திட்டங்களையும் அறிவித்து முதல்வரின் ஆளுயரப் படத்துடன் நாளிதழ்களில் முழுப் பக்க விளம்பரம் செய்து வருகிறது. கஜானா காலி என்று ஆட்சியைத் தொடங்கி, ஆள் குறைப்பு, போனஸ் குறைப்பு என்று சகட்டு மேனிக்கு அறிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, இத்திட்டங்களைத் துவக்கி வைக்க சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்வதுடன் தமது சாதனைகளையும், எதிர்க் கட்சியினர் தமக்குத் தரும் ரோதனைகளையும் மக்களிடம் விவரிக்க அந்த விழா மேடைகளைப் பயன்படுத்தி வருகிறார். விழாக்களுக்கும், முதல்வர் ஜெயலலிதா பயணத்துக்கும் செய்யப்படும் ஆடம்பரச் செலவுகளுக்கு அளவே இல்லை."

★★

மற்றொன்று; டான்சி நிலத்தை ஜெயலலிதா வாங்கிய வழக்கிலே அளிக்கப்பட்ட தீர்ப்புதான் சாதாரணமானதா? நிலத்தைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும், ஜெயலலிதா மனச்சாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டு மென்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வில்லையா?

தற்போது உச்சநீதிமன்றம் பத்து நாட்களுக்கு வழக்கை தள்ளி வைத்ததை கருணாநிதியின் முகத்தில் அறைந்தாற்போன்ற தீர்ப்பு என்று ஜெயலலிதா விமர்சிக்கிறாரே, அவரது ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட இதுபோன்ற தீர்ப்புகள் எல்லாம், எங்கே அறைந்தது போன்ற தீர்ப்புகள் என்பதை அவர்தான் கூறவேண்டும்.

ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையிலே ஆய்வுப் பணிகள் 2007 ஆம் ஆண்டு துவக்கத்திலேயே தொடங்கப்பட்டு விட்டதாக கேரள அமைச்சர் கூறியுள்ள வாசகங்களை எடுத்துக் காட்டி, அந்தத் தகவல்கள் எனக்குத் தெரியுமென்றும், ஆனால் நான் அவற்றை

மறைத்து உச்சநீதி மன்றத்திலே வழக்கு தொடுத்தேன் என்றும் சொல்லியிருக்கிறார்.

கேரள அமைச்சரும், ஜெயலலிதாவும் கூறுவது உண்மையானால், கேரள அரசின் சார்பில் 30-3-2007 அன்று தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவிலோ அல்லது அதற்குப் பிறகு அவர்களது ஐந்து சாட்சிகள் 2008ஆம் ஆண்டில் தாக்கல் செய்த சத்திய பிரமாணப் பத்திரத்திலோ - குறுக்கு விசாரணையின் போதோ எந்த ஆய்வைப் பற்றியும் தெரிவிக்க வில்லையே, அது ஏன்? உண்மையில் தமிழகத்திற்கு கேரள அரசின் ஆய்வுப் பணிகள் குறித்து எந்தத் தகவலும் கொடுக்கவில்லை. அவர்கள் ஆய்வு செய்ய மத்திய அரசிடம் கோரியுள்ள தகவலைக் கூட அவர்கள் தமிழகத்திற்குத் தெரிவிக்க வில்லை.

கேரள அரசு ஆய்வு மேற்கொண்டதாகக் கூறப்படும் பகுதி வன விலங்குகள் சரணாலயத்திற்கு உட்பட்டதாகும். இந்த இடத்தில் எந்த விதமான ஆய்வுப் பணிகள் துவக்க வேண்டியிருந்தாலும், வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும். மேலும், வனப்பாதுகாப்புச் சட்டத்தின்படியும் முன் அனுமதி உச்ச நீதி மன்றத்தில் பெறவேண்டும். அவ்வாறு எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் கேரளா ஆய்வினை மேற்கொண்டதாக ஜெயலலிதா கூறுகிறாரா? அனுமதி பெற்றுத்தான் ஏற்கெனவே ஆய்வு நடந்ததாகச் சொல்வார் களானால், கடந்த 6ஆம் தேதி தான் அனுமதி வழங்கியதாக மத்திய இணை அமைச்சர் ஜெயராம் ரமேஷ் கூறியது தவறா? 2007ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்போ கேரள அரசு எந்தவிதமான அனுமதியும் பெற்றதாக தகவல் இல்லை. இங்குள்ள தமிழர்கள் நலம் நாடுவோர், தமிழ்நாடு வளமாக இருக்க வேண்டுமென்று கருதுவோர் - இதற்கெல்லாம் நீதிமன்றங்களை நாடினால் மட்டும் போதுமான தல்ல, மக்கள் மன்றங்கள்தான் முடிவெடுக்க வேண்டும் என்ற நிலைக்குத் தான் துரத்தப்படுகிறோமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும்!

இன்னும் கூற வேண்டுமேயானால், ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போது தான் 18-3-2006 அன்று கேரள அரசு சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தையே இயற்றி, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டுவராத ஒரு நிலைமையை ஏற்படுத்தியது. அது ஜெயலலிதா அரசுக்கு எதிரான

செயல் தானே என எண்ணி, உடனே நாம் அதனை வரவேற்று எந்த அறிக்கையும் ஜெயா போல விடவில்லை என்பதும் - கேரள அரசின் சட்டத்திற்கு எதிராக ஜெயலலிதா அரசு உச்ச நீதிமன்றத்திலே தொடர்ந்த வழக்கினை, அதே 2006ஆம் ஆண்டு மே திங்களில் பதவிப் பொறுப்புக்கு வந்த கழக அரசு தொடர்ந்து அந்த வழக்கை நடத்தி வருகிறது என்பதும் தான் உண்மை. எனவே நம்மைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டின் நலன், தமிழ் மக்களின் நலன் என்பதில் தான் அக்கறை செலுத்துகிறோமே தவிர, பொறுப்பிலே இருப்பது யார் என்பதைப் பார்த்து செயல்படவில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

மு.க.

13-10-2009

3419. பேரறிஞர் புகழ்ந்த என்னைப் பெற்ற தாய்!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா, நேற்றைய தினம் விடுத்த அறிக்கையில் ராதாபுரம் பேருந்து நிலையத்திற்கு "முத்துவேலர் - அஞ்சுகத்தம்மாள் பேருந்து நிலையம்" என்று பெயர் சூட்டவும், அதனை 13.10.2009 அன்று துணை முதல்வர் தம்பி மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கவிருப்பதாகவும் தனக்கு செய்திகள் வந்திருப்பதாக வும், எழுதியிருக்கிறார்.

அவரது அவசரத் தனத்திற்கும் அறியாமைக்கும் எடுத்துக்காட்டாகத்தான் அந்த அறிக்கையும் எழுதப்பட்டுள்ளது. 13ஆம் தேதி துணை முதல்வர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியின் அழைப்பிதழை உடனடியாக எடுத்து வரச் செய்து பார்த்தேன். அந்த அழைப்பிதழில் எந்த இடத்திலும் முத்துவேலர் - அஞ்சுகத்தம்மாள் பேருந்து நிலையம் திறப்பு விழா என்று குறிப்பிடப்படவே இல்லை. இராதாபுரம் பேருந்து நிலையம் துவக்க விழா என்றுதான் அச்சிடப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து நிலையம் பற்றிய விவரத்தை நான் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விசாரித்தேன். அவர் அனுப்பிய விவரம் வருமாறு :-

"ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் அவர்களின் நடவடிக்கையின்படி, இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், இராதாபுரம் கிராம ஊராட்சியில் 2007-2008ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மான்யம், உள்கட்டமைப்பு பற்றாக்குறை நிரப்பும் நிதி (SFC-IGF) திட்டத்தின் கீழ் ரூ. 71.91 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, தற்போது திறக்கப்பட தயார் நிலையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிப் பண்பாடு ஆணையரின் நடவடிக்கையின்படி இராதாபுரம் அருள்மிகு வரகுணபாண்டீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 90 சென்ட் புஞ்சை நிலத்தை புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பொருட்டு, நிலமதிப்பு ரூ. 3,13,632/- உடன் 50 சதவிகிதம் கூடுதல் தொகை சேர்த்து மொத்தத் தொகை ரூ. 4,70,448/-க்கு விற்பனை செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இராதாபுரம் ஊராட்சிக்காக இந்தத் தொகை ரூ.4,70,448/- இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.அப்பாவு அவர்களால் இராதாபுரம் அருள்மிகு வரகுண பாண்டீஸ்வரர் திருக்கோவிலுக்கு 5-5-2007 அன்று செலுத்தப்பட்டு, அந்தக் கோயிலால் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டது.

இராதாபுரம் புதிய பேருந்து நிலையத்திற்கான 90 சென்ட் நிலத்தின் கிரயத் தொகையை இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு, நன்கொடையாளர் என்ற நிலையிலே இருந்து, தமது சொந்த நிதியை வழங்கிட முன்வந்த போது, - அந்தப் பேருந்து நிலையத்திற்கு முத்துவேலர் அஞ்சுகம் அம்மையார் நினைவு பேருந்து நிலையம் என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் தெரிவித்து - அதன் அடிப்படையில் இராதாபுரம் ஊராட்சி மன்றம் 7-5-2007 அன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அந்தப் பேருந்து நிலையத்தில், முத்துவேலர் அஞ்சுகம் அம்மையார் ஆகியோரின் சிலைகளை அமைக்கவும், அதனைப் பராமரிக்கவும் ஆகும் செலவினை சிலை அமைப்பாளரான திரு. மு. அப்பாவு அவர்களே ஏற்க வேண்டுமெனவும், போக்குவரத்துக்கு எவ்வித இடையூறும் இன்றி சிலை அமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது. அதன்படி சிலை நிறுவப்பட்டுள்ளது."

மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த விவரங்களையெல்லாம் அரசுக்குத் தெரிவித்ததோடு, இராதாபுரம் புதிய பேருந்து நிலையத்திற்கு பெயர் சூட்டுவது தொடர்பாக அரசு முடிவு செய்து ஆணை வெளியிடக் கேட்டுக் கொண்டுள்ளார். அரசின் சார்பில் இதுவரை எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. நான்

மாவட்ட ஆட்சித் தலைவரை இன்று தொலை பேசியில் தொடர்பு கொண்டு என் பெற்றோர் பெயரை பேருந்து நிலையத்திற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் சூட்ட வேண்டாமென்றும், அவர்களது சிலையைத் திறக்க வேண்டாமென்றும் உறுதியாகத் தெரிவித்து விட்டேன்.

ஆனால் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் முத்துவேலர் - அஞ்சுகத்தம்மாள் என்பவர்கள் யார்? அவர்கள் இந்த நாட்டிற்கு என்ன தியாகம் செய்தார்கள்? எந்தத் துறையில் சிறந்து விளங்கினார்கள்? என்பதை அறியும் பொருட்டு, வரலாற்றுப் புத்தகங்களை புரட்டிப் பார்த்தும் அவர்களைப் பற்றிய எந்தவிதமான தகவலையும் அறிந்துகொள்ள முடியவில்லை என்றும் எழுதியிருக்கிறார். எனது பெற்றோர்களான அவர்கள் இந்த நாட்டிற்காக, தமிழ் மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்க என்னை வழங்கியிருக்கிறார்களே, அதுவே அவர்கள் செய்த தியாகம்தான்! ஆனால் வரலாற்றுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தால் அம்மையார் ஜெயலலிதா செய்த தியாகங்கள் பற்றியும், அவர் எந்தத் துறையிலே சிறந்து விளங்கினார் என்பதைப் பற்றியும் பக்கம் பக்கமாக காண முடியும்.

வரலாற்றுப் புத்தகங்கள் ஏன்? முதலில் சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகளை

புரட்டிப் பார்த்தாலே போதுமே; இதோ சில உதாரணங்கள்!

- தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகளைக் கொண்டு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்" என்ற பெயரால் புதிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்படும். (6.4.1993)
- அம்பத்தூரில் சுமார் 29 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய விருக்கும் தொழில் நுட்பப் பயிலகத்திற்கு ஆறு கோடி மக்களால் ஆராதனை செய்யப்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரினையே சூட்டிட வாரியம் முடிவெடுத்துள்ளது. (8.4.1994)
- "ஜெ. ஜெ. ஹேண்ட்லூம் டவர்" (8.4.1994)

- "புரட்சித் தலைவி சீர்மிகு உயர் பள்ளி" (19.4.1994)
- மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரால் மகளிருக்கான டாக்டர் புரட்சித் தலைவி பொற்கோப்பை கால்பந்துப் போட்டி நேரு விளையாட்டு அரங்கத்தில் நடத்தப்படவிருக்கிறது. (19.4.1994)
- "முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் தமிழகத்தில் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் (19.4.1994).
- சிறந்த விளையாட்டு அணியினருக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் சிறந்த வேலைப் பாடுகள் அடங்கிய சுழற்கோப்பை (10.4.1994).
- அனைத்துச் சமுதாய நலக் கூடங்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுடைய பெயர் சூட்டப்படும். (26.4.1994)
- தமிழகத்திலே இருக்கிற அனைத்து நகராட்சிகளிலும், நவீன வசதிகள் கொண்ட திருமண மண்டபங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரிலே கட்டப்படும். (26.4.1994)
- புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா என்ற பெயரில் அழகு உலா ரதங்கள் இரண்டு இந்த ஆண்டு விடப்படும். (27.4.1994)
- திராவிட இனத்தினுடைய தன்மானத் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பெயர் வன உயிரின உய்விடத்திற்கு சூட்டப்படும். அதுபோன்று அங்கே அமைந்திருக்கின்ற தேசியப் பூங்கா, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா தேசியப் பூங்கா, முதுமலை" என்று இன்று முதல் அழைக்கப்படுகிறது. (26.4.1994)
- செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் புதிய கட்டிடத்திற்கு "புரட்சித் தலைவி

டாக்டர் ஜெ. ஜெயலலிதா" என்கிற திருப்பெயரை சூட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (30.4.1994)

- 60 லட்சம் ரூபாய் செலவில் கோவையில் எழுப்பப்பட்டு முடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகத்திற்கு "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ.ஜெ. மாளிகை" என்னும் திருப் பெயர் சூட்டப்படுகிறது. (30.4.1994)
- சென்னை திரைப்பட நகருக்கு திரை உலக வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவரான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஜெயலலிதா திரைப்பட நகர் என பெயர் சூட்டப்படும்.
- "ஜெ.ஜெ. 92" என்ற புதிய வகை வாசனை அரிசியை அறிமுகம் செய்திருக்கிறோம். விஞ்ஞான தொழில் நுட்பங்களை வழங்கும் விரிவாக்க அலுவலர்களுக்கு "டாக்டர் புரட்சித் தலைவி விருது" உருவாக்கியுள்ளோம். மேலும் "டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ச்சித் திட்டம்" அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது. (19.4.1995)
- ஆடு, கோழி, முயல் போன்றவைகள் வளர்க்கப்படும் "டாக்டர் புரட்சித் தலைவி மகளிர் கால்நடை கூட்டுறவுச் சங்கம்'' துவக்குவதை இத்துறை பெரும் பேறாக நினைக்கிறது. (19.4.1995)
- மாண்புமிகு முதல் அமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மீகக் கல்வித் திட்டம்.
- புரட்சித் தலைவி நல்லாசிரியர் விருது வழங்கும் திட்டம்.
- "புரட்சித் தலைவி ஆய்வுப் பெருந்தகையாளர் ஊக்குவிப்புத் திட்டம்."

இப்படியெல்லாம் பெயர் சூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது - அந்த விமர்சனங்களையெல்லாம் கேட்டு

புளகாங்கிதமடைந்து அமர்ந்திருந்த ஜெயலலிதா; தற்போது எனது பெற்றோர்களின் பெயர்களை ஒரு கிராம ஊராட்சிப் பேருந்து நிலையத்திற்கு - அதுவும் அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர் தனது சொந்தப் பொறுப்பில் கையிலிருந்து பணம் கொடுத்து வாங்கிக் கொடுத்துள்ள இடத்தில் - அவரது விருப்பத்தின் பெயரில் - என்னுடைய பெற்றோர்கள் பெயரை வைக்க விரும்பி - அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு - அதுவும் வெற்றி பெறாத நிலையில் - யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் பேருந்து நிலையம் திறக்கப்படுகின்ற போது - என்னுடைய பெற்றோர்களைப் பற்றி வரலாற்றுப் புத்தகங்களிலே தேடிப் பார்த்ததாக கிண்டல் செய்து அறிக்கை விடுகிறார் என்றால், அவரைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள்தான் எடை போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தலைவர்களின் பெயரால் திட்டங்களை அமைக்கலாம், அவர்களைப் பெற்றவர்களின் பெயரால் அமைக்கலாமா என்று கேட்கக் கூடும். தந்தை பெரியார் அவர்களின் துணைவியார் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்பு திட்டம்- பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அன்னையார் பெயரால் சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் - பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தாயார் பெயரால் பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் திட்டம் - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்னையார் பெயரால் சத்தியா அம்மையார் குழந்தைகள் காப்பகங்கள் திட்டம் என்று நமது ஆட்சியில் பல திட்டங்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. ஏன் அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலே கூட, 25-4-1995 அன்று பேரவை நடவடிக்கை குறிப்பைப் பார்த்தால் - இதோ அ.தி.மு.க. அமைச்சர் ம. சின்னசாமி பேசியிருக்கிறார், பாருங்கள் -

"கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருக்கிற இரண்டாவது ஆலைக்கு கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 2 என்ற ஆலைக்கு ஒரு புதிய பெயரைச் சூட்ட வேண்டுமென்று முடிவெடுத்துள்ளேன். ஒரு நிறுவனத்திற்கு பெயர் சூட்டுகிற பொழுது நாட்டிற்கு உழைத்தவர் களுடைய பெயரைச் சூட்டி மரியாதை செய்ய வேண்டும். அதே போல, நாட்டிற்கு உழைப்பதற்கு உரிய தலைவர்களை இந்த நாட்டுக்கு அளிக்கப் பெற்றவர்களுக்கும் மரியாதை செய்ய

வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழகத்தினுடைய ஆறரை கோடி மக்களுடைய தாயாக விளங்குகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி என்கிற தாயை தமிழ்நாட்டிற்கு தந்திட்ட தாய் **அன்னை சந்தியாவினுடைய பெயர் சூட்டப்படும்** என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்."

நான் இதனை தவறு என்று கூறவில்லை. ஜெயலலிதாவின் அன்னையார் பெயர் சூட்டப்படலாம், கருணாநிதியின் அன்னை பெயர் என்றால் வரலாற்றுப் புத்தகங்களைப் புரட்டி யார் அவர்கள் என்று தேடிப் பார்த்தேன் என்று கிண்டல் செய்யும் ஜெயலலிதாவின் தகுதியைப் பற்றி இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு விவரங்களையும் இங்கே தந்துள்ளேன்.

ஜெயலலிதாவுக்கு என்னுடைய பெற்றோரை தெரிந்திருக்க நியாயமில்லைதான்! ஏனென்றால் அவர் இருந்த உலகம் வேறு. ஆனால் என் அன்னை மறைந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா எழுதிய வாசகங்களில் ஒரு பகுதி இதோ :-

"குறுநகை காட்டும் கண்கள்! பொக்கை வாயிலே ஓர் புன்னகை! மூதாட்டி அஞ்சுகம் அவர்கள், சருகு, தளிர் ஆவது போலாகி விடுவார்கள்- தமது மக்களின் மகிழ்ச்சி கண்டு அல்ல - மாடு மனை கண்டு அல்ல - உற்றார் உறவினர் கண்டு அல்ல - இயக்கச் செய்திகளை, வெற்றிகளைக் கேட்டதும்!

கண்டவுடன், மேயர் நம்ம கட்சி தானே வரும்? அதைவிடக் கூடாது! புதுசா சட்டம் வருதாமே? பேப்பர்லே இன்னக்கி நம்ம கட்சி விஷயம் என்னென்ன வந்திருக்கிறது? நம்ம கட்சியைக் கேலி பண்ணிப் படம் போட்டாங்களாமே பேப்பர்லே, பாத்தீங்களா? என்ன செய்யப் போறீங்க? என்று இதுபோன்ற கேள்விகளைக் கேட்டு ஆர்வத்தைப் பொழிந்த ஒரு அன்னையை நான் கண்டதில்லை. தம்பி கருணாநிதிக்கு இப்படிப்பட்ட தாய்ச் செல்வம் பெற்றிருந்த காரணத்தால்தான் "நிதி" என்ற பெயரிட்டார்கள் போலும்!

இப்படிப்பட்ட மகனுக்கு வேறு விதத்திலே மனப்பான்மை கொண்ட தாய் அமைந்திருந்தால்? பொது வாழ்வு

புகைச்சல் நிரம்பியதாகிவிடும். கருணாநிதிக்கு வீட்டிலே கிடைத்த தாயின் புன்னகையும் அன்பும் பொது வாழ்க்கையில் புன்னகையுடன் ஈடுபட பெரிய வாய்ப்பினை அளித்தது என்பதை உணருகிறேன்.

குயில் பறந்துவிட்டது, நாதம் நிலைத்திருக்கிறது - மலர் உதிர்ந்து விட்டது, மணம் நிரம்பி இருக்கிறது - அஞ்சுகம் மறைந்து விட்டார்கள், அவர்கள் பற்றிய நினைவு நிலைத்திருக்கிறது."

பேரறிஞர் அண்ணா மட்டுமல்ல, அந்த நூலில் எம்.ஜி.ஆர்., நாவலர், பேராசிரியர், நடிகர் திலகம் சிவாஜி, சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், ஏ. கோவிந்த சாமி, சத்திய வாணிமுத்து, எஸ்.எஸ். ஆர்., அலமேலு அப்பாதுரையார், பொற்செல்வி இளமுருகு மற்றும் பலர் என் அன்னையைப் பற்றி எழுதி அது ஒரு சிறு நூலாகவே வெளிவந்துள்ளது. ஆனால்; மைசூர் மகாராஜா வழங்கிய ஒட்டியாணத்தை ஜெயலலிதா புரட்டிப் புரட்டி பார்த்திருப்பாரே தவிர; நான் குறிப்பிடும் நூலைப் பார்க்கவோ படிக்கவோ அவருக்கு நேரம் ஏது?

அன்புள்ள,

மு.க.

14-10-2009

3420. வளைந்த வாலை; நிமிர்த்திடவே முடியாது!

உடன்பிறப்பே,

நான் பல முறை ஜெயலலிதாவின் அறியாமை குறித்தும், அவசரத்தனம் குறித்தும் எழுதி விட்டேன். இருந்தாலும் அவர் தன்னைத் திருத்திக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத்தான் அவருடைய அறிக்கைகள் தொடர்ந்து தெரிவிக்கின்றன.

நேற்றைய அவருடைய அறிக்கையில்,

29-11-2006 அன்று அதாவது கருணாநிதி தலைமையில் தி.மு.க. அரசு நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பல மாதங்களுக்குப் பிறகு, டெல்லியில் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர், முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார் என்றும், அந்தக் கூட்டத்தில் கேரள முதல்வர் கலந்துகொண்டார் என்றும், நான் கலந்து கொள்ளவில்லை என்றும் என்மீது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டைத் தொடுத்துள்ளார்.

ஒரு முதலமைச்சர் மீது, ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இவ்வளவு பெரிய குற்றச்சாட்டை சுமத்தும்போது, அது உண்மைதானா என்பதைத் தெரிந்துகொண்டு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டாமா? அவருடைய அறிக்கைகளுக்குப் பதில் சொல்ல எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனாலும் திரும்பத் திரும்ப பொய்களையே சொல்லி, அதை ஏடுகளும் வெளியிடுகின்ற காரணத்தால், பதில் சொல்லாமல் இருந்து விட்டால் அவர் சொன்னது உண்மையாகி விடாதா?

அறிக்கை விடுவதிலே கிண்டல் வேறு! மகனுக்கும், மகளுக்கும் பேரனுக்கும் மத்திய அமைச்சரவையில் வளம் கொழிக்கும் இலாகாக்களை கேட்க கருணாநிதிக்கு நேரம் இருக்கும், மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கூட்டிய கூட்டத்திற்கு ஏன் போகவில்லை என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு இதோ எனது பதில்:- ஜெயலலிதா அவர்களே, மத்திய நீர்வள ஆதார அமைச்சர் திரு. சைபுதீன் சோஸ் அவர்கள் முன்னிலையில் 29-11-2006 அன்று டெல்லியில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் என்ற முறையில் நானும், அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும், மின் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமியும், தலைமைச் செயலாளரும் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டோம் என்பது உண்மை.

அந்தக் கூட்டத்தில் நான் உரையாற்றி, ஏடுகளிலே அப்போதே வெளிவந்துள்ளது. கூட்டத்தில் நான் கலந்து கொண்ட புகைப்படமும் வெளி வந்தது. கூட்டத்திற்குப் பிறகு டெல்லியிலும், சென்னையிலும் இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக செய்தி யாளர்களிடம் பேசி அதுவும் ஏடுகளிலே வெளிவந்துள்ளது.

அவசரக் குடுக்கைத்தனமாக அந்தத் தேதிய நாளேடுகளைக் கூடப் புரட்டிப் பார்க்காமல், ஜெயலலிதா என்னைக் குற்றஞ் சாட்டி அறிக்கை கொடுத்துள்ளார். நான் அந்தக் கூட்டத்தில் எனது தொடக்க உரையில், அணை வலுவாக உள்ளது என்றும், அணை பாதுகாப்பு குறித்து பீதியோ அல்லது குழப்பமோ அடைய எத்தகைய முகாந்திரமும் இல்லை என்றும், உச்ச நீதிமன்றம் 27-2-2006 அன்று அளித்த ஆணையை செயல்படுத்த கேரள அரசு முழு மனதுடன் ஒத்துழைக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்தேன். எனவே நான் கலந்துகொள்ள வில்லை என்று ஜெயலலிதா கூறுவது கடைந்தெடுத்த பொய்.

அந்தக் கூட்டத்தில் கேரள அரசின் சார்பில் பேசிய முதலமைச்சர் முதன்முதலாக புதிய அணைகட்டுவதுதான் இப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்றார். அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் பதில் அளிக்கையில் 1979ஆம் ஆண்டே புதிய அணை கட்டுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு, பின்னர் சாத்தியமில்லை என்று கருதி கைவிடப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கூட்டத்திற்கான நடவடிக்கை குறிப்பினை மத்திய அரசே தனது 8-12-2006ஆம் நாளிட்ட கடிதத்தில் இணைத்துள்ளது. அதன் விவரம் வருமாறு :-

"xxx. In so far as the proposal of constructing a new dam is concerned, this option was examined in 1979 and was ruled out at that time. xxx"

அதன் பிறகு கேரள அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் புதிய அணை கட்டுவதுதான் இப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதை மீண்டும் வலியுறுத்தியபோது, தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் பதில் அளித்தார்.

"xxx. The Chief Secretary, Tamil Nadu also responded by saying that the proposal of constructing a new dam has already been deliberated earlier and the same has not been found feasible. xxx"

மேலும் இதுபற்றிய விவரங்களைக் கூறுகிறேன். உச்சநீதிமன்றத்தின் 25-9-2006 நாளிட்ட ஆணையின்படி மத்திய நீர்வள ஆதார அமைச்சர் அவர்கள் தமிழக - கேரள அமைச்சர்களிடையே பேச்சுவார்த்தை நடத்துவதில் தமிழக அரசு கலந்துகொள்வது குறித்து -

23-10-2006 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை நான் கூட்டியிருந்தேன். அக்கூட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும் கலந்து கொண்டார்கள். ஜெயலலிதாவிற்கு சந்தேகம் இருக்குமேயானால் அவர்களை அழைத்துக் கேட்டுத் தெரிந்துகொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கலாமே!

அந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஒரு தீர்மானமும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் வருமாறு :-

"முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக எடுத்து வைத்த நியாயங்களை ஏற்றுக்கொண்டு உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு முன்வராத கேரள அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி, உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இக்கூட்டம் இணக்கம் தெரிவிக்கிறது, என்றாலும் அதிலும் உரிய பலன் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் உடனடியாக உச்ச நீதிமன்றத்தையே அணுகி, உச்சநீதி மன்றம் 27-2-2006இல் பிறப்பித்த உத்தரவான, அணையின் நீர் மட்டத்தை 136

அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பதையும்;

அணையைப் பலப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளும் போது கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிப்பதுடன், தமிழக அரசுக்கு கேரள அரசு அதிகாரிகள் எந்தவித இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது என்பதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உத்தர வளிக்குமாறு முறையீடு செய்து கொள்வதென்றும்,

அத்தகைய உச்ச நீதிமன்ற உத்தரவை நடை முறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அனைத்துக் கட்சித் தலை வர்களின் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது"

என்று தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிறோம்.

அடுத்து, ஜெயலலிதா அவருடைய அறிக்கையிலே 16-9-2009 அன்று மீண்டும் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் ஜெயராம் ரமேஷ் தலைமையில் நடைபெற்ற தேசிய உயிரினங்கள் வாரியத்தின் நிலைக்குழு கூட்டத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டதாகவும், அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பிலே யாருமே கலந்து கொள்ளாதது வியப்பளிக்கிறது என்றும் கூறியிருக்கிறார். இதுவும் உண்மை என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் குற்றஞ்சாட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எழுதியிருக்கிறார்.

தேசிய வன விலங்கு வாரியத்தின் நிலைக்குழு என்பது 1972ஆம் ஆண்டைய வன விலங்கு சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிலைக்குழுவின் தலைவராக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சர் அவர்களும், சுழற்சி முறையில் ஒரிசா மற்றும் உத்தரகண்ட் மாநிலங்களின் பிரதிநிதிகள் மட்டுமே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நிலைக் குழு கூட்டத்தில் தமிழக அரசின் பிரதிநிதிகள் எவர் ஒருவரும் உறுப்பினராக இல்லை. ஏதாவது ஒரு மாநிலத்திலிருந்து வன நிலங்களை வனம் சாராத பிற பணிகளுக்கு பயன்படுத்த மாநில அரசின் பரிந்துரையுடன் கருத்துரு பெறப்பட்டால், சம்பந்தப்பட்ட மாநில தலைமை வன உயிரினக் காப்பாளரை மட்டுமே குழுவின் கூட்டத்திற்கு அழைத்து கலந்து முடிவெடுக்கப்படும். 16-9-2009 அன்று நடத்தப்பட்ட கூட்டமானது கேரள மாநிலம்

அனுப்பிய கருத்துரு குறித்தும், வேறு சில மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் பற்றியும் விவாதிப்பதற்காக என்பதால், அந்தக் கூட்டத்திற்கு தமிழக அரசின் தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு அழைப்பிதழ் எதுவும் அனுப்பப்பட வில்லை. ஆகவே தமிழகத்தின் சார்பில் யாரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஆனால் அந்தக் கூட்டத்தில் கேரள அரசுக்கு ஆய்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டதாக பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தவுடன் 22-9-2009 அன்று நான் மத்திய இணை அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். தமிழக அரசின் கருத்தைக் கேட்காமல் ஆய்வு நடத்த அனுமதி வழங்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டேன். அதையும் மீறி 6-10-2009 அன்று ஆய்வு நடத்த கேரள அரசுக்கு மத்திய இணை அமைச்சர் ஒப்புதல் வழங்கி விட்டார் என்ற செய்தி கிடைத்தவுடன் இந்தியப் பிரதமருக்கு விரிவாக 8-10-2009 அன்று கடிதம் எழுதினேன். அதற்கு முன்பாகவே 7-10-2009 அன்றே உச்ச நீதிமன்றத்திலும் தடையாணை வழங்க தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்தோம். அந்த விசாரணை வரும் 20ஆம் தேதி உச்ச நீதிமன்றத்திலே வரவுள்ளது.

உண்மை இவ்வாறிருக்க ஜெயலலிதா பொய்களை மூட்டையாக்கி விற்க முனைந்துள்ளார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே,

ஜெயலலிதா போன்றவர்களுக்காக நான் எழுதும் கடைசிக் கடிதம் இதுதான் - எத்தனை சொன்னாலும் எழுதினாலும் வளைந்த வாலை நிமிர்த்த முடியாது; ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

16-10-2009

3421. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு; செம்மொழி எனும் சிறப்பும் சேர்ந்தது!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் பணிகள் தொடங்கிவிட்டன. இடம் எந்த நகரத்தில் என்பதும், எந்த இடத்தில் என்பதும் தேர்வு செய்யப்பட்டுவிட்டன. மாநாடு நடைபெறும் தேதிகளும் அறிவிக்கப்பட்டு விட்டன. தீபாவளியை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில், ஏன் அதற்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலையிலே கூட இரவு எட்டு மணி வரையில் தலைமைச் செயலகத்தில் உலகத் தமிழ் மாநாட்டிற்கான பல்வேறு குழுக்களை அமைப்பது குறித்தும் - கட்சி வேறுபாடின்றி இந்த மாநாட்டினை நடத்திட வேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டமன்றத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர் களுக்கு கடிதங்கள் எழுதுவதிலும் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தேன். என்னுடன் துணை முதல்வர் தம்பி மு.க. ஸ்டாலின், உயர் கல்வி அமைச்சர் தம்பி பொன்முடி, தலைமைச் செயலாளர், செம்மொழி நிறுவனத்தின் எண்பேராயம் - ஐம்பெரும் குழுவின் துணைத் தலைவர் வா.செ. குழந்தைசாமி, மாநிலங் களவை உறுப்பினர் கனிமொழி, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடு குறித்து தொடர்ந்து நான் பல கடிதங்கள் எழுதவிருக்கிறேன் என்ற போதிலும், இப்போது இந்தக் கடிதம் எழுதுவதின் நோக்கம், 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்து 1968 ஜனவரி திங்களில் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு முன்பு நான் ஆற்றிய வானொலி உரையை இந்தக் கடிதத்தின் மூலமாக உனக்கு நினைவூட்டிடலாம் என்பதுதான். இதோ அந்த உரை :-

பேரன்பு கொண்டோரே,
பெரியோரே,

பெற்ற தாய்மாரே,
நல் இளஞ் சிங்கங்காள்,

நாம் பிறந்த மண்ணில் நடைபெறும் பெருமைமிகு உலகத் தமிழ் மாநாட்டுக்கு உம்மையெல்லாம் அழைக்கின்ற பெரும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றேன்.

கீழ்த்திசை மொழி வல்லுநர் கழகத்தின் 26வது கூட்டம் 1964ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடைபெற்றதன் தொடர்பாக தமிழ் ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள அறிஞர் பெருமக்கள் சிலர் பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவினர். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பில்லியோசா, அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஏமதா, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பரோ, ஹாலந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கூய்ப்பர், செக்கோஸ்லேவியா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் காமில் சுவலபெல் ஆகியோர் அக்குழுவில் தலையாய உறுப்பினர் ஆவர்.

பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் முதல் உலகத் தமிழ்க் கருத்தரங்கு 1966ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் கோலாலம்பூரில் நடைபெற்றது. இரண்டாவது கருத்தரங்கு தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரில் 1968ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3ஆம் தேதியிலிருந்து 11ஆம் தேதி வரையில் நடைபெறவிருக்கிறது.

கருத்தரங்கு 3-ந்தேதி தொடங்குகிறதே யெனினும், ஜனவரி முதல் நாளிலேயே மாநாட்டில் தொடக்கத்திற்கான மணி மகுடம் தமிழ்த் தாய்க்குச் சூட்டப்படுகிறது. ஆம்! அன்றுதான் தமிழக முதல்வர், அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். வழங்கிட, பெருந்தகையாளர் திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் தலைநகரில் திறந்து வைக்கிறார். ஜனவரி 2ஆம் நாள் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியக் குடியரசுத் தலைவர், மேன்மைமிகு டாக்டர் ஜாகீர் உசேன் வருகிறார்கள். விமான நிலையத்தில் மாலை 6 மணிக்கு தமிழகம் வரவேற்கும். மாலை 6.30 மணிக்கு கடற்கரையில் தமிழை வளர்த்த சான்றோர்க்கும், ஆன்றோர்க்கும் சிலைகள் எடுக்கும் விழா சீர்மேவ சிறப்போங்க நடைபெறவிருக்கின்றது. உலகப் பொதுமறை வகுத்த திருவள்ளுவர் சிலையை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் வழங்கிட, தமிழகக் கல்வி அமைச்சர்

நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் திறந்து வைக்கிறார்.

முடி மன்னர் பாராட்டிய மூதாட்டி அவ்வைப் பெருமாட்டியின் சிலையை மாநகராட்சி வழங்கிட செய்தி அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து தலைமையில் திரு. எஸ்.எஸ். வாசன், எம்.பி., திறந்து வைக்கிறார். கவியரசர் கம்பர் சிலையை கோவை மாவட்ட மக்கள் வழங்கிட வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைக்கிறார். அருந்தமிழ் வளர்த்த ஆங்கில நாட்டுப் பெரும் புலவர் ஜி.யு. போப்பின் சிலையை, தென்னிந்திய திருச்சபை வழங்கிட, அவைத் தலைவர் திரு. ஆதித்தனார் தலைமையேற்க,

பிஷப் திரு. நியூபிகின் திறந்து வைக்கிறார். திராவிட மொழியின் ஒப்பிலக்கணம் வகுத்த அயர்லாந்து நாட்டு ஆங்கிலப் புலவர் கால்டுவெல்லின் சிலையை தென்னிந்திய திருச்சபை வழங்கிட, மேல்சபைத் தலைவர் திரு. மாணிக்க வேலர் அவர்கள் தலைமையில் பன்மொழிப் புலவர் திரு. கா.அப்பாதுரையார் திறந்து வைக்கிறார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனச் சொன்ன பாரதியின் சிலையை, மாநகராட்சி வழங்கிட, சட்டத்துறை அமைச்சர் திரு.மாதவன் அவர்கள் தலைமையில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் திறந்து வைக்கிறார். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்" என்று சங்கம் முழங்கிய புரட்சிக் கவி பாரதிதாசனின் சிலையை மாநகராட்சி வழங்கிட, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி தலைமையில், பேராசிரியப் பெருந்தகை திரு. மு. வரதராசனார் திறந்து வைக்கிறார். குறளுக்கு உரை தொடுத்து, விடுதலைக் குரலும் கொடுத்து, கப்பலோட்டிய தமிழன், வ.உ.சி. யின் சிலையை மாநகராட்சி மன்றம் வழங்கிட உணவு அமைச்சர் திரு. மதியழகன் தலைமையில் தமிழவேள்

திரு. பி.டி. ராஜன் அவர்கள் திறந்து வைக்கிறார். இன்பத் தமிழ் வளர்த்த இத்தாலிய நாட்டுச் செம்மல் வீரமா முனிவரின் சிலையை மயிலை ஆர்ச்பிஷப் அவர்கள் வழங்கிட, பொது நல அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் தலைமையில், ஆர்ச்பிஷப் அருள்திரு. அருளப்பா அவர்கள் திறந்து வைக்கிறார்.

வழக்குரைத்து, வளைந்த பாண்டியன் செங்கோலை நிமிர்த்தி, வஞ்சி மூதூரில் அன்றொருநாள் சிலையான கற்புக்கரசி கண்ணகியின் சிலையை சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்கள் திறந்துவைக்கிறார். நான்தான் தலைமை வகிக்கிறேன்.

இவ்விதம் ஜனவரி முதல் இரண்டு நாட்களில் தகைமையாளர்களின் சிலைகளை தலைநகரில் அமைப்பது கண்கொள்ளா காட்சி. இந்தக் காட்சிகளை வென்றிடும் விதத்தில் மறுநாள் "பார் சிறுத்ததால் படை பெருத்ததோ, படை பெருத்ததால் பார் சிறுத்ததோ" என பார்ப்போர் வியப்புறும் வண்ணம் பாண்டியர், சோழர், சேரர் ஆண்டிருந்த அந்நாளை நினைவுறுத்தும் வகையில் பவனி ஒன்று தலைநகரில் நடை பெறும். 26 அலங்கார வண்டிகள் கலந்து கொள்ளும் அந்தப் பவனியில் தமிழரின் மொழி, நாகரிகம், கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றை சித்திரித்துக் காட்டும் காட்சிகள் இடம் பெறும்.

திருவள்ளுவர், இளங்கோ, திருப்பாவை பாடிய ஆண்டாள், நக்கீரர் இன்னோரன்ன இலக்கியத் தமிழ் ஏந்தல்களின் திருவுருவங்கள், சங்க இலக்கியக் காட்சிகளான கோட்டை முற்றுகை, அதியமானிடம் அருநெல்லிக்கனி பெற்ற அவ்வை, "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரை" முதலிய காட்சிகள் எல்லாம் இடம் பெறும். அதனைக் காணக்காண குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் வளம் வழங்கிய அந்நாள் தமிழ கத்தில் நாம் நடை போடுகிறோம் என்ற உணர்வே ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் ஏற்படும்.

அந்த அலங்காரப் பவனியினை திரு. எஸ். எஸ்.வாசன் அவர்கள் தலைமையில் திரு. ஏ.வி.எம்.செட்டியார், திரு. ஏ.எல். சீனி வாசன், திரு. நாகிரெட்டி, திரு. ஏ.பி. நாகராஜன், திரு. வீனஸ்கிருட்டிணமூர்த்தி, திரு. சுந்தர்லால் நகாதா முதலிய திரைப்படக் கலைத்துறையாளர்கள் கொண்ட குழு அமைத்து வருகிறது. இந்த அலங்கார வண்டிகளுக்கு இடைவெளிகளில் கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும் - ஆசிரியர்களும், ஆசிரியை களும் - சீரணித் தொண்டர்களும் சீருடை அணிந்து மாநாட்டுக் கொடியேந்தி செல்வார்கள். அப்படிச் செல்பவர்களின் தொகை

ஏறத்தாழ ஏழாயிரம் ஆகும். இவ்வாறு முன்னேறிச் செல்கின்ற ஊர்வலத்தின் நீளம் சற்றொப்ப முக்கால் மைல் இருக்கும். இதனைக் கண்டுகளிக்க வருகின்ற பொது மக்கள் சாலையின் இரு மருங்கிலும் நின்று பார்க்கத்தக்க அளவிற்கு வசதியும், கட்டுக் கோப்பும், பாதுகாப்பும் காவல் துறையினரால் செய்யப்பட்டு வருகின்றன. குடியரசு தலைவர் அவர்களும், மாநாட்டில் கலந்து கொள்கின்ற வல்லுநர்களும் ஊர்வலத்தைக் கண்டுகளிப் பதற்கு அரசினர் கலைக் கல்லூரியின் முன் பெரியதோர் மேடை அமைக்கப்படுகின்றது. ஊர்வலம் ஜனவரி 3ஆம் நாள் பிற்பகல் 2 மணிக்கு சென்னைத் தீவுத் திடலில் தொடங்கி - ஆம், ஐலந்து மைதானத்தில் தொடங்கி - 5.30 மணி அளவில் கடற்கரையில் முடிவுறும்.

ஊர்வலக் காட்சியினை புறங்காணும் வகையில் நீலத்திரைக் கடல் ஓரத்தில் மாலை 6.30 மணிக்கு உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா நடைபெறும். கடல் அலையா? காண வந்த மக்கள் தலையா? என ஐயுறும் வண்ணம் இலட்சோப இலட்சம் மக்கள் வெள்ளமென திரளுகிற கூட்டத்தில் குடியரசு தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழா பேருரையை நிகழ்த்துவார். தமிழக ஆளுநர் திரு. உஜ்ஜல் சிங் அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிடுவார். மாநாட்டின் வரவேற்புக் குழுவின் துணைத் தலைவர், நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் “வாரீர், வண்டமிழ் உண்டுகளிக்க” என வந்திருக்கும் தமிழ் மக்களை வரவேற்பார்.

மலர்க் குழுவின் சார்பில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., தாய்க் குலத்தின் சார்பில் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து, பன்னாட்டு அறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் குழுவின் சார்பில் பேராசிரியர் பில்லியோசா ஆகியோர் வரவேற்பு நல்லுரையை வழங்கிடுவர். குடியரசு தலைவர் அவர்களுக்கு சென்னை மாநகர மக்களின் சார்பில் மாநகராட்சி மன்றம் அளிக்கும் வரவேற்பினை மேயர் வழங்கிடுவார். திருக்குறள் ஆராய்ச்சி யின் வாயிலாக பழந்தமிழ்க் கலை, பண்பாடு, ஆராய்ச்சிகளை பல்கலைக்கழகங்களில் நடத்திடும் பெருநோக்குடன் தமிழக அரசு வகுத்துள்ள பெருந்திட்டத்தின் அடிப்படையில் அண்ணாமலைக் கழகத்திற்கான நிதியை உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்களும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான

நிதியை உள்ளாட்சி அமைச்சர் திரு.முத்துசாமி அவர்களும் அளிக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கான நிதியை அளிக்கும் பேற்றினை யான் பெற்றுளேன். இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கி தாகூரின் தேசிய கீதத்துடன் முடிவுறும் இந்தத் திருவிழாவிற்கு தலைமை ஏற்பவர் தமிழகத்தின் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களாவார். இவ்விதம் மூன்றாம் நாள் விழா வெற்றி முடி சூட்டிக்கொள்ளும்.

அதே நாள் ஆகிய ஜனவரி 3ஆம் நாள் காலையில் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி கவின்மிகு கண்காட்சி ஒன்றினை டாக்டர் ஏ.எல். லட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திறந்து வைக்கிறார். அவ்வமயம் மாநாட்டிற்கென மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள அஞ்சல் தலை, ராஜா முத்தையா செட்டியார் முன்னிலையில் வெளியிடப்படும்.

ஜனவரி 4ஆம் நாள் காலை 9.30 மணிக்கு பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கருத்தரங்கு தொடங்கும். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து 28 பிரதி நிதிகளும் - இலங்கையிலிருந்து 12 பிரதிநிதிகளும் - தமிழ்நாட்டிலிருந்து 150 பிரதிநிதிகளும் - தமிழ்நாடு நீங்கிய ஏனைய இந்திய மாநிலங்களிலிருந்து 20 பிரதிநிதிகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகளும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேராசிரியர் பில்லியோசா தலைமையில் ஒவ்வொரு நாளும் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் 11ஆம் தேதி முடிய தமிழ் ஆராய்ச்சி பற்றிய உரைகள் ஆற்றுவர், விவாதங்கள் நடத்துவர், விளக்கங்கள் வழங்குவர். கருத்தரங்க நிகழ்ச்சியையொட்டி மாலை நேரங்களில் நூற்றாண்டு விழா மண்டபத்திலும், அண்ணாமலை மன்றத்திலும் கருத்தரங்கப் பிரதிநிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 11ஆம் தேதி இரவு புறப்பட்டு தமிழகத்தில் கலை மணக்கும் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா சென்று 18ஆம் தேதி காலை சென்னைக்குத் திரும்புவர். இந்த உலகத் தமிழ் கருத்தரங்கினால் ஏற்படக் கூடிய பயன், தமிழ் ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் இன்றைய தமிழகத்திற்கும், வருங்கால தமிழகத்திற்கும் மெத்தவும் பயன்தரக் கூடியதே!

ஆயினும் உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்ற பொது மக்களை பொறுத்தவரையில் அவர்களது கவனத்தை ஈர்க்க வல்லதாக இக்கருத்தரங்கு அமைய இயலாது அல்லவா? இதனை உணர்ந்த மாநாட்டுக் குழுவினர், தமிழக முதல்வரின் அறிவுரைக்கிணங்க கருத்தரங்கினையொட்டி ஏழு நாட்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளத் தக்க வகையில் பெரியதோர் தமிழ் விழாவினை சென்னையில் நடத்திட வேண்டுமென தீர்மானித்தார்கள். அதற்கொப்ப சென்னைத் தீவுத்திடலில் ஐலந்து மைதானத்தில் எழிலும் எழுச்சியும் குலுங்கிடும் வண்ணம் ஏழு நாட்கள் இன்பத் தமிழ் மணக்க மணக்க, இலக்கியச்சுவை பெருகப் பெருக, கவி நயம் கனியக் கனிய - கலைக் காட்சி, இசை, இயல், கூத்து இன்னோரன்ன நிகழ்ச்சிகளுக்கு புறப்பணிக் குழுவினர் அமைப்பு வேலைகளைத் தொடங்கியுள்ளனர். சுருங்கச் சொன்னால், புறப்பணிக் குழுவினர் ஐலந்து மைதானத்தில் பூம்புகார் நகரத்தையே நிர்மாணிக்கிறார்கள் எனலாம். திரு. நீலநாராயணன் தலைமையில், திரு. பரமசாமி, திரு. முத்துராமலிங்கம், திரு. கணேசன் முதலியோர் கொண்ட ஆர்வம்மிக்க குழு இந்த அரும்பணியை மேற்கொண்டுள்ளது.

இம்மாநாடு ஜனவரி 4ஆம் நாள் தொடங்குகிறது. பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் தலைமை வகிக்கவும், திரு. கருத்திருமன் அவர்கள் தொடக்கவுரை ஆற்றிடவும், அடுத்து 5ஆம் நாள் மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் தொடக்கவுரை ஆற்றவும், புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமை ஏற்றிடவும், 6ஆம் நாள் சனிக்கிழமை, திரு. சா. கணேசன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும், தலைமை நீதிபதி திரு. அனந்த நாராயணன் அவர்கள் தலைமை வகிக்கவும் - 7ஆம் நாள் ஞாயிறு அன்று நாஞ்சில் மனோகரன் மாநாட்டிற்கு தலைமை வகிக்கவும், தொடக்க வுரையை திரு. என்.வி. நடராசன் ஆற்றிடவும் - 8ஆம் நாள் திங்கள் அன்று திருமதி ராதா தியாகராஜன் தொடக்கவுரை ஆற்றிடவும், திருமதி சவுந்தரம் கைலாசம் தலைமையேற்கவும் - 9ஆம் நாள் செவ்வாய் அன்று காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் தலைமையேற்கவும், திரு. இரா. செழியன் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும் - 10ஆம் நாள் புதன் கிழமை அன்று அவ்வை துரைசாமி பிள்ளை

தலைமையேற்கவும், பேராசிரியர் மா.கி. தசரதன் தொடக்கவுரை நிகழ்த்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இசையரசு தண்டபாணி தேசிகர், இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன், சீர்காழி கோவிந்தராஜன் இசை நிகழ்ச்சிகள் - "புகாரில் ஒரு நாள்" கவிதைப் போட்டி - அதற்கான பரிசளிப்பு - பரிசுப் பாடல் நூல் வெளியீடு - முதலிய நிகழ்ச்சிகள் கொண்ட உலகத் தமிழ் மாநாட்டிற்கு முத்தாய்ப்பு வைப்பது போல் விழா நிறைவுப் பேருரையை மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களே ஆற்றுகிறார்கள்.

இங்ஙனம் சென்னை மாநகரில் சிறப்புடன் நடக்கவிருக்கும் செந்தமிழ் விழாவினையொட்டிய சீர்மிகு நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டும் கேட்டும் களிக்க விரும்பும் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் வசதி செய்யும் வகையில் தமிழகக் கல்லூரிகளுக்கு ஜனவரி 5ஆம் நாள் வரையிலும் பள்ளிகளுக்கு ஜனவரி 10ஆம் நாள் வரையிலும் விடுமுறை அளிக்கப்பட்டிருக் கின்றது.

தமிழின் சிறப்பும், செழிப்பும் மேலோங்கிட அனைத்துலகப் பெருமக்களும் அன்னைத் தமிழ் மொழியின் மாண்பு கண்டிட தமிழை அரியாசனத்தில் ஏற்றியிருக்கும் தாய்த் தமிழகத்தின் பெருமை விளங்கிட நடைபெறும் இந்த மாநாட்டிற்கு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், திரு. மு.ரா. பெருமாள் முதலியார் அமைப்புச் செயலாளர், திரு. வே. கார்த்திகேயன், பொதுச் செயலாளர், திரு. வி.எஸ். தியாகராச முதலியார் பொருளாளர், திரு. அ. சுப்பையா, உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கின் அழைக்குநர், திரு. கி. வேங்கடசுப்பிரமணியம், தனி அலுவலர் - இவர்கள் தமிழ் வளம் பெற, வகை காண, வாரீர் வாரீர் எனத் தமிழக மக்களை அழைக்கிறார்கள். தமிழ் போற்றும் இந்நாள் தமிழக அரசும் இரு கை நீட்டி, தலை நகரை நோக்கி தமிழ்ச் சுவை பருக வருகின்ற தமிழக மக்களையும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் இரு கை நீட்டி இதயமார வரவேற்கின்றது.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல் வேண்டும்,

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்,

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை,

திறமான புலமையெனில் வெளி நாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்”

என்ற பாரதியின் வாக்கினை நிறைவேற்ற -

“தமிழுக்கு அமுதென்று பேர் -
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” -

என்று பாரதிதாசன் தந்த உணர்வைப் பெற

வாரீர் - வாரீர் - தலைநகர் நோக்கி! வாழ்க - வணக்கம்.”

உடன்பிறப்பே, இதுவரை உலகின் பல பகுதிகளில் நடந்த எட்டு மாநாடுகளும் உலகத் தமிழ் மாநாடுகள் - இப்போது கோவையில் நடக்க இருப்பதோ நம் மொழிக்குச் செம்மொழி எனும் சிறப்பும் கலந்த “உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு;” இந்த இனிய உணர்வுடன் தொடர்ந்து எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-10-2009

3422. சுழன்று சுடர்விடும் எண்ண அலைகள்!

உடன்பிறப்பே,

2005ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கான தமிழ்ச் செம்மொழி விருதுகளுக்கான தமிழறிஞர் களின் பட்டியலுக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் நேற்றைய தினம் ஒப்புதல் அளித்து அறிவித்துள்ளார்கள். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களே இந்த விருதுகளை நேரடியாக வழங்க இருக்கிறார்கள் என்பது தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் மட்டிலா மகிழ்ச்சியையும், பெருமையையும் அளித்திடக் கூடிய செய்தியாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் திருக்கரங்களால் தமிழ்ச் செம்மொழி விருதுகளைப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழறிஞர்கள் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் எனது மனமார்ந்த பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுகளுக்கான பெயர்களைப் பரிசீலனை செய்து பரிந்துரை செய்வதற்கென மத்திய அரசு என்னை தலைவராகக் கொண்டும்; பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி, எழுத்தாளர் ஜெயகாந்தன், பேராசிரியர் நன்னன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டும் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு மத்திய அரசுக்குச் செய்திருந்த பரிந்துரைகளின் அடிப்படையில் தற்போது இந்தியக் குடியரசுத் தலைவர் தமிழ்ச் செம்மொழி விருதுகளுக்கான பெயர்களை அறிவித்துள்ளார்.

2005-2006 ஆம் ஆண்டுக்கான தொல்காப்பியர் விருது 99 வயது தமிழறிஞரான அடிகளாசிரியருக்கும்; 2006-2007 ஆம் ஆண்டுக்கான குறள்பீட விருது அமெரிக்க அறிஞர் டாக்டர் ஜார்ஜ் எல். ஹார்ட்டுக்கும் வழங்கப்பட உள்ளன.

மேலும், 2005-2006 ஆம் ஆண்டுக்கான இளம் அறிஞர்களுக்கான விருதுகள் டாக்டர் அறவேந்தன், டாக்டர்

மணிகண்டன், டாக்டர் கலைமகள், டாக்டர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர், டாக்டர் பழனிவேலு ஆகியோருக்கும்; 2006-2007 ஆம் ஆண்டுக்கான இளம் அறிஞர் விருதுகள் டாக்டர் சந்திரா, டாக்டர் அரங்கபாரி, டாக்டர் மு. இளங்கோவன், டாக்டர் எம்.பவானி, டாக்டர் ஆர். கலைவாணி ஆகியோருக்கும்; 2007-2008ஆம் ஆண்டுக்கான இளம் அறிஞர் விருதுகள் டாக்டர் ஏ. செல்வராசு, டாக்டர் பி.வேல்முருகன், டாக்டர் ஏ. மணவழகன், திரு.எஸ். சந்திரசேகரன், டாக்டர் சைமன் ஜான் ஆகியோருக்கும் வழங்கப்பட உள்ளன.

தொல்காப்பியர் விருதுக்கும், குறள்பீட விருதுக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் பொற்கிழியையும், இளம் அறிஞர்களுக்கான விருதுகளுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் பொற்கிழியையும் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கிட இருக்கிறார்கள்.

உலகத் தமிழாய்வுக் கழகப் பொறுப்பாளர்கள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஐம்பெருங்குழு-எண்பேராய உறுப்பினர்கள், தமிழறிஞர்கள், பல்துறை ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு பலமுறை கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி; 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 முதல் 27 வரை நான்கு நாட்களுக்கு கோவை மாநகரில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவது என்று முடிவெடுத்து அறிவிக்கப்பட்டுள்ள இந்த நல்ல தருணத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்ச் செம்மொழி விருதுபெறுவோர் பட்டியலை வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதும், போற்றத்தக்க செயலும் ஆகும்.

தமிழ்ச் செம்மொழி விருது பெறுவோர் பட்டியல் வெளியிடப்பட்ட செய்தி அறிந்ததும், பல்வேறு நிகழ்வுகள் எனது எண்ண அலைகளில் சுழன்று சுடர்விடுகின்றன.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி வேண்டும் என்பது தமிழர்களின் நூறாண்டுகாலக் கனவாகும். தமிழறிஞர் சூரியநாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற் கலைஞர் அவர்கள் முதன் முதலாக தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தார். அதுமுதல் தமிழ் ஆர்வலர்களும், தமிழ் அறிஞர்களும் செம்மொழித் தகுதிக்காகத் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் செம்மொழித் தகுதி கேட்டுக் குரல் கொடுத்தார். எனினும், நிறைவேறாமல்

இருந்துவந்த இந்த நீண்டகாலக் கோரிக்கை - 2004 ஆம் ஆண்டு நிறை வேறியது. டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில், திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்கள் வழிகாட்டுதலில் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பேற்றதும் நமது வேண்டுகோளை ஏற்று தமிழுக்குச் செம்மொழித் தகுதியை வழங்கிப் பிரகடனப்படுத்தியது. தமிழர்களின் நூறாண்டு காலக் கனவு நனவானது.

மத்திய அரசு, தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கி அறிவிப்பு செய்ததும், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள் அதுகுறித்துப் பெரிதும் மகிழ்ந்து எனக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில், ''தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்ததால் விளைந்துள்ள பெருமை அனைத்தும் உங்களையே சாரும்'' என்று மிகுந்த பெருந்தன்மையோடு குறிப்பிட்டிருந்தார்.

இந்த நல்ல நேரத்தில் பரிதிமாற் கலைஞர் அவர்கள் வாழ்ந்த இல்லம் கழக அரசால் நினைவில்லமாக ஆக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் என் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி கிராமத்தில் கதவு எண். 4-219ல் 2508 சதுரஅடி பரப்பில் அமைந்துள்ள தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவில்லமாகப் பராமரித்திட 16.11.2006 அன்று கழக அரசால் ஆணையிடப்பட்டது. தனியார் பொறுப்பிலிருந்த அந்த இல்லத்தைக் கையகப் படுத்திட 1.12.2006-ல் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 534 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்தப் பழைய இல்லம் அரசால் கையகப்படுத்தப்பட்டு, 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு புதிய பொலிவுடன் நினைவில்லமாக்கப்பட்டு நினைவில்லத்தின் முகப்பில் பரிதிமாற் கலைஞர் அவர்களின் மார்பளவு சிலை ஒன்றும் நிறுவப்பட்டு 31.10.2007 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது.

பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற் கலைஞரின் நினைவில்லத்தைத் திறந்து வைத்ததும்; வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள பரிதிமாற் கலைஞரின் மார்பளவு வெண்கலச் சிலையைத் திறந்து வைத்ததும்; பின்னர் நினைவில்லத்தில்

பரிதிமாற் கலைஞர் வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டதும்; அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில், ''தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோர குரல்கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க'' என நான் எழுதிக் கையெழுத்திட்டதும், விழாவின்போது பரிதிமாற் கலைஞரின் வாரிசுதாரர்கள் எனக்குப் பொன்னாடை அணிவித்ததும் என் நினைவில் நிலைத்துவிட்ட நிகழ்ச்சிகளாகும்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரி முதல் குரல் கொடுத்த பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு வேறுசில சிறப்புகளையும் கழக அரசு செய்திருக்கிறது. பரிதிமாற் கலைஞர் அவர்கள் படைத்துள்ள நூல்கள் அனைத்தையும் அரசுடைமை ஆக்கி, அவரது மரபுரிமை யருக்கு 2.12.2006 அன்று 15 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகையாக வழங்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் கோரிக்கை மத்திய அரசினால் ஏற்கப்பட்டு, 17.8.2007 அன்று பரிதிமாற் கலைஞர் நினைவு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

ஒல்லும் வகையெல்லாம் பரிதிமாற் கலைஞரின் புகழ்போற்றி, தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற்று, மைசூரில் இயங்கிவந்த செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தைச் சென்னைக்கு மாற்றியமைத்து, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவதென முடிவெடுத்துள்ள நமக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பொருத்தமான வேளையில் அறிவித்துள்ள தமிழ்ச் செம்மொழி விருதுகள் பெருமையும், இனிமையும் வழங்குவதாக அமைந்துள்ளன.

விருது பெறுவோர்க்கும், விருது வழங்கும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் உலகெங்கும் வாழ்கின்ற உணர்வு மிக்க தமிழர்களின் வாழ்த்துக்களை உவகை பொங்கிட வழங்கி; உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு இப்போதிருந்தே அழைப்பதற்கான, நான் எழுதும் இரண்டாம் கடிதம் இது! அடுத்தடுத்து மடல்கள் வரைவேன்.

வாழ்க தமிழ்! செம்மொழியாம் நம் சீர்மிகு தமிழ்!

அன்புள்ள,

மு.க.

22-10-2009

3423. இன்ப நாளிதே எனப்பாடுவோம்!

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் - பருவ மாற்றங்களைப் பற்றிக் கவலைப்படாமல், இலங்கைத் தீவில் ஆடிக்காற்று வீசிக் கொண்டிருந்தது.

அந்தி வானத்திலே சிவப்பு; அந்தப் பூமியெங்கும் பரவியிருந்தது. அந்த வண்ணத்தை அந்தத் தீவின் தெருக்களில் தீட்டுவதற்கு தமிழ் ஈழ உரிமைப் போரில் ஈடுபட்ட இலங்கை வாழ் மக்களின் படை வரிசை இருபக்கமும் நின்று குருதி பொழிந்த வண்ணம் இருந்தன.

சகோதர யுத்தத்தை, பாண்டவர்கள் - கௌரவர்கள் கதையிலே படித்த மக்கள்; கடந்த சில ஆண்டுக் காலமாக காட்சியாகவே அந்த சின்னஞ்சிறு தீவில் காணும் வாய்ப்பைப் பெற்றார்கள் - அந்தோ; கொடுமை! எதிரியின் அடையாளங் கண்டு; ஏறி மிதிக்கப் புறப்பட்ட அணிவகுப்பு; திசைமாறித் திரும்பி தன் படை வரிசையையே குலைத்துக் கொண்ட கொடுமையை என்ன வென்று கூறிக் குமுறி அழுவது!

அங்கே சண்டை நடந்தால்தான்; மண்டைகள் உருண்டால்தான்; அதுவும் தமிழினத்தின் பிணங்கள் குவிந்தால்தான்; ஒப்பாரிப் பாட்டு ஒலிக்கவே சுருதி சேருமென்று எதிர்பார்த்துக் காத்திருந்த எட்டப்பர்கள் - தாங்கள் விரும்பியவாறு அண்ணன் தம்பிகளை அந்த மண்ணில் சவமாகச் சாயவிட்ட பிறகே; சந்தோஷம் கொண்டார்கள் - மனச்சாந்தி பெற்றார்கள்.

ஆனால், அய்யகோ; அந்த மயான அமைதிக்குப் பிறகும் - அந்த மண்ணில் திக்கற்றுத் தவிக்கும் தமிழ்க் குடும்பங்களைக் கைதூக்கி விட்டுக் காப்பாற்றும் முயற்சியிலாவது ஓரளவு வெற்றி பெற முடிந்ததே என்று மனம் ஆறுதல் பெறுகிறது.

காங்கிரசார், கழகத்தினர் எனப் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை இந்தியப் பேரரசின்

ஒத்துழைப்புடன் இலங்கைக்கு அனுப்பும்போதுகூட; இவர்கள் போய் என்ன செய்யப் போகிறார்கள்; ஏமாற்றத்தைத்தான் கப்பலேற்றி வந்து இங்கே இறக்குமதி செய்வார்கள் என்று எண்ணியவர்கள், எண்ணியதையெல்லாம் பேசியவர்கள், இன்று நாவடங்கி நாடறியாமல் நம்மை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நாடாளுமன்றக் குழுவினர் இலங்கை சென்றபோது வாக்குறுதி வழங்கப்பட்டது. போர் முடிந்து விட்டது; இனி அமைதியான அரசியல் தீர்வுதான் - என வாக்களித்தார்கள்.

முகாம்களில் முள்வேலிக் குள்ளிருந்தோர்; நாளை முதல் நல்லமைதி கண்டோம் என்று நமை வாழ்த்துகின்றார்.

வாக்குறுதி நிறைவேற்றியவர்களை நாமும் வாழ்த்தி மகிழ் கின்றோம்.

தொப்பூழ்க்கொடி உறவுகளைத் தொட்டுத் தழுவி; தொடர்கின்றோம் நமது இலட்சியப் பயணத்தை.

இரத்தம் சிந்திடும் இனத்தின்
பரிதாபநிலை கண்டு விம்மி அழுத -
அந்தநாள் எங்கே?
இன்ப நாளிதே எனப் பாடிடும்
இந்தநாள் எங்கே?
சண்டை ஒழிந்தது -
சாந்தி தழைக்கின்றது!
சகோதர யுத்தம் ஓடி ஒளிந்தால்
எல்லாம் நன்மையாகவே முடியும்!

அன்புள்ள,
மு.க.
25-10-2009

3424. அடித்தட்டல்ல; அடித்தளமானவர்கள்!

உடன்பிறப்பே,

மனித மலத்தைக் கைகளால் அள்ளி, தலையால் சுமந்தும்; கழிவு நீருக்குள் மூச்சடக்கி மூழ்கியும்; குப்பை கூளங்களை அகற்றி, சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்தியும்; தாழ்த்தப்பட்டோருள் மிகவும் தாழ்த்தப்பட்டோராய் - கடைசிப் பிரிவினருள் கடைக் கோடிப் பிரிவினராய் வாழ்ந்துவரும் அருந்ததியர் வகுப்பினரின், "முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில், இவர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்குவது பற்றி, அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது" என்று 23.1.2008 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் அறிவிப்பு செய்யப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, 12.3.2008 அன்று சென்னை-தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தில், "சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக் குள்ளேயே அருந்ததியர் எனப்படுவோர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அவர்களைக் கைதூக்கி விடும் முயற்சிகளில் ஒன்றாக, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டுவரும் இடஒதுக்கீட்டில், இவர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்கிட, அரசுக்குப் பரிந்துரை செய்ய ஓய்வுபெற்ற நீதியரசரைக் கொண்ட ஒரு நபர் குழு அமைப்ப தென்றும்; அந்தக் குழுவின் அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் பெற்று, அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவெடுப்பதென்றும்;" தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், அருந்ததியர் சமுதாயத்தினருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை வழங்கிட, சென்னை

உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு.எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு 25.3.2008 அன்று அமைக்கப்பட்டது.

நீதியரசர் திரு. எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள், அருந்ததியருக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான அனைத்துப் பரிமாணங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்து; அருந்ததியர் எனப்படுவோருள், அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதிஆந்திரர், பகடை, மடிகா, தோட்டி ஆகிய பிரிவினரையும் உள்ளடக்கி; அவர்களின் மொத்த மக்கள் தொகை அடிப்படையில்; ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 18 சதவீத இடஒதுக்கீட்டில் - 3 சதவீத உள்ஒதுக்கீட்டினை வழங்கலாம் என்று பரிந்துரை செய்து; அறிக்கை ஒன்றினை 22.11.2008 அன்று என்னிடம் அளித்தார்.

பின்னர், 27.11.2008 அன்று எனது தலைமையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவையின் 33ஆவது கூட்டத்திற்கு நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களும் அழைக்கப்பட்டு, அவர் அருந்ததியருக்கான சிறப்பு இடஒதுக்கீடு குறித்து விரிவாக விளக்கினார். தமிழகத்தில் ஆதிதிராவிடர்கள் அனைவருக்கும் சேர்த்து கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வழங்கப் பட்டுவரும் 18 சதவீத இடஒதுக்கீட்டில்; ஆதிதிராவிடர்களுள் கடைநிலையில் உள்ள அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு வழங்குவது குறித்த நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களது விரிவான அறிக்கையினை பரிசீலனை செய்த அமைச்சரவை - ஆதிதிராவிடர்கள் அனைவருக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் 18 சதவீத இடஒதுக்கீட்டில்; அருந்ததியர் என்கின்ற சமுதாயத் தொகுப்பின்கீழ் இடம் பெற்றுள்ள அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதிஆந்திரர், பகடை, மடிகா மற்றும் தோட்டி ஆகிய பிரிவினரை உள்ளடக்கி 3 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தமது அறிக்கையில், "அருந்ததியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கிட எவ்விதத் தயக்கமுமின்றிச் சட்டம் இயற்றலாம். அப்படிச் சட்டம்

இயற்றுவதற்கு முன்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 338(9)ஆவது பிரிவின்படி, தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்துடன் கலந்தாலோசனை செய்திட வேண்டும்" என்று அறிவுறுத்தியபடி; தாழ்த்தப் பட்டோருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் திரு.பூட்டாசிங் அவர்களுக்கு - அருந்ததியருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கருத்துருவினைப் பற்றிய அறிக்கை அனுப்பப்பட்டது. சட்டப்படியான வழிமுறைகளைப் பின்பற்றி, அருந்ததியருக்கு உள்இடஒதுக்கீட்டிற்கான சட்டமுன்வடிவு 26.2.2009 அன்று சட்டப்பேரவையில் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு, அன்றே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்படி நிறைவேற்றப்பட்டது எப்படிப்பட்ட சூழ்நிலையில் தெரியுமா? நான் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை செய்துகொண்டு, படுத்த படுக்கையில் இருந்த நிலையில் அருந்ததியருக்கு உள்ஒதுக்கீட்டுக்கான மசோதாவை முன்மொழிந்து பின்வருமாறு முன்னுரை எழுதி அனுப்பி வைத்திருந்தேன்:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை முன்னவர் அருமைப் பேராசிரியர் அவர்களே,

சட்டப்பேரவை அனைத்துக் கட்சி அன்பு உடன்பிறப்புகளே,

இன்று வந்து உங்களை சந்திப்பதாக இருந்தும்கூட டெல்லி மருத்துவரும் சென்னை மருத்துவ நண்பர்கள் குழுவும் அளித்த அறிவுரையாலும், அச்சுறுத்தலாலும் வர இயலவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன்.

நிமிர முடியாமலும், திரும்ப முடியாமலும் "நங்கூரம்" போட்டது போல நரம்பிணைந்து முதுகுத் தண்டில் வலி! வலி!

ஒன்று உடல் வலி - பிறிதொன்று நீங்கள் வழங்கியுள்ள மன வலி! கருத்து மாறுபாடுகளுக்கிடையிலேயும் நீங்கள் காட்டும் கனிவு - அரசியல் மாச்சரியங்களை மீறி நீங்கள் காட்டும் அன்பு - இன்று நம்மை மீண்டும் இணைக்கிறது - தமிழ்த்தாயின் கரம் நம்மை ஒரு சேர அணைக்கிறது. அறிவியக்கம் - ஆன்மிகம் -

நாத்தீகம் ஆத்திகம் - இந்த வேறுபாடுகள் மாறுபாடுகள் கடந்த நன்றியுணர்வும் நன்மனித நேயமும் வளர்த்திடுவோம்.

ஆரம்பகால பொதுவுடைமைவாதி என்ற முறையிலும், பெரியார், அண்ணா, காமராஜர், அண்ணன் ஜீவா போன்றோரின் அருமைத் தொண்டர்களில் ஒருவன் என்ற முறையிலும் - அடிமட்டத்துக்கெல்லாம் அடிமட்டமாகக் கிடந்து அவதியுறும் "மனித ஜீவன்கள்."

"அருந்ததி" மக்கள், புதிய உலகம் - புரட்சியுகம் - காண்பதற்காக; இன்று அவையில் நான் முன்வைக்கும் சட்டமுன்வடிவை; உங்கள் ஆதரவு வழங்கி; நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்

உங்கள் அன்பு நதியில் - என்றும்
நனைந்திடவே விரும்பி வாழும்;
உடன்பிறப்பு - உங்களில் ஒருவன்,
அனபு மறவாத
(மு.கருணாநிதி)
26.2.2009
ராமச்சந்திரா மருத்துவமனை

இந்தச் சட்டம் அறிவிக்கை செய்யப்பட்டு, 12.3.2009 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் காரணமாக சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற அந்த அருந்ததிய மக்கள் முன்னேறி வாழ்க்கையிலே வளம் பெறுவார்களேயானால், அன்றுதான் என்னுடைய உள்ளவேட்கை முழுவதுமாக நிறைவேறிய திருப்தி எனக்கு ஏற்படும் - என்று நான் எண்ணியதற்கு ஏற்ப, அருந்ததியர்களுக்கு பயன்கள் விளைந்திடத் தொடங்கியிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, 2006-2007 ஆம் ஆண்டில் அருந்ததியருக்கு மருத்துவக் கல்லூரிகளில் கிடைத்த இடங்கள் மொத்தம் 13; 2007- 2008 ஆம் ஆண்டில் கிடைத்த இடங்கள் மொத்தம் 17; 2008-2009 ஆம் ஆண்டில் கிடைத்த இடங்கள் மொத்தம் 29; ஆனால், அவர்களுக்கு 3 சதவீத உள்இடஒதுக்கீட்டிற்கான சட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு, 2009-2010 ஆம்

ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் கிடைத்த மொத்த இடங்கள் 56. அதைப்போல, பொறியியல் பட்டப்படிப்பைப் பொறுத்தவரை, அண்ணா பல்கலைக்கழகம் - அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் - சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஆகிய அனைத்திலும் சேர்த்து, 2007-2008ஆம் ஆண்டில், (அதாவது, அவர்களுக்கு உள்ஒதுக்கீட்டிற்கான சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பு) அருந்ததியருக்குக் கிடைத்த மொத்த இடங்கள் 744; ஆனால், உள்ஒதுக்கீட்டிற்கான சட்டம் நிறைவேறியதற்குப் பிறகு, 2009 - 2010ஆம் ஆண்டில் பொறியியல் பட்டப்படிப்பில் அருந்ததியர் பெற்ற மொத்த இடங்கள் 1165.

இவ்வாறு உள் இடஒதுக்கீடு வழங்கியதன் காரணமாக, மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அருந்ததியர் பெற்றுள்ள இடங்கள் 93 சதவீதம் அதிகரித்துள்ளன; அதைப் போல, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்த வரை அவர்கள் பெற்றுள்ள இடங்கள் 57 சதவீதம் அதிகரித்துள்ளன.

அருந்ததியர்களுக்கு அவர்தம் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் நிதிஉதவி வழங்குவதற்கென தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 8.6.2007 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை 22 ஆயிரத்து 811 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுள் 1,133 உறுப்பினர் குடும்பங் களுக்கு 17 இலட்சத்து 86 ஆயிரத்து 440 ரூபாய் நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனிதக் கழிவை அகற்றித் தூய்மைப்படுத்தும் பணிகளில் முன்னர் ஈடுபட்டிருந்தோருக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபட உதவுவதற்காக 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டம் ஒன்றும் கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியாளர்கள் கழிவுநீர்க் குழாய்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்க, மாநகராட்சிகள் அனைத்திலும் அடைப்புகளை அகற்றும் இயந்திரங்கள் வாங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்த வரை 3 கோடியே 97 இலட்சம் ரூபாய்ச் செலவில், 47 தூர்வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன; அடைப்புகளைச் சுத்தம் செய்யும் 11 இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மற்ற 9 மாநகராட்சிகளுக்கும் தேவையான

அடைப்பு நீக்கும் இயந்திரங்கள் தற்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் மாநகராட்சிகள் அனைத்திலும் சாக்கடைகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்காக மனிதர்களை ஈடுபடுத்தும் அவலநிலை அகற்றப் பட்டு, இயந்திரங்கள் மூலம் தூய்மை செய்யும் பணி விரைவில் தொடங்கும். நாட்டில் - சமுதாயத்தில் - நலிவடைந்துள்ள மக்களை **அடித்தட்டு மக்கள்** எனக் குறிப்பிடுகிறோம்; இனி அவர்கள்தான் - நாட்டுக்கு, சமுதாயத்துக்கு வலிவுதரும் **அடித்தள மக்கள்** எனப் போற்றப்படும் நிலையை இந்த ஆட்சியில் உருவாக்கிடுவோம்.

அன்புள்ள,

மு.க.

26-10-2009

3425. வருந்தப் போகிறார்களா - இனியேனும் திருந்தப்போகிறார்களா?

உடன்பிறப்பே,

வெளிநாட்டிலே உள்ள தமிழறிஞர்கள் கோவையில் 2010, ஜூன் திங்களில் நடைபெற விருக்கின்ற, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருவது சந்தேகமே என்று ஒரு பத்திரிகையிலும்; வரப்போவதில்லை என்று திட்டவட்டமாக இன்னொரு பத்திரிகையிலும்; வரஇயலாதென மாநாட்டு நிர்வாகிகளுக்கு அந்த அறிஞர்கள் தெரிவித்துவிட்டார்கள் என்று மற்றொரு பத்திரிகையிலும்; தமிழ்-ஆங்கிலம் என்ற வேறுபாடின்றி ஒருமித்த உணர்வுடன், அவர்கள் வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன்(!) நாள்தோறும் தமிழகத்தில் செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மற்றும் தமிழ் உணர்வாளர்கள், மொழி-இன முன்னேற்றத்திற்காக, எந்தவொரு நற்செயலில் ஈடுபட்டாலும், அதனை நையாண்டி செய்கிற நச்சுகிணியர், தமிழகத்தில் ஆண்டாண்டுக் காலமாக தங்களின் திருவிளையாடல்களை நடத்தியே வந்திருக்கிறார்கள்! அந்த விளையாட்டுக்கள் விழிப்புணர்வு பெற்ற தமிழ் மக்களிடம் செல்லுபடியாகாமல் போய்விட்டக் கதைகளை காலம்காலமாகத் தமிழ் மக்கள் அறிந்தே இருக்கிறார்கள்!

சீரிய செயல்கள் எதுவாயினும், அது நமது செம்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், அதைப் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்கும் பயன்பட்டுவிடாமல், விழிப்போடு பார்த்துக் கொண்டிருக்கிற சிறுநரிக் கும்பலொன்றும், அந்தக் கும்பலின் காலடியில் கும்பிட்டுக் கிடக்கும் விபீடணக் கூட்டமொன்றும், நமது செயல்பாடுகளின் வெற்றிமுகடு சிகரங்களைத் தொட்டுவிடாமல் தடுத்து நிறுத்துவதை, தாங்கள் பிறவி எடுத்ததன் பயனாகக் கருதியிருக்கின்றார்கள்! அந்தச்

சந்ததியினர் முழுமையாகப் பட்டுப்போக வில்லை என்பதற்குச் சான்றாக, இப்போதும் அங்கொன்றும் இங்கொன்றுமாக, தலை தூக்கித் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அடையாளம்தான், நமது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு ஈழத்துச் சிவத்தம்பி போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் வந்துவிடாமல் தடுக்க, இங்குள்ள "நெடுமரங்கள்" சில பெருமுயற்சி மேற்கொண்டு, தடுப்பணைகளாகச் செயல்படத் துடிக்கின்றார்கள். அவையெல்லாம், மழை பொழியும்போது, மழலையர் மணலைக் குவித்துக் கட்டும் அணைகளாகவே உடனடியாகக் கரைந்துவிடுகிற காட்சியைக் காணமுடியும்.

ஈழத்துத் தமிழறிஞர் சிவத்தம்பி அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வரப்போவதில்லை என்பதுபோன்ற ஒரு சூசகச் செய்தியை வெளியிடுகின்ற அந்தத் தமிழ் - ஆங்கில ஏடுகள், எவ்வளவு ஜீரணிக்க முடியாதப் பொய்யை விழுங்கிவிட்டு, அதனை மக்கள் மத்தியிலே வாந்தி எடுத்துள்ளன என்பதை, இதோ சில உதாரணங்கள் மூலமாகச் சுட்டிக்காட்டுகிறேன்!

எந்த தமிழறிஞர் சிவத்தம்பி அவர்கள் மாநாட்டிற்கு வரமாட்டார் என்று கூறுகிறார்களோ, அந்த சிவத்தம்பி அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கப் பணிகளுக்காக முன்னதாகவே வருவதாகத் தெரிவித்திருப்பதோடு; Subject for Discussion என்ற தலைப்பில் ஐந்து பொருண்மைகள் விவாதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் வழங்கியிருக்கிறார்கள். அவையாவன :

1. The concept of Classical languages and the World Classical languages, other than Tamil (Chinese, Greek, Sanskrit, Latin and Hebrew)
2. Classical languages of India.
   The Constitutional position of Languages of India.
3. Introduction to Language families of India.
   Samerian Language and Tamil, Tamil and Japanese
   Indo-Aryan, Mundari, Indo Aryan and Dravidian,
   The relationship of Tamil with Tribal Languages of India.
4. Tamil as Classical Language
   (a) Literary Aspects

(b) Non-Literary aspects - Medicine, Astronomy and Astrology.
(c) Tamil as Official Language in Pre-Western Period, Inscriptional Tamil, Tamil as an Official Language, (i) Indian Experience, (ii) SriLankan Experience and (iii) Singaporean Experience.
Use of Tamil in Malaysia,
Use of Tamil in South Africa, Mauritius
Tamil as a contemporary Language in Western countries.

5. Tamil Studies in Britain, U.S., Russia and Continental countries - France, Germany, Italy, Spain and Portugal.

தொடக்கத்தில், அவர் எழுதிய கடிதத்தில், மாநாட்டிற்குக் கால அவகாசம் குறைவாக இருப்பதாகவும், தமிழறிஞர்கள் பலரும் கலந்து கொள்வதற்கு வசதியாக இடைக்காலம் ஒரு ஆறு மாதமாவது அவசியமாகும் என்றும் எழுதியிருந்ததை ஏற்றுக்கொண்டுதான்; முதலில் 2010, ஜனவரி 21 முதல் என்று குறிப்பிட்டிருந்த தேதியை, 2010, ஜூன் 24 முதல் 27 வரை என்று மாற்றியமைத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளக்கத்தைப் படிக்கும் விஷமிகள், வேண்டுமென்றே அவர்கள் இட்டுக்கட்டிச் சொன்ன பொய்க்கு வருந்தப் போகிறார்களா; இனியேனும் திருந்தப் போகிறார்களா; அல்லது அடடா, பொய் கூறி அவமானப்பட்டுவிட்டோமே என்று எதையேனும் அருந்தப் போகிறார்களா?

அன்புள்ள,
மு.க.
27-10-2009

3426. "நீதிக்கட்சி" தொடங்கிய நெடிய பயணம்!

உடன்பிறப்பே,

இஸ்லாமிய சமுதாயத்தினரோடு, நமது திராவிட இயக்கமும் நானும் கொண்டுள்ள தொய்வில்லாத தொடர்பும், உறவும் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 70 ஆண்டுகளுக்கு முன்பு, பள்ளி செல்லும் மாணவனாக இருந்த போதே, திருவாரூரிலே நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டிலேயே - நான் கொடிபிடிக்கும் சிறுவனாக - பச்சைப் பிறைக் கொடியை கையிலே ஏந்துகின்ற சிறுவனாக- அந்த மாநாட்டிலே கலந்து கொண்டேன் என்பதை நான் பெருமையோடு நினைவு கூர்கிறேன்.

அந்த மாநாட்டிற்குப் புதுக்கோட்டையில் திவானாக இருந்த கான் பகதூர் கலிபுல்லா சாகேப் அவர்கள்தான் தலைமையேற்றார்கள். ஒரு கையிலே 'குடியரசு' ஏடு; இன்னொரு கையிலே 'தாருல் இஸ்லாம்' என்கிற முஸ்லிம் லீக்கிற்காகப் பிரச்சாரம் செய்கிற ஏடு - இவைகள்தாம் என்னுடைய கைகளை அந்த நாட்களில் அலங்கரிக்கும்.

மாணவப் பருவத்திலே என்னுள் முகிழ்த்த அந்த உறவும், உணர்வும் இன்றைக்குச் செழித்துப் பசுமையாகப் பரவியிருக்கின்றன. எனவே நான், இளமைப் பருவத்திலேயே இஸ்லாமிய சமுதாயத்தினரின் எண்ணற்ற நிகழ்ச்சிகளில், கூட்டங்களில், மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதெல்லாம் அந்த சமுதாயத் தினருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவறாது ஆற்றி வந்திருக்கிறேன்.

நேற்றைக்கு நடந்ததைப்போல் இருக்கிறது அந்த நிகழ்ச்சி; என் நெஞ்சத்தை நெகிழ வைத்து, எனது நினைவிலிருந்து

நீங்காமல் என்றென்றும் நிலைத்துவிட்ட அந்த நிகழ்ச்சி. இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவரும், பெரியாரின் அன்புக்கும், பேரறிஞர் அண்ணாவின் பாசத்திற்கும், எனது மட்டற்ற மதிப்புக்கும் உரியவரான பெருந்தகையாளர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள், 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது - அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்ற செய்தி அறிந்தவுடன், எனது கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு, உடனடியாகச் சென்னை திரும்பினேன்.

ஸ்டான்லி மருத்துவமனையில் அவரது நிலையைக் கண்டபோது, அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ள எனக்குத் தெம்பில்லாமல் போயிற்று. கண்மூடி மயக்கநிலையில் படுத்திருந்த அவர் அருகே குனிந்து, மெல்லிய குரலில், "அய்யா, நான் கருணாநிதி வந்திருக்கிறேன்" என்று கூறினேன். அந்தக் குரல் கேட்டுக் காயிதேமில்லத் அவர்கள் கண் விழித்துப் பார்த்தார். அந்த நிகழ்ச்சி குறித்து, தென்காசி என்.கே. ரிபாயி அவர்கள் தான் எழுதிய "கவ்மின் காவலர்" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "அவர்கள் கண்விழித்துப் பார்த்தார்கள். வந்திருப்பது யார் என்பதையும் புரிந்து கொண்டார்கள். கலைஞர் கருணாநிதியைப் பார்த்ததும் தங்களது கரங்களை நீட்டினார்கள். அவரும் அக்கரங்களைப் பிடித்துக்கொண்டார். அச்சமயம் காயிதேமில்லத் அவர்கள் மிகவும் பலகீனமான குரலில், 'முஸ்லிம் சமுதாயத்திற்குத் தாங்கள் செய்த உதவிகளுக்கெல்லாம் எனது நன்றி' என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் அவர் அப்படியே மெய்மறந்துவிட்டார். அவரது கண்கள் கலங்கிவிட்டன. என்ன சொல்வதென்றே தெரியாது அவர் தத்தளித்துக்கொண்டிருந்தார். அதற்குள்ளாக காயிதேமில்லத் அவர்களின் கண்கள் மூடிக்கொண்டன. மீண்டும் மயக்கநிலை ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு தலைவர் அவர்கள் மீண்டும் சுயநினைவு பெறவேயில்லை."

இளமைக் காலத்திலேயே இஸ்லாமிய சமுதாயத்தினர்மீது நான் கொண்டிருந்த மதிப்பின் தொடர்ச்சியாக; காயிதே மில்லத் அவர்கள்மீது நான் கொண்டிருந்த அன்புக்கும், பாசத்துக்கும் அடையாளமாக - இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு வாய்ப்பு கிடைத்திடும் போதெல்லாம் பல்வேறு நன்மைகளை வழங்கி யிருக்கிறேன்.

1969-ல் மீலாது நபிக்கு முதன்முதல் அரசு விடுமுறை; முந்தைய அ.தி.மு.க. அரசு 2001-ல் ரத்து செய்த மீலாது நபி அரசு விடுமுறையை 15.11.2006 ஆணை மூலம் மீண்டும் விடுமுறை நாளாக அறிவித்தது; 1973-ல் உருதுபேசும் லப்பைகள், தெக்கனி முஸ்லிம்கள் ஆகியோரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது; 1974-ல் சென்னை-அண்ணாசாலை அரசினர் மகளிர் கல்லூரிக்கு "காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி" எனப் பெயர் சூட்டியது; 1989-ல் இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மையினர் சமுதாய மக்கள் பெரும்பயன் எய்திடும் வகையில், "சிறுபான்மையினர் நல ஆணையம்" ஒன்றை 13.2.1989 அன்று உருவாக்கியது;

1999-ல் வக்ஃபு வாரியச் சொத்துக்களைப் பராமரிப்பதற்கென முதன்முறையாக 40 இலட்ச ரூபாய் வழங்கியது; 1999-ல் "தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம்" என ஒரு அமைப்பினை 1.7.1999 அன்று உருவாக் கியது; 2000-ல் உலமா ஓய்வூதியத் திட்டத்தை 19.7.2000 முதல் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் நீட்டிப்பு செய்தது; 2000-ல் இஸ்லாமியர்களின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, 21.7.2000 அன்று "உருது அகடமி"யைத் தொடங்கியது; 2001-ல் "காயிதே மில்லத் மணிமண்டபம்" 58 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய்ச் செலவில் சென்னையில் அமைத்திட 25.2.2001 அன்று அடிக்கல் நாட்டி, திறக்கப்பட ஆவன செய்தது; சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஆய்வு மையம் ஏற்படுத்தியது; சிறுபான்மையினரின் நலனுக் கென தனி இயக்குநரகம் ஒன்றை 6.4.2007 அன்று அமைத்தது; "உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" என ஒரு வாரியத்தை 2009, மார்ச் திங்களில் ஏற்படுத் தியது; என்று இஸ்லாமிய சமுதாயத்திற்கு கழக அரசு வழங்கியுள்ள சலுகைகளும், நன்மைகளும் கணக்கிலடங்காதவை.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றபிறகு, 1947 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையில், தமிழகத்தில் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் அமைச்சராக இல்லை. முஸ்லிம்களுக்கு அமைச்சரவையிலே இடம் தரவேண்டுமென்ற குரலை முதன் முதலாக எழுப்பியவர் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். அதற்குப் பிறகுதான் 1962-ல் கடையநல்லூர் மஜீத் அவர்கள் காங்கிரஸ் அமைச்சரவையிலே அமைச்சராக இடம்பெற்றார். திராவிட முன்னேற்றக் கழகம் தான் முதன்முதலாக தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு முஸ்லிம் உறுப்பினர் ஒருவரை, அதாவது திருச்சி ஜானிபாய் அவர்களை நியமித்தது. ஜனாப் அப்துல் சமது அவர்களை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கியதும் தி.மு.க.தான். 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெரியகுளம் மேத்தா, நெல்லை கதிரவன், சாதிக்பாட்சா ஆகிய மூவர் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர்களாக ஆனார்கள்.

2001 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முதலில் ஒரு ஆறு மாதகாலம் முஸ்லிம் சமுதாயத்தின் பிரதிநிதியாக திரு.அன்வர் ராஜா இடம்பெற்றிருந்தார்; ஆனால், அதற்குப்பிறகு முஸ்லிம் பிரதிநிதியே இல்லாமல்தான் அ.தி.மு.க. அமைச்சரவை நடைபெற்றது.

தற்பொழுது, 2006-ல் பொறுப்பேற்ற கழக ஆட்சியில் இரண்டு முஸ்லிம்கள், அதாவது, திரு.உபயதுல்லா, திரு.மைதீன்கான் ஆகியோர் அமைச்சர்களாக இருந்து வருகின்றனர். முஸ்லிம் சமுதாயத்தினருக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத தி.மு.க. அமைச்சரவையே இதுவரை இருந்ததில்லை - என்ற உண்மைகள் அனைத்தையும் அந்த சமுதாயத்தினர் நன்கறிவார்கள்.

சமூகநீதியின் தாயகமான தமிழகத்தில் 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் ஆட்சி தோன்றியவுடன், 1921 ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட "முதல் கம்யூனல் ஜி.ஓ" எனப்படும் முதலாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணையில் முகமதியரும், இந்தியக் கிறித்த வரும் இடம்பெற்றனர். அதனைத் தொடர்ந்து அரசு நியமனங்களில் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பகிர்ந்து நியமிக்க வேண்டு மென்பதற்காக, 1927 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட

ஆணையிலும், முகமதியருக்கும், கிறித்த வருக்கும் தனியே இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, வகுப்புவாரி விகிதாச்சார விதியோடு, வகுப்புவாரி சுழற்சி விதியும் (Quota and Rota) பின்பற்றப்பட்டது. நீதிக்கட்சியின் பாரம்பரியத்தை ஒட்டியே கழக ஆட்சியில் 1973ஆம் ஆண்டில் உருதுபேசும் லப்பைகள், தெக்கனி முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டனர்.

சிறுபான்மை முஸ்லிம்களுக்கு கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் தனியே இடஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகவே இருந்து வந்தது. அதனை ஏற்று, 2006 சட்டப் பேரவைத் தேர்தலின்போது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அதற்கான அறிவிப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2006-2007ஆம் ஆண்டுக்கான கழக அரசின் நிதிநிலை அறிக்கையிலும், இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீட்டுக்கான உறுதி வழங்கப்பட்டது.

முதல்கட்டமாக,நீதியரசர் திரு.ஜனார்த்தனன் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய"த்திடம் இஸ்லாமியர் இடஒதுக்கீடு பற்றி விரிவாக விசாரணையும், ஆய்வும் செய்து, உரிய பரிந்துரையைத் தருமாறு அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்த ஆணையம் - திரு.ஜெ.அ.அம்பாசங்கர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட "தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு" அறிக்கையில் காணப்படும், இந்துக்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை; முஸ்லிம்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள்தொகை ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கலாம் என்று பரிந்துரை செய்தது.

தமிழக அரசு இந்தப் பரிந்துரையை ஏற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் 99ஆம் ஆண்டு பிறந்தநாள் பரிசாக, பிற்படுத்தப் பட்டோருக்கான 30 சதவீத இடஒதுக்கீட்டிலிருந்து, தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு 3.5 சதவீதம் தனி இடஒதுக்கீடு வழங்கி, 15.9.2007 அன்று அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இப்படி இஸ்லாமியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கியதன் காரணமாக, கல்வி நிலையங்களில் அவர்கள்

பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கை பெருமளவுக்கு அதிகரித்துள்ளன. எம்.பி.பி.எஸ். எனப்படும் மருத்துவப் பட்டப்படிப்பைப் பொறுத்தவரை, இஸ்லாமியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு முன்; அதாவது, 2006-2007ஆம் ஆண்டில் அவர்கள் பெற்ற இடங்களின் எண்ணிக்கை 46; 2007-2008ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கிடைத்த இடங்கள் 57.

ஆனால், அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்குப் பிறகு - 2008-2009ஆம் ஆண்டில் கிடைத்த இடங்கள் 78; 2009-2010ஆம் ஆண்டில் கிடைத்த இடங்கள் 80.

அதாவது, மருத்துவப் பட்டப்படிப்பைப் பொறுத்தவரை இஸ்லாமிய மாணவர்கள் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு முன்பு பெற்றதைவிட 74 சதவீத அதிகமான இடங்களை தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்குப் பின்பு பெற்றிருக்கிறார்கள்.

அதைப்போலவே, பி.இ., எனப்படும் பொறியியல் பட்டப்படிப்பைப் பொறுத்தவரை, இஸ்லாமியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு முன், அதாவது, 2007-2008ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகம் - அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் - சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஆகிய அனைத்திலும் சேர்த்து, அவர்களுக்குக் கிடைத்த இடங்கள் 2125. ஆனால், இஸ்லாமியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதற்குப் பிறகு -

2008-2009ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கிடைத்த இடங்கள் 3288; 2009-2010ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கிடைத்த இடங்கள் 3655.

அதாவது, பொறியியல் பட்டப்படிப்பைப் பொறுத்தவரை இஸ்லாமிய மாணவர்கள் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு முன்பு பெற்றதைவிட 72 சதவீத அதிகமான இடங்களை தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்குப் பின்பு பெற்றிருக்கிறார்கள்.

இஸ்லாமியர்களுக்குக் கழக அரசு வழங்கிய தனி இடஒதுக்கீட்டின் காரணமாக இப்பொழுது அவர்கள் பெற்றுள்ள வெற்றி, எதிர்காலத்தில் அவர்கள் பெறவேண்டிய பல வெற்றிகளுக்கு அடிப்படையாக அமைந்திட வேண்டுமென்பதே எனது ஆசை. சிறுபான்மையினர் என்பதால் இஸ்லாமியர்களிடம்

நாம் கொண்டிருக்கும் அக்கறையின் காரணமாக, அவர்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்திருந்தாலும்; இப்போதும் நான் சொல்லுகின்றேன் - எல்லாவற்றையும் நாம் செய்து முடித்துவிட வில்லை; அவர்களது மேம்பாட்டுக்கு நாம் ஆற்றிட வேண்டியது இன்னும் நிறைய இருக்கின்றது! நம்மைப் பொறுத்தவரையில், சமூக நீதிக்கான பயணம் என்பது; "நீதிக்கட்சி" காலத்திலேயே தொடங்கிய நெடிய பயணமல்லவா!

அன்புள்ள,

மு.க.

28-10-2009

3427. மேலும் பயன்படுகின்ற சந்திப்பு!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி என்ற அமைப்பின் சார்பில், 27.10.2009 அன்று பேரணி ஒன்று நடத்த இருப்பதாகவும், பேரணியின் முடிவில் நடுப்பகல் 12 மணிக்கு என்னைச் சந்திக்க இருப்பதாகவும் தெரிவித்து, அதற்கு ஒப்புதல் அளிக்கக் கேட்டு, ஒரு வாரத்திற்கு முன்பாகவே தோழர் என். வரதராஜன் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதம் கண்டவுடன், அதற்கு நான் ஒப்புதல் தெரிவித்திருந்தேன். அதன்படி, திரு.என். வரதராஜன், திரு. கே.வரதராசன், திரு. பி. சம்பத், செல்வி பாலபாரதி, எம்.எல்.ஏ., திரு. கே. மகேந்திரன், எம்.எல்.ஏ., திரு. பி. சண்முகம், திரு. கே.ஆர். கணேசன், திரு. ஜக்கையன், திரு. சிவலிங்கம், திரு. மோகன் ஆகிய 10 பேர் என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர்.

அந்த மனுவைப் பார்த்ததும், அவர்களிடம் நான், "நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய இடத்தில், நான் அமர்ந்திருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக என்னென்ன கோரிக்கைகளை வைத்திருப்பேனோ, அந்த கோரிக் கைகளைத்தான் நீங்கள் என்னிடம் வைத்திருக்கிறீர்கள். இவை அனைத்தையும் கழக அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு; பலவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது; ஒருசிலவற்றில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளது" என்று விளக்கிச் சொன்னேன். என்னைச் சந்திக்க திரு.வரதராஜன் அவர்களோடு வந்திருந்த அருந்ததிய சமுதாயத் தோழர் ஒருவர் என்னைப் பார்த்து, "எங்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கியுள்ளதால், உங்களை எங்களது இனம் மதுரை வீரனாக - கடவுளாக எண்ணிப் போற்றுகிறது" என்று உணர்வு பொங்கச் சொன்னது, அங்கிருந்த அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அந்த அருந்ததியத் தோழர் மேலும் தொடர்ந்து பேசுகையில், "அருந்ததிய குல வீரன், மாவீரர் ஒண்டிவீரன் பகடை நினைவைப் போற்றும் வகையில் சிலை அமைத்திட வேண்டும்" என்று கோரிக்கை ஒன்றை வைத்தார். நானும் அதைப் பரிசீலித்து ஆவன செய்வதாகத் தெரிவித்தேன். அத்துடன் அருந்ததியர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கும் மேம்பாட்டுக்கும் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தேசிய அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஆணையம் ஒன்றை அமைத்திருப்பதைப் போல, மாநில அளவிலும் அது போன்றதொரு ஆணையத்தை அமைத்திட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார்கள். அதற்கு நான் அதுபோன்றதொரு ஆணையம் என் வீட்டிலேயே இருக்கிறது, என்றவுடன் அனை வரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து ஆமாம், ஆமாம் என்று ஒப்புதல் அளித்தனர். எனினும் அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து ஆவன செய்வேன் என்று நான் உறுதியளித்தேன்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று அய்யன் திருவள்ளுவர் வகுத்த வாக்கிற்கிணங்க, தமிழகத்தில் சாதி சமய வேறுபாடுகளை அகற்றி, சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்னும் உணர்வுடனும், உறுதியுடனும் செயல்பட்டு வரும் கழக அரசு; சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆண்டாண்டு காலமாக விழுந்து கிடக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை முன்னேற்றுவதற்காக பல்வேறு சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி வருவதை அனைவரும் அறிவர். இத்திட்டங்களின் மூலம் சமுதாய, பொருளாதார, அரசியல் விடுதலைகளை ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் எய்தி, முன்னேற்றம் கண்டிட வேண்டுமென்பதே இந்த அரசின் லட்சியம். அதன் அடிப்படையில், வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும் இடஒதுக்கீடுகள் ஏராளமான கல்விச் சலுகைகள், பல நிதிஉதவித் திட்டங்கள் என பல்வேறு முனைகளிலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1969 வரை ஆதிதிராவிடர் நலத்துறையில் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையும் இணைந்திருந்தது என்பதையும்; 2.5.1969-ல்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை என்பது முழுக்க முழுக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காகவே செயல்படும் நிலைமையைக்

கழக அரசு உருவாக்கியது என்பதையும்; பின்னர், 31.3.2000 அன்று பழங்குடியினர் நலனில் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென்பதற்காகவே, கழக அரசு பழங்குடியினர் நலத்துறை என்ற ஒன்றைத் தனியே உருவாக்கியது என்பதையும்; யாரும் மறந்திருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

ஆண்டாண்டு காலமாக மண் குடிசைகளிலே வாழ்ந்துவரும் ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைத்திடும் சீரிய முயற்சியாக, இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்திலேதான் "ஆதிதிராவிடர் இலவச வீட்டு வசதிக் கழகம்" 15.2.1974 அன்று கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது. இத்திட்டம்தான் "இந்திரா வீட்டுவசதித் திட்டம்" என மத்திய அரசால் ஏற்கப்பட்டு, நாடு முழுவதும் நடை முறைப்படுத்தப்பட்டது. அதன்படி, ஓட்டு வீடுகளே கட்டப்பட்டு வந்த இத்திட்டத்திற்கு 1989-ல் அமைந்த கழக அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது. மத்திய அரசில் உணவு அமைச்சராகத் திகழ்ந்த பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், 1975ஆம் ஆண்டு ஜனவரியில், செங்கல்பட்டு-காட்டுப்பாக்கத்தில், அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்துவைத்து உரையாற்றியபோது, "வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது, அவருடைய சீரிய சமத்துவ மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!"

- என்று பாராட்டியது இன்றைக்கும் பழைய நாளேடுகளில் அப்படியே உள்ளன. இவையெல்லாம் நடைபெற்று 35 ஆண்டுகள் ஆகி விட்டன என்பதால், அவற்றை மறந்து விட்டவர் களுக்கு இப்போது நினைவூட்டுகிறேன்.

இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரை -
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு

16 சதவீதம் என்று இருந்த இடஒதுக்கீட்டினை, 1971ஆம் ஆண்டில் 18 விழுக்காடாக உயர்த்தியது கழக அரசுதான்.

1990-ல் பழங்குடியினருக்குத் தனியே ஒரு சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

தற்போது 2009, மார்ச் மாதத்திலிருந்து அருந்ததியினருக்கு தனியே 3 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்தவர்களில், முதல் தலைமுறைக்கு மட்டும் வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டுச் சலுகை, ஆதிதிராவிட கிறித்தவர்களின் எல்லா தலைமுறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இடஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப்படாமல் இருக்கும் காலிப் பணியிடங்களை, இடஒதுக் கீட்டிலிருந்து நீக்கும் முறையைக் கழக அரசு 1989-ல் தடை செய்தது.

பழங்குடியினரின் மேம்பாட்டைப் பற்றி தற்போது பேசுபவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழங்குடியினருக்கெனத் தனியே செய்யப்பட்ட ஒரு சதவீத இடஒதுக்கீட்டின் காரணமாகவே, தற்போது 2009-2010ஆம் ஆண்டில் பி.இ., எனப்படும் பொறியியல் பட்டப்படிப்பில் அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டும் 58 பழங்குடியின மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்; அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் 45 பேரும், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 170 பேரும் இடங்களைப் பெற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதைப்போலவே, ஒரு சதவீத இடஒதுக்கீட்டின் காரணமாக, எம்.பி.பி.எஸ். எனப்படும் மருத்துவப் பட்டப்படிப்பில் 18 பழங்குடியின மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். இது இந்த ஆண்டு மாத்திரம் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு அல்ல; இதுபோன்ற நிகழ்வு தொடர்ந்து 1991ஆம் ஆண்டு முதல் நடைபெற்று, ஆயிரக்கணக்கான பழங்குடியின மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் அனுமதி பெற்று முன்னேற்றம் கண்டுள்ளனர்.

சாதி, சமய பிணக்குகளை அகற்றி, அனைத்து சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்றுகூடி, சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்கும் வகையில், இந்திய சுதந்திரப் பொன்விழாவையொட்டி 1997ஆம் ஆண்டில் கழக அரசு

உருவாக்கிய புதுமையான, புரட்சிகரமான திட்டம் "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்." அப்போது தொடங்கப்பட்ட இத்திட்டத்தில், 145 சமத்துவ புரங்கள் உருவாக்கப்பட்டன. 2006க்குப் பின் மேலும்

95 சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 240 சமத்துவபுரங்களிலும் பெரியார் சிலை நிறுவ திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அமைக் கப்படும் 100 வீடுகளில்; 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 25 வீடுகள் மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும், 10 வீடுகள் இதர பிரிவினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர் வீட்டின் இருமருங்கிலும் பிற சமுதாயத்தினரின் வீடுகள் அமையுமாறு இத்திட்டத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப் படுகின்றன.

கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு, பாஞ்சாலங் குறிச்சிக்கு அருகில் உள்ள கவர்னகிரியில் அடிப்படை வசதிகளுடன் 200 வீடுகளைக் கட்டிக் கொடுத்து, வீரன் சுந்தரலிங்கம் நகர் என்ற பெயரில் அழகிய நகரை உருவாக்கி, 18.4.1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய நினைவைப் போற்றும் வகையில் - வியாசர்பாடி கலைக் கல்லூரிக்கும், சென்னை சட்டக் கல்லூரிக்கும் அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்டது; 20.9.1997 அன்று அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டது; 4 கோடி ரூபாய்ச் செலவில் சென்னையில் அம்பேத்கர் மணிமண்டபம் உருவாக்கப்பட்டு, 10.6.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அம்பேத்கர் பெயரில் விருது வழங்கி, ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கும் திட்டம் 1998ஆம் ஆண்டில் தொடங்கி, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும் பாடுபட்ட சுவாமி சகஜானந்தாவின் நூற்றாண்டு விழா 1990ஆம் ஆண்டில் கழக அரசு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மதுரையில் தியாகி கக்கன் சிலை, தும்பைப் பட்டியில் தியாகி கக்கன் அவர்களுக்கு நினைவு மண்டபம் ஆகியவை 31.8.1997 அன்று திறந்து வைக்கப்பட்டன; 10.10.2009 அன்று தும்பைப் பட்டியில் மத்திய அமைச்சர் தம்பி மு.க. அழகிரி தலைமையில் தியாகி கக்கன் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்வதில் கழக அரசு எவ்வளவு முற்போக்கான அணுகு முறையைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை பின்வரும் ஒப்பீடுகளின் மூலம் உணர்ந்து கொள்ளலாம் :

1991-1996 ஐந்து ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 696 கோடியே 16 இலட்ச ரூபாய்;

1996-2001 ஐந்து ஆண்டுகால கழக ஆட்சியில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 2 ஆயிரத்து 170 கோடி ரூபாய்;

2001-2006 ஐந்து ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 2 ஆயிரத்து 219 கோடியே 16 இலட்சம் ரூபாய்;

2006-2009 நான்கு ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையில் கழக ஆட்சியில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 3 ஆயிரத்து 86 கோடியே 35 இலட்சம் ரூபாய்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்குக் கழக அரசு ஆற்றியுள்ள பணிகள் ஏராளம். அவை அனைத்தையும் இந்த ஒரு கடிதத்தில் இடம்பெறச் செய்வதென்பது இயலாத காரியம். ஒருசில வற்றையாவது நான் நினைவு கூர்ந்திடவும், உன் போன்ற என் அன்பு உடன்பிறப்புகளுக்கு நினைவூட்டிடவும், 27.10.2009 அன்று நடை பெற்ற சந்திப்பு பயன்பட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் பயன்படுகின்ற சந்திப்பு!

அன்புள்ள,

மு.க.

30-10-2009



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022